
THAT THEY MAY HAVE LIFE
KANYAKUMARI DIOCESE C.S.I.

தென்னிந்திய திருச்சபை - கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு 2015




"உம் சொற்களைப் பற்றிய விளக்கம் ஒளி தருகின்றது;
அது பேதைகளுக்கு நுண்ணறிவு ஊட்டுகிறது." (திபா 119:130)

**01-01-2015** ***உடன்படிக்கை நாள் & புத்தாண்டு நாள்***

# கடவுளின் தொடரும் அருட்செயல்

## GOD'S CONTINUING ACT OF GRACE

செப் 3:14-20 உரோ 5 : 1-11

திபா 136 லூக் 13 : 1-9

**"... உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்."**
**செப். 3:17**

**இறைவேண்டல் :** ***நிலையான கடவுளே! தொடக்கமும் முடிவுமானவரே, உம் அன்பும், அருளும், கரிசனையும், பாதுகாப்பும் இதுவரையிலும் எங்களை நடத்தி வருகிறது, இறைவா! உம் தொடரும் அருட்செயலால் மீண்டும் ஓர் வருடத்தை அருளியிருப்பதற்காய் நன்றி. உம் திருமைந்தர் இயேசுகிறிஸ்துவின் அன்பின் புது உடன்படிக்கையால் எங்களை திருத்தியமைத்து புதிதாக்கியருளும். நாங்கள் உம்மோடும், மக்களோடும், அனைத்து படைப்புகளோடும் உம் தொடரும் அருட்செயலை வாழ்வில் கண்டு அனுதினமும் உம்மை போற்றவும், எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக் கொள்கிறோம்- ஆமென்.***

பழைய ஆண்டின் விதவிதமான அனுபவங்களுடன் புது ஆண்டில் பிரவேசிக்கையில், நம்பிக்கை தரும் இறைவார்த்தை, உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார் என்பதே. இறைவன் என்நடுவில் இருக்கிறார் என்றால் ஏன் ஆக்கினை, சத்துரு, தீங்கு, பயம், தளர்தல் (செப் 3 : 15,16) போன்றவை எனக்கு ஏற்பட்டது என்று வினா எழுப்பலாம். இறைப் பிரசன்னம் (God's Presence) நம்முடன் இருந்தாலும் சுயாதீன விருப்பத்தை (Free will) நடப்பித்தபோது இவை நிகழ்ந்தன. தாவீது பாவம் செய்தபோது, பரிசுத்த ஆவியார் அவரில் இருந்தார். பாவம் மேலோங்க, பரிசுத்த ஆவியானவர் அமைதியானார். "உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்" (சங் 51 : 11) என் னும் தாவீதின் விண்ணப்பம் இதனை மெய்ப்பிக்கிறது. நம் நடுவில் ஆண்டவர் இருக்கிறார் என்ற உணர்வும் புரிந்துகொள்ளுதலும் ஏற்பட்டால் "... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே 31:34) என்றுரைத்த ஆண்டவர் நம்மில் செயல்படுவார்.

நம் நடுவிலிருக்கும் ஆண்டவர் புதிய ஆண்டில் நமக்காக வைத்திருக்கும் திட்டத்தைத் தியானிப்போம்.

### 1. அவர் கூட்டிச் சேர்ப்பார் (He Shall Recall) :

“இதோ அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்... நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்வேன்” (செப் 3 : 19).

ஆண்டவர் அவரது மக்களைத் தண்டித்ததால் அவர்கள் சிதறிச் சென்றனர். சிறையிருப்பில் அவர்களை ஆண்டவர்கள் (Rulers) அவர்களை ஊனப்படுத்திச் சிறுமைப்படுத்தினர். சிறுமைப்பட்ட மக்களின் அபயக்குரல் ஆண்டவரிடம் எட்டிய போது ஆண்டவர் இரக்கம் கொண்டு மீட்பு நடவடிக்கையில் இறங்கினார். நிராகரிக்கப்பட்ட மக்களினம் மீண்டும் ஆண்டவரின் அழைப்பைப் பெற்றது.

தன் குஞ்சுகளைத் தாக்க வரும் பருந்தினை பார்த்த தாய்க் கோழி பரபரப்புடன் குஞ்சுகளைத் தன் செட்டையின் கீழ் சேர்த்து பாதுகாப்பது போல கர்த்தர் தம் மக்களை அழிவினின்று காப்பார்.

மண்ணில் கலந்து கிடக்கும் பொன் துகள்களை பொன் தேடுவோர், மண்ணை வெட்டி, அரித்து, சுத்தம் பண்ணி, பொன்னை பிரித்தெடுப்பது போல இறைவன் தம் மக்களை சிறையிருப்பிலிருந்து பிரித்தெடுத்து தமது காணியாட்சியில் சேர்ப்பார்.

கருவுற்றிருக்கும் தாயின் வயிற்றில் குழந்தைக்கு வேண்டிய உணவை, தாயின் பிளாஸன்றாவையும் குழந்தையின் தொப்புளையும் இணைக்கும் குழாய் வழங்குகின்றது. குழந்தைப் பேற்றின் போது umblical card என்று அழைக்கப்படும் அந்தக் குழாய் அறுக்கப்பட்டு, குழந்தை சுதந்திரமாய் உலகில் பிறக்கின்றது. umblical card அறுந்தாலும் தாய்ப் பாசம் அறுவதில்லை. குழந்தை வளர்ந்து வாலிபன் ஆகிறான். மனிதன் ஆகிறான். பொறுப்போடு வாழ்ந்து தூரதேசம் சென்றுவிடுகிறான். பாசக்கயிற்றால் அவனுடன் இணைக்கப்பட்ட தாய் நாளிதழில் விளம்பரம் கொடுக்கிறார்: “மகனே, நீ வீட்டைவிட்டுச் சென்ற நாள் முதல் நான் கண்ணீருடன் வாழ்கிறேன். வீடு திரும்பி விடு.”மகனின் பாவத்தையும், மீறுதலையும், கீழ்ப்படியாமையையும் விஞ்சி தாயின் பாசம் அவனை அழைப்பது போன்று, இனி பாவங்களையும், துரோகத்தையும் நினையாத

ஆண்டவர் அவரது மக்களை மீண்டும் அழைத்துச் சேர்ப்பார். 2015-ஆம் ஆண்டு ஆண்டவரின் அழைப்பை ஏற்கும் ஆண்டாகட்டும்.

### 2. *அவர் மீண்டும் கொடுப்பார்* (He shall Restore) :

. . . அவர்கள் வெட்கம் அனுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாக்கச் செய்வேன். (செப். 3:19 ஆ)

பொதுவான மொழி பெயர்ப்புத் திருமறை இதை . . . , , , அவமானமுற்ற அவர்களை உலகெங்கும் பெயரும் புகழும் பெறச் செய்வேன்என மொழியாக்கம் செய்துள்ளது.

உரிமை மீறல் நிகழ்ந்த போது தண்டித்த இறைவன், திருந்தி வரும் மக்களினத்திற்கு மீண்டும் உரிமையை வழங்குகிறார். ஆண்டவர் வழங்கும் உரிமை பெயரையும், புகழையும் ஈட்டித் தருகின்றது. பெருமழை, பெருங்காற்று, மின் இணைப்பைத் துண்டித்து, இருளை வருவிக்கின்றது. மின்துறை ஊழியர் வந்து துண்டிக்கப்பட்ட இணைப்பைச் சரி செய்யும் போது மீண்டும் ஒளி படர்வது போன்று, இறைவன் மீண்டும் உரிமைகளை தரும்போது மீண்டும் வாழ்வில் வசந்தம் துளிர்க்கின்றது.

ஆண்டவர் மீட்டு, மீண்டும் கொடுக்கும்போது எல்லாம் கிடைக்கப் பெறுவோம். அவர் உரிமை, உயர்வு, அந்தஸ்து, ஆஸ்தி, வளமை, வாழ்வு, சீர், சிறப்பு என எல்லாம் தந்து நிராசையை அகற்றி நிறைவு அருள்வார். 1215 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் அரசர் ஜாண் Magna Carta என்று அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற சாசனத்திற்குக் கையெழுத்திட்டார். அதற்குமுன் அரசர் தன் விருப்பத்தின் படி எத்தகைய வரியையும் தன் பிரஜைகள் மீதும், பிரபுக்கள் மீதும் சுமத்தலாம். புதிய சட்டத்தின்படி தேவையற்ற சுமையான வரிகளை அரசன் மக்களிடம் திணிக்கக்கூடாது என்ற நிலை மக்கள் மீண்டும் தங்கள் உணர்வு சார்ந்த உரிமைகளைப் பெறச்செய்தது.

2015 இழந்தவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ளும் ஆண்டாகட்டும்.

### 3. *அவர் மகிழ்ந்து மகிழ்வூட்டுவார்* (He Shall Rejoice) :

. . . . . அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். (செப். 3: 17)

நிராகரிக்கப்பட்டவர்களை அங்கீகரித்து, அதிகாரம் கொடுத்து, ஆசீர்வதித்து மகிழ்வது இறைவனின் பண்பு. சகோதரர்களால்

சொப்பனக்காரன் எனக் கேலி செய்யப்பட்டு, குழியில் போடப்பட்ட யோசைப்பைச் சிறையிலிருந்து அழைத்து, உயர்த்தி மகிழ்ந்தார். தந்தையால் குறைவாக மதிப்பிடப்பட்டு, ஆடுகளுக்கு பின்னே அனுப்பின தாவீதை அழைத்து, அபிஷேகித்து அரசராக்கி அகம் மகிழ்ந்தார். உலகத்தால் அற்பமாய் எண்ணப்பட்டவர்கள், எண்ணப்பட்டவைகள் அற்புதமாய் பயன்படுத்தப்பட்டது திருமறை வரலாறு.

உன்னை ஒடுக்கிறவர்களின் பிள்ளைகளும் குனிந்து உன்னிடத்தில் வந்து, உன்னை அசட்டை பண்ணின யாவரும் பணிந்து உன்னை கர்த்தருடைய நகரம் என்றும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன்என்றும் சொல்லுவார்கள். நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய், ஆனாலும், உன்னை நித்திய மாட்சிமையாவும், தலைமுறை தலைமுறையினருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன். (ஏசா 60: 14,15)

அடால்ப் ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பின் ஜெர்மனி வளமை மிக்க மேற்கு ஜெர்மனியாகவும், எளிமை மிகுந்த கிழக்கு ஜெர்மனியாகவும் பிரிந்தது. நடுவில் எழுப்பப்பட்ட பெர்லின் சுவர் மக்களை, நட்புகளை, உறவுகளை, குடும்பங்களைப் பிரித்தது. மக்களின், நீண்டகால பேராட்டத்திற்குப் பின், மக்களின் கருத்து கேட்கப்பட்டு 1990 நவம்பர் 9 அன்று பெர்லின் சுவர் உடைக்கப்பட்டு, திறப்பு உண்டாக்கப்பட்டு, மக்கள் சந்தித்து ஒன்றாகிக் களிகூர்ந்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

2015 கர்த்தரின் பிரசன்னத்தில் களிகூர்ந்து மகிழும் ஆண்டு. நம்முடன் இருப்பவர் நம்மைக் கூட்டிச்சேர்த்து, மீண்டும் கொடுத்து, மகிழ்வூட்டுவார்.

புத்தாண்டு அனைவருக்கும் பக்திக்குரிய அனுபவங்களையும் ஆசீர்வாதங்களையும் தரட்டும்.

பேரருள்பெருந்திரு. அறிவர். G. **தேவகடாட்சம்**
**பேராயர்**

# சமாரியா வழியாகப் பயணம்

திருமறைப்பாடம் : யோவா 4:1-5

**"க-லேயாவுக்கு அவர் சமாரியா வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அவர் சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். யாக்கோபு தம் மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே அந்த ஊர் இருந்தது."** யோவா.4:4,5

மனித வாழ்விலே தீர்மானங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. அபிமானங்களால் எடுக்கப்படும் தீர்மானங்களை விட அவமானங்களால் தான் அதிக தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன என்பது உளவியலாளர்களுடைய கருத்து.

'பரம்பரைப் பகை' எனும் பெரும் தீமை பல காலமாக மனிதனுடைய சந்தோஷமான, சமாதானமான வாழ்க்கையை சீரழித்து வருகிறது.

பல நாடுகளையும், பல மாநிலங்களையும், பல மக்களினங்களையும், பல குடும்பங்களையும் இந்த பரம்பரைப் பகை சீரழித்ததையும், சீரழித்துக் கொண்டேயிருப்பதையும் கண்கூடாகக் காணலாம்.

இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்குமான பகையும், பரம்பரைப் பகைதான். இதற்கு அடையாளமாக இருப்பது England நாட்டின் வடகிழக்கு பகுதியிலுள்ள Hadrian Wall. உரோம சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தில் England இருந்த போது, உரோம பேரரசராக இருந்த Hadrian, 112 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு நெடுஞ்சுவரைக் கட்டினார். ஒரு முறை இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்குமான பகை முரண்பாட்டில், இங்கிலாந்தில் முகாமிட்டிருந்த 9 -ஆவது உரோம படை பிரிவு காணாமற் போனதினால், மென் மேலும் பிரச்சனைகள் ஏற்படக் கூடாதென்று பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் ஒன்றிணைந்து இந்த நெடுஞ்சுவரை மிகவும் கடினமாக முயன்று கட்டி முடித்தார்கள். இந்த பரம்பரை அல்லது பாரம்பரிய பகை தொடர வேண்டுமா என்றொரு சூழல் கடந்த 2014 -ஆம் ஆண்டு வாக்கெடுப்பு வடிவில் வந்தது. அதாவது, ஸ்காட்லாந்து, இங்கிலாந்தோடு இணைந்திருக்க வேண்டுமா? என பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்கு மக்களில் பெரும்பான்மையோர்,

பரம்பரை பகை அல்லது பாரம்பரிய பகை தொடர வேண்டாம்; யாவரும் இணைந்திருப்போமென்று வாக்களித்தார்கள்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தமது உலக வாழ்வு காலத்திலே, யூதர், சமாரியர் என்ற 'பரம்பரை, பாரம்பரிய பகை' தொடரக்கூடாதென்று மிக முக்கியமான தீர்மானம் எடுக்கிறார்.

புதிய வருடத்தில் பகைகள், கசப்புகள் தொடரக்கூடாதென்ற தெளிவான தீர்மானம் எடுக்க 'சமாரியா வழியாக போவோம்' என்று ஆண்டவர் எடுத்த தீர்மானம் வழிகாட்டுதலாக இருப்பதாக.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் இந்த தீர்மானத்தை பல கடினங்களின் வழியாகத் தான் எடுக்கிறார். நம்மை அவர் வழியில் பலப்படுத்திக்கொள்ள, அந்த கடினங்களை சிந்திப்போம்.

### *1. வெறும் பகையல்ல, பரம்பரைப் பகை எனும் கடினம் :*

யூதர்களுக்கும் சமாரியர்களுக்குமான பகையின் வரலாறு மிக நீண்ட வரலாறு. 1 அர. 12 -ஆம் அதிகாரத்தில் இந்த பகையின் நீண்ட பாரம்பரியம் மிக விரிவாக சொல்லப்பட்டுள்ளது. "அப்படியே இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தை விட்டு கலகம் பண்ணிப் பிரிந்து போயிருக்கிறார்கள்" (1 அர. 12:19).

தாவீதின் வம்சத்தை விட்டு தானாகவே பிரிந்து போன 11 கோத்திரங்களும் குடும்பப் பகையாகவே பிரிந்துப் போனார்கள். தாவீதின் வம்சமாகிய யூதா கோத்திரமும், மற்ற 11 கோத்திர குடும்பங்களையும் குடும்பப் பகையாகவே பகைக்க ஆரம்பித்தார்கள். ஆகவே இந்த பகை வரலாறு பரம்பரைப் பரம்பரையாக, பாரம்பரியமாகவே தொடர்ந்தது.

இந்த பகை முடியாத பயணமாக தொடரும்படியான நிகழ்வுகள் பின்னாட்களிலே நடந்தன. 11 கோத்திரத்தாரும், யூதரும் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போன நேரத்திலே 'இஸ்ரவேலர்' எனும் இந்த 11 கோத்திரத்தாருக்கும் தலைநகராகிய சமாரியாவிலும் அதன் சுற்றுபுறத்திலும் அசீரியா ராஜா பாபிலோனிலிருந்தும், கூத்தாவிலிருந்தும், ஆபாவிலிருந்தும், ஆமாத்திலிருந்தும், செப்பர்வாயிமிலிருந்தும் ஆட்களை குடியேற்றினான் (2அர. 17 : 24). சமாரியாவில் மீந்திருந்த இஸ்ரவேலர் புதிதாக குடியேறினவர்களுடனே திருமணத் தொடர்பு வைத்துக்கொண்டபடியால் 'சமாரியர்' என்ற கலப்பு இனம் உருவாகியது. இதற்கு பிறகு யூதர்கள் சமாரியாவில் வாழ்ந்த இஸ்ரவேலர் எல்லாரையுமே வெறுத்து ஒதுக்கினார்கள்.

யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குச் செல்ல 'சமாரியா' எளிதான பாதையாக இருந்தது. ஏனென்றால் சமாரியா யூதேயாவிற்கும், கலிலேயாவிற்கும் நடுவிலிருந்தது. ஆனால் இந்த பரம்பரைப் பகை

காரணமாக யூதர்கள் வெகு தூரம் நடந்து பெரேயா வழியாக கலிலேயா சென்றனர்.

இந்த பொதுவான வழக்கத்தை தான், ஆண்டவர் இயேசு பின்பற்றாமல், சமாரியா வழியாக கலிலேயா சென்றார்.

சாதாரண பகையை வெல்வது கூட சற்று எளிது. ஆனால் குடும்ப பகையை, பரம்பரைப் பகையை வெல்வது கடினம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து, சமாரியா வழியான தம் பயணம் வழி அதை வென்று வழி காட்டினார்.

## *2. துணிந்து எடுத்த தீர்மானம் :*

'தீர்மானம்' என்பது எதிர்மறையாக தான் அநேகரால் கையாளப்படுகிறது.

அவமானப்படும் போது வைராக்கியமாக எதிர்மறைத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, சமாரியா வழியாகப் பயணம் போவதினால் தனக்கு அவமானங்களும், நெருக்கடிகளும் ஏற்படும் என்று தெரிந்திருந்தும், நேர்மறையாக இந்த நல்ல தீர்மானத்தை எடுத்தார். ஆண்டவர் எதிர்பார்த்தபடியே இந்த நிகழ்வினால் அவமானம் வந்தது.

"அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக : உன்னை சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள்" (யோவா 8:48).

ஆண்டவர் சமாரியா வழியாக பயணம் போவதற்கு, சமாரியரிடம் கரிசனையாக நடந்து கொண்டதற்கும், அவருக்கு கிடைத்த பரிசுகள், (i) எள்ளல் (ii) ஒருமையில் அழைத்துப் பேசப்படுதல் (iii) சாபமான வார்த்தைகள் (iv) கல்லெறிந்து சொல்லுவதற்கான கொலை முயற்சி (யோவா 8 : 48-59).

பல சமயங்களில் பாதுகாப்பான தளத்திலே (Comfort zone) வாழ விரும்பும் நாம், மற்றவர்களின் விமர்சனங்களுக்கும், அவமானங்களுக்கும் பயந்து மேற்போக்கான வாழ்க்கை வாழ துணிகிறோம்.

ஒன்றை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். அதாவது, நேர்மையாக செயல்படுத்த முனையும் மனிதரால் அவமானங்கள் நேரிட்டால் அதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மனித அவமானங்கள், ஆண்டவரிடமிருந்து வெகுமானங்களை பெற்று

தரும் ஊடகங்கள்; மனிதர்களின் நிந்தனை, ஆண்டவரை நாம் அதிகமாக சிந்தனை செய்ய தூண்டுகிறது.

Shame is good, because shame develops you. When we feel shame we feel distress, embarrassment or anger. Shame is the space where we learn to stop struggling with ourselves and unknowingly we grow. The dark space of shame is a nursery for human character.

சூரியன் பழையதாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும் அதனிடமிருந்து வரும் கதிர்கள் புதியவை. நமது வாழ்க்கையும் பழையதாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சமயமும் நாம் எடுக்கிற தீர்மானங்கள் புதியவைகளாக இருப்பதாக.

அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்**

# துரவு வழி உறவு

திருமறைப்பாடம் : யோவா 4:6-12

**“அவ்வூரில் யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் களைப்புற்று இருந்த இயேசு கிணற்றுக்கு ஓரமாய் அமர்ந்திருந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல்.” யோவா.4:6**

உயிர்களின் வாழ்வாதாரமாக நிலம், நீர், காற்று ஆகியன சொல்லப்படுகின்றன. இம்மூன்றையும் மனிதரால் மூலப்பொருளின்றி செயற்கையாக உருவாக்க முடியாது. இந்த மூன்று வளங்களில் நீரை தண்ணீர் தங்கம் என விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். புவிப்பரப்பில் 71 சதவீதம் நீரால் சூழப்பட்டிருந்தாலும் உலகிலுள்ள நீரில் 3 சதவீதம் மட்டுமே நன்னீராக இருக்கிறது. இதிலும் 2 சதவீதம் பனிக்கட்டியாக உள்ளது. மீதமுள்ள ஒரு சதவீதம் தண்ணீர் மட்டுமே பூமி முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. பூமியிலே இவ்வளவு குறைவாக இருக்கின்ற தண்ணீர் வளம், அனைவருக்கும் குறைவின்றி கிடைக்க வேண்டுமென்ற தொலைநோக்கோடு முன்னோர்களும், முற்பிதாக்களும் குளங்களையும், நீர்தேக்கங்களையும், கால்வாய்களையும் அமைத்தார்கள்.

சிந்து சமவெளி நாகரீகத்திலே மிக சிறப்பாக சொல்லப்படுவது, Harappa என்ற இடத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ‘தானிய களஞ்சியமும்’ ‘கிணறுகளும்’ தான். ஏனென்றால் இவை இரண்டும் பாரபட்சமே இல்லாமல் அனைத்து மக்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வகையில் அமைக்கப்படுபவையாகும்.

இஸ்ரவேலின் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கே பலருக்கும் பயன்படட்டும் என்ற நோக்கிலே துரவுகளைத் தோண்டி உறவுகளை ஏற்படுத்தினார்கள். ஆனால் பல சமயங்களில் இவர்களால் தோண்டப்பட்ட துரவுகளை குறித்து, அங்கு சுற்று புறத்திலே குடியிருந்தோர் தவறாகப் புரிந்து கொண்டமையால் பல சர்ச்சைகள் சண்டைகள் கூட ஏற்பட்டன (ஆதி. 21:25, 26:15). எல்லாருக்கும் பல காலம் பயன்பட வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு, எதிரிகள் தூர்த்து போட்ட துரவுகளை மறுபடியும் மறுபடியும் தோண்டி உலக வாழ்க்கையிலே நல்ல காரியங்களை தொடர்ந்து

நிறைவேற்றுவதற்கு நல்ல மாதிரிகளை நிலைநாட்டினார்கள் (ஆதி. 26:17-25). முற்பிதாக்களில் ஈசாக்கு விடமுயற்சியோடு எதிரிகளால் தூர்த்துப்போடப்பட்ட துரவுகளை மறுபடியும் தோண்டின செயல், அதே எதிரிகளையே அவரிடத்தில் ஈர்த்துக்கொண்டு வந்தது (ஆதி. 26:26-31).

புதிய ஆண்டிலே நம்முடைய செயல்பாடுகள், பயன் தரும் துரவுகளை தோண்டுவது என்னும் முறையியலின் அடிப்படையில் இருக்கும்படி அர்ப்பணிக்க வேண்டும். நாம் செய்கின்ற நற்செயல்களாம் துரவுகளை பிறர் தூர்த்து போட்டாலும், மறுபடி நாம் தோண்ட வேண்டும்.

பயன்பட வாழ்வதை துரவிற்கு ஒப்பிட்டு தமிழ் நூலாம் திருக்குறள் 215 -ஆம் பாடலில் இதைக் காணலாம்.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு

The wealth of men who love the 'fitting way' the truly wise,
Is as when water fills the lake the village needs supplies - G.U. Pope.

பல்லாண்டு காலம், பலரும் பயன்படுத்தும் வகையில் கிணற்றை - துரவை தந்த யாக்கோபு மற்றும் அவரது கிணறு வழியாக நமக்கு தரப்படும் பிற காரியங்களையும் தியானிப்போம்.

### *1. யாக்கோபின் கிணறு :* (யோவா. 4:6)

யாக்கோபின் கிணறு என தனிச் சிறப்போடு இந்தக் கிணறு அடையாளப்படுத்தப்படுகிறது. இஸ்ரவேலின் முற்பிதாக்களின் காலத்தில் மட்டுமல்ல, நம்முடைய முற்பிதாக்களின் காலத்திலும் கிணறு தோண்டுவது என்பது மிகப் பெரிய சாதனை; மிகப்பெரிய திட்டம். இந்த பெரிய திட்டப் பணியிலே (Project) எல்லாரும் வெற்றி பெற்றதில்லை.

இஸ்ரவேலரின் முற்பிதாக்களின் காலத்தில் 'கிணறு', எல்லா மனிதருக்கும் அத்தியாவசிய தேவையாக இருந்தது. ஏனென்றால் பஞ்சம் மிகுதியாக இருந்த காலக்கட்டம் அது. ஆகவே, பஞ்சத்தில் தஞ்சமாக கிணறு இருந்தது. இதனால் மிகவும் பாடுபட்டு கிணறு தோண்டினார்கள்.

இந்த காலத்தில் இருப்பது போல கிணறு தோண்டுவதற்கு நவீன உபகரணங்கள் எதுவும் இல்லாத காலம் தான் முற்பிதாக்களின் காலம். பாறையை தோண்டினால் தான் தண்ணீர் ஊற்று வரும். பாறைகளிலே பல வகை உண்டு. குறிப்பாக தமிழ் நாட்டிலே Granite, Charnockite, Gneissic போன்ற பாறை வகைகள் இருக்கின்றன. இக்காலக்கட்டங்களிலே பாறையை தகர்க்க வெடிமருந்துகள் (Dynamites)

பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அக்காலக்கட்டங்களில் இது கிடையாது. ஆகவே கடினமாக பாறைகளை, கடினமாக உழைத்து, உடைத்து 'கிணறு' தோண்டினார்கள்.

சில சமயம் இவ்வளவு கடினமாக உழைத்து, பாறைகளை உடைத்து, கிணறு தோண்டினாலும் தண்ணிர் வராமல் கூட போய் விடும்.

தண்ணீர் பொய்த்து போவதினாலே, கிணறு தோண்டும் போதே Mexico பகுதிகளில் வசித்து வந்த மாயன் இனத்தவர், தண்ணீர் வர வேண்டுமென்று இளம் பெண்களை கிணற்றில் தள்ளி கிணறை வணங்கினார்கள். தங்கள் நாடான யூகடானுக்கு தலைநகரை அமைத்த போது அதற்கும் 'கிணறுகளின் வாய்' என்று அழைக்கப்படும் சிச்சன் கிட்சா என்ற பெயரையும் வைத்தார்கள்.

கிணறு தோண்டினாலும், அதிலே தண்ணீர் வருவது 'கடவுளின் வரம்' என்பதை உலகிலுள்ள பல மக்களும் உணர்ந்திருந்த படியினால், இவ்வாறு விநோதமான வழிபாடுகளை நடத்தினார்கள்.

கிணறு தோண்டின கடினமான முதல் முயற்சியிலேயே ஒருவருக்கு தண்ணீர் கிடைத்து விட்டால், அவரை கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவரென்று அக்காலத்திலே வாழ்ந்த மக்கள் நம்பினார்கள்; இது வெறும் நம்பிக்கையல்ல; உண்மையுமாகும். யாக்கோபின் தந்தையாகிய ஈசாக்கை பெலிஸ்தியரின் ராஜாவாகிய அபிமெலேக்குவும், அவரது நண்பரும், அவரது படைத்தலைவரும் தேடி வருகிறார்களென்றால், அது இந்த ஆசீர்வாதத்தினால் தான் (ஆதி. 26:26-31).

'யாக்கோபின் கிணறு' என்பதும், ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாதத்தின் அடையாளமாகும். கடினமாக உழைத்த உழைப்பினை அங்கீகரித்து ஆண்டவர் கொடுத்த பரிசு தான் இந்த கிணறு, இன்று தோண்டும் கிணறுகளிலே அடி ஆழத்திலிருந்து நீரை இறைக்க Generator pumps பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த காலத்திலே எல்லாமே மனித முயற்சி தான். இதனால் கிணறு தோண்டுகையிலே தண்ணீர் பொங்கி வரும் போது பாடினார்கள் (எண். 21:18).

சமாரியா பெண்மணி இவ்வளவு மனித வளங்களை ஒருங்கிணைத்து, மனிதருக்கு வளமாக கொடுத்த கிணறை, தோண்டிக் கொடுத்த யாக்கோபை பெரிய மனிதராக காண்பது (யோவா. 4 : 12), இந்த பெரிய பணித்திட்டத்தினால் தான்.

நமது செயல்கள், யாக்கோபின் கிணறு போல, காலங்கடந்து நிலைத்து இருக்க வேண்டும்.

***2. களைப்பாற்றும் கிணறு :*** **(யோவா. 4:6)**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன் பயணத்திலே இளைப்படைந்தவராய், தம்மை ஆறுதல்படுத்திக் கொள்ள ஏற்ற இடமாக யாக்கோபின் கிணற்றையே காண்கிறார்.

இந்தியாவிலே அசோக சக்ரவர்த்தி முதல் இராணி மங்கம்மாள் வரை வழியெங்கும் மரங்களை நட்டு வைத்தார்கள். இது மக்களை இளைப்பாற்றிக் கொள்ள உதவியது.

நம் பகுதிகளிலே கட்டப்பட்டிருந்த 'அம்பலம்' என்னும் நிழல் கூடமும், பிரயாணத்தினால் இளைப்படைந்தோரை களைப்பாற்ற உதவியது.

நாமும் கிணறாக இருந்து பலரும் களைப்பாற உதவ வேண்டுமேன்பதையே இந்த கிணறு உணர்த்துகிறது.

பல இடங்களிலே தண்ணீருக்காக மக்கள் பல போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். இடந்தோறும், இனந்தோறும் மக்கள் நடத்தின போராட்டங்களிலே சில இடங்களிலே பொது கிணறுகளிலே தண்ணீர் எடுக்க உரிமை கிடையாது. நமது வரலாறு அப்படிப்பட்டது. இந்த வரலாற்று பாரம்பரியத்திலிருந்து வந்த நாம், எல்லாருடைய களைப்பையும் ஆற்றும் கிணறாக வாழ்வோமாக.

துரவு வழி துறவிகளாக அல்ல; ஒருவரோடொருவர் உறவு ஏற்படுத்தி உறவினர்களை விட மேலான கிறிஸ்துவின் அன்போடு வாழ்வோம். அதற்கே கிறிஸ்து இயேசு நமக்கு 'யாக்கோபின் கிணறு' வழியாக வழிகாட்டுகிறார்.

அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்**

**03-01-2015**



# தண்ணீர் குடிக்கத் தா

திருமறைப்பாடம் : யோவா 4:7-10

**சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் மொள்ள வந்தார். இயேசு அவரிடம், “குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்” என்று கேட்டார். யோவா.4:8**

விருந்தோம்பலில் தாகத்திற்கு தண்ணீர் கொடுப்பது சிறந்த பண்பாடாக பல மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியங்களிலே காணப்படுகிறது. யூத பாரம்பரியத்திலும் தாகத்திற்கு தண்ணீர் கொடுப்பதே முக்கியமான விருந்தோம்பல் பண்பாக சொல்லப்படுகிறது (தொநூ. 24:45, 46; மத். 10:42).

நீரின்றி உலகம் மட்டுமல்ல; உடலும் அமையாது. மனித உடலிலே 70 சதவீதம் தண்ணீர் இருக்கிறது. உடலிலே ஒரு சதவீதம் நீர்த்தன்மை குறைந்தாலே தாகமெடுக்கும். இரண்டு சதவீதத்திற்கும் மேல் என்றால் நா வறண்டு விடும். நான்கரை சதவீதத்திற்கு மேல் குறைந்து போனால் ‘நான் யாரு... எங்கே இருக்கேன்’ என உளற வைத்து விடும். ஐந்து சதவீதத்திற்கும் மேல் நீர்த்தன்மை குறைந்தால், மருத்துவமனையில் அவசர பிரிவில் அனுமதித்து சிகிச்சை கொடுக்க வேண்டியது தான்.

இன்று நீரை விருந்தோம்பலுக்காக மட்டுமல்ல; மருந்தோம்பலாகவும் பயன்படுத்துங்கள் என பிரச்சாரமே செய்யப்படுகிறது. ஏனென்றால் தண்ணீருக்கு பதிலாக செயற்கையாக தயாரிக்கப்பட்ட பானங்களைப் பருகுவதால், ஆரோக்கியமான வாழ்விற்கு மக்கள் அதிக தண்ணீர் குடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி Drink up எனும் விழிப்புணர்வு பிரச்சாரம் அமெரிக்க அதிபரின் மனைவி மிஷேல் ஓபாமாவால் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டிலே நீர் கொடுத்து உபசரிப்பது விருந்தோம்பலாக அல்ல; மருந்தோம்பலாகவும் செய்யப்பட்டது.

> நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பார்தம்
> பேருரைக்கிற் போமே பிணி.

இதுதான் தமிழர்களின் நோயணுகா விதி. அதாவது கோடைக் காலத்தில், நீரைச் சுடவைத்தும், மோரை நன்கு நீர் சேர்த்துப் பெருக்கி நீர் மோராக

அதிக அளவிலும் நெய்யை உருக்கிக் கொஞ்சமாகவும் சாப்பிட்டால் வியாதி வந்து சேராது என்பதே இந்தப் பாடலின் பொருள்.

கோடைக் காலத்திலே நீருக்கு பதிலாக Beer என அழைக்கப்படுகிற போதை குளிர்பானத்தை குடித்து குளிர்ச்சி ஏற்படுத்தி கொள்ள முனைவோருக்கு, Beer -ரினால் ஏற்படும் குளிர்ச்சி உடலில் சேர்வதில்லை; மாறாக பீரில் உள்ள Alcohol ஈரலைத் தான் குளிர்விக்கிறது; இதனால் நாளடைவில் ஈரல் உறைந்து சுருங்கிப் போகுமென்ற எச்சரிக்கையும் சொல்லப்படுகிறது.

தாகம் தீர்ப்பதற்கு முதலாவது தகுதியான பானமாக இருப்பது தண்ணீர் மட்டுமே. அதோடு, எப்போதும் தாகத்திற்கு தகுதியான பானமாக இருப்பது தண்ணீர் மட்டுமே.

'தாகத்திற்கு தா' என கேட்பதிலிருந்து ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய கடவுளுடைய ஈவு' குறித்த சிந்தனைகளை நாம் சிந்தித்து, நம்மை சீர்ப்படுத்திக் கொள்ளப்போகிறோம்.

### *1. தாகத்துக்குத் தா :* **(யோவா 4 : 8)**

யூதேயாவை விட்டு கலிலேயாவுக்குப் போகிற நீண்ட பயணத்திலே இளைப்பாறிக் கொள்ள நினைத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து, தன்னை இளைப்பாற்றும் முதல் பொருளாக தண்ணீரையே கண்டார்.

எல்லாரிடமும் பாரபட்சமின்றி அன்பு செலுத்துகிற ஆண்டவர், பாரபட்சமின்றி உரிமையாடு சமாரியா பெண்ணிடம் "தாகத்திற்கு தா" என்று கேட்டார்.

''பசி வந்து விட்டால் பத்தும் பறந்து போகும்'' என்று சொல்லுவார்கள். அந்தப் பத்தையும் மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தரம், முயற்சி, காமம், தாளாண்மை எனப் பட்டியலிடுகிறார்கள்.

'தாகம்' வந்து விட்டால், தான் யாரென்பதே மனிதருக்கு மறந்து போகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு பயணக் களைப்பினால் ஏற்பட்ட தாகம், சாதாரண மனிதரைப் போல, தான் யாரென்றே மறந்து போகின்ற நிலைக்கு தள்ளவில்லை. தாகத்திற்கு தான் யாரிடம் கேட்கிறோமென்று தெரிந்தே தான் தண்ணீர் கேட்டார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து களைத்து போன நிலையில் தான் தண்ணீர் கேட்கிறார் என்பதை அறிந்திருந்தும் யூதனாகிய நீர் எப்படி

என்னிடத்தில் தண்ணீர் கேட்கலாமென்று சமாரிய பெண் அவரிடம் எதிர்கேள்வி கேட்கிறார் (யோவா. 4:9). பொதுவாக மனிதர்கள் அனைவரும் மனசுத்தத்தோடும், மனசாட்சியோடும் பின்பற்ற வேண்டிய நீதியை 'சமூக நீதி' (Social Justice) என்பார்கள். இது சமூகத்திலே மனிதர்கள் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடனும், நல்லொழுக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. சமூக நீதியை சிதைக்கும் வகையில் சிலர் 'சமூக கட்டுப்பாடுகள்' ஏற்படுத்தி வைத்திருப்பார்கள். அதிலே சில குடும்பங்களை ஊரை விட்டு ஒதுக்கி வைக்கிறோமென்றும், அவர்களுக்கு உணவோ, தண்ணீரோ எவரும் கொடுக்கக் கூடாதென்றும், அவர்களோடு எந்த தொடர்பும் இருக்க கூடாதென்றும் விதித்திருப்பார்கள். யோபு மீதும் சமூக நீதியை மீறினாரென்ற குற்றச்சாட்டு (யோபு 22:7) கூறப்பட்டுள்ளதை காணலாம்.

யூதருக்கும், சமாரியருக்குமிடையே சமூக நீதி நிலவுவதற்கு பதிலாக சமூக கட்டுப்பாடுகளே மிகுந்திருந்தன. அதைத் தான் சமாரியா பெண்ணின் வார்த்தைகள் (யோவா. 4:9) பிரதிபலிக்கின்றன.

ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து 'தாகத்துக்குத் தா' என்று கேட்டதிலிருந்து சமூக நீதியை நிலைநாட்டுகிறார்; சமூக கட்டுபாடுகளை உடைக்கிறார்.

சிலர் இன்றும் குடும்பங்களிலே இப்படி ஆணையிடுவதுண்டு "அவளிடம் பச்ச தண்ணீ கூட வாங்கி குடிக்கமாட்டேன்." ஆனால், ஆண்டவருடைய வாழ்க்கை நெறி, வம்புகளையும், வீம்புகளையும் தவிருங்கள்; ஆண்டவரை நம்புங்கள் என்பதாகும். இதை நீதி 25 : 21, 22 ஐப் படித்து, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழிகாட்டுதலின்படி வாழ்க்கையை கட்டுவோமாக.

### *2. கடவுளின் அருட்கொடை :* **(யோவா. 4 : 10)**

பொதுவாக கொடுமையாக பிறருக்கு துன்பம் கொடுப்பவர்களைக் குறித்து கருத்து சொல்லும் போது, "கொஞ்சம் கூட ஈவிரக்கமில்லாமல் இப்படிச் செய்து விட்டார்களே!" என்று சொல்லுவதுண்டு.

ஆனால் அனைத்து ஆற்றலுமுள்ள திரித்துவ கடவுள், மனிதரின் இந்த தன்மைக்கெல்லாம் முற்றிலும் மாறுபட்டவர். அவரது ஈவின் அளவு அளவிடப்பட முடியாதது. ஆகவே கீர்த்தனை ஒன்றை எழுதிய காபிரியேல் உபதேசியார் (கீர் 11) ஆண்டவருக்கு "அன்பிரக்க தயாள பிரவாகன்" என்னும் அழகான பெயரைக் கொடுத்து, அவருடைய ஈவை போற்றிப் பாடுகிறார்.

கடவுளுடைய ஈவு அல்லது அருட்கொடை மனிதரையெல்லாம் பாரபட்சமின்றி பாதுகாக்கும் தயவு என்பதை நாம் புரிந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்த வேண்டும். மலைப் பிரசங்கத்திலே ஆண்டவருடைய ஈவைக் குறித்து (மத். 5 : 45) மிக அழகாக சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவர் தேர்ந்தெடுக்காதோருக்கும் ஈவு அளிக்கிறவர்.

அமெரிக்க ஜனாதிபதி Barack Obama -விற்கு தினந்தோறும் தபால் வழியாகவும், E-mail வழியாகவும் கடிதங்கள் வரும். ஒவ்வொரு கடிதமும் ஒவ்வொரு கோரிக்கையுடனோ, நன்றி தெரிவிப்புடனோ, குறைகளை சுட்டிக்காட்டும் வகையிலோ இருக்கும். இந்த கடிதங்களை படித்து, பதில் அனுப்புவதற்கென்று தனி அலுவலகமே இயங்குகிறது. இந்த கடிதங்களில் சிறந்ததும், சர்ச்சையில்லாததுமான 10 கடிதங்களை தெரிவு செய்து Obama -விற்கு அனுப்புங்கள். Obama இந்த கடிதங்கள் வந்த நகரத்திற்கு போகும் போது, இந்த கடிதங்களை எழுதிய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களோடு விருந்துண்பார். Hotel -இல் அவர்களை வரவழைத்து தாமே உணவு வாங்கி கொடுப்பார். இது அதிபரின் ஈவாக, தயவாக கருதப்படுகிறது.

ஆண்டவருடைய ஈவு, எல்லாருக்கும் உரியது. சங். 30 : 5 சொல்லுகிறபடி அவருடைய தயவோ நீடிய வாழ்வு.

புது வருடத்தில் வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம், அவரை போல தயவுள்ளவர்களாய் வாழ்வோமாக.

அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்**

**04-01-2015** ***கிறிஸ்துப் பிறப்புக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

# விடுதலைக்கான திருவெளிப்பாடு

## REVELATION FOR LIBERATION

எசா 61:1-11 திவெ 5:1-10
திபா 76 லூக் 4:16-21

**"...நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று."**
**லூக். 4:21**

***இறைவேண்டல் : விடுதலையருளும் கடவுளே, எங்களுக்கு விடுதலை வாழ்வை வழங்க உம் மைந்தர் இயேசுகிறிஸ்து வழியாக இவ்வுலகில் வெளிப்பட்டீர். சிறைப்பட்ட நிலையில் இருக்கும் அனைத்து மக்களும் இயேசு கிறிஸ்து வழியாக விடுதலையை அனுபவிக்க அருள்தாரும். அவர்கள் அனைவரும் விடுதலை பெற்று உரிமைப்பேறுடன் உம் ஆளுகையில் பங்காளர்களாக மாற உதவி செய்யும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழி மன்றாடுகிறோம். ஆமென்.***

வெளிப்பாடு என்பது மறைக்கப்பட்டதைத் தெளிவுபடுத்துதல் என்பதாகும். தடை செய்து கொண்டிருக்கும் திரையை அகற்றுதல் என்பது இதன் பொருள். உல்ஃபார்ட் பானன்பார்க் என்ற இறையியலாளர் "வெளிப்பாடு என்பது கடவுள் தம்மை முழுமையாக வெளிப்படுத்துவதைக் குறிக்கும்" என்றார். கடவுளைப்பற்றிய அறிவுக்கும், நம்பிக்கைக்கும் கடவுளின் திருவெளிப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். கடவுள் தம்மை திருமறை, படைப்பு, திருமைந்தர் ஆகியவைகளின் வழியாய் வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனுக்குல மீட்புக்காக கடவுள் மானிடர் மத்தியில் மனிதனாகத் தன்னை வெளிப்படுத்தினார். அந்த திருவெளிப்பாடுதான் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து வார்த்தையின் வடிவம் ஆவார். இதன் பொருள் கடவுள் ஊனுருவேற்பதாகும். இது யோவான் 1: 14, -இல் வார்த்தை மாமிசமானார், என்பதில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நாசரேத் ஊர் அறிக்கை லூக்கா 4:16-21, ஏசாயா 61: 1-11 வரையுள்ள திருமறையின் பகுதியாகும், இது ஆண்டவர் விடுதலை வழங்கும் முறையைத் தெளிவுபடுத்துகிறது.அதாவது: 1. To preach 2. To heal 3.To deliver

1. நற்செய்தியை அறிவித்தார்
2. ஆற்றுப்படுத்தினார்
3. விடுதலை வழங்கினார்

### 1. நற்செய்தியை அறிவித்தார் :

"ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க... என்னை அனுப்பியுள்ளார்" (He has anointed me to preach the gospel to the poor) (லுக் 4: 18).

நற்செய்தி என்னும் வார்த்தைக்கு இவாங்கலியோன்(Evangelion) என்னும் கிரேக்கப்பெயர்ச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவாங்கலியோன் (நற்செய்தி )என்னும் இச்சொல்லின் உட்பொருள் ''இறையரசு'' என்பதாகும். அருள்நாதர் இயேசுவின் போதனையில் இறையரசு என்பது கடவுளை அரசராக ஏற்றுக் கொள்வதால் மானுடரின் உள்ளங்களில் ஏற்படும் புதிய மனநிலையும், புதிய நோக்கமும் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

புதிய மனநிலையும் , புதிய நோக்கமும் என்றால் என்ன ? உலகின் மனநிலை உயர் பதவிகளை அடையவேண்டும் என்பதாகும், இயேசுகிறிஸ்துவின் சீடர்களான யோவானும், யாக்கோபும் இதற்கு எடுத்துக்காட்டாவார்கள் (மாற். : 10: 37). இறையரசின் மனநிலை பதவியல்ல பணிசெய்யவேண்டும் என்பது (மாற். 10:44). உலக மனநிலை அடக்கி ஆளவேண்டும் என்பது (லூக். 22:25,26). உலக நிலை பழிவாங்குவது. இறையரசின் நிலை பகைவரிடத்திலும் அன்பு செய்வது (மாற். 5:38-48). உலக மானுடரின் மனநிலை சுயநலம் ; இறையரசின் மனநிலை பிறர்நலம் (பிலி 2:4-8).

இயேசுகிறிஸ்து தனதுஆற்றலையும், வாய்ப்பையும் தன் நலத்துக்காகப் பயன்படுத்தவில்லை தன் பசியைப் போக்க கல்லுகளை அப்பங்களாக மாற்றவில்லை. கானாவூர் திருமண வீட்டில் பற்றாக்குறையை மாற்ற தண்ணீரை இரசமாக மாற்றினார். போராயர் A.T றாபின்சன் அவர்கள் Honest To God என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். அதில் ஒரு அதிகாரம்The man for others என்பதாகும். பிறர்க்காக வாழ்ந்தவர் இயேசு கிறிஸ்து ஒருவரே என அவர் குறிப்பிட்டிருக்கிறார். பிறர்க்காகவாழ்ந்த இயேசு கிறிஸ்து நற்செய்தியை அறிவிக்க ஆற்றல் நிறைந்தவர், நற்செய்தியை அறிவிப்பதின் வழியாக மக்களை விடுதலை வாழ்வுக்கு நேராய் நடத்தினார்.

இன்றைய உலகின் மனநிலைகளான வன்முறை, சுகபோகம், ஆதிக்கம், பதவிமோகம், பொய்மையை ஆதரித்தல், செழுமைக்கு அடிமையாதல், துன்புறுத்துவதில் இன்பம் காணுதல் ஆகியன மக்களிடையே மலிந்து கிடக்கின்றன. நற்செய்தியாம் இயேசுவை அறிவித்து

இறையரசின் புதிய மனநிலைக்கும் புதிய நோக்கத்திற்கும் நடத்த வேண்டியது திருச்சபையின் கடமையாக இருக்கிறது (மாற். :16:15; 1கொரி. 9:16; கொலோ. 1:25).

மருந்துவமனை ஒன்று சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருந்தது. அந்த மருத்துவமனையில் அழைப்பு கொடுக்க மின்சாரமணி அமைக்கப்பட்டிருந்தது. அது அதிக ஒலியை எழுப்பினதால் நோயாளிகளுக்கு அது சிறந்தாக அமையவில்லை. அதனால் அந்த அழைப்புமணி இருந்த இடத்தில் சிவப்பு வெளிச்சம் கொடுக்கும் விளக்கும் பொருத்தப்பட்டது. ஆனால் அது எரியவில்லை கேட்டபோது மின்சாரமணி ஒலிப்பதற்கு சக்தி குறைவாக போதும், ஆனால் விளக்கு எரிய சக்தி அதிகம் வேண்டும் என்பதாக சொல்லப்பட்டது. நற்செய்தியை ஒலித்தால் மட்டும் போதாது நற்செய்தி அறிவிப்பவர்களின் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும்.

## 2. *ஆற்றுப்படுத்தினார் (குணப்படுத்துதல்) :*

"இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும் ........... என்னை அனுப்பினார்" (He has sent me to heal the broker hearted) (லுக் 4:18).

மானுடரின் உலக வாழ்வு இருதயம் நறுங்குண்ட நிலைக்கு தள்ளப்படுகிறது. இதற்கு பல காரணங்கள் உண்டு. ஏழ்மை, வறுமை,பசி, பட்டினி, கொடூரமான ஆட்சி,இயற்கை பேரிடர்கள், விபத்துக்கள், நோய், முதுமை என சொல்லிக் கொண்டே போகலாம். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்க இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வெளிப்பட்டார். அருள்நாதர் இயேசுகிறிஸ்துவைப் போல இருதயம் நறுங்குண்ட நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் எவரும் இல்லையென்றே சொல்லலாம்.

1. குடும்ப உறவுகள் (யோவா. 7:1:5)
2. ஏழ்மை நிலை வாழ்வு (மத். 8:20)
3. தவறாக புரிந்து கொள்ளப்படுதல் (யோவா. 2:18,19)
4. பிறரால் நகைக்கப்படுதல் (மத். 9:24)
5. தனிமை (மத். 26:45)
6. ஏளனமாக நடத்தப்படுதல் (மத். 27:28a)
7. நேர்மையற்ற விசாரணை (மத். 27)
8. பழித்துரைத்தல் (மத். 27:40)
9. உடல் வேதனை (மத். 27:32-35)
10. ஆன்மிக வேதனை (மத். 27:46)

இவ்வாறு இருதயம் நறுங்குண்ட நிலைக்கு தள்ளப்பட்ட மனுவுருவேற்ற இயேசு கிறிஸ்து இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்க வல்லவராயிருக்கிறார் (எபி. 22:18).

இயேசுகிறிஸ்துவின் விடுதலைப்பணியில் குணமாக்கும் பணியும் ஒன்றாகும். (மத். 4: 24, மத். :8:16 ). இயேசு கிறிஸ்துவின் குணமாக்கும் பணி வெறும் உடல்சார்ந்த நோய்களை மட்டும் குணப்படுத்துவது அல்ல. அவரது குணமாக்கும் பணி ஆவி ஆன்மா, உடல் ஆகிய முழுமையையும் உள்ளடக்கியதாக இருந்தது. முடக்குவாதமுடையவரைக் குணப்படுத்தும் போது அவரது பாவங்களையும் மன்னித்து விட்டார் (மாற். 2:9). தொழுநோயாளிகளைக்குணப்படுத்திய போது ஆசாரியர்களுக்கு தங்களைக் கண்பிக்கச் சொல்லி சமூக அங்கீகாரம் பெறச்செய்தார் (லூக். 17:18). இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறுவர் (யோவா. 3:16) எனத் திருமறை அறிவுறுத்துகிறது.

### *3. விடுதலை வழங்கினார் :*

“சிறைப்பட்டோர் விடுதலை அடைய.... என்னை அனுப்பியுள்ளார்” (To set liberty to those who are oppressed and captives) (லூக் 4:18).

சிறைப்பட்டவர் என்றால் ‘அடைக்கப்பட்டவர்’ அல்லது ‘கட்டப்பட்டவர்’ என்பது பொருள். சமுதாய சட்ட திட்டங்களுக்கு எதிராக நடக்கின்ற பொழுது ஒருவர். சிறையில் அடைக்கப்படுகின்றார். 2008-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை போதைப்பொருட்கள் குறித்து வெளியிட்ட அறிக்கையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உலகம் முழுவதும் சிறைப்பட்டிருக்கும் மக்கள் ஒரு கோடிக்கு மேற்பட்டோர் என சொல்லப்பட்டிருக்கிறது. சில கைதிகள் விடுதலையாகும் பொழுது புதியோர் சிறை தண்டனைக்கு தினமும் ஆளாவதால் ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதும் மூன்று கோடி மக்கள் சிறையாகின்றனர்,

திருமறை அனைவரும் பாவம் என்னும் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் என குறிப்பிடுகிறது (கலா. 3:22). அனைத்தும் பாவத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுள்ளது என மறை நூல் கூறுகிறது, பாவத்தைக் குறிப்பிடும் ''ஹட்டா'' என்னும் எபிரேயச்சொல் குறிதவறுதல்அல்லது இலக்கை விட்டு பிறழ்தல் என்று பொருள்படும். கடவுள் வகுத்து அளித்த நெறிமுறைகளில் இருந்து பிறழ்வது பாவம்.

"பாவத்தின் பலன் சாவு" சாவு வாழ்க்கையில் பயத்தை ஏற்படுத்துகிறது. உளவியல் அறிஞர்கள் பலவிதமான பயங்கள் இருக்கின்றன என்கிறார்கள். அனைத்துக்கும் அடித்தளத்தில் இருப்பது மரணபயமாகும்.. ஊனும் இரத்தமும் கொண்ட பிள்ளைகளைப்போல் இயேசு கிறிஸ்துவும் அதே இயல்பினால் பங்கு கொண்டார். இவ்வாறு சாவின் மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்துவிட்டார் வாழ்நாள் முழுவதும் சாவு பற்றியஅச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார் (எபி. 2:14.15).

இயேசு கிறிஸ்துவின் உலக வாழ்க்கை, போதனை, இறப்பு, உயிர்தெழுதல் ஆகியவைகளின் பலனாக நாம் மன்னிப்பு பெற்று ஆன்மிக நோய்நீங்கி, சீரடைந்து விசுவாசத்தின் வழி அவரோடிணைந்து மீட்பையும், புதிய வாழ்வையும் பெற்றிருகின்றோம். நமது கடமை உரோமர் 14 : 8-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம், இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்". ஆகவே நாம் வாழ்ந்தாலும், இறந்தாலும் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்.

கவிஞர் தே. தேவசகாயம் அவர்களுக்கு மேசியாதாஸ், தேவ நேசன் என இரண்டு மகன்கள் இருந்தனர். ஒருநாள் அவ்விருவரும் ஒரு பொருளுக்காக இது என்னுடையது, உன்னுடையது அல்ல என்று கூச்சலிட்டுக் சண்டை போட்டார்கள். அவர்களை சமாதனப்படுத்த முயன்ற தேவ சகாயத்தின் உள்ளத்தில் உரோமர் 14:8-ஆம் வசனம் பளிச்சிட்டது. இந்நிகழ்ச்சியால் உள்ளம் கிளர்ச்சி பெற்ற அவர் "நீயுனக்கும் சொந்த மல்லவே" என்னும் பாடலை எழுதினார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைமைந்தர் இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட அடிமை. எனவே தனக்கென்று உரிமைபாராட்ட தகுதியற்றவர், வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் என்னும் கருத்தில் நமது ஆன்மா இறைவிருப்பம் நிறைவேற்றுவதில் உறுதி கொள்ளட்டும். நமது உடல் நீதிக்குரிய ஆயுதமாக, பாவத்திற்கு எதிராக செயல்புரிய ஆண்டவருக்கு ஒப்படைக்க வேண்டும். இறை இயேசுவின் விடுதலைப்பணியில் நம்மை இணைத்து நற்செய்தியை அறிவித்து, குணப்படுத்தி, (ஆற்றுப்படுத்தி) சிறைப்பட்டோரை விடுவிப்போம்.

அருள்திரு. A. **வில்லியம் தாமஸ்**

**06-01-2015**

*திருத்தோற்றத் திருநாள்*

# கிறிஸ்து அனைத்து மக்களையும் தம்பால் ஈர்க்கிறார்

**CHRIST DRAWS ALL NATIONS TO HIMSELF**

எசா 56:1-8 திவெ 7:9-17
திபா 72 மத் 2:1-12

**"...ஏற்கெனவே கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களோடு ஏனையோரையும் சேர்த்துக் கொள்வேன்."** எசா. 56:8

**இறைவேண்டல் :** *அனைத்துலகிற்கும் ஆண்டவரே, உமது மாட்சி நிறை நட்சத்திரத்தை கண்ட நாங்கள், மனு உருவேற்று மண்ணில் வெளிப்பட்ட இறை மைந்தரால் அமைதியின் விடியலைக் காண்கிறோம். உமது இறை ஒளியில் அனைத்து மானிடரையும் தம்பால் ஈர்த்து வாழ்வு தருகின்றீர். நாங்களும் இவ்வொளியில் நடக்கவும், பிறருக்கு வழி காட்டவும், அருள்புரிய எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக கேட்கிறோம். -ஆமென்.*

முகநூல் (face book) என்னும் சமூக வலைதளம் இன்றைய இளைஞர், முதியோர், பெண்கள், ஏன், குழந்தைகள் வரைக்கும் தம்பால் ஈர்க்கும் ஆற்றல் கொண்டதாக உள்ளது. இன்று முகநூல் புத்தகத்தில் ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள் உறுப்பினராக உள்ளனர். இப்படி அதிக அளவு மக்களால் வெகுவாக கவரப்படும் இந்த வலைதளம் என்னதான் பயனை ஏற்படுத்துகிறது என நோக்கின், பயன்பாட்டை விட இதனால் ஏற்படும் தீமைகளே அதிகமாக உள்ளன. ஆள்மாறாட்டம், பொய்மை, ஏமாற்றுதல், செலவினம், காலம் சரியாக பயன் படுத்தப்படாமை எனும் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

உயிர்த்தெழுந்த அருள்நாதர் இயேசு கிறிஸ்துவை தம் காயம் நிறைந்த கரங்களை காட்டி அனைத்துலக மக்களையும் தம்பால் ஈர்க்கும் தன்மை கொண்டவராக திருமறையிலும், கிறிஸ்தவ வாழ்விலும் நாம் உணருகிறோம். மீட்பு தந்து நிலையான வாழ்வை நமக்கு அருளுகிறார்.

### *1. அன்பைக் காட்டி ஈர்க்கிறார் :* (மத் 2:6)

"அன்பை வெளிப்படுத்தும் எதையாவது காண்பியுங்கள்" என நான்கு சீடர்களை குரு ஒருவர் அனுப்பினார். முதல் சீடன் கையில் அழகிய மலருடன் வந்தான். இரண்டாவது சீடன் ஓர் படபடக்கும் வண்ணம் மிகு வண்ணத்துப்பூச்சியுடன் வந்தான். மூன்றாவது சீடன் ஓர்

பறவைக்குஞ்சுடன் வந்தான். நான்காம் சீடன் வெறுங்கையுடன் வந்தான். நான்காம் சீடனிடம் குரு ''உனக்கு ஒன்றும் கிடைக்க வில்லையா?'' என்று கேட்டார். அவன், ''ஐயா நானும் மலரைப் பார்த்தேன் அழகாயிருந்தது, செடியிலேயே இருக்கட்டும் என விட்டுவிட்டேன்; வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன் சுதந்திரமாய் பறக்கட்டும் என விட்டுவிட்டேன்; குஞ்சுப் பறவையைப் பார்த்தேன் தாய்ப் பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்'' என்று தெளிவாய் கூறினான். குரு அவனை அணைத்துக்கொண்டு ''நீ தான் உண்மையான அன்பை கொண்டுவந்தாய்'' என்றார்.

வாழ்விழந்து, வழியிழந்து, வலுவிழந்து, மீட்பிழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மானுடத்திற்கு நிலை வாழ்வை கொடுக்க அன்பின் கருவியாய் இயேசு கிறிஸ்து இவ்வுலகம் வந்தார். ''பெத்லகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை. ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்''. (மத் 2:6) எனும் வசனத்தில் ''ஆயரென ஆள்பவர்'' எனும் அடைமொழி கிறிஸ்துவின் அன்பை வெளிக் காட்டுகிறது. தாவீது அரசர் ஆண்டவரை ஆயராகக் கொண்டு, பாடும்போது திருப்பாடல்கள் 23ல் ''ஆண்டவர் என் ஆயர் எனக்கு குறைவில்லை'' எனத் தொடங்கி, ஆயரின் அன்பின் தன்மையை பின்வருமாறு பட்டியலிடுகிறார்.

(1) உணவு கொடுத்து அன்பு செய்பவர் (23:2)
(2) உயிர் கொடுத்து அன்பு செய்பவர் (23:3)
(3) உடனிருந்து அன்பு செய்பவர் (23:4)
(4) உயர்வுதந்து அன்பு செய்பவர்.

இயேசு கிறிஸ்து தன் சீடர்கள் பால் அதிக அன்பு கொண்டவராய் இருந்தார் என்பதை மார்பில் சாய்ந்து அன்பு பெற்ற சீடன் என்ற நிலையில் யோவான் நற்செய்திநூலில் பார்க்கிறோம் (யோவா 13:23). இந்த களங்கமற்ற, சாதி, சமயம், இனம், நிறம், கல்வி, பணம், உயர்வு, தாழ்வு எதுவும் பாராத, ''உனக்காக நான் மரித்தேனே'' எனும் ஆண்டவரின் அன்பு மக்களை ஈர்க்கிறது.

எல்லாமக்களுக்கும் மகிழ்வை கொண்டு வரும் பிறப்பு (லூக் 2:10);
எல்லா மக்களுக்கும் மாதிரியான வாழ்வு (யோவா 13:15; உரோ 15.5);
எல்லா மக்களுக்கும் மீட்பு உண்டாக்கும் சிலுவை மரணம்
(1 பேது 2:24; உரோ 6:6)

ஆக அனைத்திலும் அவர் தம் அன்பையே உணர முடிகிறது அந்த அன்பு அவர் பால் நம்மை ஈர்க்கிறது.

### *2. ஆற்றலைப் பகிர்ந்து ஈர்க்கிறார் :* (எசா 56:7)

கானாவூரில் சுவையுள்ள ரசம் தந்து குறைவை நிறைவாக்கிய ஆற்றல் (யோவா 2:11); காற்றையும் கடலையும் பார்த்து ''இரையாதே

அமைதலாயிரு'' என அமைதலாக்கிய ஆற்றல் (மத். 8:26); நடக்க இயலாதவரையும், கண் பார்வையற்றவரையும் துள்ளி குதித்து எழுந்து நடனமாடச் செய்த ஆற்றல் (மத் 9 :2) என ஆற்றல் கொண்ட ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம் ஆற்றலைப் பகிர்ந்து பிறரை ஆற்றல்படுத்த நம்மை தம்பால் ஈர்க்கிறார். ''நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வர், ஏன், அவற்றை விட பெரியவற்றையும் செய்வர் ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன்'' என தனக்குண்டான ஆற்றலை பகிர்ந்து நம்மை ஈர்க்கிறார், (யோவா 14 : 12).

பழைய ஏற்பாட்டின் காலத்தில் கடவுள் தம் ஆற்றலை நீதித் தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் இறைவாக்கினர்களுக்கும் பகிர்ந்து அளித்ததை பார்க்கிறோம். எ.கா : சிம்சோன் (நீமொ 16:28); அன்னா (1 சாமு 2:1); தாவீது அரசர் (திபா 29:11).

''முதிர் வயதில் என்னை தள்ளி விடாதேயும் ஆற்றல் குன்றும் நாளில் என்னை கைவிடாதேயும்'' என அரசர் தாவீது மன்றாடுகிறார் (திபா 71 : 9).

கடவுள் தாம் தெரிந்து கொண்ட இஸ்ரவேலரைக் குறித்து கூறும் போது, ஆற்றல் பகிர்ந்து ஈர்க்கும் நிலையை ஏசாயா இறைவாக்கினர் நூலில் காண இயலுகிறது. அதாவது, ''அழைத்து வருவேன்; மகிழச் செய்வேன்; ஏற்றுக் கொள்வேன்'' என அழைப்பு கொடுப்பதோடு ''சேர்த்துக் கொள்வேன்'' என கூறி தம் ஆற்றலால் ஒருங்கிணைக்கிறார் (எசா 56:7,8).

ஒரு குதிரை இரண்டு டன் எடையை இலகுவாக இழுத்துச் செல்லும். இரண்டு குதிரைகள் நம் கணக்குப்படி நான்கு டன் எடையை இழுத்துச் செல்ல வேண்டும். ஆனால் உன்மையில் அவை 27 டன் எடையை இழுத்துச் செல்லும். ஆற்றல் பகிரப்படுவதால் பலன் மிகுதியாகிறது. இயேசு கிறிஸ்து ஆற்றலைப் பகிர்ந்து நம்மை தம்பால் ஈர்த்து தம் திட்டம் நிறைவேற நம்மைப் பயன் படுத்துகிறார்.

### *3. அடைக்கலம் தந்து ஈர்க்கிறார் :* (திவெ 7:10)

மழையினால் மரக்கிளை நொறுங்கி கீழே விழ பறவைகள் கூடுகளை விட்டு அடைக்கலம் தேடி அருகிலிருந்த வீட்டினுள் நுழைந்தன. அங்கே மனிதனைப் பார்த்ததும் பதறி அடித்து வெளியே வந்தன. ''ஐயோ'', என இப்பறவைகளுக்கு அடைக்கலம் கொடுக்க எண்ணி அழைத்த மனிதனின் பேச்சும், அழைப்பும் வீணாயிற்று. ''ஓ. நான் ஒரு பறவையாக மாறினால் அன்றி இப்பறவைகட்கு அடைக்கலம் தர இயலாது'' என்ற முடிவு செய்தான்.

அடைக்கலம் தேடிய மனிதனுக்கு அடைக்கலம் கொடுக்க எண்ணிய ஆண்டவர் மனிதனாக மண்ணில் வந்து நமக்கு அடைக்கலம்

தருகிறார். இவர் தந்த அடைக்கலம், இவ்வுலகம் சார்ந்தது மட்டுமல்ல, விண்ணுலகு சார்ந்ததும் கூட. தாவீது அரசர் கூறும் போது.

"பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர்" (திபா 4:8)

"நெருக்கடி வேளையில் பாதுகாக்கிறீர்" (திபா 20:1)

"கேடுவரும் நாளில் கூடாரத்தில் பாதுகாப்பார்" (திபா 27:5)

"உயிரைக்காப்பார்" (திபா 121:7) என்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அடைக்கலம் தந்து நம்மை ஈர்க்கிறார் இந்த அடைக்கலம் துரத்துவோரிடமிருந்து தரும் அடைக்கலம் (திபா 7:1) மேலும் "காப்பாற்றும் வெட்கமுறவிடாதேயும்" என கதறுகிறார். இறைவா, உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்என கூறுகிறா (திபா 7:1; 16:1).

எந்த ஒரு ஆற்றல் நிறைந்த மனிதனும் மரணத்திற்கு பயப்படுவான். எனவே, குற்றவாளிகளின் குற்றங்களை ஒப்புக்கொள்ள அல்லது உண்மையை அறிய அவர்களை ஓர் நீர்தொட்டியில் நிற்கவைத்து, தண்ணீரின் அளவை கூட்டுவார்கள். நீர்மட்டம் உயர உயர குற்றவாளிக்கு மரண அச்சம் தொற்றிக்கொள்ளும். அப்போது உண்மையைக் கூறிவிடுவர். இம்முறை 1954-ம் ஆண்டு டாக்டர். ஜாண் சி. லில்லி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இம்முறைக்கு சென்சரி-டெப்ரிவேஷன் என்று பெயர். இம்முறையில் தண்ணீர் தலைக்கு மேல் வந்தாலும் குற்றவாளி இறப்பது இல்லை. ஏனெனில், பெர்ப்ளூரோ கார்பன் என்னும் வேதிப்பொருள் தண்ணீரில் கலக்கப்பட்டிருக்கும். எனவே, நுரையீரல் சுவாசித்துக் கொண்டிருக்கும். ஆனால், மூளையோ மனிதனை பதறவைக்கும்.

கிறிஸ்துவை தன் மீட்பராக ஏற்றுக்கொண்டவர் எவரும் இந்த உலக இறப்புக்கு அச்சம் கொள்ள தேவையில்லை. வீடுவரை உறவு வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ? என்று கவிஞர் கண்ணதாசன் பாடுகிறார். திருமறையில், இறை சமூகத்தில் ஆண்டவரை தொழுது ஆராதிக்கும் இவர்கள் யார்? எனும் கேள்விக்கு, "ஆண்டவரால் பாதுகாக்கப்படுவர் இனி இவர்களுக்கு பசியோ தாகமோ இரா. கதிரவனோ எவ்வகை வெப்பமோ அவர்களைதாக்கா. ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி அவர்களை மேய்க்கும் வாழ்வளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும் கடவுள் அவர்களில் கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார்" என நிலையான வாழ்வின் அடைக்கலம் கூறப்பட்டுள்ளது (திவெ. 7:15). உண்மை அடைக்கலம் என்பது உலகம் கைவிடும் போதும் தருவதுதான். அந்த அடைக்கலத்தை தந்து அருள்நாதர் இயேசு கிறிஸ்து தம்பால் நம்மை ஈர்க்கிறார்.

அருள்திரு. N. **ஜெசின்**

**11-01-2015**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு***

# அழைப்பிற்கு ஏற்ப வாழ்தல்

## LIVE WORTHY OF YOUR CALLING

நீமொ 20:1-11 உரோ 6:12-21
திபா 14 மத் 7:16-23

**"உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன்." தொநூ 9:11**

**இறைவேண்டல் :** *ஆற்றல் நிறைந்த கடவுளே ! வாழ்வின் சட்டங்களைத் தந்து உமது பிள்ளைகளாக, அவைகளின்படி வாழவும், உம்மை ஏற்றுக்கொள்ளவும் உதவி செய்பவரே, நாங்கள் தீமையை தெளிவாக அறிந்து, பாவத்தின் ஆற்றலுக்கு எதிர்த்து நிற்கவும், அதன் வழி எங்கள் வாழ்வும் அழைப்பிற்கு ஏற்புடையதாக அமையவும், உலக வாழ்விலும், அமைதி பெற்று வாழவும், அருள் செய்தருள வேண்டுமென்று திருமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக் கொள்கிறோம் -ஆமென்.*

திருமறையில் இடம் பெற்றிருக்கும் அழைப்பினைக் குறித்த காட்சிகள் அனைவரையும் எளிதாகக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டவை.

எ.கா. விப 3 : எரிகிற முட்புதர் வழி மோசேக்கு வரும் அழைப்பு
எசா 6 : ஆலயத்தில் எசாயாவுக்கு வரும் அழைப்பு
எரே 1 : யாவேக்கும் எரேமியாவுக்கும் இடையே நடைபெறும் உரையாடல்

மனிதரை அழைக்கிறவர் கடவுள். மக்கள் மீட்கப்பட வேண்டுமென்பதே அழைப்பின் நோக்கம். அழைப்பில் கடவுள் மனிதர் பேரிலுள்ள தமது கவலையையும், கருணையையும் வெளிப்படுத்துகிறார். அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் கடவுளின் திருவுளத்தை வெளிப்படுத்த வேண்டும். பிற இனத்தவராகிய நீங்களும் இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்க அழைப்பு பெற்றிருக்கிறீர்கள் எனத் தூய பவுலடிகளார் குறிப்பிடுகிறார். (உரோ 1: 6). ஜாண் மேசன் (John Mason) என்பவர் கூறும் போது, "இரண்டு நிலைகளில் நீ வாழலாம். ஒன்று உயிரற்ற வாழ்வு, மற்றொன்று உயிரோட்டமான வாழ்வு" (There are really only two ways of living your life – living dead or living alive) என்கிறார். உன்மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து,

வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும், உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உன் வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்து கொள்ளும் பொறுப்பு நம்மிடமே விடப்பட்டுள்ளதாக கடவுளே இங்கு கூறுகின்றார் (இச 30. 19) நமக்கு வழங்கப்பட்டிருக்கும் கடவுளின் அழைப்புக்கு ஏற்ப வாழ்வது எப்படி என்பது குறித்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திருமறைப் பாடங்கள் அடிப்படையில் சிந்திப்போம்.

## *1. கிறிஸ்தவத் தகவுகள் நிறைந்த வாழ்வு வாழ்தல்* **(Live Christian Values driven life) :**

கிறிஸ்தவத் தகவுகளுக்கு இசைந்து வாழ்தல் என்பது கிறிஸ்துவின் நடத்தைக்கு ஒப்பான முறைகளைப் பின்பற்றுதல் ஆகும் (Conforming to Christs standards of behaviour). மனிதச் செயல்பாடுகளில் கடவுளின் தலையீட்டினை ஏற்றுக் கொள்வதாகும். இத்தகைய அனுபவம் நேர்மையாளராய் வாழ அடிகோலும். நவீன காலத்தில் வாழும் மனிதன் தொடர்புச் சாதனங்கள் வழி அதிக பட்டறிவும், பட்டங்களும் பெற்றிருப்பினும் பண்பு நிலைகளில் தரமிழந்த நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான். கிறிஸ்தஜவப் பின்பற்றுகிறவர்கள் என்ற பெயரிலும் பலர் கிறிஸ்துவை இலட்சியம் இல்லாதவர்களும், இலட்சியங்களை அடைய குறுக்கு வழிகளைப் பின்பற்றுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். கடவுள் இல்லை என அறிவிலிகள் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றனர். இவர்கள் சீர்கெட்டு அருவருப்பான செயல்களில் ஈடுபடுகின்றனர். நல்லது செய்வார் எவருமே இல்லை (திபா. 14:1). நமது செயல்பாடுகள் கடவுளை வெளிப்படுத்துவதாய் இருந்தல் அவசியம். உன் சொற்களைக் கொண்டு உன் உணர்ச்சிகள் மதிக்கப்படுகிறது. உன் உணர்ச்சிகளைக் கொண்டு உன் செயல்கள் மதிக்கப்படுகிறது. உன் செயல்களைக் கொண்டு உன் வாழ்க்கை மதிக்கப்படுகிறது என்பது மெய்யியலாளர் சாக்ரட்டீசின் கூற்று. சிறுவர்களான தன் இரு புதல்வரையும் அழைத்துக் கொண்டு தந்தை ஒருவர் சர்க்கசுக்குச் சென்றார். நுழைவுச்சீட்டு நிலவரம் குறித்து நுழைவுச் சீட்டு கொடுக்குமிடத்தில் இருந்தவரிடம் தந்தை வினவினார். பெரியவர்களுக்கு தலா 100 ரூபாயும், ஒன்பது வயதுக்கு குறைந்தவர்களுக்கு 75 ரூபாயும், ஆறு வயதும் அதற்கு கீழானவர்களுக்கும் கட்டணம் கிடையாது என நுழைவுச் சீட்டு கொடுக்குமிடத்தில் உள் அமர்ந்திருந்த இளைஞன் கூறிவிட்டு, உங்கள் குழந்தைகளின் வயது என்ன? என்று தந்தையிடம் வினவினான். அதற்குத் தந்தை, இளையவனுக்கு மூன்று வயதும், மூத்தவனுக்கு ஏழு வயதும் ஆகிறது. எனக் கூறி நீங்கள் கூறியபடி

கட்டணமாக மொத்தம் நான் நூற்று எழுபத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டுமல்லவா எனக் கேட்டார். அப்பொழுது கட்டணம் வசூலித்துக் கொண்டிருந்த இளைஞன் சார், உங்களுக்கு லாட்டரி சீட்டு மூலம் பணம் எதுவும் கிடைத்ததா? எழுபத்தைந்து ரூபாயை மிச்சப்படுத்தியிருக்கலாம் அல்லவா? மூத்தவனுக்கு ஆறு வயது என நீங்கள் கூறினால் எனக்குத் தெரியவா போகிறது எனக் கேட்டான். அதற்கு சிறுவர்களின் தந்தை, தம்பி நீ சொல்வது சரிதான். உனக்கு என் பிள்ளைகளின் வயது தெரியாது. ஆனால் என் பிள்ளைகளுக்கு அவர்கள் வயது தெரியுமல்லவா? என அமைதியாகக் கூறினார்.

ஒழுக்க முறைகள் மீறப்படுதலும், நன்னெறிகள் மதிக்கப்படாமலும் மனிதர் வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்களாகிய நாமும், நமது இளம்தலைமுறையினரும் பொருள் பொதிந்த கிறிஸ்தவத் தகவுகள் நிறைந்த வாழ்வு மேற்கொள்வது கடவுளின் எதிர்பார்ப்பாக உள்ளது என்பதை நினைவில் நிறுத்துவது சிறப்பானது.

## *2. பாவ ஆதிக்கத்தை மேற்கொண்டு வாழும் வாழ்வு* **(Dethroning sin in our daily behaviour)** :

பாவ ஆதிக்கத்தை மேற்கொள்வது சாத்தியமா? இக்கேள்வி உலகெங்கும் உள்ளவர்களால் எப்போதும் கேட்கப்படுகிறது. நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர்கள். மாறாக, இறந்தும் வாழ்வோராய், உங்களைக் கடவுளிடம் ஒப்படையுங்கள். கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள் எனப் பவுல் அடிகளார் இக்கேள்விக்கான பதிலை நமக்கு வழங்குகிறார் (உரோ. 6.13). கடவுளுக்குத் தங்களை ஒப்படைத்து வாழ்பவர்களால் இது சாத்தியம் ஆகும். நான் கடவுளுக்கு அடிமை என்னும் உணர்வு மேலோங்கும் போது கடவுள் விரும்பாதவற்றை விட்டு விலகும் பேராற்றலை கடவுள் நமக்கு வழங்குவார். கடவுளின் அருளரசு உங்கள் மேல், உங்கள் நடுவில் வந்து விட்டது. ஆகவே அவரது அருள் உங்களைச் சந்தித்து விட்டதால் நீங்கள் மனந்திரும்புங்கள் என்பதே அருள்செய்தி (மத் 12 : 28, லூக் 11:20, 4:21, 17:21). அதாவது, உங்களது தகுதியை வைத்து அல்ல, தமது அருளின் மிகுதியால் உங்களை இருக்கிற வண்ணமாக இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டார். அதற்கு மறுமொழியாக உங்கள் வாழ்வு மாற்றம் அடைய வேண்டும். ஆகவே மனந்திரும்புதல் என்பது கடவுள் உங்களை ஏற்றுக் கொள்வதற்கு நிபந்தனை அல்ல. கிறிஸ்துவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உங்கள் மேல் பாவம் ஆதிக்கம் செலுத்த இயலாது.

### *3. உண்மையான சீடத்துவம்* (True Discipleship)*:*

எல்லா இடங்களிலும் போலிகள் மலிந்து விட்ட காலங்களில் நாம் வாழ்கிறோம். சமயத் துறையிலும் போலிகள் மலிந்திருந்ததாகத் திருமறை விளக்குகிறது. (மத் 7: 16 - 23). போலி இறைவாக்கினர்கள் நல்வர்கள் போன்று நடித்து வலம் வருவதால் உண்மையான ஒப்படைப்புள்ளவர்ளை இனம் காண்பது மிக முக்கிய இடம் பெறுகிறது. எனவே, இறைவாக்கு உரைப்போரை அவர்கள் நடப்பிக்கும் வல்ல செயல்களை மட்டும் அடிப்படையாக வைத்து அவர்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்யாது, அவர்கள் கடவுளால் இறைப்பணியாளர்களாக அறியப்பட்டிருக்கிறார்களா என்ற நிலையில் தான் அவர்கள் உண்மைத் தன்மைகள் உறுதி செய்யப்படல் வேண்டும் (மத் 7:16).

Acceptance depends not on professor, nor even on apparently Christian activity, but on whether Jesus knew them. உயிருள்ள கடவுளின் வார்த்தையைப் படித்து அறிவதாலோ அல்லது கவர்ச்சிகரமாக அதனை விளக்குவதாலோ அல்ல, மாறாக, வார்த்தையானவரைப் போல் வாழ்தலே நமது ஒப்படைப்புக்கு வலு சேர்க்கும். “The cost of Discipleship என்னும் தமது நூலில் போன்ஹோஃபர் (Bonhoeffer) என்ற இறையியலாளர் குறிப்பிடுவது நினைவிற்கொள்ளத் தகுந்தது. “when christ calls a man, he bids him, come and die என்பது அவரது கூற்று. கடவுளிடம் ஒருவர் கொண்டுள்ள பற்றுறுதி கடவுளுக்காக உயிரைக் கொடுக்கும் அளவுக்கு அவரைத் தன்னலம் துறக்கின்றவராக மாற்ற வேண்டும். 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் தீவிரவாதிகளின் தாக்குதலால் ஏற்பட்ட சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பினால் டெல்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் அச்சமயம் நின்று கொண்டிருந்த அப்பாவிகளான 11 பேர் குண்டு வெடிப்பில் பலியானார்கள். 76 பேர் காயமடைந்தனர். இவர்களில் தூத்துக்குடி துறைமுகத்தில் பணியாற்றிய 57 வயது நிரம்பிய பத்திரன் என்ற பொறியியல் வல்லுநர் தனது இரு கால்களையும் இழந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த ஆபத்தான நிலையிலும் தன் மேலதிகாரியுடன் அலைபேசியின் வழி தொடர்பு கொண்டு, இங்கு ஏற்பட்ட குண்டு வெடிப்பின் காரணமாக இன்று நடக்கவிருந்த துறைமுகம் சார்ந்த வழக்கு இன்று நடைபெற இயலாது போய்விட்டது என்ற செய்தியைத் தெரிவித்தார். அத்துடன் மருத்துவமனையில் தேவையான சிகிச்சைகள் முடித்த பின்னர் இந்த வழக்கில் தொடர்ந்து தான் கவனம் செலுத்துவதாகவும் தன் மேலதிகாரியிடம் தெரிவித்தார். தனக்கு ஏற்பட்ட ஆபத்தான நிலையைத்

தன் குடும்பத்தினருக்கு அறிவிப்பதைக் காட்டிலும் தான் பொறுப்பு வகித்திருந்த தலைமைக்கு அறிவிப்பதில் பொறுப்பாய்ச் செயல்பட்டதைக் கேள்விப்பட உடன் பணியாளர்கள் அதிர்ச்சி அடைந்ததுடன் அவரிடத்தில் அளவற்ற மரியாதை கொண்டனர், அவருக்கு ஏற்பட்ட துயர அனுபவத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்தனர். ஒரு மனிதன் தான் வகித்த சாதாரண பணியில் இத்தகைய பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கிறபோது, ஆண்டவரால் அழைக்கப்பட்டு, நம்மை நம்பி அவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கின்ற பொறுப்புகளில் நாம் எவ்வளவு உண்மையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து சிறப்பாய் செயல்படுவது நம் கடமை.

அருள்திரு. S. **ஜாண் சகாயம்**

**18-01-2015**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

# ஒரே ஆண்டவர் ஒரே திருமுழுக்கு

## ONE LORD, ONE BAPTISM

எண் 11:23-30 — 1கொரி 10:1-4

திபா 23 — யோவா 10:7-18

**"... தந்தை என்னை அறிந்திருக்கிறார் நானும் தந்தையை அறிந்திருக்கிறேன் ..."** யோவா 10:14

***இறைவேண்டல் : ஒரே ஆண்டவரும் மீட்ருபமானவரே, உமது ஒருமைப்பாட்டிலும், ஒரே திருமுழுக்கிலும், ஒரே நம்பிக்கையிலும் விண்ணரசை எதிர்நோக்கும் மக்களாய் செயல்பட அருள்தாரும். திருச்சபையில் கிறிஸ்துவின் ஒருமைப்பாட்டினை நிலைநாட்டவும் ஒரே திருமுழுக்கின் மனமாற்றத்தோடு செயல்பட இந்த நம்பிக்கையில் உறுதியாயிருக்கவும் உதவி செய்யவேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.***

பற்றுறுதி அறிக்கைகளில் திருச்சபை தொழுகைகளின் வழியாக ஒரே ஆண்டவரையும் ஒரே திருமுழுக்கையும் மிக தெளிவாக அறிக்கை செய்கிறோம். நிசேயா பற்றுறுதி அறிக்கையில் நமது நம்பிக்கையை வலுப்படுத்துகிறோம். எல்லாம் படைத்த தந்தையாம் ஒரே கடவுளை நம்புகிறோம், மேலும் ஒரே ஆண்டவராய் கடவுளின் ஒரே மைந்தராய் இருக்கும் இயேசு கிறிஸ்துவை நம்புகிறோம். இந்த பற்றுறுதி அறிக்கை கி.பி. 325 முதல் திருச்சபைகளில் இறை மக்கள் அறிக்கை செய்யும் மிக முக்கியமான பற்றுறுதி ஆகும். இப்பற்றுறுதியில் ஒரே திருமுழுக்கை அறிக்கை செய்வதும் நமது வழக்கம். ஆகவே கிறிஸ்தவ திருச்சபைகளில் இறை மக்களின் மிக முக்கிய நம்பிக்கையின் ஆதாரமாக விளங்குவது ஒரே ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையும் ஒரே திருமுழுக்கின் அவசியமுமாம். இவற்றை வழிபாடுகளில் அறிக்கை செய்வதில் நாம் அவற்றை உறுதிப்படுத்தி கொள்கிறோம்.

### *1. ஒரே ஆண்டவர் :*

மோசே தனது ஆண்டவரை கண்டடைந்த பின்னர் ஆண்டவருடைய எல்லை கடந்த ஆள்தத்துவத்தை புரிந்து கொள்கிறார். ஒரே ஆண்டவரை வழிபடுகிற சமூகம் இறைவாக்கினராகும் தன்மையை பெற்றுக் கொள்கின்றனர் (எண். 11 : 29). அதோடு இறைவனது ஆவியை

மக்களுக்கு அருளி இறைவாக்கு உரைக்கும் வல்லமையை அருளுகிறார். இவ்வாறு ஒரே ஆண்டவருடைய தன்மை எல்லைகளைக் கடந்து செயல்படும் வலிமை வாய்ந்தது.

திருப்பாடல்கள் வழியாக ஒரே ஆண்டவரின் ஆயர் பொறுப்பு வெளிப்படுத்தப்படுகிறது. ஆண்டவர் நல்ல ஆயராக அமைதியான நீர்நிலைகளுக்கு அழைத்து செல்கின்றார் (திபா. 23 : 2). இந்த புத்துயிர் தரும் நீதிவழி சாவின் இருளை நீக்கி ஜீவ வழியை அருளும் ஒளி ஆகும். மேலும் வாழ்நாள் எல்லாம் நலமும் பேரன்பும் நிறைந்த வாழ்வாக நெடுநாள் இறைவனின் இல்லத்தில் வாழும் பேற்றினைப் பெறுகிறோம் (திபா. 23 : 6). கொரிந்து திருச்சபைக்கு பவுல் அடிகளார் கிறிஸ்துவே அந்த ஆண்டவர் என தூதுரைக்கிறார். அவராலே எல்லாம் இணைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். நமது ஆன்மிகப் பாறை கிறிஸ்துவே என்று சிலை வழிபாடுகளை அகற்றும்படி கூறுகிறார் (1கொரி. 10 : 4, 7). இந்த மெய்யான கிறிஸ்துவே அந்த ஆண்டவர் என்று மிக தெளிவாக சொல்கிறார். இவ்வாறு கொரிந்து திருச்சபை மக்களை மெய்யான கிறிஸ்துவாகிய இயேசுவே ஆதி முதல் ஒரே கடவுளாக ஆட்சி செய்கிறார் என்கிறார்.

தூய யோவான் நற்செய்தியாளர் உண்மை கடவுளை அறிக்கையிடும் போது இயேசுவே நல்ல ஆயர் என்று சொல்லி அவரால் மட்டுமே இறைமக்கள் விடுதலை அடைவார்கள் என்று விளக்குகிறார். ஏனென்றால் தந்தை அவரை அறிந்திருக்கிறார், அவரும் தந்தையை அறிந்திருக்கிறார் (யோவா. 10 : 14-15). இதனால் நல்ல ஆயர் இறைமக்களின் நிலையையும் அறிந்திருக்கிறார். அவ்வாறே இறைமக்களும் இறைவனின் திட்டத்தை அறிந்திருக்கிறார்கள். தந்தை தனது மைந்தர் வழியாக செயல்படுத்தப்பட்ட மீட்பின் திட்டம் இறை மக்களுக்கு இறைவன் அருளின அருட்கொடை. இந்த அருட்கொடை நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டானது.

பேராயர் அப்பாசாமி அவர்கள் ஒரே ஆண்டவரின் உறவை இந்தியச் சூழலில் தந்தை மைந்தர் என்ற உறவு மிக பொருத்தமானது என்கிறார். தந்தையாகிய கடவுள் மைந்தர் மீது தனது சித்தத்தை வெளிப்படுத்துவதிலும் மைந்தர் தந்தைக்கு கீழ்படிவதிலும் உள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்துகின்றார். நிலவி வரும் மேற்கத்திய சால்சிடோனிய (chalcedonia) "ousia" என்ற ஒருமையை விடவும், தந்தை மைந்தர் என்ற உறவு ஒரே ஆண்டவரின் உயர்ந்த ஒழுக்க நெறியில் நிற்கிறது. இதுவே நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம் என்ற ஒழுக்க நெறியில் விளங்குகிறது (யோவா. 10:30).

## 2. ஒரே திருமுழுக்கு :

திருமுழுக்கு என்றச் சொல்லின் பொருள் கழுவுதல் அல்லது தூய்மைப்படுத்தல் என்பதாகும். திருமறையில் ஆரோனையும் அவர் புதல்வரையும் தண்ணீரால் கழுவும் நிகழ்வை காண்கிறோம் (விபா 40:12- 15). இந்நிகழ்வு குருத்துவ பணியாற்றும் படி ஆரோனை திருநிலைப்படுத்தும் புனித அருட் பொழிவின் பங்காக விளங்குகிறது. மேலும் ஏசாயா இறைவாக்கினர் தனது உரையில் தீச்செயலை இறைமுன்னிருந்து அகற்ற தங்களை கழுவித் தூய்மைப்படுத்தச் சொல்கிறார் (எசா. 1 : 18). இதனால் கழுவுதல் பாவசெயல்களிலிருந்து தூய்மைப்படுத்தும் அல்லது குருத்துவ திருநிலைப்படுத்தும் செயலாகும் (எரே. 4 : 4; எசே. 36 : 25).

இறைவாக்கினர் எசேக்கியேல் தூயநிலையை அடைய தண்ணீர் மக்கள் மீது தெளிக்கப்படுவதாக கூறுகிறார். நான் தூய நீரை உங்கள் மீது தெளிப்பேன், நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்து தூய்மையாவீர்கள் என்ற இந்த சுத்திகரிப்பின் மூலம் சிலைவழிபாட்டு தீட்டையும், கல்லான இதயத்தையும் எடுத்துவிட்டு புதிய இதயத்தையும் புதிய ஆவியையும் புகுத்துவேன் என்று உரைக்கிறார் (எசே. 36: 25-28). புதிய இதயத்தையும் புதிய ஆவியையும் பெற்றுக்கொள்ளும் போது எல்லா தீய அழுக்கிலுமிருந்து தூய்மையடைகிறோம். இவ்வாறு தூய நீரை திருமுழுக்கில் தெளிக்கும் போது தீமைநிறைந்த வாழ்விலிருந்து தூய்மைநிலையை பெற்றுக் கொள்கிறோம்.

முழுக்கு முனிவர் யோவான் மனம் மாறுவதற்காக தண்ணீரால் திருமுழுக்கு கொடுத்தார் (மத். 3 :11, மாற். 1:8). இந்த மனமாற்றம் தீமைச் செய்த மக்களுக்கு யோவான் தந்த அழைப்பு. விண்ணரசு நெருங்கிவிட்டது, மனம் மாறுங்கள் என்று அழைத்து மக்களுக்கு தண்ணீரால் திருமுழுக்கு கொடுத்தார்.

இந்தியாவின் மிக சிறந்த இறையடியாரான சாது சுந்தர் சிங் ஒரே கடவுளை பின்பற்றும் சீக்கிய மத போதனைகளை சேர்ந்தவராக இருந்த போதிலும், ஒரே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்பி அவரை தன் சொந்த மீட்பராக, ஆண்டவராக ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார். அவர் 1905-ம் ஆண்டு தனது 16-வது பிறந்தநாளில் திருமுழுக்கு பெற்றார். இவ்வாறு ஒரே ஆண்டவரை பின்பற்றி ஒரே திருமுழுக்கை பெற்று இந்திய பண்பாட்டில் இறைஉறவை மக்களுக்கு போதித்தார்.

## 3. ஒரே ஆண்டவரும் , ஒரே திருமுழுக்கும் இறைமக்களின் நம்பிக்கை :

கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை ஒரே ஆண்டவரும், ஒரே திருமுழுக்கும் ஆகும். இந்த நம்பிக்கையில் திருச்சபை வளருகிறது.

திருச்சபை மக்கள் இயேசுகிறிஸ்துவே நமது ஆண்டவர் எனவும், மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஒரே திருமுழுக்கை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் நம்ப வேண்டும். இந்த நம்பிக்கையில் வளருகிறபடியால் இயேசு கிறிஸ்துவும் ஆண்டவருமாகிய அவரே தமது தீய செயல்களிலிருந்து நம்மை விடுதலை செய்கிறார். இவரது தூய பலியின் மேன்மையால் சிலுவையின் மீட்பை இவ்வுலக மக்களுக்கு உண்டாக்கினார். எனவே அவரது திருப்பெயரால் திருமுழுக்கு பெறுவது திருச்சபையின் நம்பிக்கை ஆகும்.

அதுபோல விண்ணரசை எதிர் நோக்கி வாழும் நமக்கு மனமாறுதல் மிகவும் முக்கிய செயலாகும் (மத் 3 : 1). மனமாறுதல் விண்ணரசை நிலைநாட்டும் செயலாக ஆற்றல் கொள்கிறது. ஆகவே இயேசுகிறிஸ்துவின் திருமுழுக்கும், முழுக்கு முனிவர் யோவானுடைய மனம் மாறுதலுக்கான தண்ணீரால் கொடுக்கப்படப்பட்ட திருமுழுக்கு விண்ணரசை நிலைநாட்டும் முன்னோடியாக அமைந்தது.

யூத சமய மக்கள் பெரும் குழுவாக வாழ்ந்த வார்சாவ் (Warsaw) என அழைக்கப்படும் கட்டுப்பாட்டு பகுதிக்கு வெளியே 2-ம் உலக போரின் போது ஒரு யூத சிறுமி தப்பி ஓடிவிட்டாள். இந்த சிறுமி தப்பி ஓடிய இடம் ஜெர்மானிய நாசி (nazi) கட்டுப்பாட்டுக்குள்ளாக இருந்ததினால் இந்த சிறுமியை அவர்கள் மறைந்திருந்த ( பாறைகளான) குகையினுள் வைத்து கொன்றனர். அங்கே அந்த பாறைகளில் அவள் எழுதியவை, அவர்களை கவர்ந்தது. அவை

நான் சூரியனை , ஒளிராத சூரியனாக நம்புகிறேன்.

நான் அன்பை உணரமுடியாத நிலையில் நம்புகிறேன்

நான் கடவுளின் அமைதியான நடத்துதலை நம்புகிறேன் என்பதாகும்.

பாறைகளில் எழுதிய வார்த்தைகள் சிறுமியின் வாழ்வில் சூரியனை காணக்கூடாத நிலையில் துன்பங்களையும், அன்பை அனுபவிக்க முடியாத நிலையில் பாடுகளையும் அடைந்த போதிலும் கடவுளின் அமைதியான நடத்துதலை நம்புவதாக எழுதுகிறார்.

இவ்வாறு ஒரே ஆண்டவரை பின்பற்றுகிறவர்கள் தங்கள் துன்பங்களிலும், பாடுகளிலும், இறைநம்பிக்கையில் நிலைத்து நின்று கடவுளின் நடத்துதலை உணர்ந்து கொள்வார்கள். இறுதியாக ஒரே மந்தையாக, ஒரே ஆயரை உணர்ந்து கொள்ளும் விண்ணரசாக அமைகிறது. ஒரே மந்தையும் ஒரே ஆண்டவரும் என்கிற நிலையை உலக மக்கள் உணர்ந்து கொள்வார்கள். இது புதிய இனத்தையும் புதிய ஆவியையும் உடைய மக்கள் வாழும் இடமாக அமையும்.

அருள்திரு. **பெனோ A. ஏனோஸ்**

**25-01-2015**

***திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு***

# நீதி, அமைதிக்கான ஒன்றிப்பு

## UNITY FOR JUSTICE AND PEACE

எசே 37:15-28 | பிலி 4:8-20
திபா 4 | மத் 5:21-26

**"....அவைகள் உன் கையில் ஒன்றாகும்" எசே 37:17**

**இறைவேண்டல் :** ***நீதியையும் அமைதியையும் நிறுவிட எங்களை அழைத்த இறைவா, குடும்பத்திலும், திருச்சபையிலும், சமுதாயத்திலும் உள்ள ஆழமான பிளவுகளையும், உடைவுகளையும் நினைத்து மனம் வருந்துகிறோம். இந்த நிகழ்வுகள் இன்றும் கிறிஸ்துவின் உடல் துண்டிக்கப்பட்டு துடிக்கிறது என்பதை காட்டுகிறது. சுகம் தரும் இறைவா! எங்கள் பிரிவினை என்னும் நோயை குணப்படுத்தி ஐக்கியத்தை தாரும். நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட உடன்பிறப்பு உறவுகளை வலுப்படுத்தி, நற்பண்புகளை உருவாக்கி உமதுப் பெயரை மாட்சிமைப்படுத்திட அருள்தாரும். ஆமென்.***

ஒன்றிப்பு அல்லது ஒன்றுபடுதல் என்பதை இன்று நடைமுறையில் காண்பது அரிது. சமுதாயத்திலும் திருச்சபையின் செயல்பாடுகளிலும் காண்பதும் அரிது. இன்று அநீதிக்காகவும் வேடிக்கைக்காகவும் ஒன்றிணையும் மக்களைத் தான் எல்லா இடங்களிலும் பார்க்க முடிகிறது. இச்சூழலில், நீதிக்காகவும் அமைதிக்காகவும் ஒன்றிணைய இறைவன் நம்மை அழைக்கிறார். இந்த ஒன்றிப்பு ஒரே நாளில் பெற்று விடக்கூடியது அல்ல. இது தொடர்ச்சியாக நடைபெறும் செயல்திட்டம். Unity is not something that is achieved once for all but a living, unfolding process, which is an ongoing reality. unity is experience only in a fully committed fellowship. முழுமையான ஒப்படைப்பின் கூட்டுறவின் வழியாக மட்டுமே ஒன்றிப்பை வாழ்வின் அனுபவமாக்கிக் கொள்ள முடியும்.

மனித முயற்சியினால் உருவாக்கப்படும் எந்த ஒன்றிப்புச் செயல்களும் முழுமை பெறாது. சுய நலத்திற்காகவும், பதவிக்காகவும் மக்களை ஒன்றிணைக்கும் செயல்களால் கலகங்கள் தான் நடைபெறுகிறதே தவிர நீதியும் அமைதியும் ஏற்படாது. நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட இறைவன் மனிதர்களையே பயன்படுத்துகிறார். குறிப்பாக,

தமது அடியவர்களை இந்த பணிக்காக அழைத்து ஆற்றல்படுத்துகிறார். மனித முயற்சியினால் உருவாக்க முடியாத ஒன்றிப்பு கடவுளின் திட்டத்தினால் மட்டுமே நிறைவேறும்.

### *1. ஒன்றிப்பை உருவாக்குபவர்கள் இறைப்பணியாளர்கள்:*

(எசே 37:15-28)

இந்த திருமறைப் பகுதியில் இரண்டு கோல்களை இணைக்கும் இறைவாக்கினரின் உரை, சகோதரர்களை இணைக்கும் செயலை குறிப்பிடுகிறது. அதாவது, பிரிந்து போன 10 கோத்திரங்களும் யூதா கோத்திரத்தோடு இணையும் என்பதை இறைவாக்கினர் கூறுகிறார். "அவைகளை ஒரே கோலாகும்படி ஒன்றோடொன்று இசையச் செய்; அவைகள் உன் கையில் ஒன்றாகும்" (எசே. 37 : 17). பிரிந்து போன மக்களை இணைக்க கடவுள் பயன்படுத்தும் பாத்திரம் இறைப்பணியாளர்கள். கடவுளின் திட்டத்தின்படி ஒன்றிணையும் மக்களின் வாழ்வை குறித்து 21 -வது வசனம் முதல் இறைவாக்கினர் கூறும்போது, "சிதறிப் போனவர்களை அவர்களுடைய சொந்த தேசத்தில் கொண்டு வந்து அவர்கள் ஒரே மக்களாக்கப்படுவார்கள். அவர்கள் இனி இரண்டு நாடுகளாக பிரிந்து போவதில்லை" (வச. 22). தங்களை தீட்டுப்படுத்தி கடவுளுக்கு விரோதமாக செய்த பாவங்களிலிருந்து இறைவன் அவர்களை மீட்டு, தூய்மைப்படுத்தி தன்னுடைய பிள்ளைகளாக்குவார் (வச. 23). கடவுள் தம் மக்களோடு அமைதியின் உடன்படிக்கையை ஏற்படுத்துவார். அது நிலையான உடன்படிக்கையாக இருக்கும் (வச. 26). இறை நீதியை வெளிப்படுத்தும் தூய்மையான வாழ்வு வாழ மக்களை கூட்டி சேர்க்கவும், நிலையான உடன்படிக்கையான அமைதியை மக்கள் பெற்று கடவுளை மாட்சிமைப்படுத்தவும் இறைவன் பயன்படுத்தும் பாத்திரங்களாக செயல்படுவோம்.

### *2. ஒன்றிப்பின் அடித்தளம் சகோதரத்துவம் :* (மத் 5 : 21-26)

உறவுகள் இல்லாவிடில் உலகமே இல்லை. மனுக்குல வாழ்வின் உறவுகளின் அடித்தளம் குடும்பம். குடும்பத்தில் இறைவன் தந்த கணவன், மனைவி, சகோதர சகோதரிகளின் உறவை உதறித் தள்ளுவது இறை விருப்பத்திற்கு எதிரானது. இதனைத்தான் மத். 5 : 21-26 வரையுள்ள பகுதியில் இயேசு கூறுகிறார். உடன்பிறப்புகளை உதறித்தள்ளி விட்டு ஆலயத்தில் காணிக்கை செலுத்தி என்ன பயன்? உடன்பிறப்புக்களை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்வதும் அவர்களை ஞானமற்றவர்கள் என இழிவுபடுத்துவதும் தவறு. இதனால் ஏற்படுவது பிரிவினைகள் தான்.

உடன்பிறப்புக்கள் இணைந்து வாழ்வது எத்தனை அழகானது எனத் திருப்பாடலாசிரியரும் கூறுகிறார் (திபா. 133).

மத். 12 : 26 -ல் இயேசு கிறிஸ்து சொன்ன செய்தி நம்மை சிந்திக்க தூண்டுகிறது. தீய ஆவிகள் தங்களுக்குள்ளே பிரிந்திருக்கவில்லை. துரத்தப்பட்ட தீய ஆவி, தான் குடியிருந்த வீடு வெறுமையாக இருப்பதைக் கண்டு, இன்னும் நான் மட்டும் தான் இருப்பேன் என்று வரவில்லை. அது போய் வேறு ஏழு தீய ஆவிகளை ஒன்று திரட்டி வரும் (மத். 12:43-45). பாருங்கள்! தீய ஆவிகளுக்குள் காணப்படும் ஒற்றுமையை.

எதிராளியிடமும் சமாதானம் செய்து வாழ வேண்டுமென இயேசு கிறிஸ்து கூறுகிறார் (மத். 5 : 25-26). உடன்பிறப்புகளிடம் உறவு, ஐக்கியம் வேண்டாம் என்று சொல்லி வேறு இடங்களுக்கு குடிப்பெயர்ந்து போய் உறவுகளை உருக்குலைத்து விட்டு தனிமையில் வேதனையோடு வாழும் இன்றைய உலகில், எதிராளிகளிடம் சமாதானமாக வாழும் நிலைமையை எப்படி உருவாக்க முடியும்? சுய நலம் அழிய வேண்டும். சகோதரத்துவம் பெருக வேண்டும்.

***ஒன்றிப்பை வலுப்படுத்தும் தகவு - பகிர்தல் :*** (பிலி 4:8-20)

உலக வாழ்வில் சிறப்புடன் வாழ நம்மில் உருவாக வேண்டிய நற்பண்புகளை சிந்தித்துக் கொண்டிருக்க அறிவுரை கூறுகிறார் பவுல். இந்த நற்பண்புகளில் ஒன்று பகிர்தலாகும்.

நீதி நம்முடைய நண்பனாக இருக்கும்போது அமைதியின் ஆண்டவர் நம்மோடிருப்பார். கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்தும் நற்பண்புகள் வளரும் போது இல்லாதவர்களுக்கும் இறைப்பணியாளர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் பண்பு நம்மில் உருவாகும்.

பிலிப்பி பட்டணத்து சபைமக்கள் நல்ல பண்புகளை வளர்த்து கொண்டதால் இறைப்பணி செய்த பவுலுக்கு கொடுத்து உதவி செய்தார்கள் (பிலி. 4:15-16). இதனை 2 கொரி. 8 : 1-5 வரையுள்ள பகுதியில் தெளிவாக காணலாம். ஒன்றிப்பை உருவாக்க நமது செல்வத்தை மட்டுமல்ல, அறிவு, பொறுப்புகள் அனைத்தையும் பகிரும்போது கடவுளின் திருப்பெயர் மாட்சிமையடையும்.

அருள்திரு. **D. ஐசக் சுந்தர்சிங்**

**26-01-2015** குடியரசு நாள்

# பொறுப்புள்ள குடிமக்கள்

## RESPONSIBLE CITIZENSHIP

ஆமோ 5:7-15 உரோ 13:1-10
திபா 146 மத் 5:1-12

**"நிலைநாட்டும் வேட்கைக் கொண்டோர் பேறுபெற்றோர்."** மத். 5:6

**இறைவேண்டல் :** ***அன்பின் இறைவா ! மக்களினங்கள் நல்வாழ்வு வாழ அருள் வழங்குகின்றவரே! நாங்கள் குடியரசு நாளைக் கொண்டாடும் இந்நாளில் நீதி, நேர்மையை நிலைநாட்டவும், அன்பு, சகோதரத்துவம் இவற்றை வெளிப்படுத்தவும், எங்களுக்கு முன் தரப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைகளுக்கு உடன்பட்டு வாழவும் துணை தாரும். நாங்கள் பெற்றிருக்கும் உரிமைகளை பாதுகாத்து உரிமைகளை உண்மையாக பயன்படுத்தி பொறுப்புள்ள நல்ல குடிமக்களாக வாழ உம் அருள்தாரும். இறைமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம் தந்தையே! ஆமென்.***

மக்களால் மக்களைக் கொண்டு மக்களுக்காக செய்யப்படும் ஆட்சி மக்களாட்சி. இங்கு முடிவெடுக்கும் உரிமை மக்களுக்கே உரியது. குடியரசு என்னும் சொல் ஐக்கியத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துகிறது. தனிபட்ட மனிதனால் குடியரசை உருவாக்க முடியாது. மாறாக, பெரும் கூட்டம் இணைந்து குடியரசை உருவாக்க முடியும். இஸ்ரவேல் நாட்டில் முடியாட்சி என்பது குடியாட்சிக்குட்பட்ட ஒன்றாக இருந்தது. அதற்கு அடிப்படை இறையாட்சி. இணைச்சட்ட நூலில் இஸ்ரவேலிலே முடியாட்சி உருவாகுமானால் அது இறையரசுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். எனவே திருச்சட்ட விதிமுறை தொகுப்பினை அந்த அரசர் அடியெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும் (இச. 17:14-20).

இந்திய அரசியல் சாசனத்தின் துவக்க நாள் தான் ஜனவரி 26. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலைப் பெற்ற இந்தியா 1950 ஜனவரி 26 தனக்கென்று ஓர் அரசியல்சாசனத்தை உருவாக்கியது. அதன் அடிப்படையிலேயே இன்றும் ஆட்சி பொறுப்பு

நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதை இறையாட்சியாக மாற்றுவது பொறுப்புள்ள குடிமக்கள் ஆகிய நம் ஒவ்வொருவருடைய கடமை. பொறுப்புள்ள குடிமகன் யார் என்பதை இங்கு சிந்திப்போம்.

### *1. தீமையை வெறுப்போர் பொறுப்புள்ள குடிமக்கள் :*

"தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள்" (ஆமோ 5:15).

இன்று நாம் தீமை நிறைந்த உலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். நன்மையை பெற்றுக்கொண்டு அதற்குப்பதில் தீமைச்செய்யும் மக்கள் கூட்டமே அதிகம். சட்டத்தை மதித்து அதன்படி நடக்காமல் சட்டத்தை மிதித்து நடப்பவர்களே தீமையின் பிறப்பிடம். இவர்களிடம் பொறுப்பு என்பதை பார்ப்பது அரிது, ஆமோஸ் இறைவாக்கினர் காலத்திலும் தீமைச் செய்து வாழும் மக்கள் கூட்டமே அதிகமாயிருந்தது. "நேர்மையாளரை வெள்ளிக்காசுக்கும் வறியவரை இரு காலணிக்கும் விற்கிறார்கள்" (ஆமோ. 2:6) என்னும் வசனம் அக்கால தீமையின் உச்சநிலையை நமக்குச் சொல்கிறது. இன்றும் இந்நிலை நாம் வாழும் சூழலிலும் இருந்துக் கொண்டுதான் இருக்கிறது. இதில் இந்திய குடிமக்களாக வாழும் நாம் அதிலும் இறையரசுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிற நாம் தீமையை வெறுத்து நன்மையை நாடி பொறுப்புள்ள குடிமக்களாய் வாழ அழைக்கப்படுகிறோம்.

### *2. அன்பு செய்வோர் பொறுப்புள்ள குடிமக்கள் :*

"அடுத்திருப்போருக்கு தீங்கிழைக்காது" (உரோ 13:10)

பொறுப்புள்ள குடிமக்கள் பிறரை அன்பு செய்கிறவராக இருப்பார்கள். மனுகுலத்தை மீட்டு இறையரசின் பங்காளிகளாக மாற்றுவதற்கு மனுவுரு எடுத்த இயேசுகிறிஸ்து மனுக்குலத்துக்கு கொடுத்த முக்கியமான கட்டளை ஒன்று "உன்னைப்போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு காட்டு" என்பதாகும். இது அன்பின் கட்டளை. இதை ஏற்றுக்கொள்கிறவர்கள். இயேசு கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்கிறார்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் பொறுப்புள்ள குடிமக்களாய் திகழ்வார்கள். இதை தான் இயேசு கிறிஸ்து லூக். 10:25-37 வரையுள்ள நல்ல சமாரியன் நிகழ்வின் வழி சொல்கிறார். ஆனால், இன்று இயேசு கிறிஸ்துவின் அன்பின் கட்டளையை ஏற்றுக்கொள்ளாத மக்களால் தான் தீவிரவாதம், வன்முறை உலகில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையை மாற்றி இறையரசின் முன்சுவையை இந்த உலகில் அமைக்க அன்பு செய்து பொறுப்புள்ள குடிமக்களாய் வாழ்வோம்.

### *3. நீதியை நிலை நாட்டுவோர் பொறுப்புள்ள குடிமக்கள் :*

"நீதியை நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்" (மத் 5:6)

நீதி ஒரு மனிதர் கடவுளோடு தொடர்பு கொண்டுள்ளாரா ? இல்லையா ? என்பதை வெளிக்காட்டும். கடவுள் நீதிக்கு காரணர், அவர் நீதிபரர், எப்போதும் நீதியாய் நடப்பவர் என்பது இஸ்ரவேலரின் நம்பிக்கை. அவர் மகா நீதி பரர் (யோபு 37:23) நீதியின் மேல் பிரியப்படுபவர் (திபா. 11:7). இவ்வசனங்களை பார்க்கும்போது நீதி என்பது கடவுள் ஒருவருக்கு நீதி செய்யும் போது அவரை அறிகிறார்; அவரை அறிகிறவர் பொறுப்புள்ள குடிமகனாயிருப்பர். நீதியின் மேல் வேட்கை வேண்டுமென்று இயேசுகிறிஸ்து சொல்கிறார். அதாவது பசியிருக்கின்ற ஒருவரால் மட்டுமே உணவு உட்கொள்ள முடியும். உணவு உட்கொள்கிறவரால் மட்டுமே ஆரோக்கியமாக இருக்க முடியும் ஆரோக்கியம் உடையவரால் மட்டுமே தம் கடமைகளை சிறப்பாக செய்யமுடியும். அதே போன்று நீதியின் மேல் வேட்கைக்கொண்டு அதை உட்கொள்கிறவரால் மட்டுமே பொறுப்புள்ள குடிமக்களாய் வாழமுடியும்.

அருள்திரு. S. **ஜேக்கப்ராஜ்**

# தாவீது வளர்ச்சி பெற்றார்

திருமறைப்பாடம் : 2சாமு 5 : 1-10

"**தாவீது தொடர்ந்து வளர்ச்சி பெற்றார். படைகளின் கடவுளாகிய ஆண்டவர் அவரோடு இருந்தார்.**" (2 சாமு 5:10)

திருமறையில் சிறப்பான பக்தர்களில் ஒருவர் தாவீது இவரைப் பற்றி திருமறை தரும் செய்தி, தாவீது நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்றார் என்பதாகும்.

இன்று நம்மில் பலரின் கேள்வி, நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு முன்னேற்றமும் இல்லை என்ன காரணம்? என்பதாகும். என்ன வாழ்க்கை இது? எதற்கெடுத்தாலும் தோல்வி சே!... என்கிற வெறுப்பு. கேரள மாநிலத்தில் ஒரு தாயார் தம் திருமணம் முடிந்து 7-ஆம் வருடத்தில் தம் இரண்டு குழந்தைகளோடு இரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். காரணம், தோல்வி, தோல்வி, தோல்வி. சர் ஐசக் நியூட்டன் விஞ்ஞானத்தில் வெற்றி பெற்றாலும் வாழ்க்கையில் தோற்றவர். தொடர் தோல்விகளை சந்தித்தவர். 3 வயதில் தகப்பனையும், தாயையும் இழந்தார். 10 வயதில் தம்மை அரவணைத்த பாட்டியை இழந்தார். தம் 85 வயது வரையிலும் எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்காமல் வாழ்க்கையை மிக வெறுப்பாகவே அனுபவித்ததாக கூறினார். எல்லாம் இருப்பவர்களே தேய்ந்து போகும் போது ஒன்றும் இல்லாத ஆட்டிடையன் எப்படி ஒவ்வொரு நாளும் வளர்ச்சி பெற்றார். அதை இன்று சிந்தனை செய்வோம்.

## *தாவீது அனுபவித்த வேதனைகள் :*

***1) தந்தையால் மறக்கப்பட்டவர் :*** சாமுவேல் இஸ்ரவேலுக்கு அரசரைத் திருப்பொழிவு செய்ய ஈசாவின் வீட்டிற்கு வந்தார். அங்கு பிள்ளைகளை வரிசையாக விட்ட ஈசா தாவீதை மறந்தார். சாமுவேல் 7 பேரையும் பார்த்துவிட்டு வேறுபிள்ளைகள் உண்டா எனக் கேட்டதும் (1சாமு. 16 : 12) 8-வது பிள்ளையாக தாவீதை அறிமுகம் செய்வார். ஆக தந்தையால் மறக்கப்பட்டவர் தாவீது.

***2) சகோதரர்களால் மறக்கப்பட்டவர் :*** கோலியாத்தைக் கொன்று வெற்றி முழக்கத்துடன் வந்த தாவீதை, சவுல் யார் என்று விசாரிக்கச் சொல்கின்றார். (1 சாமு. 17 : 56) அதே வேளையில் சவுலைச் சந்தித்த தாவீது தன்னை அறிமுகம் செய்கின்றார். (1 சாமு. 17 : 58) ஆனால் தாவீதின் உடன் பிறந்த சகோதரர்கள் ஏழு பேரும் அரசில் வேலை செய்தும் தம் தம்பியாகிய தாவீதைக் குறித்து வாய் திறக்கவில்லை. ஆக, சொந்த சகோதரர்களின் ஆதரவையும் இழந்தவர் தாவீது.

குடும்பத்தினர் அனைவரும் மறந்தாலும் மறக்காத ஆண்டவர் தாவீதை வளர்ச்சியடையச் செய்தார். தாவீதும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தார்.

***3) உலகப் புகழ்ச்சிக்கு அடிமையாகாதவர்:*** **(1 சாமு 17 : 46,47)**

பெலிஸ்தியனாகிய கோலியாத்தைக் கொன்று அவன் தலையோடு தாவீது வந்தபொழுது தாவீதின் வெற்றியைப் பெண்கள் புகழ்ந்து பாடினர். இந்நிலையில் தாவீது தம்மை உயர்த்தாமல் நீ யாருடைய மகன் என்று கேட்ட சவுலுக்கு முன்னதாய் நான் பெத்லகேம் ஊரானாகிய உமது அடியான் ஈசாயின் மகன் என்று தாம் அரசனாகத் திருப்பொழிவு பெற்றிருந்தும் மிக எளிமையாகத் தம்மை அறிமுகம் செய்கிறார். மக்களின் ஆதரவு, சாமுவேலின் ஆதரவு, இறைப்பாதுகாப்பு அனைத்தும் இருந்தும் தாவீது தம்மை உயர்த்தவில்லை. மக்கள் புகழ்ந்த போதும் புகழ்ச்சிக்கு அடிமையாகாத தாவீது, நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்றார். வீண்புகழ்ச்சிக்கு அடிமையாகாதவர்கள் வளர்ந்து வருகிறார்கள்.

வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் போது அடக்கமாக இருப்பது பெரிய காரியமல்ல. மாறாக, புகழப்படும் போது அடக்கமாக இருக்க முடிந்தால் அது பெரிய சாதனையாகும். ‘‘புகழும் சவரக் கத்தியும்’’ ஒரு விதத்திலே ஒன்றே எனலாம். கவனமாக இருந்து விட்டால் பளபளப்பு ஜொலிப்பு தான். ஆனால் அதுவே சிறிது கவனம் பிசகினால் போச்சு, வெட்டு, ரத்தக்காயம் தான் அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிலதிபர்களுள் ஒருவர் ஜான் - டி -ராக்பெல்லர் இவர் பத்துக் கோடி பவுண்டுகளுக்கு மேல் தர்மச் செயல்களுக்கும் செலவிட்ட கொடைவள்ளல். அவர் எவரிடத்திலும் எளிதில் ஏமாறமாட்டார். குறிப்பாக, தம்மை அதிகமாகப் பாராட்டியும் போற்றியும் பேசுபவர்களைச் சிறிதும் நம்பமாட்டார். ஒருமுறை பொருளுதவி பெற வேண்டி அவரிடம் வந்த ஒருவர், தங்களைப் பார்ப்பதற்காக இருபது மைல் நடந்து வந்திருக்கிறேன் என்று கூறினார். அப்படியா என்றார்

வள்ளல். ஆம் வழியில் சந்தித்தவர்களிடம் எல்லாம் தங்களைப் போல் தாராள மனது படைத்தவர்கள் உலகில் வேறு எவருமில்லை என்று கூறி வந்தேன் என்றார். நன்றி மிகுந்த மகிழ்ச்சி நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்வீர்களா? என்று கேட்டார் ராக்பெல்லர். கூறுங்கள் எதைச் சொன்னாலும் செய்யக் காத்திருக்கிறேன் என்றார் வந்தவர். அப்படி ஒன்றும் கடினமான வேலை இல்லை. தாங்கள் திரும்பிச் செல்லும் போது ஏற்கனவே பார்த்துப் பேசியவர்களிடம் நீங்கள் என்னைப் பற்றி புகழ்ந்து கூறியது தவறு என்று கூறினால் போதும் என்றார். ராக்பெல்லரிடம் வந்தவர் வாயடைத்து போனார். பெரும்பாலான மனிதர்களுடைய இரண்டு பெரிய விருப்பங்கள் அவை. பிறரால் நேசிக்கப்படுதல், பிறரால் புகழப்படுதல். காந்தியடிகள் தனக்கு அனுப்பிய கடிதத்தை வினோபாவே படித்து கொண்டு இருந்தார். கடிதத்தில் காந்திஜி என்ன எழுதியிருப்பார் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் சீடர்கள் இருந்தார்கள். கடிதத்தைப் படித்து முடித்ததும் வினோபாவே அதைக் கிழித்துப் போட்டோர். ஏதாவது பிரச்சனையா என்று சீடர்கள் வினவ அது ஒன்றும் இல்லை. காந்திஜி, என்னை மகான் என்று பாராட்டி எழுதியிருக்கிறார். இந்தக் கடிதம் என்னிடத்தில் இருந்தால் எனக்குத் தலைக்கனம் வந்துவிடும். அதனாலேயே அதைக் கிழித்துப் போட்டேன் என்றார். வினோபாவே நம்முடைய செயல்பாடுகளைப் பிறர் புகழும் போது ஒரு மரம் காய்த்து கனிந்து குலுங்கும் தன்மைக்கேற்ப வளைந்து இருப்பதைக் போல் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும். அதே வேளையில் வீண்புகழ்ச்சி நமக்கு ஆபத்தை (நீதி. 29 : 5) வருவிக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். தாவீது வளர்வதற்கு முதல் காரணம் வீண்புகழ்ச்சிக்கு அடிமையாகவில்லை.

## ***4. பகை உணர்வுக்கு இடம் தராதவர் :*** (1 சாமு 24 : 10)

திருப்பொழிவு பெற்ற தாவீது பகைவரை வென்று இஸ்ரவேலரை காத்தார். ஆனால் தனக்கு வந்த புகழை ஏற்று அரியணையைக் கட்டாயமாகப் பெற்று கொள்ளவில்லை. புகழ்ச்சியால் ஏற்பட்ட எதிர்வினையைப் பொறுமையாய் ஏற்றார். சவுலின் துன்புறுத்தல்களைச் சகித்தார். காரணமின்றிப் பகைத்த சவுலைக் கொலை செய்ய வாய்ப்பிருந்தும் ஆண்டவரால் திருப்பொழிவுப் பெற்றவரை தான் கொலை செய்யக்கூடாது என்று தன்னைக் காத்துக்கொண்டார். சவுல் தாவீதைப் பகைத்தார். தாவீது சவுலைப் பகைக்கவில்லை. சவுலின் பகை உணர்வு தாவீதை எப்படியாவது கொலை செய்யத் துடிக்கும் வெறியாக மாறியது. ஆயினும் தாவீதோ சவுலைப் பகைக்கவில்லை. இது தாவீதின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. இயேசுவின் போதனையில் பகைவரையும் அன்புகூருங்கள் என்ற சிறப்பான போதனை இங்கு நினைவுக்கூரப்பட்டது.

லியனார்டோ டாவின்சி (ஓவியர்) இயேசுவின் கடைசி இராஉணவுப் படத்தை வரைந்து கொண்டிருந்த காலம். ஒரு நாள் அவருக்கும் நண்பர் ஒருவருக்கும் வாக்குவாதம் நடந்தது. மிகக் கடுமையாக நண்பரைத் திட்டிவிட்டு வீட்டிற்கு வந்தார். ஓவியர் ஓவியத்தை வரைய அமர்ந்தார். இயேசுவின் முகத்தை வரைய முயன்றார். ஆனால் எவ்வளவு முயன்றும் அதில் ஒரு முழுமையும் நிறைவும் கிடைக்கவில்லை. தன்னுடைய திறமையையெல்லாம் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் முயன்றார். முடியவில்லை. உடனே தான் திட்டிவிட்டு வந்த நண்பரிடம் சென்று மன்னிப்புக் கேட்டார். அவருக்குப் பழங்களும் , இனிப்பும் வாங்கிக் கொடுத்தார். அவர்களுக்குள் இருந்த மனக்கசப்பு மறைந்தது. அமைதி உருவானது. வீட்டிற்கு வந்து ஓவியத்தை வரைந்தார். அதன்பின் அவ் ஓவியம் உலகப் புகழ்பெற்ற உன்னதமான ஓவியமாய் தீட்டப்பட்டது. பகையைப் பாராட்டாமல் அன்பு பாராட்டினால் அது நன்மையில் முடியும். ஏசா யாக்கோபை மன்னித்தபொழுது ஏசாவின் முகத்தில் இறைவனைக் காண்பதாய் யாக்கோபு கூறுவார். பகை மறையும் இடத்தில் இறைவன் இருப்பார். அங்கே வளர்ச்சி இருக்கும் தாவீது வளர்ச்சி பெற்றிட காரணம் பகை உணர்வுக்கு இடம் தரவில்லை.

தாவீது புகழ்ச்சியை விரும்பாதவர், பகை உணர்வுக்கு இடம் கொடாதவர், கடவுள் நம்பிக்கை கொண்டவர். எனவே ஒவ்வொருநாளும் வளர்ச்சி பெற்றார். நமது வாழ்விலும் இந்த அனுபவங்களோடு வாழ்வோம் இம்மாதம் வளர்ச்சியின் மாதமாய் அமையும்.

அருள்திரு. P. **இராஜாஸ்டாலின்**

**01-02-2015**

***உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு***

# திருச்சபை : ஓர் இடையீட்டு மன்றாடும் சமூகம்

## CHURCH : AN INTERCEDING COMMUNITY

தொநூ 18:22-33 | 1பேது 4:7-11
திபா 84 | மத் 5:43-48

**“இறைவனிடம் வேண்டுதல் செய்யுமாறு கட்டுப்பாடோடும், அறிவுத்தெளிவோடும் இருங்கள்.”** 1பேது 4:7

**இறைவேண்டல் :** ***திருச்சபைக்கு தலைவராம் கடவுளே, உம் அடியவர்களின் தியாகத்தால் திருச்சபையைத் தந்து அதில் உறுப்பினர்களாய் இருக்க வாய்ப்பு தந்ததற்காய் உம்மைப் போற்றுகிறோம். நாங்கள் வைக்கப்பட்டிருக்கும் சமுதாயத்தில் உடன் வாழ்கின்ற மக்களுக்காக உம்மிடம் மன்றாட உம் அருள் தாரும். எங்கள் வாழ்வின் இடையீட்டாளராம் இயேசு கிறிஸ்துவின் ஆற்றலோடு வாழ உதவிச் செய்ய உம்மிடம் வேண்டுகிறோம். -ஆமென்.***

ஜோஸ் இக்னேஷியஸ் என்ற அமெரிக்க போதகர் ஒருநாள் மான்களை வேட்டையாடும் கால்கள் ஊனமுற்ற ஒரு வேட்டைக்காரனைப் பார்த்து, “நீ எப்படி வேட்டையாடுகிறாய்?” என்றார். அதற்கு வேட்டைக்காரன், “தினமும் கடவுளை நோக்கி நான் ஜெபம் செய்கிறேன். என் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு புறப்படுகிறேன். என் இரு குழந்தைகளும் என்னைக் காட்டுக்குத் தூக்கிச் செல்லுகிறார்கள். ஓரிடத்தில் காத்திருப்பேன். என் அருகில் மான் வரும்போது நான் சுடுவேன். அதை எடுத்து வந்து விற்றுப் பிழைக்கிறேன்” என்றான். போதகர் அவனைப் பார்த்து, “மிக்கமகிழ்ச்சி, சரி நீ என்னச் சொல்லி கடவுளிடம் மன்றாடுகிறாய்” என்று கேட்டார். வேட்டைக்காரன் அவன் சொல்லும் மன்றாட்டை போதகரிடம் கூறினான். “ஓ இறைவா, என் தந்தையே, எனக்கு நீ இரண்டு குழந்தைகளையும், நடக்க முடியாத இந்தக் கால்களையும் கொடுத்திருக்கிறாய் நான் இந்த இரண்டு குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டும். அப்படி காப்பாற்றவில்லை என்றால் அவர்கள் உன்னை புறக்கணிக்கக் கூடும்; உன்னை மறந்து விடக்கூடும். எனக்குச் செவிசாய்த்திடும் இறைவா, நான் வேட்டையாடச் செல்லும் போது ஒரு சிறிய மானை எனக்கு முன்னால் அனுப்பி வையும். காரணம், அது இன்றி என்னால் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது” என்றார். பாசம் நிறைந்த இம்மன்றாட்டைக் கேட்ட போதகர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

இறை மன்றாட்டுக்கு மேற்குறிப்பிட்ட இறைவேண்டல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திருச்சபை என்பது கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு இறையரசின் வளர்ச்சிக்காய் உழைக்கும் மக்கள் சமூகம் எனலாம். கடவுளின் சரீரமாகிய திருச்சபையின் அங்கமாகிய இறைமக்கள் இறைவனை நோக்கித் திரும்புவதே இறைவேண்டல் எனலாம் (Prayer is Man's turning to God). இக்கருத்தினடிப்படையில் "மன்றாடுதல் என்பது கடவுளுடன் பேசுவதே" என்று அலக்சாந்திரியா தேசத்து கிளமென்று என்னும் திருச்சபைத் தந்தை குறிப்பிடுகின்றார் (Prayer is conversation with God). மன்றாட்டின் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்து கொள்ளும் போது இயேசு கிறிஸ்துவின் கெத்சமனே தோட்டத்து இறைவேண்டலின் பின்னணியத்தில் கடவுளின் சித்தத்தை அறிந்திடும் போராட்டமே சிறந்த மன்றாட்டு எனலாம் (Prayer is Struggle to find Gods will). கிறிஸ்துவின் வாழ்வில் இத்தகைய மன்றாட்டுக்கள் பல நேரங்களில் அமைந்தன. திருச்சபையாகிய இறைமக்கள் சமூகம், ஓர் மன்றாடும் சமூகம் என்ற தலையங்கத்தில் இக்கருத்தினை பின்வருமாறு சிந்திப்போமாக.

### *1. மற்றவர்களுக்காக மன்றாடும் சமூகம்* **(Interceding for others)** *:* (தொநூ 18:22-33)

இவ்விவிலியப்பகுதியில் ஆபிரகாம் சோதோமுக்காக பரிந்து மன்றாடும் மன்றாட்டைக் காண முடிகின்றது. சோதோமையும் கோமோராவையும் அழிக்கப்போகும் இறைத்திட்டம் ஆபிரகாமுக்கு வெளியாக்கப்படுகின்றது. இவ்வாறு இறைத்திட்டம் அறிவிக்கப்பட்டபோது ஆபிரகாமின் உயர்வான சிந்தனைகள் வெளிப்படுகின்றன. உயர்ந்த நோக்குடன் பிறருக்காய் பரிந்து மன்றாடும் ஆபிரகாம் சிறந்த தலைவனாக காட்சியளிக்கின்றார்.

ஆபிரகாமின் பரிந்து மன்றாடுதலின் மையம் லோத்து அல்ல. மாறாக சோதோமை அழித்தல் இறைவனின் நீதிக்கு ஏற்றதாகுமா என்பதே அம்மன்றாட்டின் மையம். எனவே தான் 50 நீதிமான்களிலிருந்தால் அழிப்பீரோ எனத் தொடங்கி பரிந்துரைக்கின்றார். இம்மன்றாட்டின் சிறப்பாக அன்னியன் போன்ற சோதோம் நாட்டினரின் மீதான ஆபிரகாமின் கரிசனையினை காண்கிறோம். இறைவனிடம் கொள்ளும் பற்றுறுதி பிறரிடம் காட்டும் இரக்கமாக செயலாற்றுகின்றது. அதோடு ஆபிரகாமின் விடாமுயற்சியான பரிந்து பேசுதல் இறைவன் நீதியுள்ள தீர்ப்பு அளிப்பாரென்ற உறுதியான நன்னம்பிக்கையின் வெளிப்பாடாகும். மேலும்

இறைவனுக்கு அஞ்சி வாழும் சிலரால் சமூகத்தின் பல தீமைகள் தவிர்க்கப்படும் என்ற உண்மையும் நிலை நிறுவப்படுகின்றது.

தூய பவுலடியார் குறிப்பிடும் போது ‘‘நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மன நிலையே உங்களிலும் இருக்கட்டும்’’ என்கிறார் (பிலி. 2:4,5). இவ்வசனங்களின் அடிப்படையில் பிறருக்கான மன்றாட்டு இயேசு கிறிஸ்துவின் விருப்பம் எனக்காணலாம். ‘‘நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்’’ (மத் 5: 44) என்ற இயேசு கிறிஸ்துவின் எண்ணங்கள் பிறருக்காக எழுப்பப்பட்ட மன்றாட்டு எண்ணங்களாகும். திருச்சபையின் இறைமக்கள் தங்களுக்காக மட்டும் மன்றாடும் மனநிலையைத் தவிர்த்து பிறருக்கான மன்றாட்டில் வளர்ந்து பரந்த மனித உறவுகளை கட்டியெழுப்பவேண்டும். ஏனெனில் திருச்சபை என்பது மற்றவர்களுக்கான ஒரு சமுதாய (Church is a community for others) என்பதனை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

## *2. அமைதிக்காக மன்றாடும் சமூகம்* (Interceding for Peace): (மத் 5:43-48)

வாழ்வில் பல சவால்களையும், பிரச்சனைகளையும் சந்திக்கும் மக்கள் சமூகமே திருச்சபை. திருமறையின் கூற்றின்படி மனித வாழ்வு பாரம் சுமக்கும் வாழ்வு. ‘‘ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்’’ (கலா. 6:2). என்று மனித வாழ்வின் பாரம் சுமத்தலைக் குறித்து பவுலடியார் தெளிவுபடுத்துகின்றார். நம் வாழ்வு ஓட்டப்பந்தயத்திற்கு இணையாக குறிப்பிடப்பட்டுள்ளது (எபி 12 : 1). இப்படி ஓட்டப்பந்தயத்திற்கு இணையாக ஓடும் நம் உலக வாழ்வில் பாடுகள், துன்பங்கள் தவிர்க்க முடியாதது. ‘‘கடவுளின் மகிமையென்பது மனிதன் முழுமையாக நிலைத்து வாழவேண்டும்’’ (The glory of God is man fully alive) என்று ஐரேனியஸ் என்ற திருச்சபைத்தந்தை குறிப்பிடுகின்றார். இத்தகைய வாழ்வினை மனிதன் தொடரும் போது போராட்டங்கள், துன்பப்புயல்கள், மேடுபள்ளங்கள் வாழ்வில் தவிர்க்க முடியாதவைகளே. இயேசு கிறிஸ்து

பயணம் செய்த படகிலும் புயல் வீசியது எனத் திருமறையில் காண்கிறோம். இத்தகைய வாழ்க்கைச்சூழலில் திருச்சபையின் மன்றாட்டு அமைதிக்கான மன்றாட்டே எனலாம். மன்றாட்டைக் குறித்த இயேசு கிறிஸ்துவின் ஆலோசனையான "உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத் 5:44b) என்பது அமைதி மற்றும் ஒப்புரவாகுதலுக்கான திருச்சபையின் அழைப்பு எனலாம். "உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (லேவி 19.18) என்ற பகுதியின் அடிப்படையில் யூத ரபிமார்கள் அயலான் (அடுத்திருப்பவர்) என்பது ஏனைய இஸ்ரவேலரை மட்டும் குறிக்கும் என பொருள் விளக்கம் தந்தனர். ஆனால் இயேசு மலைப் பொழிவினில் ரபிமார்களின் இந்த விளக்கத்தைச் சாராமல் அன்னியனுக்கு நீ "தொல்லை கொடுக்காதே அவனைக் கொடுமைப் படுத்தாதே ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராயிருந்தீர்கள்" (விப 22:21) போன்ற பகுதிகளைச் சார்ந்து விளக்கம் தருகிறார். எனவே இயேசு கிறிஸ்துவின் கருத்துப்படி, யூதரல்லாத வேற்று இனத்தவர்கள் பகைக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்களும் அன்பு, நீதிக்குட்பட்டவர்கள் என்கிறார். அதாவது, கொடுங்கோலாட்சி செய்து வந்த ரோமரும் பகைக்குரியவர்கள் அல்ல. அவர்களுக்காக இறைவனை நோக்கி மன்றாடுதல் வேண்டும் என்பதே அவரது போதனையின் நேரிடைச் செய்தி. இக்கருத்தின் செயல்வடிவமாக இன்றைய திருச்சபை அனைவரையும் உள்ளடக்கும் சமூகமாக, அமைதியின் முயற்சிகளில் ஈடுபட்டு மன்றாட வேண்டும். காணிக்கை படைக்கும் முன் சகோதர உறவில் அமைதி தேவை என இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்ததை இவ்விடம் உணர்தல் நன்று (மத் 5: 23. 24).

John Millard என்பவர் குறிப்பிடும் போது "ஒருவர் அன்பின் மொழியை பயன்படுத்தும் போது அவரது மன்றாட்டுக்கள் ஏழ்மையான மன்றாட்டுக்கள் என ஒருவரும் கூறமுடியாது" (No one can say prayers are poor prayers when one is using the language of love) என்கிறார். அதாவது நம் மன்றாட்டுக்கள் அமைதியை உருவாக்கும் அன்பின் மொழியாக அமைய வேண்டும். அசிசி நாட்டைச் சார்ந்த தூய பிரான்சிஸ் என்பவரின் பின்வரும் மன்றாட்டு அமைதியை நிலைநிறுத்தும் மன்றாட்டிற்கு சிறந்த எடுத்துக்காட்டு:

"ஆண்டவரே, என்னை உமது சமாதானத்தின் கருவியாக
உருவாக்கும்.
எங்கு வெறுப்பு காணப்படுகின்றதோ அங்கு நான் அமைதியைக் காட்டவும்,
புண்பட்டோருக்கு தயை காட்டவும்,
ஐயம் உள்ள இடத்தில் நம்பிக்கையையும்,
திகைப்பான இடத்தில் நம்பிக்கையையும்,
இருள் உள்ள இடத்தில் ஒளியையும்.
உண்டாக்க அருள் தாரும்.
நான் எனக்கு ஆறுதல் தேடுவதை விட
மற்றவருக்கு ஆறுதல் அளிக்கவும்,
என்னை மற்றவர்கள் புரிந்து கொள்வதை விட
நான் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும்,
நான் அன்பு கூரப்படுவதைவிட மற்றவர்களிடம்
அன்பு காட்டவும் எனக்கு அருள்தாரும்".

மன்றாடும் சமூகமாகிய திருச்சபையை நேசிக்கும் நாம் இயேசு கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் பிறருக்காகவும், அன்பின் உறவிற்காகவும் மன்றாடி இறையரசினை கட்டும் இறைமக்களாக வாழவும், பணிச் செய்யவும் இறைமகன் இயேசு கிறிஸ்து ஆற்றல் வழங்குவாராக.

அருள்திரு. W. **ஸ்டான்லி ஜோண்ஸ்**

**01-02-2015** ***உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு***

# படைப்பின் நன்மை

## THE GOODNESS OF CREATION

தொநூ 1:24-31 எபே 1:3-14
திபா 104:1-13 மத் 6:9-13

**"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன."** தொநூ 1:31

**இறைவேண்டல் :** *படைப்பாளராம் கடவுளே, பல்வேறுபட்ட படைப்புகளின் அழகிற்காய் அகமகிழ்ந்து நன்றி படைக்கிறோம். உலகின் அனைத்து படைப்புகளும் உமது ஆற்றலால் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. உம் அறிவாற்றலையும், அன்பையும் நாங்கள் எண்ணிப்பார்த்து படைப்புகளுடன் இணைந்து உம்மை புகழ கிருபைதாரும். நாங்கள் படைப்புகளின் சார்புத்தன்மையையும், இசைவையும், அழகையும் உணர்ந்து பொறுப்பாண்மையுடன் செயல்பட துணை செய்ய இயேசு கிறிஸ்து வழி வேண்டுகிறோம். -ஆமென்.*

நாம் வாழும் உலகு, அதனை சூழ்ந்து நாம் காண்கிற அனைத்தும் நம் ஆண்டவரது இறை ஆற்றலை இப்புவியின் பொன், பொருள் போன்ற விலையேறப்பெற்ற பொருட்கள் மற்றும் மனுக்குலம், அத்துடன் உயிரினங்கள் அனைத்தும் உயிர்வாழ, தாகம் தீர்க்கப்பட இப்புவியின் ஆழ்ப்பகுதியினின்று ஊற்றாய்ச் சுரக்கும் இனிய தண்ணீர் காரணியன்றோ. ஏனெனில் நீரின்றி அமையாது இவ்வுலகு. மனித உடற்கூறுகளை சோதித்தறிகிற விஞ்ஞானிகள் கூறுவது நம் உடலின் 80 விழுக்காடும் நீரினால் ஆனவையே என்று. ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம் போதனையில் இவ்வுலகு மக்களிடம் நாளைய தினத்திற்காக கவலைப் படுகிறவர்களே, காட்டு மலர்ச் செடிகளை கவனித்துப் பாருங்கள் என்கிறார். விண்ணிலும் கூட சூரிய சந்திர நட்சத்திரங்கள் அதனதன் இருப்பிடங்களிலேயே தவறாது நின்று இறைவனது புகழை அவரது மாட்சிமையை பிரதிபலித்துக் கொண்ட இருக்கிறது. இவைகளின் மறை கருத்துக்களை சற்று ஆழமாய் ஆய்வு செய்வோமா?

### *1. ஆண்டவர் தம் ஆற்றலால் மண்ணுலகைப் படைத்தார்:*
**(தொநூ 1:24; எரே 51:15 அ)**

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் நம் ஆண்டவரது ஆற்றலின் வெளிப்பாடு (திபா. 24:1அ) என்று இறைமைந்தரின் பிறப்புக்கு

முன்னே மன்னன் தாவீது எடுத்தியம்புகிறார். எரே. 51:15-ல் கூறப்பட்டிருப்பவை யாவும், தொநூ. 1:1-ல் நிகழ்ந்தவையே. ஆனால் இந்நிகழ்வுகளைச் சற்றும் ஒத்துக் கொள்ளாத நாத்திக ஆசிரியர் ஒருவர் ‘‘உலகம் தானாகவே உருவானது’’ என்று கூறி தன் வகுப்பு மாணவர்களை திசை திருப்ப முயன்றார். இதை ஒத்துக் கொள்ள மனமற்ற மாணவன் ஒருவன் வகுப்பறையில் யாரும் இல்லாத நேரம் பார்த்து எனது ஆசிரியர் ஒரு முட்டாள் என்று கரும்பலகையில் எழுதிவைத்தான். அதே வகுப்பாசிரியர் வகுப்பறையில் நுழைந்தார். எழுதப்பட்டிருந்த வாசகத்தைப் பார்த்து அதிர்ந்து போனார். ‘‘யார் இதை எழுதியது’’ என்று ஆவேசத்தோடு கேட்டார். ‘‘யாரும் எழுதவில்லை’’ என்றனர் மாணவர்கள். ‘‘இந்த கரும்பலகையிலே இப்படி ஒரு வாசகம் வரவேண்டுமானால் அதை எழுத ஒருவர் கண்டிப்பாக இருந்தாக வேண்டும்’’ என்றார் ஆசிரியர். அப்பொழுதுதான் அந்த குறிப்பிட்ட மாணவர் எழுந்து நின்று ‘‘இந்த ஒரு வாசகம் இந்த கரும்பலகையில்’’ வருவதற்கு கட்டாயம் ஒருவர் இருந்தாக வேண்டுமெனில் இத்தகையப் பெரிய இவ்வுலகைப் படைக்கவும் ஒருவர் கட்டாயம் இருந்திருக்கிறார். அவர்தான் ஆண்டவர்’’ என்று கூறினான். ஆசிரியர் சிந்தித்தார். மாணவனைப் பாராட்டினார், இறை வாசகத்தை நம்பினார், ஆண்டவர் தம் ஆற்றலால் மண்ணுலகைப் படைத்தார் என்பதை பறைசாற்ற துவங்கினார்.

## *2. ஆண்டவர் தம் ஞானத்தால் பூவுலகை நிலைநாட்டினார்:*

**(எரே 51:15ஆ; தொநூ 1:29)**

ஆண்டவருக்கு பயப்படுதலே ஞானத்தின் தொடக்கம் (நீமொ. 9:10). ஆண்டவர் தம் ஞானத்தால் படைத்த இப்பூவுலகின் மேன்மையான ‘‘காட்டு மலர்ச் செடிகளை கவனித்துப்பாருங்கள்’’ எனும் இயேசுவின் கூற்று சுட்டிக்காட்டுவது என்னவெனில் இவ்வுலகை தம் ஆற்றலால் படைத்த ஆண்டவர், இதே உலகில் தம் ஞானத்தால் ஓர் பூவுலகை நிலை நாட்டினார் என்பது தான். அதாவது மரம், செடி, கொடிகளை படைத்து மண்ணுலகை பூவுலகாக்கினார். பூக்களின் நிறம், மணம், மரங்களின் கனி யாவும் இறைவனின் ஞானத்தை சான்றாய் அறிவிக்கின்றன. படைப்பின் மகுடமாம் மனிதர்கள் நாமும் ஆண்டவரது படைப்பின் மேன்மையை நம் நடை, உடை, சொல், செயல்களால் இப்பூவுலகில் பறைசாற்ற கடமைப் பட்டுள்ளோம்.

## 3. ஆண்டவர் தம் கூர்மதியால் விண்ணுலகை விரித்தார் : (தொநூ 1:8, எரே 5:15)

இறைப்பற்றுறுதியின் தந்தையாம் ஆபிரகாம் தன் முதிர்வயதில் தனக்கு பிள்ளையில்லாதிருந்த சூழலில் “வானத்து விண் மீன்களை எண்ண உன்னால் கூடுமோ?” என்று வினா எழுப்பிய ஆண்டவர், “உன் வழி மரபும் இப்படி எண்ணிலடங்காத அளவுக்கு பெருகியிருக்கும்” என்று அன்றே ஆசியும் வழங்குகிறார். விண்ணுலகில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்வேறு கிரகங்கள், அதனதன் இடங்களில் அதனதன் வேலைகளில் மிளிர்ந்து தம் பங்குகளை மிதமாய், வெப்பமாய், சுடராய், ஒளியாய் நிறைவேற்றுவது ஆச்சரியம் தானே. இவையாவும் நம் ஆண்டவர் தம் கூர்மதியால் விண்ணுலகை விரித்ததன் மேன்மையாய் மட்டுமே நிறைவேறுகின்றன. இந்த விண்ணுலகு நம்மில் துவக்கமாகிட நம் உடல், பொருள், ஆவி அனைத்தும் விண்ணுலகை தம் கூர்மதியால் விரித்த இறைவனின் திருப்பாதம் ஒப்படைப்போம். இறைவனின் சான்றாளர்களாய் செயல்படுவோம். இறைவன் நம்மில் மலரட்டும், ஒளியாய் ஒளிரட்டும்!

அருள்திரு. S. **காட்பிரே சாமுவேல்**

**08-02-2015**

***உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு***

# படைப்பின் விழ்ச்சி நிலை

## THE FALLEN-NESS OF CREATION

தொநூ 3:1-10 உரோ 3:21-26
திபா 53 மத் 18:23-35

**"…. கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்" உரோ 3:23**

***இறைவேண்டல் : படைப்புகள் அனைத்தையும் நேர்த்தியாய் படைத்து, பக்குவப்படுத்திய எங்கள் அன்பின் கடவுளே! நாங்கள் படைப்பின் வீழ்ச்சி நிலையை உணரவும், உமது திரு பிரசன்னம் முன் எங்களை தாழ்த்தவும், அருள் செய்யும். ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். - ஆமென்.***

கடவுளின் படைப்புகள் என்பது இவ்வுலகில் நாம் கண் கூடாக பார்க்கின்ற அனைத்தும் அடங்கும். கடவுள் தாம் படைத்த அனைத்து படைப்புகளையும் நல்லதெனக் கண்டார். இத்தொடர் 6-முறை வருகிறது (தொநூ. 1:3, 10, 12, 18, 21, 25). ஆகவே படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் (யாவே) மேன்மையை உணரவேண்டும். கடவுள் அருளால் நாம் பெற்றுக்கொண்ட மண்ணுலகமும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் கடவுளுக்கே சொந்தம் (திபா. 24:1).

திருமறை காட்டும் படைப்பாளராம் கடவுள் படைப்பனைத்தோடும், பொருள் பொதிந்த தொடர் உறவில் நிலைத்து நிற்பவர். சிறுபிள்ளைகள் களிமண்ணில், பொம்மைகள் செய்து விளையாடிவிட்டு, அதை உடைத்து அழகு பார்ப்பார்கள். அதுபோல உடைத்து அழகு பார்ப்பவர் அல்ல. பண்படவும், பாதுகாக்கப்படவும் வேண்டும் என்று விரும்புகிறார்.

### *1. படைப்பின் மாட்சி :*

கடவுளுக்கும், படைப்புக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. படைப்பின் உச்ச கட்ட மேன்மை என்பது மகுடமாகப் படைக்கப்பட்ட மனுக்குலம் (Crown of Creation).

"கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும், பெண்ணுமாகப் படைத்தார்" (தொநூ. 1:27).

ஆகவே தான் மனுக்குலம் தம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டனர். உச்சகட்ட நெஞ்சழுத்தமும் தன்னகத்தே ஊடுருவியது.

படைப்பின் மேன்மையான மனுக்குலம் தன்னிலை இழந்து, கடவுளை மறந்து, ஏமாற்றத்தை எதிர்கொள்கின்றது. நீங்கள் சாகவே சாவதில்லை. நடுமரத்தின் கனியை சாப்பிட்டால் கண்கள் திறக்கும் என்பதை நம்பினர். ஆகவே நன்மை தீமை அறியத்தக்க கண்கள் திறந்தது (தொநூ. 3:4,5). மாட்சியால் விளங்க வேண்டிய மனுக்குலமோ அழிவை எதிர்கொண்டது.

## *2. படைப்பின் வீழ்ச்சி :*

படைப்பின் மகுடமாம் மானிடம் தங்கள் மேன்மையை நிலை நாட்ட விரும்பி சுயம் சார்ந்து கடவுளை மறந்தனர். வீழ்ச்சிக்கு மூன்று படிநிலைகளை தொநூ. 3:6-ல் பார்க்கலாம்.

### a) உண்பதற்கு சுவை

சாப்பிடக்கூடாது என்று விலக்கிய கனியை சாப்பிட்ட தன்மை வீழ்ச்சிக்கு வித்திடுகிறது. உண்பதற்கு சுவை பல நேரங்களில் வேதனையை உருவாக்கும்.

“குடிகாரரும், பெருந்தீனியரும் முடிவில் ஏழைகளாவர்; உண்டு குடித்த மயக்கம் கந்தையை உடுத்தும்” (நீமொ. 23:21).

### b) கண்களுக்கு களிப்பு

கண்களால் பார்ப்பது தவறு அல்ல. பார்ப்பதையெல்லாம் விரும்புவது தவறு. கண்களுக்கு கவர்ச்சியாய் தெரியும் அரளிபூ, நல்ல மணமும் இருக்கும். ஆனால் மனிதரை கொல்லும் விஷத்தன்மை அதற்கு உண்டு.

“ஒவ்வொருவரும் தம் சொந்தத் தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர். அது அவர்களை கவர்ந்து மயக்கித் தன்வயப்படுத்துகிறது” (யாக். 1:14).

### c) அறிவை பெருக்க விருப்பம்

அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாக இருந்ததைக் கண்டு தன்னிலை மறந்து, பழத்தை பறித்து சாப்பிட்ட மனுக்குலம் ஆடையின்றி இருப்பதையும், கடவுளின் சத்தத்துக்கு மறுமொழி கொடுக்க தயங்கியதையும் அறிய முடியும். “கடவுள் இல்லை” என அறிவிலிகள் தன் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றனர். அவர்களில் சிலர் கெட்டு அருவருப்பான செயல்களில் ஈடுபடுகின்றனர் (திபா. 5:1). தற்போதய அறிவுப் பெருக்கம் கடவுளை மறக்க செய்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

### *3. படைப்பின் எழுச்சி :*

கடவுளின் சத்தம் கேட்டு மறைந்து கொண்ட மனுக்குலம் செய்வது அறியாமல் நடுங்கியது. தஞ்சம் புகுவதற்கு வழி தெரியாமல் தத்தளித்தது. வீட்சி அடைந்த மனுக்குலம் கிறிஸ்துவால் எழுச்சி அடைந்தது.

இயேசு கிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கை எழுச்சியைக் கொண்டு வரும். பாவத்தால் கெட்டுப்போன மனுக்குலம் கடவுளால் பெற்றுக் கொண்ட மேன்மையை இழந்து போனபோது, இயேசு கிறிஸ்து தம் இரத்தம் சிந்தி பாவத்துக்கு கழுவாயானார். கல்வாரி சிலுவையின் இரத்தம் இழந்து போன இறை சாயலை மீண்டும் பெற்றுக் கொள்ள காரணமாயிற்று என தூய பவுல் உரோமைத் திருச்சபைக்கு எழுதுகிறார் (உரோ. 3:21-26).

“சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலை நாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும், அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும், கடவுள் திருவுளம் கொண்டார்” (கொலோ. 1:20).

இழந்து போன இறைசாயலை மீண்டும் பெற்றுக்கொள்ள கடவுள் திருவுளம் கொண்டார். வீழ்ச்சி அல்ல எழுச்சியே என்ற புதுப் பார்வையோடு முன்னேறுவோம்.

அருள்திரு. R. **ஸ்டான்லி நேசராஜ்**

**08-02-2015** ***குணமாக்கும் திருப்பணி ஞாயிறு***

# நலமடைதலும் முழுமையும்

## HEALING AND WHOLENESS

யோபு 42:1-12 2கொரி 12 : 1-10
திபா 6 யோவா 5:1-9

**"...ஆண்டவரே, என்னை குணமாக்கியருளும்..." திபா. 6:2**

***இறைவேண்டல் : என்றும் வாழும் கடவுளே, உமது திருமைந்தர் இயேசு கிறிஸ்து நோயுற்றோரை குணமாக்கி வாழ்வில் முழுமைக்கு நடத்தினார். தூய கடவுளே, உலக மக்களின் உடல், உள நோவுகளை கரிசனையுடன் கண்ணோக்கி, உமது விடுவிக்கும் அருளாலும், ஆற்றலாலும், நிரப்புவீராக. நாங்களும் உமது விடுதலையின் வெளிச்சம் பெற்று பிறரை வாழ்வின் முழுமைக்கு நடத்தும் கருவிகளாக அருள்செய்ய வேண்டுமென்று விடுதலையாளராம் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டி நிற்கிறோம். -ஆமென்.***

உலக சுகாதார நிறுவனம் Health என்பதை (சுகத்தை) இவ்வாறு விளக்குகிறது : Health is a State of complete physical, mental and social well being and not mercy an absence of disease (or) infirmity. Now they added Spiritual health also. Health (சுகம்) என்பது நோயற்ற உடற்குறைபாடற்ற நிலை மட்டுமல்ல. மாறாக, உடல்நலம், மனநலம், சமூகநலம், ஆன்மிகநலம் இவற்றை உள்ளடக்கிய முழுமையான நலமே.

லூக்கா 2:52 -இல் "இயேசு ஞானத்திலும் (மனநலம்) உடல் வளர்ச்சியிலும் (உடல்நலம்) மிகுந்து கடவுளுக்கும் (ஆன்மிகம்) மனிதருக்கும் (சமூகநலம்) உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" என்று கூறப்படுகிறது. அவரது திருப்பணியும் அப்படியே இருந்தது. யோவான் 10 : 10-இல் "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்றார். அவர் உடல்நலமற்றோரை குணமாக்கினார், பிசாசுகளைத் துரத்தினார், கவலையுற்றோரின் கண்ணீரைத் துடைத்தார், தூய்மையாய் வாழ வழிகாட்டினார், ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கினார். நம்மிடம் வந்த அருட்பணியாளர்களும் ஆலயங்களை எழுப்பினார்கள், மருத்துவமனைகளை உருவாக்கினார்கள், கல்விச்சாலைகள் உருவாக்கினார்கள், சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். நமது அருட்ணியாளர்களும் மலைகளில் அதையே

செய்கிறார்கள். இந்தப்பணி மருத்துவ பணியாளர்களின் பணி மட்டுமல்ல. இதில் அனைவருக்கும் பங்கு உண்டு. அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஒட்டன் சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையின் நிறுவனரும், முன்னாள் இந்திய கிறிஸ்தவ மருத்துவ ஐக்கியத்தின் (CMAI) தலைவருமான மருத்துவர், தரியன் முழுநலத்தை ஒரு எடுத்துக்காட்டு வழி விளக்குகிறார். ஒருமுறை அவரிடம் கைவிரல்களில், பெருவிரலில் காயப்பட்ட ஒரு மனிதன் வந்திருந்தார். அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பாக அந்த மனிதனிடம் சில நிமிடம் பேசினார். ‘‘இவ்வாறு உன்னை காயப்படுத்தின மனிதனை என்ன செய்யப்போகிறாய்?’’ என்று கேட்டார். ‘‘நான் சுகம் பெற்றபின் அவனுடைய கையை வெட்டுவேன்’’ என்றான். ‘‘அவன் பழிவாங்க உன் முழுகையையும் வெட்டினால் என்ன செய்வாய்?’’ என்று கேட்டார். ‘‘அவனது கையையும், காலையும் வெட்டுவேன்’’ என்றான். அவர் கேட்டார், ‘‘இந்த பழிவாங்குதலுக்கு முடிவு என்ன? நீ சொல்வதின் பொருள் என்ன? நீ கத்தி பிடித்து பழிவாங்க நான் உன் விரல்களை சரிபண்ண வேண்டுமென்று விரும்புகிறாய். உன் பழிவாங்குதலுக்கு நானும் உடந்தையாயிருக்க வருத்தப்படுகிறேன்’’ என்றார். நில நிமிடம் மவுனமாக சிந்தித்தான். அறுவை சிகிட்சைக்கு முன் மருத்துவரின் கரத்தைப் பிடித்து, ‘‘நான் எனது கரங்களை சண்டையிட பயன்படுத்தமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்’’ என்றான். சில மாதங்கள் கழித்து மருத்துவர் அவனை சந்தித்தார். ‘‘உன்னை காயப்படுத்தின மனிதனுக்கு என்ன நேர்ந்தது’’ என்று கேட்டார். ‘‘அவன் எனக்கு பயந்து ஒளித்துக்கொண்டான். நான் அவனை மன்னித்து விட்டேன் என்று சொல்லி அனுப்பினேன். அவன் திரும்பி வந்து என் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். நாங்கள் இப்பொழுது சிறந்த நண்பர்களாகி விட்டோம்’’ என்று கூறினான். இதுதான் முழுமையான நலம் முழுமையான நலத்தில் சில கூறுகளைச் சிந்திக்கலாம்.

### *1. உடல் நலம் :*

இயேசு நோயாளிகளை கண்டபொழுது பரிவு கொண்டார். சிலரை வார்த்தையினால், சிலரைத் தொட்டு குணப்படுத்தினார். ஒருவரைத் தரையில் உமிழ்ந்து சேறுண்டாக்கி அதனால் கண்களைத் திறந்தார். பாவத்தினால், சாபத்தினால், பிசாசினால், நோய் கிருமிகளினால், பிறப்பால் வந்த நோய்களை குணமாக்கினார். கடவுளின் திருப்பெயர் மாட்சிமைப்பட பார்வையற்றவர்களை குணப்படுத்தினார். மருத்துவர்கள் மேல், மருந்துகள் மேல் செயல்படுபவர் , செயல்படுத்துகிறவர் நமது கடவுள்,

விடுதலைப்பயணம் 15:26-ல் ''நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர்'' என்றார். நம் நற்செய்தியில் பகுதியாகிய யோவான் 5ம் அதிகாரத்தில் 38 வருடமாய் வியாதியோடிருந்த மனிதரை வார்த்தையினால் இயேசு குணமாக்கினார். 38 வருடமாய் என்னைக் குளத்தில் இறக்கி விட ஆள் இல்லை என்று வருத்தப்பட்ட மனிதனுக்கு உடல்நலம் மட்டுமல்ல, ''இனி பாவம் செய்யாதே'' என்று மனநலமும், ஆன்மிகநலமும் அளித்தார். ஆளில்லை என்ற ஏக்கத்தின் குரல் இந்தியா எங்கும், ஏன் நமது திருச்சபைகளிலும், வீட்டினருகிலும் உடல்நலமின்றி, மனநலமின்றி தனக்கு விடுதலை தர ஒருவர் உண்டு என்ற ஆன்மிக உணர்வின்றி இருக்கும் எண்ணற்ற மக்களிடமிருந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நம் பதில் என்ன?

### *2. மனநலம் :*

''பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று இயேசு கிறிஸ்து கூறினார் (மத்.11.28). தலைவலி, நெஞ்சுவலி, படபடப்பு, கவலைகள், பிரச்சனைகளை அடக்கித் தாங்கி, வைப்பதால் பல உடல் வியாதிகள், மனநலம் குன்றிய நிலைகள், தற்கொலைகள், சமூக விரோத செயல்கள் எனப் பல உள்ளம் சார்ந்த நோய்களை நாம் காணமுடியும். மன அழுத்தம் அநேக நோய்களை உருவாக்கும், அநேக நோய்களை அதிகரிக்கச் செய்யும். பெரிய நோய்கள் உருவாவதை சாதரணமாக எடுக்கும் பொழுது நோய் குணமாகிறது. சாதாரண நோய்களை பெரிதுபடுத்தும்பொழுது நோய் அதிகமாகிறது. மன அழுத்தம் அநேக குடும்பப் பிரச்சனைக்கு காரணமாகிறது. கொடிய இழப்பையும் பயங்கரமான நோயையும் அதன் விளைவாக குடும்பத்தில், சமுதாயத்தில் ஏற்பட்ட பாதிப்பையும், யோபுவின் வாழ்வில் பார்க்கிறோம். அந்த கொடிய சூழ்நிலையை எந்த மனநிலையில் சந்தித்தார் என்பதையும் அறியமுடிகிறது. கடவுளுக்கு விரோதமாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. கடவுள் மீது அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கையோடு இருந்தால் அந்த பயங்கரமான சூழ்நிலையை வெற்றிகரமாக கடந்து சென்று நலம் பெற்று பல மடங்கு அதிக நன்மைகளை பெற்றுக் கொண்டார் (யோபு 42:1-12). இளைப்பாறுதல் தருபவர் இயேசு கிறிஸ்து. இன்றைய திருமுகப் பகுதியிலும் தூய பவுல் எப்படி தனக்குக் கொடுக்கப்பட்ட உடல் நோயை ''என் அருள் உனக்குப் போதும்'' என்ற வாக்கை ஒப்புக்கொண்டு ஆன்மிக வாழ்க்கைக்கு சாதகமாக, இறுமாப்படையாதபடி தன்னைக் காக்கும் கருவியாக, வலுவுற்றிருக்கும் போது வல்லமை அளிக்கும் ஆற்றலாகப்

பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். கடவுளை நம்புகிறவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

### 3. சமூக நலம் :

“ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப் பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ” (2 கொரி. 5:17). இவ்வாறு புதிதாக மாற்றப்பட்ட மக்கள் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவார்கள். ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்டவர்களாய், ஒடுக்கப்பட்டவர்களாய், அறிவீனர்களாய், உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாய், எப்படி ஆடை அணியவேண்டுமென்று தெரியாதவர்களாய் வாழ்ந்த நம் முன்னோர்கள் இயேசு கிறிஸ்துவால், அவரது நற்செய்தியால், தியாகமாய் உழைத்த அருட்பணியாளர்களால் வாழ்வு பெற்றார்கள், மாற்றம் பெற்றார்கள், உரிமை பெற்றார்கள், உயர்வு அடைந்தார்கள். இன்றும் நமது நாட்டில் நிலவும் ஊழல்கள், சாதிப் பிரச்சனைகள், நரபலிகள், வரதட்சணை கொடுமை, பெண் சிசுக்கொலை மாற புதிய சமுதாயம் படைக்க சமூகப் புரட்சி தேவை. அதை இயேசு கிறிஸ்து மட்டும் தான் தர முடியும். அவரால் முழு நலம் பெற்றவர்களே தர முடியும். “எனது பெயரைப் போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று, தங்கள் பாவங்களிலிருந்து மனம் வருந்தி, இரந்து மன்றாடி, என் திருமுகத்தை நாடினால் வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுகளைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்” (2 குறி. 7 : 14) என்ற ஆண்டவரின் அருள் வாக்கினை சிந்தித்து நாட்டின் நலனுக்கு நாம் பொறுப்பாளிகள் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

### 4. ஆன்மிக நலம் :

படிக்கக் கேட்ட திருப்பாடல் 6ன் படி “ஆண்டவரே எனக்கு இரங்கும், ஆண்டவரே என்னைக் குணமாக்கியருளும், ஆண்டவரே திரும்பும், ஆண்டவரே என்னை மீட்டருளும்” என்று வேண்டுதல் செய்யும்பொழுது நாம் ஆன்மிகநலம் பெறுகிறோம், உயிர் பெறுகிறோம். அவரது இரத்தத்தால் கழுவப்படுகிறோம். உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பெறுகிறோம். அனலுமின்றி குளிருமின்றி இருக்கும் கிறிஸ்தவர்களாக அல்ல. உயிருள்ள, செயலாற்றும் கிறிஸ்தவர்களாக மாறி விடுகிறோம். நலம் பெற்றவர்களே நலம் கொடுக்க முடியும். நாம் அனைவரும் நலமளிக்கம் பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து இல்லாமல் முழுநலம் இல்லை. நாம் முழு நலம் பெற்றிருக்கிறோமா? பெற்றிருக்கிறோமென்றால் இந்தியாவில் எண்ணிறந்த

மக்கள் நலமடையவும், முழுமையடையவும் தேவையோடும் ஏக்கத்தோடு இருக்கிறார்கள். யார் முன் வருவார்?

டாக்டர் தாமஸ் சுமித் தாம்ஸன் 25 வயதில் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். 2 ஆண்டுகள் கழித்து டைபஸ் (Typhus) என்ற வியாதியால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார் என்று முகத்தை மூடி பிண அறையில் வைத்திருந்தார்கள். அந்த வழியாக வந்த மருத்துவ பேராசிரியர் உடல்களில் ஒரு உடல் மட்டும் அசைவதைக் கண்டு, தூக்கிச் சென்று சிகிச்சையளித்து உயிர் பிழைக்கச் செய்தார். கடவுள் தனக்கு அதிசயமாக உயிர் கொடுத்ததால் எஞ்சிய வாழ்வை கடவுளுக்காகவே ஒப்புக் கொடுத்தார். சீனாவில் மருத்துவப் பணி செய்த டாக்டர் லாக்கார்ட்ன் கடிதங்கள் அவரைத் தட்டி எழுப்பின. இரண்டு வாரம் ஆஸ்திரேலியாவிலிருந்த பெற்றோரை சந்தித்துவிட்டு இந்தியா வந்தார். எங்களுக்கு சக்தியில்லை. எங்கள் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது தேவரீர் மகிமையோடு எங்களை உபயோகித்தருளும் என்று ஜெபித்தார். ஆண்டவர் பயன்படுத்தினார். நெய்யூர் மருத்துவ மனையில் கூட்டம் அதிகமானது. “நான் ஆயிரம் நோயாளிகளுக்கு சிகிட்சை அளிப்பதை விட ஒரே ஒரு ஆத்துமா கடவுளிடத்தில் வருமென்றால் அதுவே அதிக மகிழ்ச்சியாயிருக்கும்”

மருத்துவர். **கிறிஸ்டோபர் நேசமணி**

**08-02-2015**

# ஆசி வழங்கவே ஆசீர்வாதம்

## BLESSED IN BEING A BLESSING

| | |
|---|---|
| தொநூ 12:1-7 | 2 கொரி 4:1-12 |
| திபா 20 | மத் 5: 1-12 |

**“உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன், நீயே ஆசியாக விளங்குவாய்”**

**தொநூ 12:2**

***இறைவேண்டல் : நலமானவைகளை அருளும் அன்புக்கடவுளே, நீர் எங்களுக்கு தந்திருக்கும் அனைத்து ஆசிகளுக்காய் நன்றிச் சொல்லுகிறோம். நாங்கள் பெற்றிருக்கும் ஆசிகளை பிறரோடு பகிர்ந்து பிறருக்கு ஆசி வழங்கும் மக்களாய் வாழ உம் அருள் தாரும். உண்மையான நிலையில் உம் ஆசிகளைப் பெற்று உமக்கு சான்றாளர்களாய் வாழ துணைப் புரிய இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம். –ஆமென்.***

ஆசீர்வாதம் என்ற வார்த்தை அனைத்து மக்களாலும் விரும்பப்படுகின்றது. ஆசீர்வாதத்திற்காக மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆசீர்வாத வேட்கையால் அங்கும் இங்கும் ஓட்டம் மேற்கொள்கிறார்கள். இறைப்பணியாளர்களும் ஆசி மொழிகளையே கூற வேண்டும் என்று விரும்பும் இறைமக்கள் தான் அதிகம் உண்டு. சாப மொழிகளை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. திருமறையில் பல நிலைகளில் ஆசீர்வாதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசீர்வாதத்தை குறிக்கும் “பெராக்கா” (Beraka) என்ற எபிரேய சொல் பழைய ஏற்பாட்டில் 398 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் “இயுலோகியா” (Eulogia) என்ற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புத்தாண்டு தொடக்கத்தில் இறை இல்லம் (ஆலயம்) செல்கின்றோம். வாக்குத்தத்த வசன அட்டைகளை ஆயரின் கரத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம். ஆசீர்வாத மொழிகள் வந்தால் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் ஆசீர்வாதத்தின் உண்மைத் தன்மைகளை மறந்து விடுகின்றோம். ஆசீர்வாதங்கள் அனைத்தும் பிறருக்கு ஆசி வழங்கவே என்பதை நினைவில் கொள்வது அவசியம். இன்று திருமறைச் சார்ந்து ஆசீர்வாதத்தின் உண்மை நிலைப்பாட்டை தியானிப்போம்.

## 1. ஆசீர்வாதத்தின் ஆதாரம் ஆண்டவர் :

“உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசீ வழங்குவேன்”(தொநூ 12:2).

ஆசீர்வாதங்களை வழங்குபவர் ஆண்டவர். அவர் ஆசீர்வாதத்தின் ஆதாரமாக உள்ளார். எனவேதான் கடவுள் ஆபிரகாமிடம் உன்னை நான் பெரிய இனமாக்குவேன், உனக்கு ஆசீ வழங்குவேன் என்கிறார். இதில் நான் என்ற வார்த்தை கடவுள் ஆசீர்வாதத்தின் ஆதாரமாக, ஊற்றாக இருக்கின்றார் என்பதை சுட்டுகின்றது. திருப்பாடலாசிரியர் தாவீது தனது பாடலில் “மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை; நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்” (திபா. 24:1) என்கிறார். விண்ணும் மண்ணும் அதில் வாழும் உயிரினங்கள், அதாவது, தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் அனைத்தும் கடவுளுக்கே சொந்தம். எனவே, இத்தகைய ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் ஆதாரம் கடவுளே.

அரசர் தாவீது தமது மக்களிடம் கடவுளுக்கு ஆலயம் கட்டுவதற்காக பொன், வெள்ளி, இரும்பு, மரம், விலையுயர்ந்த கற்கள் ஆகியவைகளை பெருவாரியாக சேர்த்து வைத்துள்ளார். அத்தனையும் கடவுளின் ஆலயப்பணிக்கு, கடவுளுக்கு வழங்குகிறேன். இன்று இப்பணிக்கென்று தாராளமாக கொடுப்பது யார்? என்றுக் கேட்டார். அப்போது அனைவரும் தன்னார்வமாக காணிக்கை படைத்தனர், மகிழ்ந்த தாவீது அரசர் ஆண்டவரை வாழ்த்தி கூறிய போது இவ்வாறு இந்தத் தன் விருப்பக் காணிக்கையை அளிப்பதற்கான ஆற்றலை நாங்கள் பெறுவதற்கு நான் யார்? என் மக்கள் யார்? யாவும் உம்மிடத்திலிருந்து வந்தவை. உம் கையினின்று நாங்கள் பெற்றுக்கொண்டவற்றையே நாங்கள் உமக்கு கொடுத்துள்ளோம் (1 குறி. 29:14) என்று ஆசீர்வாதத்தின் ஆதாரமாக இருக்கும் ஆண்டவரைப் புகழ்ந்தார்.

இஸ்ராயேல் மக்களுக்கு மோசே சொல்லும் போது நீங்கள் அனைத்து செல்வங்களையும் பெற்றுக் கொண்டோம் என்று செருக்கு கொண்டு ஆண்டவரை மறந்து விட வேண்டாம். எங்கள் ஆற்றலும் எங்கள் கைகளின் வலிமையுமே இந்தச் செல்வங்களை எங்களுக்கு ஈட்டித்தந்தன என்று எண்ண வேண்டாம். இந்தச் செல்வங்களை ஈட்டுவதற்குரிய ஆற்றலை உங்களுக்கு வழங்கிய ஆண்டவரை நினைவில் கொள்ளுங்கள் (இச. 8 : 17, 18) என்று ஆலோசனை வழங்குகிறார். அதாவது, ஆசீர்வாதத்தின் ஆதாரம் கடவுள் மட்டும் தான் என்பதை இங்கு விளக்குகின்றார். இத்தகைய நிலையை உணர்ந்து திருப்பாடகர், “கடவுளே

எம்மீது இரங்கி எமக்கு ஆசி வழங்குவீராக'' (திபா. 67:1) என்று வேண்டுதல் ஏறெடுக்கிறார். நாமும் அப்படியே ஆசீர்வாதத்தின் ஆதாரம் கடவுளே என்பதை உணர்ந்து ஆசீர்வாதத்திற்காக அவரிடம் மண்டியிடுவோம்.

## *2. ஆசீர்வாதத்தை அனுபவிக்க அழைக்கும் ஆண்டவர் :*

''உன்னை நான் பெரிய இனமாக்குவேன் உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய்'' (தொநூ. 12 :2).

ஆண்டவர் வழங்கிய ஆசிகள் அனைத்தும் இறை மக்களுக்கே சொந்தம் என இங்கு ஆண்டவர் ஆபிரகாமுக்கு அழைப்பு கொடுக்கிறார். ''உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் காண்பிக்கும் தேசத்திற்கு போ. அங்கே நான் உன்னை பெரிய இனமாக்கி ஆசீர்வாதிப்பேன்'' என்றார். எந்த நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பது செல்லப்படவில்லை. எனினும் தான் வழங்கும் ஆசீர்வாதத்தை அனுபவிக்க ஆபிரகாமை அழைக்கிறார் ஆண்டவர்.

இஸ்ராயேலர்கள் எகிப்து நாட்டில் அடிமைகளாக இருக்கும் நிலையில் அவர்களை விடுவிக்க மோசே என்பவரை ஆண்டவர் அழைக்கிறார். விடுதலை வாழ்வை அனுபவிக்க தலைமைத்துவத்தை அனுபவிக்க ஆண்டவர் மோசேக்கு அழைப்பு கொடுக்கிறார் (விப. 3). ஆண்டவரின் அழைப்பை மறுப்பின்றி ஏற்பது ஆசீர்வாதத்தின் தொடக்க நிலை. ஆபிரகாம் அழைப்பை மறுப்பின்றி ஏற்றார். மோசே அழைப்பை முதலில் மறுத்தாலும் கடைசியின் முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறார். ஆசீர்வாதத்தை அனுபவித்தார்கள்.

இயேசு கிறிஸ்து பாலை நிலம் ஒன்றிற்கு தனிமையைத் தேடிச் சென்றார். ஆனால் திரளான மக்கள் கூடினார். அவர்களுக்கு நல்வாழ்வு கொடுத்தார். நற்போதனைகளை வழங்கினார். மாலையாகிவிட்டது. சீடர்கள் அவரிடம் உணவு வாங்க அவர்களை அனுப்பிவிடும் என்றுச் சொல்ல, ஆசிகளை அனுபவிக்க அள்ளி வழங்கும் இறைவன் ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு அனைவருக்கும் உணவு கொடுத்து திருப்தியாக்கினார் (லூக். 9 : 10 -17). இத்தகைய ஆசீர்வாதங்களை நாமும் அனுபவிக்க கடவுள் நமக்கு அழைப்பு தருகின்றார். ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டுமெனில் ஆபிரகாமிடம் காணப்பட்ட கீழ்ப்படிதல் இறை அச்சம் நம்மிடம் வேண்டும். ஆண்டவருக்கு அஞ்சி, அவர் காட்டும் வழியில் நடக்கும் போது இறை ஆசியை நாம் அனுபவிக்கிறோம் (திபா. 128). எனவே, ஆண்டவர் வழங்கும் ஆசிகளை அனுபவிக்க நாம் ஆயத்தப்படுவோம்.

## 3. ஆசீர்வாதத்தைப் பகிர்ந்திட அழைக்கும் ஆண்டவர்:

“... நீயே ஆசியாக விளக்குவாய் ... உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்” (தொநூ. 12:2, 3).

நாம் இன்று ஆசீர்வாதத்தின் பாதியை மட்டும் உணர்கின்றோம். ஆனால், ஆசீர்வாதத்தை நாம் பகிரும் போது அதன் முழுமையாக உணர்கிறோம்.

ஆண்டவர் ஆபிரகாமுக்கு அழைப்பு கொடுக்கும் போது வழங்கிய ஆசீர்வாதத்தில் நீயே ஆசியாக விளங்குவாய். மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும் என்கிறார். அப்படியானால் ‘நீ ஆசீர்வாதத்தை பிறருக்கு பகிர்ந்து ஆசீர்வாதமாக இருப்பாய்’ என்று பொருள் கொள்ளலாம்.

இப்படி ஆசீர்வாதத்தை பகிர்தல் என்பது ஏதோ வெறுமனே வந்து விடுவதல்ல. மாறாக, துன்பத்தில் துளிர்த்து வெளிப்படுவைகளே. தூய பவுலார் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் இயேசு கிறிஸ்துவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோன் . அந்த வாழ்வின் ஆற்றல் உங்களிடம் வெளிப்படுகிறது (2 கொரி. 4:10, 12) என்கிறார். அதாவது, ‘துன்பத்தின் ஊடாக நாங்கள் பெற்றுக்கொண்ட வாழ்வின் ஆற்றலாகிய ஆசியை உங்களுக்கு பகிர்ந்துள்ளோம்’ என்று விளக்கம் தருகிறார்.

நிலத்தில் கோதுமை விதைக்கப்படும் போது அது மண்ணில் விழுந்து மடிந்தால் தான் மிகுந்த விளைச்சல் உண்டு (யோவா 12 : 24). அதுபோல துன்பத்தின் ஊடாகதான் இறைவன் வழங்கம் ஆசியை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து தெளிவுபடுத்துகிறார்.

இயேசு கிறிஸ்து சொன்ன நல்ல சமாரியர் உவமையில் வழியில் திருடர்களிடம் மாட்டிக்கொண்ட மனிதர் உயிருக்கு போராடி கொண்டிருந்தபோது திருச்சபை திருப்பணியோடு தொடர்புடைய குரு, லேவியர் துன்பம் அனுபவிக்க மனமற்றவர்களாக உதவிச்செய்ய மறுக்கிறார்கள். ஆனால், அனைவராலும் ஒதுக்கப்பட்ட சமாரியர் கடவுள் தனக்கு கொடுத்த ஆசியைப் பகிர்ந்திட துன்பம் அனுபவிக்க ஆயத்தப்படுகின்றனர். எனவே, தனது வாகனத்திலிருந்து இறங்கினார். நேரத்தை செலவிட்டார். உழைப்பை செலவிட்டார். பணத்தை செலவிட்டார், ஆசியைப் பகிர்ந்தார் (லூக். 10: 25.36). நாமும் இவ்விதமாக பகிர்ந்திட அழைக்கப்படுகிறோம்.

அழகான சிறிய குடிசை ஒன்றில் வயதான பெரியவரும் மனைவியும் படுத்திருந்தனர். வெளியே நல்ல மழை திடீரென கதவு தட்டும் சத்தம் கேட்டது. ''கதவைத் திறக்க வேண்டாம், நமக்கே இடமில்லை'' என்று மனைவி சொன்னார். ஆனால், ''மூன்றுபேர் படுக்க இடம் இல்லையென்றாலும் மூன்று பேர் உட்காரும் இடம் இருக்கிறது'' என்று பெரியவர் சொன்னார். கதவைதிறந்து வெளியே நின்றவரை உள்ளே அழைத்து கதவு பூட்டப்பட்டது. மூவரும் நெருங்கி உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

அப்போது மீண்டும் கதவு தட்டப்பட்டது. முதலில் வந்தவர், ''கதவைத் திறக்க வேண்டாம் நமக்கே இடம் இல்லை அல்லவா?'' என்றார். பெரியவர், ''நாம் கொஞ்சம் கூட நெருங்கி நெருங்கி அமரலாம்'' என்று சொல்லி விட்டு கதவைத் திறந்தார். அங்கு இருவர் நின்றனர். உள்ளே நெருங்கி நெருங்கி உட்கார்ந்திருந்தனர். மீண்டும் கதவு தட்டப்பட்டது. உள்ளே இருந்தவர்கள், ''நமக்கு உட்கார இடமில்லையே'' என்று சொல்ல, பெரியவர் தன்னால் கதவை திறக்கமுடியாத நிலையில் மற்றவரிடம் கதவை திறக்கச் செய்ய அங்கு கழுதை ஒன்று நின்றது. ''ஐயா நமக்கு உட்கார இடமில்லையே, கழுதையைத் துரத்திவிடுவோம்'' என்று மற்றவர்கள் சொன்ன நிலையில் பெரியவர், ''நான் உதவி கேட்டு வந்தவர்க்கு இல்லை என்று சொல்லமாட்டேன். நமக்கு உட்கார இடமில்லை. ஆனால், நாம் எழும்பி நின்றால் நெருங்கி நிற்கலாம்'' என்று கூற, எல்லோரும் எழுந்து கொஞ்சம் இருந்த இடத்தில் துன்பத்தை ஏற்று மற்றவர்களும் மழை நனையாமல் தங்க வாய்ப்பு கொடுத்து தங்கள் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

உன்னால் நன்மை செய்யக்கூடுமாயின் தேவைப்படுவோருக்கு அந்த நன்மையைச் செய்ய மறுக்காதே (நீமொ. 3 : 27) என்று நீதிமொழிகள் ஆக்கியோனும், நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும் (பிலி. 2 : 4) என்று பவுலடிகளாரும் தெளிவுடன் கூறுகின்றார். எனவே, நாம் பெற்ற ஆசீர்வாதத்தை பகிர்வோம். 'இறைக்கின்ற கிணறுதான் ஊறும் இறைக்காத கிணறு நாறும்' என்ற முதுமொழியையும் நினைத்து ஆசியைப் பகிர்ந்திடுவோம்.

அன்பர்களே! ஆண்டவர் நமக்கு வழங்கியுள்ள ஆசிகள் அனைத்தும் ஆசி வழங்கவே என்பதை உணர்ந்து ஆசீர்வாதத்திற்கு ஆதாரமாகிய ஆண்டவரிடமிருந்து ஆசிகளை பெற்று அனுபவித்து பிறருக்கு பகிர்ந்து வாழ்வோம். இறையாசி பெறுவோம்.

**திரு. R. டேவிட் ஜெபசிங்**

**15-02-2015** *உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு*

# தவக்காலம் : ஓர் ஒப்புரவின் காலம்

## LENT : A TIME OF RECONCILIATION

| | |
|---|---|
| தொநூ 45:1-15 | எபே 2:11-22 |
| திபா 85 | யோவா 2:1-11 |

**“...சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்.”** எபே 2:16

***இறைவேண்டல் :*** *இரக்கம் நிறைந்த கடவுளே, உண்மையான மனவருத்தத்துடன் உம்மிடம் வரும் எவரையும் நீர் வெறுக்காமல் அன்புடன் ஏற்று மன்னிப்பருள்கிறீர். எங்களில் உண்மையான அன்புடன் ஏற்று மன்னிப்பருள்கிறீர். எங்களில் உண்மையான குற்ற உணர்வையும், உறவுகளின் உடைவுகளை புரிகின்ற நிலையையும் அருளி உமது மன்னிப்பையும் ஒப்புரவாக்குதலையும் அனுபவிக்க அருள் செய்ய விடுதலை நாயகர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம்- ஆமென்.*

தவக்காலம் கடவுளின் நிபந்தனையற்ற அன்பையும், குணமாக்கும் அருளையும், ஒப்புரவாக்குதலையும் கொண்டாடும் காலம். “சிதைவுற்ற உணர்வுகளை குணமாக்குதல்” என்னும் நூலில் டேவிட் சீமான்ட்ஸ் என்பவர் உணர்வு அழுத்தத்திற்கு இரு முக்கிய காரணிகளைக் குறிப்பிடுகிறார்: ஒன்று, மன்னிப்பு பெற்றுக் கொள்ள தவறுவது, மற்றொன்று, மன்னிப்பு கொடுக்க தவறுவது. (Failure to receive forgiveness and failure to forgive) தென்னாப்பிரிக்காவில் இன நிற வெறிக்கு எதிராக போராடிய பேராயர் டெஸ்மன்ட் டூடு (Desmond Tutu) நிறவெறிக்கு மாற்றாக மனிதம் இறையியலை (Ubundu theology) ஒப்புரவாகுதலின் இறையியலாகச் செய்து மாற்றங்களை கொண்டு வந்தார். உடைப்பட்ட குடும்ப, சமுதாய, திருச்சபை உறவுகளில் மன்னிக்கும் உணர்வுகளும் ஒருமைப்பாடும் வளர வேண்டியதின் அவசியம் இன்று அதிகமாக உணரப்படுகிறது. இன்று திருச்சபைகளிலும், பல பிளவுகள் உருவாகி கிறிஸ்தவத்தை மக்கள் கேலி செய்யும் அளவில் சென்று கொண்டிருப்பது நம் ஆன்மிக அவலத்தை வெளிப்படுத்துகிறது. மார்க் ட்வொய்ன் என்பவர் “இன்று கிறிஸ்து இருந்திருந்தால் ஒரு கிறிஸ்தவராக இருக்கமாட்டார்” என்று சொல்லுமளவிற்கு கிறிஸ்தவம் சென்று கொண்டிருப்பதின் காரணம் திருச்சபையின் பிளவுகளும் பிரிவினைகளும் தான் (Church has become a fragmented and fractured community). எனவே, திருச்சபை குணமாக்கப்படவேண்டும் (Church needs healing).

கடவுள் ஒப்புரவாக்குகிறவர். ஒப்புரவு கடவுளிடமிருந்து தொடங்குகிறது. தொடங்கி வைப்பவர் கடவுள் (God is the initiator). இது ஒரு தொடர்நிகழ்வு (process), முடிந்துவிட்ட ஒன்று அல்ல. ஒப்புரவு என்பது எதிரிகளை நம்பிக்கைக்குரிய நண்பர்களாக மாற்றுருவாக்கம் செய்யும் முயற்சி. எதிரிகள் இல்லாமல் வாழும் வாழ்க்கை அன்பை செயல்வடிவமாக்கும் வழிமுறைதான் ஒப்புரவு.

இன்றைய சிந்தனைக்காக கொடுக்கப்பட்ட மூன்று திருமறைப் பகுதிகளும் மூன்று விதமான ஒப்புரவாக்குதலை வெளிப்படுத்துகின்றன.

### *1. மீண்டும் ஒப்படைக்கும் ஒப்புரவு* (Restitution) :

தொடக்க நூல் 45- ம் பிரிவில் யோசேப்பும் சகோதரர்களும் ஒப்புரவாகிய நிகழ்ச்சி தொகுத்து வழங்கப்பெற்றிருக்கின்றது. இந்நிகழ்வில் கூக்குரலிட்டு அழுவதும், அருகில் வருவதும், சினத்தை விட்டு விடுவதும், மன்னிப்பு கேட்பதும்- வழங்குவதும்- பெற்றுக்கொள்வதும், முத்தமிடலும், உடையாடலும் நிகழ்கின்றன. ஒப்புரவாகுதலுக்கு அடிப்படையான அனைத்து உணர்வுகளும் வெளிப்பட்டு, பரிமாறப்படுகின்றன. ‘‘கடவுள் தான் என்னை இங்கு அனுப்பினார்’’ என்ற யோசேப்பின் சொற்கள் அவரது ஒற்றுமை உணர்வின் உச்சகட்டத்தை காட்டுகிறது. மட்டுமல்ல, ‘கடவுள் தான் என்னை தலைவராக, ஆளுநராக நியமித்து இப்போது உங்கள் முன் நிற்க வைத்திருக்கிறார்’ என்பது தனக்கு ஏற்பட்ட துன்பத்தை மகிழ்வுடன் பார்க்கும் மன நிறைவையும் ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. தந்தையை விட்டு பிரிக்கப்பட்ட யோசேப்பை தந்தையிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்புரவு இங்கு தொடங்குகிறது. வன்முறையின் தீர்வு ஒப்புரவு. மேலும், பொருட்களை பகிரும் முயற்சியாக கருதப்பட்டது. எஞ்சியிருப்போரை பஞ்சத்திலிருந்து காப்பாற்றுவது, அதிலும் வன்முறைவழியாக அநீதி இழைத்தோருக்கு உணவு கொடுப்பது ஒப்புரவு என்பதை யோசேப்பு வெளிப்படுத்துகிறார். ஒப்புரவு நீதியுடன் தொடர்புடையது, மலிவானதுஅல்ல.நீதியற்ற ஒப்புரவு சமரசம் பண்ணுவது (Compromise) ஆகும். இது கிறிஸ்தவ ஒப்புரவாகுதலன்று, மாறாக பாவம். இறை நீதியில்லாமல் ஒப்புரவாகுதலுக்கு வாய்ப்பே இல்லை. ஒடுக்குகிறவர் ஒருவர் தன் ஒடுக்குதல்களை ஏற்றுக்கொள்ளுங்கள் அதன்பிறகு ஒப்புரவாகுதலைக் குறித்து பேசலாம் என்பதை கைராஸ் பிரதி ‘‘மலிவான-ஒப்புரவு’’ (Cheap reconciliation) என்று சொல்கிறது. மலிவு ஒப்புரவு என்பது நீதிக்கான தேடுதலை மறுதலிப்பது, ஒடுக்கப்படுதலை ஆதரிப்பது ஆகும். யோசேப்பு மற்றும் அவன் சகோதரர்களிடையே நிகழ்ந்த உரையாடல் ஒரு நீதிக்கான தேடல். இத்தேடலில் யோசேப்பும் சகோதரர்களும் மலிவு ஒப்புரவைத் தாண்டி விலைமதிப்பற்ற ஒருமைப்பாட்டை தெரிவு செய்கிறார்கள். ஒப்புரவு ஏற்பட்டாலும் இணைந்து

வாழ முடியுமா? இவ்வினா, பாதிக்கப்பட்டவரையும், பாதிப்பை ஏற்படுத்தியவரையும் மனதளவில் குணப்படுத்தப்படவேண்டும். நம்மிடம் மனதளவில் குணமாகுதல் ஏற்படும்போது மீண்டும் ஒப்படைக்கும் ஒப்புரவு ஏற்படும்.

## *2. மீள்வாழ்வளிக்கும் ஒப்புரவு* (Restoration) :

யோவான் 2-ம் பிரிவில் கானாவில் நடைபெற்ற திருமண விழாவில் இயேசு கிறிஸ்து செய்த வல்லச்செயல் விளக்கப்பெற்றிருக்கிறது. யூதர்-யூதர் அல்லாதோர் என்ற பிரிவினைச் சமுதாயத்தில், பகையுணர்வும், உயர்ந்தவர்கள்-தாழ்ந்தவர்கள், தூயவர்கள்-தூய்மையற்றவர்கள் என்ற உணர்வுகள் சமுதாய, பொருளாதார, சமய உறவுகளில் எழுச்சியடைந்து பிரிவினையை ஏற்படுத்திய காலத்தில் இயேசு கிறிஸ்து செய்த இச்செயல் ஒரு சாதாரண வல்லச் செயல் அல்ல, அருஞ்செயல்களைத் தாண்டி இயேசுவின் வல்லச்செயல்களை புரிந்துகொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்வார் என்ற செய்தியைத் தாண்டி இயேசு கிறிஸ்துவின் அருஞ்செயல்கள் காட்டும் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக, திருமண விழாக்களில் ஏழைகளும், ஓரந்தள்ளப்பட்டவர்களுமே இறுதியில் பந்திக்கு அனுமதிக்கப்படுவார்கள். திராட்சரசம் குறைப்பட்டபோது நல்ல ரசத்தை பெற்றுக்கொள்ளச் செய்தது இயேசு கிறிஸ்துவின் ஒருமைப்பாட்டு முயற்சியாக புரிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்து தம் திருப்பணியில் பிரிவினைகளுக்கு எதிராக போதித்தார், இறைவேண்டல் செய்தார், செயல்பட்டார் என்பதை நற்செய்தி நூல்கள் விளக்குகின்றன. எனவே, ஓரந்தள்ளப்பட்ட மக்கள் சார்பாக நின்று கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் ஒரு ஒப்புரவு இயக்கமாக இவ்வற்புதத்தை விளங்கிக் கொள்ளவேண்டும்.மேலும், யூதரின் தூய்மைசடங்கிற்கு பயன்படுத்திய தொட்டிகளை இயேசு கிறிஸ்து பயன்படுத்தச் சொல்வது ஒப்புரவாகுதல் நம் பயன்பாட்டு பொருள்களிலும் இருக்கிறது என்பதை காட்டுகிறது. தோள்சீலைக் கலகம் செய்து விடுதலை பெற்றதை நினைவில் கொண்டு, இன்றும் பல இடங்களில் பழக்கத்தில் இருக்கும் சிரட்டை, இரு கப்புகளில் தேனீர் வழங்கும் கொடுமைகளிலிருந்து விடுதலை ஏற்படுத்தும் மீட்டாக்கம் செய்யும் ஒப்புரவு பணியை திருச்சபை செய்ய முன்வரவேண்டும். ஒப்புரவு விடுதலையுடன் தொடர்புடையது. இன்றும் சமுதாயத்தில், திருச்சபைகளில் விடுதலைக்கான வேட்கையுடன் அமர்ந்திருக்கும் மக்கள் மீள் வாழ்வு பெற நம்மில் ஒப்புரவு திருப்பணி துரிதப்படுத்தப்படவேண்டும்.

## *3. மீட்பளிக்கும் ஒப்புரவு* (Redemption) :

எபேசியர் 2:11-22 வரையுள்ள பகுதியில் தூய பவுல் மீட்பளிக்கும் ஒப்புரவு சிலுவை வடிவமானது என்கிறார். (Redemptive reconciliction is

cross shaped). கடவுள் தடைகளை உடைத்தெறிகிறார், பகைமையை அழிக்கிறார் என்ற செய்தியை எபேசு திருச்சபைக்குச் சொல்கிறார். ஒப்புரவு என்பதற்கு தூய பவுல் “கட்டலாசோ” எனும் கிரேக்கச் சொல்லை பயன்டுத்துகிறார். இது சமயம் சார்ந்த சொல் அல்ல, மாறாக, ‘முரண்பாடுகளை தீர்ப்பது’ என்று பொருள். தூய பவுல் இதனை தைரியமாக கடவுளுடன் ஒப்புரவாகுதலுக்கு பயன்படுத்துகிறார். ஒப்புரவாகுதலின் செய்தி தூய பவுலாரின் ஆணித்தரமான அழுத்தமான செய்தியாகும். இதற்கு அழகான சிலுவை வடிவத்தை கொடுக்கிறார். கடவுளுடன் ஒப்புரவு- மக்களுடன் ஒப்புரவு என்பதைச் சொல்லும் போது சிலுவையின் வழியாக என்று சிலுவைக்கு புது விளக்கம் கொடுக்கிறார்.

சிலுவை கடவுளின் இரக்கம், நீதி, ஒப்புரவு. இது மலிவானதல்ல, விலையேறப்பெற்றது. திருச்சபைக்கு சிலுவை இறையியல்தேவை. அழகுபடுத்திய சிலுவைகளின் நிழலில் அமர்ந்து வழிபடும் திருச்சபை மக்களிடம் ஒருமைப்பாடு வளரவேண்டும். இயேசு கிறிஸ்துவின் சிலுவை பளாளப்பானது அல்ல. கரடுமுரடான சிலுவையில் தான் பகைமை கொல்லப்பட்டு ஒப்புரவு திருப்பணி தொடங்கப்பெற்றது. சிலுவை என்பது நிந்தை, பாடு என்ற சிந்தனைகளைத் தாண்டி தவக்காலத்தில் ஒப்புரவாகும் சேவை உணரவேண்டும். தாமஸ் அக்குவினாஸ், “ஒருமைப்பாடு என்பது ஒருமுறைக்கூட கண்டுபிடிக்கப்பட்ட நட்பு” (Reconciliation is a friendship found once again) என்கிறார். இயேசு கிறிஸ்துவும் நட்பை ஓரங்களுக்கும் கொண்டு சென்றார். ஓரங்களில் வாழ்ந்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் நண்பர்கள் (Friendship at the margins). திருச்சபைகளில் நட்பு சிந்தனைகள் வலுப்பெற வேண்டும்.

தூய பவுலார் இந்த ஒப்புரவின் திருப்பணியை கடவுள் நமக்கு தந்திருக்கிறார் என்கிறார்(2கொரி. 5 : 18). ஒப்புரவு திருப்பணியை (diakonia of reconciliation) செய்யும் நாம் கிறிஸ்துவின் தூதுவர்கள் (ambassadors of Christ) என்கிறார். எனவே, ஒப்புரவு இறப்புக்குப் பின் மோட்சத்தில் நிகழ்வது அல்ல. அது இங்கேயே தொடங்கப்பெற்று நடைபெற வேண்டும், திருச்சபை ஒப்புரவாகுதலின் சாக்கிரமெந்து. (Sacrament of reconciliation) எனவே, நாம் ஒப்புரவாக்கப்பெற்று ஒப்புரவாக்குகிறவர்களாக வேண்டும். கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலை நம் வாழ்வில் மீண்டும் கண்டுபிடிக்கும்போது முரண்பட்டு மோதுகிற சமுதாயத்தில், திருச்சபைகளில் மாற்றங்களை கொண்டு வரமுடியும். இத்தவக்காலம் இத்தகைய மாற்றங்களை நம்மில் முதலில் ஏற்படுத்த கடவுளின் உதவியைத் தேடுவோம்.

அருள்திரு. அறிவர். M. ***பீட்டர் சிங்***

**18-02-2015** *சாம்பல் புதன்*

# சிலுவை : தன்னல மறுப்புக்கான அழைப்பு

## CROSS: A CALL TO SELF DENIAL

யோவே 2 :12-20 கலா 2:15-21
திபா 32 லூக் 9:23-27

**"உங்கள் முழு இருதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர்" யோவே 2:12**

**இறைவேண்டல் :** *மீட்பராம் கடவுளே, உம் திரு மைந்தராம் இயேசு கிறிஸ்துவை எங்களுக்கு அனுப்பி, எங்களை மீட்டதற்காக உம்மைப் போற்றுகின்றோம். தன்னையே வெறுமையாக்கி உலக மக்களுக்காய் தன்னைக் கொடுத்த அவருடைய தியாகத்தை நினைவு கூருகிறோம். நாங்களும் அவர் வழியில் எங்களுக்காக அல்ல, தன்னலம் துறந்து பிறருக்காக வாழ உம் அருள்தர மன்றாடுகிறோம். - ஆமென்.*

காலங்கள் மனித வாழ்வில் பழகிப்போன ஒன்று. மாறி மாறி வருகின்ற பருவகாலங்களைக் கண்டும் அனுபவித்தும் மனிதன் பழகிப்போனான். இயற்கை, காலங்களில் தன் கடமையைச் செய்கின்றது. காலை மணி 6 என்றால் சூரியன் தன் ஒளி க்கற்றையால் உலகை ஒளிர்விக்க விரிக்க மறப்பதில்லை. இரவில் சந்திரன் தன் முகத்தைக் காட்ட மறப்பதில்லை. பறவைகள், விலங்குகள் அனைத்து உயிரினங்களும் காலந்தவறாமல் தங்கள் கடமைகளை நிறைவேற்றுகின்றன. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து பறவைகள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட மாதத்தில் பறந்து வந்து வேடந்தாங்கலில் கூடுகட்டி இனப்பெருக்கம் செய்துவிட்டு திரும்பி விடுகின்றன. மீண்டும் அதே இடத்திற்கு காலம் வரும்போது தவறாமல் வந்துவிடுகின்றன.

கிறிஸ்தவ வாழ்விலும் காலங்கள் திருச்சபைக்கு ஈவாக வழங்கப்பட்டிருக்கின்றன. லெந்து காலம் அவைகளில் சிறப்பானவை. விசுவாசவாழ்வில் கடந்துவந்த பாதையினை திரும்பிப் பார்த்து தீமைகளுக்காக மனம் வருந்தி துளிர் விடும் புது வாழ்வுக்கு நம்மை ஒப்படைக்கும் காலம். 'லெந்து' (Lent) என்ற லத்தீன் வார்த்தைக்கு 'துளிர்விடுதல்' என்று பொருள். மனித வாழ்வு கிறிஸ்துவில் துளிர்விடவேண்டும். கிறிஸ்து சுமந்த சிலுவை நம்மை அதற்காக அழைக்கிறது. இறைவனிடம் நாம் திரும்பிட சிலுவை நமக்குக் காட்டுகின்ற வழியினை இந்த நாளிலும் தியானிப்போம்.

## 1. தன்னலத்தை வெறுத்து ஆண்டவரிடம் திரும்புதல் :

பாலஸ்தீன நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சி, வெட்டுக்கிளிகள் விளைவித்த பேரழிவு ஆகியவற்றை கடவுளின் நாளுக்கும் கடவுளின் நீதியை எதிர்ப்பவர்கள் மீது வரவிருக்கும் தண்டனைக்கும் முன்னடையாளங்களாக தீர்க்கர்கள் கருதினர். இந்த அழிவின் வழியாக வரும் நீதித் தீர்ப்பைக் குறித்து கடவுள், இஸ்ரயேல் மக்களை எச்சரிப்பதற்காக தீர்க்கதரிசனம் உரைக்கின்றார். ஆண்டவரின் நாளை சந்திப்பதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆண்டவர் அவர்களைப் பார்த்து முழு இருதயத்தோடு வாருங்கள் என்று அழைக்கிறார்.

‘‘உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்; வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்; ஊர்ப் பெரியோரையும் நாட்டில் குடியிருப்போர் அனைவரையும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தில் கூடிவரச் செய்யுங்கள்; ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள்’’(யோவே 1:14). ஆண்டவரின் அழைப்பு யோவேல் தீர்க்கரின் வழியாய் கொடுக்கப்படுகிறது. ஆண்டவரின் நாளை கருத்துடன எதிர்நோக்கும் காலம் இது. கடவுளின் நாளை எதிர்நோக்கி அவரிடம் திரும்புவதற்கே லெந்து காலம். சாம்பல் புதன் முதல் தொடங்கும் இக்காலம் சுயத்தைச் சாம்பலாய் மாற்றுவதற்காக தரப்படுகிறது. சுயம் சாம்பலாய் மாறாவிட்டால் இறைவனிடம் திரும்ப இயலாது.

இளைய மைந்தனிடம் இருந்த தன்னலம் அவன் தந்தையிடமிருந்து தூரமாய் விலகிச்செல்ல காரணமாயிற்று. யாக்கோபிடம் இருந்த தன்னலம் அவனை சிலகாலம் தன் பெற்றோரையும் சகோதரனையும் விட்டு விலகியிருக்கச் செய்தது. ஆமானின் சுயநலம் அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் அழிவைத் தேடிதந்தது.

தன்னலத்தை(சுயத்தை) வெறுத்து உபவாசத்தோடும் இறைவேண்டலோடும் ஆண்டவரிடம் சென்ற எஸ்தர் தன்னையும் தன் குடும்பத்தையும், தன் மக்களையும் காப்பாற்றினார். இந்த தன்னல மறுப்புக் காலத்திலும் நாம் தன்னலத்தை வெறுத்து இறைவனிடம் திரும்புவோம்.

## 2. தன்னிலை உணர்ந்து ஆண்டவரிடம் திரும்புதல் :

இயல்பாய்க் கனியும் கனியாக ஓர் இறைப்பற்றாளர் வாழவேண்டும். தன்னை அறியும் ஆற்றலில் வளரவேண்டும். புறம்பான

ஆசாரங்கள் மட்டுமல்ல; உள்ளான மாற்றத்துடன் தன்னிலை உணர்ந்து இறைவனிடம் திரும்ப வேண்டும். தற்பரிசோதனை எப்போதும் மனிதவாழ்வை சரியான பாதைக்கு திருப்பிச்செல்லும் சிறந்த ஆயுதம் வாழ்வின் பாதையை அவ்வப்போது நின்று சுயஆய்வு செய்யாத மனிதன் பாதை மாறிச் சென்று விடுகிறான்.

தன்னல நோக்கத்துடன் தந்தையிடமிருந்து செல்வத்தைப் பெற்றுச் சென்ற இளையமைந்தன் தவறான பாதையில் அனைத்தையும் இழந்தபோது வாழ்வை திரும்பிப்பார்க்கிறான். தன்னை சுயஆய்வு செய்கிறான். தன்னிலையை உணரத் தொடங்குகிறான். புத்தி தெளிவடைந்து மீண்டும் தன் தந்தையிடம் திரும்பிச்செல்ல தீர்மானிக்கிறான். தன்னை, தன்தவறை உணர்ந்தபோது உள்ளத்தில் மாற்றம் கண்டான். உண்மை வாழ்வை அடைந்தான்.

தீமை நிறைந்த வாழ்வில் மூழ்கிப்போன நினிவே பட்டணத்து மக்கள் யோனாவின் செய்தியைக் கேட்டபோது, சிந்திக்கத் தொடங்கினார்கள். தங்கள் தவறான வாழ்வின் பாதையை உணர்ந்தனர். தங்கள் வாழ்வை சுய ஆய்வு செய்த அவர்கள் இறைவனிடம் திரும்ப தீர்மானித்தனர். ஆண்டவரை விசுவாசித்தார்கள், உபவாசம் இருந்தார்கள், அனைவரும் இரட்டுடுத்திக் கொண்டார்கள், அரசர் தன் அரச உடையைக்களைந்து இரட்டு உடுத்திக் கொண்டு சாம்பலில் அமர்ந்தார். மக்களும், விலங்குகளும் உணவருந்தாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்து ஆண்டவரை நோக்கி மன்றாடவும் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பவும் கட்டளை பிறப்பித்தார். (யோனா 3:5-8). ஆண்டவரிடம் திரும்பிய நினிவே மக்கள் ஆண்டவரால் அழிவில் இருந்து காக்கப்பட்டார்கள்.

துன்மார்க்கமான வாழ்வுக்கு அடிமைப்பட்ட வாலிபன் ஒருவன் அனைத்துவித தீயச் செயல்களிலும் தேறினவன். அவனைக் கண்டாலே அனைவருக்கும் அச்சம், காரணம் பல கொலைகளும் கொள்ளைகளும் அவன் மூலமாய் அரங்கேறியிருந்தன. ஒருநாள் சாலையோரம் நடந்து சென்ற அவன் புதர்களால் மூடப்பட்டிருந்த பாழ்கிணற்றில் விழுந்து கடுமையான காயத்திற்குள்ளானான். மதுபோதையில் இருந்த அவனுக்கு போதை தெளிந்த போது விடியற்காலை ஆகிவிட்டது. அப்பொழுதுதான் தான் தப்பிச்செல்ல இயலாத ஆபத்தில் இருப்பது அவனுக்கு தெரிந்தது.

உடல் முழுவதும் காயத்தால் வேதனையுடன் தன்னைக் காப்பாற்றும்படி கதறினான். எட்டிப்பார்த்த எவரும் காப்பாற்ற முன்வரவில்லை. சோர்வுற்று அமர்ந்தான். தன்னை சுய ஆய்வு செய்தான். இறைவனிடம் வேண்டினான். நல்லவனாய் வாழத் தீர்மானித்தான். தன் தீர்மானத்தை உரத்த சத்தமாய் எட்டிப்பார்த்த வழிப்போக்கர்களிடம் சொன்னான். காப்பாற்றப்பட்டான். திருந்திய வாழ்வுக்கு சான்றாக மாறினான்.

லெந்து காலங்கள் சிலுவைக்கு நேராய் நம்மை அர்ப்பணிக்க அழைக்கிறது. இந்நேரத்தில் நாம் நின்று கடந்துவந்த பாதையை சுயஆய்வு செய்ய வேண்டும். தன்னலத்தை வெறுத்து ஆண்டவரிடம் திரும்ப ஆயத்தமாக வேண்டும் சுயம் சாம்பலாய் மாறட்டும். நினிவே மன்னன், தீமைக்கு வருந்தி சாம்பலில் அமர்ந்து ஆண்டவரிடம் திரும்பிய வண்ணமாய் இந்த நாளிலும் நாம் முழு இருதயத்தோடு ஆண்டவரிடம் திரும்புவோம். ஆண்டவருக்குச் சான்றாக வாழ்வோம்.

அருள்திரு. J. **வின்சென்ட் றாபர்ட்**

# வெளிவேடத்தைக் களைவோம் வெள்ளை மனமாவோம்

## AVOID HYPOCRISY AND BE CLEAN-HEARTED

**"...பரிசேயருடைய வெளிவேடமாகிய புளிப்புமாவைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்."** லூக். 12:1

"வெளிவேடம்" என்பது படித்தவர்களையும் பாமரக் கூட்டத்தாரையும் எளிதில் தொற்றிக் கொள்ளும் தீய நோயாகும். இந்நோயோடு வாழ்ந்தவர்கள் தான் முதலாம் நூற்றாண்டு மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் ஆவார்கள். இயேசு கிறிஸ்து 'வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு' எனச் சீறி எழுந்தார்.

ஆம்! "வெளிவேடக்காரர்" என்பதின் ஆங்கில வார்த்தை 'Hypocrite'ஆகும். இவ்வார்த்தை உண்மையில் ஓர் கிரேக்க வார்த்தை. இதன் பொருள் 'கபடநாடகமாடுபவர்' (Pretender) என்பதாகும். நடிகர்கள் வேடம் புனைந்து மேடையில் நடிக்கின்றனர். ஆனால், இந்த வெளிவேடக்காரரோ வாழ்க்கையை மேடையாக்கித் தொடர்ந்து நடிக்கின்றனர். இப்படி கபடநாடகமாடிய, பயிரை மேயும் வேலியாய் அமைந்த வெளிவேடக்காரரை இயேசு "அவர்களுடைய வெளிவேடத்தை புரிந்துகொண்டு" (மாற். 12:15), இவர்கள் பசுத்தோலை போர்த்திய ஓநாய்கள் என்பதை சீடருக்கு சுட்டிக்காட்டி "நீங்கள் அப்படி இருக்க வேண்டாம்" என சீடரை எச்சரித்தார்.

அங்ஙனமே சில நாட்களுக்கு முன் போப் திருத்தந்தை பிரான்சிஸ், 'வெளிவேடம் என்பது திருச்சபையில் பல வடிவங்களில் உள்ளது' என கிறிஸ்தவ உலகிற்கு எச்சரித்து திருச்சபையிலும் சமுதாயத்திலும் புரையோடிக் கிடக்கும் போலிவாழ்வை மற்றும் வார்த்தையை அம்பலப்படுத்தி, ஆண்டவரின் சிலுவை அன்பாகிய உண்மையான அன்பை அகிலத்திற்கு அறிவிக்க வலியுறுத்தினார்.

மேலும் 2009-ல் நடைபெற்ற அமெரிக்க அதிபருக்கான தேர்தல் பிரசாரத்தில் பராக் ஒபாமா தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி பிரச்சாரத்தில் பயன்படுத்திய வார்த்தை Yes, we can. Yes, we can change. Yes, we can - 'நம்மால் முடியும். ஆம், நம்மால்

மாற்றம் ஏற்படுத்த முடியும்’ என்பதாகும். அத்தேர்தலில் வெற்றிபெற்று 44-வது அமெரிக்க அதிபராக 2009 ஜனவரி 20-ம் தேதி பொறுப்பேற்றார். பின் சிகாகோ பட்டணத்தில் வெற்றியுரையாற்றிய போது "மாற்றம் ஒன்றே வளர்ச்சி, ஆம், அது நம்மால் முடியும் என்பதை நிரூபிப்போம்" என சூளுரைத்தார். இவ்வாண்டின் தவக்காலத்தில் நாமும் நமது வாழ்வில் வெளிவேடத்தைக் களைந்து வெள்ளை மனமாக அல்லது தூய்மையான உள்ளமுடையவராக மாற்றம் பெற முயற்சிப்பது சிறப்பானதாகும். அத்துடன் அம்மாற்றத்தை நம் வாழ்வில் நிரூபிக்கவும் ஆயத்தமாவோம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**20-02-2015** *தவக்கால முதலாம் வெள்ளி*

# மரபா? மாறாக் கட்டளையா?

**TRADITION? OR UNCHANGING LAW?**

திருமறைப்பாடம் : மத் 15:1-9

> **“…நீங்கள் உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் கட்டளையை மீறுவது ஏன்?”** யோவா 8:5

பண்பாடுகளும், மரபுகளும் மானிட உறவுகளையும், நம்பிக்கையையும் மேம்படுத்துகிறவைகளாக இருக்க வேண்டும். ஆனால் இவைகள் ஒன்றுக்கொன்று முரண்படுகிறவைகளாகவும் குறிப்பாக அடிமைப் படுத்துகிறவைகளாகவும் இருப்பது வேதனையானது. காரணம் பழக்கவழக்கத்திலிருந்து வரும் செயல்பாடுகள் காலப்போக்கில் மரபாக மாறி இறைவனின் திட்டத்தில் இணைய நம்மை தடுக்கிறது. மேலும் மரபுகளை பின்பற்றுவதால் கிறிஸ்துவை மறுதலிக்கவும், மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்களாக நாம் மாறிவிடுகிறோம்.

பொதுவாக மரபு என்பது வெளிப்புறத்தை சார்ந்தது. மாறாக கட்டளையாகிய கடவுளுடைய வார்த்தையோ உட்புறத்தை அல்லது உள்ளத்தை சார்ந்தது. எப்படியெனில் மரபுகள் வீண்வார்த்தைகளை உதடுகளுக்கு கொண்டுவரும், ஆனால் மாறாக் கட்டளையாகிய கடவுளின் வார்த்தையோ உள்ளத்தில் ஊடுருவி வாழ்க்கையை மாற்றுகிறது. ஆகவே கிறிஸ்து செல்வரான இளைஞனிடம் உறுதியாக "நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைபிடியும்" என்றார். (மத். 19:17). இயேசு தமது கண்டனப் பொழிவிலும் (மத். 23), மரபை கிளிப்பிள்ளையை போல் அல்லது வெளிவேடக்காரர்களை போல் திரும்பச் சொல்லாமல் அதிகாரமுள்ளவராக போதித்து, மாறாக்கட்டளையைப் புறக்கணித்து, வெளிச்சடங்குகளையும் வெளித்தோற்றத்தையும் ஏன் முதன்மைப் படுத்துகிறீர்கள்? என வினா எழுப்பினார். மரபு என்ற பெயரில் செயல்பட்ட வெளிவேடக்காரரின் அர்த்தமற்ற செயல்பாடுகளை குறித்து சில உண்மைகளை தியானிப்போம்.

### *1. மரபை நிலைநாட்ட நாடியோர் :* (மாற் 7:8, 9)

மரபு (Tradition) என்பது ஒரு சமூகத்தின் எண்ணங்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் போன்றவை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாறாத வடிவில் தொடர்வதும்

கையாளப்படுவதுமாகும். அப்படியே, வெளிவேடக்காரர்கள் மனித மரபுகளை கோட்பாடுகளாகக் கற்பித்தனர் (மாற். 7:7). மட்டுமல்ல, அவர்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வந்தனர் (மாற். 7:8). அத்துடன் பின்பற்றி வந்த அந்த மரபை நிலைநாட்ட தீவிர முயற்சியும் எடுத்தனர் (7:9). ஆகவே தான் மீனவர்களாகிய இயேசுவின் சீடர்கள் கைகளைக் கழுவாமல் உண்ணுதல், சந்தையில் வாங்கிய பொருள்களை கழுவாமல் உண்ணுதல் வழியாக மூதாதையரின் மரபினை மீறிச்செயல்படுகிறார்கள் எனக் கோபமடைந்த வெளிவேடக்காரர் தங்களது மரபை நிலைநாட்ட விளைந்தனர். இவைகளை அடையாளங்கண்ட இயேசு இவைகளெல்லாம் மேலோட்ட மரபுகளே தவிர உண்மையான ஐந்திருநூல் (Torah) பாரம்பரிய கூறுகள் அல்ல என ஆணித்தரமாக கூறினார். மேலும் தேவையற்ற சில சில்லறை மரபுகளுக்கு முக்கியத்துவம் தந்து தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வெளிவேடத்தை இயேசு அம்பலப்படுத்தியதால் வெளிவேடக்காரர்கள் அவர்மீது சினமடைந்தனர். திருச்சபைகளிலும் பொய்யான, போலியான மரபுகளை நிலைநாட்டத் துடிக்கும் நபர்களை குறித்து எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

### 2. மாறாக் கட்டளையைப் புறக்கணித்தோர் :

"உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்துவிட்டார்கள்" (மாற் 7:9).

இயேசு கிறிஸ்து மனித கட்டளைகளடங்கிய வாய்மொழிப் பாரம்பரியத்தை புறக்கணித்து வாழ்வு தரும் கடவுளின் கட்டளையை அதிகமாக அதிகாரத்தோடு வலியுறுத்தினார். காரணம் "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும் ஆனால் கடவுளுடைய வார்த்தைகள் ஒழியவே மாட்டா" (மத். 24:35). ஆம், இப்படி ஆண்டவர் அதிகாரத்தோடு வலியுறுத்திய மாறாக்கட்டளையை வெளிவேடக்காரர்கள் வெகுத்திறமையாக புறக்கணித்தனர். இந்த உண்மையை இயேசு வெளிவேடக்காரரிடம் "நீங்கள் பெற்றுக் கொண்ட மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள்" (மாற். 7:13) என மிக வருத்தத்தோடு கூறினார். கடவுள் இத்தகைய பொல்லாரைக் குறித்து கடுங்கோபங்கொண்டு திருப்பாடலாசிரியர் வழியாக "என் விதிமுறைகளை ஓதுவதற்கு உங்களுக்கு என்ன தகுதி? என் உடன்படிக்கை பற்றிப்பேசுவதற்கு உங்களுக்கு என்ன அருகதை? நீங்களோ ஒழுங்கு முறையை வெறுக்கிறீர்கள்; என் கட்டளைகளைத் தூக்கியெறிந்துவிடுகிறீர்கள்". (திருப்பா 50:16, 17) என வன்மையாய் கண்டித்தார். இவைகளையும் மீறி, நாம் கடவுளுடைய மாறாக்கட்டளைகளை புறக்கணித்தால் எரே. 8:9 தெரியப்படுத்துவது போல வெட்கத்தையும் திகிலையும் அடைய வேண்டியதாகும்.

### 3. மனித நேயமற்றோர் : (மாற் 7:10-12)

அண்மைக்காலத்தில் இங்கிலாந்து இளவரசர் வில்லியம் இங்கிலாந்தில் உள்ள ஆடம்பர விடுதி ஒன்றில் ஒரு வாரகாலமாக மாறுவேடத்தில் தங்கி, வேலை பார்த்து வந்தது தெரியவந்துள்ளது. எப்படியெனில், விடுதியில், ஒரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்த வேளையில் மேடை சிறிதாக இருந்ததால் அதை விரிவுப்படுத்த முடிவு செய்தனர். அதற்காக, மரப்பலகைகள் தேவைப்பட்டபோது, மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு வேலைக்காரனைப்போல இளவரசர் வில்லியமும் மரப்பலகைகளை சுமந்து சென்றார். இச்செயலை கண்டவர்கள் "மாறுவேடத்தில் மனித நேயத்தை வெளிப்படுத்திய இளவரசர் வில்லியம்" எனப் புகழ்ந்தனர் (தினதந்தி 07-11-2014, p. 18). ஆனால் முதல் நூற்றாண்டு வெளிவேடக்காரர்கள் மனித நேயக்கூறுகளை அலட்சியப்படுத்தினார்கள். மனிதத்தை மதிக்காமல் மரபுகளை மதித்து, தங்களை ஒளியின் மக்களாக கருதி ஏனையோரை இருளின் மக்களாக அவமதித்தனர். இயேசு கிறிஸ்து இந்த வெளிவேடகாரர்கள் அடிக்கடி புறக்கணித்த மற்றும் வலியுறுத்த விரும்பாத ஒரு சிறப்பான மனிதநேயச் சட்டத்தை இயேசு மாற்கு 10:10-12-ல் நினைவூட்டுகிறார். ஆனாலும், மனித நேயமற்ற வெளிவேடக்காரர்கள் கபட உள்ளம் கொண்ட சில யூதர்கள் போல தங்கள் பெற்றோரைப் பராமரிக்கும் கடமையிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள தங்கள் சொத்தில் ஒரு பகுதியை "கொர்பான்" என்ற "ஓர் அன்பளிப்பு" (மாற். 7:11) வழியாக கடவுளுக்கு அர்ப்பணமாக்குகிறோம் என்று ஆணையிட்டுத் தங்கள் பெற்றோரை புறக்கணித்து வந்தனர். இப்படி மனித நேயமற்ற செயலை கையாண்டு "உன் தகப்பனையும் உன் தாயையும் மதித்து நட" (விப. 20:12) என்ற கடவுள் தந்த கட்டளைக்கு விரோதமாக செயல்பட்டு வந்தனர். மட்டுமல்லாமல் மனித நேயத்துடன் செயல்பட்டு வந்த இயேசுவுக்கும் விரோதமாக எழுந்தனர் (மாற். 3:1-6). இறைநேயம் இல்லாத மனித நேயம் வேரற்ற மரம், அப்படியே மனித நேயமில்லாத இறை நேயம் கனிகொடா மரம் என்ற உண்மையின் அடிப்படையில் வெளிவேடக்காரர்கள் வேரற்ற மரம் மட்டுமல்ல கனி கொடா மரம் போன்றோரே என்பது தான் உண்மை.

இறைமக்களாகிய நாம் இந்த அருள் காலமாகிய தவக்காலத்தில் மக்களுக்கு வாழ்வுதராத, பயன்தராத, மக்கள் வாழ்வை ஒடுக்குகின்ற மரபுகளை தூக்கி எறிந்து மாறாக் கட்டளையாகிய கடவுளுடைய வார்த்தையை அணிந்து கொண்டு இறைநேயத்துடனும் மனித நேயத்துடன் வாழ முயன்றிடுவோம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**22-02-2015** *உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு*

# தீட்டானவரைத் தொடுதல்

**TOUCHING THE "UNTOUCHABLE"**

2அர 5:1-10 எபி 13 : 8-17
திபா 10:1-12 மத் 8:1-4

**இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு,"நான் விரும்புறேன், உமது நோய் நீங்குக!" என்று சொன்னார்.** மத் 8:3

**இறைவேண்டல் :** ***சமத்துவத்தின் கடவுளே, எங்களை உம் சாயலில் படைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம் மைந்தர் இயேசு கிறிஸ்து தீட்டானவர்கள் என எண்ணப்பட்டவர்களைத் தொட்டு, அங்கீகாரமில்லாதவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து, பேசுவதற்கு தகுதியற்றவர் என்போரிடம் பேசி, விடுதலையின் அனுபவத்தை வழங்கியதற்காக உம்மைப் போற்றுகின்றோம். நாங்கள் பல பிரிவுகளையும், வேற்றுமைகளையும் உருவாக்கி உம் சாயலைச் சிதைத்தோம். ஓரங்கட்டப்பட்டு, வாழ்விழந்த மக்களில் வாழ்வின் முழுமையை நாங்கள் உறுதிச் செய்ய உம் ஆற்றல் தாரும். உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

ஓர் அலுவலகத்தில் உயர் பதவியில் ஆங்கிலேயர் ஒருவரும், அடுத்த பதவியில் நாயுடு இனத்தைச் சேர்ந்த ஒருவரும், ஏவலாளராக பார்ப்பனர் ஒருவரும் பணிச் செய்தனர். நாயுடு இனத்தைச் சேர்ந்த அதிகாரி, தன்னுடைய உயர் அதிகாரியான ஆங்கிலேயரை காலையில் பார்க்கும் போது கைகுலுக்குவார். ஆனால் ஏவலாளரான பார்ப்பனரைப்பார்க்கும் போது தன் தலைப்பாகையை எடுத்துவிட்டு அவரது காலைத்தொட்டு வணங்குவார். இதைக்கவனித்த ஆங்கிலேயர், "உங்கள் மேலதிகாரியான என்னிடம் நீங்கள் கை குலுக்குகிறீர்கள். ஆனால் ஓர் அலுவலக பணியாளரின் காலைத் தொட்டு வணங்குகிறீர்கள். என்ன காரணம்? "என்று கேட்டபோது. நாயுடு இனத்தவர் சொன்னார் "நீங்கள் ஒரு மிலேசர். எனவே, உங்களிடம் கைகுலுக்குவது தவறல்ல. ஆனால் அவரோ கீழ்ப்பதவியில் இருந்தாலும் அவர் உயர் இனத்தைச் சார்ந்தவர். அவரை வணங்குவது எனது கடமை" என்று பதிலளித்தாராம். இதைச் சொன்னவர் கோல்வால்கர் என்னும் பார்ப்பனர்.

இந்திய நாட்டில் வர்ணாசிரமம் தலை தூக்கிய அக் கால கட்டத்தில் ஒரு கூட்ட மக்களை தீட்டானவராகக் கருதினர். அவர் வாழ்வு அடிமைத்தன வாழ்வு போன்று அமைந்திருந்தது. இது நம் நாட்டின்

பின்னணியம் ஆகும்.

தோல் சார்ந்த பலவகைத் தொற்றுநோய்களையும். சாதாரண நோய்களையும் சேர்த்துத் தொழு நோய் என்ற பெயரால் திருமறை அழைக்கிறது. யூதச் சட்டப்படி, தொழுநோய் ஓர் ஒட்டுவாரொட்டி அசுத்தமாகும். அது பிறைரைத் தீண்டாதவாறு தொழுநோயாளிகள் குணமாக்கப்பட்டுச் சடங்கு முறையில் தூய்மைப்படுத்தப்படும் வரை அவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். இச் சடங்கு முறைத் தூய்மைச்சடங்கில் குற்றம் நீக்கும் பலி செய்யப்படவேண்டும் (லேவி. 13-14). தொழுநோய் பாவிகளைத் தாக்கும் கொடிய நோய் என யூதர்கள் நம்பினர். அவர்களை தீட்டாகக் கருதினர். எனவே அவர்கள் காலையில் நடந்துச் சென்றால் தீட்டு அல்லது அசுத்தம் எனக் கூறி அவர்கள் அருகில் பிறர் வராதபடி எச்சரிக்கை செய்ய வேண்டும். இத்தகையச் சூழலில் இயேசுகிறிஸ்து, தீட்டாகக் கருதப்பட்ட தொழுநோயாளியைத் தொட்டு நலமருளினார். அப்படியெனில் அம்மனிதரிடம் இருந்த சிறப்புக்கள் என்ன என ஆய்வோம்.

### *1. இயேசுகிறிஸ்துவிடம் வந்தார் :* (மத். 8:29)

தொழுநோயால் ஒருவர் பாதிக்கப்பட்டார் எனில் , அது அவரது பாவத்தின் பலன், கடவுளின் தண்டனை என்பது யூதர்களின் ஆழமான நம்பிக்கை (இச. 28 : 27,35) எகா. மிரியாம் (எண். 12:10-15). உசியா அரசர் (2 குறிப். 26:19-23).

இவர்களின் வாழ்வு தனிமைபடுத்தப்பட்ட வாழ்வு . இத்தகைய கொடுமைகளை வாழ்வில் சந்திக்க வேண்டும். இப்படி வாழ்வில் இன்னலுற்ற தொழுநோயாளி ஒருவர் இயேசுகிறிஸ்துவிடம் வந்தார். இங்கு அத்தொழுநோயாளியின் துணிவு சிறப்புக்குரியது. மக்கள் வாழும் இடத்தில் வாழும் உரிமையில்லாத சூழலில் சமய சட்டத்தை, கருத்தில் கொள்ளாது, மக்களைக்குறித்தும் அச்சம் கொள்ளாமல் துணிவுடன் இயேசு கிறிஸ்துவிடம் வந்தார். இயேசு கிறிஸ்து மலையிலிருந்து கீழ் இறங்கி வரும்போது பெரும் திரளான மக்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். மக்கள் தன்னைத் தவறாக சொல்லலாம், தடுக்கலாம் என அதைக் குறித்து எண்ணாமல் இயேசு கிறிஸ்துவிடம் சென்றார்.

### *2. இயேசு கிறிஸ்துவைப் பணிந்தார் :* (மத். 8:26)

வாழ்வில் இன்னல்களை சந்தித்து, மக்களால் புறக்கணிக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்த அந்த தொழுநோயாளி இறை வழிபாட்டிலும் சமுதாய வாழ்விலும் பங்கெடுக்காதபடி தடுக்கப்பட்டவர், துணிவுடன்

இயேசுகிறிஸ்துவிடம் வந்து பணிந்தார். மாற்கு நற்செய்தி நூல் ஆசிரியர் சொல்லும் போது (1:40) அவர் முன்பாக முழந்தாளிட்டு தன்னை தாழ்த்தினார் என்கிறார். தலைகுனிந்து பணிந்து அரசருக்கு மரியாதை செய்வதும், கர்த்தரைப் பணிவதும் யூதர்களிடம் இருந்த ஒரு வழக்கம் ஆகும் (1 குறிப். 28:10). இங்கு இம்மனிதரும் தம்மை இயேசுகிறிஸ்துவுக்கு முன் முழுமையாக தாழ்த்தினார்.

ஒரு நாட்டில் கடவுளின் தன்மை கொண்ட விசித்திரமான பறவை ஒன்று இருந்ததாம், அதற்கு "சந்தோஷ பறவை" என்று பெயராம். அந்நாட்டு அரசர் இறந்தால், இப்பறவை வானவெளியிலிருந்து பறந்து வந்து யார் மீது வந்து அமர்கிறதோ அவரை மக்கள் அரசராக்குவார்களாம். அரசர் இறந்து விடவே, செல்வர் அறிவாளிகள் என எல்லோரும் "சந்தோஷ பறவையின்" வருகையை எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் அப்பறவை ஒரு ஏழை அடிமையின் தலையில் அமர்ந்தது. அவரது பணி என்பது தோளில் மத்தளம், இடுப்பில் ஆட்டுத்தோல் உடை, தலையில் தொப்பி அணிந்து, சிறப்பு நாட்களில் இல்லங்களில் ஆடிப்பாடுவது தான். மக்களும் வேறு வழியின்றி அம்மனிதனை அரசராக்கினர். அரசரான அம்மனிதர் தம் அரண்மனை அருகில் ஒரு குடிசை அமைத்து தாம் பயன்படுத்திய மத்தளம், உடை, தொப்பியை அங்கு வைத்தார். மக்கள் 'எதற்கு இப்படிக்கு செய்கிறீர் எனக் கேட்ட பொழுது, "அரசாராகும். முன்பு நான் அடிமையாக இருந்தேன், பிறரை விட நான் உயர்ந்தவர் அல்ல, தேவையில்லாத பெருமையும், ஆணவமும், ஏற்படக்கூடாது. எப்போதும் தாழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை அது நினைவுபடுத்தும் என்றார்.

### *3. இறைவிருப்பத்திற்கு ஒப்புக் கொடுத்தார் :* (மத் 8:26)

மக்களால் தீட்டாக கருதப்பட்ட தொழுநோயாளி இயேசு கிறிஸ்துவை தேடி வந்து, அவர் முன் முழந்தாளிட்டு பணிந்து தம்மை முழுமையாக தாழ்த்தி, நிறைவாக அவரது திருவுளத்திற்கு முழுமையாக தம்மை ஒப்புக்கொடுத்தார். "ஐயா, நீர் விரும்பினால் என் நோயை நீக்க உம்மால் முடியும்" என்றார். முழுமையான நலம் பெற வேண்டும், பிறரைப் போன்று சமுதாயத்தில் முழு உரிமையுடன் வாழ வேண்டும் என்பது அம் மனிதரின் விருப்பம், ஆனாலும் அவர் தம் விருப்பத்தைக் கூறாமல் இயேசு கிறிஸ்துவின் திருவுளத்திற்கு ஒப்படைத்தார்.

இக்கூற்று தொழுநோயாளி இயேசு கிறிஸ்து மீது கொண்ட ஆழ்ந்த பற்றுறுதியில் கூறிய அல்லது வெளியிட்ட அறிக்கை எனலாம். இந்த பற்றுறுதி அறிக்கை இறைமக்களாகிய நமக்கு ஓர் ஆழ்ந்த அறைகூவலைத் தருகிறது. கடவுளின் திருவுளத்திற்கு ஒப்புக் கொடுத்து

மன்றாடக் கற்றுத்தருகிறது. பெற்றோர் பிள்ளைகளின் தேவையை அறிந்து நிறைவேற்றுகின்றனர். அது போன்று நமக்கு பெற்றோராக இருக்கும் கடவுளும் நம் தேவைகளைச் சந்தித்து நம்மை வழி நடத்துவார்.

### *4. இயேசு கிறிஸ்துவின் செயல் :* (மத். 8: 3)

தொட்டால் தீட்டு, அருகில் சென்றால் தீட்டு என்ற அவல நிலையில் வாழ்ந்த மனிதனின் பற்றுறுதியைக் கண்ட இயேசு கிறிஸ்து அத் தொழுநோயாளியைத் தொட்டு நலமருளினார். திருச்சட்டத்தையும் கடந்து இயேசு இங்கு செயல்பட்டார். திருச்சட்டத்தை விட மானிட நேயத்தை முதன்மைப் படுத்தினார், ஆனால் அதே நேரத்தில் திருச்சட்டத்தையும் இயேசு மதித்தார், ஆலய குருவிடம் அவரைக் காட்டி சட்டத்தின் படி நிறைவேற்ற வேண்டிய கடமையை செய்ய அறிவுறுத்தினார்.

தன்னைத் தான் தாழ்த்துகிறவர் உயர்த்தப்படுவர் என்கிற இறைவாசகத்தின் அடிப்படையில் கிறிஸ்து முன் தாழ்த்திய அம்மனிதரை, தொழுநோயாளியை, இயேசு கிறிஸ்து உயர்த்தினார்.

அருள்திரு. S.**அருள் ஜெபசிங்**

# விலக்கப்பட வேண்டிய விலங்கியல்புகள்

**ANIMAL ATTITUDES TO BE AVOIDED**

**"காட்டில் வாழ்வன... ஆகிய எல்லா உயிரினங்களையும் மனிதர் அடக்கி விடலாம்; அடக்கியும் உள்ளனர்."** யாக் 3:7

மனிதன் ஒரு சமூக விலங்கு என்றார் அரிஸ்டாட்டில். அதனால்தான் என்னவோ இன்றைய மனிதர்களின் இயல்புகள் விலங்கியல்புகளைக் காட்டிலும் விசனத்திற்குரியதாய் இருக்கின்றன. பொதுவாக விலங்குகளின் நடத்தைகளை விவரிக்க, உள்ளறிவு (Instinct) பட்டறிவு (Experience) ஆகிய இரு அணுகுமுறைகள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு அறிவாற்றல்களும் மனிதரைப் போல கூர்மையாக இல்லாவிட்டாலும் அவை விலங்குகளுக்கும் இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். விலங்கு உட்பட எல்லா உயிரினங்களைக் காட்டிலும் கடவுளின் பார்வையில் மேன்மைமிக்கப் படைப்பு மானிடமாகும். அத்தகைய மானிடப் படைப்பு அதன் சிறப்பியல்புகளை இழந்து நிற்பதும் தீமையான விலங்கியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதும் வருந்தத்தக்கதே.

விலங்குகளிடம் நாம் நல்ல பண்புகளையும் தீய இயல்புகளையும் காணமுடியும். புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் லார்ட் பைரன் அன்போடும் செல்லமாகவும் ஒரு நாயை வளர்த்து வந்தார். அது இறந்தபோது அதன் இழப்பைத் தாங்க இயலாமல் தவித்தார். அந்த நாயின் கல்லறையில் பின்வருமாறு எழுதி வைத்தார்.

கர்வம் இல்லாத அழகு
முரட்டுத்தனம் இல்லாத பலம்
குரூரம் இல்லாத வீரம் இவற்றோடு
மனிதனின் அத்தனை பலங்களும் பெற்று
மனிதனின் எந்த ஒரு பலவீனமும் இல்லாத ஜீவன்

ஆகவே தான், யோபுவின் நூலில், விலங்கிடம் வினவுக அது உமக்குக் கற்றுக்கொடுக்கும் (யோபு 12 : 7) எனப் படிக்கின்றோம். இன்று மனிதனால் அடக்கப்பட வேண்டிய விலங்குகளின் சுபாவங்கள் மனிதனை ஆட்கொண்டுவிட்டன. ஆகவே விலங்குகளின் வாயிலாக நம்மில் குடிகொண்டுள்ள தீய இயல்புகளைக் களையவும், நற்பண்புகளை நமதாக்கவும் இவ்வாண்டு தவக்காலப் புதன் தியானங்கள் வழியாக கடவுள் நம்மை அழைக்கிறார்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

# நயவஞ்சகமுள்ள நரி

## SLYEST FOX

திருமறைப்பாடம்: லூக் 13:31-33

**"... மூன்றாம் நாளில் என் பணி நிறைவு பெறும் என நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்."** லூக் 13:33

ஜப்பானிய ஹைக்கூ கவிஞர்களில் முதன்மையானவர் பாஷோ (Basho). அவரைப் பற்றிய Basho and the Fox என்ற புத்தகம் வெளிவந்துள்ளது. அவரது கவித்துவமான வாழ்வை அப்புத்தகம் சித்தரிக்கிறது.

பாஷோ ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரில் இயற்கையோடு இணைந்தவாறு மரங்களைக் கரையோரமாகக் கொண்ட ஆற்றங்கரையில் சிறு குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார். அவரது குடிசையின் அருகில் ஒரு செர்ரி மரம் நின்றது. இம்மரத்தடியே அவருக்கு எல்லாமுமாயிற்று. அதன் பழங்கள் மிகவும் சுவையானவை. ஆனால் அப்பழங்கள் தராளாமாக அவருக்குக் கிடைக்காவண்ணம் ஒரு நரி பார்த்துக் கொண்டது. காத்திருந்து, காத்திருந்து ஏமாற்றமடைந்த பாஷோ ஒருநாள் மறைந்திருந்து செர்ரி பழங்களைத் திருட வரும் நரியைத் தடியால் அடித்துத் துரத்தினார். நரி, பாஷோவிடம் சொன்னது, நீங்கள் செய்வது நியாயமல்ல. நீ திருட்டுத்தனமாக செர்ரிப் பழங்களைத் தின்பது மட்டும் நியாயமா? எனத் திருப்பிக்கேட்டார் பாஷோ.

தவறுதான். ஆனால் செர்ரிப் பழங்கள் மிகவும் சுவையாக உள்ளன. ஆகவே தான் இப்படித் திருடுவதற்கு அதன் சுவை என்னைத் தூண்டுகிறது. ஒன்று செய்வோம், நான் உங்களுக்கு மூன்று வாய்ப்புகள் தருகிறேன். அவைகளில் நீங்கள் மூன்று ஹைக்கூ கவிதைகள் சொல்ல வேண்டும். அது எனக்கு மிகவும் பிடித்துப் போன உன்னதமான கவிதையாக இருந்தால் இனி என்னாலோ அல்லது என் இனத்தாலோ உங்கள் செர்ரிப் பழங்களுக்கு எவ்வித சேதாரமும் ஏற்படாது. அதே நேரம் எனக்கு அக்கவிதைகள் பிடிக்கவில்லையெனில் நீங்கள் செர்ரிப் பழங்களை ஒருபோதும் உரிமை கொண்டாடக் கூடாது என்று கவிஞரை சவாலுக்கு அழைத்தது நரி. கவிஞர் தான் கவிதை புனைவதில் கை தேர்ந்தவராயிற்றே. சவாலுக்கு ஒத்துக்கொண்டார்.

பிறிதொரு நாளில் கவிஞர் பாஷோவும் நரியும் சந்தித்தனர். பாஷோ முதல் கவிதையைச் சொன்னார். நரி இவ்வளவுதானா என்பது போல அமைதியாக இருந்து விட்டுப் பின்னர் சொன்னது. இந்தக் கவிதையில் அப்படி ஒன்றும் சிறப்பு இல்லை என்றது. இரண்டாவது கவிதையை பாஷோ கூறினார். அதைக் கேட்டதும், பரவாயில்லை, இருப்பினும் உன்னதமானதாக இக்கவிதை இல்லை என்றது. மூன்றாம் கவிதையைச் சொன்னார், அவ்வளவுதான், அற்புதம் என்ற நரி உன்னதமான கவிதை நான் உங்களிடம் தோற்றுப் போய்விட்டேன். இனி உங்கள் செர்ரிப் பழங்களைத் தொடமாட்டேன் என்று கூறி அங்கிருந்து கடந்து சென்றது.

நரியை வீழ்த்திய அந்தக் கவிதையில் அப்படி என்னதானிருந்தது? வேறொன்றுமில்லை அக்கவிதையில் நரி ஒரு பாத்திரமாகியிருந்தது. நரியைப் பற்றியும் நரியின் அகத்தைப் பற்றியும் தான் அக்கவிதை சுட்டிக்காட்டியது. தன் தந்திரத்தை, வஞ்சகத்தை கவிஞர் கவிதை வாயிலாக வெளிப்படுத்தி விட்டார் என்பதை நரி உணர்ந்து கொண்டது.

உலகில் தந்திரத்தின் உருவமாகவும் வஞ்சகத்தின் வடிவமாகவும் விளங்கும் விலங்கு நரியாகும். ஆகவே தான் நரி அனைவராலும் பரிகசிப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளாக்கப்படுகிறது. திருமறையில் நரியானது அடையாளமாகவும் (Sign) உருவகமாகவும் (Metaphor) பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக். 13 : 32 -இல் உம்மை ஏரோது கொன்று போடுவான் ஆகவே இங்கிருந்து போய்விடும் என்று சொன்ன பரிசேயரிடம், இயேசு “நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்” என்று ஏரோது அந்திப்பாசுவை நரியாக உருவகப்படுத்திக் கூறியுள்ளார். அது ஏன்? என்பதைத் தியானிப்போம்.

### *1. வஞ்சகமுள்ள நரி :*

ஒருவரை நம்பச் செய்து, தீங்கு விளைவித்து பயன் அடைய முற்படும் தந்திரமே வஞ்சகமாகும். ஏறக்குறைய எல்லா இலக்கியங்களிலும் நரி வஞ்சகத்திற்கும் தந்திரத்திற்கும் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் பணி நாள்களில் கலிலேயாவில் அதிகாரம் செலுத்தி வந்த ஏரோது அந்திப்பாசு நரியைப் போன்றே வஞ்சகமும் கபடும் உடையவராகக் காணப்பட்டார்.

*ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியைத் தனது மனைவியாக்கிக் கொண்டான் (மாற். 6 : 17)

* சிற்றின்பங்களில் சிக்கிய இவனது ஒழுக்கங்கெட்ட வாழ்வைக் கண்டித்த திருமுழுக்கு யோவானை ஏரோதியாவின் சூழ்ச்சிக்கு இணங்கி சிரச்சேதம் செய்தான் (மாற். 6 : 17-28).

* திருமுழுக்கு யோவானைக் கொன்றது ஏரோதுவுக்கு வருத்தத்தை அளித்தாலும், கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்ட ஏரோது கலக்கம் அடைந்தான் (லூக். 9 : 7-9). ஆனால் கலக்கமும் பயமும் கொண்ட அவன் மனமாற்றத்தை விரும்பாமல் கிறிஸ்துவையும் அழித்துவிட வேண்டும் என வஞ்சகமாகச் சூழ்ச்சி செய்தான் (லூக். 13 : 31, 23 : 8-12).

ஏரோது அந்திப்பாசுவின் இந்த வஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் புரிந்து கொண்டவராக நம் ஆண்டவர் ஏரோதுவை நரி என அழைக்கின்றார்.

திருமறை வஞ்சகனை, மழையில்லாத மேகத்துக்கும், காற்றுக்கும் ஒப்பானவன்; அவனால் பயனொன்றுமில்லை என்கிறது.

நரியின் ஒரு குணம் என்னவென்றால் விலங்குகளைத் தந்திரமாக அழைத்துச்சென்று தன் மாயவலையில் அவைகளை வீழ்த்திக்கொன்று உண்ணும்.

கொலோசே திருச்சபையிலும் விசுவாசிகளுக்கு எதிரான நரித்தனங்கள் காணப்பட்டன. அப்படிப்பட்ட மாயமான தந்திரங்களுக்கு கொள்ளையாகிவிடக்கூடாது என்பதே பவுலாரின் போதனையாகும் (கொலோ 2 : 8).

ஏரோதுவின் வஞ்சகமான நரித்தனங்களையும், தந்திரங்களையும் ஆண்டவரோடிருந்து கண்ட தூய பேதுரு சொல்கிறார், ஆண்டவர் எத்துணை இனியவர் என்பதைச் சுவைத்தவர்கள் வஞ்சகத்திற்கு தங்கள் வாழ்வில் இடம் தரமாட்டார்கள் என்கிறார் (I பேது. 2 : 1-2).

வஞ்சகத்தை ஒருபோதும் மறைத்து வைக்க முடியாது. அது நிச்சயமாக அம்பலமாகிவிடும் (நீதி 26 : 26) என்பதற்கு ஏரோதுவும் வரலாற்றில் சான்றாக விளங்குகிறார்.

ஆட்சியதிகாரத்தில் தனது எல்லையை வஞ்சகமாகவும் தந்திரமாகவும் விரிவுப்படுத்த முனைந்த ஏரோதுவின் நரித்தனத்தை

அறிந்த உரோமைப் பேரரசன் கலிகுலா இவன் வஞ்சகத்தை அம்பலப்படுத்தி கி.பி. 39 -இல் கால் (Gaul) (தற்போது பிரான்சில் உள்ளது) என்னுமிடத்திற்கு ஏரோதுவை நாடு கடத்தினான்.

### *2. நாசம் செய்யும் நரி :*

நீத 15 : 1-5 வரையுள்ள பகுதியில் மனைவியின் தந்தையால் துரோகம் இழைக்கப்பட்ட சிம்சோன், அதற்கு பழிவாங்கும் வண்ணம் 300 நரிகளைப் பிடித்து அதன் வால்களில் தீப்பந்தங்களைக் கட்டி பெலிஸ்தியரின் வேளாண்மைக்குள் அனுப்பினார். நரிகள் பயிர்களை நாசம் செய்தன.

பாபிலோனியச் சிறையிருப்பையும் எருசலேம் தீக்கிரையாக்கப்பட்டதையும் கண்ட எரேமியா புலம்பி அழுதார். அப்புலம்பலில் “சீயோன் மலை பாழடைந்து கிடக்கின்றது; நரிகள் அங்கே நடமாடுகின்றன'' என்கிறார் (புல. 5 : 18). இயேசு கிறிஸ்துவும், கலிலேயாவிலும் எருசலேமிலும் ஏரோதுவின் நடமாட்டத்தையும் இப்பொருளில் புரிந்துகொண்டு ஏரோதுவை நரி என்றிருக்கக்கூடும் என்றும் சில அறிஞர்கள் வாதிடுகின்றனர்.

இனிமைமிகு பாடல் 2 : 15 -இன் படி திராட்சைத் தோட்டமாகிய திருச்சபையில் உறவுக் கேட்டையும், ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தி நாசம் செய்ய முயல்வோரையும், இறையன்பிலே நாம் திளைப்பதற்குத் தடையாய் இருப்போரையும் “நரிகள்” எனப் புரிந்துகொள்வது சிறப்பானது.

இப்படியாக, நமக்கு உள்ளேயும், நம்மைச் சுற்றியும் இருக்கின்ற, அழிவை ஏற்படுத்தக் கூடிய வஞ்சகத்தையும் தந்திரங்களையும் அடையாளங்கண்டு அவைகளை முற்றிலுமாக நம்மை விட்டகற்றுவோம்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

**27-02-2015** ***தவக்கால இரண்டாம் வெள்ளி***

# போற்றுதலா? தூற்றுதலா?

## PRAISING? OR DEFAMING?

திருமறைப்பாடம் : மத் 15:7-13

**"...இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் இருக்கிறது"**
**மத் 15:8**

2014-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தியதி நமது மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் தான் "தூய்மை இந்தியா" (Swachh Bharat or Clean India). இத்திட்டத்தின் வழியாக 2019-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிக்குள் 'தூய்மையான இந்தியா' உருவாக மக்கள் இணைந்து கொண்டு பட்டணங்களிலும், கிராமங்களிலும் காணப்படும் சுகாதார கேடுகளை அகற்ற முயற்சிசெய்கிறார்கள். அதுபோலவே, இறைவன் இவ்வாண்டிலும் நமக்கு தந்திருக்கும் தவக்காலத்தில் நமது வெளிவேடத்தை களைந்து தூய்மையாவதை அவர் விரும்புகிறார் அல்லது எதிர்பார்க்கிறார் என உணர்ந்து அகத்தூய்மை மற்றும் புறத்தூய்மை ஆகியவற்றிற்கு முதன்மையளித்து, நமது உதட்டிலும் உள்ளத்திலும் ஒருங்கிணைவு ஏற்பட தீவிரமாய் செயல்படுவது சிறப்பானதாகும்.

பொதுவாக, உலகில் ஒவ்வொன்றுக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளதுபோல, மனித நிலையிலும் இரண்டு பக்கங்கள் உண்டு. அவைகள்: அகம் மற்றும் புறம் ஆகும். இந்த அகமும் புறமும் ஒன்றுபோல் இருக்க வேண்டும் என்பதுதான் முறைமை. ஆனால், அகத்தொன்று வைத்துக்கொண்டு புறத்தொன்று பேசுவது வெகுவாய் வளரும் தன்மையாயிருக்கிறது. வெளிவேடக்காரரும் அகத்தூய்மையைவிட புறத்தூய்மைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். ஆகவே, இயேசு கிறிஸ்து இம்மக்கள் உதட்டினால் என்னை போற்றுகின்றனர்; இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுத்தொலைவில் இருக்கிறது (மத். 15:8) என்று ஏசாயா இறைவாக்குரைத்திருப்பதை வெளிவேடக்காரரிடம் சுட்டிக்காட்டினார். சமுதாயத்தில் உதட்டின் வார்த்தைகளையும் உள்ளத்தின் எண்ணங்களையும் தூய்மையாகக் காத்து கொள்ளவேண்டியவர்களின் வாழ்வின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது என்பதை வெளிவேடக்காரர்களின் வாழ்வை மையப்படுத்தி தியானிப்போம்.

### *1. உதட்டினால் போற்றுவோர் :* (மத். 15:8a)

எண்ணங்கள் அணியும் ஆடையே வார்த்தை எனலாம். உள்மனதில் கருவாகி, எண்ணத்தில் உருப்பெற்று, வாயால் வெளிப்படுத்தப்படும் வார்த்தை ஒரு வல்லமை மிகு சக்தி. புற ஒழுக்கமே ஒழுக்கத்தின் அளவுகோல் என்ற சிந்தனையுடைய வெளிவேடக்காரரின் உள்மனதில் கருவாகி, எண்ணத்தில் உருப்பெற்று, உதட்டில் வெளிப்பட்ட வார்த்தைகள் வஞ்சபுகழ்ச்சியாயிருந்தன. எனவே, "இம்மக்கள் உதட்டினால் என்னை போற்றுகின்றனர்" (எசா 29:13) என்று கடவுள் ஏசாயா இறைவாக்கினர் வழியாக வெளிபடுத்திய குற்றச்சாட்டையே இயேசு கிறிஸ்து வெளிவேடக்காரரைக் குறித்து முன்வைக்கிறார். மேலும், "உங்கள் வாய் உரைப்பது தீமையே, உங்கள் நா புனைவதும் பொய்ம்மையே" எனக் கடவுள் தம் மக்களைக்குறித்து வெட்கத்தோடும், மிக வருத்தத்தோடும் திருப்பாடலாசிரியர் வழியாக (திபா 50:19) இஸ்ரயேலரை உணர்த்துகிறார். ஆட்டுத்தோலைப் போர்த்தி கொண்டு ஆடுகளுக்கு நல்ல மேய்ப்பர்கள் போலவே கபடநாடகமாடி, ஆண்டவரைப் புகழ்வது போல நடித்து இகழ்ச்சியை ஏற்படுத்திவந்தனர் இந்த வெளிவேடக்காரர்கள். இவர்களது உதடுகள் இதற்கு பக்குவப்பட்டும் இருந்தது. மிக அண்மையில் போப் திருத்தந்தை பிரான்சிஸ் உலக கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனை கூறியபோது, "கிறிஸ்தவர்களின் மொழி 'ஆம்' என்றால் 'ஆம்' என்றும், 'இல்லை' என்றால் 'இல்லை' என்றும் இருக்க வேண்டும். ஏனெனில், ஊழலின் மொழி வெளிவேடமாகும்" என்றார். இந்நாட்களில் நாம் எச்சரிப்படைந்து, நமது உதட்டில் வெளிப்படும் வார்த்தையில் இருபரிமாணங்கள் (i.e., போற்றும், தூற்றும்) உண்டு என்பதை உணர்ந்து நமது உதட்டின் வார்த்தைகளை, கண்ணாடியைக் கையாளுவது போல கவனமுடன் கையாள வேண்டும். அதே வேளையில் இப்படி உதட்டினால் போற்றுவோரைக் குறித்து தூய பவுல் 2 கொரி 6:8-ல் எடுத்துரைக்கும் போது, "போற்றுவோர் போற்றலும் தூற்றுவோர் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல, எங்களை பாதிப்பதில்லை" என்ற உறுதியுடன் அவர்களது இலட்சியமாகிய ஒப்புரவு திருப்பணியைத் தொடர்ந்தனர். அப்படியே, வஞ்சபுகழ்ச்சியோடு செயல்பட்ட வெளிவேடக்காரர் தம்மை சுற்றிலுமிருந்தபோதும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியாயிருந்தார்.

### 2. உள்ளத்தால் தூற்றுவோர் :

இறைவிருப்பத்தை திருப்பாடலாசிரியர் திபா 51:6-ல் கூறும் போது "இதோ, நீர் விரும்புவது உள்ளத்து உண்மையே" என்கிறார். ஆனால் வெளிவேடக்காரர்களின் உள்ளத்தில் கடவுள் விரும்புகிற உண்மை இல்லை. எனவே, இயேசுகிறிஸ்து தமது கண்டனப்பொழிவில், வெளிவேடக்காரர்களைப் பார்த்து, "நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள், ஆனால், உள்ளயோ போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள்" (மத். 23:28) என அவர்களிடமே அவர்கள் உள்ளம் அழுக்கடைந்திருக்கிறது என்று துணிவுடன் கூறினார். மத். 12-ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனையை உற்று கவனிக்கும் போது, இறையருள் உள்ளத்திலே இருக்குமானால் இனிய சொற்களும், செயல்களும் வெளிப்படும், காரணம், "உள்ளமே வேர்" (Heart is Root) (12:33); அதுபோல, கெட்டுப்போன சுனையிலிருந்து கெட்டுப்போன நீர்கிடைப்பது போல கெட்டுப்போன உள்ளத்திலிருந்து கெட்டுப்போன எண்ணங்களே வெளிப்படும், காரணம், "உள்ளமே ஊற்று" (Heart is Fountain) (12:34). மேலும், நல்லவரின் உள்ளம் நல்ல கருவூலமாக இருப்பதால் நல்வார்த்தைகளையும், தீயவரின் உள்ளம் தீய கருவூலமாக மாறுவதால் தீய வார்த்தைகளையும் வெளிப்படுத்தும், காரணம், "உள்ளமே கருவூலம்" (Heart is Treasury) (12:35) எனப் புரிந்து கொள்ளலாம். ஆம்! வெளிவேடக்காரரின் உள்ளம் இறையருளற்று, கெட்டுபோன சுனையாக, தீய கருவூலமாக கடவுளுக்குத் தூரமாகவே இருந்து, கடவுளின் திருப்பெயருக்கு இழிவையும் ஏற்படுத்துகிறது. இப்படி "இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது" என (மத். 15:8) இயேசு கிறிஸ்து வேதனைப்படுகிறார். மாற். 7:15-ல் இயேசு கிறிஸ்து கூறும் "உள்ளே - வெளியே" கோட்பாட்டின்படி வெளிவேடக்காரர்களின் உள்ளம் தீட்டுப்பட்டு இருந்தது. அந்த உள்ளத்தின் வெளிப்பாடு கடவுளின் திருப்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியது. உள்ளத்தைத் தூய்மையாய் காத்துக்கொள்ள கடவுளின் வார்த்தை கூறும் ஆலோசனைகளை ஏற்று நடப்போம்.

### 3. உண்மையற்றதைக் கற்பிப்போர் :

போலித்தனங்கள் மலிந்துவிட்டது, எப்படியெனில், உடலில் போலித்தனம், உடையில் போலித்தனம், உதட்டில் போலித்தனம், அழகில் போலித்தனம், மொழியில் போலித்தனம், கலாச்சாரத்தில் போலித்தனம், வியாபாரத்தில் போலித்தனம், ஏன், பக்தியிலும் போலித்தனம். இத்தகைய போலித்தனங்கள் உண்மை நிலையை மறைத்துவிடுவது போல

வெளிவேடக்காரரின் போலிவாழ்வு சமுதாயத்திற்கு உண்மையற்றதை கற்பித்துக் கொடுத்தது. சூரியனை மறைக்கும் 'மேகம்' போன்ற 'போலிவாழ்வு' கலைந்துவிட்டால், சூரியனாகிய 'உண்மை' கதிர் வீசும். போலிவாழ்வு வாழ்ந்து வந்த வெளிவேடக்காரர்கள் கடவுளின் கட்டளையின் உண்மையை மக்களுக்குக் கற்பிக்காமல், மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பித்து வந்தனர்(மத். 15:9). இவர்களுக்கு வாழ்வு தரும் வார்த்தையாகிய ஆண்டவர் இயேசுவின் வார்த்தை மனவேதனையைத் தந்தது (மத். 15:12). அவர்களது உள்ளம் ஆண்டவருக்கு வெகுதொலைவில் இருந்தபடியால் உண்மையற்றதைக் கற்பித்துள்ளனர். பொதுவாக, வெண்ணை தீயின் அருகில் இருந்தால் அது எளிதில் உருகும். ஆனால், அது குளிர்பதன பெட்டிக்குள் வைக்கப்பட்டால் ஒரு பாறையைபோல் மாறிவிடும். அப்படியே, ஆண்டவருக்கு வெகுதொலைவிலிருந்த இந்த வெளிவேடக்காரரின் உள்ளம் போலித்தனத்தினால் நிறைந்து கற்பாறை போல் இருந்தது. இவைகளால் நாமும் எச்சரிப்படைந்து, ''பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கிறார், உண்மையாய் நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கிறார்'' (நீதி. 12:22) என்பதையும் மனதில்கொண்டு முன்செல்வோம்.

டாக்டர் அப்துல்கலாம் ''ஒரு மனித உள்ளத்தின் நல்லொழுக்கமே உலக அமைதிக்கு வித்திடும்'' என்பதை ஓர் உரையில் குறிப்பிடும்போது,

''மனதில் நல்லொழுக்கம் இருந்தால், நடத்தையில் அழகு மிளிரும்;
நடத்தையில் அழகு மிளிர்ந்தால், குடும்பத்தில் சாந்தி நிலவும்;
குடும்பத்தில் சாந்தி இருந்தால், நாட்டில் சீர்முறை உயரும்;
நாட்டில் சீர்முறை இருந்தால், உலகில் அமைதி நிலவும்''

எனக் குறிப்பிட்டார்.

எட்டிக்காய் பார்ப்பதற்கு அழகான தோற்றம் உடையது. ஆனால், ருசித்து பார்த்தால் அவ்வளவு கசப்பு. அதுபோலவே, வெளிவேடக்காரர் உதட்டில் தேனொழுகும் வார்த்தைகளுடனும் உள்ளத்தில் தூய்மையற்ற சிந்தனைகளுடனும் காணப்பட்டனர். நாம் அவர்களைப்போல வாழாதபடி நம் வாழ்வைச் சீர்படுத்தி உண்மையை வெளிப்படுத்தும் ஊடகங்களாக மாறுவோம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

# துன்பத்தைக் கண்டு கலங்காதீர்கள்

திருமறைப்பாடம் : 1பேது 1:1-9

**"இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகை சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், அந்நாளிலே பேருவகை கொள்வீர்கள்" 1 பேது 1:6**

கிராமப்புற விளையாட்டுகளில் ஒன்று வழுக்குமரம் ஏறுதல். இவ்விளையாட்டில் வழுக்குமரம் முழுவதும் எண்ணையால் பூசப்பட்டு மரத்தின் உச்சியில் பணமுடிச்சோ அல்லது விலை உயர்ந்த பொருள்களையோ தொங்கவிட்டிருப்பர். போட்டியில் பங்குபெறுபவர்கள் எண்ணெய் ஊற்றப்பட்ட மரத்தில் எண்ணையையும் பொருட்படுத்தாது நம்பிக்கையோடு மீண்டும் மீண்டும் முயற்சித்து வெற்றி பெறுவார்கள். இதில் வெற்றியைப் பெறுபவர்கள் உடனடியாக வழுக்கு மரத்தில் ஏறி வெற்றியைப் பெற முடியாது. பலமுறை கடினப்பட்டு கீழே விழுந்து, விழுந்து தான் மேலே ஏற முடியும். ஆக, கொஞ்ச நேரம் கடினம், பின்பு மாட்சி. இதைத் தான் இன்றைய தியான வசனமும் கூறுகின்றது. எப்பொழுது பார்த்தாலும் நமக்குள்ளே ஒரு புலம்பல் துன்பம், துன்பம், துன்பம் யாருக்குத் தான் துன்பமில்லை. உயிரனங்களில் சிறியதான எறும்பு தன்னைவிட 50 மடங்கு அதிகமான பொருளைச் சோர்வின்றிச் சுமக்கிறது. ஆனால் நாமோ சிறு துன்பம் என்றாலும் துவண்டு போய்விடுகிறோம். மோசேக்கு 40 ஆண்டுகால வனாந்தரத்திற்குப் பிறகு தலைமைத்துவப் பொறுப்பு கிடைக்கிறது. யோசேப்பு 13 ஆண்டுகால சிறைவாழ்வுக்குப் பின் தான் எகிப்தின் அதிபதியாக மாறுகிறார். நம் இயேசுகிறிஸ்துவும் சிலுவைப் பாடுகளுக்குப் பின்பு தான் மாட்சிமை அடைகின்றார். சோதனை என்பது சிறிது தான் (1பேது. 1:6) எனவே சோதனைகளைக் கண்டு துவளவேண்டாம்.

எதற்கு நமக்கு துன்பங்கள்

### *1. துன்பங்கள் கற்றுக் கொள்வதற்கே :* (உரோ. 5: 3,4)

துன்பம் வந்திருக்கிறது என்றால் நாம் நடந்து செல்ல வேண்டிய பாதையை விட்டு விலகி செல்கிறோம் என்பது உண்மை. எனவே துன்பம் வந்தவுடன் அமைதியுடன் அமர்ந்து வாழ்வைத் திருப்பிப் பார்ப்பது நல்லது. அது ஒரு சிறந்த eye opener. கண்களைத் திறந்து பார்க்க உதவும் சிறந்த கருவி. கடவுள் தரும் தண்டனை என்று எடுப்பது சரியான மனநிலை

அல்ல. வெள்ளி, தங்கம் இவை நெருப்பில் இடும்போதுதான் அவை சுத்தமாகின்றன. ஆம் துன்பம் மிகச் சிறந்த ஆசிரியர். எனவே பவுலடியார் துன்பத்தில் மேன்மை பாராட்டுவதாகவும் ( 5:4) அத்துன்பத்தின் வழியில் பொறுமையைக் கற்றுக் கொண்டதாகவும் ( 5:3) குறிப்பிடுகின்றார். கூர்ந்து கவனித்தால் துன்பம் பல பாடங்களை நமக்குத் தருவதை புரியலாம் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக்கூடாது . யார் நல்லவர்? யார் கெட்டவர்? எனப் பல அனுபவங்களைக் கற்றுக் கொள்கிறோம். தாவீதும் தான் துன்பப்பட்டது நல்லது (சங். 119:71) என்கிறார். அதனால் தான் விதிமுறைகளைக் கற்றுக் கொண்டேன் என இக்கருத்தை உறுதிப்படுத்துவார். எனவே நமக்கு வரும் துன்பத்தைக் கண்டு பின் வாங்க வேண்டாம். துன்பத்தில் ஒரு செய்தி இருக்கும். அதைப் புரிந்துகொள்ளுங்கள் . லின்டோ என்ற இளம்பெண் நச்சுத்தன்மையினால் பாதிக்கப்பட்டு 5 வருடங்கள் தனி சிகிச்சைப் பிரிவில் இருந்தாள். அந்த 5 வருடங்களில் அவள் பட்ட துன்பங்களுக்கு அளவே கிடையாது. அவளின் 5 வருட போராட்டம் பிற்காலத்தில் அவள் குணமான பின்பு ஊனமுற்றோருக்கு உதவுவதில் கவனம் செலுத்த அவளைத் தூண்டியது. நமக்கு துன்பங்கள் கற்றுத் தந்து கொண்டேயிருக்கின்றன. அத்துன்பங்கள் நமது ஆளுமையை உயர்த்துகிறது. போராட்ட மன நிலையை உள்வாங்கச் செய்கிறது.

### *2. துன்பங்கள் ஆண்டவர் நம்மோடு என அறிவதற்கே:*

**(திப. 9:5)**

இறையடியவர் ஒருவரை , கடவுள் மறுப்பாளர்கள் சித்ரவதை செய்து வேதனைப்படுத்தினார்கள். அப்பொழுது இறையடியாரிடம் , நீ கஷ்டப்படும் போது உன் கடவுள் எங்கே போனார் எனக் கேட்டார்கள். அதற்கு இறையடியார் கடவுள் வேறு எங்கும் போக வில்லை. நான் கஷ்டப்படும் போது என்னோடு சேர்ந்து அவரும் கஷ்டப்பட்டார் எனத் தமது விசுவாசத்தைப் பதித்தார். ஆம் உண்மைதான் நாம் துன்பப்படும் போது இறைவன் நம்மோடு சேர்ந்து துன்பப்படுகிறார். சவுல் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்த காலத்தில் சவுலிடம் பேசின இறைவன் "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று துன்பப்பட்டவர்களின் சார்பாய் குரல் எழுப்புகிறார். மோசேயின் காலத்திலும் மோசேயை அழைக்கின்றபோது எரிகிற முட்செடி வழியாக அழைக்கின்றார். அந்தக் காட்சி சொல்லும் உண்மை, மரம் - இஸ்ரவேலர்கள் , நெருப்பு - அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அந்த நெருப்பிலும் மரம் கரியவில்லை. அதைப்போன்று துன்பத்தில்

இஸ்ரவேலர்கள் அழியவில்லை. காரணம், நெருப்பில் ஆண்டவர் இருந்தது போல் இஸ்ரவேலர்கள் அனுபவிக்கும் துன்பத்தில் ஆண்டவரும் உடன் இருந்தார். எனவே சில துன்பங்கள் ஆண்டவர் நம்மோடு எவ்வளவு நெருக்கமாய் அன்பாய் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு, இரவிந்தரநாத் தாகூர் தேசிய கீதம் எழுதி நோபல் பரிசு பெற்றவர். ஆனால் குடும்ப வாழ்க்கையில் மனைவி இரண்டு குழந்தைகளை இழந்து 40 வயதுக்குள் தனிமையானார். அப்பொழுது ஒரு கல்லூரி விழாவில் ஒரு மாணவன் இப்போது தனிமையாக இருக்கிறீர்கள், எப்படி வாழ்வீர்கள் என்று கேட்டார், பண்பட்ட தாகூரின் இதயத்தில் இருந்து, நான் தனிமையாய் இருக்கிறேன் என யார் சொன்னது (அமைதி) என் ஆண்டவர் என்னோடு, நான் தனிமையல்ல. துன்பப்பட்டவர் துன்பத்தை கடவுள் அற்பமாய் எண்ணுவதில்லை. நம் கஷ்டத்திலும் நம் ஆண்டவர் துன்பத்திலும் பணியாளராய் நம் கூடவே இருக்கிறார்.

### *3. துன்பங்கள் நம்மை விலையுயர்ந்த பாண்டமாய் மாற்றுவதற்கே :* **(1பேது. 1:6,7)**

சிறிது கால துன்பத்தின் நிறைவு மகிமையில் முடியும். ஜீவ கிரீடத்தைப் (திவெ. 2:10) பெற்றுத்தரும். கூட்டுப்புழு நெருக்கப்பட்டால் தான் அழகான வண்ணத்து பூச்சியாய் பறக்க முடியும். யோபு நோயை அனுபவித்த பின் ஆசிநிறைந்த வாழ்வைப் பெற்றார். துன்பத்தைக் குறித்து பதற்றம் அடைய வேண்டாம். ஒரு குயவன் பானைகளை வனைந்து தீயில் சுட்டபோது ஒரு பானை மட்டும் ஐயோ வேண்டாம் எனக்கு “தீ” என்ற துன்பம் வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டது. சந்தைக்குப் போகும் போது சுடப்படாத பானையும் சேர்ந்து சந்தைக்குச் சென்றது. வாங்க வந்தவர்கள் எல்லாவற்றையும் தட்டிப் பார்த்து சுடப்பட்ட எல்லா பானைகளையும் வாங்கிச் சென்றனர். கடைசியில் சுடப்படாத இந்தப் பானை மட்டும் மீதி. குயவனும் அந்தப் பானையைச் சந்தையிலே விட்டு வந்தான். அது அன்று பெய்த மழையிலே கரைந்து போனது. துன்பங்கள் தன்னை தரமுள்ளதாய் மாற்றுகிறது என்பதை அப்பொழுது தான் உணர்ந்தது. துன்பங்கள் நம்மை உயர்த்தும்.

ஆலயம் செல்லும் நாம் நமது ஆலயத்துக்கு துன்பத்தைச் சுமந்து வந்துள்ளோம். ஆனால், ஆலயத்தை விட்டு செல்லும் போது மீண்டும் துன்பத்தைச் சுமந்து செல்லாதீர்கள். இறைவனிடம் துன்பத்தை இறக்கிவையுங்கள். துன்பங்கள் சிறிது காலம் தான்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**01-03-2015** *உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு*

# வாழ்வைக் காக்கும் நம்பிக்கை

## LIFE SAVING FAITH

2அர 4:1-7 திப 5 : 12-16
திபா 72 லூக் 5: 17-26

**அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு அந்த ஆளைப் பார்த்து, ''உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' என்றார். லூக் 5:20**

**இறைவேண்டல் :** *வாழ்வுக்கு ஆதாரமாம் கடவுளே, எங்களை செயல்படும் மக்களாக அழைத்து வாழ்வை காக்கும் நிலைகளை உருவாக்க ஏற்படுத்தியிருப்பதற்காக உம்மைப் போற்றுகிறோம். வாழ்வைக் காக்கும் நம்பிக்கையை எங்களில் தந்து தேவையிலிருப்போரிடம் நண்பர்களாய் இருக்கவும், பெலனற்றவர்களுக்கு உதவிச் செய்யவும், நோயுற்றோரைத் தேற்றவும், உம் குணமாக்கும் ஆற்றலின் ஊடகங்களாய் வாழவும், துணை தாரும். உடன் வாழ்கின்ற மக்களின் வாழ்வைக் காத்து, முழு வாழ்வை உறுதிப்படுத்த உதவிச் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

நம்பிக்கை என்பது ஒரு மனிதனை மாற்றுருவாக்கத்துக்கு நேராக நடத்தும் கடவுளுக்கும் தனிமனிதனுக்குமுள்ள அனுபவம் ஆகும். கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஒரு மனிதனான முழுமையான ஒப்படைப்புக்கும் கடவுளுக்கான பதில் செயலுக்கும் நேராக நடத்துகிறது. கிறிஸ்தவ நம்பிக்கை என்பது கடவுள் இயேசு கிறிஸ்துவில் முழுமையாக வெளிப்பட்டு, அவர் வழியாய் உறுதியாய் பேசினார் என நம்புவது ஆகும்.

நம்பிக்கை என்பது ஒரு மனிதனின் அறவாழ்விலும் செயலிலும் வெளிப்படவேண்டும். ஆபிரகாம் 'பற்றுறுதியாளர்களின் தந்தை' என அழைக்கப்பட்டார். காரணம் ஆபிரகாமில் கண்ட நம்பிக்கை என்பது கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிவதும், கடவுளின் அழைப்புக்களை ஆழமான ஒப்படைப்பும் ஆகும். இது உண்மையான ஆன்மிக வாழ்வுக்கு உத்தரவாதமாக மாறுகிறது. உண்மையான நம்பிக்கை எவ்வாறு வாழ்வைக் காக்கிறது என இங்கு சிந்திப்போம்.

### *1. நம்பிக்கை வாழ்வைக் காத்தது:* (2அர. 4 : 1-7)

இறைவாக்கினர் குழுவினரை சார்ந்த ஒருவரின் மனைவி எலிசாவிடம் வந்து கதறி அழுது, ''உம் அடியவராகிய என் கணவர் இறந்துவிட்டார்'' என்று தன் கணவனின் கடன் பாரத்தைத் தாங்க

இயலாதவளாய் கண்ணீரோடு முறையிடுகின்றாள். கடன் அதிகமானால் அதற்கு ஒருவர் தன்னையும் தன் குடும்பத்தையும் அடிமைகளாக விற்றுபோடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. எனவே இங்கு கடன் கொடுத்தவர்கள் அவளின் இரண்டு மகன்களையும் அடிமைகளாக்கிட விரும்பினதை பொறுக்க முடியாதவளாய் தன்னுடைய வாழ்வில் இருக்கும் குறைவு நிறைவாகும் என்ற நம்பிக்கையோடு எலிசாவிடம் வந்தாள். ‘‘உம் அடியவளாகிய என்னிடம் கலயத்தில் சிறிது எண்ணெய் மட்டுமே இருக்கிறது. வேறு ஒன்றும் வீட்டில் இல்லை’’(2 அர. 4:2). என்று எலிசாவிடம் கூறுகின்றாள். கடவுளை நம்பி வந்தால் விடுதலை உண்டு. அவரிடம் நம்பிக்கையோடு வந்தவர்கள் யாரும் வெறுமையாய்ப் போனதில்லை. கடவுளிடம் நம்பிக்கையோடு வருபவர்களின் குறைகளை அவர் நிறைவாக்குகின்றார். இல்லாதவைகளை இருக்கின்றவைகளாக்கு கின்றார். நம்பிக்கை இருக்கும் என்றால் நம்மிடம் உள்ள சிறிதானவைகளைக் கொண்டு பெரிதானவைகளை கடவுள் நம்வாழ்க்கையில் செய்யமுடியும். எலிசாவின் ஆலோசனைபடி தன்னிடம் உள்ள ஒரு குடம் எண்ணெய்யை ஊற்றி வைக்க எவ்வளவு நம்பிக்கையுடன் இரவல் பாத்திரங்களை வாங்கினார்களோ அந்த அளவுக்கு ஆண்டவர் எண்ணையை மிகுதியாக்கினார். கடவுளைத் தீர்த்து, வாழ்வை வளப்படுத்த கடவுள் துணை நின்றார்.

மடிந்து போகின்ற அனுபவம் வரும்போதும் ‘கடவுள் நமக்குத் துணைச் செய்வார்’ என்ற உறுதியான நம்பிக்கையோடு அவரைப்பற்றிக் கொண்டு வாழ்வைக் காத்துக்கொள்வோம்.

### *2. நம்பிக்கை விடுதலையைக் கொடுத்தது :* **(லூக். 5:17-26)**

இயேசு கிறிஸ்துவின் போதனையைக் கேட்கவும் அவரிடம் சுகம் பெறவும் திரளான மக்கள் அவரிடம் வந்தனர். இயேசு கிறிஸ்துவே விடுதலையாளர் என்று அனைத்துலக மக்களுக்கும் தெரியும். ஆனாலும் இன்றைய ஆடம்பர உலகில் உலகப் பொருள் சார்ந்த ஆசீர்வாதத்துக்காகவும் விடுதலைக்காகவும் அலைந்து திரிகிற மக்கள் கூட்டம் அதிகம். கிறிஸ்து விடுதலையாளர் என்ற நம்பிக்கையற்ற மக்கள் அதிநுட்பமான நவீன (Hi-tech) திருப்பணிகளை செய்கிறவர்களின் பின்னால் ஒரு கூட்டம் மக்கள் செல்கிறார்கள். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை ஆழப்படுத்தி கிறிஸ்தவ வாழ்வை வலுப்படுத்த இச்சிந்தனை நமக்கு சவாலாக உள்ளது.

திமிர்வாதக்காரனைக் தூக்கிவந்தவர்கள் அவனது நலனில் அக்கறை கொண்டவர்களாயிருந்தவர்கள் எப்படியாகிலும் அவனை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு போகவேண்டும். விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கை, அவர்களது செயல் அவர்களை ஏமாற்றத்துடன் திரும்பச் செல்லாமல் நம்பிக்கையோடு செயல்பட வைத்தது. அந்த நம்பிக்கை அவனுக்கு விடுதலையைக் கொடுத்துது (மத் 15:21-28).

கிறிஸ்தவ வாழ்வில் கூட்டுறவு மிக முக்கியம். கூட்டுறவின்றி எந்த ஒரு பற்றுறுதியாளரும் தனித்து வெற்றியோடு வாழ முடியாது. இங்கு பிற பற்றுறுதியாளர்களின் ஊக்கமும். உதவியும் அவன் விடுதலைக்கு வழி வகுத்தது. நம்முடைய நம்பிக்கை நமக்கு மட்டுமல்ல, நாம் வேண்டிக்கொள்கிற அனைருக்கும் உதவுகின்றது (மத் 8: 5-10).

### *3. நம்பிக்கை இறை ஆற்றலைக் கொடுத்தது :* (திப 5 : 17-26)

தூய ஆவியாரின் மற்றொரு முக்கியமான பணி என்னவென்றால் நம்பிக்கையுள்ளோருக்கு அவரது ஆற்றலைக் கொடுப்பது ஆகும். பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சீடருக்கு கொடுக்கிறார். துன்பங்களையும், எதிர்ப்புகளையும் தாங்கிக் கொள்ள ஆற்றலைக் கொடுக்கிறார். பேதுரு நம்பிக்கையற்றவராய் காணப்பட்டார். அவரைத் தம் மீது நம்பிக்கையுள்ளவராக மாற்றினார், ஆற்றல் படுத்தினார்.

அந்த இறை ஆற்றலைப் பெற்றதினால் எதிர்ப்புகள் வந்தாலும் அருஞ்செயல்களும் அடையாளங்களும் நடைபெற்றன. பேதுரு வாழ்வில் இதுவரையிலும் செய்யாத அருஞ்செயல்களை இறை ஆற்றலால் செய்கிறார். பேதுரு நடந்து போகையில் அவர் நிழல்பட்டால் நோயாளிகள் குணமடைவார்கள் என்று அனேகர் திரண்டு வந்தனர் நலம் பெற்றனர் (திப 5:15,16). பேதுருவின் நம்பிக்கை அவரது வாழ்வில் அளவில்லாமல் இறை ஆற்றலைப் பெற்றுக்கொள்ள முடிந்து. கடவுள் மீதும் அவரது மைந்தர் இயேசு கிறிஸ்துவிலும் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் இறை ஆற்றல் பெற்று அருஞ்செயல்கள் செய்ய முடியும். நாமும் தேவவல்லமையைப் பெற்று உறுதியுடன் இறைவனுக்கு சான்று பகருவோம்.

கிறிஸ்தவ நம்பிக்கையில் ஏற்பட்டாதளர்ச்சியை வலுப்படுத்த வாழ்வைக் கொடுக்கும் நம்பிக்கையாக கிறிஸ்துவை மையப்படுத்தி அவர் மீது நம்பிக்கை வைத்து கிறிஸ்துவே வாழ்வின் எல்லா நிலைகளிலும் கடன் பிரச்சனையலிருந்தும் அவரின் வல்லமையை பெற்றவர்களாக கிறிஸ்தவ வாழ்வில் தளர்ச்சியடைந்தவர்களை மீண்டும் உயிரோட்டம் அடையச் செய்ய இயேசுவை நம்பிக்கை என்ற நிலையை எடுத்துரைப்போம். ஆமென்.

திரு. L.R. **ஜெபசிங்**

**04-03-2015**

*தவக்கால மூன்றாம் புதன்*

# தூய்மையற்ற பன்றி

## UNCLEAN SWINE

திருமறைப்பாடம்: மத். 7:1-6

**"... உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் எறிய வேண்டாம்.." மத். 7:6**

செலூக்கிய அரச மரபைச் சார்ந்த சீரிய மன்னனாகிய அந்தியோகஸ் எப்பிபானஸ் யூதர்களால் வெறுக்கப்படுகின்ற, அருவருக்கப்படுகின்ற அரசராவார்.

* இவரது இயற்பெயர் அந்தியோகஸ் என்பதாகும். பின்னர் கடவுளின் வெளிப்பாடு என்று பொருள் தரும் எபிபானஸ் (Epiphanes) என்ற பெயரைத் தனக்குத் தானே சூட்டிக்கொண்டு தன்னைக் கடவுளின் அவதாரமாகக் காட்டிக்கொண்டார்.

* அந்தியோகஸ் பணம் பெற்றுக்கொண்டு ஆசாரியக் குடும்பத்தைச் சாராதவரை ஆசாரியராக்கினார்.

* எல்லா மக்களும் கிரேக்கப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தழுவ வேண்டும். கிரேக்க தெய்வங்களையே தொழ வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

* அருவருப்பின் உச்சமாக எருசலேம் ஆலயப் பலிபீடத்தின் மேல் பன்றிகளைப் பலியிடச் செய்தார். மேலும் யூதர்களைப் பன்றியின் மாம்சத்தைச் சாப்பிட மிரட்டிக் கட்டாயப்படுத்தினார்.

பன்றியைத் தேவாலயத்தில் பலியிட்டதும், அதன் மாம்சத்தை உண்ண மிரட்டிக் கட்டாயப்படுத்தியதும் யூதர்களை அந்தியோகசுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தது. மக்கபேயர் போருக்கான முக்கியக் காரணம் இதுவேயாகும்.

ஏனென்றால் யூதர்களால் மிகவும் வெறுப்பாகவும் அருவருப்பாகவும் கருதப்படுகிற விலங்கு பன்றியாகும். திருமறையில் பன்றி பல அடையாளங்களைத் தாங்கி நிற்கின்றது. முறையற்ற உணவுப் பழக்கம், தீய நடத்தை, தீமையின் இருப்பிடம் என மானுட வாழ்வின் தீமையான கூறுகளை பன்றியின் வாயிலாக கடவுள் நமக்கு அடையாளம் காட்டுகிறார்.

### *1. பெருந்தீனிக்கு அடையாளமான பன்றி :*

இச. 14 -ஆம் அதிகாரத்தில் உண்ணத்தக்க மற்றும் உண்ணத்தகாத விலங்குகள் பட்டியலில் பன்றி தீட்டானது என்றும் ஏனெனில் அது அசைபோடுவதில்லை என்றும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

பன்றி, சைவம் மற்றும் அசைவம் என எல்லா வகையான உணவுகளையும் உண்ணும் Omnivorous விலங்காகும்.

பொதுவாக, புற்கள், இலை, தழை போன்ற அசைவ உணவுகளையே ஆடு, மாடுகள் உண்ணும். ஆகவே அவை Reminants வகையைச் சார்ந்த விலங்குகளாகும். இவை இரைப்பையிலிருந்து உணவை மீண்டும் வாய்க்குக்கொண்டு வந்து பல்லால் அரைத்து உண்ணும். இதையே அசை போடுதல் என்கிறோம்.

ஆனால் பன்றி அப்படியன்று; அசை போடாது. அசைவ உணவையே பெரும்பாலும் நாடும். கழிவுகளையே அதிகமாக உண்ணும். கட்டுப்பாடற்ற உணவுப் பழக்கமே பன்றியின் இயல்பாகும். ஆகவே தான் கட்டுப்பாடின்றி அளவுக்கதிகமாக உண்போரைச் "சாப்பாட்டுப் பன்றி" என அழைப்பது வழக்கம்.

திருமறை, உடலுக்கு நலம் தரும் கட்டுப்பாடான உணவுப் பழக்கத்தையே கற்பிக்கின்றது. மட்டுமீறி உண்பது உடல் நலக்கேட்டையே உருவாக்குகிறது. நீதி. 23:20,21 இல் பெருந்தீனியரோடு சேரக்கூடாதென்றும், பெருந்தீனி வறுமைக்கு வழிவகுக்கும் எனவும் சொல்லப்பட்டுள்ளது. பிலிப்பித் திருச்சபை மக்களுக்குப் பவுலார் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர் யார்? என்பதற்கு அடையாளமாக "வயிறே தெய்வம்" என வாழ்வோர் என்கிறார் (பிலிப் 3 : 19). உண்பதையும் உடுப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல கிறிஸ்தவ வாழ்வு (உரோ 14 : 17) என்பதை உணர்ந்து பெருந்தீனிக்கு விலகி நடப்போம்.

### 2. அசுத்தத்திற்கு அடையாளமான பன்றி :

பொதுவாக, பன்றியின் இயல்பு சேற்றிலே புரள்வதும், அசுத்தத்தையும், கழிவுகளையும் உண்பதுவுமாகும். இதனால் பன்றியின் வாயிலாக மனிதர்களுக்கு உடல் நலக்கேடும், வியாதிகளும் உருவாகின்றன.

12 -ஆம் நூற்றாண்டில் எகிப்திலுள்ள கெய்ரோவில் அரசவை மருத்துவரான Moses Maimoni des (யூத சமயக் குருவாகவும் இருந்தார்). பொதுமக்களின் உடல் நலம் கருதிதான், கடவுள் பன்றியின் மாம்சத்தைச் சாப்பிடக் கூடாது என்கிறார் (லேவி 11 : 7, இச. 14 : 8). எனவே பன்றியின் மாம்சம் உடலுக்குக் கெடுதி என எழுதி வைத்துள்ளார். இவரது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் 19 -ஆம் நூற்றாண்டில் Trichura Tichurasis என்ற வைரசால் வரும் தொற்று வியாதி நன்றாக வேக வைக்கப்படாத பன்றியின் மாம்சத்தால் வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து பன்றியை ஒரு வியாதி கடத்தும் விலங்காகவே கருதுகின்றனர்.

பன்றி இறைச்சி உண்பதால் 70 விதமான நோய்கள் வருவதாகக் கண்டறிந்துள்ளனர். மேலும் பன்றியின் மாம்சத்தை உண்பதால் வயிற்றில்

வட்டப் புழு (Round worm), ஊசிப் புழு (Pin worm) கொக்கிப் புழு (Hook worm) போன்ற புழுக்கள் உருவாகி உடலில் நோய்களையும், மரணத்தையும் ஏற்படுத்துகிறது. தற்போது பன்றி மூலம் பரவும் பன்றிக் காய்ச்சல் உலகை அச்சுறுத்திக்கொண்டே இருக்கிறது.

திருமறையில் பன்றி தீட்டும், தூய்மையற்றதுமான விலங்காகக் காட்டப்படுகிறது. இதற்கு பல்வேறு விளக்கங்கள் தந்தாலும் பன்றியின் வாயிலாக ஏற்படும் வியாதிகளும் இப்படிச் சித்தரிக்கப்படுவதற்குக் காரணமாகும். குப்பையிலிருந்து, கழிவுகளிலிருந்து உணவைத் தேடுவதால் (Scavenging) பன்றி அசுத்தமானது என்று திருச்சட்டத்தின்படி யூதர்கள் இதை வெறுத்தனர். மதிகெட்டு நடக்கும் பெண்ணின் அழகு பன்றிக்குப் போட்ட வைரமூக்குத்தி என்கிறது நீதி மொழிகள் (நீதி 11 : 22). ஆண்டவர் இயேசு கிறிஸ்து, உங்கள் முத்துகளை பன்றிகள் முன் எறிய வேண்டாம் என்கிறார் (மத். 7 : 6).

முத்து (Pearl) என்பது இறையரசின் நற்செய்தியைக் குறிக்கிறது (மத். 13 : 45-46).

மத். 7 -ஆம் அதிகாரத்தில் 1-6 வசனங்களில் யாரையும் தவறாகத் தீர்ப்பிடக்கூடாது. மற்றவர் மீது நல்லெண்ணம் கொண்டிருக்க வேண்டும் என்ற நம் ஆண்டவர், அதே வேளையில் தொடர்ந்து நற்செய்தியை ஏற்க மறுப்போரை விட்டுவிடவும், அவர்களை விட்டு விலகவும் பன்றியை உருவகமாகப் பயன்படுத்தி எச்சரிக்கிறார் (மத். 10 : 14, 7 : 6).

தூய பவுல் தன் உடன் பணிவிடைக்காரராகிய தீத்துவுக்கு சொல்லும் போது, “சபையில் பிளவு ஏற்படக் காரணமாயிருப்போருக்கு ஒரு முறை, தேவையானால் இன்னொரு முறை அறிவு புகட்டி விட்டுவிடு” என்கிறார். மாறாக, மீண்டும், மீண்டும் அறிவுரை கூறியும் அவர் ஏற்காவிட்டால் அது பன்றி முன் எறியப்பட்ட முத்துக்குச் சமானமாகும். இதையே தான் தூய பேதுருவும் தம் கடிதத்தில், “அவர்கள் நீதி நெறியை அறிந்த பின் தங்களுக்கு அருளப்பட்ட தூய கட்டளையைக் கடைப்பிடியாமல் விட்டு விலகுவதை விட அதை அறியாமலே இருந்திருந்தால் நலமாயிருக்கும். பன்றியைக் கழுவினாலும் அது மீண்டும் சேற்றிலே புரளும் என்ற நீதிமொழியின் படியே சம்பவித்தது என்கிறார் (2பேது. 2:22).

பெருந்தீனிக்கும், தூய்மையின்மைக்கும் அடையாளமாக விளங்கும் பன்றியின் இத்தீய இயல்புகளை முற்றிலும் களைந்து போடுவோம். இறைவனின் இயல்புகளை நமதாக்குவோம்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

**06-03-2015**

***தவக்கால மூன்றாம் வெள்ளி***

# சொல்லில் அல்ல... செயலில்...

## NOT IN WORDS... BUT IN ACTION...

திருமறைப்பாடம் : மத். 23:1-12

**"...சொல்வார்கள், செய-ல் காட்டமாட்டார்கள்" மத். 23:3**

மரங்கள் மூன்றுவகை. அதேபோல் மனிதரிலும் மூன்று வகையுண்டு. சில மரங்கள் பூக்கும், ஆனால் காய்க்காது. உதாரணத்திற்கு பாதிரி மரம். இப்படித்தான் சில மனிதர்களும் பேசுவார்கள். ஆனால், செய்ய மாட்டார்கள். இரண்டாவதாக, சில மரங்கள் பூக்கும், காய்க்கும். உதாரணத்திற்கு மாமரம். இப்படித்தான் சில மனிதர்களும், சொல்வார்கள். அதே வேளையில் சொன்னதை அப்படியே செய்வார்கள். மூன்றவதாக சில மரங்கள் ஒருபோதும் பூக்காது, ஆனால் காய்க்கும், பலாமரம் இதற்கு உதாரணம் . இப்படிதான் சில மனிதர்கள், சொல்லமாட்டார்கள். ஆனால் செய்து முடிப்பார்கள். இன்றைய திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் மாமரங்கள் போன்ற மனிதர்களும், பலாமரங்கள்போன்ற மகான்களும் தேவைப்படுகிறார்கள். காந்தியடிகள் சொன்னதைச் செய்ததாலும், சொல்லாமலே செய்ததாலும்தான் மாகாத்மாவாக உயர்ந்து நிற்கிறார். ஆனால் இல்லாதரை இருப்பது போல காட்டும் வெளிவேடக்காரரின் சொல்லிலும் செயலிலும் ஒருங்கிணைவு இல்லை (Disintegrity between word and deed) என்பதை இயேசு கிறிஸ்து மத். 23:3-ல் நமக்கு கோடிட்டு காட்டுகிறார். இப்படி முரண்பாடுகளோடு வாழ்பவர்கள் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதில் தவறிப்போகிறார்கள். நமது சபைகளிலும் சமுதாயத்திலும் சொல்வதையே செய்வோம் செய்வதையே சொல்வோம் என அடிக்கடி மக்களை ஏமாற்றிவரும் இக்கால வெளிவேடக்காரர்களுக்கும் இப்பகுதி கற்றுத்தரும் சில உண்மைகளை நாம் தியானிப்போம். வெளிவேடக்காரர்...

### *1. ஏற்றுக்கொள்ளத்தக்கச் சொல்லுடையோர் :*

தொடர்பு நிலையில் சிறந்த விளங்கும் இவ்வுலகம் ( world of Communication) தொடர்பு சாதனங்களை கொண்டு வியத்தகு செயல்களை உலகிற்கு அறிமுகப்படுத்திவரும் இக்காலத்திலேயே பொய்யை உண்மை என்றும், போலியை நிஜம் என்றும் விளம்பரம் செய்து மக்களை ஏமாற்றி திசைதிருப்பிக் கொண்டிருகிறது. மக்களும் விளம்பரங்களை நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். அங்ஙனமே இயேசுகிறிஸ்துவின் காலத்தில் வெளிவேடக்காரர்கள் தாங்கள் சொல்வன்மையால் (Communicative Skill)

மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்தனர். அதாவது மறைநூலை ஆழ்ந்து விளக்க வெளிவேடக்காரர்கள் புலமை பெற்றிருந்தனர் உண்மையே. மட்டுமல்லாமல் மறைநூல் வாசகப்பட்டை என்ற திருச்சட்ட நூல் வாசகங்களை கொண்ட பட்டையை நெற்றியிலும் கையிலும் கட்டிவைத்திருக்கும் வழக்கமும் உண்டு. எனவே தான் இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்து, "அவர்கள் (வெளிவேடக்காரர்கள்) என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள் (மத். 23:36)" என்று அவர்கள் சொல்வது மறைநூல் சார்ந்தவைகளே, ஏற்றுக்கொள்ளத்தக்கவைகளே என்றார். ஆனால் தாங்கள் போதித்து வந்தவைகள் மற்றும் மறைநூல் வாசகப்பட்டை வாசகங்கள் சரியானதென அவர்கள் அறிந்திருந்தும் அதற்கு கீழ்ப்படியாததை இயேசு கண்டு அவர்களை பார்த்து "குருட்டு மடையரே" என கோபத்தோடு அழைத்து கண்டித்தார். எரேமியாவின் காலத்தில் காணப்பட்ட போலி இறைவாக்கினரை கடவுள் கண்டிக்கிறார், எல்லோரும் அடுத்திருப்பவரை ஏமாற்றுகின்றனர் (எரே. 9:5). ஆகவே "தங்கள் நாவினால் "ஆண்டவர் கூறுகிறார்" என்று உரைக்கும் இறைவாக்கினருக்கு எதிராய் நான் இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர்"(எரே. 23:31). மேலும், தங்கள் பொய்களாலும் மூடச்செயல்களாலும் என் மக்களை தவறான வழியில் நடத்திச் செல்கிறார்கள். நான் அவர்களை அனுப்பவில்லை, அவர்களுக்குக் கட்டளையிடவும் இல்லை. அவர்களால் இந்த மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்கிறார் ஆண்டவர் (23:32). வெளிவேடக்காரராலும் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதை வெளிப்படையாக தெரிவித்தார். தற்போதைய போப் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "வெளிவேடக்காரர்கள் அனைத்துச் சரியான காரியங்களையும் சொல்லலாம். ஆனால் அவை தவறான காரணங்களுக்காகச் சொல்லப்படும். எனவே வெளிவேடக்காரர்களின் சொல்லை ஆய்ந்தறிவது நலமானது" என வலியுறுத்தினார். ஏமாற்றுப் பேர் வழிகளை குறித்து மிக எச்சரிக்கையுடன் வாழ இறை மக்கள் தங்களை பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### *2. ஏற்றுக்கொள்ளத்தகாத செயலுடையோர் :*

இயேசு வெளிவேடக்காரர்கள் யார்? என மக்களுக்கு தெளிவுப்படுத்தும்போது " சொல்வார்கள்- செய்யமாட்டார்கள், சுமத்துவார்கள்-சுமக்கமாட்டார்கள்" எனக் கூறினார். இவர்கள் வாழ்வில் செய்வினை என்பதே இல்லை, எல்லாமே செயப்பாட்டு வினையாகத்தான் இருந்தது. வெளிவேடக்காரர் (Hypocrite/Pretender) என்றாலே சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று (Say one thing do another) ஆகும்.

மத் 23:5-ல் ஆண்டவர் தெளிவாக கூறும் போது "தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள்

செய்கிறார்கள்" அப்படி மக்கள் பார்க்கும்படி செய்தாலும் அவர்களுடைய செயலுக்கும் சொல்லுக்கும் ஒருங்கிணைவு என்பதே இல்லை. சொல்லிலும் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்திய தூய பவுல் கொரிந்து பட்டணத்திற்கு எழுதிய கடிதத்தில் ''நான் கிறிஸ்துவைப் போல் நடப்பது போன்று நீங்களும் என்னைப் போல் நடவுங்கள்'' (1கொரி 11 :1) என அந்த பட்டணத்து மக்களையும் என்னைப்போல கிறிஸ்துவாக வாழ வாருங்கள் என அழைக்கிறார். ஹோரேஸ் என்ற பொதுநிலையாளர் கூறும்போது, ''நன்கு சிந்திப்பது நல்லது, அதைவிட நன்கு செயல்படுவது தெய்வீகமானது'' என்கிறார். நமது சொல்லும் செயலும் ஒரே மொழியை பேசட்டும், அதென்னவெனில் 'சிலுவையின் அன்பு என்ற மொழியே'.

### *3. ஏற்பில்லா எதிர்பார்ப்புடையோர் :*

இயேசு கிறிஸ்துவின் ஆலோசனையைக் கவனித்துக் கொண்டிருந்த வெளிவேடக்காரர்கள் அவரை ஏளனம் செய்தனர். இதை கண்ட இயேசு அவர்களிடம் "நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள்முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்" (லூக் 16:15) என உண்மையை மறைக்காமல் மறுமொழி கொடுத்தார். கடவுள் பார்வையில் அருவருக்கத்தக்க மற்றும் ஏற்பில்லாச் செயலை துணிந்து செய்து வந்தவர்களின் செயல்களில் மிகக்கொடியது என்னவெனில், "விதவைகளின் வீடுகளை பட்சித்துப்போட்டார்கள்" (மத். 23:14) இத்தகைய அரக்ககுணமுடையோரின் எதிர்பார்ப்புகள் அவர்களது சுயநலத்தையும், வெளிவேடத்தையும், இறைநேயம் மற்றும் மனிதநேயம் அற்றவர்கள் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. பொது நிகழ்வுகளில் முதன்மையான உபசரிப்பு (மத். 23:6), ஆன்மிகத்தில் முதிர்ச்சியடைந்தவர்கள் என மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் (மத். 23:6). மற்றும் சமுதாயத்தில் நன்மதிப்பு (23:7) அதாவது 'ரபி' என்று அழைக்கப்படுவதையும் அதிகமாக எதிர்பார்த்தனர். இவைகள் அவர்களுக்கு ஏற்பில்லா எதிர்பார்ப்பாகும். கடவுளுடைய பிள்ளைகளாகிய நாம், "ஆண்டவர் அவரவர் செயலுக்கேற்ப கைம்மாறு அளிப்பார்" (மத். 16ம்'27) என்பதை நினைவில் கொண்டு செயல்படுவோம்.

ஒரு மனிதனின் சீரான, உயர்வான வாழ்விற்கு சொல்லும் செயலும் இரண்டு சக்கரங்கள் போல ஒன்றாக செயல்பட வேண்டும். மனிதன் வாழும் சமுதாயமும் சக மனிதரில் எதிர்பார்ப்பது சொல் சுத்தமும், செயல்சுத்தமும், அனைவரும் ஏற்புடைய வாழ்வுமாகும். ஒருவேளை சொல்லும், வாழ்வும் வேறுபடுகிற போது விட்டுச் செல்கிற சுவடுகள் எல்லாம் வெறுமனே அழிந்து போகும். ஆகவே, சொல் வீரராக மட்டுமன்று செயல்வீரராகவும் வாழ்வோம்.

அருள்திரு. G.S **ஆஸ்வின் ஜெய்சிங்**

**08-03-2015** ***உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு***

# இறைவேண்டலில் நிலைத்திருத்தல்

## PERSISTENCE IN PRAYER

2 அர 20:1-11 1தெச 5 : 12-22
திபா 116 மாற் 7:24-30

**"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்." 1தெச. 5:17**

**இறைவேண்டல் :** ***படைப்பாளராம் கடவுளே, உம் அறிவும், ஞானமும் மனிதரின் கற்பனைக்கும், புரிந்து கொள்ளுதலுக்கும் மேலானது. உமது வழிகளை எங்களுக்கு முன் வைத்திருந்தும் நாங்கள் எங்களுடைய வழிகளைத் தெரிந்துகொண்டு படைப்போடும், உடன் மனிதரோடுமுள்ள உறவில் உடைவை ஏற்படுத்தினோம். நாங்கள் இறைவேண்டலில் நிலைத்திருக்கவும், நம்பிக்கையில் உறுதியாய் இருந்து, ஒப்படைப்புடன் உமக்கு பணிவிடை செய்து, உம்மோடு இணைந்திருக்கவும், உம் அருள் தாரும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக இவைகளை வேண்டுகிறோம். ஆமென்.***

பயணி ஒருவர் தான் கண்டிராத ஒரு புதிய பட்டணத்திற்குச் சென்றார். அவர் பயணம் செய்த இரயிலிலிருந்து இறங்கிய உடனே அவர் கண்ட காட்சி ஒரு நிமிடம் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அது என்ன காட்சியென்றால் அந்த இரயில் நிலையத்திலுள்ள இரயில்வே இலாகா அதிகாரிகளோ, சுமைதூக்கும் பணியாளர்களோ , இரயில் பயணிகளோ எவருமே காலில் செருப்பு அணிந்திருக்கவில்லை என்பது தான். ஒரு வேளை செருப்பு அணிவது தடைசெய்யப்பட்டிருக்கலாம் என்று அவர் தனக்குள்ளே நினைத்துக்கொண்டார். அவர் இரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்து taxi வாடகைக்கு அமர்த்த வந்தார். அங்கு கார் ஓட்டுநர் செருப்பு அணிந்திருக்கவில்லை. "நீங்கள் ஏன் காலில் செருப்பு அணிந்திருக்கவில்லை" என்று கேட்ட பொழுது அவர், "ஆமா, நான் ஏன் செருப்பு அணியவில்லை" என்று ஆச்சரியமாய்ப் பதில் கூறினார். அந்தப் பயணி சில மைல் தூரம் பயணம் செய்த பின் காரை விட்டு இறங்கினார். அங்கு பனி பெய்து கொண்டிருந்தது. அங்கு சென்று கொண்டிருந்தவர்கள் காலில் செருப்பு அணியாமலேயே பயணித்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பயணி ஒருவரிடம், "காலில் செருப்பு அணிவது நல்லதல்லவா! அது உங்கள் பாதங்களைப் பாதுகாக்குமே" என்று கூறினார்.

அதற்கு அவர் நீங்கள் சொல்வது சரி தான். ஆனால் நான் ஏன் செருப்பு அணிந்திருக்கவில்லை என்று எனக்கே தெரியவில்லை என்று கூறினார். அந்தப் பயணி மூன்றாவதாக ஒருவரைச் சந்தித்தார். அவரும் செருப்பு அணிந்திருக்கவில்லை. அவரிடம், ‘‘இந்தப் பட்டணத்தில் செருப்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் இல்லையா?’’ என்று கேட்டார். அப்போது அவர் ‘‘தொழிற்சாலை இருக்கிறது’’ என்றார். ‘‘அப்படியானால் நீங்கள் ஏன் செருப்பு அணியவில்லை’’ என்று கேட்ட பொழுது. ‘‘நாங்கள் இங்கு உருவாக்கும் செருப்புகளெல்லாம் பிற ஊர்களுக்கு ஏற்றுமதி செய்கிறோம். ஆனால், நாங்கள் செருப்பு அணிவதில்லை’’ என்று கூறினார். செருப்பு அணிவது கால்களுக்குப் பாதுகாப்பு என அறிந்திருந்தும் செருப்பை அணியாத இந்த மக்களை போன்றே இக்கால கிறிஸ்தவர்களின் இறைவேண்டல் வாழ்வு அமைந்திருக்கிறது. இறைவேண்டலின் நன்மையை அனைவரும் அறிந்ததே. இறைவேண்டல் செய்வது நல்லது என அனைவருக்கும் தெரியும். எனினும், எவரும் இறைவேண்டல் வாழ்வில் நிலைத்திருப்பதில்லை. இறைவேண்டல் வாழ்வில் நிலைத்திருந்த மூவரின் அனுபவங்களை இந்நாளின் திருமறைப்பாடங்கள் வழி சிந்திப்போம்.

### *1. நிலையான இறைவேண்டல் கண்ணீரைத் துடைக்கும் :*

நோயால் பாதிக்கப்பட்ட எசேக்கியா அரசர் தன்னைப் பாதித்த நோய் மிகவும் கடினமானது என்று எசாயா தீர்க்கர் வழி அறிந்தபோது, அவர் மனம் வியாகுலமடைந்து. தன் படுக்கையில் கண்ணீர் விட்டழுதார். (எசா. 38:1-8; 2 குறி. 32 : 24-26) . ஆண்டவர் எசேக்கியாவின் இறைவேண்டலைக் கேட்டு 15 வருடம் அதிகமாக வாழச் செய்வதாகவும், அசீரிய அரசரிடமிருந்து எருசலேமை மீட்க ஆற்றல் அளிப்பதாகவும் வாக்குறுதி அளித்து, இதற்கு அடையாளமாக நிழல் பத்துப் பாகைபின்னால் செல்லும் என்று ஓர் அடையாளத்தையும் கொடுத்தார். எசேக்கியாவின் இறைவேண்டலில் அவர் மனம் எவ்வளவு உறுதியாய் ஆண்டவரிடம் நிலைத்து நின்றது என்பதற்கு ஆண்டவர் தந்த பதிலே சான்று. நிழல் பத்து பாகை பின்னால் செல்வது இறைவனின் அரும் செயல். தம் அடியவர் வாழ்வடைய ஆண்டவர் இயற்கையை கூட மாற்றம் செய்வார். குறிப்பேடு புத்தகத்தின் ஆசிரியர் குறிப்பிடுவது போல் எசேக்கியாவின் மனதின் செருக்கினால் எசாயாவின் ஆலோசனையை உதறி தள்ளிவிட்டு அசீரியரிடம் அரசியல் உறவு வைக்கச் சென்றார். இதனால் உண்டான தண்டனையாக நோயையும், அசீரிய படையெடுப்பையும் நாம் கண்டாலும் எசேக்கியாவின் உருக்கமான

இறைவேண்டல் ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டது. அன்னாளின் அழுகையோடு கூடிய ஜெபம் அவள் விரும்பிய வாழ்வைத் தந்தது. ( 1சாமு 1 :7,12இ 17, 19, சாமு 2 :27, 28) நோய்கள், பிரச்சனைகள் என்பது நாம் முழு இருதயத்தோடு ஆண்டவரிடம் திரும்புவதற்கான ஒரு வாய்ப்பு என உணர்தல் வேண்டும் (1சாமு. 1:12). இறைவனின் பதில் தாமதித்தாலும் இறைவேண்டலில் நிலைத்திருந்தால் உள்ளத்தின் உடைவின் வெளிப்பாடான கண்ணீரை மாற்றுவார். ஆரோக்கியத்தைப் போல நோய்களையும் ஆண்டவர் தரும் அருட் கொடைகளாக காண முயன்றால் யோபுவை போல விடுதலையோடு கூடிய ஆசீர்வாதத்தைப் பெறலாம். (யோபு 1 : 21; 42:12).

## *2. நிலையான இறைவேண்டல் வேதனைகளைத் தாங்கும்:*

இறை விருப்பம் அறிய மனிதன் இறைவேண்டலில் நிலைத்திருப்பது அவசியம். இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளிடம் தம் வேதனையிலும் மனம் தளராமல் மன்றாடினார். தன் அனுபவத்தில் மனம் தளராமல் இறைவேண்டல் செய்யக் கற்பித்தார் என்றார் (லூக். 18 :1-8). தூய பவுலும் வேதனை நீங்க ஜெபித்தார். (2 கொரி. 12: 1-10). தன் அனுபவத்தில் இடைவிடாமல் இறைவனிடம் வேண்டுங்கள் என்றார் (1 தெச 5: 17).

நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் செய்வேன் (யோவான் 14:14). நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுக்குள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பி கேட்பதெல்லாம் நடக்கும்.( யோபு 15:7). நம்பிக்கையோடு இறைவனிடம் மன்றாடும் போது நோயுற்றவர் குணமாவார் (யாக்கோபு 5 : 15). விசுவாசத்தோடு ஜெபித்தால் பலன் கிடைக்கும் எனத் திருமறை உறுதி தருகிறது. இடைவிடாமல் இறைவேண்டல் செய்தாலும் பலன் கிடைப்பதில்லை என்பது இன்றைய விசுவாசிகளை அலட்டும் பிரச்சனை. பவுல் தன் துன்பம் நீங்க ஜெபித்தார் (2 கொரி 12: 1-10). அவர் விரும்பிய பலன் கிடைக்கவில்லை. ஆனால் வேதனை துன்பங்களை தாங்கும் கிருபையைப் பெற்றார். (வ. 9) நம்முடைய இறைவேண்டல்களுக்கு ஆண்டவரிடம் மூன்று பதில்களுண்டு. அவை ‘‘ஆம், இல்லை, காத்திரு’’ என்பதாகும். பவுலின் ஜெபத்திற்கு இல்லை என்ற பதிலும் அவருக்கு ஆறுதலாயிருந்தது.

ஒரு சிறுமி தேர்வெழுதினாள். தேர்வில் கேட்ட ஒரு கேள்வி இத்தாலியின் தலைநகரம் எது என்பதாகும். அவளோ லண்டன் என்று பதிலெழுதினாள். வீட்டிற்கு சென்றபோது தான் இத்தாலியின் தலைநகரம் ரோம் என்றும், தான் எழுதியது தவறு எனவும் புரிந்தாள். உடனே அவள்

தன் அறைக்குச் சென்று “ஆண்டவரே இத்தாலியின் தலைநகரத்தை லண்டன் ஆக்கவேண்டுமே” என இறைவேண்டல் துவங்கினாள். இவ்விதமான இறைவேண்டல் நடைமுறைக்குச் சாத்தியமற்ற இறைவேண்டல் ஆகும். சாத்தியமாகிற இறைவேண்டலோ படிப்பிற்கும் ஜெபத்திற்கும் சமமான முக்கியத்துவமளிப்பதில் தான் அடங்கியுள்ளது. அதில் தேவ சித்தம் வெளிப்படும் பவுல் தன் கடினமிக்க இறைப்பணியிலும் துன்பம் மிக்க தனி வாழ்விலும் ஜெபத்தில் நிலைத்து நின்று வெற்றி கண்டார்.

### *3. நிலையான இறைவேண்டல் தடைகளை உடைக்கும் :*

இறைவேண்டல் ஒருவரின் நம்பிக்கையின் உறுதியையும் தாழ்மையின் மேன்மையையும் வெளிப்படுத்துகிறது. (மாற் 7:24-30) சிரோபேனிக்கேயா பெண் கிரேக்கர் யூதர் என்ற வேறுபாட்டைத் தாண்டி இயேசுவிடம் மன்றாடுகிறார். காணாமல் போன இஸ்ரயேலருக்காய் வந்தேன் என்று இயேசு கூறியபோது என் மகளுக்கும் உதவிசெய்யும் என்று தன் மன்றாட்டின் வாஞ்சையை வெளிப்படுத்தினார். (மத். 15:24-25) இயேசு கிறிஸ்து கூறிய நாய் என்ற யூத நிலைப்பாட்டையும் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டாள் (வ. 27) அப்பங்களல்ல அப்பத்துண்டுகள் போதும் என்ற உறுதியான வேண்டுதலை வெளிப்படுத்தினாள் (மாற். 7:27, 28). தன் மகளுடைய பிரச்சனைகளை இயேசுவுக்கு எடுத்துரைத்து அவருடைய கூர்மையான கேள்விகளையும் கடந்து அவருக்கு தன் தேவையைக் குறிப்பாகக் கூறி எல்லாத் தடைகளையும் உடைத்து அவள் வெற்றி கண்டாள். அவளுடைய இறைவேண்டலின் தீவிரம் தான் தடைகளை உடைத்து விடுதலை பெறத் தூண்டியது. தாழ்மையோடும் பற்றுறுதியோடும் சமய, இன, மொழி, நாடு வேறுபாட்டைக் கடந்து ஆண்டவரிடம் மன்றாடும் எவரும் வாழ்வுப் பிரச்சனைகளில் விடுதலையடைவர் என்பதற்கு இந்த நிகழ்வு சான்றாயுள்ளது.

இன்று நாம் இறைவேண்டலில் நிலைத்திருப்பதற்கு நம்மிடமிருக்கும் தடைகள் என்ன? நம் சூழ்நிலைகளா? மனநிலைகளா? ஒரு சிறுவன் தாயிடம் “அம்மா நேற்று நான் ஜெபிக்கவில்லை” என்று சொன்னான். ஏன் ஜெபிக்கவில்லை என்று அந்தச் சிறுவனிடம் அந்தத் தாய் கேட்ட பொழுது நேற்று எனக்கு முக்கியமாக எதுவும் தேவையில்லாதிருந்தது என்று பதிலாகக் கூறினான். நம்முடைய இறைவேண்டல்களும் இப்படிப்பட்டவைகள் தானா? தேவைப்படுகிற போது மட்டும் இறைவேண்டல் செய்கிறோம். இது கிறிஸ்தவ இறைவேண்டல் வாழ்வின் ஒழுக்கமல்ல. ஆண்டவரோடுள்ள உறவே நமக்கு முக்கியம். அதை நிலைக்கச் செய்வது வாழ்விற்கு வலுசேர்க்கும். எனவே ஜெப வாழ்வில் நிலைத்திருந்தது இறை உறவுடன் வளர்ந்து நிலை வாழ்வு பெறுவோம்.

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

11-03-2015 **தவக்கால நான்காம் புதன்**

# பாசானின் பசுக்களே

## COWS OF BASHAN

திருமறைப்பகுதி : ஆமோ 4:1-3

**"சமாரியா மலைமேல் வாழும் பாசான் பசுக்களே."** ஆமோ 4:1

ஆமோஸ் இறைவாக்கினர் 4 : 1 இல், ஆடம்பரத்திலும் ஐசுவரியத்திலும் உழன்று ஏழைகளைச் சுரண்டியும், ஒடுக்கியும், பதுக்கியும் உண்டு கொழுத்து, செழித்து போயிருந்த இஸ்ரேலியச் செல்வச் சீமாட்டிகளைப் பாசானின் பசுக்களே எனக் குறிப்பிடுகிறார்.

பாசானின் பசுக்கள் என்பது இஸ்ரேலிய உயர்குடிப் பெண்களைக் குறித்தாலும் அவர்களை மட்டுமே அவ்வார்த்தை சுட்டுகிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

ஏனென்றால் பசுக்கள் என்ற இந்தப் பெண்பால் உருவகம் (Feminine Metaphor) ஆட்சித் தலைவர்களையும், பொது மக்களையும் குறிக்கும் நோக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

ஆமோ 4 : 1 இல் பிந்தைய பகுதியில் கணவர் (எஜமான்) என்ற வார்த்தையைக் குறிக்க அடோன் (adon) என்னும் எபிரேய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டவர்(பிரபு) (lord) என்றொரு பொருளும் உண்டு.

சமாரியா வேற்று தெய்வ வழிபாட்டுக்குப் பெயர்போன இடமாகும். ஆகவே வேற்று தெய்வ (pagan gods) வழிபாட்டில் மூழ்கி, வறியோரை ஏய்த்து வாழ்ந்த இஸ்ரவேல் மக்களையும் பாசானின் பசுக்கள் என்ற இந்த வார்த்தை குறிக்கும்.

திருமறையில் பாசான் செழுமையும், வளமுமான இடமாகும். இது யோர்தான் ஆற்றுக்கு கிழக்கே ஓடும் யார்மூக் நதியின் வடக்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு வாழும் பசுக்கள் கொழுமையானதாக இருக்கும்.

அதேபோன்று இஸ்ரேலியப் பெண்களும், ஏனையோரும் ஏழைகளை ஒடுக்கித் தங்களை வளப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் சுகபோகமாகவும், சம்பிரமமாகவும் வாழவேண்டி, தங்கள் கணவரை வற்புறுத்தி (யேசபேலைப் போல) தீய வழியில் நடத்தினர். ஆகவே தான் இறைவாக்கினர் ஆமோஸ் அவர்களைப் "பாசானின் பசுக்களே" என்கிறார்.

திருமறையில் மாடு நேரடியாகவும், பழமொழியாகவும், உருவகமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது அவைகளை குறித்து தியானிப்போம்.

## *1. பணியாத மாடு :*

நீர் என்னைத் தண்டித்தீர் நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன் (எரே 31 : 18)

தமிழ்நாட்டில் மாட்டுச் சந்தைகள் அதிக அளவில் கூடுகின்றன. பெரும்பாலான இடங்களில் அடிமாட்டுச் சந்தை என்றே ஒருநாள் மாடுகள் அடிமாடுகளாக விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இப்படி விற்கப்படும் மாடுகள் அதிக அளவில் கேரளாவிக்குக் கடத்திச் செல்லப்படுகின்றன. இவைகளில் பெரும்பான்மையான மாடுகள் இறைச்சிக்காகவே அடிமாடுகளாக விற்கப்படுகின்றன.

மனிதர்களால் வளர்க்கப்பட்டு இனிப் பயனற்றவை என்று கருதப்படும் மாடுகள், மனிதர்களால் வளர்க்கப்படாமல் சாலையோரங்களிலும் பொது இடங்களிலும் அலைந்து திரிந்து கண்டதையும் தின்று கொழுத்திருக்கும் பிரயோஜனமற்ற, யாருக்கும் அடங்காத மாடுகளையும் இப்படி இறைச்சிக்காக அடிமாடாகப் பிடித்து விற்கின்றனர்.

ஆமோஸ் இறைவாக்கினர் காலத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களும் பணியாத மாடுகள் போல் கடவுளுக்கு பணிந்து நடவாமலும் எளியவரை அன்பு செய்யாமலும் சுயநலமிக்கச் செல்வர்களாய் வாழ்ந்தனர். ஆகவே ‘‘பாசானின் பசுக்களே’’ என்ற உருவகத்தை இறைவாக்கினர் பயன்படுத்துகிறார்.

அரசர் நெபுகாத்னேசர் இறைவார்த்தையால் எச்சரிக்கப்பட்டும் அவ்வார்த்தைக்கு, பணியாத மாடு போல் கீழ்ப்படிய மறுத்ததால் காட்டு விலங்குகளோடு வாழவும், மாடுகளைப் போலப் புல்லை மேயவும் நேரிட்டது (தானி 4:29-33).

எரே 31 : 18 இல், நீர் என்னை தண்டித்தீர். நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன் என்று எப்ராயீம் புலம்புவதாக கடவுள் உரைக்கிறார். ‘அடியாத மாடு பணியாது’ என்றொரு சொல்லடை நம் வழக்கத்தில் உண்டு.

கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், இறைவிருப்பத்திற்கு மாறாக, பயனற்ற வாழ்வு வாழ்ந்தால் தண்டனைக்கும் மாடுபோல் அடிக்கப்படுதலுக்கும் ஒப்பான இழிவு ஏற்படுமென எரேமியா இறைவாக்கினர் வாயிலாக கடவுள் நம்மை எச்சரிக்கிறார் (எரே 31 : 18; லேவி 26 : 21, 22).

## 2. மகிமையை மாட்டின் சாயலாக மாற்றிய மக்கள் :

தங்கள் மகிமையை புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள் சங் 106 : 20.

கடவுள் மாட்சிமைமிக்கவர் (1குறிப் 16 :25, 29 : 12). கடவுளின் மாட்சியில் மனிதர் எவரும் ஒருபோதும் தம் சுயநீதியால் பங்குபெற முடியாது (விப 3: 18-23,40 :35, எசா 6 : 1-5). கடவுள் தம் இரக்கத்தால் தம்முடைய மாட்சியை மக்களுக்குக் காண்பித்து அம்மாட்சியில் அவர்கள் பங்குபெறவும் பறைசாற்றவும் அருள் செய்கிறார் (திபா 8: 5, யோவா 17:22).

வரலாற்றில் இஸ்ராயேல் மக்கள் இறைமாட்சியின் மகத்துவத்தை உணராமல் கடவுளின் மாட்சியை மாட்டின் சாயலில் காண முனைந்தார்கள் (விப 32 : 1-4)

தங்கள் தெய்வங்கள் தெய்வங்களே அல்ல எனினும், அவற்றினை மாற்றிக்கொண்ட மக்களினம் உண்டா ? என் மக்களோ, என்மாட்சியைப் பயனற்ற ஒன்றிற்காக மாற்றிக் கொண்டனர் (எரே 2:11) என்றும் இவர்கள் தங்கள் மகிமையை மாற்றிக்கொண்ட மாடு கூட தன் எஜமானை அறியும். ஆனால் என் மக்களோ என்னை அறியவில்லை (எசா 1:3) என்றும் கடவுள் தம் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

ஆமோஸ் இறைவாக்கினர் நூலில் குறிக்கப்பட்டுள்ள சமாரியாவில் வாழ்ந்த இஸ்ரவேலரும் கடவுளைச் சார்ந்து வாழ்வதால் வரும் இறைமாட்சியைக் காட்டிலும், செல்வத்தால் கிடைக்கும் மனித மாட்சியே மேலானது எனக் கருதினர். ஆகவேதான் மாடுகளுக்கு இணையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளனர் (ஆமோ 4 : 1). தூய பவுலார் இறைமாட்சிக்கு இடம்தராத இழிந்தோரைக் குறித்து உரோமைத் திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளார் (உரோ 1 : 21-23).

நாம் தியானித்த திருமறைப் பகுதிகளில் மாடு, மக்களின் பாவங்களை உணர்த்த தீமையின் அடையாளமாக உருவகப்படுத்தப்பட்டாலும் மாட்டினால் கிடைக்கும் நன்மைகளையும் நாம் மறுத்துவிட முடியாது. மாடு உயிரோடிருக்கும் போது பாலையும், இறந்த பின்பு தோலையும் தருகிறது.

தவக்காலத்தில் மாட்டின் மூலமாக, கடவுள் நமக்குக் கற்றுத்தரும் களைய வேண்டிய தீய இயல்புகளையும், கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் அவருடைய வார்த்தையின் வாயிலாக அடையாளம் கண்டு நற்பண்புகளின் வழியாக கடவுளின் மாட்சியை வெளிப்படுத்துவோம்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

**13-03-2015** **தவக்கால நான்காம் வெள்ளி**

# திருச்சட்டமா? திருத்திட்டமா?
## LAW? OR DIVINE PLAN?

திருமறைப்பாடம் : மத் 23:16-24

**"...திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றை கடைபிடிக்காமல் விட்டு விடுகிறீர்கள்."** மத் 23:3

சட்டம், செயல் ஆகிய இரண்டு வார்த்தைகளுக்கும் ஆங்கிலத்தில் 'Act'என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பெயர்ச்சொல்லாக Act (Noun) எளிதாக உள்ளது. ஆனால், சட்டத்திற்கு உயிர்கொடுப்பது 'Act'என்ற செயல்பாடு தான் என்பதே உண்மை. அதுபோலவே கடவுளின் திட்டத்தை மனுக்குலம் நிறைவேற்ற திருச்சட்டமும் திருச்சட்டத்தின் செயல்பாடும் மிக தேவையானதுமாகும். கடவுள் திருச்சட்டத்தை மோசேயின் வழியாக இஸ்ரவேலருக்குக் கொடுத்தார். இந்த கட்டடிளைக்கு கீழ்ப்படிந்து அதை கடைப்பிடித்து வாழ்வோர் உடன்படிக்கையின் மக்களாக இருப்பர். எனவே இஸ்ரவேலர்கள் தங்கள் சிறுவயது முதலேத் திருச்சட்டத்தைப்பின்பற்ற தொடங்குவர். இப்படி கடவுளின் திட்டத்தோடு நம்மை இணைப்பதற்காகத் தான் திருச்சட்டத்தை தந்திருக்கிறார். ஆனால் வெளிவேடக்காரக்கள் திருச்சட்டத்தை வைத்துக் கொண்டு மக்களுடைய வாழ்வை வளப்படுத்தாமல், மக்களை ஒடுக்கவும் குற்றம் கண்டுபிடிக்கவுமே பயன்படுத்தினர். தடா, பொடா, கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் போலவே ஓய்வு நாள் சட்டங்கள், தூய்மைமுறைச் சட்டங்கள் (மாற். 7:1-10), ஒழுக்க நெறிச்சட்டங்கள் முதலியவற்றால் மக்களுடைய வாழ்வில் சுமைகளை ஏற்றினார்களேயொழிய அவர்களுடைய வாழ்வில் வளமையைக் கொண்டு வரத் தவறிவிட்டனர். எப்படியெனில் "சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள்"(மத். 23:4). கடவுளே கொடுத்த திருச்சட்டங்களில் பிழைக்கு இடமில்லை. ஆனால் அவற்றை வெளிவேடக்காரர்கள் கடைப்பிடித்த விதத்தில் அனேக பிழைகள் இருந்தன. இவைகளை கண்ணுற்ற ஆண்டவர் இயேசு திருச்சட்டத்தின் முதன்மைப் போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கையை கடைப்பிடிக்கமால் விட்டுவிடுகிறீர்கள் என வேதனைப்பட்டார். நீதி, இரக்கம், நம்பிக்கை இவைகள் கடவுள் நம்மில் தேடும் முதன்மையான குணங்கள், இவைகளைக் கருத்தாய்க் கடைப்பிடிப்போமானால்

கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் மனிதருக்கும் இடையே உள்ள உறவு சீர்ப்படும், செம்மைப்படும். எனவே திருச்சட்டத்தின் முதன்மைப் போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியன குறித்து தியானிப்போம்.

### *1. திருச்சட்டம் கற்பிக்கும் நீதி :*

திருச்சட்டத்தின் அடிப்படை உண்மை நீதியாகும், குற்றமற்ற மனிதனை விடுவிப்பதின் மூலமாகவோ அல்லது அவனுக்குரிய உரிமைகளைத்திரும்ப அளிப்பதின் மூலமாகவோ சமுதாயத்தில் இந்த நீதியை நிலைநாட்ட கடவுள் விரும்புகிறார் (இச 14:22-27). மட்டுமல்ல நீதியானது நன்கு வலியுறுத்தும் ஒழுக்கமுறைகளைக் கடைப்பிடிப்பதையும் கடவுள் எதிர்பார்க்கவும் செய்கிறார். ஆனால் வெளிவேடக்காரருக்கு நீதி என்பது கடவுருடைய கட்டளைகளுக்கு வெளிப்பிரகாரமாக ஒத்து நடப்பதாகும். அவர்களது உள்ளமோ திருச்சட்டம் கற்பிக்கும் நீதியை நிராகரித்தது, மக்களின் கவனத்தை கவருவதற்கே திருச்சட்டம் கற்பிக்கும் நீதியை பின்பற்றுவது போல நடித்தனர்.

இங்ஙனம் திருச்சட்டத்தில் கடவுள் வலியுறுத்தும் நீதியின் புனிதத்தன்மையை கடைப்பிடிக்கத் தவறி சமூக அநீதிகளோடு வாழ்ந்து வந்த வெளிவேடக்காரரின் முகத்திரையை இயேசு கிறிஸ்து கிழித்தெறிந்தார். தனது பணியின் முன்னுரையாக பகிர்ந்து கொண்ட மலைப்பொழிவில் தன்னை பின்பற்றுவோர் இறைநீதியுடன் (மத் 5 :17-48; 6;1-18) வாழவேண்டும் என அறிவுறுத்திய இயேசு கிறிஸ்து வெளிவேடக்காரரின் போலியான நீதியினை (மத் 23:23) பெரிய இறைவாக்கினர்களை விட பெரிய அளவில் கண்டித்தார். இதன் வழியாக திருச்சட்டம் கற்பிக்கும் நீதி சமுதாயத்தை சீர்ப்படுத்தவே. ஆனால் அவை நுகத்தடியாயிருந்து மனிதனை காயப்படுத்துவதற்காக அல்ல என்பதை மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார். நீதியானது நமக்கு கற்றுத்தரும் ஒழுக்கமுறைகளை நாம் கடைப்பிடித்து வாழ்ந்தால் இச்சமுதாயம் சிலுவையின் அன்பை அனுபவிக்க முடியும்.

### *2. திருச்சட்டம் கற்பிக்கும் இரக்கம் :*

திருப்பாடலாசிரியர் கடவுள் தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர் (திருப் 145 :9) எனப்பாடுவது போலவே இறைவனின் இரக்கம் இஸ்ராயேல் வரலாற்றில் நிரம்பிக் காணப்படுகிறது. சிறப்பாக, திருச்சட்டம் கற்பிக்கும் இரக்கத்தை இணைச்சட்டம் 14:27-29 லிருந்து நாம் அறிந்து கொள்ளமுடிகிறது, உன் நகரில் குடியிருக்கும்

லேவியனுக்கு உன்னோடு பங்கும் சொத்துரிமையும் இல்லாததால், அவனைக் கைவிட்டுவிடாதே (14:27), மூன்றாம் ஆண்டின் இறுதியில் அவ்வாண்டில் விளைகின்ற எல்லாப் பலன்களிலும் பத்திலொரு பாகத்தைப் பிரித்து உனது நகரின் வாயிலருகே வை(14:28) . உன்னோடு பங்கும் சொத்துரிமையும் இல்லாத லேவியரும், உன் நகரில் வாழும் அன்னியரும், அனாதைகளும், கைம்பெண்களும் உண்டு நிறைவுகொள்வர். அப்பொழுது அனைத்து செயல்களிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவார்(14 :29). இப்படி சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்னடைவுடன் கைவிடப்பட்ட நிலையிலிருப்போரை நாம் கைவிடாமல் இரக்கம் பாராட்ட வேண்டும் என திருச்சட்டம் இரக்கத்தை வெளிப்படுத்தி வாழ்வை முறைப்படுத்தி எண்ணங்களை தூய்மைப்படுத்தி ஆதரவற்றோர்க்கு அரவணைப்பையும் ஏற்படுத்தி மனித வாழ்வை வளப்படுத்துகிறதுமாயிருக்கிறது.

தங்களுக்கு நேரிடும் அவமானத்திலிருந்து தப்பித்துக் கொள்ள திருச்சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகத் திரித்துக் கூறிவந்த வெளிவேடக்காரரின் இரக்கமற்ற செயலைக்கண்டு இயேசு திருச்சட்டம் கற்பித்த முதன்மையான கட்டளை. "உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூருவாயாக" (மத். 22:39) என்பதே' என்று நினைப்பூட்டினார், இரக்கமுடையவராக வாழ்ந்தால் மட்டுமே இரக்கம் பெற முடியும். ஆகவே இத்தவக்காலத்தில் இறுகிய மனத்தோடல்ல திருச்சட்டம் கற்பிப்பது போல இளகிய மனதோடு ' உன்னிடம் வறியவர் இல்லாதிருக்கட்டும் ' (இணைச 15 :4)- என்னும் நிலை மலர்ந்திடச் செய்வோம்.

### *3. திருச்சட்டம் கற்பிக்கும் நம்பிக்கை :*

ஆபிரகாம் செய்த பெரும் தியாகம் எப்பொழுதும் இறைவனில் வைக்கும் நிறைவான நம்பிக்கைக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கின்றது. (தொநூ. 22). ஆனாலும் இஸ்ராயேலின் இறை நம்பிக்கையில் தொய்வு ஏற்பட்டது. எனவே கடவுள் திருச்சட்ட நூலில் "நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்" (லேவி. 26:1) என மீண்டும் உறுதியாக கூறுகிறார். அப்படியிருந்தும் அந்த வாழ்வு தரும் கடவுள் மீதுள்ள நம்பிக்கையில் பின்னடைவும் போலித் தன்மையும் வளர்ந்து கொண்டே வந்தது, இச்சூழலில் கடவுள் இறைவாக்கினரைக் கொண்டு இஸ்ராயேலின் நம்பிக்கையைத் தூய்மைப்படுத்தவும் அதுதளராவண்ணம் காத்துக் கொள்ளவும் முயற்சி செய்தார். இப்படியிருந்தும் உயிரற்ற சடங்கு முறையான வழிபாடு, சிலை வழிபாடு, ஆதிக்கம், உடன்படிக்கைகள்

போன்றவைகளைச் சாதகமாக்கிக் கொண்டனர். இறைவாக்கினர் இத்தகைய பொய்த் தோற்றமுடைய நம்பிக்கையைக் கண்டனம் செய்தனர்,

இங்ஙனமே வெளிவேடக்காரரும் உயிரற்ற சடங்கு முறைகளை பின்பற்றி சமயத்தின் பெயரால் திருச்சட்டத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்தி பிறரை ஒடுக்கி பொய்த்தோற்றமுடைய நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தனர். மேலும் நாங்கள் மட்டுமே மறைநூல் அறிவுடையவர்களும் நீண்ட நேரம் இறைவேண்டல் ஏறெடுப்போர் எனவும் கூறி பக்திக்குரிய கிரியைகளால் பாசாங்குகாட்டி பிறரை ஏமாற்றி வந்தனர். எனவே இயேசு அவர்களிடம் உங்கள் நம்பிக்கையை தூய்மைப்படுத்துங்கள், காரணம் 'நம்பிக்கை' முதன்மையானவைகளில் ஒன்றாகும். தூய அகஸ்டின், 'ஆழமான இறைநம்பிக்கை நல்வாழ்வின் ஆரம்பம்' என கூறியிருக்கிறார். ஆகவே திருச்சட்டத்தையும் திருச்சட்டத்தின் நிறைவேறுதலாகிய கிறிஸ்துவின் திருப்பெயரிலும் என்றும் நம்பிக்கை கொண்டு கிறிஸ்துவின் வழியாக கடவுள் அருளும் மீட்பையும் சொந்தமாக்கிக் கொள்வோம் (உரோ. 10:4).

திருப்பாடல் 50-இல் ஆசிரியர் இறைவாக்குரைக்கும் போது, விண்ணும் மண்ணும் ஆண்டவரின் நீதித்தீர்ப்புக்கு பின் நிற்கும்போது, சட்டங்களை வெறும் கடமைக்காகவே பின்பற்றுவோரையும் (6-15) சட்டங்களும் வாழ்வுக்கும் தொடர்பற்ற நடத்தையுடையவர்களையும் (16-26) ஆண்டவர் தண்டிப்பார். எனவே நாமும் திருச்சட்டம் கற்பிக்கும் முதன்மையானவைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை இவைகளை விட்டுவிடாமல் வாழ்வோம். இந்த நீதி, இரக்கம், நம்பிக்கை தான் ஒரே ஆன்மிக ரீதியின் பல கோணங்களாகும்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**15-03-2015**

*உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு*

# விடுதலையருளும் உண்மைத் தொழுகை

## TRUE WORSHIP THAT LIBERATES

விப 3:11-18 திப 16:25-34
திபா 137 லூக் 13:10-17

**"...உமது நோயி-ருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்."** லூக் 13:12

***இறைவேண்டல் : எங்கள் ஆண்டவராகிய கடவுளே, துதிகளோடும் புகழ்பாக்களோடும் நாங்கள் உம்மிடம் வருகின்றோம். ஆவியோடும், உண்மையோடும் உம்மைப் பணிய அருள்தாரும். நாங்கள் எம்மை உயிருள்ள பலிகளாய் அர்ப்பணிக்கின்றோம். எங்களை அமைதி மற்றும் நீதியின் கருவிகளாக்கி எங்கள் வாழ்வில் செயல்களை ஏற்புடைய தூய தொழுகையாக அங்கீகரிக்க வேண்டுமென திருமைந்தர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.***

தொழுகை என்பது மனிதனோடு இரண்டற கலந்த ஒன்று. தொழுகையில் மனிதன் பங்கு கொள்ளும் போது உள்ளான மனதில் மகிழ்ச்சி உருவாகிறது. இறைவன் ஒருவரே தொழுகைக்கு உரியவர். தொழுகை செய்யும் இடங்களோ அல்லது மனிதர்களோ வணக்கத்திற்குரியவர்கள் அல்ல. திருமுழுக்கின் வழியாக நாம் ஆண்டவரோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். எனவே அவரை உண்மையோடும், கருத்தோடும் தொழுவது மனிதர்களின் கடமையாகும். 'தொழுகை' என்பதற்கு "Leitourgia" என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சொல்லின் பொருள் "இறைமக்களின் பணிவிடை" என்பதாகும். தொழுகை என்பது கடவுள் தம் மக்களுக்கு தந்த பணிவிடை ஆகும். தொழுகையின் வாயிலாக தான் இறைமக்கள் ஆண்டவரின் பிரசன்னத்தை உணரமுடியும். மனிதர்களின் சிந்தை, சொல், செயல் கடவுளோடு ஒருமுகப்படுவது தொழுகையில் தான். எனவே தான் மக்கள் தங்கள் வாழ்வின் விடுதலை வேண்டி தொழுகையில் கலந்து கொள்ளுகின்றனர். அந்த தொழுகை பொருளுள்ளதாக அமைய வேண்டுமெனில் கடவுளின் திரு முன் நம் நிலை என்ன என்பதை உணர்ந்து பங்கு பெறவேண்டும். அவ்வாறு பங்கு கொள்ளும் போது தான் நமது நோக்கங்கள் நிறைவேற தொழுகை கருவியாக பயன்படுகிறது.

***1. தொழுகை கூட்டு வாழ்வில் விடுதலை தருகிறது:*** (விப. 3:12)

யோசேப்பின் காலத்தில் பஞ்சத்தின் காரணமாக எகிப்தில் வந்து குடியேறின அவரது உறவினர்கள் பின்னர் பலுகிப்பெருகினர். இவர்களது காலத்திற்கு பின் வந்த பார்வோன் இந்த இஸ்ரவேல் மக்களை வேலையினால் கொடுமைப் படுத்துகிற பொழுது கடவுள் மோசேயிடம் ‘‘இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள்” என்றார். இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையின் விடுதலைக்கு தொழுகை அடையாளப் படுத்தபடுகிறது. எனவே தான் கடவுள் மோசேயிடம் நீங்கள் எகிப்திலிருந்து வந்த பின் இந்த மலையில் கடவுளை தொழுவீர்கள் என்றார். அமெரிக்க அதிபர்களில் புகழ்பெற்ற ஒருவர் ஜார்ஜ் வாஷிங்டன். அவர் காலை, மாலை நேரங்களில் கடவுளை தொழுவதை மிகவும் உறுதியாக கடைபிடிப்பார். ஒருமுறை அமெரிக்க படைகள் ஒரு போரில் ஈடுபட்டிருந்தன. ஜார்ஜ் வாஷிங்டன் அதிகாலை நேரத்தில் கடவுளின் உதவி வேண்டி ஆண்டவரை தொழுதுக்கொண்டிருந்தார். இதை அவரது தோட்டத்தில் வேலை செய்யும் விவசாயி பார்த்து கொண்டிருந்தார். தன் வீட்டிற்கு சென்ற விவசாயி, தன் மனைவி ஹேனாவை கூப்பிட்டுச் சொன்னார். “ஹேனா! இந்த போரில் நமக்கு தான் வெற்றி; அமெரிக்காவின் வெற்றி நிச்சயம்”. இதை எப்படி இவ்வளவு உறுதியாய்க் கூறுகிறீர்கள்? என்பது ஹேனாவின் கேள்வி. விவசாயி சொன்னார், ‘‘வாஷிங்டன் அதிகாலை நேரத்தில் ஆண்டவரை தொழுகிறபொழுது அமெரிக்காவின் வெற்றிக்காக ஜெபித்ததை கேட்டேன் எனவே நிச்சயம் வெற்றி கிடைக்கும்” என்றார். அதைப்போல வெற்றியும் கிடைத்தது.

இன்று இறைமக்கள் ஆபத்து காலங்களில் மட்டும் கடவுளை அதிகமாக தேடி தொழுகை செய்வது வழக்கத்தில் உள்ளது. உலகமயமாதல் சூழலிலும் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியிலும் கடவுளை ஏன் தொழ வேண்டும் என்ற நிலையில் மனிதர்கள் வந்து விட்டனர். தாங்கள் செய்வது தான் சரி என்ற நிலையில் வந்துவிட்டதால் கடவுளை தொழுவது இன்று இரண்டாம் நிலையாக மாறிவிட்டது.

இறைமக்கள் தாங்கள் வாழும் தூய்மையற்ற நிலைகளிலிருந்து திரும்பி இறைவனது தூய்மைக்குள் நிலைத்திருப்பதே உண்மையான தொழுகை. அந்த தொழுகையே கூட்டு வாழ்வில் விடுதலை தரும். பல்வேறு பாரம்பரியங்கள், கோட்பாடுகள் மக்களிடையே இருந்தாலும் ஒரே விசுவாசம், ஒரே நம்பிக்கையோடு ஒரே கடவுளை தொழ அழைக்கப்படுகிறோம். எனவே தான் இயேசு கிறிஸ்து “நீர் என்னிலேயும்

நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" என்றார். இத்தகைய உண்மையானத் தொழுகை கூட்டு வாழ்வில் விடுதலை தரும்.

### 2. தொழுகை தனி மனித வாழ்வில் விடுதலை தருகிறது:

**(லூக். 13:12-13)**

'மனிதன் என்ற சொல் கிரேக்க மொழியில் "Anthrapos" எனப்படுகிறது. இதன் பொருள் "Upward Looking One", "ஏறெடுத்து பார்ப்பவன்". அதாவது, மனிதன் இறைபிரசன்னத்தில் வாழ வேண்டியவன் என்பதாகும். தொழுகைக் கூடத்தில் இயேசு கிறிஸ்து போதகம் பண்ணிக்கொண்டிருக்கும் போது பதினெட்டு வருடமாய் பலவீனப்படுத்தும் ஆவியை உடைய பெண்மணியும் அங்கு இருந்தார். அவரை இயேசு கிறிஸ்து தம்மிடத்தில் அழைத்து தனது கைகளை அவர்மேல் வைத்து குணமாக்கினார். இங்கே இந்த பெண்மணி மிகுந்த பலகீனத்திலிருந்தாலும் அதனை பொருட்படுத்தாமல் இறைபிரசன்னத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தபடியினால் தொழுகையில் இயேசு கிறிஸ்துவால் நலம் பெற்றார். தொழுகையில் கலந்துகொள்ளும் நமது செயல், சிந்தனை, சொல் அனைத்தும் கடவுளோடு இணைந்திருந்தால் மட்டுமே தொழுகை மனித வாழ்வில் விடுதலை தரும். பொருளுள்ளதாய் அமையும். இன்று நம்மில் அநேகருடைய வாழ்க்கையில் தொழுகை பொருளற்று போவதற்கு ஆன்மிக வாழ்க்கையில் உண்டான தளர்ச்சியே காரணம் எனலாம். உலக ஆதாயத்தை தேடி நாடி தொழுகையின் வழி கிடைக்கும் உண்மையான ஆன்மிக விடுதலையை இழந்து விடுகின்றனர். நிலைத்திருந்தால் விடுதலையுண்டு. இன்றும் அநேகர் தங்களின் சொந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை என்று கூறி தொழுகையை புறக்கணிக்கின்றனர். சிலர் எங்களுக்கு தொழுகையினால் என்ன பலன் என பேசுகின்றனர். இந்த சிந்தனைகள் மாறி இறைவனோடு இணைந்து இருக்கிற பொழுது நன்மைகள் கிடைக்கும். அதற்கு தொழுகை உதவி செய்கிறது. இறைவனுடைய பிரசன்னத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனில் உலக வாழ்க்கையில் பலவற்றை நாம் விட்டு விடவேண்டும். கடவுளுக்கு முன்னால் நம்மை ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க செய்ய தொழுகை மனித வாழ்வில் கருவியாக பயன்படுகிறது.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

# பட்சிக்கும் ஓநாய்

## FEROCIOUS WOLF

திருமறைப்பாடம்: மத் 7: 15-19

**"... உள்ளேயோ அவர்கள் கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள்".**
**மத்7:15**

மெக்சிகோ நாட்டைச் சார்ந்தவர் Chuy Aceves. இவர் பிறக்கும் போதே Hypertrichosis என்ற நோயினால் பாதிக்கப்பட்டார். இந்தப் பாதிப்பின் காரணமாக இவருக்கு உடலின் எல்லாப் பகுதிகளிலும் அளவுக்கு அதிகமாக உரோமங்கள் வளர்ந்தன. இவரது முகம் முழுவதிலும் அதிகமாக உரோமங்கள் வளர்ந்திருந்ததாலும் பார்ப்பதற்கு இவரது முகம் ஓநாயின் முகத்தைப் போலிருந்ததாலும் இவரை எல்லோரும் ஓநாய் மனிதன் என்று அழைத்தனர். 2007 -ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகம் இவரை ஓநாய் மனிதன் என்றே பதிவு செய்தது. இவரது இந்தத் தோற்றத்தின் காரணமாக இவருக்கு யாருமே வேலை தர முன்வரவில்லை.

இந்நிலையில் Circus of Horrors என்னும் நிறுவனம் "Wolf Boy" வேடமேற்று சர்க்கஸில் பங்கேற்க ஆட்கள் தேவை என விளம்பரம் செய்தது. Chuy Aceves என்ற ஓநாய் மனிதன் நேர்முகத் தேர்வில் பங்கேற்று "Wolf Boy" பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டார். இந்தப்பணி மிகக்கடினமாக இருந்தாலும் மனதுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாக உள்ளது என்று கூறியுள்ளார். கத்தி மேல் நடப்பது போன்ற பல பயிற்சிகளை இவர் செய்து வருகிறார். ஓநாயைப் போன்று தோற்றமுடைய இவர் ஓநாயைப் போல சர்க்கஸில் நடந்து கொள்ளவும் தன்னைத் தயார் செய்துள்ளார். இருப்பினும் ஓநாய் போன்ற தோற்றத்தால் எல்லோரும் தன்னை வெறுக்கின்றனர் என்பது இவரின் வருத்தமாகும்.

மனிதர்களால், ஏன்? ஏனைய விலங்குகளாலும் அதிகம் வெறுக்கப்படும் விலங்கு ஓநாயாகும். பழங்காலக் கதைகளில் கூட தீமையின் அடையாளமாக (Evil Symbol) ஓநாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. நமது மரபிலும் கூட "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்" என்றொரு சொல் வழக்கு உண்டு.

"To keep the wolf from the door" என்பது பொன்மொழியாகும். திருமறையில் ஓநாய் பல பொருள்களிலும் ஞானார்த்தமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதரிடம் புகுந்து விட்ட ஓநாயின் தீமையான இயல்புகளை, திருமறை வாயிலாகக் கண்டறிந்து (மத். 7 : 15 லூக். 10 : 3) அவைகளைக் களைய இன்றைய நாளின் தியானம் நமக்கு உதவுவதாக.

### *1. வேடதாரியான விலங்கு ஓநாய் :*

ஓநாய்களில் பல வகைகள் இருந்தாலும் பொதுவான வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றறர். அவையாவன: (i) Dominant Wolf, (ii) Subordinate Wolf.

#### i. *அதிகாரம் செலுத்துவன* **(Dominant Wolf) :**

மற்ற விலங்குகள் முன் நிமிர்ந்து நிற்கும். எப்போதும் வாலை உயர்த்தி வைத்திருக்கும். காதுமடல் மேல் நோக்கியே இருக்கும். பற்கள் தெரிய ஊளையிடும்.

#### ii. *அடங்கி வாழ்வன* **(Subordinate Wolf) :**

மற்ற விலங்குகளையோ மனிதர்களையோ கண்டால் பதுங்கும் தன்மையுடையது. வாலை இரு பின்னங்கால்களின் இடையில் வைத்துக்கொள்ளும். காதுமடல் தொங்கிக் கொண்டிருக்கும். இவைகளின் ஊளையிடுதல் Dominant Wolf ஐப் போல் சத்தமாக இல்லாமல் சிணுங்குதலைப் போலிருக்கும்.

இவைகளுக்கு விருப்பமான உணவு ஆடுகளின் மாம்சமாகும். ஆடுகளைத் தன் வயப்படுத்திக் கொள்வதற்காக இவைகள் மறைந்திருந்து சிணுங்கும். இச்சிணுங்குதலைக் கேட்ட ஆடு ஆபத்தின் தீவிரத்தை உணராமல் சிணுங்கல் குரலை நோக்கிச் செல்லும். அண்மையில் சென்றதும் மறைந்திருந்த ஓநாய் வெளிப்பட்டு ஆட்டை அடித்துக்கொன்று உண்ணும். இப்படி, குரலில் கூட வேடம் புனைந்து வேட்டையாடும் இயல்புடையது ஓநாய்.

ஆகவே தான், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, போலி இறைவாக்கினர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு உங்களிடம் வருகின்றனர், ஆனால், உள்ளேயோ அவர்கள் கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள் என்கிறார். இத்தகையோரை அவர்களது செயல்கள் வாயிலாக அடையாளம் காண ஆண்டவர் நம்மை அழைக்கிறார் (மத். 7 : 15, எசேக். 22 : 27).

ஓநாய் அசுரப் பசியுடைய ஒரு விலங்கு. எப்போதும் வேட்டையாடுதலையே நோக்கமாகக் கொண்டிருக்கும். விருப்பமான உணவுக்காக வெறிகொண்டு வெகுதொலைவு வரை செல்லும். ஒரு ஓநாய் மட்டும் 15 பவுண்டு இறைச்சி உண்ணுமாம். அந்தளவுக்குப் பெருந்தீனி. மீந்தது வேறு எவருக்கும் கிடைத்து விடக்கூடாது என்று புதைத்துவிடும்.

செப்பனியா இறைவாக்கினர், எருசலேமின் தலைவர்கள் மாலையில் கிடைப்பதை காலைவரை வைத்திராத ஓநாய்கள் என்கிறார் (செப். 3 : 3).

எபேசு சபை மூப்பர்களுக்கு திருத்தூதரான பவுல், ஆண்டவர் தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக்கொண்ட திருச்சபைக்குள் ஓநாய்கள் புகுந்து மந்தையைத் தாக்கிவிடாதபடி விழிப்புடனிருக்க எச்சரிக்கிறார் (திப. 20 : 28-31).

## *2. ஓநாய்களுக்குள்ளே அனுப்பப்படும் ஆடுகள் :*

**(லூக். 10:3, மத். 10:16)**

"... ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதைப் போல நான் உங்களை அனுப்புகிறேன்".

லூக்கா 10 -ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து 70 பேரை நற்செய்திப் பணிக்கு இருவர் இருவராக அனுப்புகிறார். இந்த "எழுபது" எதைக் குறிக்கிறது என்பதை திருமறை அறிஞர்கள் பின்வருமாறு விளக்குகின்றனர்.

* பாலை நிலத்தில் இஸ்ராயேல் மக்களை விசாரிக்க மோசேக்கு உதவியாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 70.

* சனகெரீம் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 70.

* உலக அரசுகளின் எண்ணிக்கையும் 70 எனக் கருதப்பட்டது.

அனைத்துலக நோக்குடன் இயேசு கிறிஸ்து எழுபது பேரை நற்செய்திப் பணிக்கு அனுப்பினார் எனப் புரிவது சிறப்பானது. அப்படி அவர் அனுப்பும் போது தம் சீடர்கள் 70 பேரிடமும் ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதைப் போல உங்களை அனுப்புகிறேன் (லூக். 10 : 3) என்றார். இயேசு யாரை ஓநாய்கள் என்கிறார். கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த அவர்களது சீடர்களுக்கும், தொடர்ந்து வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும் அக்காலத்தில் இரு தரப்பிடமிருந்து நெருக்கடிகள் வந்தன.

i. யூதர்கள், யூத சமயக் குழுக்கள் (பரிசேயர், சதுசேயர், திருச்சட்ட அறிஞர், தலைமைக் குரு போன்றோர்).

ii. உரோமை ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள்

இவர்கள் குரூர எண்ணமுடையோராயும், மக்களை ஏய்த்தும், அழித்தும் தங்களை வளப்படுத்திக்கொண்டனர் (ஆபகூக் 1 : 8). ஆகவே இயேசு கிறிஸ்து இவர்களை ஓநாய்கள் என்கிறார். இத்தகையோரை அடையாளம் கண்டு விலகவும் அவர்களின் தீமையான இயல்புகள் நம்மிலும் குடிகொள்ளாமல் காக்கவும் ஆண்டவர் நம்மை விழிப்புடனிருக்க வலியுறுத்துகிறார்.

செவ்வியந்தியர்களின் நாடோடிக் கதை இது. முதியவர் ஒருவர், இளைஞனான தன் பேரனுடன் குடிலின் வெளியே அமர்ந்திருந்தார். தூரத்தில் ஓர் ஓநாய், ஆடு ஒன்றைக்கொன்று உண்ண அதனோடு சண்டையிடுவதை இருவரும் கண்டனர். முடிவில் அந்த ஆட்டை ஓநாய் கொன்று போட்டது.

பின்னர் முதியவர், இளைஞனிடம் சொன்னார். இதைவிடப் பயங்கரமான ஒரு யுத்தம். என்னுள்ளும் ஓர் ஆடும் ஓநாயும் சண்டையிட்டுக் கொண்டே இருக்கின்றன. ஓநாய் தீமையானது. கோபம், பொறாமை, பேராசை, பொய், போலிப் பெருமை போன்ற தீய குணங்களின் வடிவமாக இருக்கிறது. ஆடு, நன்மையானது அன்பு, நன்றி, கருணை, தியாகம், உண்மை, நம்பிக்கை போன்ற நற்பண்புகளின் வடிவமாக உள்ளது.

இந்த ஓநாய்க்கும் ஆட்டுக்கும் இடையேயான சண்டை உனக்குள்ளும்... ஏன்? உனக்குள் மட்டுமன்று மனிதர்கள் அனைவருக்குள்ளும் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது என்றார். முதியவர் சொல்லி முடித்ததும் இளைஞன் கேட்டான். என்னுள் நடக்கும் இச்சண்டையில் எது ஜெயிக்கும். ஓநாயா? ஆடா?. நீ எதை உற்சாகப்படுத்துகிறாயோ அது வெற்றி பெறும். நீ எதை உதாசீனம் செய்கிறாயோ அது வீழ்ச்சியுறும் என்றார் முதியவர்.

நம்மில் ஓநாயின் தீமையான இயல்புகள் எவையெனக் கண்டறிந்து அவைகளை முற்றிலும் ஒழித்து இறைசாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்வோம்.

திரு. B. ***சாம் ஜெபசிங்***

**20-03-2015** ***தவக்கால ஐந்தாம் வெள்ளி***

# சட்டத்தின் மாண்பா? மனித மாண்பா ?
## DIGNITY OF LAW OR HUMAN?

திருமறைப்பாடம் : யோவா 8:1-11

**"...நீர் என்ன சொல்லுகிறீர்?"** யோவா 8:5

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு, தன்னுடைய மனைவியின் காது வரவர மந்தமாகிக் கொண்டு வருவது போன்று தோன்றியது. இது உண்மையா என்று கண்டறிய விரும்பினார். ஒரு முறை மனைவி சமைத்துக் கொண்டிருந்தபோது, அவருக்குத் தெரியாத வகையில் பின்புறமாகச் சென்று, ஆறடி தூரத்தில் நின்று கொண்டு "நான் பேசுவது கேட்கிறதா?" என்று மெதுவாகக் கேட்டார். மனைவி கண்டு கொண்டது போலத் தெரியவில்லை. அடுத்ததாக மூன்று அடி தூரத்தில் நின்று கொண்டு, "நான் பேசுவது கேட்கிறதா?" என்று மெதுவாகக் கேட்டார் பதிலில்லை. இறுதியாக ஓரடி தூரத்தில் நின்று கொண்டு "நான் பேசுவது கேட்கிறதா?" என்று கேட்ட போது, மனைவி மறுமொழியாக, 'நீங்கள் ஏற்கனவே இரண்டு முறைகேட்ட கேள்விக்குச் சொன்ன அதே பதிலையே இப்பொழுதும் சொல்கிறேன். நன்றாகவே கேட்கிறது' என்றாராம். அதாவது காது மந்தம் மனைவிக்கல்ல மாறாக கணவனுக்குத்தான். வெளிவேடக்காரரும் பிறரது குற்றத்தைப் பெரிதுபடுத்தி தங்களுடைய குற்றங்களை மறைக்க முயற்சி செய்து கேள்விகளை தொடுத்து இருதலைக் கொள்ளி எறும்பாக இயேசுவையே சிக்கலில்மாட்டவிடத் துடித்தனர். ஆனால் இயேசு கிறிஸ்து குற்றச்சாட்டினவர்களையும் குற்றஞ்சாட்டப் பட்டவர்களையும் தமது மனதில் பதித்து நிதானித்துச் செயல்பட்டார். யோவா. 8:1-11-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வின் வழியாக மலைப்பொழிவில் இயேசு போதித்த "வெளிவேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள்" (மத். 7:5) என்ற உண்மைக்கு செயல்வடிவம் தருகிறார், அதனை தியானிப்போம்.

### *1. மனித மாண்பைச் சோதிக்கும் வெளிவேடக்காரர் :*

அடுத்தவரின் குற்றங்களைப் பெரிதுபடுத்துவது என்றால் வெளிவேடக்காரருக்கு அல்வா போல இருந்தது அதே வேளையில் அவர்களது குற்றங்களை ஏற்றுக்கொள்வது என்பது வேப்பங்காய் போன்ற கசப்பு என உணர்ந்தவர்களே அரக்கக்குணத்துடன் ஏழைகளையும் ஆதரவற்றவர்களையும் இயலாமையில் உள்ளவர்களையும் ஒடுக்கினார்கள். ஆனால் இரக்க குணத்துடன் மனித மாண்புடனும்

செயல்பட்ட இயேசுகிறிஸ்துவை சோதிக்க சூழ்ச்சியுடன் முன்வந்தனர். விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என (லேவி 20:10; இச. 22:22-24) திருச்சட்டத்திலுள்ள கட்டளைக்கு பின்னணியமாக இருந்த, கடவுள் மனித மாண்பை வெளிவேடக்காரர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. யோவா 8-ம் அதிகாரத்திலுள்ள நிகழ்வின்படி இயேசு எழுந்து நின்று இவளை கல்லெறிந்து கொல்லுங்கள் எனக் கூறியிருந்தால் உடனே அவர்கள் இயேசு மனதுருக்கமில்லாதவர் எனக் குற்றப்படுத்தியிருக்க கூடும். அதே வேளையில் இப்பாவத்தை இயேசு 'கண்டும் காணாமல்' விட்டுவிடவும் இல்லை. மனித மாண்போடு / மனித நேயத்தோடு 'நானும் தீர்ப்பு அளிக்கவில்லை' எனக் கூறிய ஆண்டவர் 'நீ போகலாம் இனிப்பாவம் செய்யாதீர்' (யோவா 8:11) என எச்சரித்து அனுப்பினார். இங்கு அப்பெண்ணுக்கு தன் வாழ்வை தூய்மையாக காத்துக்கொள்ள 'அடுத்தொரு வாய்ப்பை' (Second Chance) அருளியது இயேசுவின் மனித மாண்பை நமக்குப் புலப்படுத்துகிறது எனவே இதன் வழியாக "பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு கிறிஸ்துவில் நற்செய்தியாம் அடுத்தொரு வாய்ப்பு உண்டு" (In Jesus There is the Gospel of the Second Chance) என்பதை புரிந்து கொள்வதில் நாம் தவறிப்போகக் கூடாது. இயேசு கிறிஸ்து மனிதநேயமுடையவர் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. அதுபோலவே எல்லாக் காலத்திலும் எல்லாச் செயலிலும் நாமும் இயேசுவைப் போல மனித மாண்பை வெளிப்படுத்துவோம்.

### *2. மறைநூல் கையாளப்படுவதைச் சோதிக்கும் வெளிவேடக்காரர் :* (யோவா 8:5,6)

வெளிவேடக்காரர்கள் இயேசுகிறிஸ்து மறைநூலைக் கையாளுபவரா எனச் சோதிக்க திட்டமிட்டு சூழ்ச்சியுடன் அப்பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்து நிறுத்தினர். பாவத்தின் மீது இருந்த வெறுப்பின் காரணமாகவோ அல்லது மறைநூலின் மீது இருந்த பிடிப்பின் காரணமாகவோ அல்ல. மாறாக இயேசு மறைநூலைக் கையாளாமல் செயல்படுகிறார் எனச் சமுதாயத்திற்கு படம் பிடித்துக்காட்ட எடுத்துக் கொண்ட சூழ்ச்சியே. அதாவது மறைநூலின் போதனைபடி (யூதச்சட்டப்படி) வேசித்தனம் செய்தவர்கள் கல்லாலெறிந்து கொல்லப்பட வேண்டும் (இச. 22:22-24) ஆனால் யூதர்களை அடிமைப்படுத்தியிருந்த உரோமையர்களின் சட்டம் இதை அனுமதிக்கவில்லை. யூதச்சட்டத்தின் (மறைநூல்) அடிப்படையில் ஒருவருக்கு மரண தண்டனை அளிப்பதை உரோமைச்சட்டம் தடைசெய்திருந்தது. இச்சூழலில் இயேசுகிறிஸ்து மறைநூலை ஆதரித்தார் என்றால் உரோமையர்களின் சட்டத்தை எதிர்ப்பவர் ஆகின்றார். இதன் காரணமாக உரோமையர்கள் அவருக்குத்

தொந்தரவு கொடுக்கலாம். இதற்கு மாறாக உரோமையர்கள் சட்டத்தை ஆதரித்து அப்பெண்ணை விடுதலை செய்தார் என்றால் மறைநூலை எதிர்ப்பவர் ஆகின்றார். இதை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இயேசு தனது சாதுரியத்தால் அவர்களை வென்றுவிடுகிறார். போட்டி போட்டு முன்னேற துடிக்கும் மனிதன் இப்படியும் குற்றப்படுத்தமுயல்வது இயல்பே ஆனவே இறைமக்களாகிய நாம் மிக எச்சரிப்புடனும் விவேகத்துடனும் செயல்படுவதே இறைவிருப்பம்.

### *3. மறுமொழி சொல்லமுடியாமல் தவித்த வெளிவேடக்காரர் :*

வெளிவேடக்காரர்களின் பாவங்களை கிறிஸ்து அறிந்திருந்தாலும் அவற்றிற்காக அவர் அவர்களைத் தீர்ப்பிடவில்லை. விபச்சாரப் பெண்ணை மன்னித்தது போல, அவர்களையும் மன்னிக்கத் தயாராகவே இருந்தார். "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல்எறியட்டும்". (யோவா 8:7) என்று சொன்னது, அவர்களுடைய பாவங்களைச் சுட்டிக் காட்டி அவர்களைத் தீர்ப்பிட அல்ல, மாறாக தாங்கள் மறைத்து வைத்திருக்கும் குற்றங்களை ஏற்றுக்கொண்டு, மனம் திரும்பி கடவுளிடம் திரும்பிவர வேண்டும் என்பதற்காகவே. ஆனால், வெளிவேடக்காரர்கள் அதைச் செய்யவில்லை. குற்றம் சுமத்த வந்தவர்கள் குற்றமுடையவர்கள் என உணர்ந்து தலைகுனிந்து வாயடைத்து திரும்பி சென்றனர். இறைமக்களாகிய நம்மை அடுத்தவர்கள் குற்றப்படுத்தவும் எதிர்க்கவும் வரும்போது ஆண்டவர் இயேசு கூறும் ஆலோசனையை மனதில் கொள்வோம். அதாவது, "நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன். உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும் எதிர்த்து பேசவும் முடியாது" (லூக். 21:15) தவக்காலத்தில் சிலுவையை நோக்கி பார்க்கும் பொழுது நமது குற்றங்களை உணர்ந்து, சிலுவையின் அன்பு நம்மையும் மன மாற்றத்திற்கு அழைக்கும் போது குற்றங்களுடன் தலைகுனிந்து செல்லாமல் குற்றங்களை விட்டுவிட்டு குறையாத அன்பில் நிலைத்து வாழ முயற்சிப்போம்.

திருவள்ளுவர் தனது 436-வது குறளில்,

"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என் குற்றம் ஆகும் இறைக்கு"

அதாவது தன்னிடம் இருக்கின்ற எல்லாக் குற்றங்களையும் நீக்கிப் பிறருடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டி, அதை நீக்கும்படி வழிகாட்டினால், அரசனுக்கு எந்தக் குற்றம் உருவாகும்? உருவாகாது. அது போலவே இத்தவக்காலத்தில் அடுத்தவரின் குற்றங்களைக் காண்பதை விட்டுவிட்டு, நம் குற்றங்களைக் களைய முற்படுவோம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**22-03-2015**

***உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு & பாடுகளின் ஞாயிறு***

# சிலுவை : மேசியா காலத்தின் புதிய திருக்காட்சி

## CROSS : A NEW VISION OF THE MESSIANIC AGE

| | |
|---|---|
| இச 18:15-22 | 2 கொரி 1:3-11 |
| திபா 73 | லூக் 18:35-43 |

**"மானிட மகனைப் பற்றி இறைவாக்கினர் வாயிலாக எழுதப்பட்டவை யாவும் நிறைவேறும்."** **லூக் 18:31**

***இறைவேண்டல் :*** *எங்கள் தந்தையாம் கடவுளே, உம் மைந்தராம் இயேசு கிறிஸ்து எங்களுக்காக, எங்கள் பாவங்களுக்காக அடிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டு பல துன்பங்களை ஏற்றுக்கொண்டார் என்பதையும் உணர்கிறோம். நாங்கள் வாழ்வு பெற அவர் இறந்தார் என்பதை சிலுவை அடையாளம் எப்பொழுதும் எங்களை நினைவுப்படுத்துகிறது. நீதி, நேர்மை, அமைதிக்காக நாங்கள் துன்புற உம் ஆளுகையின் தரிசனத்தால் எங்களை ஆற்றல்படுத்தும். உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

சிலுவை சிறப்பு பெற்றது எவ்வாறு என்ற கேள்விக்கு மேசியா காலம் குறித்த கடவுளின் திட்டம் சிலுவை வழியாக நிறைவேறியதால் தான் என்பது புலனாகிறது.

சிலுவை தன்னிலே சிறப்பிற்குரியது அன்று, அதனை சிறப்புப்படுத்திய ஒருவர் உண்டு. அவர்தான் ஆண்டவரும், உலக மீட்பருமான இயேசு கிறிஸ்து. உலகம் எதிர்பார்த்த அரசியல் மேசியா அல்ல அவர்; இறைவன் இறைவாக்கினர் வழியாக முன்னுரைத்த துன்புறும் பணியாளர் அவர். அவர் கொணர்ந்த ஆளுகை ஆயுதங்களால் எதிரிகளை அழித்து, உருவாக்குவது அன்று; மாறாக, சிலுவையில் தன்னைக் கையளித்து, பகைவர்களையும் மன்னித்து, மானுடத்தை அன்பு செய்து ஏற்படுத்திய இறை ஆளுகை ஆகும்.

### *1. மக்கள் பார்வையில் மேசியாவின் காலம் :*

மேசியா என்ற எபிரேய வார்த்தை அருட்பொழிவு செய்யப்பட்டவர் என்பதையும், மேசியாவின் காலம் என்பது அருட்பொழிவு பண்ணப்பட்ட அரசரின் ஆளுகை என்றும் முன்காலத்தில் மக்கள் எண்ணியிருந்தனர். கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட தாவீதின்

ஆளுகைக்கு ஒத்த அரசனின் ஆளுகையும், ஒன்றுபட்ட நாடு உருவாக ஏற்பட வேண்டும் என்பதும் மக்களின் விருப்பமும், எதிர்பார்ப்புமாக காணப்பட்டது. எனவே, சிறந்த கொடைகளையும், திறமைகளையும், நற்குணங்களையும் பெற்றிருந்த அரசர்களை மேசியாக்களாக கருதத் தொடங்கினர். ஆயினும் அவர்களால் சிறப்பான, முழுமையான, விடுதலையான, மகிழ்வான, அமைதலான ஆளுகையை கொடுக்க இயலவில்லை. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் உரோமை ஆளுகையின் கீழ் காணப்பட்டனர். எனவே ஓர் அரசியல் மேசியா தோன்றி தங்களை உரோமை அரசிடமிருந்து விடுவிக்க காத்திருந்தனர். கடவுளால் வாக்குரைக்கப்பட்ட, மக்கள் எதிர்பார்த்திருந்த, உண்மையான மேசியா இயேசு தான் என்பதனை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

### *2. திருமறை காட்டும் மேசியாவின் காலம் :*

எபிரேய மொழியில் சொல்லப்படும் 'மேசியா' அல்லது அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது கிரேக்க மொழியிலே "கிறிஸ்து" (Christos) என்ற வார்த்தையால் அறியப்படுகிறது. இயேசுவே கிறிஸ்து, இயேசுவே அருட்பொழிவு பண்ணப்பட்ட மேசியா என்பதை திருமறை அழுத்தமாக நிரூபிக்கின்றது. (மாற். 8:29; யோவா. 6:67-69; மாற். 14:61,62; மத். 26:63-64; லூக். 22:67,68; மாற். 15:2, 26).

மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவின் ஆளுகை இவ்வுலக அரசியல் தன்மை கொண்டதல்ல. எனவேதான் தன்னை மக்கள் அரசராக்க விரும்பியதை இயேசு தவிர்த்தார் (யோவா. 6:14, 15; 18:33-37; 19:12-15).

மேசியா காலத்து அரசு இறை மதிப்பீடுகளை கொண்ட கடவுளின் ஆளுகை. அந்த ஆளுகை கிறிஸ்து இயேசுவில் தொடங்கியது (மாற். 11:15-19; மத். 21 : 4; யோவா. 12:15,16; மத். 21:10-17; யோவா. 2:13-22). இறை மைந்தராம் கிறிஸ்து, மானுட மகனாம் இயேசு, துன்புறும் பணியாளனாய் இறை உளத்திற்கு ஏற்ப, பிறப்பு முதல் சிலுவை இறப்பு வரையிலும் பாடுகளை ஏற்றார்.

இவ்வுலகில் இறை ஆளுகையை ஏற்படுத்தினார் (லூக். 24:26,46; தி.ப. 3:18; 17:3; 26:23). எனவேதான், தான் ஏற்க போகும் சிலுவை இறப்பைக் குறித்து பல வேளைகளில் தனது சீடர்களோடு பகிர்ந்து கொண்டார். சிலுவை இறப்பின் அகோரத்தை உணர்ந்திருந்தபோதும் தந்தையின்

திருவுளத்தின்படி, தனது சிலுவை இறப்பால் மானுட மீட்பு நிறைவேற இயேசு தன்னை அர்ப்பணித்தார். (யோவா. 1:29).

### *3. சிலுவை கொணரும் புதிய திருக்காட்சி :*

சிலுவை வழியாக இயேசு கிறிஸ்து புது மானுடத்தை, புது சமூகத்தை நிறுவினார். இச்சமூகம் சமத்துவ, சகோதரத்துவ, விடுதலை பெற்ற சமூகம். பாவம், சாபம், வியாதி, சமூக தீமைகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்பட்ட சமூகம். இறை ஆசியை அனைவரும் பெற்றுக்கொள்ள, கடவுளை அனைவரும் தொடர்பு கொள்ள, தொழுதுகொள்ள, அவருக்கு பணிவிடை செய்ய இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பு வாய்ப்பை பெற்றுத்தருகிறது. உலக வரலாற்றில் பல்வேறு அடிமைத்தளைகளால், பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான, விடுதலைக்கான அமைதி வழியிலான போராட்டங்களில் குறிக்கோள் நிறைவேற சாவையும் துணிவுடன் ஏற்றுக் கொள்ள, மாபெரும் தாக்கத்தை சிலுவை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் மானிட மீட்பிற்காக சிலுவையில் பலியான கிறிஸ்து இயேசு, பலியாக்கப்படுகின்ற குற்றமற்ற (நிரபராதிகள்) மக்களின் குரலாக இருக்கின்றார். இவ்வாறு சிலுவை இறை அன்பின் உன்னத வெளிப்பாடாக அமைகிறது. மன்னிப்பு, அடைக்கலம், விடுதலை, ஏற்றுக்கொள்ளுதல், வெற்றி, நம்பிக்கை இவற்றின் இருப்பிடமாக திகழ்கிறது.

மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவின் சிலுவையை நோக்கிப் பார்ப்போம், இறை ஆற்றலையும், இறை அன்பையும் பெற்று, அவர் வழி நடப்போம்.

அருள்திரு. C. **ஜஸ்டின்**

**25-03-2015**

*தவக்கால ஆறாம் புதன்*

# இரட்சிக்கும் இறைவனின் செம்மறி

## LAMB OF GOD THAT REDEEMS

திருமறைப்பாடம் : யோவா 1 : 29-34

**"இதோ ! கடவுளின் ஆட்டுக்குட்டி ! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்"** யோவா 1:29

"I was never a keeper of sheep" - Albert Caeiro

திருமறையில் ஆடுகளைக் குறித்து பல்வேறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இஸ்ரயேலர்களுக்கு ஆடுகள் முதன்மையான ஆஸ்திகளாகவும், உணவுப்பொருள்களாகவும், தொடர்ந்த காலத்தில் பலிப்பொருளாகவும் கருதப்பட்டன. இதை மையமாக வைத்துத் தான் திருமுழுக்கு யோவான், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை "இவரே உலகின் பாவத்தைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி" என அறிமுகம் செய்கிறார். யூதர்கள், ஆடுகளை பொறுமையின் அடையாளமாகவும், இரக்கத்தின் அடையாளமாகவும், நேர்மையின் அடையாளமாகவும் கருதினர். ஆகவே தங்களை மந்தைகளாகவும் கடவுளை மேய்ப்பராகவும் கொண்டனர்.

இன்று ஆடுகள் வாயிலாக ஆண்டவர் நமக்கு உணர்த்தும் உண்மைகளைத் தியானிப்போம்.

### *1. வெள்ளாடா ? செம்மறியா ? :*

உலகெங்குமுள்ள ஆடுகளில் பல வகைகள் இருப்பினும் பொதுவாக ஆடுகளை வெள்ளாடு, செம்மறியாடு என இருபெரும் பிரிவாகத் திருமறை வகைப்படுத்துகின்றது. இருவகையான ஆடுகளும் பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் திருமறையை ஆழ்ந்து படிக்கும்போது இரண்டிற்குமான வேறுபாடுகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

**வெள்ளாடு**

முரட்டு குணம் உடையது. அத்துமீறி தனக்கு வரையறுக்கப்பட்டுள்ள வேலியைத்தாண்டும் தன்மைமிக்கது, தன்னலமிக்கது, தீமைகளுக்குப் பெயர்போனது (Notorious). ஆடுதீண்டாப்பாளையைத் தவிர, வளர்க்கப்படுகின்ற பொதுவான கால்நடைகளுக்குரிய (பதர், காகிதம் உட்பட) எல்லா உணவுகளையும் உட்கொள்ளும்.

எசே 34 : 17 -22 வரையுள்ள பகுதியில் வெள்ளாடுகளின் வெளிவேடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளாடுகளைப் போன்று வாழ்வோர் தமது தீர்ப்புக்கு தப்பமுடியாது எனவும் கடவுள் எச்சரிக்கிறார். இந்த வெள்ளாட்டு உருவகம் இஸ்ரவேலின் தலைவர்களையும், அவர்களது தன்னலமிக்க வாழ்வையும் சுட்டுகிறது.

**செம்மறியாடு**

செம்மறி அமைதியின் உருவேயானது. புற்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாவரங்களையும் மட்டுமே உண்ணும். அத்துமீறாது, வரையறைகளுக்கு உட்பட்டு வாழும். நற்பண்புகளுக்குப் பெயர் போனது(popular). திருமறையில் செம்மறியாடு சாந்தத்திற்கும், தூய்மைக்கும், துன்பமேற்றலுக்கும், தியாகத்திற்கும் அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவர் தம் தீர்ப்புநாளில் (மத் 7 : 21- 23, 13 : 40 -43) அனைத்து மக்களையும் கூடிவரச் செய்து, ஓர் ஆயர் தம் ஆடுகளை இரு பிரிவுகளாகப் பிரித்து செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவது போல கிறிஸ்து நல்லோரையும் தீயோரையும் முறையே தம் வலது, இடது புறத்தில் நிறுத்துவார் என்கிறார்( மத் 25:31 -46).

நாம் வெள்ளாடுகளைப் போலல்லாமல் செம்மறியின் இயல்புடையோராய் வாழ்ந்து கிறிஸ்துவின் வருகையில் அவரது வலப்புறம் வலம்வரும் வாய்ப்பைப் பெறுவோம்.

## *2. யாகமா ? தியாகமா ? :*

திருமுழுக்கு யோவான் இயேசு கிறிஸ்துவை உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியாக அறிமுகம் செய்வதை பழைய ஏற்பாட்டின் அடிப்படையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் மூன்று நிலைகளில் ஆடு பலி செலுத்தப்பட்டுள்ளது.

* பஸ்கா பலியாகிய ஆட்டுக்குட்டி (விபா 12 : 4)
* போக்கு ஆடு ( ஆண்டிற்கொருமுறை ஓர் ஆட்டைப் பிடித்து இஸ்ரயேலர் தங்கள் பாவங்களை அதன்மேல் சுமத்தி பாலைநிலத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவர். அது அவர்களின் பாவங்களைச் சுமந்தப்படி தனித்து திரியும் (லேவி 16 :20 -22)
* தினமும் காலையும் மாலையும் வழிபாட்டில் பலியிடப்படும் ஆட்டுக்குட்டி (விப 29 : 38 -46).

இவை யாகமாக (வேள்வி அல்லது பலி) இஸ்ரவேலரின் வழிபாட்டில் நிறைவேற்றப்பட்டு வந்தது. இந்தப் புரிதலில் திருமுழுக்கு யோவான் இயேசு கிறிஸ்துவை புதிய பஸ்கா செம்மறியாக அறிமுகம் செய்கிறார் (யோவா 1:29).

இயேசுகிறிஸ்து பஸ்கா ஆடாகப் பலியிடப்பட்டிருக்கிறார் என்பதற்கு திருமறை தரும் மற்றொரு சான்று பஸ்கா ஆட்டின் எலும்புகள் முறிக்கப்படக்கூடாது என்பதாகும் (விப 12 : 46). இயேசு கிறிஸ்து சிலுவையில் பலியானதும் உடன் அறையப்பட்ட கள்வர்களைப் போலல்லாமல், அவருடைய எலும்புகள் முறிக்கப்படவில்லை என யோவான் சான்று பகருகின்றார் (யோவா 19 : 33).

எபிரேயர் 10 ஆம் அதிகாரத்தில் பழைய பலிகளின் வலுவின்மை குறித்தும், இயேசு கிறிஸ்துவின் புதிய பலியின் மேன்மையைப் பற்றியும் ஆக்கியோன் விளக்குகிறார். பழைய பொருள்களாகிய காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்களின் இரத்தம் பாவங்களை போக்க இயலாதவை (எபி 10 : 1,4,11). இவை வெறும் யாகமாக (வேள்வி அல்லது பலி) மட்டுமே நிறைவேற்றப்பட்டு வந்தனவே தவிர மனிதருள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே உலகின் பாவம்போக்கும் செம்மறியாக மாறி பயனற்ற யாகமாக அல்ல நம்மைப் பரிசுத்தமாக்கும் தியாகபலியாகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார் (எபி 9 : 25; 10 :10,14; 1பேது 1 : 19). எப்படியெனில் காளைகளின், ஆட்டுக்கடாக்களின் இரத்தமும் கிடாரியின் சாம்பலும் யார் மீது தெளிக்கப்படுகிறதோ அவர்கள் சடங்குமுறைப்படி, வெளிப்படையான தூய்மையை மட்டுமே பெறுகின்றனர் (எண் 19 : 17 -19). ஆனால் கிறிஸ்து, தம் சொந்த இரத்தத்தையே எக்காலத்திற்குமெனப் படைத்து நம்மை மீட்டார். ஆகவே கிறிஸ்துவின் இரத்தம் உடலளவில் மட்டுமன்று நம் மனச்சான்றையும் தூய்மைப் படுத்துகிறது. (எபி 9 : 12 -14).

நிறைவாக, பஸ்கா ஆடாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் தீய செயல்களாகிய புளிப்பு மாவோடு அல்ல. மாறாக, நேர்மை, உண்மை போன்ற நற்பண்புகளாகிய புளிப்பற்ற அப்பத்தோடு தவக்காலத்தை ஆசரிப்போம். வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

திரு. B. **சாம் ஜெபசிங்**

**27-03-2015** ***தவக்கால ஆறாம் வெள்ளி***

# புறந்தள்ளுதலா ? புரிந்து கொள்ளுதலா ?

## EXPELLING? OR UNDERSTANDING?

திருமறைப்பாடம் : யோவா 9: 24-34

**“...அவரை (பார்வையற்றவரை) வெளியே தள்ளினர்”** யோவா 9:34

'எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற மமதையோடு அடுத்தவர்களை விமர்சிக்க மக்கள் தயங்குவதில்லை. உயர் பதவிகளில் இருப்பவர்களையும் நல்மதிப்பிற்குரியவர்களையும் விமர்சிக்கிறார்கள். ஏன்? கடவுளையும், கடவுளுடைய திட்டத்தையும், கடவுளுடைய செயல்களையும் கூட விமர்சிக்க தயங்காதவர்கள் ஏராளம். அப்படியே வெளிவேடக்காரர்கள் இறுமாப்பு கொண்டவர்கள், புதிய பார்வைகளை, தாங்கள் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியது எதுவும் இல்லை என எண்ணுகிறவர்கள் இவைகளுக்கு மேலாக எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்காரத்தோடு அடுத்தவர்களின் வாழ்வை விமர்சித்து வாழ்ந்தவர்கள். எங்களுக்கு தெரியும்' என வெளிவேடக்காரர்கள் மூன்று முறை கூறியதை தூய யோவான் நற்செய்தி நூலில் (யோவா. 9) பதிவு செய்திருக்கிறார். (i) இந்த ஆள் கடவுளிடமிருந்து வந்திருக்க முடியாது (9:16), (ii) இம்மனிதன் ஒரு பாவி என்பது எங்களுக்குத் தெரியும் (9:24), (iii) மோசேயோடு கடவுள் பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும் (9:29). இது அவர்களது ஆணவத்தை காட்டுகிறது. இந்த வெளிவேடக்காரர்கள், கண்ணால் தொடர்ந்து பார்த்தும் கண்டு கொள்ளாமலும், காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்ளாமலும் இருப்பவர்கள் (ஏசா 6:9; மாற்கு 4:12) என்னும் திருவிவிலியம் கூறும் பண்புடையோராக ஆண்டவர் இயேசு செய்த வல்ல செயல்களை கண்டும் கேட்டும், கருத்தில் கொள்ளாமலும், உணராமலும் அவரை விமர்சிப்பதிலும் துன்புறுத்துவதிலும் வெட்கப்படுவதிலும் குறிக்கோளாய் இருந்து செயல்பட்டனர். ஆம், இயேசுவின் அதிகாரத்தை விமர்சித்தனர். சந்தேகங்களை ஏற்படுத்தி குழப்ப முயன்றனர். ஆனாலும் கடவுளுடைய மாட்சிமை நிறைந்த செயலை ஒருவராலும் அடக்கவோ அழிக்கவோ முடியவில்லை. ஆனால் இறுதியில் ஆண்டவருடைய வல்ல செயலினால் வாழ்வு பெற்ற அல்லது பார்வைபெற்ற மனிதனுக்கு இன்னல்களை ஏற்படுத்தினர். எந்தெந்த நிலைகளில் இன்னல்களை ஏற்படுத்தினார்கள் என்பதை தியானிப்போம்.

## 1. புண்படுத்திய வெளிவேடக்காரர்கள் :

மின்சக்தியின் விதிகளைக் கடைபிடித்து அதைப் பயன்படுத்தும் போது ஒளியேற்றுகிறோம், வெப்பமுண்டாக்குகிறோம், உணவு சமைக்கிறோம், உடைகளைத் துவைக்கிறோம், காற்று வீசச்செய்கிறோம். ஆனால் அதே சக்தி விதிகளை மீறும் போது நம்மை எரித்துக் கொன்று அழித்துவிடுகிறது. இதைப்போன்றுதான் நமது வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளும் இருக்கின்றன. ஆம், திருச்சட்டத்தில் வேர்விட்டவர்கள் என்று மார்தட்டிக்கொண்டாலும் அவர்கள் உள்ளத்திலிருந்து புறப்பட்ட சொற்களும் அதனால் விளைந்த செயல்களும் எளியவரையும் கடவுளையும் புண்படுத்தின. யோவா. 9-ல் ஆண்டவருடைய குணப்படுத்தும் ஆற்றலால் பார்வைபெற்ற மனிதனை வெளிவேடக்காரர்கள் தங்கள் வார்த்தைகளால் புண்படுத்தினர். எப்படியெனில் "பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்கு கற்றுத்தருகிறாய்?" (யோவா 9:34) என அவரது உள்ளத்தை காயப்படுத்தினார்கள். இங்ஙனம் "நீ பிறப்பிலிருந்தே பாவி" என வெளிவேடக்காரர்கள் அந்த மனிதனை தேவையற்ற வார்த்தைகளால் புண்படுத்திக் கொண்டிருந்தாலும் புறப்பார்வையும், அகப்பார்வையும் பெற்று பின்பு விசுவாசப்பார்வையும் பெற்றார். அதாவது முதலில் "இயேசு எனப்படும் மனிதர்" (9:17) எனப் பார்த்த அவர், இயேசுவை "ஓர் இறை வாக்கினராக" பார்க்கிறார் (9:13), இறுதியாக "மானிட மகனாகவும்" (9:35-38) பார்க்கிறார். இந்த அணுகுமுறை அவரது புண்பட்ட உள்ளத்தை மேலும் திடப்படுத்தியது.

திருவிவிலியத்தில் புண்பட்ட இருதயத்தோடு காணப்பட்ட இஸ்ரயேலரின் நிலையை கடவுள் கண்டு, எரேமியா வழியாக உனது காயத்தைக் குணப்படுத்த முடியாது. 'உனது புண் புரையோடிப்போனது' (எரே. 30:12) எனக் கூறினார். ஆனால் அவர்களது வேதனையை மீண்டும் உணர்ந்து இரக்கம் கொண்டு 'நான் உனக்கு நலம் அளிப்பேன் உன்னுடைய காயங்களை அகற்றுவேன், ஏனெனில் தள்ளப்பட்டவள்' என்று உன்னை அழைத்தார்கள் (எரே. 30:17) என புண்பட்ட உள்ளத்தை ஆற்றல்படுத்தினார். இந்த அருள் காலத்தில் நாம் நல்ல சமாரியன்களாக அதாவது காயங்களை கட்டுபவர்களாக வாழ முயற்சி செய்வோம்.

## 2. புறந்தள்ளிய வெளிவேடக்காரர்கள் :

புகழ்விரும்பிகளாக வாழ்ந்த வெளிவேடக்காரர்கள் பிறர்நலத்தை விரும்புவதில்லை. மாறாக அடுத்தவர்கள் தீட்டானவர் தாங்கள் மட்டுமே தூய்மையானவர்கள் என்ற தற்பெருமையுடன் அடுத்தவர்களை இகழ்ந்து புறந்தள்ளிவந்தனர். யோவான் 9:34-ல் வெளிவேடக்காரர்கள் பார்வை பெற்ற மனிதனை பார்த்து, பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் நீயா எங்களுக்குக் கற்றுத் தருகிறாய்? என்று சொல்லி அவரை வெளியே தள்ளினர். மேலும் யூதர்கள் அவரை வெளியே தள்ளிவிட்டதைப் பற்றி இயேசு கேள்விப்பட்டார் (யோவா. 9:34, 35). இவர்கள், அடுத்தவர்களை புறந்தள்ளிவிடுவது அவர்கள் உள்ளம் புண்படும், உள்ளத்தின் அமைதியை இழக்க செய்யும், விரக்தியை ஏற்படுத்தும் என அறிந்தும் இத்தீஞ்செயலை செய்தனர். அப்படியே லூக். 4:29-ல் இயேசுவை கூட அவருடைய சொந்த ஊரார் ஊருக்கு வெளியே துரத்தினார்கள். ஆகவே லூக். 10:16-ல் ஆண்டவர் கூறும்போது உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னை புறக்கணிப்பவர் என்னை அனுப்பியவரையே புறக்கணிக்கிறார் என இத்தகைய செயலை செய்வோரை எச்சரிக்கிறார். நமக்கு அடுத்திருப்பவர் மீது மட்டுமல்ல, திரும்ப அன்பு செலுத்தக் கூடாதவர்களிடம் அதிக அன்பு கூரவேண்டும் என்பதை ஆண்டவரும் விரும்புகிறார். ஒருமுறை ஆபிரகாம் லிங்கன் தன் நண்பரோடு வெளியில் உலா சென்றார். அந்நேரம் ஒரு வயதான நீக்ரோ மனிதர் அவரை எதிர்கொண்டு வந்தார். ஆபிரகாம் லிங்கன் அம்மனிதருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, அவரோடு சிறிதுநேரம் அளவளாவினார். அவருடைய நண்பருக்கு இது பிடிக்கவில்லை. லிங்கனைப் பார்த்து நீங்கள் அமெரிக்காவின் ஜனாதிபதி, எனவே உங்களுடைய தகுதிக்கேற்றபடி நடக்க வேண்டும், அமெரிக்க ஜனாதிபதி இந்த அளவுக்கு ஒரு சாதாரண நீக்ரோவிடம் கரிசனையோடு இருக்கத் தேவையில்லை என்றார். அதற்கு லிங்கன் நாம் எல்லோரும் கடவுளுடைய குழந்தைகள், கடவுள் எல்லோரையும் அன்பு செய்கிறார். நாமும் யாரையும் அன்பிலிருந்து பிரித்து ஒதுக்கி புறந்தள்ளி வைக்ககூடாது. எனவே நாமும் இத்தகைய மாதிரிவாழ்வை அணிந்து அடுத்தவர்களை புண்படுத்தாமல், புறக்கணியாமல் வாழக் கற்றுக்கொள்வோம்.

### 3. புரிந்து கொள்ளாத வெளிவேடக்காரர்கள் :

வெளிவேடக்காரர்கள் பார்வையற்றவன் குணமானதும் இயேசு தான் குணமளித்தார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் பல குற்றங்களை அவர் மீதும், அந்த பார்வையற்றவன் மீதும் சுமத்திக்கொண்டிருந்தனர். உண்மையானமெசியாவை உடனிருந்த மெசியாவைக் கண்டுகொள்ள அவர்களின் பார்வை தடைப்பட்டும் குருடாக இருந்தது. மேலும் இயேசு அவர்களைப் பார்த்து "நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (யோவா 9:41) என குறிப்பிட்டவேளையில் புரிந்து கொள்ள முடியாமல் தத்தளித்தனர். இப்படி அகப்பார்வையை இழந்தவர்கள், புறப்பார்வையும் இழந்து இப்போது விசுவாசப் பார்வையையும் இழந்து தடுமாறிநின்றனர். இவைகளின் அடிப்படைக்காரணம் அவர்களது அறியாமையே (Ignorance) ஆகும். தங்களைப் பற்றிய அறியாமை (Ignorance of the self), அடுத்தவர்களைப் பற்றிய அறியாமை (Ignorance of others) மற்றும் தங்களை படைத்த கடவுளைப் பற்றிய அறியாமை (Ignorance of the Almighty God) அவர்களை இத்தகைய பரிதாபமான நிலைக்கு தள்ளியது. இந்த தவக்காலத்தில் சிலுவையை நோக்கிப் பார்த்து 'நான் யார்?' என்று அறிந்து கொள்ள முயற்சிப்போம். கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரடீஸ் மனுக்குலத்தை பார்த்து மனிதா! உன்னையே நீ அறிந்துகொள் / புரிந்துகொள் என்று கூறிய உண்மையையும் நினைவில் கொள்வோம்.

இறையன்பும் பிறரன்பும் இல்லாதவர்கள் இறைவனையும் எளியோரையும் புண்படுத்தியும் புறக்கணித்தும் வாழ்வார்கள். நாமோ அப்படியிராமல் இந்நாட்களில் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையை அணிந்து வாழ்வோம். இறையாசி பெறுவோம்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

**29-03-2015** குருத்தோலை ஞாயிறு

# ஓசன்னா : கோவிலில் புதிய அரசர்

## HOSANNA : NEW KING IN THE TEMPLE

எசா 56:1-8 — 1கொரி 3:16-23

திபா 24 — மத் 21:1-17

**அவர் வியத்தகு செயல்கள் செய்வதையும் "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்று கோவிலுக்குள் சிறுபிள்ளைகள் ஆர்ப்பரிப்பதையும் கண்டு தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும் கோபமடைந்தனர்.**

**மத் 21:15**

**இறைவேண்டல் :** *விடுதலையாளராம் எங்கள் கடவுளே, உம் மைந்தர் கிறிஸ்து பணியாளராம் அரசராய் எருசலேமில் நுழைந்தது இவ்வுலகின் அதிகாரங்களையும் கொள்கைகளையும் அவர் மேற்கொண்டார் என்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாய் மாறியதை உணர்கிறோம். அவரது வருகையால் கோவிலைத் தூய்மைப்படுத்தினார். உம் மக்களாகிய நாங்கள் கடவுளை விட்டுவிட்ட நிலையிலிருந்து கழுவப்பட்டு, உம்மிடம் திரும்பி, நம்பிக்கையில் களிகூர இயேசு கிறிஸ்து திருச்சபையை ஆளுகை செய்ய உம்மிடம் மன்றாடுகிறோம். இவைகளை எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், தந்தையே, ஆமென்.*

பாஸ்கா விழா கொண்டாட்டத்தின் காரணமாக எருசலேம் முழுவதும் மக்கள் கூட்டம் அலைமோதியது. இச்சூழலில் கழுதையின் மேல் அமர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவுடன் ஒலிவமலை அருகில் உள்ள பெத்பகு கிராமத்திலிருந்து தொடங்கிய பேரணி எருசலேம் நகர் நோக்கி சென்றது. மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த மக்கள் மேலுடைகளையும், மரக்கிளைகளையும் வழியினில் பரப்பினர். குருத்தோலைகளை ஏந்தியவாறு மக்கள் எழுப்பிய "இப்பொழுதே விடுவித்தருளும்" என்ற பொருள் தரும் "ஓசன்னா" ஆர்ப்பரிப்பின் குரல் வானெட்டியது. திரளான மக்கள் கூட்டத்தின் நடுவே, அமைதியும் எளிமையும் கொண்ட அரசராய் இயேசு கிறிஸ்து பயணித்தார். நன்மை எதுவும் நடைபெறவியலாது என்று கருதப்பட்ட கலிலேயாவிலிருந்து தாவீதின் தலைநகராகிய, இறைஇல்லத்தின் இருப்பிடமாகிய எருசலேமுக்கு இயேசுநாதரின் பேரணி சென்றது. இயேசுநாதர் தம் சீடர்களுடன் மக்கள் நடுவே சென்ற இந்த பயணம் மிக பொருள் பொதிந்ததாய், செயல் நிறைந்ததாய் அமைகிறது. ஆளுமையும், இறையாண்மையும், பக்தி நெறியும் சீர்கெட்டுப்போன எருசலேமில் எளிமையாய் நுழைகின்ற அரசர் மாட்சியுள்ளோராய் மாசுகளகற்றி மானுட மீட்புக்கு அடித்தளமிட்டு வெளியேறுகிறார். இந்த

பேரணியின் பின்னணியில் " கோவிலில் புதிய அரசர்" நிலைநாட்டிய தமது செயல்களால் நமக்கு அருளும் அவரது செய்தியை இங்கு காண்போம்.

### *1. அநீதிகளை அகற்றினார் :*

மத். 21 :13 ‘‘என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும் என மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்குகிறீர்கள்" என்று அவர்களிடம் சொன்னார்.

இறை இல்லம் திருடர்களின் புகலிடமாக்கப்பட்டு விட்டது என கூறி சீர்ப்படுத்தும் செயலில் இறங்கினார் இயேசு. இறைவாக்கினர் வாயிலாய் கடவுள் தம் மக்களுக்கு விடுத்த எச்சரிப்பு- என் பெயர் விளங்கும் இந்தக் கோவில் உங்கள் பார்வையில் கள்வர் குகையாகி விட்டதோ ? (எரே.7: 11) கோவிலை தூய்மையாக்கும் இறைவிருப்பத்தை இயேசுநாதர் நிறைவேற்றுகிறார். நீதியை நிலைநாட்டவும், நேர்மையான செயல்களை செய்யவும், ஓய்வு நாளை ஒழுங்காய் கடைபிடிக்கவும் அழைக்கும் ஆண்டவர், இவைகளை நிறைவேற்றுவோர் பேறுபெற்றவர்கள் என கூறுகின்றார் (ஏசா 56 : 1, 2)

பலி செலுத்தவதற்கான புறாக்கள் கோவிலில் வாங்கப்பட வேண்டுமென்பதும், காணிக்கைக்கென அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் மட்டுமே ஏற்கப்பட்டதாலும் வியாபாரிகளும், நாணயம் மாற்றுவோரும் விருப்பம் போல் வியாபாரம் நடத்தி கொள்ளை லாபம் தேடினர். இதனால் நீதி விளங்கவேண்டிய இறைஇல்லத்தில் அநீதி அரங்கேறிக்கொண்டிருந்தது. கோவில் பொறுப்பாளர்களும் அதற்கு இடம் ஏற்படுத்தி அநீதிக்கு துணைபோயினர் என்பதே உண்மை, இத்தகைய தீமைகளுக்கெல்லாம் முடிவு கட்ட புதிய அரசராய் இயேசுகிறிஸ்து கோவிலுள் நுழைந்தார். மக்கள் கடவுளை வழிபடுவதற்கு வசதியாக ஏற்படுத்தப்பட்ட இறைஇல்லம் வியாபார இடமாகிப்போன அநீதியை அவர் அகற்றவிழைந்தார்.

இன்றும் இறைஇல்லத் தொழுகைகளிலும், இறைப்பணி திட்டங்களிலும், திருச்சபையின் ஆட்சிப்பொறுப்புகளிலும் இறைத்திட்டத்துக்கு இடம் தராமல் சுய விருப்பத்தை நிறைவேற்ற எண்ணுவது அநீதி செயலே. இறை இல்லத்தின் தூய்மை பேணப்பட இடையூறாய் அமைந்துள்ள நமது சுயநலத்தையும், அநீதி செயல்களையும் அகற்ற இந்த ஓசன்னா திருநாளில் உறுதிகொள்வோம்.

## 2. அங்கீகாரமிழந்தவர்களை அரவணைத்தார் :

மத். 21 :14 பின்பு பார்வையற்றோரும் கால் ஊனமுற்றோரும் கோவிலுக்குள் இருந்த அவரை அணுகினர். இயேசு அவர்களைக் குணமாக்கினார்.

நாசரேத் அறிக்கையில் பிரகடனப்படுத்திய தந்தையின் திருவுளம் சார்ந்த தமது பணி அறிக்கையில் (லூக் 4: 17-20) உடல் நலமருளும் பணியினையும், முழு மானுட விடுதலைப்பணியினையும் எடுத்துக்கூறினார்.

காது கேளாதோரைச் சபிக்காதே ! பார்வையிழந்தோரை இடறச் செய்யாதே! உன் கடவுளுக்கு அஞ்சி நட நான் ஆண்டவர்! (லேவி .19:14). கடவுள் தம் மக்களுக்கு வழங்கும் ஆலோசனை, மாற்றுத்திறன் படைத்தோரை அலட்சியம் செய்யக்கூடாது என்பதாகும். ஆனால், அத்தகையோர் புறக்கணிக்கப்படும் நிலை அன்றும் இன்றும் தொடர்கிறது. பார்வையற்ற ஒரு மனிதரைக் கண்ட சீடர்கள் இவரது பாவத்தினாலா, அல்லது இவரது பெற்றோரின் பாவத்தினாலா இத்தகைய நிலைக்கு ஆளானார் என இயேசுவிடம் கேள்வி எழுப்பினர் (யோவா 9:2). இயேசுவின் பதில், எவரது பாவமுமல்ல கடவுளின் செயல் இவர் வழியாக விளங்குவதற்காவே இப்படிப்பிறந்தார் (வ.3) என்பதாகும்.

வியாபாரத்தால் மக்களை ஏமாற்றி, தங்களை செழுமையாக்கி இறைஇல்லத்தை கள்வர் குகையாக்கிய வியாபாரிகள் வெளியே துரத்தப்பட்டனர். எவரது உதவியுமில்லாமல், ஆற்றலின்றி அங்கீகாரமிழந்து நின்றவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் நெருங்கி வந்தனர். இவர் நம்மை அங்கீகரிப்பார், ஆற்றல் வழங்குவர் என்ற நம்பிக்கையுடன் வந்தவர்களை இயேசு கிறிஸ்து குணமாக்கினார். அவர்களது உடல் ஆரோக்கியமடைந்து உள்ளம் மகிழ்ந்தது.யோவான் 5:1-9 வரையுள்ள பகுதியில் முப்பத்தெட்டு ஆண்டுகள் உடல் நலமற்றிருந்த மனிதனிடம் இயேசு கிறிஸ்து சென்று நலமளிப்பதைக் காண்கிறோம். இவர் நீண்ட காலமாய் அங்கீகாரமிழந்து, நலம்பெற உதவுவாரின்றி படுத்திருந்தவர், இயேசு கிறிஸ்துவின் கரிசனையுள்ள பார்வையால் அவர் அங்கீகாரம் பெற்று வாழ்வடைந்தார்.

நாசரேத் தொழுகைக்கூடத்தில் எழுந்த முழக்கம் (லூக்கா4) செயலாய் தொய்வின்றி தொடர்ந்து, எருசலேமில் முழுமை பெறுகின்றது, இன்றும் உரிமைகள் மறுக்கப்பட்டோர், குழந்தை தொழிலாளர்கள் மாற்றுத்திறனாளிகள், கொடும் நோய்களில் துன்புறுவோர், போரினாலும் இயற்கை பேரழிவுகளாலும் பாதிக்கப்பட்டோர் திருச்சபையின் அங்கீகாரம்

பெறவேண்டிவர்கள் என்பதை உணருவோம். எருசலேம் கோவிலுள் நுழைந்த புதிய அரசர் புறக்கணிப்புக்குள்ளானோரை அணுகி சென்று நலமளித்தார். அவரது நலமருளும் செயல்நாடி இறைவேண்டல் செய்யும் எவரிடமும் சென்று அரவணைத்து ஆசி வழங்குகிறார்.

### *3. அறியாதவர்களை அறியச்செய்தார் :*

மத். 21:10 அவர் எருசலேமுக்குள் சென்றபோது நகரம் முழுவதும் பரபரப்படைய “இவர்யார்?” என்னும் கேள்வி எழுந்தது.

இவர் யார்? என்ற கேள்வி இயேசுவின் பிறப்பின்போதே தொடங்கிவிட்ட கேள்வியாகும். யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே ? (மத். 2:2)என்பது ஞானிகளின் கேள்வி .இந்த கேள்வி ஏரோது அரசரை கலக்கமடைய செய்தது. எனவே, ஞானிகளிடம் குழந்தையைப்பற்றி திட்டவட்டமாய் விசாரியுங்கள் என கூறியனுப்பினார். தனது ஆட்சிஅதிகாரம் பறிபோய் விடுமோ என்ற சிந்தனையோட்டத்தின் வெளிப்பாடுதான் இந்த கலக்கம் எனக்கு போட்டியாய் பிறந்துள்ள இவர் யார்? என்ற கேள்வி எழுந்தது இந்த குழப்பநிலை தான் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் கொல்லப்படுவதற்கு காரணியானது. தெளிவான புரிந்து கொள்ளுதல் இல்லாத குழப்பநிலை அழிவுக்கு அடிகோலும்.

லூக். 2:42-50 யோசேப்பு மற்றும் மரியாவுடன்பாஸ்கா விழா கொண்டாட்டத்தில் பங்கு பெற எருசலேம் கோவிலுக்குச் சென்ற பன்னிரெண்டு வயது நிரம்பிய இயேசு அங்கு தங்கி விட்டார். போதகர்களிடையே அமர்ந்து அவர் எழுப்பிய கேள்விகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது (வ. 47,48). தேடிவந்த பெற்றோரிடம் “நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத்தெரியாதா?” என வினா எழுப்பினார். இதன் வாயிலாக தாம் யார் தமது பணி என்ன என்பதை உணர்த்தினார்.

வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா ? என கேட்டறிய திருமுழுக்கு யோவான் தம் சீடரில் இருவரை இயேசு கிறிஸ்துவிடம் அனுப்பினார் (லூக். 7:19.20). அவர் பதிலாக, நீங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள் (வ. 21-23) என கூறியனுப்பியதிலிருந்து அவரது போதனைகளும், செயல்களும் அவரை அடையாளப்படுத்துவதை உணரமுடிகிறது. நமது வார்த்தைகளும், வாழ்வின் செயல்களும் நாம் யார் என்பதை உலகிற்கு அடையாளம் காட்டுகின்றன.

மத். 16 : 13-17 இயேசு கிறிஸ்து தம் சீடரிடம் மக்கள் தன்னை யாரென்று சொல்கிறார்கள் என கேட்டார். அவர்கள் சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர், என்றும் சொல்கின்றனர் என்றனர். சீடர்களிடம் அவர்களது புரிதலைக் கேட்டபோது, சீமோன்பேதுரு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் (வ.16) என பதில் கூறினார். நாம் இயேசு கிறிஸ்துவை புரிந்துகொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார்.அவரே மெசியா என்னும் தெளிவு நமக்கு மிகத்தேவையாகும்.

கோவிலில் இயேசு கிறிஸ்து நிகழ்த்திய செயல்களும் "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்ற சிறுபிள்ளைகளின் ஆர்ப்பரிப்பும் தலைமை குருக்களையும், மறைநூல் அறிஞர்களையும் கோபமடைய செய்தது. இவைகளை செய்ய இவர்யார்? எந்த அதிகாரத்தினால் இவைகளை செய்கிறார்? எனஅவர்களுள் எழுந்த கேள்வியே கோபத்துக்கான காரணமாகும். இந்த காரியங்களை செய்ய தகுதியானவரும், உரிமை பெற்றவரும் இவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நாம் யார் என்னும் தெளிவு நமக்கு வேண்டும். இயேசுநாதர் தமது அடையாளத்தில் (Identity) மிகத் தெளிவுள்ளவராயிருந்தார், அவரது பேச்சும், பணிகளும் ஒன்றாகவே அமைந்தன, சொல் ஒன்று செயல் வேறொன்று என்ற நிலை ஒருபோதும் அவரிடமில்லை.

இத்தாலியை சார்ந்த தியோடல்ப் ஒரு சிறந்த ஆயர், புலவர், சமூக சீர்திருத்தவாதி, அமைதிக்காக அரும்பாட்டுபட்டவர். சிறுவயதிலேயே கத்தோலிக்க மடத்தில் சேர்ந்த அவர் தமது சிறந்த பணிகளால் மக்கள் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்தார். இவரது நற்பணிகளை கேள்விப்பட்ட சார்லி மக்னே அரசர் 781-ஆம் ஆண்டு ஆக்கென்னில் இருந்த தன் அரண்மனைக்கு அழைத்து கௌரவித்தார். மேலும் அவரை ஆர்லின்ஸ்பட்டண பேராயராக நியமித்தார். பேராயர் தியோடல்ப் அவர்களின் பணிகள் சிறப்பாக தொடர்ந்தன . 814-ஆம் ஆண்டு சார்லி மக்னே அரசர் இறந்தார். அவரது மகன் பக்தியுள்ள லூயிஸ் அடுத்த அரசராக பதவியேற்றார். ஆனால், அதற்கு முந்தைய அரசர் பெப்பின் அரசரின் மகன் பெர்னார்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார். இந்த சூழ்ச்சியில் பேராயர் தியோடல்ப் உடந்தையாயிருந்தார் என குற்றம் சாட்டப்பட்டார். அதன் காரணமாக ஆங்கர்ஸ் மடத்தில் சிறைவைக்கப்பட்டார். சிறையிலிருந்தவாறே பல பாடல்களை இயற்றினார்.

ஒரு குருத்தோலை ஞாயிறில் லூயிஸ் அரசர் ஆங்கர்ஸ் நகரத்தில் நடைபெற்ற பவனியில் பங்குபெற்றார், அப்போது ஆங்கர்ஸ் சிறையிலிருந்து ‘‘ஓசன்னா பாலர்பாடும்........’’ என்ற பாடல் (பா128) ஒலித்தது. இனிமையான அந்தபாடலை ரசித்த அரசர் பாடியது யாரென வினவினார், சிறைக்கைதியாகிய பேராயர் தியோடல்ப் என கூறினர். உள்ளமுருகிய அரசர் உடனே அவரை விடுவித்து மீண்டும் ஆர்லின்ஸ் பட்டண பேராயராக நியமித்தார். உண்மையான விடுதலை கொண்டாட்ட பவனியாக அந்த பவனி அமைந்தது.

இயேசு கிறிஸ்துவின் இந்த பேரணி கோவிலைக்காண வந்த பேரணியல்ல; கோவிலைப் பேண வந்த பேரணி. இது வெற்றுப்பேரணியல்ல, வெற்றிப்பேரணி. அங்கீகாரமிழந்தவர்களை அரவணைத்து ஆசி வழங்கிய பேரணி. அறியாதவர்களுக்கு தெளிவு ஏற்படுத்திய பேரணி. நாம் கடவுளின் கோவிலென்றும், கடவுளின் ஆவியார் நம்மில் வாழ்கிறார் என்றும் உணர்ந்து (1கொரி. 3:16) இக்குருத்தோலைத் திருநாளில் அவர் உறைந்தருள தடையாயுள்ள தீமைகளை நம் உள்ளங்களிலிருந்து அகற்றுவோம்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

**30-03-2015** *தூய வாரம் - திங்கள்*

# அத்திமரம் ஓர் அடையாளம்
## THE FIG TREE, A SIGN

திருமறைப்பாடம் : மத் 21: 18-22

**". . . உடனே அந்த அத்திமரம் பட்டுப் போயிற்று."** மத் 21:19

எருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசித்து ஆலயச் சுத்திகரிப்பு செய்து முடித்த பின்பு இயேசு கிறிஸ்து பெத்தானியா சென்றார். மறுநாள் மறுபடியும் பட்டணத்துக்கு வரும் பாதையில் நடந்த நிகழ்வுகளை இன்றைய சிந்தனைப் பகுதிகளாக அமைகின்றன.

இயேசு அத்திமரத்தில் கனி எதிர்பார்த்து அதன் அருகில் வருகிறார். கனி இல்லை என்பதால் சபிக்கிறார். மரம் உடனே பட்டுப் போயிற்று (மத் 21:20) என்று மத்தேயுவும், மறுநாள் காலையில் அது பட்டுப் போயிற்று (மாற் 11:20) என்று மாற்குவும் கூறியுள்ளனர். லூக்கா, யோவான் நற்செய்தியாளர்கள் இந்த நிகழ்வைக் கூறவில்லை. இது மார்க்க வெறி கொண்ட யூதர்களின் போலி வாழ்வை உணர்த்தும்படியாகச் சொல்லப்பட்ட ஒரு எச்சரிக்கைத் தரும் நிகழ்வு. இந்த நிகழ்வு இன்றையத் திருச்சபைக்கு உணர்த்தும் சில உண்மைகளை இங்கு சிந்திப்போம்.

### *1. போலித்தனத்தின் அடையாளம் :*

அத்திமர நிகழ்வு சமயவாதிகளின் போலித்தனத்தை உணர்த்தும் படியாக இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வு. இது இன்றையக் கிறிஸ்தவர்களுக்கும் ஓர் எச்சரிப்பு. இன்று புதுப் பொலிவுடன் உயர்ந்து நிற்கும் அழகான ஆடம்பரமான ஆலயக் கோபுரங்கள் மக்களால் அழகாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்று சொல்லக் கூடிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இறைவனின் திட்டங்களையும், எதிர்பார்ப்புக்களையும் இந்த அழகான கோபுரங்கள் நிறைவேற்றுகின்றனவா? இவைகளும் அத்திமரம் போன்று கனியில்லாத மாயத் தோற்றத்தை மக்களுக்குக் கொடுக்கின்றனவா? என்பதைச் சிந்திப்பது நல்லது.

### *2. எதிர்பார்ப்பின்அடையாளம் :*

இலை, தழைகளுடன் காணப்பட்ட அத்திமரத்தில் அதிகக் கனிகள் இருக்க வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. 'அத்திப்

பழக் காலமாய் இராதபடியால்' என்று குறிப்பிடும் போது, ஏன் கனி இருக்க வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது. இயேசு கிறிஸ்துவுக்கு எருசலேம் - பெத்தானியா பாதை புதிய பாதை அன்று. பலமுறை அந்தப் பாதையில் செல்லும் போது இந்த அத்திமரத்தைக் கவனித்திருக்கலாம். ஒவ்வொரு முறையும் கனியற்ற மரமாய்க் காணப்பட்டிருக்கலாம். கிறிஸ்தவ வாழ்வும் நேரம், காலம் பார்த்துக் கனிகொடுக்கும் வாழ்வு அல்ல. சிலுவை அன்பால் தொடப்பட்ட எவரும் எல்லாக் காலத்தும் கனி கொடுப்பவர்களாய் இருக்க வேண்டும் என்பதை இந்த நிகழ்வு உணர்த்துகிறது. இதையே இன்றையக் கிறிஸ்தவர்களிடமிருந்து மக்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். அன்றாட வாழ்வில் திருச்சபையின் அருகே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வு உயர வேண்டும். அடிமட்ட மக்கள், பலம் இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் அனைவரும் சிலுவையைத் தொட்டு வாழ்வு பெறும்படி நமது வாழ்வும் மாற்றப்பட வேண்டும்.

### *3. எச்சரிப்பின் அடையாளம் :*

உருவாக்கமும் மாற்றுருவாக்கமும் செய்ய ஆற்றல் படைத்த ஆண்டவர் அத்திமரத்தை அழித்தது ஏனோ? என்ற கேள்வி எழுவதுண்டு. 'அக்கினியிலே போடப்படும்' (மத் 3:10) என்ற வசனத்தின் நிறைவேறுதல் இந்த நிகழ்வின் வழி உணர்த்தப்படுகிறது. இறைவன் தரும் செழிப்பு, ஆசிகள் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் மட்டுமே என எண்ணி தங்களையே வாழ வைத்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு இந்த நிகழ்வு ஒரு எச்சரிக்கை. எனவே, காலகாலங்களில் நற்கனியைத் தருகிறவர்கள் பாக்கியசாலிகள் என்னும் அனுபவத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

அருள்திரு. L. **ராபர்ட் பெனடிக்ட்**

**31-03-2015** *தூய வாரம் - செவ்வாய்*

# அதிகாரம் ஓர் அடையாளம்

## THE AUTHORITY, A SIGN

திருமறைப்பாடம் : மத். 21:23-32

**". . . எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்?"** மத் 21:23

இயேசு கிறிஸ்துவின் செயல்களைக் கண்டு கலக்கமடைந்த தலைமை குருக்களும், மக்களின் மூப்பர்களும் இயேசுவின் பின்னணியத்தைக் குறித்து விசாரிக்கிறார்கள். அவருடைய சாதாரண குடும்பச் சூழலை அறிந்தவர்கள் 'இவருக்கு இந்த அதிகாரம் எங்கிருந்து வந்தது?' எனக் கேள்வி எழுப்புகின்றனர். லூக் 4:17-20 வரையுள்ள வசனங்களை இயேசு கிறிஸ்து தொழுகைக் கூடத்தில் படித்ததை இவர்கள் அறிந்திருக்க வாய்பில்லை. திருமுழுக்கின் போது சொல்லப்பட்ட வார்த்தைகளையும் (மத் 3:17, மாற்கு 1:11, லூக் 3 : 22, யோவா 1 :32 - 34) மக்களின் மூப்பர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆகவே தான் இந்த அதிகாரம் குறித்த கேள்வி எழுகிறது. மூப்பர்களின் அதிகாரம், இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் மற்றும் இறைவனின் அதிகாரம் பற்றி இங்கு தியானிப்போம்.

***1. அநீதத்தின் அடையாளமாய்ப் போன அதிகாரம்:*** (மத் 23:6-8)

தலைமை குருக்களும், மக்களின் மூப்பர்களும் பழைய ஏற்பாட்டின் முறைப்படி மக்களுக்காக இறைவனின் சமூகத்தில் மக்கள் பிரதிநிதிகளாக நிற்கும்படித் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆனால், அவர்களோ தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினால், இறை மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள், காணிக்கை, பலிப்பொருள் என்ற பெயரில் மக்களைத் துன்பப்படுத்தினார்கள். ஏழைகள் ஒடுக்கப்பட்டார்கள். காசுக்கடைக்காரர்கள் அரசு பணத்தைக் கமிஷன் பெற்று பணமாக மாற்றும் கடைகள் வழியாகவும், ஆசாரியனின் முத்திரை பதித்த பலிப் பொருள் மட்டும் வாங்க வேண்டும் என்ற கட்டாயத்தினாலும் ஏழைகள் நசுக்கப்பட்டார்கள் (மத் 21:12). இயலாதவர்கள் மீதும், பலவீனர்கள் மீதும், அடிமட்ட மக்கள் மீதும் அதிகாரம் செலுத்தி மகிழ்ச்சி அடைந்தனர் (மத் 23:4-10). இவர்கள் இயேசு கிறிஸ்துவால் கண்டிக்கப்பட்டனர். இதைப் பொறுத்துக் கொள்ள இயலாத பகட்டுத் தலைவர்கள் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தைக் குறித்துக் கேள்வி கேட்டனர்.

## *2. அதிகாரத்தைக் குறித்த அறிவின்மை :* (மத் 21:27)

மத் 21:23 முதல் 25: 27 வரை உள்ள வசனங்களில் இயேசு கிறிஸ்துவிடம் ஐந்து கேள்விகள் கேட்கப்படுகிறது, இயேசு கிறிஸ்து மூன்று கேள்விகளைக் கேட்கிறார். மேலும், மூன்று உவமைகள், பல போதனைகளையும் தருகிறார். எல்லாப் பதிலுரைகளும், போதனைகளும் எல்லாரும் ஆச்சரியப்படும் வகையில் அமைந்திருந்தன. மூப்பர்கள், தலைமை குருக்களும் இயேசு கிறிஸ்துவின் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கவில்லை.

இயேசு கிறிஸ்துவின் இந்தப் பதில் உரைகளினால் இவர் கடவுளின் மைந்தர் என்பதை மனதார ஏற்றுக் கொண்டாலும், வெளியரங்கமாய் அதை அறிக்கை செய்வதற்கு அவர்களின் அதிகார வெறி தடையாக இருந்தது. இதை உணர்ந்து இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்து, "நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார்" (மத் 23:10) என்றுக் கூறினார். இன்றையத் திருச்சபை பிற மக்களுக்குச் சாட்சியாய் அமைதல் அவசியம் ஆகும். கேள்வி கேட்பவர்களாய் அல்ல, சரியான பதிலுரைப்பவர்களாகத் திருச்சபைச் செயல்பட வேண்டும்.

## *3. அன்பு செய்வதின் தொடக்கமே அதிகாரம் :* (மத் 21:42)

கடவுளின் அதிகாரம் மக்களை அடக்கி ஆட்சி செய்வது அல்ல. ஆன்மிகப் பாதையில் தந்தையாக அழைப்பைத் தரும் அதிகாரம். சட்டதிட்டங்களோ, நியாயப் பிரமாணங்களோ இல்லாது, அன்பினால் ஆட்சி செய்யும் அதிகாரம். தலைவன், தொண்டன் உறவு இல்லாமல் சகோதர உறவோடு ஆட்சி செய்யும் அதிகாரம் (யோ 15:14,15). சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் வழியாக ஆட்சி செய்யும் அதிகாரம். இறையரசு என்னும் புதிய சித்தாந்தங்களுக்கு நேராய் வழிநடத்தும் அதிகாரம்.

அருள்திரு. L. **ராபர்ட் பெனடிக்ட்**

**01-04-2015** *அருணோதயத் தொழுகை*

# நீங்களும் ஆபிரகாமின் மக்களே

திருமறைப்பாடம் : லூக் 19:1-10

**"இயேசு அவரை (சகேயுவை) நோக்கி, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று...." இவரும் ஆபிரகாமின் மகனே"** லூக் 19:9.

அனைவருக்கும் மிகவும் பிடித்தமான மரம் சந்தனமரம் காரணம், அதன் நறுமணத்தினால் அல்ல. மாறாக, அதன் தன்மையினால். தாவரவியல் ஆராய்சியாளரான John Gregore Mendal (1822-1884) சந்தன மரத்தின் வேரைப் பற்றி ஆய்வு செய்து சில ஆச்சரியமான உண்மைகளைச் சொல்கிறார். (1) சந்தன மரம் தனியாக வளராது. வேறு மரங்களுக்கு அருகில் தான் வளரும். ஆக இது கூட்டுக் குடும்பத்தை விரும்பும் மரம் (2) சந்தன மர வேர் - தானாகப் பூமியில் இருந்து சத்துக்களைப் பெற்றுக்கொள்ளாது (இயலாது). அதன் வேருக்கு அந்தச் சக்தி கிடையாது. எனவே, பக்கத்திலிருக்கும் மரத்தின் வேரோடு சந்தன மரத்தின் வேர் தேடிப் போய் ஒட்டிக் கொண்டு அந்த வேர் வழியாகத் தனக்கு சத்தைப் பெற்றுக் கொள்ளும். ஆக, தன் அருகில் இருக்கும், தனக்கு ஊட்டமளிக்கும் பக்கத்து மரத்தை, தனது சுயநலத்திற்காய் அழிக்காது. பக்கத்து மரத்தோடு கூடி வாழ்ந்து செழிக்க வைக்கும். எனவே தான் இன்று மரங்களில் மதிப்பான மரமாகக் கருதப்படுகிறது. அதனைப் போன்று மதிப்புக்குரிய யூதர்களும் மிகவும் விரும்பும் பட்டமான "ஆபிரகாமின் மக்கள்" என்ற உயர்வான வார்த்தையை சகேயும் பெற்றுக் கொள்கிறார். இந்தச் சகேயுவை முதலாவது நாம் தெரிந்து கொண்டு அதற்கு பின் இந்த ஆசீர்வாதத்திற்காய் என்ன செய்தார் என்பதனைச் சிந்தனை செய்வோம்.

***சகேயு :***

வரி வசூலிப்போரின் தலைவர், செல்வந்தர், மழுங்கிய மனசாட்சியுடையவர், செழிப்பு மிக்க பட்டணத்தில் செழிப்பாய் வாழ்ந்து நிம்மதியைத் தேடினவர் திரளான பணமிருந்தும் சமூக விலங்காய் இருந்தான். எனவே சமுதாயத்தால் வெறுக்கப்பட்டார் சகேயு . சகேயுவை "பாவி" எனச் சமுதாயம் பிரித்து வைத்தது. நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் இந்தச் சமுதாயம் இடம் கொடுக்காததினால் அது இயேசு

கிறிஸ்துவிடமாவது கிடைக்காதா? என ஏங்கினவன். உயிருள்ள மனிதர்கள் இடம் தர மறுத்தபோது, காட்டத்தி மரத்தின் முள் கூட அவருக்கு வலியாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட இவர் எப்படி ஆபிரகாமின் மகன் ஆனார். அதைச் சிந்திப்போம்.

### *1. சகேயுவின் ஆவல் :* (லூக். 19 : 3)

'பணம்' தராத மகிழ்ச்சியை, 'உறவு' தராத மகிழ்ச்சியை யார் தருவார் எனச் சகேயு யோசித்தார். அது இயேசு கிறிஸ்துவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இயேசுவைக் காண வேண்டும் என்று ஆவல் கொண்டார். அந்த ஆவல் இயேசு வரும் சாலையின் ஓரத்திற்கு கொண்டு வருகிறது. அங்கு மரத்தில் ஏறி மறைந்து பார்க்கிறார். குனிந்து பார்த்தவரை இயேசு நிமிர்ந்து பார்க்கிறார். ஆவல் கொண்டவர்களை இயேசு தேடிச் செல்கின்றார். தாவீது கடவுளின் சமூகத்தின் மீது அதிகம் ஆவல் கொண்டவர். எனவே, உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாதேயும் (திபா 51 : 11 ) என வேண்டுகிறார். கானானியப் பெண்ணின் ஆவல் மகளின் உயிரைக் காப்பாற்றியது. 12 வருட இரத்தப்போக்கையுடைய பெண்ணின் ஆவல் அவள் நோயைக் குணமாக்கியது. சகேயுவின் ஆவல் இயேசுவையே அருகில் கொண்டு வருகிறது. மனிதனின் ஆவல் 'நெருப்பை' போன்று இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். இவ்வுலகில் புவிஈர்ப்பு விசைக்குக் கட்டுப்படாத நெருப்பு ஒன்று தான் கீழிருந்து மேலெழுந்து செல்லும். அதனைப் போன்று நமது இறை ஆவல் கீழிருக்கிற நம்மை மேல் நோக்கி இறைவனிடம் அழைத்துச் செல்லும். இன்று நமது ஆவல் எப்படி இருக்கிறது ? இறைவன் தரும் ஆசீர்வாதங்களை விட உலக ஆசீர்வாதத்தையே மேன்மையாக எண்ணுகிறோம். ஒரு திருச்சபையின் முக்கிய பொறுப்பில் இருந்த ஒருவர் தம் மகனை ஞாயிறு காலை தொழுகை முடிந்ததும் Sunday School க்கு இருத்தாமல் அழைத்துச் சென்று விடுவார். ஏன் என்று காரணம் கேட்டால் மகன் கெட்டு விடுவான் என்று பதில் கூறுவார். மகன் வளர்ந்தான். திருமணம் செய்தான். இரண்டே ஆண்டுகளில் திருமண முறிவு. தந்தை 10 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தார். இப்போது தந்தை சொல்கிறார், "என் பையன் கல்வியை நன்றாய்க் கற்றான். வாழ்க்கையைக் கற்கவில்லை. செயல்களைக் குறித்த பயம் இல்லை". இப்பொழுது வருத்தப்பட்டு என்ன பயன்? உலக ஆவல் நமக்கு அறிவைத் தரலாம் ஆனால் இறை ஆவல் நமது வாழ்க்கையை வளப்படுத்தும்.

### *2. சகேயுவின் குற்ற உணர்வு :* (லூக்.19 : 8)

நாம் நடந்து செல்லும் போது கல் தட்டி விட்டால், 'கல் தட்டி விட்டது' என்று கூறுவோம். இங்கு, கல் அதுவாகவா வந்து இடித்தது

அல்லது அதுவாக வந்து இடிக்குமா? நாமே கல்லில் மோதிவிட்டு கல் இடித்து விட்டது எனச் சொல்கிறோம். இது தான் நமது மனநிலைமை. எப்பொழுதுமே நமது குற்றங்களை, தவறுகளை உணருவதில்லை. பேசும் போது பிறரைச் சொல்பவன் கீழ் மனிதன் என்றும், தன்னை மட்டுமே பேசுபவன் மா மனிதன் என்றும் கூறுவர். நாம் மா மனிதனா? கீழ் மனிதனா? தன்னை எவன் ஒருவன் உணருகிறானோ அவனே மேன்மைமிகு மனிதன். நூற்றுவர் தலைவர் இயேசுகிறிஸ்து தன் வீட்டிற்குவர தான் தகுதியற்றவன் எனத் தாழ்த்துவது, இளைய மைந்தன் தன்னைக் குறையுள்ளவனாகக் கருதி வேலைக்காரனாய் சேர்ந்தது. இவைகள் தன்னை உணருதல். இங்கும் சகேயு தம் அருகில் வந்ததும் தன்னை உணருகிறார். தம் குற்றத்தை ஏற்றுக் கொள்கிறார். தவறுக்கு நான்கு மடங்காகக் கொடுப்பதாய் வாக்குக் கொடுக்கிறார். பூரானும் மண்புழுவும் ஒன்றையொன்று சந்தித்ததாம். அப்பொழுது பூரான் சொன்னது 'நான்தான் உன்னைவிடப் பெரியவன்'. மண்புழு, அப்படியா! என்று கேட்டது, 'எப்படி'? என வினவியது. பூரான் 'நீயோ கால் இல்லாதவன், நானோ ஆயிரம் கால் உடையவன்' என்று பெருமையில் கூறியது. அப்பொழுது அந்த பக்கம் வந்த ஒரு மனிதர் பூரானைக் கண்டதும் கம்பை எடுத்து அடித்தார். இப்போது பூரான் கேட்டது, 'மண்புழுவே அந்த மனிதன் என்னை அடிக்கிறான், ஏன் உன்னை அடிக்கவில்லை? 'மண்புழு', உனக்கு 1000 கால் இருந்து என்ன பயன் பிறரைத் தீண்டத் தான் செய்கிறாய். ஆனால், நானோ காலே இல்லை என்றாலும் விவசாயிகளின் நண்பனாய் இருக்கிறேன். என்னால் பிறருக்குப் பயன். உன்னால் யாருக்குப் பயன்? பூரான் அப்போது தான் யோசிக்க ஆரம்பித்தது. நாமும் நம்மை உணர்ந்து நம்மை மாற்றிக் கொள்ளும்போது நாமும் ஆபிரகாமின் மக்களாய் வாழ்வு பெறுவோம்.

### *3. சகேயுவின் மன மாற்றம்* (லூக். 19:8)

ஆபிரகாமின் மகன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட சகேயுவின் மனமாற்றம் மிக முக்கியமானது. இயேசு கிறிஸ்துவை விட்டு விலகி இருந்தபொழுது அநியாயமாய் வாழ்ந்தார். இயேசு கிறிஸ்து அருகில் வந்த போது அவருக்குள் மாற்றம் நடைபெறுகிறது. இயேசுவைப் பார்க்க ஆசைப்பட்ட சகேயு காட்டத்தி மரத்தின் உயரத்தில் உட்கார்ந்து கொள்கிறார். இறைவனை பார்க்க நினைப்பவர் மேலே. ஆனால் மனிதனை நோக்கிய இயேசு கிறிஸ்து மனிதனைப் பார்க்க மனிதன் நிற்கும் இடத்தில் நிற்கிறார். ஆனால் மனிதனோ இயேசுகிறிஸ்துவைப் பார்க்கத் தேவையற்ற உயரமான வழியில் நிற்கிறார். அவரைப் பார்த்து, 'இறங்கி வா' என்கிறார்.

உடனே இறங்கி வருகிறார். இதுவரை வாங்கும் மனிதனாய் இருந்தவர், இயேசுவை உள்ளத்தில் ஏற்றதும் கொடுக்கும் மனிதராய் மாறுகிறார். இந்த மாற்றம் சகேயுவை நல்ல மனிதராய் மாற்றுகிறது. கால்பந்தும் புல்லாங்குழலும் பேசிக் கொண்டதாம். பந்து புல்லாங்குழலைப் பார்த்து, 'என்னைக் களத்தில் எல்லோரும் உதைக்கிறார்கள். ஆனால் உன்னையோ எல்லோரும் ரசிக்கிறார்கள். இது எப்படி ?' அதற்கு புல்லாங்குழல், 'கால்பந்தாகிய நீ உனக்குக் கிடைக்கும் காற்றை எல்லாம் உன்னில் அடக்கிக் கொள்கிறாய் எனவே உதைப்படுகிறாய். ஆனால், நானோ எனக்குக் கிடைக்கும் காற்றையோ பிறருக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறேன். எனவே என்னை எல்லோரும் கைத்தட்டி ரசிக்கிறார்கள்' என்றதாம். வாங்கி தன்னிடம் வைத்திரப்பவனை விட கிடைத்ததை மற்றவர்களோடு பகிர்கிறவர்கள் ஆபிரகாமின் மக்கள் என்று போற்றப் பெறுவார்கள்.

சகேயுவும், சகேயுவின் வீடும் ஆசீர்வதிக்கப்பட அவரது ஆவல், உணர்தல், மனமாற்றம் மிக முக்கியமாய் இருந்தது. இதனைப் போன்று நாமும் நமது வீடும் ஆசீர்வதிக்கப்பட நமது ஆவல் மனமாற்றம் மிக முக்கியமானது. எனவே இயேசு கிறிஸ்துவை நெருங்கி, சகேயுவைப் போல் இயேசு கிறிஸ்துவுடன் செல்வோம் இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**01-04-2015** *தூய வாரம் - புதன்*

# அபிஷேகம் ஓர் அடையாளம்

## THE ANOINTMENT, A SIGN

திருமறைப்பாடம் : மத் 26:6-13

**“. . . அதை அவர் தலையில் ஊற்றினார்.”** மத் 26:7

இயேசு கிறிஸ்து பெத்தானியாவில் தொழுநோயாளியாய் இருந்து குணமடைந்த சீமோன் வீட்டிற்குச் சென்று அங்கு நடந்த விருந்திலே பங்கு பெற்றார். அப்போது விலை உயர்ந்த தைலத்தினால் அவர் அபிஷேகம் பண்ணப்பட்டார். அபிஷேகம் பண்ணின பெண்மணி மரியாள் எனவும் (யோவா 12:3), பெயர் சொல்லப்படாத பெண்மணி எனவும் (மாற் 14:3), பாவியாகிய பெண்மணி எனவும் (லூக் 7:37) கூறப்பட்டுள்ளது. யார் இந்தச் செயலைச் செய்தார்கள் என்பதைவிட என்ன நோக்கத்தோடு இந்த அபிஷேகம் நடந்தது என்பது முக்கியமானது.

### *1. ஆர்வத்தின் அடையாளம் :* (மத் 26:7)

அபிஷேகம் பண்ணப்பட்ட தைலம் நளதம் என்னும் தைலம் என்றும், இலாமிச்சை நறுமணத் தைலம் எனவும் கூறப்பட்டுள்ளது. மிகவும் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே இந்த விலை உயர்ந்த பொருட்களை வைத்திருப்பார்கள். அப்படி உயர்குடிப் பெண் ஒருத்தி தொழுநோயாளியாய் இருக்கும் ஒரு மனிதனுடைய இல்லத்தின் விருந்துகளில் பங்கு பெறுவது இயலாதது. ஆனாலும் இந்தப் பெண்மணி பங்கு பெற்றது விருந்துக்காக அல்ல. இயேசு கிறிஸ்துவின் பேரில் கொண்ட தன் அன்பை வெளிப்படுத்த எதையாகிலும் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடாகும். ஆகவே, தன்னிடம் உள்ள மிகவும் விலை உயர்ந்த பொருளை இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்க அவள் ஆவல் கொண்டாள்.

சமயத் தலைவர்களும், இயேசுகிறிஸ்துவின் சீடர்களும் கூட இயேசு கிறிஸ்துவைச் சாதாரண மனிதனாகவே ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே தான் ‘ஏன் இந்த வீண் செலவு?’ எனத் தடுக்கிறார்கள். ஆனால், அந்தப் பெண்மணியோ இறைமகனாக இயேசு கிறிஸ்துவைக் கண்டாள். அவள் அவரிடமிருந்து அநேக நன்மைகளைப் பெற்றிருக்கலாம். அவர் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்தினார். ஆகவே தன்னிடம் உள்ள மிகவும் விலை உயர்ந்த பொருளை இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுத்தாள். நாமும் நம்முடைய கடை நிலையில் உள்ளதை அல்ல முதன்மையானதை ஆர்வத்தோடு இறைவனுக்குக் கொடுப்போம்.

## 2. அர்ப்பணத்தின் அடையாளம் : (மத் 26:7)

இயேசு கிறிஸ்துவுக்கு எதையாவது செய்ய வேண்டும் என எண்ணிய பெண்மணி தன்னிடம் உள்ள உயர்ந்த பொருளைக் கொடுத்தாள். அவள் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் செய்த நளதம் என்னும் தைலத்தைவிட அவள் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் செய்த நளதம் என்னும் தைலத்தைவிட அவள் சுமந்து வந்த பரணி மிகவும் விலை உயர்ந்தது. அது வெளிர் சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். எகிப்து தேசத்தில் விலையுயர்ந்த மண்ணினால் செய்யப்படும் பெட்டிகள் மற்றும் நறுமணப் பொருட்களை வைப்பதற்காக மட்டும் பயன்படுத்தப்படும். இந்த விலை உயர்ந்த பரணி தனக்குப் பிரயோஜனமாய் இருக்கட்டும் என எண்ணாமல் அதை உடைத்தாள். இந்த நறுமண தைலத்தை முழுவதும் மூடி வைக்கப்பட்ட பாத்திரத்தில்தான் வைப்பது வழக்கம். ஆகவே அது உடைக்கப்பட வேண்டும்.

உடைந்த உள்ளம், நறுங்குண்ட இருதயம் இறைவனுக்கு ஏற்புடையது. நமது சுயம் உடைக்கப்பட வேண்டும். நமக்கு என வைத்திராமல் இறைவனுக்குக் கொடுக்க வேண்டும். விலை உயர்ந்த பொருளை அல்ல. தன்னையே இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

## 3. அங்கீகாரத்தின் அடையாளம் : (மத் 26:13)

இயேசு கிறிஸ்து எத்தனையோ அற்புதங்களைச் செய்தும், அவற்றை யாருக்கும் சொல்ல வேண்டாம் எனக் கட்டளையிட்டார். யோவான் 21:25 இன் படி அநேக காரியங்கள் சொல்லப்பட வில்லை. சில நிகழ்வுகளை ஓரிரு நற்செய்தி நூல்கள் மட்டும் கூறுகின்றன. வெகு சில நிகழ்வுகளை மட்டும் நான்கு நற்செய்தியாளர்களும் கூறுகின்றனர். தன் புகழ் பரவ வேண்டும் என்ற நோக்கத்தோடு அவள் இதைச் செய்யவில்லை. ஆனால் அவளின் ஆழ்ந்த நோக்கத்தை அறிந்த இயேசு கிறிஸ்து, ‘இது நற்செய்தியாக எங்கும் சொல்லப்படும்’ எனக் கூறி இப்பெண்ணை அங்கீகரிக்கிறார். மங்கும் மாய உலகில் மங்காச் செயல் புரிந்த மங்கை போல நல்லதைச் செய்வோம்! நல்லதை நினைப்போம்! இறைப் புகழ் பரப்புவோம்!

அருள்திரு. L. **ராபர்ட் பெனடிக்ட்**

**02-04-2015**

*வியாகுல வியாழன்*

# நன்றித் திருவிருந்து : இயேசுவை நினைவு கூர்தல்

**EUCHARIST : THE REMEMBERING JESUS**

| | |
|---|---|
| விப 12 : 1 - 17 | 1கொரி 11 : 23-34 |
| திபா 116 | மத் 26 : 17-30 |

**"...இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்."** மத் 26:27

***இறைவேண்டல் :*** *இயேசு கிறிஸ்து வழியாக எங்களை மீட்ட கடவுளை, உம் மீட்பின் திட்டத்தில் பங்கு பெறும் உமது அழைப்பை நாங்கள் நினைவுகூர தூண்டுதல் தாரும். இயேசு கிறிஸ்து எங்களுக்காகத் தம்மையே ஊற்றியதைப்போல நாங்களும் உடன் வாழ் மக்களுக்காக எங்களை உடைத்து ஊற்ற எங்களுக்குக் கற்பியும். உம் மைந்தராம் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை நினைவுகூர எங்களுக்கு உதவி செய்யும். தம்மையே கொடுப்பதற்கு அடையாளமாம் சிலுவையின் சிந்தனையில் மீண்டு வாழ எங்களுக்கு உம் ஆற்றல் தாரும். எங்களுக்காகத் தம்மையே தந்த இறைமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

Eucharist (நற்கருணை), Lord's Supper (ஆண்டவரின் இறுதி விருந்து), Holy Communion (தூய ஐக்கியம்), Lord's Table (ஆண்டவரின் பந்தி), Breaking of the Bread (அப்பம் பிடுதல்), Holy Mass (திருப்பலி) போன்ற பல பெயர்களில் பல கருத்துகள் பொதிந்துள்ள நற்கருணை என்னும் திருவிருந்து நன்றியுடன் நினைவுகூர்தல் என்ற மையப் பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும். "Eucharistes" என்ற கிரேக்க வார்த்தை பவுலின் கடிதங்களில் 46 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. (Eu) 'இயு' என்ற கிரேக்கச் சொல் 'நல்ல' எனவும், (Charis) 'கேரிஸ்' என்பது 'கருணை' எனவும் பொருள்படும். இறைவனின் கருணை தான் திருவிருந்து என்ற கருத்தை இது தருகின்றது. இந்தத் திருவருட்சாதனத்தில் நாம் பங்குபெறும் போது இயேசுவை நினைவு கூர்கின்றோம்; அவரது கருணையை நினைவுகூர்கின்றோம். ".....இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என இயேசுவே கூறுகிறார் (லூக். 22: 19). மத். 26 : 28-ல் இரண்டு வார்த்தைகள் முக்கியப்படுத்தப்படுகின்றன. அவை : (1) பாவமன்னிப்புக்காக (For the forgiveness of sins) (2) பலருடைய (For many) இவற்றை மையப்படுத்தி இரு சிந்தனைகளைத் தியானிப்போம்.

## *1. திருவிருந்து - இயேசுகிறிஸ்துவின் மீட்பை நினைவு கூர்தல்* (Eucharist : Remembering Jesus Christ's Redemption) :

'பாவமன்னிப்புண்டாகும்படி' என்ற வார்த்தை இறைவனின் மீட்பின் திட்டத்தைக் குறித்த ஆழமான செய்தியை நமக்குத் தருகிறது (மத் 26 : 28). மீட்பின் வரலாறு, படைப்பின் வரலாறு தொடங்கி கூறப்பட்டாலும் இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து பெற்ற விடுதலையின் பின்னணியம் மிக முக்கியமானது. இவ் விடுதலையை நினைவு கூரவே பஸ்கா விழா இறைவனால் வழங்கப்பட்டது. நிசான் மாதம் 14 - ம் நாள் பஸ்கா விழா கொண்டாடப்பட்டது. அதோடு இணைந்த ஒருவார காலம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையாகும். இவ்விரண்டு பண்டிகைகளையும் இணைத்து பஸ்காவை மாபெரும் பண்டிகை எனவும் அழைத்தனர். இப்பண்டிகையில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பெற்ற மீட்பு நினைவு கூறப்பட்டது. யூத மரபின் படி பஸ்காவின் மேசையில் ஏழு பொருட்கள் வைக்கப்படும். அவற்றைக் குறித்து அக்கூட்டத்தின் தலைவர் அல்லது முதிர்ந்தவர் விளக்கம் கொடுப்பார்.

1. புளிப்பில்லாத அப்பம் - எகிப்தில் இருந்து வேகமாக புறப்பட்டதை நினைவு கூர்தல்
2. திராட்சை ரசம் - வாக்குத்தத்த நாடான கானானுக்குள் நுழைந்ததை நினைவுகூர்தல்
3. கசப்புக் கீரை - எகிப்தில் சொல் அனுபவித்த கசப்பான அனுபவங்களை நினைவு கூர்தல்
4. உப்புத்தண்ணீர் - செங்கடலை பிளந்து மீட்பருளியதை நினைவு கூர்தல்
5. வைக்கோல் - எகிப்தில் தாங்களாகவே வைக்கோல் சேகரித்து செங்கல் செய்த கொடூரத்தை நினைவு கூர்தல்
6. களிமண் - எகிப்தில் கல் செய்ததை நினைவு கூர்தல்
7. ஆட்டுக்குட்டியின் ரத்தம் - இறைவன் இஸ்ரவேல் மக்கள் வீடுகளைக் கடந்து சென்றதும், தலைமகன் சாவிலிருந்து பெற்ற விடுதலையையும் நினைவு கூர்தல்.

இந்த நினைப்பூட்டும் விளக்கங்கள் அளித்தபின் ஹில்லேல் (திபா. 113-118) பாடலைப் பாடி பஸ்கா விருந்தை நிறைவு செய்வர். இயேசுவும் பஸ்காவை இம்முறையில் ஆசரிக்கையில் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் எடுத்து புது விளக்கத்தைக் கொடுத்தார். இது பலருடைய பாவமன்னிப்புக்காக பிடப்படும் உடலும், சிந்தப்படும் இரத்தமும் என்பது தான் இவ்விளக்கம். பஸ்காவில் இஸ்ரவேல் மக்களின் மீட்பினை நினைவு கூர்தல், உலக மக்களைப் பாவங்களினின்று மீட்கும் மீட்பரின் நினைவு

கூர்தலாக மாற்றப்பட்டது. இன்று திருவிருந்து மீட்பை நினைவு கூரும் ஓர் அடையாளமாகும். மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் இது தொடுகிறது. அதாவது மனித உடல், குடும்பம், சமூகம், உலகம் என அனைத்து நிலை அடிமைத்தனமான பாவத்திலிருந்தும் தரும் மீட்பைத் திருவிருந்து குறிக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பும் மனிதனுக்கு அளிக்கும் மீட்பும் முழுமையான மீட்பாகும். இதை நினைவுகூர்தலே திருவிருந்து ஆகும்.

### 2. திருவிருந்து - இயேசுகிறிஸ்துவின் நிபந்தனையற்ற அன்பை நினைவுகூர்தல்

**(Eucharist:Remembeing Jesus Christ's Unconditional Love):**

"அநேகருக்காக" அல்லது "பலருக்காக" (மத். 26 : 28) என்ற வார்த்தையின் பொருள் திருவிருந்தின் உயர்வான கருத்தை அதிகரிக்கச் செய்கின்றது. ஒரு மனிதன், ஒரு குழுவினர் ஒரு நாடு என்ற பிரிவினையை அல்லது சுயநல நிலையை உடைத்து இறையரசின் குறிக்கோளான "அனைவரும்" (ஒருவரையும் பிரித்துவைத்தல் கூடாது) என்ற சிந்தனையைத் தருகின்றது. பஸ்காவில் பங்குபெற பிற சமயத்தவருக்கோ யூதர்கள் அல்லாதவர்களுக்கோ வாய்ப்பு அளிக்கப்படவில்லை. "தீயோர்" எனச் சட்டம் சொல்பவர்களும் மாற்றப்பட்டனர். பிறரைத் தீட்டு என எண்ணினால், அவர்கள் பஸ்காவில் பங்கு பெற யூத சமய சடங்குகளுக்குள் தங்களை இணைத்து கொண்ட பின்னரே இதில் பங்கு பெற இயலும். ஆனால், இயேசுகிறிஸ்துவோ தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகும் யூதாசைக் கூட தமது பந்தியில் சேர்த்துக் கொண்டார். நற்கருணையில் "எவரையும் வேறுபடுத்திக் காண்பது தவறு" என்ற எண்ணத்தை உருவாக்கி, நிபந்தனைகளற்ற இயேசுகிறிஸ்துவின் அன்பு, இறை அன்பை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. பாவிகள் என பிறரால் முத்திரை குத்தப்பட்டவர்களையும் , நோயுற்றவர்களையும் பிற சமயத்தவரையும் நினைவு கூர்தல் வேண்டும். Patric T Mc Conmick என்ற இறையியல் அறிஞர் கூறுகையில், "நற்கருணை வழிபாட்டில் கிறிஸ்துவை நினைவு கூர்தல் என்பது இறைக் கூட்டுறவை அடுத்திருப்போருடனும், அறியாதவருடனும், கூடவே எதிரிகளோடும் செயல்படுத்துதல் ஆகும்" என்கிறார். இயேசு யூதாசையும் "நண்பனே" என அழைத்த வார்த்தையை நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

இன்று திருச்சபைகளில் திருவிருந்தில் கட்டுப்பாடுகள் வைக்கும்போது இயேசுகிறிஸ்துவின் நிபந்தனைகளற்ற அன்பை நாம் நினைவு கூர்தல் வேண்டும். திருச்சபையின் ஆட்சி சட்டத்திட்டங்களுக்கும் அப்பாற்பட்டு திருவருட்சாதனங்களின் நோக்கத்தை புரிந்து கொண்டு செயல்படுதல் வேண்டும். சில திருச்சபைகளில் சிறுவர்களுக்குத் திருவிருந்து தொழுகையில் இனிப்பு வழங்கி அவர்களும் இதில் பங்காளர்கள் என வெளிப்படுத்துகின்றனர். திருச்சபையின் தொடக்க காலங்களில் திருவிருந்து தொழுகையில் Agape meal (அன்பு விருந்து) பிரிவினைகளுக்கு அப்பால் குழந்தைகள் பெரியவர் என்ற வேறுபாடின்றி வழங்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் திருச்சபைப் பிரிவுகளுக்குள் உருவான கோட்பாடுகள், கொள்கை மாற்றங்கள் போன்றவை தொடக்கத் திருச்சபையிலிருந்த கூட்டுறவுச் சிந்தனையில் சிதைவுகளை ஏற்படுத்தின. இதனால் கிறிஸ்தவத்துக்குள் வேறுபாடுகள் பெருகி, பிரிவினைகள் உருக்கொண்டுவிட்டன. கத்தோலிக்கர், புரோட்டஸ்டாண்டு என அவரவருடைய மக்களுக்காக அவரவர் திருவிருந்து கொள்ள வேண்டும். பிற சபை மக்களுக்கு அதில் பங்கெடுக்கத் தடை விதிக்கப்படுகிறது. காரணம் நம்பிக்கையில் வித்தியாசம். இயேசுகிறிஸ்துவின் நிபந்தனைகளற்ற அன்பை நினைவிற்கொள்வோம். வேறுபாடுகளை உருவாக்கும் அனைத்து நிபந்தனைகளையும் உடைத்தெறிவோம்.

நன்றித் திருவிருந்து இயேசுகிறிஸ்துவின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட மீட்பை நினைவு கூர்தல் எனவும், அவருடைய நிபந்தனைகளற்ற அன்பினை நினைவு கூர்தல் எனவும் சிந்தித்த நாம் இன்று அவரது மீட்பின் பணி தொடர்கிறது எனவும், அவரது நிபந்தனைகளற்ற அன்பு நம்மை ஆட்கொள்கிறது என்ற உணர்வுடனும் திருவிருந்தில் பங்கு கொள்வோம். இறையரசின் தகவுகளாக திருவருட்சாதனங்கள் மாறிட, அதனூடாய் இறையரசை நாம் உணர்ந்திட இறைவன் நமக்கு அருள்புரிவாராக.

அருள்திரு. J. **டேனியல் ஜோசையா**

**03-04-2015** **புனித வெள்ளி**

# சிலுவை : இறப்பின் இறப்பு

## CROSS : DEATH OF DEATH

எண் 21:1-9 1கொரி 15:50-58

தி.பா 22 மத் 27:1-56

**"...சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது."** 1கொரி 15:54

***இறைவேண்டல் :** அருள்நிறைந்த கடவுளே முழு படைப்பின் மீது கொண்ட அன்பால் உம் மைந்தர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பு மற்றும் உயிர்ப்பு வழியாக சாவின் மீது வெற்றி கொண்டீர். இயேசு கிறிஸ்துவின் தம்மையே கொடுக்கும் அன்பின் முன் மாதிரியை பின்பற்றி அனைவருக்காகவும் எங்கள் அன்பைக் கொடுக்க ஊக்கப்படுத்தும். உமது விருப்பத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்றி மகிழ்ச்சி காண எங்களை தூண்டும். இவைகளை சிலுவையில் இறப்பை சாகடித்த இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

கிறிஸ்தவத்தின் தனித்தன்மை என்பது கிறிஸ்துவில் வந்த சிலுவை வழி மீட்பு ஆகும். சிலுவை என்பது அவமானம் / இழிவின் சின்னமாக கருதப்பட்டது. ஆனால், இயேசு கிறிஸ்து எப்போது சிலுவையில் இறந்தாரோ அப்போது அது நம்பிக்கையின், புனித சின்னமாக மாறியது. குற்றம் புரிவோர் தண்டனை பெறும் இடம், மன்னிப்பு பெற்று வாழ்வு பெறும் இடமாக மாற்றப்பட்டது. இதைத்தான் தூய பவுல் பாவத்திற்குக் கிடைக்கும் கூலி சாவு; மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள் கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு (உரோ. 6:23) என்கிறார்.

இயேசு கிறிஸ்துவில் நாம் பெறும் இந்த நம்பிக்கை வாழ்வை சிலுவை வழியாகப் பெறுகிறோம். ஏனென்றால் அது நம் பாவத்தைச் சிலுவையில் கொன்று புது வாழ்வை ஏற்படுத்துகிறது. இதைப் பின் வரும் இரண்டு தலைப்புகளில் சிந்திப்போம்.

### *1. சாவின் முடிவு :*

இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பு அழிவுக்குரிய இறப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தது (1கொரி. 15:54-55). அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் அணிந்து கொள்ளும் போது, இறப்பு வெற்றியினால் மேற்கொள்ளப்படுகிறது. இது இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பின் வழியாக நிறைவேறியது. "இறந்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்" என்கிற வார்த்தை இறப்பு நிரந்தரமானது அல்ல என்பதை வெளிப்படுத்துகிறது.

சிலுவை மரத்தில் இயேசு கிறிஸ்துவின் இருப்பக்கத்திலும் இரு குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டனர். ஒருவருடைய இறப்பு இறப்பாகவே இருந்தது. மற்றவருடைய இறப்போ வெற்றியாக மாறியது (லூக். 23:43). தன் பிழை உணர்ந்து இயேசு கிறிஸ்துவை நீதிபரர் என்றும், அவருக்கொரு ஆளுகை இருக்கிறது எனவும் உணர்ந்ததால் அவன் சிலுவையில் பேரின்ப வாழ்வைப் பெற்றான். இவன் தன் வாழ்வில் இயேசு கிறிஸ்துவில் ஓர் நிலை வாழ்வு உண்டு இறப்புக்குப் பின் வாழ்வு இருக்கிறது எனவும் உணர்ந்தான்.

எண்ணாகமம் 21:9 -இல் கம்பத்தில் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பைப் பார்த்தோர் பிழைத்தனர். அதைப்போன்று சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவை பார்ப்போர் நிலை வாழ்வுக்கு நேராக நடத்தப்பட்டனர். “என்னிடம் பற்றுறுதி கொள்வோர் இறந்தாலும் பிழைப்பர்” என்ற வார்த்தை நிறைவேறிற்று.

## *2. வாழ்வின் தொடக்கம் :*

யோவா 1:4 - இல் "அவரிடம் வாழ்வு இருந்தது; அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது." என்கிறார். இந்த வாழ்வு வழி நிலையான வாழ்வு ஒரு மனிதனுக்கு வழங்கப்படுகிறது. இயேசுவின் சிலுவை இறப்பின் முடிவு அல்ல. அது வழியாக வாழ்வின் தொடக்கம் ஆகும்.

தூய பவுலார் கொரிந்து திருச்சபை இறைமக்களுக்குக் கூறும்போது ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்தது போல ஒரு மனிதர் வழியாக இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர் (1கொரி 15:21). கிறிஸ்துவின் வருகையின் போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர் (15:23). இறப்பு வாழ்வின் தொடக்கம் ஆகும். அனைவரும் மாற்றுருவாக்கம் பெறுவர். இறை வருகையில் எக்காளம் முழங்கும் போது இறந்தோர் அழிவற்றவர்களாகி உயிருடன் எழுப்பப்படுவர். அழிவுக்குரிய இவ்வுடல் சாவாமையை அணிந்தாக வேண்டும். விதை மடிந்தாலொழிய உயிர்பெறாது. அதைப்போன்று அழிவுக்குரியதாய் விதைக்கப்படும் போது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. ஆக இறப்பு ஓர் அழியாத் தொடக்கமாக அமைகிறது. சிலுவையில் இயேசு கிறிஸ்து சாவை வென்றார். அக் கிறிஸ்துவிலே முழுமையான பற்றுறுதிகொண்டு வாழ்ந்து முடிவில்லா நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வோம்.

அருள்திரு. O. **டென்சிங்**

# சிலுவை திருமொழிகள்

*முதலாம் திருமொழி*

## விண்ணவரின் வேண்டுதல்

திருமறைப்பாடம் : லூக் 23:32-34

**"தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை"** லூக் 23:34

மனுக்குலத்திற்காகத் தம்மையே தியாகப் பலியாக்கிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் வார்த்தையால் விவரிக்க முடியா வேதனைகளைச் சகித்த வேளையில் மொழிந்த ஏழு வார்த்தைகளும் நற்செய்தியின் அத்தனைக் கூறுகளையும் உள்ளடக்கியுள்ளன. ஆம், கடவுளின் மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருவதுவே நற்செய்தியாகும். அதைக்கூறி அறிவிக்க ஆண்டவர் சீடர்களுக்குக் கட்டளையிட்டார். போதித்தவர் சாதிக்கத் தவறவில்லை.

இவ்வார்த்தையின் கூறுபாடுகளைக் கூர்ந்து தியானிக்கும் வேளையில் சில உண்மைகளை நற்செய்தியாகப் பெற்றுக் கொள்கிறோம்.

முதாலவது: "தந்தையே" என அழைக்கிறார் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. சிலுவையில் இருக்கும்போது தொடக்கத்திலும், நடுவிலும், நிறைவிலும் தந்தையை அழைத்தார். சிலுவை கொடூரமானதுதான், இருப்பினும் அத்துன்பம் இயேசுவைத் தந்தையின் உறவிலிருந்து பிரிக்கவே இல்லை.

இந்த வார்த்தை நமக்கு ஒரு வாழ்வு சார்ந்த பாடத்தைச் சொல்லிக் கொடுக்கின்றது. நம் துன்ப வேளையில் நாம் கடவுளை நிந்திக்கிறோம், கடவுளே உமக்குக் கண் இல்லையா? எனக் கோபக்குரலை எழுப்புகின்றோம். ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்து இத்தகைய கொடிய துன்பத்திலும், தந்தையோடுள்ள உறவை முறித்துக் கொள்ளவில்லை. இறை மானிட உறவுதான் சிலுவை.

இரண்டாவதாக: "இவர்களை மன்னியும்" என்கிறார்.

யார் இவர்கள் ? - தம்மைக் காட்டிக் கொடுத்த யூதாசா?

- மறுதலித்த பேதுருவா ?

- தம்மீது பொய்சாட்சிகளைச் சேகரித்து அநியாயமாகப் பழிவாங்கிய தலைமைக் குருவா? அல்லது தம்மை

விசாரித்து, தம்மீது குற்றம் எதுவும் இல்லை என்று தெரிந்தும் சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த பிலாத்துவா ? ஆம், அனைவரும் தான். அனைவருக்கும் மன்னிப்பு வழங்கி விட்டார். "உங்கள் பகைவர்களிடம் அன்புகூருங்கள்" என்று போதித்தவர் இங்கு சாதித்து விட்டார்.

* அடித்தவர்தான் அடிபட்டவரிடம் மன்னிப்புக் கேட்பார். ஆனால், அடிப்பட்ட இயேசு அடித்தவர்களுக்காக மன்னிப்புக் கேட்கிறார்.

* பழத்தைக் கசக்கிப் பிழியும்போது. இனிய சாறுவரும்.

* மலரைக் கசக்கும்போது இனிய நறுமணம் வரும்

* தன்னை வெட்டும் கோடரிக்கு நறுமணத்தை வழங்கும் சந்தன மரம்போல தம்மைத் துன்பப்படுத்திக் கொடுமைப்படுத்தியவர்களை இயேசு மன்னிக்கிறார்.

* இயேசு கிறிஸ்து எதைப் பேசினாரே அதைத் தம் வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

* மன்னிக்கும்படி சொன்னவர் (மத். 5 : 38-48) இப்போது மன்னிக்கிறார்.

மூன்றாவது : " இவர்கள் தாங்கள் செய்வது என்னவென்று அறியாமல் செய்கிறார்கள்".

### *சிந்திப்போம் :*

தலைமைக்குரு, பிலாத்து, பேதுரு, யூதாஸ் இவர்கள் எல்லாம் அறியாமலா செய்தார்கள்? அறிந்துதான் செய்திருக்க வேண்டும். அப்படியானால் ஏன் இயேசு கிறிஸ்து இப்படிச் சொல்லுகிறார்? ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்னது சரிதான். இவர்களெல்லாம் இயேசு யார் என்பதை உண்மையாகவே அறிந்திருந்தால் இப்படிச் செய்திருக்கமாட்டார்கள் (திப. 3:17).

நம்வாழ்வில் இயேசு கிறிஸ்துவை உண்மையாய் அறிந்துள்ளோமா? இன்னொரு உண்மையையும் இங்கே காணலாம்; இயேசுதான் அடிபட்டார், துன்புறுத்தப்பட்டார், அவரே நேரடியாக மன்னித்திருக்கலாம். ஏன் தந்தையிடம் மன்னிக்க வேண்டுகிறார்? தந்தையே, நான் இவர்களை மன்னித்து விட்டேன். நீங்களும் மன்னித்து விடுங்கள் என்று பகைவர்களுக்காகப் பரிந்துரைக்கிறார்.

சிறுவன் ஒருவன் மாங்காயைக் கல்லால் எறிந்தபோது அந்த வழியாக வேட்டைக்கு வந்து கொண்டிருந்த மன்னனின் நெற்றியில் பட்டு இரத்தம் சொட்ட, வீரர்கள் சிறுவனைக் கொல்ல விரைந்தனர். மன்னர்

அவர்களைத் தடுத்து, சிறுவனை அழைத்து, சிறுவனிடம் "ஏன் காட்டுக்கு வந்தாய்?" என்று கேட்டார். "மாங்காய் அடிக்க" என்று சொன்னான். "அதுக்கு என்ன செய்தாய்?" எனக் கேட்க, சிறுவன் "கல்லால்ய் மாங்காய் அடிச்சேன்"; மன்னன் "எத்தனை மாங்காய் கிடைத்தது?" என வினவ, சிறுவன் "ஆறு" என்றான். மன்னன் சரி, நீ போ, என்றார். அமைச்சர் ஆச்சரியத்துடன் மன்னரைப் பார்த்தார். "மரத்துக்கு அறிவில்லை, மனுஷனுக்கு அறிவு உண்டு. மரம் தன்மேல் கல் எறிந்த சிறுவனுக்கு ஆறு மாங்காய் கொடுத்தது. நான் மனிதன் என்பதால் மன்னிப்பையாவது கொடுக்கிறேன்" என்றார் மன்னன். "எங்கள் பாவங்களை மன்னியும்" ஏனெனில் "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்யும் அனைவரையும் நாங்கள் மன்னிக்கிறோம்" (லூக். 11:4) என்று மன்றாடுகிறோம். ஆனால், மன்னிக்கிறோமா? ஆண்டவர் கிறிஸ்துவைப்போல மன்னிக்கக் கற்றுக் கொள்வோம். சிலுவை நம்மை மன்னிக்கத்தூண்டுகிறது; சிலுவை நமக்கு மன்னிக்கக் கற்றுத்தருகிறது. சூரியன் மறைவதற்குள் நம் எரிச்சல்கள் இல்லாமல் போகட்டும் (எபே, 4:26). இறை உறவிலே நித்தமும் நிலைத்து, மன்னித்து மறந்து வாழ்வோம்; சிலுவையின் அன்பை உலகுக்குக் கூறி அறிவிப்போம்.

அருள்திரு S.M.**டேனியல் தேவதாசன்**

*இரண்டாம் திருமொழி*

# விண்ணக வாழ்வுக்கான அங்கீகாரம்

திருமறைப்பாடம் : லூக் 23:39-43

**"......நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்."** லூக்கா 23:43

இருபது நூற்றாண்டுகள் கடந்தாலும் கிறிஸ்துவின் பாடுகள் இன்றளவும் மக்கள் மனதில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதே நேரத்தில் பெருவாரியான கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் ஆண்டுதோறும் வருகின்ற தவக்காலம் இயேசுகிறிஸ்துவுக்காக கண்ணீர் வடிப்பதும், சிலுவையைக் குறித்து தியானிப்பதும், பின்பு சிலுவைக் கற்றுத் தரும் போதனைகளைச் சாதனைகளாக்காமல் அவற்றை மீண்டும் மீண்டும் ஆணிகளால் அடிப்பதும் வாடிக்கையாகிவிட்டது. சிலுவையையும் - இயேசுவையும் யாரெல்லாம் காட்சிப் பொருளாகவும், ஆசீர்வாதத்தின் கருவியாகவும் பார்க்கிறார்களோ அவர்கள் ஆன்மாவை இழந்து விடுகிறார்கள். சிலுவையை, பாடுகளின் வழிதான் வாழ்வு என்று யார் பார்க்கிறார்களோ அவர்கள் தான் இயேசுகிறிஸ்துவின் பார்வையில் உயர்ந்தவர்களாக மாற்றப்பட்டார்கள் என்பது கிறிஸ்தவ வரலாறு கூறும் உண்மை.

அத்தகைய வாழ்வின் அடித்தளம் என்கின்ற பார்வையில் தான் இயேசுவுடன் அறையப்பட்ட கள்வர்களில் ஒருவன் பார்த்ததால் வாழ்வில் ஒரு புதிய துவக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

## *1. நான்கு நற்செய்தியாளர்களின் பதிவுகள் :*

இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாதை நிகழ்வுகளை நான்கு நற்செய்தியாளர்களும் பதிவு செய்துள்ளனர். அதில் தூய லூக்கா மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். ஏன் தூய லூக்கா இதனை ஆழமாகப் பதிவு செய்கிறார் என்றால் இயேசுகிறிஸ்துவை ஒரு மானிட மகனாகக் காட்ட வேண்டும், இயேசு கிறிஸ்துவின் பாடுகளைப் பிற இன மக்களும் தெளிவாகப் புரிய வேண்டும் என்பதே அவரின் நோக்கம். காரணம், தூய லூக்கா யூதர் அல்ல. எனவே பிற சமயத்தவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளையும் சரியாகப் புரிய வேண்டும் என்ற நோக்கில் மற்ற மூன்று நற்செய்தியாளர்களும் தராத தகவல்களைத் தருகிறார். இங்கு தீமை செய்த கள்வன் வாழ்வு பெற்றது போல சமூகத்தால்

தள்ளப்பட்டவர் வாழ்வு பெறுவது போல பிற சமய மக்களுக்கும் வாழ்வு உண்டென தெரியப்படுத்த இங்கு தெளிவாகப் பதிவு செய்கிறார். தூய லூக்கா எழுதும் போது மிகத் தெளிவான, விரிவான விளக்கம் தருகிறார் (லூக். 23:39-43).

அதே நேரத்தில் தூய மத்தேயு, தூய மாற்கு , தூய யோவான் ஆகியோர் மிகச் சிறிய குறிப்புகளை மட்டுமே தருகின்றனர். தூய மத்தேயு, மாற்கு இவர்களின் பதிவு படி சிலுவையின்அடிவாரத்தில் வழிப்போக்கர்களும் தலைமைச் சங்கமும் பொய்சாட்சிகளை இடித்துரைக்கையில், வலப்பக்க, இடப்பக்க கள்வர் இருவரும் இயேசுவின் ஆதரவற்ற நிலையை இடித்துரைத்ததாகப் பதிவு செய்திருக்கிறார்கள்

“அவ்வாறே அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களும் அவரை இகழ்ந்தார்கள்” (மத். 27:44); “அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்தவர்களும் அவரை இகழ்ந்தார்கள்” (மாற். 15:32);

“அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள், அவ்விரு வரையும் இருபக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள்” (யோவா. 19:18).

இங்கு தூய மத்தேயு “கள்வர்களென்றும்”, தூய யோவான் வலப்பக்கம் ஒருவர் இடப்பக்கம் ஒருவர் எனவும். தூய மாற்கு “சிலுவையில் அறையப்பட்டிருந்தவர்கள்” எனவும் பதிவு செய்துள்ளார்கள்

## 2. ஆயுதம் ஏந்திய போராளிகள் :

தமிழ்த் திருமறையில் இந்த இருவரும் கள்வர்கள் அல்லது திருடர்கள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, சிலுவைத் தீர்ப்பு மிகக் கொடிய தவறு செய்பவர்கள், தேசத்துரோகச் செயல் செய்கின்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மிக இழிவான தண்டனையாகக் கருதப்பட்டது. பொதுவாக, அரசிற்கு எதிராகக் கலகம் செய்கின்றவர்களைச் சிலுவையில் அடித்துக் கொன்றனர். இயேசுவின் காலத்திற்கு முன்பும் இயேசுவின் காலத்திலும், ஏன் தற்போதும் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய போராளிகள் காணப்படுகின்றனர். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் உரோமப் பேரரசின் ஆதிக்கம் மிகக் கொடுமையாக இருந்தது. எனவே, அதனை எதிர்த்து பலர் போராடினார்கள்.

ஆங்கிலத் திருமறையில் Bandit, Theives, Criminals, Robbers எனப் பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் துய லூக்கா பதிவு செய்துள்ள ‘‘கெக்காபொயஸ்’’ என்னும் கிரேக்க வார்த்தைக்கு Rebel அல்லது ‘புரட்சிக்காரர்’ அல்லது ‘அடங்காமல் கிளர்ச்சி செய்பவர்’ எனப் பொருள்படுகிறது. எனவே நம் பாரம்பரிய சிந்தனைப்படி இவர்கள் சாதாரண திருடர்கள் அல்ல. மாறாக, இவர்கள் உரோமப் பேரரசின் கீழ் அடிமைப்பட்டுக்கிடந்த யூதேயாவின் அடிமைத்தளைகளை உடைத்தெறிய ஆயுதமேந்திப் போராடிய ‘‘செலோத்தே’’ இயக்கத்தில் உள்ள போராளிகளாக இருந்திருப்பார்கள் எனத் திருமறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (லூக். 6:15). இவர்கள் செலோத்தே என்கிற இயக்கத்தைத் தங்களுக்குத் தளமாகப் பயன்படுத்தினார்கள். நல்ல சமாரியன் உவமை, பரபாஸ் நிகழ்வு, யூதாஸ்காரியோத் நிகழ்வு இவைகளில் பொருட்களைத் தவறாகத் திருடி தங்கள் இயக்கத்திற்குப் பயன்படுத்தினார்கள்.

### 3. பேரின்ப வீடு :

‘Paradise’ அல்லது ‘பரதீசு’ என்கின்ற பாரசீக வார்த்தை நந்தவனம், பூங்கா, பூந்தோட்டம் , இளைப்பாறுமிடம், நீதியின் இடம், அமைதியின் இடம், சமாதானத்தின் இடம் எனப் பல பொருள்களில் அறியப்படுகிறது. இதை ‘ஏதேன் தோட்டம்’ என்று வாதிடுவோரும் உண்டு. வில்லியம் பார்கிலே எனும் திருமறை ஆய்வாளர் செல்லும் போது ‘பாரசீக நாட்டு அரசன் தன் நாட்டு மக்களுள் யாரையாவது கௌரவிக்க விரும்பினால் அவர்களை தன் இன்ப வனத்திற்குத் தன்னுடன் அழைத்துச் சென்று, உண்டு, உலாவி, உறவாடி, மகிழ்ந்திடும் பெரும் பேற்றினைக் கொடுப்பான்.’’ இவ்வாறு ‘பேரின்ப வீடு’ ஓர் இடையூறு இல்லாத, அமைதியாய் இளைப்பாறும் இடமாக, நீதிமான்கள் வாழும் இடமாக உள்ளது. அதில் தான் திருந்திய கள்வனை அமரவைப்பதாக இயேசு கிறிஸ்து வாக்களித்தார்.

#### i) பேரின்ப வீட்டை இழந்த உள்ளம் வருந்தாக் கள்வன் :

‘‘நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்’’ (லூக். 23:39). ‘கிறிஸ்துவானால்’ என்ற வார்த்தையை இந்த உள்ளம் வருந்தாக் கள்ளன் பயன்படுத்துகிறான். அப்படியென்றால் உண்மையாகவே இயேசுகிறிஸ்துவையும் அவர் பணியையும் அவன் மிகத் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும், அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால், தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க கிறிஸ்து அல்லது மெசியா

வருவார் என்கிற நம்பிக்கை அனைத்து அடிமைகளிடமும் பதிந்து கிடந்த செய்தியாகும். எனவே, இயேசுவை ஒரு விடுதலையாளராகப் பார்த்ததால் ''கிறிஸ்துவானால்'', 'மெசியா' ஆகிய வார்த்தையைப் பயன்படுத்தினார். தன் விருப்பம் நிறைவேறாததால் அவன் இயேசுவை நிந்திக்கிறான். உள்ளம் வருந்தாக் கள்வன் வாய்ப்புக் கிடைத்த போதும் அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அநியாயமாகக் கொள்ளையடித்த பொருள்களைக் கொண்டு தன் அரசைக் காட்ட நினைத்தவன் இயேசுகிறிஸ்து காட்டும் உண்மையான இறையரசைக் காணத் தவறிவிட்டான்.

### ii) *பேரின்ப வீட்டில் வாழும் உள்ளம் திருந்திய கள்வன்:*

உள்ளம் வருந்திய கள்வன் மற்றவனை எச்சரிக்கிறான். 'கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லை' எனக் கேள்வி கேட்கிறான். ஒரு வேளை பல அறிஞர்களின் கருத்துப்படி இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பின் செய்தியைக் கேட்டு மனம் மாறியிருக்கலாம். எப்படியெனினும் அவன் இயேசு கிறிஸ்துவில் இறையரசைக் கண்டான். ஆகவே ''ஆண்டவரே உமது அரசு வரும் போது என்னை நினைத்துக் கொள்ளும்'' என்று வேண்டினார். இவருடைய பார்வை தூரப்பார்வை. சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்ட போது இயேசு கிறிஸ்துவில் ஒரு புதிய அரசைப் பார்க்கிறான். அவன் புரட்சியால் அடைய வேண்டிய அரசை, சிலுவையில் நின்று ஆன்மிகப் புரட்சி செய்து இறைவேண்டல் புரட்சி செய்து பெற்றுக்கொண்டார்.

## 4. *சிலுவைப் பாடுகளில் மூன்று கள்வர்கள் :*

சிலுவைப் பாடுகளில் மூன்று கள்வர்கள் வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள்ளனர். பரபாஸ், உள்ளம் வருந்திய கள்வன், உள்ளம் வருந்தாத கள்வன். பல நேரங்களில் நாமும் மறைமுகக் கள்வர்களாகவே இருக்கிறோம். நமக்கு எத்தனை ஆண்டுகள் தரப்பட்டிருக்கின்றன. பாரம்பரிய கிறிஸ்தவர்கள், பாதியில் கிறிஸ்தவர்கள் என்றெல்லாம் மார்தட்டுகிறோம். உண்மையில் நாம் மனமாற்றம் பெற்றிருக்கிறோமா? சிலருக்கு வாழ்வின் தள்ளுபடி சாவாகும்; பலருக்கு இறப்பு தவணை முறையில் வருகிறது. இயேசுவின் சாவின் போது காணப்பட்ட மூன்று கள்வர்களில் ஒருவன் கைவிடப்பட்டான்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்பட்டான்; பரபாஸ் இந்த உலகத்தில் மீண்டும் விட்டுவிடப்பட்டான். பரபாசை போல நமக்கும் வாய்ப்புகள் தரப்பட்டுள்ளன.

## 5. ஏற்றுக்கொள்ளப்படலும் கைவிடப்படலும்

சிலுவைப் பாதையில் ஒரு கள்வன் ஏற்றுக் கொள்ளப்பட்டான். இந்தக் கள்வனுக்கு சிலுவை ஆன்மிகம் அறியும் கோவிலாக மாறியது. பேரின்ப வீட்டைப் பெறும் மேடையாக மாறியது. இவன் சில மணித்துளிகளில் இயேசுகிறிஸ்துவை உள்ளக் கண்களால் கண்டான். இருவரில் ஒருவர் ஏற்றுக் கொள்ளப்பட்டது, இயேசு கிறிஸ்து சொன்ன இறைவாக்குகளின் நிறை வேறுதலாக அமைந்தது.

“இருவர் வயலில் இருப்பர், ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் மற்றவர் விட்டுவிடப்படுவார். இருவர் திரிகையில் மாவரைத்துக் கொண்டிருப்பர் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் மற்றவர் விட்டுவிடப்படுவார்” (மத். 24:40,41)

இந்த இறைவாக்கு இங்கு நிறைவேறுகிறது. ஏசாயா கூறும், “கொடியவருள் ஒருவராக எண்ணப்பட....” (ஏசா. 53:12) என்கின்ற இறைவாக்கும் நிறைவேறுகிறது.

கிறிஸ்துவின் வலப்பக்கத்தில் இருக்க யாக்கோபும், யோவானும் விரும்பினர். ஆனால் அந்நேரம் அது மறுக்கப்பட்டது. இங்கு வேண்டுதலுக்கு உடன் பதில் கிடைக்கிறது. பலர் கேள்வி எழுப்புவது உண்டு கள்ளன் திருமுழுக்குப் பெற்றாரா? திருச்சபை சென்றாரா? இல்லையெனில் எப்படி? மனிதரால் கூடாதது கடவுளால் கூடும். வார்த்தையாலும் நீரினாலும் அதனை கழுவித் தூயதாக்குமாறு இவ்வாறு செய்தார் என்பது தூய பவுல் தரும் சிந்தனை (எபே. 5:26). நாமும் பேரின்ப வீட்டைப் பெற தொடர்ந்து ஆன்மிகப் புரட்சியில் ஈடுபட்டு வெற்றிபெறுவோம்.

அருள்திரு. K. **பிறின்ஸ்குமார்**

# விண்ணவரின் மண்ணகப் பொறுப்பு

திருமறைப்பாடம் : யோவா 19:25-27

**"அம்மா, இவரே உம் மகன்..., இவரே உம் தாய்"** யோவா 19:26,27

உலகில் நாம் வாழவேண்டிய வழியை இயேசு கிறிஸ்து நமக்கு வாழ்ந்து காட்டினார். நாம் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க முன் மாதிரியான வழியை விட்டுச் சென்றார். சிலுவையில் குற்றவாளிக்கு இறையரசின் பேறு வழங்கிய இயேசு கிறிஸ்து சிலுவையின் அடிவாரத்தில் இருதயத்தில் வாள் ஊடுருவது போன்ற வேதனையில் நின்ற தம் தாயையும் தனக்கு அன்பாயிருந்த சீடனையும் காண்கின்றார். தாயிடம், "அம்மா இவரே உம் மகன்" என்றும் சீடனிடம் "இவரே உம் தாய்" என்றும் கூறி கிறிஸ்தவ குடும்ப உறவை ஏற்படுத்துகின்றார். இந்த இறை வார்த்தையின் உண்மைகளை இங்கு சிந்திப்போம்.

### *1. முன்மாதிரியான தாய் :*

மரியாள் கடவுளின் விருப்பம் உணர்ந்து செயல்படுவதில் முன்மாதிரியாக இருந்தார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை இறைதூதர் வாயிலாக கேட்ட மரியாள் "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை" (லூக். 1:38) என்று தன்னைத் தாழ்த்தி இறை விருப்பத்திற்கு ஒப்புக் கொடுத்து முன்மாதிரியாக வாழ்ந்தார். மேலும் கேள்விப்பட்ட அனைத்து நிகழ்வுகளையும் இருதயத்தில் பதித்து வைத்து சிந்தித்து (லூக் 2 : 51) அமைதி உடையவராகச் செயல்பட்டார். கானாவூர் திருமண வீட்டில் இரசம் குறைவுபட்டு தேவையிலிருந்த போது தன் மகனிடம் தேவையை எடுத்துரைப்பதின் வாயிலாக இயேசு கிறிஸ்து முதல் அருஞ்செயல் செய்யக் காரணமாக இருந்தார். மரியாள் இப்படி பல முன் மாதிரிகளைக் கொண்டவராக வாழ்ந்தார்.

### *2. முன்மாதிரியான சீடர் :*

செபதேயு, சலோமி இவர்களுடைய மகன் யாக்கோபுடைய சகோதரரான யோவான் திருமுழுக்கு யோவானுடைய சாட்சியைக் கேட்டு அன்பைப் பெறுவதில் முன் மாதிரியாக இருந்தவர். யவீருவின் மகளை உயிரோடு எழுப்பிய நேரத்திலும், இயேசு கிறிஸ்து உருமாற்றமடைந்த

போதும், பேதுருவின் மாமியை குணமாக்கிய போதும், தேவாலயத்தின் அழிவை முன்னறிவித்த நேரத்திலும், கெத்சமெனே தோட்டத்தில் வியாகுலமடைந்த நேரத்திலும் இயேசு கிறிஸ்துவுடனே கூட இருந்து இயேசு கிறிஸ்துவுக்கு அன்பாயிருந்த சீடர் (யோவா. 13:23) என்ற உரிமையைப் பெற்றவர். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது அந்த இடத்தில் நின்ற ஒரே சீடர் இந்த யோவான். சீடராக உடனிருப்பதில் முன் மாதிரியாக இருந்து இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றவர்.

### *3. முன்மாதிரியான குடும்பம் :*

இயேசு கிறிஸ்து தன் தாயைத் தம் சீடரிடமும், சீடரைத் தம் தாயிடமும் ஒப்படைத்து புதிய, முன் மாதிரியான குடும்ப உறவை ஏற்படுத்துகிறார். இயேசு கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்ததைக் கண்ட சீடர்கள் ஒலிவ மலையிலிருந்து எருசலேமுக்கு திரும்பினார்கள். அவருடைய சீடர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சில பெண்களோடும் இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளோடும் இயேசுவின் சகோதரரோடும் இணைந்து ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களாக ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் என்று (திப 2 : 12-14) திருமறை கூறுகிறது. சுமார் 120 சகோதர சகோதரிகள் ஒரே இடத்தில் கூடி, ஒரே கிறிஸ்தவக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக முன் மாதிரியாக செயல்ப்பட்டார்கள்.

சிலுவையில் தொங்கிய இயேசு கிறிஸ்து தம் தாய் மற்றும் சீடரை முன் மாதிரியாக இவ்வுலகுக்குக் காட்டி நல்ல குமும்பத்திற்கு மாதிரியைக் கற்பிக்கிறார். பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் முன்மாதிரியான வாழ்வுக்குத் தம் தாயையும், சீடரையும் முன் வைக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக முன்மாதிரியாக செயல்பட கடவுள் விரும்புகின்றார். நாமும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக வாழ்ந்து சிலுவை நாதரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம், இறைப்பெயரை மாட்சிமைப்படுத்துவோம்.

திருமதி. **ராஜலின் ஜெயம்**

*நான்காம் திருமொழி*

# விழ்ச்சியில் எழுச்சி

திருமறைப்பாடம் : மத் 27:45-50

**“என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்” மத் 27:46**

“யாட்சவ்” என்ற எபிரேய வார்த்தை கைவிடப்பட்ட, கைவிடப்படுதல் என்ற பொருள்களைக் கொண்டுள்ளது. இயேசுகிறிஸ்து திபா. 22:1-ல் வரும் துயர் மிகு புலம்பற்பாடலை சிலுவையில் நான்காவது வார்த்தையாக வெளிப்படுத்துகிறார். கைவிடப்படுதல் என்பது, பெண்மானினால் கைவிடப்பட்ட அல்லது தனித்து விடப்பட்ட குட்டியின் நிலைக்கு இணையானது (எரே. 14:5). கைவிடப்பட்ட நிலை ஆபத்தானது. மன உளைச்சலால் மரணவிளிம்பிற்கு இட்டுச் செல்வது.

அதிகமாக பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர் இந்த வேதனையை உணருகின்றனர். திருமறையில் இயேசு கிறிஸ்து இந்த இடத்தில் மட்டும் ஏன் ? என் இறைவா என் இறைவா என்று அழைத்தார்?

## *1. ஏதோ ஒன்றை வலுவாக உலகிற்கு அடையாளப்படுத்த விரும்பினார், எதை ?*

இதை புரிந்து கொள்ள இயேசுவையும் அவரது தொலைநோக்குத்திட்டத்தையும் அறிய வேண்டும்.

இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் எப்படி அடையாளப்படுத்தப்பட்டார்?

தானியேல் கண்ட காட்சியில் வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் (தானி. 7:13). பாதிப்பிற்குட்படுத்தப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு ஆட்சி உரிமையை பெற்றுத்தர வரும் காட்சி, தானி. 3.25-ல் தீச்சூளையில் வீசப்பட்ட மூன்று பேருடன் நான்காவது ஒருவரைக் கண்ட நெபுகத்நேச்சர் கூறும்போது “தெய்வமகன் ஒருவன்போல் தோன்றுகிறானே” என்றார். இருவரும் கண்ட காட்சியில் மானுடமகன் பாதிப்பிற்கு உட்படுத்தப்பட்ட சமுதாயத்தோடு தன்னை இணைத்திருப்பதை காட்டுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் மானிட மகனின் நிலைப்பாடும் அது தான். லூக். 4:18-ல் சிறைப்பட்டோருக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் விடுதலை. இதை நடைமுறைப்படுத்த போராடினார். அரசாலும் சமயத்தாலும் கைவிடப்பட்டு அடிப்படை உரிமைகள் சமுதாய நீதி மறுக்கப்பட்டு சுகாதாரம் மற்றும் உணவின்மையால் வாழ்வின் விளிம்பு நிலையில் தள்ளப்பட்ட கலிலேயா வாழ் மக்களோடு தன்னை இணைத்து அவர்கள் வாழ்வை மறுகட்டு மானம் செய்ய போராடினார். இவர்களுக்கு சமுதாய நீதி மற்றும் அடிப்படை உரிமைகள் பெற்றுத்தர பாதிக்கப்பட்ட சாமானிய மக்களோடு எருசலேம் நோக்கிப் பயணித்தார் (மாற். 11:1-10). எருசலேம் அரசமைந்த இடம் யூத சமயத்தின் தலைமை இடம். பயணத்தின் நோக்கம் மக்கள் விடுதலை, உடன் பயணித்த சாமானிய மக்களின் நோக்கமும் அதுதான் (மாற். 11:9,10). இந்த விடுதலைப் போராட்டத்தில் சமயத் தலைவர்கள் உதவுவர் என்று நம்பினார். எனவே, ஆலயத்தில் நீதி கேட்டுச் சென்றார். பாதிக்கப்பட்ட சமூகத்துடன் தன்னை இணைத்து நீதி அமைதி பெற்றுத்தர வேண்டிய ஆலயம் மனித உரிமை மீறல்களால் நிறைந்திருந்தது. இயக்கமாக இருக்க வேண்டிய திருச்சபை நிறுவனமயமாக்கப்பட்டிருந்தது; ஆலயம் மனித நேயத்தை மறுதலித்திருந்தது

திருச்சபையின் ஆன்மிகமற்ற நிலைமையையும் கடவுளற்ற வழிபாட்டையும் கண்டார்.

ஆதிக்க அரசாலும் நிறுவன சமயத்தாலும் பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்கு நீதி, விடுதலை கிடைக்காது என்பதை அறிந்து தன்னுடைய எதிர்ப்பை துணிந்து வெளிப்படுத்தினார்.

இதனால் பாதிக்கப்பட்ட அரசும் சமயமும் இணைந்து அவரை சிலுவையில் அறைந்தனர். இப்படிப்பட்ட வேதனை மிகு நிலையிலும் மக்கள் பிரச்சனையை உலகளாவிய விதத்தில் அடையாளப்படுத்த நான்காவது வார்த்தையை பயன்படுத்துகிறார். வெளிப்படுத்தப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாது. எனவே தான் இயேசுவும் ‘‘என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்’’ என்று உரத்த குரலில் கத்தினார்.

மக்கள் பிரதிநிதியின் குரல் அல்ல, மாறாக அரசாலும் நிறுவன சமயத்தாலும் கைவிடப்பட்ட சாமானியனின் அவல நிலை அவர்கள் நிலையிலிருந்து வெளிப்படுத்துகிறார். இதனால் உலகளாவிய விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் கவனத்தை ஈர்க்கிறார்.

பாதிக்கப்பட்ட சமூகம் ஒன்றிணைந்தால் தான் தீர்வுகாணமுடியும் என்பதை உறுதிப்படுத்துகிறார். பிரச்சனைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மக்கள் விடுதலைக்கு முன் நிற்பவருக்கு சிலுவையும் கைவிடப்படும் நிலையும் உண்டு. மரணமும் நிகழலாம். ஆனால், முடிவு அதுவல்ல. நீதியின் இறையவரால் அருளப்படும் அரசில் அமைதி வாழ்வு உண்டு. இயேசு பாதிக்கப்பட்ட சமுதாயத்தோடு தன்னை அடையாளப்படுத்தினார்.

நம்மை யாரோடு அடையாளப்படுத்துகிறோம். பாதிக்கப்பட்டிருக்கும் வர்க்கத்தோடா ? பாதிப்பை உருவாக்கும் அதிகார வர்க்கத்தோடா? சிந்திப்போம்.

திரு. A. **ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

*ஐந்தாம் திருமொழி*

# விரும்பியேற்கும் தாகம்

திருமறைப்பாடம் : யோவா 19:28-29

**. . . இயேசு ''தாகமாய் இருக்கிறது என்றார்'' யோவா 19:28**

சிலுவையில் தொங்கிய படியே கிறிஸ்து இயேசு ''தாகமாயிருக்கிறேன்'' என்றார். இவ்வார்த்தை ஓர் சிறிய வார்த்தை ஆனால், அவ்வார்த்தையை சொன்னவர் யார்? சொன்ன சூழல் என்ன? என்பதைப் பொறுத்து அதன் பொருள் மாறுபடுகிறது. மனிதனாகப் பிறந்தவர்கள் அனுபவிக்க கூடிய பாடுகளில் கொடூரமானது தாகத்தினால் ஏற்படும் பாடு என்றால் மிகையாகாது. என்ன விலை கொடுத்தாவது தண்ணீரை வாங்கி தாகத்தை தணிக்கின்றனர். ''நான் கொடுக்கும் தண்ணீரை குடிப்பவர்க்கோ ஒரு நாளும் தாகம் உண்டாகாது'' என்று உரைத்த இயேசு கிறிஸ்து ''தாகமாயிருக்கிறேன்'' என்றார். ஏன் இந்த தாகம்? பல மணி நேரமாக தொடர்ந்து கொண்டிருக்கும் பாடுகள் நிறைவுற போகும் நேரம் நெருங்கி கொண்டிருக்கிறது. பல கசையடிகள், அங்குமிங்குமாக அலைக்களிக்கப் பட்ட நிலை, முந்தைய நாள் இரவில் தம் சீடர்களுடன் பஸ்காவை ஆசரித்த போது பானம் பண்ணினார். அதன் பின் தண்ணீர் குடித்ததற்கான குறிப்புகள் எதுவுமில்லை. தாகமாயிருக்கிறேன் வார்த்தை நமக்கு கற்றுதரும் உண்மைகளைச் சிந்திப்போம்.

## *1. இறைவாக்கு நிறைவேறியதன் வெளிப்பாடு :*

வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக . . . (யோவா. 19:28 a)

தாகமாயிருக்கிறேன் என்ற சொல் இயேசுவை உலகின் மீட்பர் என்பதனை உறுதி செய்கின்றது. திபா. 69 : 21-ன் படி என் தாகத்திற்கு காடியை குடிக்க கொடுத்தார்கள் என்ற வார்த்தையின் நிறைவேறுதற்காக அமைந்த ஒரு வார்த்தை ஆகும். இயேசு தம்மை குறித்து கூறப்பட்ட அனைத்து வார்த்தைகளையும் தம் பணிகாலத்தில் செய்து நிறைவேற்றினார். நிறைவேறாமல் இருந்த இந்த வார்த்தையினை சிலுவையில் நிறைவேற்றினார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை முன் அறிவிக்கப்பட்ட ஒன்று. அவைகளை படிப்படியாக செய்து இறைவாக்கினை நிறை வேற்றினார் தன்னுடைய வாழ்வின் வழியாக தந்தையின் சித்தத்தினை

அப்படியே செய்து நிறைவேற்றினார் இயேசு கிறிஸ்து. தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையினை கேட்டவுடன் உரோமை படைவீரர் ஒருவர் கடற்காளானை காடியில் தோய்த்து அவருக்கு குடிக்க கொடுக்கிறான். இயேசு கசப்பான அந்த காடியை வாங்கி தன்னுடைய தாகத்தினை தீர்த்தார் என்றால் அது இறைவார்த்தையின் நிறைவேறுதலுக்காகவே என்றால் அது உண்மையிலும் உண்மை. இயேசு உலகில் வந்து தந்தையாம் கடவுளின் வார்த்தையை நிறைவேற்றியதை போல நாமும் நிறைவேற்ற அழைக்கப் படுகிறோம்.

## 2. மனிதத் தன்மையின் வெளிப்பாடு :

ஆண்டவரும் கிறிஸ்துவுமாகப் போற்றப்படும் இயேசு தமக்கு தாமே சூட்டிக் கொண்ட பெயர் மானிட மகன் (மனுமைந்தன்) இறைமைந்தரும் திருவாக்குமாக என்றென்றும் இறைவனுடன் இருந்தவர் இயேசுவில் ஓர் உண்மையான மனிதராக ஊன்உடலேற்று இவ்வுலகத்தில் வந்தார். யோவா. 12:32 நான் பூமியில் இருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் என்றார். அவர் சொன்ன படியே அனைவரையும் தம்மண்டை இழுத்துக் கொண்டார். சிலுவையில் இயேசு மொழிந்த இந்த வார்த்தையின் படி அவரது மானிட தன்மையின் வெளிப்பாடாகவே தாகமாயிருக்கிறேன் என்றார். ஒரு சாதாரண மனிதர் படும் பாடுகளை அவரும் பட்டார். வேதனைதனை அனுபவித்தார் சாதாரண மனிதனை போன்று தாகமாயிருக்கிறேன் என்கிறார். இச் செயல்கள் இயேசுவின் மானிடத் தன்மையின் ஓர் வெளிப்பாடாக இருந்தது. இயேசு கிறிஸ்து வார்த்தையின் மனுவுரு என்பதும், அவரது ஊன் உடலில் ஒரே பேறான இறை மகனின் மாட்சியானது தங்கியுள்ளது என்பதும் இவ்வார்த்தையின் வெளிப்பாடாக, நிறைவேறுதலாக அமைந்துள்ளது.

இயேசுவுக்கு கடவுள் கொடுத்த பணி அவருடைய விருப்பத்தின்படி மனுக்குலத்தை வாழ்வடையச் செய்யும் படி தம்முடைய உயிரை கொடுப்பதாகும். மக்கள் மீட்படையும்படி, தம் உயிரை கொடுத்து மீட்படைய செய்யும் தாகமாகும். தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையின் படியாக இயேசு திருமறையால் தம்மை குறித்தவைகள் நிறைவேறவே வார்த்தையினை உதிர்த்தார். இவ்வார்த்தையை சிந்திக்கும் நாமும் இயேசு கிறிஸ்து எப்படி தந்தையின் விருப்பத்தினை செய்து நிறைவேற்றினாரோ அப்படியே இயேசு கிறிஸ்துவின் விருப்பத்தினை செய்து நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். விருப்பத்தை உணர்ந்து, நிறைவேற்றி இறையாட்சியை பெற்றுக் கொள்வோம்.

அருள்திரு. A. **ஜெபதாஸ்**

*ஆறாம் திருமொழி*

# விடியலுக்கான பணி நிறைவு

திருமறைப்பாடம் : யோவா 19:29-30

**“எல்லாம் நிறைவேறிற்று.”** யோவா 19:30

சிலுவையில் தொங்கிய இயேசு கிறிஸ்து ஆறாவது வார்த்தையாக “முடிந்தது” என்றார். முடிந்தது என்ற வார்த்தைக்கு முற்றுப்பெறுதல், பூர்த்தி செய்தல், முடிவுறுதல், கொல்லுதல், அழித்தல், நிறைவேறுதல் என்ற பொருள்கள் உள்ளது. மேலும் தோல்வியையும், வெற்றியையும் குறிக்கும் வார்த்தையிது. இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தையில் நிறைவேறுதலும் வெற்றியின் அறைகூவலும் தொனிக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்வுகாலம் சுமார் முப்பத்து மூன்றரை ஆண்டுகாலம். ஆகிலும் அவர் உலகில் பிதாவின் விருப்பப்படி நிறைவேற்ற வேண்டிய அனைத்துகாரியங்களையும் சீராய், சிறப்பாய், முழுமையாய் செய்து முடித்தார். இந்த அருள் வார்த்தை வெளிப்படுத்தும் சில சிந்தனையை அறிவோம்.

## *1. பலி முடிந்தது :* விப 12:15

எகிப்தின் அடிமைத்தனத்திருந்து விடுதலை பெற்றமையை நினைவுபடுத்தி கொண்டாடும் விழா பஸ்கா. இதில் பழுதற்ற ஆட்டுகுட்டி அடிக்கப்பட்டது. விடுதலை உணர்வுடன் இந்தப்ப ஆசரிக்கப்பெற்று வந்தது. இயேசு தம் கடைசி இரவு உணவில் தமது சரீரம், இரத்தம் மனுக்குல பாவத்திற்காக பகிர்வதாக உறுதிகூறினார். சிலுவையில் தம்மை பயாய் நிறைவேற்றி முடித்தார். எபேசியர் 5:2-ல் பவுலடியார் கூறும்போது இயேசு தம்மை ஒரே தரம் கடவுளுக்கு சுகந்தவாசனையான காணிக்கையாகவும், பயாகவும் ஒப்பு கொடுத்தார் என்கிறார். எனவே பநிறைவேற்றி முடிந்தது என்கிறார்.

## *2. பாடுகள் முடிந்தன :* எசா 53:12

இயேசு கிறிஸ்து பாடுபடும் பணியாளன்; அக்கிரமக்காரரில் ஒருவரைப் போலானார். அனேகருடைய பாவங்களுக்காக தன்னையே ஒப்புகொடுப்பார். எனவே பலவான்களையும் தனக்காக கொள்ளையாக

கொள்வார் என்கிறார் இறைவாக்கினர் ஏசாயா. மேலும் யோவான் 1:36-ல் திருமுழுக்கு யோவான் கூறுகிறார், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற கடவுளின் ஆட்டுக்குட்டி பாடுகள் சுமக்க வந்தவர். மாற்கு 8:34. சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்ற கடவன். பாடுகளை ஏற்கும் ஆயத்தத்தை மனுக்குலத்திற்கு தந்தும், பாடுகளை சுமந்தும் முடிந்தது என்கிறார் சிலுவையில் இயேசு கிறிஸ்து.

### *3. பணி முடிந்தது :* **லூக் 4:18,19**

இயேசு கிறிஸ்து நாசரேத் ஊர் அறிக்கையில் தமது பணியைப்பற்றி வெளிப்படுத்தினார். சமுதாயத்தில் ஓரங்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காகவே மீட்பின் பணி செய்ய வந்தேன். முழுமையாய் நிறைவேற்றி முடிக்கும் வரை ஓய்வுஇன்றி பணியாற்றியவர். பாடுகள், சோதனைகள், வேதனைகள் சந்தித்தபோதும் வெற்றியாய் நிறைவேற்றி முடித்தவர். ‘‘வாழ்வின் முழுமை கடமையை செய்து நிறைவேற்றுவதில் இருக்கிறது’’. பிதாவின் சித்தம் தம் பணியில் நிறைவுபெற்றது என்ற மகிழ்ச்சியில் இயேசு முடிந்தது என்றார்.

மாணவன் ஒருவன் படித்துபட்டம் பெற்றதும் முடிந்தது என்றான். அவனின் படிப்பு கடமையின் வெற்றி, வேலையைக் கொடுத்தது. படிப்பு முடிந்து அதன் பலன் வேலை புதியவாழ்வுக்கான துவக்கம் ஆகும். இயேசுவின் வாழ்வில் தன்னை பயாக்கி, பாடுகளை தாங்கி தம்பணி நிறைவாக்கி முடித்தார். உயிர்ப்பின் முன்னோட்டம் முடிப்பு வார்த்தையில் பிரதிபக்கிறது. நாமும் முடிவில்லா வாழ்வுக்கு ஆயத்தம் செய்ய இறை சித்தத்தின்படி இவ்வுலகில் வாழ்க்கையை முழுமையாக்கி முடிக்க அழைக்கிறார் வாரீர்.

அருள்திரு. O. **றிச்சர்டு சுவர்ணா**

*ஏழாம் திருமொழி*

# வியத்தகு ஒப்படைப்பு

திருமறைப்பாடம் : லூக் 23:44-47

**"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன். . ." லூக் 23:46**

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பூமியிலே ஆலயத் திரைச்சீலையும் கிழிந்தது. வாழ்விலே கொடிய நேரம் இது. ஆனால் இறைமகனுக்கு இதுவே வெற்றியின் நேரம்.

கதிரவனைக் காரிருள் மறைத்த நிகழ்வு, நீதி அநீதியால் மறைக்கப்பட்டதைக் காட்டுகிறது. இயேசுவின் பிறப்பை அறிவிக்க நட்சத்திரம் தோன்றியது. இயேசுவின் இறப்பை அறிவிக்க கதிரவன் மறைகிறான். இயேசு பிறப்பது ஒளி. இயேசு இறப்பது, இல்லாமல் இருப்பது, அகற்றுவது, வேண்டாம் எனப் புறக்கணிப்பது தானாகவே இருளைத் தேடுகிற அனுபவம். இது நமக்கு நல்ல படிப்பினை ஆகும். இருள் மூடிய நேரத்தில் இயேசு 'தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்' என்று கூறி தம் உயிரை விட்டார். யூதத் தாய் தன் மகனுக்குக் கற்றுக்கொடுக்கும் இறை வேண்டல் இதுவே. தூங்கச் செல்லும் யூதன் தூங்குவதற்கு முன் ஏறெடுக்கும் இறைவேண்டலும் இது தான். வாழ்வில் வரும் சவால் நிறைந்த சூழலிலும் இறைவேண்டல் செய்ய தடையில்லை என்பதை இயேசுகிறிஸ்து காட்டுகிறார். இறக்கும் வேளையில் தான் இறப்பதாகக் கூறாமல் தூங்கும் போது ஏறெடுக்கும் மன்றாட்டினால் தான் இறக்கவில்லை நித்திரையடைகிறேன் என்கிற நம்பிக்கையை வெளிக்காட்டி உயிர்த்தெழுதலைப் பறைசாற்றுகின்றார். இது இறைமகனின் ஒப்படைப்பு.

## *1. ஆற்றல் தந்த உயிரைத் தந்தையிடம் ஒப்படைத்தார் :*

கிறிஸ்துவுக்கும் தந்தையாம் கடவுளுக்கும் உறவு மீண்டும் இங்கு உறுதியாகிறது. அனைவரும் புறக்கணித்த சூழலிலும் குறிப்பாக கெத்சமனே தோட்டத்திலே தம் சிலுவை கடவுளின் விருப்பமே என்பதை நன்கறிந்தார். விண்ணகத் தூதர் இயேசுவைத் தேற்றினாரே தவிர சிலுவையில் இருந்து மாற்றவில்லை (லூக் 22 : 43). எனினும் தந்தையே என்று அழைக்கும் இயேசுவின் அன்பு மேன்மையானதே. கொஞ்சம் சொத்திற்காக அல்ல ஏதோ ஒரு சிறிய காரணத்திற்காக நமக்கு வாழ்வும் வளர்ச்சியும் தந்த முதியோர் இல்லம் வாழும் நம் முதியவர்கள் அல்லது வீடுகளிலேயே வாழும் முதியவர்களின் வாழ்வு நமக்கு ஒரு சவால் . இங்கே இத்தகைய சூழலிலும் இயேசு கிறிஸ்து தனக்கு ஆற்றல் தந்த உயிரை தந்தையிடமே ஒப்படைத்தார்.

தந்தை எதற்காக அனுப்பினாரோ அவைகளை நிறைவு செய்தார். வல்ல செயல் செய்ய ஆற்றல் தந்த உயிரை அதாவது இறந்த லாசருவுக்கு உயிர், பார்வையற்றவருக்குப் பார்வை, முடமானவர்களை நடக்க வைக்கிற ஆற்றல், தொழுநோயாளிகளைக் குணப்படுத்தும் ஆற்றல் தீமைகளை அகற்றும் ஆற்றல், நன்மைசெய்யும் ஆற்றல் என அனைத்தும் செய்ய ஆற்றல் தந்த உயிர், அந்த உயிரை இறைவனிடம் இப்போது ஒப்படைக்கிறார்.

இறைவன் தந்த அதிகாரம் ஆற்றல், அறிவு, வரங்கள் இவைகள் தந்தையை விட்டு கிறிஸ்துவைப் பிரிக்கவில்லை. நம் வாழ்வில் இறைவன் நமக்கு தரும் இத்தகைய நன்மைகள் இறைவனை விட்டு நாம் பிரிய காராணமாயிருக்கிறதா ?

ஆற்றல் தந்த உயிரை மாசின்றி பயன்படுத்தி, பணியாற்றி அதைத் தந்தையிடமே, இயேசு கிறிஸ்து ஒப்படைக்கிறார். நாமும் நமது உயிரை கடவுளிடம் ஒப்படைக்க வேண்டியவர்கள் என்ற உணர்வோடு வாழ்வோம்.

### 2. தொடர் வாழ்விற்காய் தந்தை தந்த உயிரைத் தந்தையிடமே கொடுக்கிறார் :

மண்ணினால் மனிதனை உருவாக்கினார். இப்போது உடல் மண்ணிற்கு திரும்புகிறது. ஆனால் உருவாக்கப்பட்ட மனிதனுடைய நாசியிலே உயிர் மூச்சை ஊதி உயிர் கொடுத்தார் (தொநூ 2 : 7). அப்படியானால் உயிர் இறைவனுக்குத் தானே சொந்தம். தம் கடைசி விருந்தின் போது தம் உடலையும் உதிரத்தையும் தம்மை நம்பும் மக்களுக்குச் சொந்தமாக்கினார் (லூக் 22: 19-20). இப்போது உயிரை இறைவனிடம் ஒப்படைக்கிறார். எதற்காக வெனில் தொடர் வாழ்விற்காக இறப்பு என்பது இறப்பில்லா வாழ்வின் தொடக்கம். இறப்பு என்பது மனித வாழ்வின் முடிவு அல்ல முடிவில்லா வாழ்வின் தொடக்கம். அந்த முடிவிலா வாழ்வு எங்கே என்பது தான் கேட்க வேண்டிய கேள்வி. விண்ணுலகிலா? அல்லது நரகத்திலா? நரகத்தின் கொடுமையை நாம் அறிவோம். சாகாமல் நித்தமும் சாகும் நரகத்தின் கொடுமை நமக்கு வேண்டாம். நிலையான பேரின்பம் நிறைந்த பேரின்ப வீட்டிந்கு நம் உயிர் சொந்தமாக வேண்டும். உள்ளத்தின் மாசகற்றி பாவங்களிலிருந்து விலகி இறை மக்களாக வாழ்கிற போது நம்முயிரை இறைவன் கரத்தில் ஒப்படைக்க முடியும்.

கிறிஸ்து தமக்கு ஆற்றல் தந்த தந்தை கொடுத்த உயிரை தொடர் வாழ்விற்காக தந்தையிடமே ஒப்படைக்கிறார். அப்படியே நாமும் அழியா, நிலையான வாழ்விற்காக நம்முயிரை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும் எனும் உணர்வோடு வாழ்வோம்.

அருள்திரு. S. **எட்வின் ஜெயகுமார்**

**04-04-2015** *தூய சனிக்கிழமை*

# புது வாழ்வுக்கான நல் எதிர்நோக்கு

## HOPE FOR THE NEW LIFE

தானி 12 : 1-4 1பேது 4 :12 -19
திபா 4 மத் 27 : 62-66

**“ஆண்டவரை நம்புங்கள்...” திபா 4:5**

**இறைவேண்டல் :** ***நம்பிக்கையற்றவர்களுக்கு எதிர்நோக்கை வழங்கும் புதுவாழ்வின் கடவுளே, துன்பப்படுத்தப்படும்போது அமைதியாய் இருக்க எங்களுக்கு உதவி செய்யும். அநேகரை நீதிக்கு நேராக வழிநடத்துகிறவர்கள் விண்மீன்களைப்போல என்றென்றும் ஒளிரமுடியும் என்றும், பூமியின் தூளில் படுத்திருப்பவர்கள் நிலையான வாழ்வுக்காக எழுந்திருக்க முடியும் என்றும் உம்மிலே நல் எதிர்நோக்கோடு வாழும் வாழ்வை எங்களுக்கு அருளும். இவைகளை நல் எதிர்நோக்கின் ஆதாரமாய் இருக்கிற இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

வாழ்வில் சரியானவற்றை தேர்ந்தெடுக்க வேண்டும் என நினைப்பது ஒவ்வொரு மனிதனின் ஏக்கமாக இருக்கிறது. திருமண தரகர் ஒருவரிடம் சென்ற இளைஞர், “நான் திருமணம் செய்ய ஒரு அடக்கமான பெண் தேவை” என்று சொன்னான். எத்தனையோ பெண்களை சுட்டி காண்பித்தும் எதுவும் அவனுக்கு திருப்தியாகவில்லை. விரக்தியடைந்த தரகர், “உனக்கு அடக்கமான பெண்தானே வேண்டும் என்னோடு வா” என்று சொல்லி, அவனை ஒரு கல்லறைக்கு அழைத்து சென்று, “இதோ இவள் இமல்டா ! இரண்டு வாரங்களுக்கு முன் அடக்கமான பெண்; அதோ அவள் அமலா! ஆறு வாரத்துக்கு முன்பு அடக்கமான பெண், இதோ இந்த கல்லறையில் இருப்பவள் இனியா, இன்று அடக்கமான பெண், உனக்கு எது வேண்டுமோ அதை தேர்ந்தெடுத்துக் கொள்” என்றாராம்.

இந்த இளைஞனை போன்று அடக்கமான பெண்தான் தனது வாழ்க்கை துணையாக வருவதற்கு சரியானவள் என்று நினைக்கிறவர்கள் பலர். இதே போன்று சரியான வீடு, சரியான தொழில், சரியான கணவர் என்று எல்லாவற்றிலுமே சரியானவற்றை தேர்ந்தெடுக்க முயற்சிக்கிறோம். வாழ்வில் சரியானவற்றை தேர்ந்தெடுக்க முயற்சி செய்யும் நாம், வாழ்க்கையை சரியாக வாழ்கிறோமா ? அல்லது சரியான வாழ்வை தேர்ந்தெடுக்க முயற்சி செய்கிறோமா? கடவுளை நம்பும் போது அவர்

நமக்கு புது வாழ்வை தருவதாக திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். கிறிஸ்துவில் புது வாழ்வு என்பது அவரைத் தொழுது கொள்வதில், இறைவார்த்தைகளைப் படிப்பதில், இறைவேண்டல் செய்வதில், நோன்பு இருப்பதில் முடிந்து போவதில்லை, மாறாக, ஒருவர் அவராகவே மாறுவது என்பதாகும். பரிசேயர்கள் சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த வேளையில் இயேசு கிறிஸ்து "வாழ்கிற வாழ்வு" தான் முக்கியம் என்று கூறுகிறார். அதை இயேசு கிறிஸ்து யோவான் 10 : 10- ல் "நானே வாழ்வு தரும் கடவுள்" என்று கூறுகிறார். சட்டத்தை பரிசேயரும் பிரதான ஆசாரியர்களும் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்த சூழலில் இயேசு கிறிஸ்து ஓய்வு நாளில் சுகம் கொடுத்து வாழ்வு இழந்த மனிதருக்கு புது வாழ்வு கொடுத்தார். புதிய வாழ்வு என்பது புதுமை படைக்கும் அனுபவம். புதுமை படைக்கும் இயேசு கிறிஸ்துவுக்கு அடைக்கப்பட்ட கல்லும், போடப்பட்ட காவலும் (மத் 27 : 62-66) ஒதுங்கி நின்றது. புது வாழ்வு வாழ விரும்பும் நாம் கிறிஸ்து காட்டும் வாழ்வை நம்பிக்கையோடு ஏற்று கொள்வது அவசியமாகும்.

### *1. பழைய வாழ்வை விட்டுவிடுதல் :*

"பாவத்தை பற்றிய அறிவின் தொடக்கமே மீட்பின் ஆரம்பம்" என்கிறார் சாது சுந்தர் சிங். பாவம் உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல. எனவே அதற்கு படைப்பின் மீது அதிகாரம் இல்லை. பொதுவாக உடல் ஒத்துக் கொள்ளாததை வாந்தி பண்ணும். இயேசு கிறிஸ்து இறப்பின் மரணத்தின் போதும் பாவத்தின், பரிதாபத்தின் குழியாகிய கல்லறைக்குள் இருக்க விரும்பவில்லை. நாற்றம் தரும் பாவ அனுபவத்துக்குள் அவரால் இருக்க முடியவில்லை. எனவே கல்லறை திறந்தது. அவரை வெளியே செல்ல வழி விட்டது. இயேசு கிறிஸ்துவின் இந்த வாழ்வை பிரதான ஆசாரியர்கள் அறிந்தும் (மத் 27 : 63 -64) அவர்கள் புதிய வாழ்வுக்கான தேடலில் இறங்க விரும்பவில்லை. எபே 4 : 22 -ல் "பழைய மனிதனைக் களைந்து மனிதனைத் தரித்து கொள்" என தூய பவுலார் கூறுகிறார்.

### *2. புதிய வாழ்வைத் தழுவிக் கொள்ளுதல் :*

ஆன்ட்லாங் என்பவரது கூற்றுப்படி இவ்வுலகில் வாழும் நமது பொறுப்பு என்னவெனில் "நாம் செல்லுமிடமெங்கும் தண்ணீரை (பழையவாழ்வு) இரசமாக (புதியவாழ்வு) மாற்றிக் கொண்டு செல்வதே" என்பதாகும். இயேசு கிறிஸ்து தருகிற புதிய வாழ்வைத் தழுவிக் கொள்வது என்பது புதிய பழக்க வழக்கங்கள், புதிய பண்புகளை கடைபிடிப்பது ஆகும்.

புதிய வாழ்வைத் தழுவிக் கொள்ளும்போது பாடுகள் வரும். இயேசு கிறிஸ்து இதைத் திருமுழுக்கு என்று கூறுகிறார் (லூக் 12 : 50). நாம் தண்ணீரினால் திருமுழுக்குப் பெறும்போது இலவச பாவமன்னிப்பு பெறுகிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து கூறும் அடுத்த படியான இரத்தத் திருமுழுக்கு பெறும் போது தான் நமது வாழ்வு முழுமை அடைகிறது. கிறிஸ்துவுக்காக பாடுகளை, பாரங்களை சுமக்கிற போது தான் நாம் புது வாழ்வுக்குள்ளே கடந்து வருகிறோம். இயேசு கிறிஸ்து காட்டும் இந்த முழுக்கு பெறுபவர்கள் முடிவில்லாத வாழ்வு பெறுவார்கள் (தானி. 12:12). இவர்கள் பேரொளியாகவும், விண்மீன்களாகவும் உலகில் எழும்பி பிரகாசிப்பார்கள். கிறிஸ்து காட்டும் புதிய வாழ்வை நம்பிக்கையோடு நாம் எதிர் கொள்ளும் போது வாழ்வில் ஏற்படும் போராட்டங்களை வீரத்துடனும், சவால் நிறைந்த மனதுடனும் கிறிஸ்துவுக்காக ஏற்று வெற்றி கொள்ள வேண்டும் (1பேது 4: 12-13).

அருள்திரு. S. **ஜெயசிங்ராஜன்**

**05-04-2015** உயிர்ப்புப் பெருவிழா

# உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல்

## RESURRECTION : CELEBRATING THE JOY OF SALVATION

விப 14: 5 -31 கொலோ 3 : 1 - 11
திபா 118 : 14 - 29 மத் 28: 1 - 10

**"அவர்கள் பயத்தோடும், மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்."**
**மத் 28:8**

***இறைவேண்டல் :*** *மாட்சிமை பொருந்திய வாழ்வருளும் கடவுளே, உம் திருமைந்தரின் உன்னத உயிர்த்தெழுதலால் பாவம், இறப்பு ஆகியவற்றின் பழைய சட்டங்களை மாற்றி, அனைத்தையும் அவரில் புதிதாக்கினீர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எங்கள் புதுவாழ்வுக்கான நல் எதிர்நோக்கை தந்து பாவத்தின் சாவை வென்றெழுந்து நீதியின் வாழ்வினில் புகவும் உயிர்ப்பின் மீட்பை, மகிழ்வை கொண்டாடவும் அருள்புரிய வேண்டுமென்று என்றென்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யவும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

ஒரு போதகர் பஸ்கா வாரத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது உங்கள் வாழ்வில் ஈஸ்டர் பற்றி விவரிக்கும் ஒரு அடையாளத்தை வரையும் படி கூறி ஒரு போட்டியைத் தொடங்கினார்.

ஒரு சிறு பையன் ஒரு பரிய பஸ்கா மெழுகுவர்த்தி வரைந்தான்

ஒரு பையன் திருமுழுக்குத் தொட்டியும் அதன் அருகில் பாவத்தைக் கழுவும் ஒரு பாத்திரத்தையும் வரைந்தான்.

ஒருவன் காலியான கல்லறையை வரைந்து இயேசு நாதர் உயிர்த்தெழுந்தார் என எழுதினான்

ஆனால் ஒருவன் எரியும் சிறிய விளக்கை வரைந்து அதன் அருகில் அழுகின்ற குழந்தையை மடியில் இட்டு அழாதே என்று தாலாட்டும் தாயை வரைந்து பயப்படாதே என்று எழுதினான். உயிர்ப்புடன் ஒரு புதுயுகம் தோன்றியுள்ளது. புனித வாழ்வு ஆரம்பமாயிருக்கிறது. பழையன கழிதல் புதியன புகுதல் என்னும் இந்நாளில் நமதாண்டவர் பழைய சடங்குகள், சத்தற்ற சமயக் கோட்பாடுகள் பாவ வாழ்வு அனைத்தையும் கல்லறையில் புதைத்துவிட்டு உயிர்ப்பின் மகிழ்ச்சியைக்

கொண்டாடும் படி நம்மை அழைக்கின்றார். உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் கல்லறை சொல்லும் செய்திகள் என்ன?

### *1. கல்லறை கருவறையாக மாறியது*
### (Tomb became a Treasure House) :

கல்லறை என்றாலே அது அசுத்தம் நாற்றம், பயத்தை குறிக்கின்றது. (மத்தேயு 23 : 27)

1) வெளியே மலர்களை வீசும் போது அது மணம் வீசுகின்றது. ஆனால் உள்ளே நாற்றமெடுக்கிறது.

2) மெழுகுவர்த்தியை கொழுத்தி வைக்கும் போது அது பிரகாசிக்கிறது. உள்ளே இருளாக இருக்கிறது.

3) வெளியே பளிங்குக் கற்கள். ஆனால் உள்ளே எலும்புக் கூடு.

இங்கு இயேசுவின் உடலை யாரும் திருடிவிடாதபடி பத்திரமாக பாதுகாத்துக் கொள்ள கல்லறை கல்லால் மூடப்பட்டிருந்தது. நமது வாழ்விலும் நாம் உயிர்த்தெழுந்து வெளியே வராமலிருக்க உயிரோட்டமான மனிதர்களாக வாழ்வதற்குத் தடையாக பல பாவக்கற்கள் நமது இதயம் என்னும் குகையை மூடியிருக்கின்றன. சுயநலம், பேராசை, பொறாமை, குடிவெறி, பழிவாங்குதல் அடக்குமுறை போன்ற எத்தனையோ கற்கள் நமது உள்ளத்தில் நிரம்பியிருக்கின்றன. கல்லறை வெறுமையாக இருந்தாலும், கல்லறை முழுவதும் உயிர்ப்பின் செய்திகள் நிரம்பி இருந்தன. ஆகவே இந்தக் கல்லறை கருவறையானது. அந்த கருவறை பெற்றெடுத்த உயிருள்ள கருத்துக்கள் தான் 2000 ஆண்டுகள் தாண்டியும் கிறிஸ்துவை இந்த மண்ணில் வாழ்வின் ஆண்டவராகக் காட்டுகின்றது. ஆகவே இது வெற்றுக் கல்லறை அல்ல, மாறாக பாவத்தை வென்று இயேசு உயிர்த்தார் என்ற வெற்றியின் கருவறை அது வெறுமையாக இருந்தாலும் செய்திகள் நிரம்பியிருந்தன.

லண்டன் நகரில் 1794 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் தேதி பேக்க காஃபி கவுஸ்சில் வைத்து LMS அங்கத்தின் ஒரு கூட்டத்தை கூட்டினார்கள். அதில் 8 பேர் மட்டுமே கலந்து கொண்டனர் தொடர்ந்து ஜெபித்தார்கள். அதுதான் LMS இன் கருவறையாக மாறியது.

### *2. கல்லறை கலங்கரையாக மாறியது*
### (Tomb became a Light House) :

உயிர்த்தெழுந்த திருநாளில் முன்பே கல்லறையை நோக்கி ஓடியவர் மகதலா மரியாள். அங்கு வெற்றுக்கல்லறையை பார்த்தவுடன் யாரோ திருடிவிட்டார்கள் என்று தவறாக புரிந்து கொண்டார். இங்கு

குறிப்பிடப்படும் இருள் காலச் சூழ்நிலையில் நிலவிய புற இருள் மட்டுமல்ல மரியாளின் உள்ளத்தில் இருந்த அக இருளையும் சுட்டிக்காட்டுகின்றது. அதுபோல சீடர்களின் விசுவாசமும், உள்ளமும் இருண்டு போயிருந்தது. நம்முடைய வாழ்வில் அறியா இருள் இருக்கும் போது நம்மை சுற்றி நடக்கின்ற நிகழ்வுகளை நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. (எ.கா சந்தேகம் என்ற இருள் பயம் என்ற இருள் துன்பம் என்ற இருள்). இவைகள் இவர்களின் இதயத்தை கவ்வி இருந்த காரணத்தினால் உயிர்த்தெழுந்த இயேசுவை புரிந்து கொள்ளாமல் ஒளித்து ஓடுகின்றனர்.

1) மரியாள் துன்பத்தின் நிமித்தமாக அழுது கொண்டிருக்கிறார் அங்கு கலங்கரை விளக்காக ஒரு தோட்டக்காரர் போல் காட்சி கொடுக்கிறார் (மத் 28: 9-10).

2) துக்க முகத்தோடு எம்மாவூருக்கு சென்று கொண்டிருந்த இரண்டு சீடர்களுக்கும் கலங்கரை விளக்காக நின்று ஒரு வழிப் போக்கரைப் போல் காட்சி தருகின்றனர் (லூக் 24 : 13-35).

3) பயந்து போய் மேல் அறையில் இருந்த அனைத்துச் சீடர்களுக்கும் கலங்கரை விளக்காக நின்று காயப்பட்ட மனிதராகக் காட்சியளிக்கிறார். (யோவா 20 : 26-29)

4) நொந்து போய் திபேரியா கடற்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சீடர்களுக்கு கலங்கரை விளக்காக நின்று காட்சி தருகிறார் (யோவா 21:5)

கடலில் பயணம் செய்யும் கப்பலை அலை, கொந்தளிப்பு, புயல், இருள் மற்றும் ஆபத்தான பாறையிலிருந்து கரை சேர்ப்பது கலங்கரை விளக்கு. இங்கு கிறிஸ்து கலங்கரை விளக்காக இருந்து கரை சேர்க்கிறார்.

### *3. கல்லறை காற்றறையாக (உயிர் மூச்சு) மாறியது* **(Tomb became a Breath House) :**

உயிர்த்தெழுதல் உயிர் மூச்சாக மாறிய இடம் கல்லறை, பிரதான ஆசாரியர்கள் வேதபாரகர்கள், பரிசேயர்கள் இயேசு நாதரை கொலை செய்து அடக்கம் செய்த இடம் கல்லறை, கொலை செய்ப்பபட்ட இயேசுநாதர் மீண்டும் மூச்சுக் காற்றை பெற்ற இடம் கல்லறை, சீடர்கள் நம்பிக்கை இழந்து மூச்சுத் திணறியவர்களாக தடுமாற்றமடைந்து மந்த நிலைமையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் இயேசுநாதர் உயிர்த்தெழுந்த கல்லறைக்குள் சென்று விசுவாசக் காற்றைச்

சுவாசித்தார்கள். அதன் மூலம் சக்திவாய்ந்த, வல்லமையான மனிதர்களாக மாறினார்கள். உயிர்த்தெழுதல் அவர்களுக்கு உயிர் மூச்சாக மாறியது.

1) ஒருமுறை அல்ல, இரண்டு முறை மகதலேனா மரியாள் கல்லறைக்கு வெளியே நின்று விடுகின்றார்.

2) யோவான் பேதுருவைவிட துரிதமாக ஓடி முந்தி கல்லறையிடத்திற்கு வந்து அதற்குள்ளே குனிந்து பார்த்து, சீலைகள் கிடப்பதை கண்டார். ஆனாலும் உள்ளே போகவில்லை (யோவா 20 : 4, 5)

3) பேதுரு கல்லறைக்குள் பிரவேசித்து சீலைகள் தனியே சுருட்டி வைத்திருப்பதை கண்டார் சென்றார் விசுவாச காற்றை சுவாசித்தார்.

இயேசுவின் உயிப்ப்பு கொடுத்த நம்பிக்கை திருத்தூதர்களை சாதனை மனிதர்களாக்கியது. காலியான கல்லறையானது அவர்கள் மனதில் இருந்த பயம், குழப்பம், கோழைத்தனம் அனைத்தையும் காலி செய்தது. இதுவரையிலும் அவர்களுக்குள் இருந்த ஆதங்கம் அங்கலாய்ப்பு போன்றவை அக்களிப்பாக, ஆர்ப்பரிப்பாக மாறியது. காரணம் அவர்கள் விசுவாசக் காற்றைச் சுவாசித்தார்கள்.

Marques De Marcia சொன்னார், “நிலத்திலும் நீரிலும் இருப்பதைவிட அதிகமான புயல்கள், கொந்தளிப்புகள் குடி கொண்டிருக்கும் இடம் நம் உள்ளம்”.

ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம் (திபா 118: 24).

அருள்திரு. **C. சுதிபன்**

**12-04-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு***

# உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு

## ENCOUNTER WITH THE RISEN LORD

தொநூ 32 : 22 - 32　　　　திப 9 : 1 - 18
திபா 40　　　　யோவா 20 : 24-29

**“. . . இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று வாழ்த்தினார்.”** யோவா 20:26

**இறைவேண்டல் :** ***எங்கள் மீட்பரான கடவுளே, உமது திருமைந்தர் எங்கள் பாவங்களுக்காக இறக்கவும் எங்களை நீதியின் வழியில் நடத்த மாட்சியோடு சாவை வென்றெழவும் அருள்கூர்ந்தீர். நாங்கள் நம்பிக்கையுடன் உயிர்த்தெழுதலை ஏற்று, இறைநம்பிக்கையில் தளர்வின்றி முன்னேறவும் எங்கள் வாழ்வில் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய கிறிஸ்துவை சந்தித்து எங்கள் பற்றுமையைப் புதுப்பித்துக் கொள்ளவும் அருள்செய்ய வேண்டுமென்று அன்பரின் பாதம் பணிந்து வேண்டுகிறோம். ஆமென்.***

கென்னத் டேட் என்பவர் அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா நகரில் உள்ள நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மைய அதிகாரியாகப் பணிபுரிந்தார். 2014 நவம்பர் மாதம், எபோலா என்னும் கொள்ளைநோய் குறித்து நேரில் அறிய அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா நோய்க் கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகைபுரிந்தார். அவரை வரவேற்று அழைத்து வரும் பொறுப்பை, நிர்வாகம் கென்னத் டேட்டிடம் ஒப்படைத்தது.

சிகாகோ நகரில் பிறந்த ஆப்பிரிக்க - அமெரிக்கரான கென்னத் டேட் இதனால் பெரிதும் மகிழ்ந்தார். அமெரிக்க அதிபர் ஒபாமாவைச் சந்திப்பதையும் அவரோடு உரையாடப் போகிறோம் என்பதையும் எண்ணிப் பெருமிதம் கொண்டார். இந்தச் சந்திப்பைத் தன் வாழ்நாள் பயன் என்று கருதினார். குறிப்பிட்ட நாளன்று ஒபாமா வருகை தந்தார். அவரை வரவேற்று அழைத்துச் சென்றார் கென்னத் டேட். அதே போன்று பணிமுடித்து ஒபாமாவை வழியனுப்பி வைத்தார். ஒபாமா சென்றதும் அவர் தன்னோடு என்ன பேசினார் என்பதைப் பெருமை பொங்க தன் சக அதிகாரிகளிடம் பகிர்ந்து கொண்டார்.

சில நிமிடங்களில் அவரை அழைத்த மேலதிகாரிகள், ஒபாமா புறப்படும் போது அவரது வாகனத்தைச் செல்போனில் படம்பிடித்ததற்காக கென்னத் டேட்டைப் பணி நீக்கம் செய்து அதற்கான ஆணையை அவரிடம் வழங்கினர். இதனால் அவர் பெரும் மனஉளைச்சலுக்கும் இழப்புக்கும் ஆளானார். ஒபாமாவைச் சந்தித்ததை என் குடும்பத்தினரோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று இருந்தேன். ஆனால் ஒபாமாவைச் சந்தித்தால் நான் என் பணியை இழக்க நேரிடும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்று தன் வேதனையைப் பதிவு செய்துள்ளார் கென்னத் டேட்.

உலகில் மனிதர்கள் தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் சந்திப்புகள் சில நேரங்களில் மகிழ்ச்சியையும், சில நேரங்களில் மனமடிவையும் சில நேரங்களில் மாறாக் காயங்களையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. சந்திப்புகளில் எல்லாம் முதன்மையானதும் முழுமையானதுமான சந்திப்பு, கடவுள் மனிதனைச் சந்திப்பதுவேயாகும். கடவுள் மனிதனைச் சந்திப்பதென்பது, அளவுகடந்த அவரது அன்பின் பிரவாகத்தையும் அருளின் நிறைவையும் காட்டுகின்றது. கடவுள் மனிதரைத் தேடி வந்து சந்திக்கின்றார் (லூக் 19:10) என்பதே கிறிஸ்தவ நற்செய்தியாகும்.

யோவா 20: 24 - 29 வரையுள்ள வசனங்கள் உயிர்த்த கிறிஸ்து தம் அடியவர்களை இரண்டாம் முறையாகச் சந்திப்பதைப் பற்றிப் பேசுகிறது. இந்தச் சந்திப்பு சங்கடத்தோடும், சஞ்சலத்தோடும் அறைக்குள் முடங்கிக் கிடந்த அடியவர்களை முன்னேறிச் செல்லத் தூண்டியது. எத்தகைய சூழலில் இச்சந்திப்பு நடைபெற்றது என்பதையும் கிறிஸ்து - சீடர்கள் இடையேயான இந்தச் சந்திப்பு சாத்தியமாக்கியவைகளையும் தியானிப்போம்.

### *1. உடைந்த உள்ளத்தவரைச் சந்திக்கும் ஆண்டவர் :*

**(யோவா 20 : 26)**

இங்கிலாந்து அரசி விக்டோரியா, தன் கணவரின் மரணத்திற்குப் பிறகு சொன்னது, ‘இப்போது என்னை விக்டோரியா என்று உரிமையோடும், அதிகாரத்தோடும் அழைப்பதற்கு யாருமே இல்லை. ஆயிரம் பேர் சுற்றி நின்று எனக்கு மரியாதை செய்தாலும் நான் தனிமையையே உணர்கிறேன்’ என்றார்.

உலகில் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும் வருங்காலவாதியுமான H.G. வெல்ஸ் என்பவர் தனது 65 ஆம் பிறந்தநாளில் சொன்னது, ‘எனக்கு 65 வயதாகிறது. நான் தனித்திருப்பவனாகவும், அமைதியை கண்டடையமுடியாதவனாகவும் இருக்கிறேன்’ என்றார்.

ஐரோப்பாவிலுள்ள முதன்மையான நாட்டிய நாடகத்தில் நடனமாடும் பெண் (A great ballet dancer). இலட்சோப இலட்ச மக்களைத் தன் திறமையால் கவர்ந்தார். அவர் சொன்னது, 'மில்லியன் அளவிலான மக்கள் சூழநின்று என்னைப் பாராட்டினாலும் நான் என் தனிமையையும், என்னைத் தனித்திருப்பவளாகவும் உணர்கிறேன்' என்றார்.

இவையெல்லாம் இந்த உலகப் பிரபலங்களின் வாழ்வில் ஏற்பட்ட இழப்புகளினால் அவர்கள் மக்கள் மத்தியில் நின்றாலும் தனித்திருப்பதாக உணர்ந்ததை வெளிப்படுத்துகின்றது.

இதே போன்று தான் சீடர்களும் இயேசு கிறிஸ்துவின் இறப்புக்குப்பின் அனைவரும் கூடியிருந்தாலும் ஒவ்வொருவரும் தன்னளவிலும், கூட்டளவிலும் கிறிஸ்து இல்லாத வெறுமையையும் தனிமையையும் உணர்ந்து அச்சத்தோடும் அதைரியத்தோடும் கிறிஸ்துவின் பிரிவை எண்ணி உடைந்த உள்ளத்தோடு பூட்டிய வீட்டுக்குள் இருந்தனர்.

யோவா 20: 24 - 29 வரையுள்ள இப்பகுதியில் உயிர்த்த கிறிஸ்து தம் அடியவர்களுக்கு இரண்டாம் முறை தோன்றுகின்றார். முதற்காட்சியில் தோமா இடம்பெறவில்லை (யோவா 20: 24) ஏன் முதலாவது தரிசனத்தில் தோமா இடம்பெறவில்லை என்பதற்குத் திருமறை அறிஞர்கள் பின்வருமாறு விளக்கம் தருகின்றனர்.

தன் நண்பரான இலாசர் இறந்து போனதைத் தம் அடியவர்களுக்கு அறிவித்து தாம் அங்கு போவதாக இயேசு கூறினார். அங்குதான் யூதர்கள் உம்மைக் கல்லெறிய முயன்றனர். ஆகவே அங்கு செல்ல வேண்டாம் எனச் சீடர்கள் இயேசுவைத் தடுத்தனர். ஆனால் இயேசு கிறிஸ்து அங்கு செல்வதில் உறுதியாக இருந்தார். உடனே தோமா உடன் சீடர்களிடம், ''நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்'' என்று கூறினார் (யோவா 11:7- 16). இதனால் இயேசு கிறிஸ்துவின் சிலுவையையும் அவர் எருசலேம் சென்றால் கொல்லப்பட நேரிடும் என்பதையும் தோமா நன்கு அறிந்திருந்தார்.

எது இயேசுவுக்கு நேரிடக் கூடாது என எண்ணியிருந்தாரோ அந்தச் சிலுவைச்சாவு நேரிட்டதால், தோமா உள்ளம் உடைந்து போனார். பொதுவாக, துன்பமும் துக்கமும் ஏற்படும் போது உள்ளம் உடைந்து யாரையும் சந்திக்க மனமில்லாமல் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வது மனிதர்களின் இயல்பாகும். இந்த உள்ள உடைவும் மன உளைச்சலும், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்த துக்கமும் துன்பமும் தோமாவைத் தனிமைப்படுத்தியது. ஆகவே மற்ற சீடர்களையும் எதிர்கொள்ள முடியாமல் தனித்துப் போய் உளம் வருந்தினார். எனவே தான் கிறிஸ்துவின் முதலாவது தரிசனத்தில் தோமா பங்குபெற இயலவில்லை.

இத்தகைய சூழலில் உடைந்த உள்ளத்தோடு இருந்த தோமாவையும் உடன் சீடர்களையும் இயேசு கிறிஸ்து சந்திக்கின்றார்.

தொநூ 32:22-32 வரையுள்ள பகுதியில் தன் சகோதரனாகிய ஏசா நானூறு பேரோடு தன்னை எதிர்கொள்ள வருகிறார் என்பதை அறிந்த யாக்கோபு, ஏசாவால் தனக்குத் துன்பம் நேருமோ என எண்ணியதால் குடும்பத்தினரோடும், பணியாளர்களோடும் இருந்தாலும் தனிமையை விரும்பினார் (தொநூ 32: 24).

தன் சகோதரனால் தனக்குத் துன்பம் ஏற்படுமென்று உடைந்த உள்ளத்தோடு இருந்த யாக்கோபுவை கடவுள் சந்திக்கின்றார். யாக்கோபுவின் வாழ்க்கை முழுவதையும் நாம் கூர்ந்து படிக்கின்றபோது அவர், தாயின் கருவறை முதல் யாப்போக்கு ஆற்றங்கரை அனுபவம் வரைக்கும் தன்னாலேயோ அல்லது பிறராலேயோ போராட்டத்தின் வாயிலாகவே வாழ்க்கை நடத்த நேரிட்டது (தொ நூ 25: 22இ 27 : 41-45, 29: 15 - 30).

இந்த வாழ்வுகாலப் (Lifetime) போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணமாக கடவுள் யாக்கோபுவைச் சந்தித்து புதுப் பெயரிட்டு (யாக்கோபு - இஸ்ரயேல்) ஆசி வழங்குகின்றார் (தொநூ 32:28).

வாழ்வில் விரக்தியும், இழப்புகளும், தோல்விகளும் ஏற்பட்டு உடைந்த உள்ளத்தோடு, உறவுகள் சூழ இருந்தாலும் தனித்துவிடப்பட்ட அனுபவத்தோடிருக்கின்றவர்களை ஆண்டவர் சந்திக்கின்றார் என்பதை இதன் வழியாக அறிய முடிகின்றது.

### *2. உறுதியற்றவரைச் சந்திக்கும் ஆண்டவர் :* **(யோவா 20:25)**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மோடு இருக்கவும், தம்மோடும் தமக்குப் பின்னும் இவ்வுலகில் தம் பணியை நிறைவேற்றவும் சீடர்களைத் தெரிவு செய்தார். இத்தகைய சீடர்கள் அவ்வப்போது தங்களுடைய அழைப்பிலும் அர்ப்பணத்திலும் தடுமாற்றமுடையவர்களாக விளங்கினர்.

இந்தத் தடுமாற்றம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பணிக்காலத் தொடக்க முதல் அவரது உயிர்ப்புக்குப் பின்னும் தொடர்ந்தது என்பதை நற்செய்திப் பாடத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இப்படித் தங்களுடைய அழைப்பிலும் அர்ப்பணத்திலும் உறுதியற்றுப்போன சீடர்களை ஆண்டவர் சந்திக்கின்றார். உங்களுக்குச் சமாதானம் (யோவா 20:26) என்று கூறி அவர்களை உறுதிப்படுத்துகின்றார்.

யோவான் நற்செய்தி நூலை நாம் ஆழ்ந்து படிக்கும் போது சமாதானம் (கிரேக்கு மொழியில் ‘ஐரேனே’) என்னும் வார்த்தை ஐந்து இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா 14: 27, 16: 33,

20:19, 20:21, 20: 26). இந்த ஐந்து இடங்களிலும் இயேசு கிறிஸ்து சீடர்களிடமே இந்த வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுகின்றார்.

யோவா 14:27 இல் அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன், என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல என்றும், யோவா 16:33 இல் துன்பம் நேரிடினும் என் வழியாய் நீங்கள் அமைதி பெறுவீர் என்றும் கூறியுள்ளார். கிறிஸ்துவினால் இறைச்சமாதானம் பெற்ற சீடர்கள் அச்சமாதானத்தில் உறுதியாயிருக்க வேண்டியவர்கள். அவரது இறப்புக்குப் பிறகு உறுதியற்றுப் போயினர்.

இயேசு கிறிஸ்து தமது மரணத்தையும் உயிர்ப்பையும் பலமுறை முன்னறிவித்திருந்த போதும் அந்நம்பிக்கையில் உறுதி பெறாமல் தளர்ந்து போயினர். யோவா 20:19 இன்படி உயிர்த்த கிறிஸ்துவின் அமைதியைப் பெற்ற பின்னரும் அவ்வமைதியிலும் நம்பிக்கையிலும் உறுதிகொள்ளாமல் மீண்டும் பூட்டிய வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர் (யோவா 20:26).

இப்படி, அழைப்பிலும், அர்ப்பணத்திலும், நம்பிக்கையிலும், சமாதானத்திலும் உறுதியற்றுப் போன சீடர்களை ஆண்டவர் சந்திக்கின்றார்.

ஆண்டவர் தங்களுக்குத் தரிசனமானார் என்று மற்ற சீடர்கள் "ஆண்டவரைக் கண்டோம்" எனச் சொன்னபோது தோமாவோ, அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலைவிட்டு, அவர் விலாவில் என்கையை இட்டாலன்றி நம்பமாட்டேன் என்றார்.

அரைகுறையான விசுவாசத்தை விடவும் நேர்மையான சந்தேகத்தோடு எதையும் தெளிவுறப் புரிய முற்படுவது சிறந்தது. அதே போன்றுதான் தனது சந்தேகங்களை மறைக்காமல் வெளிப்படுத்தினார். அவருக்குப் புரியாதவைகளையும் நம்பிக்கையில்லாதவைகளையும் போலியாகப் புரிந்தது போல் காட்டிக் கொள்ளமாட்டார். பட்டறிவு வாயிலாகவே பற்றுறுதி கொள்வார் என்று தோமாவின் கூற்றை நாம் நியாயப்படுத்தினாலும். நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் (யோவா 20: 29) என்று ஆண்டவர் தோமாவின் உறுதியற்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார். இத்தகைய உறுதியற்ற தோமாவையும் ஆண்டவர் சந்திக்கின்றார்.

எப்போதெல்லாம் வாழ்வில் துன்பத்தாலும், இழப்பாலும், தோல்வியாலும் விசுவாசத்தில் உறுதியற்றுப் போகிறோமோ

அப்போதெல்லாம் நம் உறுதியற்ற தன்மையைக் கண்டு கடவுள் நம்மைச் சந்திக்கின்றார் என்பதற்குத் திருமறையில் எலியாவும் (1 அர 19: 1-18) யோனாவும் (யோனா 4) நமக்குச் சிறந்த உதாரணங்களாக உள்ளனர்.

### *3. உயிர்ப்பின் காட்சிதந்து சந்திக்கும் ஆண்டவர் :*

**(யோவா 20 : 27)**

உடைந்த உள்ளத்தோடும், உறுதியற்ற நம்பிக்கையோடும் இருந்த சீடர்களுக்கு ஆண்டவர் தம் உயிர்ப்பின் காட்சிதந்து அவர்களைச் சந்திக்கின்றார். சாவைக் குறித்த சஞ்சலத்தோடும், பகைவர்களைக் குறித்த பயத்தோடும் இருந்த சீடர்களுக்கு, சாவின் கொடுக்குத் தமது சிலுவைச் சாவின் வாயிலாக முறிக்கப்பட்டதையும் தாம் வாழ்வின் ஆண்டவர் என்பதையும் தம் உயிர்ப்புக் காட்சியின் வாயிலாக தம் அடியவர்களுக்கு உணர்த்துகின்றார். இந்த உயிர்ப்பின் காட்சியே நானிலமெங்கும் நற்செய்தியை நன்றுரைப்பதற்குச் சீடர்களுக்கு ஆதாரமாக இருந்தது. கிறிஸ்துவைப் பற்றிய புதிய பார்வையைப் பெறவும், அவரை ஆராய்ந்து பார்க்கவும், அனுபவிக்கவும் (யோவா 20:27) அடிகோலியது. “இயேசு கிறிஸ்துவே ஆண்டவர், அவரே கடவுள்” எனத் தோமாவை அறிக்கையிடச் செய்தது இந்தச் சந்திப்பு (யோவா 20 : 28).

இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், அனைத்துலகக் கடவுளாகவும் பறைசாற்றும் தோமாவின் இந்த விசுவாச அறிக்கைக்கு யோவான் நற்செய்தியாளர் அதிக முக்கியத்துவம் தருகிறார். ஏனென்றால் யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்ட காலத்தில் (CE 90- 100) உரோமை அரசரான தொமீசியன் தன்னை ஆண்டவர் என்றும், கடவுள் என்றும் அழைக்க ஆணை பிறப்பித்திருந்தார். அப்படி அழைக்க மறுத்த கிறிஸ்தவர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாயினர். ஆனால் “இயேசு கிறிஸ்துவே ஆண்டவரும் கடவுளுமானவர்” என்பதை உயிர்ப்பின் காட்சி பெற்ற தோமாவின் பற்றுறுதி அறிக்கை வாயிலாக யோவான் நற்செய்தியாளர் நற்சான்று பகருகின்றார்.

திப 9: 1 - 18 வரையுள்ள பகுதியில் உயிர்த்த கிறிஸ்துவின் காட்சி பெற்ற திருத்தூதர் பவுலின் மனமாற்றத்தையும், அழைப்பையும், அர்ப்பணத்தையும் லூக்கா பதிவு செய்துள்ளார். யூத சமயத்திலும் திருச்சட்டத்திலும் வைராக்கியமுள்ள பவுலால் மரத்திலே தூக்கப்பட்ட (இச 21: 23) இயேசுவை மேசியாவாக கிறிஸ்தவர்கள் அறிக்கையிட்டதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதனால் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வெகுண்டெழுந்தார்.

தமஸ்கு சாலையில் இறைஒளியால் தடுத்தாட்கொள்ளப்பட்டு உயிர்த்த கிறிஸ்துவின் காட்சியின் வாயிலாக இறைச் சந்திப்பைப் பெற்றார். தொடக்க காலத் திருச்சபையில் பவுலை திருத்தூதராக ஏற்றுக்கொள்ள பலர் மறுத்தனர். காரணம் திருத்தூதர் என்போர், இயேசுவின் திருமுழுக்கு

முதல் அவரோடு இருந்திருக்க வேண்டும். உயிர்ப்பின் காட்சியைக் கண்டிருக்க வேண்டும். இவ்விரண்டு அனுபவங்களுமே தனக்கு உண்டு என்று பவுல் விளக்குகிறார். (கலா 1: 15 -17).

1 கொரி 15: 8 இல் உயிர்த்த கிறிஸ்து தம் சீடருக்குப் பிறகு தனக்கும் தோன்றினார் எனக் குறிப்பிடுகிறார். இதில் தோன்றினார் என்று வருமிடத்தில் இறைக்காட்சியை வெளிப்படுத்தும் “ஒப்தே” (opthe) என்னும் கிரேக்கச் சொல்லைப் பவுல் பயன்படுத்துகிறார். சீடருக்கும் தோன்றினார் என்பதிலும் இதே கிரேக்க வினைச் சொல்லையே பயன்படுத்துகிறார். அதிலிருந்து எப்படி சீடருக்கு இயேசு கிறிஸ்து தம் உயிர்த்த காட்சியை அளித்தாரோ அவ்வாறே தனக்கும் தோன்றினார் எனப் பவுல் சாட்சியிடுகின்றார். (1கொரி 15: 3-8).

திருச்சட்டத்திலும், யூதமரபிலும் அதிகப்பற்றுக் கொண்ட பவுலை மனமாற்றியது உயிர்த்த கிறிஸ்துவின் திருக்காட்சியேயன்றி வேறல்ல என்பதைத் தமஸ்கு அனுபவத்தின் வாயிலாகப் புரிந்து கொள்ள முடிகிறது (திப 9: 26, 27).

உடைந்த உள்ளத்தோடு இருந்தோரையும், உறுதியற்று இருந்தோரையும், ஊறு விளைவித்தோரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் உயிர்ப்பின் காட்சி தந்து சந்திக்கின்றார். இந்த இறை - மானுடச் சந்திப்புக்கு ஊடகமாக விளங்கவும், சான்று பகரவும் திருச்சபை அழைக்கப்படுகின்றது.

> கிறிஸ்து நமக்குள் இருந்தால் நமது வாழ்க்கை முற்றிலும்
> கிறிஸ்துவைப் போன்றதாயிருக்கும். தண்ணீரில் கரைந்த
> உப்பு கண்ணுக்குப் புலப்படுவதில்லை.
> ஆனால் அது இல்லாமற்போய் விடவில்லை.
> தண்ணீரைச் சுவைத்துப் பார்க்கும் போது
> அதில் உப்பு இருப்பதை உணர்கிறோம்.
> அதுபோலவே நமக்குள் இருக்கும் கிறிஸ்து,
> அரூபியாயிருப்பினும், நம்முடன் அவர் பகிர்ந்து கொள்ளும்
> அன்பின் மூலமாக மற்றவர்களுக்குப் புலப்படுகிறார்.
>
> - சாது சுந்தர்சிங்

நமது வார்த்தை, வாழ்க்கை போன்றவற்றின் வாயிலாக, உயிர்த்த கிறிஸ்து நம்மைச் சந்திக்கின்றார் என்பதை வெளிப்படுத்துவோம். நமது வாழ்வின் செயல்பாடுகள் வழியாக நம்மைக் காண்போர், கேட்போர் என அனைவரும் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்திக்கும் வண்ணம் நம் வாழ்வை வடிவமைத்துக் கொள்வோம்.

திரு. B. ***சாம் ஜெபசிங்***

**19-04-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

# உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல்

## IDENTIFYING RISEN LORD IN THE WORK PLACE

ரூத் 2 : 1-18 திப 9 : 36-43
திபா 15 யோவா 21 : 1-14

**"கைம்பெண்கள் அவரருகில் வந்து நின்று, தொற்கா தங்களோடு இருந்தபோது செய்து கொடுத்த எல்லா அங்கிகளையும் ஆடைகளையும் காண்பித்தவாறே அழுதார்கள்." திப 9:39**b

**இறைவேண்டல் :** ***வாழ்வின் ஆதாரமான கடவுளே, தமது திருமைந்தரால் மரணத்தை மேற்கொண்டு நிலைவாழ்வின் வாயிலைத் திறந்திருக்கின்றீர். உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் நாங்கள் தூய ஆவியின் ஆற்றலால் புனரமைக்கப்பட்டு எங்கள் பணியிடங்களில் உயிர்த்தெழுந்த ஆண்டவரை அடையாளம் கண்டுகொள்ள அருள்செய்ய வேண்டுமென்று வாழ்வாகி வழிகாட்டும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.***

உயிர்த்தெழுந்த ஆண்டவரை பணியிடத்தில் அடையாளம் கண்டு கொண்ட சீடர்கள், தங்கள் உழைப்பில் குறைவுகளின் நடுவில் நிறைவைக் கண்டனர். உடலுழைப்பின் களைப்பின் நடுவிலும் உயிர்தெழுந்த ஆண்டவரின் பிரசன்னம் உழைப்பதற்குத் தூண்டுதல் கொடுத்து, உணவும் தந்து உடனிருந்தும் நடத்துகின்றார். இறைப் பிரசன்னத்தை தொற்காள் தன் வேலையில் கண்டு கொண்டபடியால், தன் வேலை மூலம் இறைவனுக்குச் சான்று பகிர்ந்தார்.

நாம் வாழும் உலகில் இறைப் பிரசன்னத்தை பணி செய்யும் இடத்தில் உணராத படியால், கையூட்டு பெறுதல், அநீதி செய்தல், குறைந்த நேரம் வேலை செய்து அதிக பொருளீட்டுதல், உழைப்பின்றி உயர் நிலை அடைதல் போன்ற மனநிலை பெருகி வருகின்றது. மேலும் மனிதன் உழைக்காமல் வாழ்வதில் இன்பம் காண்கிறான். மற்றவர்களுக்குரியதை தனக்குரியதாக்கி பகிர்ந்து வாழ மனமற்றவனாய் தன்னையே வளர்த்துக்கொள்கின்ற மனப்பான்மையே பெருகி உள்ளது. இயேசு சொல்லும் மூடனான ஐசுவரியவான் உவமை இதை உணர்த்துகிறது (லூக். 12 : 16-21). கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவரை நம்முடைய பணியிடங்களில் வெளிப்படுத்த கடவுள் எதிர் பார்க்கிறார். அதை குறித்த சில குறிப்புகளை சிந்திப்போம்.

### 1. பணியில் கிறிஸ்துவை அடையாளம் காணுதல் :

இறைவன் நம் கரத்தில் தந்துள்ள வேலையில் உயிர்த்த ஆண்டவரின் பிரசன்னத்தை காணும் போது நாம் உழைப்பில் போதும் என்ற மனநிலை, நேரம் தவறாது பணி செய்தல், உண்மை ஆகிய சிந்தைகள் பெருகும். மனிதர்களைப் பிரியப்படுத்த வேலை செய்யாமல், ஆண்டவருக்கு அஞ்சி முழு மனதோடு வேலை செய்யும் (கொலே 3 : 22) மனநிலை உருவாகும்.

உழைப்பில் இறைப்பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளும்போது களைப்பு மறைந்து உற்சாகம் பிறக்கின்றது, பாதுகாப்பு, பராமரிப்பு, வழிநடத்துதல் கிடைக்கின்றது (யோ. 21 : 5-6). உழைப்பில் இறைவனை அடையாளம் காண்பவர்கள் உழைக்காமல் உண்பதை விட உழைத்து உண்ணுதலே தன்மானமுடையது என்ற சிந்தையை பெற்றுக்கொள்கின்றனர். மேலும் கடின உழைப்பு, உண்மை ஆகியவற்றை உறுதியோடு பிடித்துக்கொள்கின்றனர். ரூத் தன் வேலையில் கருத்தோடும், கண்ணியத்தோடும், நேர்மையோடும் செயலாற்றியபடியால் (ரூத். 2 : 7) அவளின் நிகழ்கால வாழ்வும், எதிர்கால வாழ்வும் உயர்வு பெறுகின்றது.

ஆண்டவர் நம் கரங்களில் தந்துள்ள பணிகளில் நாம் எப்படி செயல்படுகிறோம் என்று உற்று நோக்கி கொண்டிருக்கிறார். ஆண்டவர் நம் கரங்களில் தந்துள்ள பணிகளில் கடமைக்காக உழைக்காமல், சம்பளத்திற்காக உழைக்காமல், மனிதர்களுக்காக உழைக்காமல் நேர்மையோடும், உற்சாகத்தோடும் ஆண்டவர் நம்மை காண்கிறார் என்ற உணர்வோடு பணிபுரிதல் நல்லது (எபே. 6 : 6-8, மத். 5 : 16). அப்போது நம் வாழ்வினூடாய் ஆண்டவரது திருப்பெயர் மாட்சி அடையும்.

சென்னை ஐகோர்ட்டிலிருந்து பணிமாற்றம் பெற்று ஜார்கண்ட் மாநில தலைமை நீதிபதியாக சென்ற நீதிபதி ஆர். பானுமதி அவர்கள் பிரிவு உபசார விழாவில் ஏற்புரை நிகழ்த்திய போது தன்னுடைய பணிகளில் இயேசுவை அடையாளம் காண்பதாக கூறி “எனது உயர்வுக்கு நான் வணங்கும் இயேசு கிறிஸ்துவே காரணமாக உள்ளார்” என்றார்கள் (தினத்தந்தி, கடலூர் பதிப்பு 14-01-2013).

### 2. பணியில் கிறிஸ்துவை வெளிப்படுத்துதல் :

வேலை எதற்காக? வயிற்றுக்காக வேலையா? பணத்துக்காக வேலையா? வேலைக்காக பணமா? நாம் தெரிந்தெடுக்கும் பணி நமக்கு பணம், பொருள் தரலாம் அதை விட பிறருக்கும், சமூகத்திற்கும் நன்மை தர வேண்டும். இறை மக்களாகிய நாம், நம் நற்பண்புகள் மூலம் பணியில் கிறிஸ்துவை வெளிப்படுத்தல் வேண்டும். உயிர்த்த ஆண்டவரை பணியில் அடையாளம் கண்ட சீடர்களின் தரிசனம் விரிவடைகின்றது.

இறைப்பணியில் முன்னோக்கிச் செல்ல ஆயத்தப்படுகின்றனர். அவர்கள் பிடித்த மீன்கள் மூலம் பகிர்தல், பிறருடைய தேவைகளை நிறைவு செய்தல் வழியாக கிறிஸ்துவை வெளிப்படுத்துகின்றனர்.

**தி.ப. 9 : 36-43 :** தபித்தாள் எனப்பட்ட தொற்காள் தனக்கு கடவுள் கொடுத்த கலையாகிய தையல் கலையை (பணியை) கொண்டு ஆடைகளை செய்து கொடுத்தாள். அதன் வழியாய் அவள் வெளிப்படுத்திய கிறிஸ்தவ மாண்பு அவள் மரித்த போது பயன் பெற்ற மக்கள் பேதுருவினிடத்தில் காட்டிய ஆடைகளின் வழியாய் வெளிப்படுகிறது.

நம்முடைய உழைப்பு / பணி பிறருக்கு பயனுள்ளதாய் அமையும் போது அதன் வழியாய் நாம் உயிரித்த கிறிஸ்துவை வெளிபடுத்துகிறோம்.

**மத். 25 : 40, 31-40 :** ''மிக சிறியவராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்."

ரூத்தினுடைய நற்பண்பு அவளுடைய பணியிடத்தில் போவாசால் கனப்படுத்தபடுகிறது. போவாஸ் ரூத்திடம் சொன்ன வார்த்தை உன் செய்கைக்கு தக்க பலனை கர்த்தர் உனக்கு செய்வாராக (ரூத். 2 : 11-12). நாம் நற்பண்புகளை வெளிப்படுத்தும் போது, கடவுள் அதற்கு முழு அங்கீகாரம் தருகிறார்.

**தொநூ. 39 : 2 :** ஆண்டவர் யோசேப்போடே இருந்தார், - யோசேப்பும் ஆண்டவரோடு இருந்தார். அதன் விளைவாக தன்னுடைய பணியிடத்தில் எல்லாம் நற்பண்புகளையும் வெளிப்படுத்தினான். அது அவனை எகிப்தில் உயர்ந்தவராக்கியது.

**நீமொ. 28 : 20 :** "உண்மையுள்ள மனிதர் நலன்கள் பல பெறுவார்".

**லூக். 19 : 17 :** "மிக சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர்.... அதிகாரியாய் இரும்".

**எரே. 48 : 10:** "ஆண்டவர் தம் அலுவலை அக்கரையின்றி செய்பவன் சபிக்கப்பட்டவன்".

### *3. பணியிடத்தில் கடவுளால் மதிப்பு பெறுதல் :*

**a) மோசே - விப 3 : 1-10**

இறைவனுக்கு அஞ்சி நாம் பணிவிடைகள் செய்யும் போது அவர் நம்மை உயர்த்துவார். ஆடு மேய்க்கும் பணியை செய்த மோசேயிடம் சீனாய் வனாந்தரத்தில் எரிகிற முட்செடியின் வழியாய் கடவுள் தன்னை வெளிப்படுத்தினார். அந்த காட்சியின் நிறைவில் மோசேயை கடவுள் தன்னுடைய பணிக்காக தெரிந்து கொண்டார்.

**b) கிதியோன் - நீத 6 : 11-16**

கதிர்களை அடித்துக்கொண்டிருந்த கிதியோனுக்கு தன்னை வெளிப்படுத்தி, மீதியானியரிடமிருந்து இஸ்ரவேலரை மீட்பதற்காக அவனை தெரிந்து கொண்டார்.

**c) பழைய பணிக்கு திரும்பிய சீடர்கள் - யோவா 21 : 1-14**

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள், ஆண்டவரை மறந்து, பழைய பணிக்கு திரும்பிய போது, அவர்கள் பணி செய்யும் இடத்தில் ஆண்டவர் தேடி சென்றார். கடற்கரையில் நின்று ''பிள்ளைகளே'' என்று அழைத்தார். அவரை அடையாளம் கண்டுக்கொண்ட சீடர்கள் தங்களுடைய அழைப்பை மறுபடியும் உணர்ந்து கொண்டு இறைப்பணிக்கு தங்களை முழுமையாக ஒப்படைத்தனர். 2010 -ம் ஆண்டு அக்டோபர் மாதம் தங்கம் வெட்டி எடுக்கும் தீவு ஒன்றில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த சமயம் 30 பேர் பணியில் பூமிக்கடியில் இருந்தனர். சுமார் 600 அடிக்கு கீழ் அவர்கள் பணி செய்ததால் அவர்கள் சுவாசிக்க ஆக்சிஜன் சிலிண்டரும் வைக்கப்பட்டிருந்தது. பூமியதிர்ச்சியால் மேல்பகுதி மூடிவிட்டது. எல்லோரும் இறந்திருப்பார்கள் என உயர் அதிகாரிகள் தீர்மானித்து விட்டனர். ஆகவே எல்லாருடைய குடும்பத்தாரை அழைத்து 1 கோடி ரூபாய் வீதம் கொடுக்கலாம் எனத் தீர்மானித்துப் பேசினார்கள். ஆனால், இரண்டு குடும்பத்தின் பிள்ளைகள் ''எங்களுக்கு பணம் தேவை இல்லை அப்பா வேண்டும்'' என்றார்கள். இதனால் வேறு நாட்டின் உதவியோடு அந்த பகுதியை தோண்ட, 38 நாட்கள் கழித்து அங்கிருந்த ஒருவரை வெளியே உயிரோடு எடுத்தார்கள். எல்லோருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. மேலும் அத்தனை பேரையும் வெளியில் எடுத்த போது உயிருடன் இருந்தனர். அவர்களிடத்தில் செய்தியாளர் கேட்ட போது;

''எங்களில் பணி செய்த ஒருவர் இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டவர். அவர் எங்களை தைரியப்படுத்தினார்''. எல்லோரும் ஜெபிப்போம் என்று கூறினார். அவரில் வாழ்வு தரும் கிறிஸ்துவை நாங்கள் அடையாளம் கண்டோம். விடுதலை பெற்றோம் என்றனர்.

நமது வாழ்வில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நம்முடைய அன்றாட பணிச் சூழலில் அடையாளம் காண நம்மை அழைத்திருக்கிறார். இப்படி அடையாளம் கண்டு பணி செய்யும் போது, பிறர் பயன் பெறுகின்றனர். உயர் வாழ்வு கிடைக்கிறது. கடவுள் தமக்குரியவர்களை அடையாளம் கண்டு வெளிப்படுத்துகிறார். ஒப்படைப்புடன் பணி செய்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. Y. **மோகன் அருள்தாஸ்**

**25-04-2015**

*மகாராசன் வேதமாணிக்கம் &*
*அருள்திரு. W.T. றிங்கல்தௌபே நாள்*

# நற்செய்திக்குச் சான்றாவோம்

எசா 52:1-7 மத் 5:3-11

**"நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும், நலம்தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையை பறைசாற்றவும், சீயோனை நோக்கி 'உன் கடவுள் அரசாளுக்கின்றார்' என்று கூறவும் வருவோனின் பாதங்கள் மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன."** எசா 52:7

***இறைவேண்டல் :*** *வாழ்வு தரும் கடவுளே நற்செய்தியாம் ஒளியை எங்களுக்கு வழங்கியதற்காக உம்மைப் போற்றுகிறோம். நற்செய்தி வழி நாங்கள் பெற்றுக்கொண்ட விடுதலை வாழ்விற்காக நன்றிக் கூறுகிறோம். இயேசு கிறிஸ்து என்ற நற்செய்தியை பெற்ற நாங்கள் பிறர் வாழ்வுக்காக எங்கள் வாழ்வின் வழியாய் வெளிப்படுத்த, நற்செய்திக்கு சான்றாளர்களாய் வாழ எங்களை தகுதிப்படுத்தும். இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

றிங்கல்தௌபே ஐயர் குமரி மண்ணில் கால்பதித்து 209 ஆண்டுகள் ஆகிவிட்டன. எத்தனையோ ஐரோப்பிய அருட்பணியாளர்கள் பல ஆண்டுகளாக இம்மண்ணில் அருட்பணி புரிந்தும் ஏன் இம்மாவட்டம், தமிழகம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. பல பேராயங்கள், போரயர்கள்,போதகர்கள், திருப்பணியாளர்கள், திருப்பணியில் ஈடுபட்டும் ஏன் நற்செய்தி பல உள்ளங்களைத் தொடவில்லை? முறையான அருட்பணி நிறைவேறவில்லையா? நிறைவேற்றப்படவில்லையா? நமது நற்செய்திப் பணியில் குறைபாடுகள் உள்ளதா? பல சபைப்பிரிவுகள், பல்வேறு கிறிஸ்தவ கல்லூரிகள், பள்ளிகள், மருத்துமனைகள் இவை இருந்தும் உண்மையில் கிறிஸ்துவை நாம் வெளிப்படுத்தவில்லையா? ஏராளமான கேள்விகள் தொடருகின்றன. பதில் பெறுவது சற்று கடினம் தான். பல்வேறு பதில்களும் கூட சொல்லப்படலாம்.

இந்தியாவில் 31 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர். தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் 25.2%, 1108 வகை சாதி மக்கள், 774 பழங்குடியின மக்கள் கூட்டம், 45% தலித் மக்கள் எழுத்தறிவு இல்லாமல் உள்ளனர். 37% மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளனர். இவைகளையெல்லாம் நாம் பார்க்கும்போது ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. நற்செய்தியை முறையாக நாம் முன்னெடுத்து செல்லவில்லை என்றே கூறமுடியும். மக்கள் கேட்காத கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க முனைகிறோம். மக்களின் பிரச்சனைகளுக்கு பதிலளிக்காமல் இருக்கிறோம்.

மக்களுக்கு தொடர்பில்லாத, மக்களைத் தொடாத வழிகளில் நாம் செய்தி சொல்லுகிறோம். நற்செய்தியை சொல்ல வெட்கப்பட்டு, கேட்பவர்களுக்கு பயனற்ற விதங்களில் ஆகாயத்தில் சிலம்பம் அடித்து கொண்டிருக்கிறோமா? நமக்கு நாமே கேட்டுப் பார்க்க வேண்டிய கேள்வி இது. அழுக்கடைந்த பாத்திரத்தில் நற்செய்தி எனும் பாலை கொடுக்கிறோமா? மாதிரியற்ற நற்சாட்சியற்ற, ஒற்றுமையற்ற, தூரக்காட்சி இல்லாத இறைப்பணியாளர்களும், இறைமக்களுமாய் நாம் மாறிப்போய் பலகாலம் ஆகிவிட்டது. சபைகளுக்கிடையே, ஒற்றுமையின்மை, இறை மக்களுக்கிடையே சாட்சியின்மை, இவைகளே நாம் பெரும் பின்னடைவை சந்திக்க காரணமாக உள்ளது என்பதை சிந்திக்க வேண்டும்.

நற்செய்தியை ஆதாரம் இல்லாமல், ஆர்வம் இல்லாமல் பகிர்ந்து,சுய நலத்தின் உச்ச நிலையில் பயணப்பட்டால் மாற்றம், மறுமலர்ச்சி, நற்செய்திப் பணி எப்படி சாத்தியமாகும்? இந்நன்னாள் நம்மை மறு ஆய்வு செய்ய, மறுசிந்தனை தர உதவுமானால் நன்றாக இருக்கும்.

1806 ம் ஆண்டு றிங்கல்தௌபே ஐயர் L.M.S. தலைமைக்கு திருவிதாங்கூரின் திருப்பணியையும் திருப்பணிக்கான தேவைகளையும் எழுதியதிலிருந்து அவரது தரிசனம் புரிகிறது.

திருவிதாங்கூர் பகுதியில் நிலம் வாங்கி ஆலயம் கட்ட வேண்டும். சில இளைஞர்களைத் தெரிந்தெடுத்து, கல்விப் பயிற்சி அளித்து, இரண்டிரண்டு பேராக நற்செய்தி பணிக்கு அனுப்ப வேண்டும், பயிற்சி பெற்று, கடவுளின் அருள் பெற்று திருப்பணி அழைப்பை ஏற்றவர்களுக்கு ஆயர் அருள்பொழிவு கொடுக்க வேண்டும். நற்செய்திக்கான துண்டு பிரசுரம் அச்சடிக்க அச்சகம் வேண்டும். மனந்திரும்புகிறவர்களுக்கு திருமுழுக்கு, உண்மையாய் மாற்றம் பெற்றவர்களைத் திருவிருந்தில் சேர்ப்பது ஆகியவற்றை தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். அருட்பணியில் இந்தியருக்கு பயிற்சியளித்து சுவிசேஷகர்களாக்குவது அதிக நன்மையை தரும் என்பதும் அவரது தரிசனங்களில் ஒன்று. அந்த தரிசனமே இன்று நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

எசா. 52:7 -க்கு நேராக நம் கவனத்தை திருப்புவோம், இப்பகுதி நற்செய்தியின் உள்ளடக்கத்தை கூர்மையாக வெளிப்படுத்துகிறது.

1) சமாதானத்தை அறிவித்தல்.

2) வெற்றிச் செய்தியை நற்செய்தியாய் அறிவித்தல்
(நற்செய்தியைக் கொண்டு செல்லுதல்)

3) விடுதலையைப் பறைசாற்றுதல்

4) கடவுளின் ஆளுகையை உணர்த்துதல்.

இந்த நான்கு குறிப்புகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒரு பொருள் பன்மொழி என்ற இலக்கண வடிவத்துடன் ஒவ்வொரு பொருளும் ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவில் மிகவும் ஈடுபாட்டோடு விளக்கப்பட்டுள்ளது. , சிறைப்பட்டு, அடிமைப்பட்டு, விற்கப்பட்டுப்போன மக்கள் இறைவனின் அருளால் பெறும் விடுதலை நிகழ்ச்சி போர் புரிதலுக்கு இணையாக விளக்கப்படுகிறது. நீண்ட காலம் அடங்கி ஒடுங்கி இருந்த மக்கள் விடுதலையின் நற்செய்தியை எதிர்பார்த்து காத்திருக்கும்போது, விடுதலையின் செய்தியை சுமந்து வரும் செய்தியாளருடைய பாதங்கள். மலையின் மேல் தென்படுகின்றன. இதுவே 1806 ம் ஆண்டு ஏப்ரல் 25-ல் நடந்தது. நற்செய்தியாளருடைய பாதங்கள் குமரி மண்ணில் பதிந்தன. அதன் விளைவாகவே சமாதானவாழ்வு, நற்செய்தியை அறிவிக்கிறபணி (மிஷரிப்பணி) விடுதலையை அனுப்பவித்தல், அறிவித்தல், கடவுளின் ஆளுகைக்கு உட்படுதல் ஆகிய இறைத் திட்டங்களில் நாமும் இணைந்துள்ளோம்.

## *அறைகூவல்கள் :*

மத். 28:19-ல் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தந்த கட்டளைகளையும் உள்வாங்கிக் கொள்வோம். நற்செய்தியை சொல்ல புறப்பட்டு போகவும், சக மக்களையும் சீடர்களாக்கவும், திரித்துவ கடவுளின் பெயரால் திருமுழுக்கு கொடுத்து இறைக்குடும்பத்தின் உறுப்பினர்களாக்கவும் மிகத் தீவிரமாக முற்படுவோம்.

உரோ 10:14,15 -ல் தூய பவுல் எழுப்புகிற கேள்விகளை நாமும் இணைந்து கேட்டுப் பார்ப்போம். ஆண்டவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்?

கடவுள் உலகை ஆளுகிறார். அவருடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் நம்மை உட்படுத்துவதும், ஒப்படைப்பதும் நமது கடமை, கிறிஸ்துவை அறிவதற்கு முன், கிறிஸ்துவுடனான அனுபவம் பெறுவதற்கு முன், தீயோன், உலகம், மாம்ச உணர்வுகள், தவறான அதிகாரங்கள் நம்மை ஆளுகை செய்திருக்கலாம். றிங்கல்தௌபே அவர்கள் வருகைக்கு பின் 209 ஆண்டுகளாக இறைவனின் ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டிருக்கிறோம் என்று உணர்ந்திருக்கிறோம். நாம் நற்செய்தியாளரின் பாதங்களை கொண்டவர்களாக, சமாதானத்தின் விடுதலையின் நற்செய்தியை கூறி இறைவனின் ஆளுகையை முன்னெடுத்துச் செல்வோம். இறையருள் ஆசி நம்மோடு என்றும் தங்குவதாக.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

**26-04-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு***

# உயிர்ப்பின் அனுபவத்தில் சமூக உருவாக்கம்

## COMMUNITY FORMATION AROUND RESURRECTION EXPERIENCE

எசா 25:1-9 திப 4:32-37

திபா 126 லூக் 24:13-35

**"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது."** திப 4:32

**இறைவேண்டல் :** *உலகில் வாழ்வை உருவாக்கிய கடவுளே! திருமைந்தன் இயேசுவை வாழ்வாக இவ்வுலகத்திற்கு அனுப்பி, நாங்கள் அவரில் புதுபடைப்பாக மாற விரும்பினீர். உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்ற நாங்கள் எங்களை மட்டுமல்ல நாங்கள் வாழும் சமுதாயத்தையும் அந்த அனுபவத்தினூடாக மாற்றுருவாக்கம் செய்யவும், அதன் வழியாக சமுதாயம் சீர் பெறவும் அருள்தாரும். உம்மோடுள்ள வாழ்வு என்றும் உயிர்பெற்றதாய் அமைய அருள்தாரும். உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

இயேசு கிறிஸ்துவின் இறப்போடு அவரது கருத்துக்களும், சிந்தனைகளும் அழிந்துவிட்டது. அவரது போதனைகளை பின்பற்றும் கூட்டமும் தொலைந்து போகும் என்று யூத சமயத்தலைவர்கள் எண்ணினர். ஆனால் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு மற்றும் பெந்தெகோஸ்தே நாள் அனுபவம் மாபெரும் சமூக மாற்றுருவாக்கத்தை உருவாக்கும் சமூகத்தை எழுப்பியது. ஒருமைப்பாடு வளர்ந்தது. பிரிவினை மாறியது. ஏற்றத்தாழ்வு அகன்றது. ஜாதி ஒழிந்தது. இச்சமூக மாற்றதை உருவாக்க எத்தியாகத்தையும் செய்ய துணிந்த புதிய சமூகம் உருவாயிற்று.

### *1) ஒருமைப்பாட்டைத் தந்த உயிர்ப்பு அனுபவம் :*

"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்" (திப 4:32)

இயேசுகிறிஸ்துவின் சிலுவை இறப்பினால் ஏற்பட்ட அச்சம் சீடர்களை கலங்கடித்தது. பூட்டப்பட்ட அறைகளுக்குள் முடங்கிக் கிடந்தனர் (யோவா 20:19). உயிர்த்தெழுதல் குறித்த செய்தியை மகதலேனா மரியாள் கூறியபோதும் போதிய நம்பிக்கை சீடர்களுக்கு வந்திடவில்லை (லூக்24:10, 11).

எம்மாவு ஊருக்கு பயணித்த சீடர்கள், பூட்டிய அறைக்குள் முடங்கிக் கிடந்த சீடர்கள் (யோவான் 20:19, 20) திபேரியாக்கடல் மீன் பிடிக்கச் சென்ற சீமோன் மற்றும் அவரது நண்பர்கள் (யோவான் 21 ) ஆகியோருக்கு இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தவராக தன்னை காண்பித்த பொழுது உயிர்ப்பின் அனுபவம் அவர்களை மாற்றியது.

இதுவரை சீடர்கள் ஒன்றிப்புடன் தான் இருந்தனர். ஆனால் பயம் இருந்தது. கலக்கம் இருந்தது. நம்பிக்கை அற்றுப் போயிருந்தது. ஆக உயிரோட்டமில்லாத ஒன்றிப்பு அது.

ஆனால் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் அனுபவம் சீடர்களை பூட்டிய வீட்டை விட்டு அவர்களது ஒன்றிப்பின் வமையை உலகுக்கு காட்டியது.

இந்த ஒன்றிப்பை இயேசுகிறிஸ்து தனது சிலுவை இறப்பினால் உருவாக்கினார். ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை தமது உடல் ஏற்ற துன்பத்தின் வழியாகத் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார் (எபே 2:14) என்ற வசனத்தின் வழியாகவும், எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு ........(யோவா 17:21,22) என்ற இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டு வழியாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

இயேசுகிறிஸ்துவில் தொடங்கிய புதிய சமூகம் மனமாற்றம், மன்னிப்பு, பகை மறத்தல், ஏற்றுக் கொள்ளல் வழியாக உருவாகிற்று. இயேசு கிறிஸ்துவின் சீடர்களும் அவர் உருவாக்கிய புதிய சமூகத்தை தத்துவமாக மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் அதனை உள்வாங்கி வாழ்வில் வாழ்ந்து காட்டினர் (திப 4:32, 2:42, 46).

ஒரே உள்ளம், ஒரே உயிர் (திப 4:32), நட்புறவில் (திப 2:42) ஒரேமனத்தினர் (திப 2:42) ஆக இருந்தனர். இம்மாற்றம் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தந்த மாற்றம் ஆகும்.

### 2. உடைமைகள் அனைத்தும் இறைவனுடையவை :

அவர்களுள் எவரும் தமது உடைமைகளை தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்கு பொதுவாய் இருந்தது (திப 4:32).

உயிர்ப்பின் அனுபவம், பெந்தெகோஸ்தே நாள் அனுபவத்தின் வழியாக கிறிஸ்துவின் புதிய சமூகத்தில் இணைந்த மக்கள் வாழ்வில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இம்மாற்றங்களுக்கு காரணம் இரட்சிப்பு, மனமாற்றம், மன்னித்தல், ஏற்றுக்கொள்ளுதல் இவையே ஆகும்.

உலகையே படைத்த கடவுள் தங்கள் தந்தையாய் மாறின பிறகு அவரது உடமைகள் அனைத்தும் கடவுளுடையவை என எண்ணினர். மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம் (திபா 24:1; 50:12) என்று திருமறை கூறுகிறது.

உயிர்ப்பின் அனுபவத்தினால் உருவாகிய புதிய சமூகத்தில் ஏழைகள் இருந்தனர்; பர்ணபாவைப் போன்று செல்வந்தர்களும் இருந்தனர்; இவர்கள் யாவரும் தங்கள் நிலங்களை, வீடுகளை விற்றனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்; அனைவரும் இறைவன் தந்த உடைமைகளை பொதுவாய் அனுபவித்தனர்; தேவைக்கேற்ப அனுபவித்தனர்; தேவைப்படுவோருக்காக தங்கள் உடைமைகளையும் விற்று பகிர தவறவில்லை; பொதுவுடைமை சமூகம் உருவாயிற்று; அனைவருக்கும் ஆச்சரியமும், பயமும் அமையத்தக்க விதமாய் அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டன (திப 2:43-45; 4:37; 6:1).

இம்மாற்றம் இன்று சாத்தியமா? தேவையா? எனும் கேள்விக்கு திருமறை கூறும் செய்தி தூயஆவியாரின் ஆற்றலால் சாத்தியமே. ஏழைகள் மீது கரிசனை என்பது வெறும் ஈகையோ, பிச்சையிடுவதோ இல்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஏழைகளற்ற, தேவைகள் பூர்த்தி செய்யப் பெற்ற, பேராசையற்ற, பதுக்கல்லாத, அனைவரையும் சமமாக மதிக்கும் புதிய சமூகமே திருமறை கூறும் சமூகம்.

### 3. சமூக மாற்றுருவாக்கத்திற்குத் தியாகமே அடிப்படை :

சமூக மாற்றுருவாக்கத்தை உருவாக்குவதில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பில் கட்டப்பட்ட புதிய சமூகம் எத்தியாகத்தையும் செய்வதற்கு தயாராக இருந்தது.

தங்களது நிலபுலன்கள் உடைமைகள் போன்றவற்றை பொதுவாக அனுபவிக்கவும், விற்கவும் தயங்கிடவில்லை; யூத தலைமைச்சங்கத்தினரின் அச்சுறுத்தல்கள், மூப்பர்கள், மறைநூல் அறிஞர்கள், தலைமைக்குரு இவர்களின் அச்சுறுத்தல்கள்

சிறைச்சாலைகள் இவற்றிற்கு பயப்படவில்லை (திப 2:44;4:5,6). ஏழைகள் நலன் விசாரிக்கப்படுவதற்காக திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர்; இவர்களுள் ஒருவரான ஸ்தேவான் கைது செய்யப்பட்டு, நகருக்கு வெளியாக்கப்பட்டு கல்லெறிந்து கொன்றனர் (திப 6, 7 அதி).

வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மனஉறுதியோடு தாங்கி வருகிறோம். நாங்கள் அடிக்கப்பட்டோம்; சிறையில் அடைக்கப்பட்டோம்; குழப்பங்களில் சிக்கினோம். பாடுபட்டு உழைத்தோம். கண் விழித்திருந்தோம். பட்டினி கிடந்தோம் (11 கொரி 6:4, 5) என்றும் பன்முறை சிறையில் அடைபட்டேன் கொடுமையாய்அடிபட்டேன்; பன்முறை சாவின் வாயில் நின்றேன். ஐந்து முறை யூதர்கள் என்னை சாட்டையால் ஒன்று குறைய நாற்பது அடி அடித்தார்கள். மூன்று முறை தடியால் அடிபட்டேன். ஒருமுறை கல்லெறி பட்டேன் (11 கொரி 11:23-27) என்று தான் துன்பமேற்ற நிகழ்வுகளை தூய பவுலார் வரிசைப்படுத்துகிறார்.

துன்பத்தால் சிதறிய மக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர் (திப 8:5). எந்த துன்பத்தாலும் புதிய சமூகத்தின் வளர்ச்சியை தடுக்க இயலவில்லை. இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது.

உயிர்ப்பின் அனுபவம் ஒருமைப்பாட்டை தருகிறது. உயிர்ப்பின் அனுபவம் உடைமைகள் இறைவனுடையது எனும் எண்ணத்தை உருவாக்கிற்று. உயிர்ப்பின் அனுபவம் சமூக வளர்ச்சிக்கு தியாகத்தை தூண்டியது. இயேசுகிறிஸ்துவின் இறப்பை வென்ற உயிர்ப்பு இறப்பிற்கு மட்டும் சாவுமணி அடித்திடவில்லை. சமூகத்தை சீரழித்துக்கொண்டிருந்த பகைகள், விரோதம், யுத்தம், மன்னிக்க மறுத்தல், ஏழ்மை, பதுக்கல் இவற்றிற்கும் இறப்பை உண்டாக்கிற்று. இவைகளற்ற சமூகத்தை உருவாக்க எத்தியாகத்தையும் செய்ய துணிந்த சமூகத்தை உருவாக்கிற்று

திருச்சபையே அந்த சமூகம். திருச்சபையின் பணியும் அதுவே.

அருள்திரு. J. **ஸ்பர்ஜன் இன்ப ஜெயா**

**01-05-2015** *அருணோதயத் தொழுகை*

# குறைகளை நிறைவாக்கும் ஆண்டவர்

திருமறைப்பாடம் : யோவா 2 : 1-11

**“கடவுள் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வார்”** பி-. 4:19

மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு சூழலில் குறைவை அனுபவித்து வாழ்கிறார்கள். அக்குறைகள் மன அமைதியைப் பாதிக்கின்றது. ஆனால் ஆண்டவர் குறைவை நிறைவாக்கும் ஆண்டவர் அன்னாளின் குறைவை நிறைவாக்கினவர், நமது குறைகளையும் நிறைவாக்குவார். யாருக்குக் குறையில்லை நான் மட்டும் தான் குறையோடு இருக்கிறேன் எனப் புலம்புகிறோம் 1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்த நடிகர் லூஸ் மோகன் நிறைய பணம், நிறைய சொத்து தற்பொழுது தம் வயதான காலத்தில் என் குறையை மாற்றித் தாருங்கள் எனக் காவல் நிலையத்தில் மனு கொடுத்துள்ளார். காரணம் எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாமல்இருக்கிறேன் என்று புலம்புகிறார். எப்படியெனில் என் பிள்ளைகள் என்னை அன்பு செய்யவில்லை என லூஸ் மோகன் விளக்கம் கொடுக்கிறார். குறைகள் எல்லோருக்கும் உண்டு. ஆனால் இறைவனைத் தேடினால் நம்மிடம் உள்ள குறைவுகள் நீங்கும் எனத் திருமறையில் கானாவில் நடந்த திருமண வீடு நிகழ்வு நமக்குக் கற்றுத் தருகிறது (யோவா. 2 : 1-11). விருந்தில் மிக பெரிய குறைவு வந்த போது அந்தக் குறையை ஆண்டவர் இயேசு நிறைவாக்கினார்.

நாம் இன்றைய தியானத்தில் கானாவில் திருமண வீட்டில் குறை நீங்கி மகிழ்ச்சி உருவாகச் செய்யப்பட்டவை என்ன என்பதனைச் சிந்தனை செய்வோம்.

## *1. கானாவூர் திருமண வீடு : நாள் பார்க்காத வீடு*

**(யோவா 2:1)**

மூன்றாம் நாளில் நடந்த திருமணம் என்பதால் இந்தத் திருமணம் செவ்வாய்க்கிழமை நடந்த திருமணம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். செவ்வாய் என்றால் அது தோஷம். சரியில்லாத நாள் எனக் கிறிஸ்தவர்களும் கெட்ட நாளாகவே அந்நாளை ஒதுக்கி வைத்துள்ளனர். எல்லா நாளையும்

நல்ல நாளாகவே கருதிய ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்தவர்களாக வாழ்ந்தாலும் நாள்பார்த்தல் என்பது நம்மையும் அறியாமல் நம்மில் பிணைந்துள்ளது. கானாவில் திருமணம் நாள் பார்க்காமல் நிறைவேற்றியதால் அங்குக் குறையை ஆண்டவர் நிறைவாக்குகிறார். நாள் பார்த்தால் நாளும் நட்சத்திரமும் இருக்கும். ஆண்டவர் இருக்கமாட்டார். ஆனால் நாள் பார்க்காமல் ஆண்டவருக்கு இடம் கொடுத்தால் நம் குறையை ஆண்டவர் மாற்றுவார்.நாள் பார்க்காமல் இருக்க வேண்டும் என்பது திருமறையின் போதனை (லேவி. 19:26,31). நாள் பார்த்தல் ஆண்டவருக்கு அருவருப்பானது (இச. 18:10-12). இன்றைய கிறிஸ்தவர்களும் ஜோதிடம் முதல் செய்வினை வரை தங்களை அடையாளப்படுத்துவது வேதனையே. ஒரு பேருந்து நிலையத்தில் ராசி எடை மிஷன் ஒன்றில் இளைஞன் ஒருவன் தம் எடையையும் அதிர்ஷ்டத்தையும் பார்த்துவிட்டு சோகமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார். அருகில் வந்த பெரியவர் ஏன் என்று வினவ நடந்ததைச் சொன்னார். எனக்கு ஆபத்து கவனம் என்று வந்துள்ளது. பயமாய் இருக்கிறது என்றார். பெரியவரும் அவனுக்கு உண்மையைப் புலப்படுத்த ஒரு பெரிய பாறாங்கல்லை எடுத்து எடை மிஷனில் வைத்தார் அந்தப் பாராங்கல்லுக்கு என்ன அதிர்ஷ்ட அட்டை வந்தது தெரியுமா? உங்கள் காதலியை சீக்கிரமாய் கைப்பிடிப்பீர்கள் என்று. பெரியவர் அதை எடுத்து வாலிபனிடம் கொடுத்ததும் உண்மையைப் புரிந்து தைரியமாய் சென்றார். ஜோதிடத்தையும் நாளையும் நம்பி ஆண்டவருக்கு இடம் இல்லா நிலையை உருவாக்க வேண்டாம். ஆண்டவருக்கு இடம் கொடுத்தால் நம் குறை மாறும்.

### *2. கானாவூர் திருமண வீடு : சகுனம் பார்க்காத வீடு :*

**(யோவா 2:3)**

இயேசுவின் தாய் முன்னின்று நடத்திய திருமணம் இது. எப்படியெனில் திருமண வீட்டில் ஒரு பிரச்சனை என்றால் சம்பந்தப்பட்டவரிடம் தான் தெரிவிப்பார்கள். அதைப் போன்று இரசம் குறைவுபட்டபோது மரியாளிடம் வேலைக்காரர்கள் சொல்வதினால் மரியாள் முன்னின்று நடத்திய திருமணம் என்பதனை அறியலாம். யார் இந்த மரியாள் கணவனை இழந்த விதவைத் தாய் தான் மரியாள். யோவானின் நற்செய்தி முறைமையின்படி மரியாளை யோவானிடம் ஒப்படைப்பது மரியாள் ஓர் ஆதரவற்ற தாய் என்பது புலனாகிறது. எப்பொழுதுமே எந்தக் கல்யாண வீட்டிலும் விதவைத் தாயை முன்னிறுத்த மாட்டார்கள் ஆனால் கானாவூர் கல்யாண வீடு விதவைத் தாய்க்கு

முன்னுரிமை கொடுத்ததினால் அவ் வீட்டின் குறை நிறைவாகியது. பெங்களூரில் படித்த பட்டதாரி இளைஞன் தாம் வேலைக்குச் செல்லும் போது இரண்டு முறையும் காகம் தலையை கொத்தினதினால் கெட்ட சகுனம் என்று நினைத்து தற்கொலை செய்து கொண்டார் என்பது நாளிதழ் செய்தி. படித்தவர் முதல் படிக்காதவர் வரை சகுனம் பார்த்து பார்த்து வாழ்கிறார்கள். பூனை வந்தால் கேடு, விதவை வந்தால் சாபம் என நினைக்கும் சமுதாயக் கறைகளில் நாமும் மேலும் கறை பூசி கொண்டிருக்கிறோம். திருமறை பில்லிசூனியம் பார்க்க வேண்டாம் குறிகாரரை அணுகவேண்டாம் எனக் கூறுகிறது (லேவி. 19:31). ஆனால் நமது நிலைமை? சாலையில் கரடி முடியை விற்றுக் கொண்டிருந்த ஒருவர் கோடீஸ்வரராக வேண்டுமா கரடி முடியைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பக்கம் வந்த ஒரு தந்தையும் மகனும் அப்பா! அப்பா! நாமும் ஒரு கரடி முடி வாங்கி கட்டுவோம். நாமும் கோடீஸ்வரராய் மாறிவிடலாம் என்று ஆவலாகச் சொன்னான். அதற்கு தந்தை மகனே, கரடி முடியை வைத்திருந்தால் பணக்காரராய் மாறலாம் என்றால் அதோ கரடிமுடியை விற்கிறவனைப் பார் கையில் எவ்வளவு கரடி முடியை வைத்திருந்தும் பார் தெருவோடு சத்தமிட்டுத் திரிகிறான் என்று சொன்னதும் மகனுக்குப் புரிந்தது. கானாவூர் திருமணம் சகுனம் பார்க்காத திருமணமாய் இருந்ததால் அந்த வீட்டிற்கு இயேசு சென்று அவ் வீட்டின் குறைகளை நிறைவாக்குகிறார்.

இன்று அறியாமையினால் மூடப் பழக்கத்தினால் சிக்குண்டு இருக்கிறோம் எனச் சிந்திப்பது நல்லது. நம்பிக்கை என்றால் தக்க வைப்பது எனப் பொருள். மூட நம்பிக்கை என்பதற்கு Superstition என்ற ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் இலத்தீன் சொல் ***Supersts*** என்பதாகும் இதன் பொருள் காண்பது (witness) தக்கவைப்பது (Survival) இல்லாத ஒன்றை கற்பனையாக சொல்லக் கேட்டதை மனதில் வைத்த நம்புவது தான் மூட நம்பிக்கை. மூட நம்பிக்கை என்பது அறிவிற்கு அப்பாற்பட்டது. பல லட்சம் மூட நம்பிக்கைகளை நம்புகிறவர் ஏன் இறைவனை முழுமையாய் நம்புவதில்லை. கானாவூர் திருமண வீடு நாள் பார்க்காமல் சகுனம் பார்க்காமல் குறைவு வந்த பொழுது இயேசுவிடம் சொல்லி அவர் சொல்வதை நிறைவேற்றும் போது அங்கு குறைவு மாறியது. நாமும் மூடநம்பிக்கைகளில் விழாமல் இறைவனை நம்புவோம் அப்போது நமது குறைமாறும்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

# உழைப்பே உயர்வு

திருமறைப்பாடம் : லூக் 5:1-11

**“சீமோன் மறுமொழியாக, ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” என்றார். லூக் 5:5**

மே 1-ம் நாள் உலக உழைப்பாளர் தினமாக ஆசரிக்கப்படுகிறது. உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்களின் பல்வேறு போராட்டங்களை நினைவு கூரும் நாளாக இது அமைந்திருக்கிறது. குறிப்பாக முதன் முதலில், ‘ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலைக்கான’ போராட்டங்களில் வெற்றி பெற்றதை நினைவுகூருகின்ற நாளாகவும் இது அமைந்துள்ளது.

இன்றைய உலகத்தில், உழைப்பு, பல கோணங்களில் வளர்ந்து காணப்படுகிறது. உழைப்பதற்கு இன்னும் பல வசதிகள் இருப்பதால், ஏதாவது ஒரு நிலையில் நாம் உழைக்க அழைக்கப்படுகின்றோம். அதனால் மனிதர்களும் வாழ்க்கைத் தரத்தில் உயர்வடைய வேண்டும் என்ற இலட்சியத்தோடு கடுமையாக உழைக்கின்றார்கள். உழைப்பாளர் தினமாகிய இன்று உழைப்பாளர்களையும், உழைப்பின் மகத்துவத்தையும், கடவுளின் படைப்பில் உழைப்பின் உரிமைகளையும் பற்றி சிந்திப்பது மிகவும் பொருத்தமான ஒரு காரியமாகும். திருமறையின் அடிப்படையில் இவைகளை நாம் புரிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

பொதுவாக, கடவுளுடைய படைப்பிலேயே மனிதர்களுக்கு உழைப்பும், ஓய்வும் கொடுக்கப்பட்டு உள்ளது என்பதை திருமறை நமக்கு தெளிவாக போதிக்கிறது. ‘உழைப்பு’ என்பது கடவுளால் மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை கடமையாகும். ஆனால் இந்த உழைப்பும், இந்த உழைப்பால் மனிதர்களுக்கு கிடைக்கவேண்டிய ஆசீர்வாதங்களும் மறுக்கப்படுகின்ற போதும், கடவுள் அதை கண்டிக்கின்றார். இன்று உழைப்புச் சுரண்டலும், ஓய்வு இல்லாமையும், உழைப்புக்கேற்ற சம்பளம் இல்லாததையும் கடவுள் கண்டு, இப்படிப்பட்ட சூழல்களில் தம்மை வெளிப்படுத்தி, மக்களை விடுவிக்கின்றார். அவர்களோடு புதிய உறவு ஏற்படுத்துகின்றார். புதிய ஆசீர்வாதங்களைத் தருகின்றார். அதனை நாம் இன்று திருமறையின் அடிப்படையில் சிந்திப்போம்.

## 1. உழைத்து வாழ்வோம் :

"உங்களுள் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாக சுற்றித் திரிந்து, பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம்" (2தெசலோ. 3:11).

உழைப்பைக் குறித்து, பல அறிஞர்கள் பல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், எல்லா மனிதர்களும் உழைக்க வேண்டும். உழைப்பைக் குறித்து Isaac Wats என்பவர் 'கைகள் சூறையாடுவதற்கோ திருடுவதற்கோ அல்ல; நேர்மையாக உழைப்பதற்கு உருவாக்கப்பட்டு உள்ளது' என்றார். Thomas Dekker என்பவர் 'நேர்மையான உழைப்பாளர்கள் வனப்புள்ள முகத்தோடு இருப்பார்கள்' என்றார்.

உழைப்பு என்பது கடவுள் மனிதருக்கு கொடுத்த ஒரு கட்டளையாகும். ஏதேன் தோட்டத்தை பண்படுத்தி பாதுகாப்பதற்காகத் தான் கடவுள் தாம் படைத்த ஆதாம், ஏவாளை அங்கே வைத்தார். ஆனால் அவர்கள் தங்கள் கவனத்தை உழைப்பின் மீது வைக்காமல், பிசாசானவனோடு உறவாடி, பாவம் செய்து, கடவுளுடைய கட்டளையை மீறினபடியால், தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். உழைப்பு மேலும் கடினப்படுத்தப்பட்டது. ஆதி. 3:19 - ல் ''நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்கு திரும்பும் வரை நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்" என்று கடவுள் சொன்னார். இதன் வழியாக, 'உழைப்பு நமது உரிமை' என்பதும் நிலைநாட்டப்படுகிறது.

லூக். 5 -ம் அதிகாரத்தில், சீமோன் உட்பட மற்ற சீடர்கள் உழைப்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்கின்றார்கள். இரவு முழுவதும் அவர்கள் உழைத்தும், அவர்களுடைய உழைப்பிற்கு உரிய பலன் கிடைக்காத போது, ஆண்டவர் அவர்களுக்கு உதவி செய்கின்றார். அவர்களை வழிநடத்துகின்றார். ஏனென்றால், உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆண்டவர், உண்மையாக உழைக்கின்றவர்களோடு உடன் இருந்து, அவர்களை வழிநடத்துகின்றார். 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று மகாகவி பாரதியார் பாடினார். உழைத்து வாழ்கின்றவர்கள் மரியாதை செய்யப்பட வேண்டும். மற்றவர்கள் இகழப்பட வேண்டும் என்பதுதான் பாரதியாரின் விருப்பம். ஆனால் இது நடைமுறையில் இல்லை என்று அவர் வேதனைப்படுகின்றார். நாம் பிறர் உழைப்பை சுரண்டி வாழாமல், உழைத்து வாழ வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

உழைக்கிறவர்களின் உடல் நலன் விரைவில் கெட்டுவிடுகின்றது. ஆனால் ஒருவர் உற்சாகமாக உழைக்கின்றபோது, அவருடைய உடல் ஆரோக்கியம் அதிகரிக்கின்றது. நம் நாட்டில் மட்டும் உழைத்தாலே, பஞ்சம், பசி, பட்டினி போன்ற பிரச்சனைகள் மாறிவிடும். அதனால் நம்முடைய உழைப்பை மூலதனமாக்கி, வறுமையையும், ஏழ்மையையும் நாட்டைவிட்டே நாம் விரட்ட வேண்டும். அதைத்தான் ஆண்டவரும் நம்மில் எதிர்பார்க்கின்றார். இதை உமது உழைப்பின் பலனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்! என்று திருப்பாடல் ஆசிரியர் குறிப்பிடுகிறார் (திபா. 128 : 2). அதனால் உழைப்போம் நம்முடைய உழைப்பின் பலனை உண்டு மகிழ்வுடன் வாழ்வோம்.

### *2. உழைப்பை மதித்து வாழ்வோம் :*

“தலைவர்களே, உங்கள் அடிமைகளை உங்களுக்கு இணையாகக் கருதி நேர்மையோடு நடத்துங்கள். உங்களுக்கும் விண்ணகத்தில் ஆண்டவர் ஒருவர் உண்டு என்பதை நினைவிற் கொள்ளுங்கள்” (கொலோ. 4:1).

எஜமான்கள் தலைவர்கள் தங்களுக்கு கீழாக பணிச் செய்கின்றவர்களை, தங்களுக்கு இணையாக கருத வேண்டும். அவர்களை நேர்மையோடு நடத்த வேண்டும் என்று இந்த வசனம் நமக்குக் கற்றுத்தருகிறது. இந்த உலகத்தில் இன்று அநேகருடைய உழைப்பு மதிக்கப்படுவதும் இல்லை. அவர்கள் தங்கள் உழைப்பிற்குரிய கூலியை பெற்றுக்கொள்வதும் இல்லை. 1தீமொ. 5 : 18, “...வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே பாத்திரவானாயிருக்கிறான்'' என்று சொல்கிறது. அதனால் நமக்கு அதிகாரம் இருக்கிறதென்று நினைத்து கீழாகப் பணிபுரிகிறவர்களுடைய உழைப்பை மதிக்காமல், அவர்களுடைய உழைப்பை உறிஞ்சுவதும், நியாயமாக அவர்களுக்கு சேர வேண்டிய சம்பளத்தை நாம் எடுத்துக்கொண்டு, தவறாக செல்வம் சேர்க்க எண்ணுவதும் பெரும் பாவம் / குற்றமாகும்.

சீமோனோடு இருந்தவர்கள் இரவு முழுவதும் மீன் பிடிக்க கடுமையாக உழைத்தார்கள். ஆனால் அவர்களால் ஒரு மீனைக்கூட பிடிக்க முடியவில்லை. மிகவும் சோர்ந்து போய் விட்டார்கள். ஆனால் உழைப்புக்கு மாதிரியாக இருக்கின்ற, உழைப்பவர்களுடைய உழைப்பை மதிக்கின்ற ஆண்டவர், அவர்கள் மிகுதியான மீன்களைப் பிடிக்க, சிறப்பான ஆலோசனையைக் கொடுத்தார். அவர்களும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வலையைப் போட்டபோது, தங்கள் வலைகள் கிழிந்துப்போகத்தக்கதான மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். இயேசு கிறிஸ்துவே உண்மையாக உழைப்பவர்களின் உழைப்பை மதித்து, அவர்களுக்கு ஆசீர்வாதங்களை கொடுக்கும்போது, மனிதர்களாகிய நாம், நம் உடன் பணியாளர்களை எவ்வளவு மதிப்போடு நடத்த வேண்டும் என்பது இதன் வழியாக நமக்கு உணர்த்தப்படுகின்றது.

### 3. உழைப்பில் சிறந்து வாழ்வோம் :

"மனிதருக்காக அன்றிக் கடவுளுக்காகவே செய்வது போல நல் மனத்தோடு வேலை செய்யுங்கள் (எபே. 6:7).

பல்வேறுவிதமான துறைகளிலே பணிச்செய்யும்படி நாமனைவருமே அழைக்கப்பட்டிருக்கின்றோம். எந்த துறையாக இருந்தாலும், எல்லாமே உழைப்பை மையமாக கொண்டதுதான். நம்முடைய உழைப்பில் ஒரு அழைப்பு உண்டு. அந்த அழைப்பில் ஒரு நோக்கமும் உண்டு. உண்மையாய் உழைத்தவர்கள் அவருடைய பணிக்காக அழைக்கப்பட்டார்கள். மீன் பிடித்தவர்கள், மனிதர்களைப் பிடிக்கின்ற ஒரு புதிய பணிக்கு நேராக அழைக்கப்பட்டார்கள். நாம் உண்மையாக உழைக்கின்றபோது, நமக்கும் கடவுளுக்கும் இடையிலும், நாம் பணிசெய்கின்ற இடங்களிலும் நல்ல ஒரு உறவு ஏற்படுகின்றது. அது நாம் தொடர்ந்து நம்முடைய சிறந்த உழைப்பை வெளிப்படுத்துவதற்கு உதவியாகவும் இருக்கின்றது.

தொழிலாளர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் பணி செய்வது மனிதர்களுக்காக அல்ல, கடவுளுக்காக பணி செய்கின்றோம் என்ற நல்ல மனதோடு பணிச் செய்ய வேண்டுமென்று தான் திருமறை கற்றுத்தருகின்றது. அதுபோல, ஆண்டவருக்கு கீழ்ப்படிவதைப் போல நாம் நம்முடைய தலைவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். இன்றைய உலகத்தில், உயர்ந்த மதிப்பையும், உயர்ந்த சம்பளத்தையும் தரும் வேலைகளைப் பார்த்து, குறைந்த மதிப்பையும் குறைந்த சம்பளத்தையும் தரும் வேலைகளைச் செய்கிறவர்கள் சோர்ந்து போக கூடாது. எடுத்துக்கொண்ட பணியை சிறப்பாக செய்வதில் தளர்ந்து போய்விடவும் கூடாது. வேலை செய்கின்ற இடங்களில் தேவையில்லாமல் போராட்டங்களில் ஈடுபடுவதை தவிர்த்து, 'காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது' என்ற மனநிலையோடு கருத்தாக, உண்மையாக உழைக்க வேண்டும். குறுக்கு வழிக்கு போகாமல், நேர்வழியில் உண்மையாக உழைத்தால், உழைப்பில் சிறந்து விளங்கலாம். அதன் வழியாக ஆண்டவர் நிச்சயமாக நம்மை உயர்த்துவார்.

இந்த மே மாதத்தின் முதல் நாளில், உழைப்பாளர் தினமாகிய இன்று, உழைத்து வாழ்வோம், உழைப்பை மதித்து வாழ்வோம், உழைப்பில் சிறந்து வாழ்வோம் என்ற தீர்மானத்தோடு ஆண்டவரோடு ஒரு புதிய உறவை ஏற்படுத்தி உழைப்போம். அப்போது ஆண்டவர் நம்முடைய வாழ்வில் செயல்படுகின்றவராக, நாம் சிறப்பாக உழைக்கவும் உழைப்பின் பலன்களை பெற்றுக்கொள்ளவும் உதவி செய்வார் ஆமென்.

அருள்திரு. R. **ரெஞ்சித் சுதீர்**

**03-05-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு***

# உயிர்ப்பு : கிறிஸ்துவில் நம்பிக்கை

## BELIEVING IN CHRIST : THE RESURRECTION

2அர 4:27-37 திப 26:12-23
திபா 90 யோவா 11:17-28

**"... உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"** **யோவா 11:25**

**இறைவேண்டல் :** ***ஆற்றல் நிறைந்த கடவுளே, நீர் இயேசு கிறிஸ்துவை உயர்த்தி, அவரை அனைவருக்கும் ஆண்டவராக்கினீர். உயிர்த்தெழுதலும், எங்கள் நிலைவாழ்வுக்கு ஆதாரமுமாயிருக்கும் அவரை நம்பி, பின்பற்ற விசுவாசமும் தைரியமும் தாரும். எங்கள் பற்றுறுதியின்மையையும், அவநம்பிக்கையையும் மேற்கொள்ள எங்கள் கண்களை திறந்தருளும். எங்கள் வார்த்தைகளாலும் செயல்களாலும் நாங்கள் கிறிஸ்துவின் வாழ்வை உறுதிப்படுத்தி, மீட்பின் செயல்களை அறிவித்து, சான்றாக வாழ உதவி புரியும். உயிர்த்தெழுதலும் வாழ்வுமான இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தியாளர்கள் இறைப்பணி சார்ந்த நிகழ்வுகளை மூதாதையர் பட்டியலுடன் இணைத்து எழுதியுள்ளனர். யோவான் நற்செய்தியாளர் கிறிஸ்துவை வார்த்தையாக சித்தரித்து, வாழ்வு தருபவராக, நமக்குள்ளே வாழ்பவராக எடுத்தியம்புகின்றார். இந்நூலில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் மற்றும் அதன் தொடர்புடைய நிகழ்வுகள்அனைத்தும் இறை மக்கள் இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்ளவும் அதன்படி வாழவும் கற்று தருகின்றன. இயேசு கிறிஸ்து தன் இறைப்பணியின் போது மனிதர்களிடமும், படைப்புகளிடமும் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். நம் நற்செய்திப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள குடும்பத்தில் ஆழமான அன்புடையவராக இருந்தார், இயேசு கிறிஸ்து மார்த்தாளிடத்திலும், அவருடைய சகோதரி மரியாளிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் (யோவா. 11 : 5). அப்படி அன்பு செலுத்தப்பட்ட குடும்பத்தின் லாசரு வியாதிப்பட்டு, இறந்துவிட்டார். இந்நிலையில் இயேசு கிறிஸ்து லாசரு வழியாக இறை நம்பிக்கையுடையோர் இறப்பினும் உயிர் பெற்று எழுவர் என்ற சிந்தனையைத் தருகிறார்.

யோவான் 11-ஆம் அதிகார இறுதி வசனங்களில் உயிரற்ற, இறந்துப்போன லாசருவை நான்கு நாட்களுக்குப் பின்னர் உயிர்பெற்று

எழச் செய்த இயேசு கிறிஸ்துவின் வல்ல செயல் நாமும் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டுகிறது. இந்த அரும் செயல் உணர்த்தும் மூன்று உண்மைகளைச் சிந்திப்போம்.

### *1) நம்பிக்கையற்ற வினாக்கள்* (Unfaithful Questions) *:*

"ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" (யோவா. 11:21).

இவ்வசனத்தில் மார்த்தாள் தன் சகோதரன் லாசரு இறந்த துயரத்தில் அங்கலாய்க்கிறார். விசுவாசப் பயணத்தில் மார்த்தாள் எழுப்பின வினாவைப் போன்று துன்ப துயரத்தில் இருக்கின்ற ஏராளமான மக்கள் நம்பிக்கையற்ற வினாக்களை எழுப்புவதுண்டு. ஏன் என் வாழ்வில் இத்தனை துன்பங்கள்? ஏன் எனக்கு இத்தகைய துயர நிகழ்வுகள்? 2அர. 4-ஆம் அதிகாரத்தில் சூனோம் ஊரைச்சார்ந்த கனம் பொருந்திய பெண்ணொருவர் திருமணம் செய்துக் கொண்டு, குழந்தை இல்லாமல் துயரத்துடன் வாழ்ந்து வந்தார். இறைப்பணி செய்து வந்த இறைவாக்கினர் எலிசாவை ஏற்றுக்கொண்டு இறைப்பணிச் செய்ய உதவியதால் 'அடுத்த ஆண்டில் இதே நேரம் ஒரு மகன் பிறந்திருப்பான்' என்று எலிசா கூறினார். 'அதற்கு உம் அடியவளை ஏமாற்ற வேண்டாம்' என நம்பிக்கையற்ற நிலையில் பேசினார் (2அர. 4: 16).

ஆனால், எலிசா இறைவாக்கினரின் வார்த்தைக்கேற்ப ஒரு குழந்தையைப் பெற்றுக்கொண்டார். குழந்தை வளர்ந்து வரும் சூழலில் வியாதிப்பட்டு இறந்துப்போனது. அந்த இழப்பின் வேதனையில் இறைவாக்கினரிடம் அப்பெண், "நான் உம்மிடம் மகப்பேறு கேட்டதுண்டா? என்னை ஏமாற்ற வேண்டாம் என்று நான் சொல்லவில்லையா?" (2அர. 4:28) என்று நம்பிக்கையற்ற கேள்வியை கேட்கின்றார். ஆனால், இறைவனின் வல்ல செயல் நிகழ எலிசா செயல்படுகிறார், குழந்தையை தன் அறைக்குக் கொண்டு சென்று இறைவேண்டுதல் செய்தார். குழந்தை ஏழுமுறை தும்மி தன் கண்களைத் திறந்தது. பிள்ளையின் தாய், உயிரற்ற குழந்தையை உயிருடன் திரும்பப் பெற்றார்.

இந்த இரு நிகழ்வுகளிலும் இறைப் பெயர் மாட்சியடைய அரும்செயல் நிகழ்த்தப்பட்டது, இந்த நிகழ்வுகள் போன்று ஏன் இன்று நிகழவில்லை என்ற வினாக்கள் நம்மிடையே எழும்புவதுண்டு.

இறை நம்பிக்கையில் ஆழமற்ற நிலைகள் நம் வாழ்வில் நம்பிக்கையின்மையைக் கொண்டு வரும். இயேசு கிறிஸ்துவிடம் பற்றுறுதிக் கொண்டு வாழ்ந்தால் நம்பிக்கையற்ற வினாக்கள் எழும்பாது. மாறாக, உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் ஆற்றல் நம்மை ஊக்கமடையச் செய்யும்.

இறைப்பணிச் செய்ய ஜெர்மனியிலிருந்து அருள் தொண்டர்களாக தரங்கம்பாடிக்கு கப்பல் வழியாக வருகை தந்த சீகன்பால்க், ஹென்றி புளூச்சோ ஆகியோர் நீண்ட பயணம் மேற்கொண்டு இந்திய கடல் பகுதிக்குள் வருகை தந்தனர். தரங்கம்பாடியில் கப்பல்தளம் இல்லாததினால் நடுக்கடலில் நங்கூரம் இட்டு சிறிய தோணிகளில் கட்டுமரங்களில் பொருட்களையும், பயணிகளையும் கொண்டுச் சென்றனர், ஆனால், சீகன்பால்க், ஹென்றி புளூச்சோ ஆகிய இருவரையும் அழைத்துச் செல்ல யாரும் முன்வரவில்லை. அப்போது ஹென்றி புளூச்சோ, சீகன்பால்க் அவர்களிடம் நம்பிக்கையற்ற நிலைமையில் “நாம் திரும்பி சென்று விடுவோமா?” என்று வினவ சீகன்பால்க் “மூன்று நாள் காத்திருப்போம் இறைவன் துணை செய்வார்” என்று நம்பிக்கையூட்டினார். மூன்று நாட்கள் கப்பலில் நடுக்கடலில் உண்ண உணவின்றித் தவித்தனர். இச்சூழலில் இறைவனை நோக்கி வேண்டினர். மூன்றாம் நாள் முடிவில் ஓர் சிறிய தோணியில் ஒருவர் இவர்களை அழைத்துச் சென்று ஆதரவளித்தார்.

நம்பிக்கையற்ற கேள்வியுடன் திரும்பச் சென்றிருந்தால் சீகன்பால்க் வழியாக, நமக்குக் கிடைத்த திருமறை, இறைவழிபாட்டு பாடல் முறைகள், காகிதம் என இறைப்பணியின் முழுமையை நாம் இழந்திருப்போம்,

### *2) நம்பிக்கையுள்ள விடைகள்* **(Faithful Answers)** *:*

"ஆம் ஆண்டவரே, நீரே மெசியா, நீரே இறைமகன்! நீரே உலகத்திற்கு வரவிருந்தவர் என நம்புகிறேன்" (யோவா. 11:27).

நம்பிக்கையே வாழ்க்கை நம்பிக்கையுடன் வாழவில்லையென்றால் வாழ்வின் அர்த்தம் சுவையற்றதாக மாறிவிடும். உயிர்பெற்று எழும் இறை நம்பிக்கை இந்த உலகுடன் முடிந்து விடுவதில்லை; மாறாக, இறை வருகையின் போது உயிருடன் எழும்புவோம், கிறிஸ்துவின் நிலைவாழ்வினை சுதந்தரிப்போம் என்ற நம்பிக்கையுள்ள விடைகளை இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

இயேசு கிறிஸ்து மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்களா என்றறிய விரும்பி “உன் சகோதரன் உயிர்த்தெழுவான்” (யோவா. 11:23) என்றார்.

யோவா. 11:24 -இல் “இறுதிநாள் உயிர்த்தெழுதலின்போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்கு தெரியும்” என்று மரியாள் பதில் கூறுகின்றாள்.

தூய பவுல் கொரிந்து திருச்சபைக்கு திருமுகம் எழுதும் போது அத்திருச்சபையாரும் நம்பிக்கையுள்ள விடையுடன் வாழ அறிவுறுத்துகிறார்.

எக்காளம் முழங்கும்போது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர். நாமும் மாற்றுரு பெறுவோம் என்ற இறை நம்பிக்கையுடன் எல்லா சூழல்களிலும் வாழ வேண்டும் என்கிறார் (1கொரி. 15:52).

லிஸ்லி வேலஸ்க்யூஸ் என்ற பெண் மணியை உலகின் அவலட்சணமான பெண் (World's Ugliest Woman) என்று நினைத்தனர். ஏனென்றால் லிஸ்லி பிறந்த போது உடலின் ஹார்மோன் சுரப்பிகள் சரிவர வேலை செய்யாததினால் உடல் தோற்றம் உருமாறி போனது. இதை மருத்துவர்கள் 'progeroid syndrom' என்றழைத்தனர்,

லிஸ்லி வாழ்ந்த ஊரில் உள்ளவர்கள் அவளை "சூனியக்காரி, செத்துப்போ" என்று கூறி காயப்படுத்தினர். ஆனால் லிஸ்லி நம்பிக்கையிழக்காமல் படித்தாள், தகவியல் துறையில் முதுகலை பட்டம் பெற்றாள். அதன்பின் பல்வேறு கருத்தரங்குகளில் பங்கேற்ற லிஸ்லி நம்பிக்கையூட்டும் விடைகளை வார்த்தைகளாய் வெளிப்படுத்தினாள். அவள் எழுதிய "Be beautiful Be you" (அழகாய் இருங்கள் நீங்களாய் இருங்கள்) என்ற புத்தகம் நம்பிக்கையற்று வாழும் உலக மக்களை நம்பிக்கையுடன் வாழத் தூண்டுகிறது. இப்புத்தகத்தில் "இறைவன் ஏன் என்னை இவ்வாறு படைத்தார் என குறைக் கூறுவதில் என் நேரத்தைச் செலவிட்டேன் என்றால் என்னால் நம்பிக்கையுடன் வாழமுடியாது. உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன்" என நம்பிக்கையுள்ள விடைகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார். ஆகவே நம்பிக்கையுடன் உயிர்ப்பெற்று எழுவோம். பாடுகள் மத்தியிலும் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டு வாழ்வோம்.

### *3) நம்பிக்கை தரும் நல வாழ்வு* **(Faith brings wholistic life)***:*

"இறந்தவர் உயிரோடு வெளியே வந்தார். அவருடைய கால்களும் கைகளும் துணியால் சுற்றப்பட்டிருந்தன. கட்டுகளை அவிழ்த்து அவனைப் போகவிடுங்கள் என்று அவர்களிடம் கூறினார்" (யோவா. 11:44).

இவ்வாறு உயிரற்ற லாசருவைக் கட்டியிருந்த கட்டுகள் அகற்றப்பட்டபோது இயேசு கிறிஸ்துவால் லாசரு அற்புதமாக உயிர்ப்பெற்று வந்தார்.

இன்று இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டுள்ள நாமும் பல்வேறு உயிரற்ற கட்டுகளினால் சுற்றப்பட்டு நல்வாழ்வை இழந்து

வருகிறோம். இயேசு கிறிஸ்துவை விட்டுவிட்டு தனிநபர்கள், பொருட்கள், வாஸ்து, மாய குறிச்சொல்லுதல், நாள்பார்த்தல் இவற்றில் நம்பிக்கை கொள்கிறார்கள்.

எசேக்கியேல் 37:11 - இல் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயின. எங்கள் நம்பிக்கை அற்று போய்விட்டது. நாங்கள் துண்டிக்கப்பட்டுவிட்டோம் என்று புலம்பிய சூழலில் 'நீங்கள் உயிர் பெறுவீர்கள்' (எசே. 37:14) என்று இறைவாக்கினர் எசேக்கியேல் நம்பிக்கையூட்டுகிறார்.

முடக்குவாதமுற்றவர் நலவாழ்வு பெற நான்குபேர் நம்பிக்கையுடன் செயல்பட்டு இயேசு கிறிஸ்து தங்கியிருந்த அறையின் மேல் கூரையைத் திறந்து, தடைகளை தகர்த்து செயல்பட்டனர் இயேசு கிறிஸ்து அவர்கள் நம்பிக்கைக் கண்டு முடக்குவாதமுற்றவருக்கு நல்வாழ்வு கொடுத்தார் (மாற். 2:4,5).

இன்று நாம் நம்பிக்கை தரும் நலவாழ்வை கொண்டு செல்லும் ஊடகங்களாக மாற வேண்டும். திருச்சபை ஆன்மிகப் பணிகளில் நல்வாழ்வுக்கான தடைகளை இறைமக்களிடம் அறிவுப்பூர்வமான, ஆன்மிகச் சவாலுடன் எடுத்துரைப்போம். இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்ளும் ஆன்மிகச் சூழலை தனிநபர், குடும்பம், தியானம், திருமறை வாசிப்பு, இறைவேண்டலுடன், நாம் கட்டமைத்து இயேசு கிறிஸ்துவில் முழு நல்வாழ்வு பெறுவோம்.

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ள தடைகற்களாய் உள்ள நம்பிக்கையற்ற வினாக்களைத் தவிர்த்து நம்பிக்கையுள்ள விடைகளை இயேசு கிறிஸ்துவிடம் தேடுவோம். நல்வாழ்வையும் நிலை வாழ்வையும் சுதந்தரிப்போம். இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கைக் கொண்டு இவ்வுலகில் வாழ கற்பாறையாம் கிறிஸ்து நம்மை உயிர்ப்பிக்கட்டும் ஆமென்.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப்ராஜ்**

**10-05-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு***

# அருட்பணியை வெளிப்படுத்தும் கிறிஸ்துவின் அழைப்பு

## CHRIST'S INVITATION TO BE AN EXPRESSION OF MISSION

எசே 34:25-31 | 1பேது 2:1-10
திபா 47 | யோவா 20:19-23

**"நீ என்னைப் பின் தொடர்ந்து வா."** யோவா 21:22

***இறைவேண்டல் : மேன்மைமிகு கடவுளே, உமது ஆவியினாலும், அறிவினாலும் எங்களை புத்தாக்கம் செய்து சிலுவையின் வழி நடக்க வழிகாட்டுகின்றீர். எங்களை இழந்து, பணிவிடை செய்யும் அருள்பணிக்கான சவால் நிறைந்த உம் அழைப்பை ஏற்கவும், உமது எதிர்பார்ப்பின்படி எங்கள் பணி அமையவும் அருள்தாரும். உம் திருத்திட்டத்தை உணர்ந்து பணிவிடை செய்ய உம் அருள்தாரும். எங்களை வழிநடத்தும் வல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.***

அழைப்பு காலந்தோறும் தொடர்கின்ற ஒன்று. தெரசா அல்பேனியாவில் 1910 ஆகஸ்டு 26-ம் நாளன்று பிறந்தார். தனது 18-வது வயதில் 1928 செப்டம்பர் 25-ம் தேதி இறை அழைப்பை ஏற்றுக்கொண்டு லொரேட்டா கன்னியர் சபையில் சேர்ந்து இறைப்பணிச் செய்தார். 1941 கல்கத்தாவுக்கு வந்து 1946 வரை பணியாற்றினார். அங்கு பணி செய்து கொண்டிருக்கும் போது கல்கத்தாவிருந்து தியானம் செய்வதற்காக 1946 ஆகஸ்டு 16-ம் தேதி டார் ஜிங் நோக்கி புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். திடீரென்ற ஒரு அழைப்பின் சத்தம் கேட்டது. "நீ உன் சொந்த நாட்டையும், பெற்றோர், உற்றோரையும் துறந்த இந்தியாவுக்கு வந்தது சொகுசு வாழ்வு வாழ்வதற்கா? வகுப்பறையில் மாணவியர்கட்கு பாடம் சொல்க் கொடுப்பதற்கா! உனக்கு வேறே பணி காத்திருக்கிறது. சேரியில் வாழும் மக்களிடம் செல், அங்கே ஏழைகளிலும் மிக ஏழைகளாய் வாழும் மக்களுக்கு தொண்டு செய், யாவற்றையும் துறந்து என்னை பின் செல்". அதுவே அன்னை தெரசாவின் வாழ்வு பயணத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. 1946 செப்டம்பர் 10-ம் நாளன்று "அன்பின் பணியாளர்" என்ற சபையை உருவாக்கி உலகையே இறைவன்பால் திரும்பிபார்க்க கூடிய அளவில் இறைவனுக்கு நாம் செய்யும் அன்பை நம்சகோதரர்களும் உலகினரால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் செய்யும் அன்பு சேவையாக மாற்றிடும் வகையில் ஒளிரும் தீபமாக விளங்கினார்.

ஆக அருட்பணிக்கான அழைப்பு தொன்று தொட்டு வரலாற்றில் நிகழும் நிகழ்வு. எரியும் புதரில் மோசேயை அழைத்த கடவுள் நாவன்மையற்றவன், திக்குவாயனை விடுதலை வீரனாக்கினார். ஆடுமேய்த்து கொண்டிருந்த தாவீது ஆட்சி புரியும் பேரரசரானார் (1 சாமு. 16:12). தூய்மையற்ற உதடுகளை கொண்ட ஏசாயா வமை மிகுந்த இறைவாக்கினராக மாறினார் (எசா. 6:8).

இங்கே பேதுருவின் அழைப்பு சிறப்பாக கவனிக்கபட வேண்டிய ஒன்று. மீன் பிடித்து கொண்டிருந்த பேதுருவை என் பின்னே வா என்றவர் (மத். 4:19), ஆண்டவரே நான் பாவி, நீர் என்னை விட்டு போய் விடும் என்று கால் விழுந்து கெஞ்சினவர். (லூக். 5:8), ஆனால் ஆண்டவர் இயேசு அஞ்சாதே இதுமுதல் நீ மனிதரை பிடிப்பவன் ஆவாய் என்று சொல் அழைத்தார் (லூக். 5:10). பேதுருவிடம் நீ பாறை. உன்மீது என் சபையை கட்டுவேன் என்றார். பேதுருவோ இயேசுவிடம் நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று சான்று பகர்ந்தவர். ஆனால் அதே வேளையில் பாடுகள் படாத, துன்புறாத மெசியாவை எதிர் பார்த்தவர். சிலுவை என்றால் வேண்டாம், துன்பம் என்றால் ஓட்டம் என்று வாழ்ந்தவர். இயேசுவோ என்கண் முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்கு தடையாய் இருக்கிறாய் என்று (மத். 16:23) இயேசுவால் கண்டிக்கப்பட்டவர். ஆனால் அதே வேளையில் ஆண்டவர் பேதுருவுக்காக அவரது நம்பிக்கை தளராதிருக்க (லூக். 22:32) மன்றாடியுள்ளார். தொடர்ந்து இயேசுவின் மரணத்திற்கு பிறகு ஏற்பட்ட குழப்பத்தில் தங்கள் விசுவாசத்தை இழந்துவிட்டு மீன்பிடிக்க போகிறேன். யோவா. 21:3 என்றவர் மூன்று முறை மறுதத்து தனது அழைத்தலை இழந்தவர். மூன்று முறை நீ என்னை அன்பு செய்கிறாயா? என்று கேட்டு மீண்டும் அழைப்பை உறுதிபடுத்தி ‘‘என்னைபின் தொடர்ந்து வா’’ என்று அழைக்கின்றார்.

### *1. அழைப்பு-சவாலானது :*

இந்த அழைப்பு ஆண்டவருக்கு பேதுரு மீது இருந்த அதிகாரத்தை, உரிமையை காட்டுகிறது. கடல் உயிரோடிருந்த மீன்களை கரையிலே கொண்டு வந்து சாகடித்த பணியை செய்தவர், ‘‘என் ஆடுகளை பேணி வளர்’’ என்ற கட்டளையோடு பாவத்தினால் இறந்து கொண்டிருக்கும் மனிதர்களை உயிருள்ள வாழ்வுக்கு கொண்டு வருகின்ற சிறப்பான பணி செய்கின்ற சவால் நிறைந்த அழைப்புக்குள் இணைந்துவிடுகின்றார். இளைய மகன் தந்தையை விட்டு தூரம்போய் தாறுமாறாக வாழ்ந்து, தரித்திரத்துக்குள் தள்ளபட்டு தன்நிலை உணர்ந்து மனம் மாறி வரும் போது ‘‘என் மகன் இவன்’’ இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். லூக். 15:24 இதை மேற்கூறிய கருத்தில் உணர்ந்து

கொள்ளலாம். நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களில் இருந்து மன்னிப்பு பெறுங்கள். அப். 2:38 என்பதே பேதுருவின் அருளுரையின் சாரமாயிருந்தது. இருளில் இருந்து ஒளியைநோக்கி, சாவிருந்து வாழ்வை நோக்கி, வெறுப்பிருந்து அன்பைநோக்கி "இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்தவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி". 1 பேது. 2:9 ஆக அழைத்தவர் தூய்மையுள்ளவராயிருப்பது போல நீங்களும் உங்கள் நடத்தைகளில் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள். 1 பேது. 1:15, பிற இனத்தவர் நடுவில் நன்னடத்தை உடையவராயிருங்கள். 1 பேது. 2:12. ஆக அழைக்கபட்ட ஒவ்வொருவரும் உரிமை வாழ்வில் நிலைத்திருந்து ஊனியல்புக்குரிய வாழ்வை களைந்து செயல்படுவதற்கேதுவான சவால் நிறைந்த அழைப்பாக உள்ளது.

## *2. அழைப்பு பணிவிடைக்கே :*

இயேசு கிறிஸ்துவின் அழைப்பு பதவிக்கான நியமனம் அல்ல. மாறாக பணிவிடைக்கான நியமனம். அதிகாரத்திற்கான நியமனமல்ல. மாறாக அரவணைப்பிற்கான நியமனம். இது ஆட்சிக்கான நியமனமல்ல மாறாக சாட்சிய வாழ்வுக்கான அழைப்பு. ஒருவர் இன்னொருவருக்காக பணிவிடை செய்திட வேண்டும். பாதம் கழுவிட வேண்டும். தொண்டு புரிந்திட வேண்டும். அவருக்காக உறவையும், உடமையையும் துறந்திட வேண்டும். பிற இனத்தவரின் தலைவர்களை போலன்றி முதன்மையாளராய் மக்கள் மீது அதிகாரத்தை காட்டாமல் ஒரு பணிவிடையாளராய், பணியாளராய் இருக்க வேண்டும். (மத். 20:25-27). அழைக்கபட்டவர்கள் தங்களுக்காக மட்டும் வாழ வேண்டியவர்கள் அல்ல. பிறருக்காக வாழவேண்டியவர்கள். ஒவ்வொருவரும் தாம் பெற்று கொண்ட அருட்கொடையை பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள். (1 பேது. 3:10), தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள் (1 பேது. 1:22). பிறரிடம் இரக்கமும், அன்பும், பரிவுள்ளமும், மனத்தாழ்மையும் கொண்டிருங்கள் (1 பேது. 3:8). அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையே நோக்க கடமைபட்டவர்கள். கண் முன் உள்ள ஏழையை, ஆதரவற்றோரை, கைதியை, பசியுற்றிருக்கின்றவரை, நோயுற்றிருக்கிறவரை, தாகத்தோடு போராடுவோரை வாழ்விக்க தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்ததினிமித்தமாக அன்னை தெரசா உலகம் போற்றும் தாயானார். ஆக அழைப்பு என்பது பணிவிடைக்கே.

## 3. அழைப்பு இழப்பதற்கே :

எதையும் வியாபாரக் கண்ணோட்டத்தோடும், தனக்கு என்ன இலாபம் என்ற சுயநலத்தோடும், ஆதாயம் தேடும் மனிதர்களை இயேசு கிறிஸ்து அருட்பணிக்காக அழைக்கவில்லை. அழைத்தல் என்பது வியாபார நோக்கமல்ல. தன்னை இழப்பதேயாகும். தனது உறவு, செல்வம் இவைகளை விட்டு கொடுக்க மனமில்லாதவர்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை. பேதுரு பெரிய சொத்தாகிய வலையையும் படகையும் உதறி தள்ளிவிட்டு உன்னத உண்மையான உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் தலைமையை ஏற்று பின்பற்றினார். எங்கே இழப்பு இருக்கிறதோ அங்கே அதன் பயன்பல மடங்காகிறது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை தரும் (யோவா. 12:24). பாறை இழந்தால் தான் சிற்பமாகும். சிப்பி இழந்தால்தான் முத்தாகும். என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை தூக்கி கொண்டு என்னை பின்பற்றட்டும் (மத். 16:24). ஆக சுய நலம் இழந்து, பற்றற்ற வாழ்வு வாழ்தல் அவசியம். பலருடைய மீட்புக்கு ஈடாக உயிரையே இழப்பது சீடரின் அழைப்பாகும். நீ கைகளை விரித்து கொடுப்பாய். வேறு ஒருவர் உன்னை கட்டி உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்கு கூட்டி செல்வார் (யோவா. 21:18). கிறிஸ்துவுக்காக தலை கீழாக சிலுவையில் அறைந்து கொல்லப்பட தம்மையே கையளித்தார். இதனால் திருச்சபையின் தலைவராக மாறினார். தூய பவுல் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு என கருதினேன். கிறிஸ்துவை ஆதயமாக்கி கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதுகிறேன். (பி. 3:7,8). கிறிஸ்துவின் பொருட்டு இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்று கிறிஸ்துவுக்காக இழந்தார். திருச்சபை வளர்ந்தது. உப்பு கரைந்தால் தான் ருசி கொடுக்கும். கரும்பு ஆலைக்குள் புகுந்தால் தான் சர்க்கரை பிறக்கும்.

சந்தன மரம் காயப்பட்டால் தான் மணம் பிறக்கும்.
தீக்குச்சி தன்னை அழித்தால் தான் ஒளி பிறக்கும்.

தன்னை இழக்க தயாராக இருப்பவர் மட்டுமே கிறிஸ்துவின் அழைப்பில் நிலைத்திருந்து பலன் கொடுக்க முடியும். ஆக கிறிஸ்துவின் அருட்பணிக்கான அழைப்பு சவாலானது, பணிவிடைக்கானது, இழப்பில் வருவது வாழ்வு என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

அருள்திரு. **N. ஜாண் பெண்டிங்**

**14-05-2015** *விண்ணேற்றத் திருநாள்*

# கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர்

## CHRIST - LORD OF ALL

| | |
|---|---|
| தானி 7:9-14 | திப 1:1-11 |
| திபா 47 | லூக் 24:50-53 |

**"உலகில் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."**
**திப 1:8**

***இறைவேண்டல் :*** *உன்னதரான கடவுளே! அனைத்து படைப்புகளும் உமது திருமைந்தரின் அருளால் நிறைக்கப்பட அவரை அனைவருக்கும் ஆண்டவராக உயர்த்தினீரே. எளியோரையும், ஓரங்கட்டப்பட்டோரையும் மேன்மைப்படுத்தி, அவரது தியாக அன்பை உணர்ந்து எங்களை எளிமையாக்கி எங்கள் பணி தொடர அருள்செய்ய வேண்டுமென்று ஆண்டவர் கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

நாம் வாழும் உலகம் பல்சமய சூழலில் அமைந்துள்ளது. இனம், மொழி, சமயம் இவை மனிதனின் இயல்பு வாழ்க்கையோடு பின்னி பிணைந்து காணப்படுகிறது. பன்மைச் சூழலில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நற்செய்தியை அறிவிக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர் என்பதை ஆதித் திருச்சபை உணர்ந்திருந்தபடியால் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்படாத இடங்களிலும் தங்களை தங்கள் உடமைகளை தங்கள் உறவுகளை இழந்து நற்செய்தியை அறிவித்தார்கள். அதன் விளைவு திருச்சபை கடவுளால் உலகினுள் அனுப்பப்பட்ட திருச்சபை இறையாட்சியை வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்புப்படுத்தவும், எல்லா மக்களையும் இறையரசின் புது வாழ்வுக்கு அழைக்கவும். பாவமன்னிப்பை அறிவித்து கடவுளோடும் சகமனிதர்களோடும் நல்லுறவுடன் அனைவரும் வாழும்படி அனுப்பப்பட்டுள்ளது. அனுப்பப்படுதல் என்பதை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போய் வருவதாக மட்டும் எண்ணாமல் இருக்கும் இடங்களில் அனுப்பப்பட்ட உணர்வில் வாழுதல் முதன்மையானது. இஸ்ரயேல் மக்கள் மேசியாவை எதிர்பார்த்தார்கள் உலகின் மீட்பராக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு , நற்செய்திப்பணி அமைந்தது. இயேசுவின் உயிர்தெழுதலுக்குபின் விண்ணுக்கு எடுத்து கொள்ளப்படும்போது மேசியா எதிர்பார்ப்பிலே கேள்வியும் பதிலும் தரப்படுகிறது. தூய ஆவியரின் ஆற்றல் பூமியின் கடைசி எல்லை வரையிலும் உங்களில் வெளிப்படும் என இயேசு

கிறிஸ்து அறிவிக்கிறார். முழு உலகிற்கும் கிறிஸ்து ஆண்டவர் என்பதை எப்படி நமது வாழ்வில் வெளிப்படுத்தமுடியும் ?

1) கிறிஸ்துவை ஆண்டவராக அறிதல்

2) கிறிஸ்துவை ஆண்டவராக அனுபவித்தல்

3) கிறிஸ்துவை அனைவருக்கும் ஆண்டவராக அறிவித்தல்.

### 1. *கிறிஸ்துவை ஆண்டவராக அறிதல் :* யோவா 20:25

இந்தியாவிற்கு கிறிஸ்துவை அறிவித்த இயேசுகிறிஸ்துவின் சீடர் தோமா எப்போதும் சந்தோஷத்தோடும். உறுதியோடும் பேசுகிறவர். தன்னுடைய சந்தேகத்தை நேரடியாக கேட்கும் பண்பு கொண்டவர் (யோவா 20:25) தோமா கிறிஸ்துவின் உயிர்ப்பை முதலில் நம்பவில்லை. அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு அந்த காயத்தின் முன் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என உறுதியாகச் சொன்னார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முரணாக பேசப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் அவருக்கு காட்சி தந்து உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு எனக் கூறுகிறார். தோமா உடனடியாக "என் ஆண்டவரே என் கடவுளே" என அறிக்கை இடுகிறார். நாம் அனைவரும் அறிக்கை செய்ய வேண்டிய வார்த்தை. யோசுவா தன் முதிர்ந்த நாட்களில் நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம் (யோசு : 24 : 15) என அறிக்கையிட்ட அனைவரும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளச் செய்தது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் எம்மாவூர் செல்லும் சீடரோடு பயணிக்கிறார். உரையாடுகிறார் உடனிருக்கிறார். உணவருந்துகிறார் கண்கள் திறந்த போதே ஆண்டவர் என்பதை அறிகின்றனர். (லூக் 24 : 31) நம்முடைய ஆராதனை, இறைவேண்டல், நற்கிரியை இவைகளை நாம் செய்தாலும் உயிர்த்தெழுந்த ஆண்டவரை அறிகிற அறிவு முதன்மையானது.

கிறிஸ்தவர்களை துன்பப்படுத்துவதில் திருப்தியடைந்த பவுல் தமஸ்கு பிரயாணத்தில் "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றவுடன் ஆண்டவரை அறிதலோடு திருச்சபைக்கு பவுலின் பங்களிப்பு மேன்மையானது. பவுலின் ஊழிய நாட்களில் சிறைக் காவலாளி சிறைச்சாலையில் கடவுளுடைய செயலை காணும் போது என்ன செய்ய வேண்டும் என கேட்பது அப் (16 : 30) அறிய வேண்டும் என ஆவலை தூண்டியது. கிறிஸ்து ஆண்டவர் என்பதை நாம் அறிதல் சரியான விசுவாச வாழ்விற்கு நம்மை வழி நடத்தும்

## 2. கிறிஸ்துவை ஆண்டவராக அனுபவித்தல் : லூக் 24: 53

இயேசு கிறிஸ்துவின் திருப்பணியின் போது தம்டைய சீடர்களோடு உங்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண போகிறேன் (யோவா 14 : 2) என அறிவித்தார். இப்போது உயிர்த்தெழுதலுக்கு பின் சீடர்கள் அனுபவம் முதன்மையானது. அனுபவித்தல் என்ற பொருளை உணருதல் என கூறலாம் தாவீது அரசன் இதனை நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் (சங் 34: 10) இஸ்ரயேல் மக்களை கடவுள் மோசேயின் மூலம் சிவந்த சமுத்திரத்தில் நடத்திச் சென்றார். இரவு வெளிச்சமாயிருந்தது. (யாத் 14:31) கர்த்தர் எகிப்தியர்களுக்கு செய்த கிரியைகளை கண்டார்கள். ஆகவே மோசேயும் இஸ்ரயேல் புத்திரரும், மிரியமும் கடவுளின் வல்ல செயலை தங்கள் அனுபவித்த வற்றை புகழ்ந்து பாடினார்கள். ஆனால் பின்னர் மாராவின் தண்ணீருக்காய் முறுமுறுத்தார்கள் (விப 15: 24) அப்பத்திற்காக முறுமுறுத்தார்கள் (விப 16: 2) கடவுளின் வழி நடத்துதலை அறிந்தார்கள், அனுபவிக்க மறுத்தார்கள். மார்த்தாள் ஆண்டவரை அறிந்தார். (லூக் 10: 40) அவர் அனுபவத்தில் குறைபாடு இருந்தது. ஆண்டவர் சீடர் யூதாஸ் ஆண்டவரை அறிந்து கொண்டான். அனுபவிக்க மறுத்துவிட்டான். ஆகவே இயேசுவை காட்டி கொடுக்க விலைபேசினேன். கடவுளின் அன்பு, கரிசனை, விடுதலை, மன்னிப்பு இவற்றை நாம் அறிந்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். ஆனாலும் எதிர்பாராத சூழ்நிலைகள் நமது வாழ்வை சந்திக்கும் போது கடவுளின் செயல்களில் சந்தேகப்படுகிறோம். இயேசுவோடு உடனிருந்த சீடர்கள் யூதாசை தவிர்த்து ஆண்டவரை அறியவும் அனுபவிக்கவும் அர்ப்பணம் இருந்தது. இயேசு கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர் என்பதை அறிவிப்பதில் இந்தத் துன்பங்களை பொறுமையோடு ஏற்று சான்றுபகர்ந்தார்கள். நாமும் அதற்காக அழைக்கப்படுகிறோம்.

## 3. கிறிஸ்துவை அனைவருக்கும் ஆண்டவராக அறிவித்தல் : திப 1:7

கிறிஸ்து நமது வாழ்வின் மீட்பர் என அறிவிக்க நாம் அழைக்கப் பட்டுள்ளோம். உலகின் எல்லா பகுதியிலும் ஆண்டவர் என்பதை அப்போஸ்தலர்கள் அறிவித்தார்கள். திருச்சபை ஒரு சங்கமல்ல. அது கிறிஸ்துவின் சரீரம் திருச்சபை ஒரு அமைப்பு அல்ல அனுபவம் என்பதை அறிவித்தார்கள். கடவுள் ஆபிரகாமோடு செய்த வாக்குத்தத்தம் பூமியின் வம்சங்கள் அனைத்தும் உனக்குள் ஆசிபெறும் (ஆதி : 12: 3) இயேசுகிறிஸ்து சமாரிய பெண்ணோடு உரையாடும் போது எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம் வரும் (யோ 4:21) நூற்றுக்கு அதிபதியின்

விசுவாச அறிக்கையைக் கேட்ட இயேசு கிறிஸ்து அனேகர் கிழக்கிலும் மேற்கிலிருந்தும் வந்து இறையரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு பந்தியிருப்பர். (மத் 8:11 ) இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் சிதறிய சீடர்கள் எருசலேமிலே நின்று இயேசுவை பிதாவானவர் எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (திப 2:32) அறிவித்தார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவர் அனைவருக்கும் ஆண்டவர் என்பதை நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினர் (அப் : 2 : 36) என அறிவித்தனர். கிறிஸ்து ஒரு குறிப்பிட்டவருக்கு மட்டும் அல்ல. முழு உலகிற்கும் என்று அப்போஸ்தர்கள் பலதிசைகளில் சென்றனர். இன்று மிஷனெறிப் பணி வாயிலாக நற்செய்தி கேள்விப் பட்டிராத இடங்களுக்கு அறிவித்தல் பணியாக நடைபெறுகிறது. நம்முடைய பங்கு என்ன என்ற கேள்வி இன்றியமையாதது. குமரிமாவட்டத்திற்கு நிங்கல்தெளபே, வேதமாணிக்கம் ஆண்டவரை அறிந்து அனுபவித்து அறிவிக்காமல் இருந்தால் நம்முடைய மாவட்டத்தில் இன்றும் அடிமைத்தனத்தின் நுகத்தையே ஏற்றிருந்தோம். மிஷனெறிகள் தங்களை இழந்து கல்வி, சுகாதாரம், சமூக விடுதரைக்கு பங்களிப்பு தந்தார்கள். இப்பங்களிப்பை அனைவருக்கும் கொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு **இரா. சாம்கிறிஸ்டோபர்**

**17-05-2015** ***உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு***

# தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல்

## WAITING UPON THE HOLY SPIRIT

எசா 40:25-31 திப 1:1-11
திபா 51 லூக் 24:44-49

**"...நீங்கள் உன்னதத்தி-ருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்."** லூக் 24:49

***இறைவேண்டல் : எங்கும் ஆளுகை செய்யும் கடவுளே, தூய ஆவியாருக்காய் காத்திருந்த சீடர்கள்மீது நிறைவான ஆசிகளைப் பொழிந்தீர். வாழ்வின் பல்வேறு குழப்பங்களின் நடுவில் எங்கள் வாழ்வைப் பாதுகாத்து, புத்துணர்வளித்து , ஆற்றல்படுத்தும் தூய ஆவியாருக்காய் காத்திருந்து, ஆசிகளுக்காய் தாழ்மையாய் மன்றாடுகின்றோம். உம் தூய்மைப்படுத்தும் ஆற்றலால் தீமையான, அநீதியான உலகத்தின் பிடியிலிருந்து எங்களை விடுவித்து, உலகின் கடைமுனைமட்டும் நற்செய்தியை அறிவிக்க எங்களை ஆற்றல்படுத்தும். இறைமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.***

தந்தையாம் இறைவனின் மாட்சியில் பங்கு கொண்டுள்ள இயேசு கிறிஸ்து தம் சீடர்களைவிட்டு அகன்று சென்று விடவில்லை. பலமுறை அவர்களுக்குத் திருக்காட்சி அளித்து தாம் வெறும் ஆவியன்று; உண்மையிலே அவர்களோடு இருந்து செயல்பட்டு, பழகிய அதே இயேசுதான், ஆனால் இப்போது உயிருற்று எழுந்து உடலோடு மாட்சிமைப்பெற்று இருப்பதாகக் காட்டுகிறார். உயிருற்று எழுந்து மாட்சிமை பெற்ற தாம் தான் முன்னர் இறைவாக்கினர் உரைத்த மெசியா. 'அவர் மக்களைப் பாவங்களிலிருந்து விடுவிக்கப் பாடுபட்டு உயிர் துறக்க வேண்டும்' என்று மெசியாவைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அந்த மெசியா இயேசுவில் நிறைவேறியுள்ளார். தம்மைச் சிலுவையில் அறைந்து கொன்ற யூதர்களுடைய பாவங்களை மட்டுமல்ல; உலக மக்கள் அனைவரின் பாவங்களையும் போக்கினார் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும் எல்லா மனிதரிலும் தொடரவேண்டும். இந்த நிகழ்வுகள் அனைத்தும் எதிர்பாராத ஒன்றல்ல. மாறாக, திருமறையில் முன் எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேறும் என்பதற்குரிய சான்றாகும். கிறிஸ்தவ மனமாற்றம் என்பது ஆண்டவரது அளவுகடந்த அன்பால் கவரப்பட்டு மனிதன் உள் ஆழத்திலே பாவத்தை வெறுத்து ஒதுக்கி,

ஆண்டவர் காட்டும் அன்புப்பாதையில் நடப்பதாகும். மனமாற்றம் என்பது நமது தீய வாழ்வை விட்டுவிடுவது மட்டுமல்ல, மாறாக, முழுமையாக நல்வாழ்வுச் செயல்களில் ஈடுபடுவதாகும். இது ஓரிருநாட்களில் முடிந்து விடுவதல்ல. மாறாக, தினமும் வாழவேண்டிய வாழ்வு நெறியாகும். அப்போஸ்தலர்கள் (திருத்தூதுவர்கள்) நற்செய்தியின் அதிகாரப்பூர்வமான சாட்சிகள், நம்பிக்கையின் இயல்புகளை கற்பிப்போராவர்.

தூய ஆவியாரின் அனுப்புகை பெறும்வரையிலும் இவர்கள் எருசலேமிலேயே இருந்து அங்குள்ள சகோதரர்களை உறுதிப்படுத்த வேண்டும் என்பது இப்பகுதியின் உள்ளடக்கமாகும். இப்பகுதியின் வாயிலாக தூய ஆவியாரை எதிர்நோக்கி காத்திருத்தலை குறித்து சில உண்மைகளை கற்றுக்கொள்ளலாம்.

### *1. தோற்றமில்லாதவர் :*

தூய ஆவியார் பற்றிய முழுமையான அறிவையும் அனுபவத்தையும் திருச்சபை நிறைவாகப் பெற்றுக்கொள்ளவில்லை என கூறலாம். இருப்பினும் தூய ஆவியார் பற்றிய நம்பிக்கை திருச்சபை மக்களிடையே பரவலாக இருக்கின்றன. எனினும் ஆவியார் பற்றிய முழுமையான கருத்தை இஸ்ரவேலரின் நம்பிக்கையின் ஒளியில் கற்றுக்கொண்டால் பல்சமய சூழலில் கிறிஸ்தவ நம்பிக்கையை வலுப்படுத்தி இறை நம்பிக்கையை வளர்க்கலாம். இஸ்ரவேலரின் நம்பிக்கையின் அடித்தளம், கடவுளுக்கு தோற்றம் இல்லை என்பதுதான். அதாவது இறைவனின் தோற்றத்தை காணமுடியாது. எனவே இறைவனுக்கு உருவம் கொடுக்காமல் இறைவனுக்குப் பெயர் கொடுத்து அழைத்தார்கள். இருக்கிறவராகவே இருக்கிறார், என்னை காண்கிற இறைவனை நானும் இவ்விடத்தில் கண்டேன் என்று சொல்லி, “நீர் ‘என்னை காண்கிற கடவுள்’ என்று ஆகார் பெயர் சூட்டினார் (தொநூ. 16:13). ஆபிரகாம் கடவுளால் புகழப்பட்டபோதும், மகனை துணிச்சலாக பலியிடுவதற்கு முன்வருதலால் இறைவனுக்குரியவராகிறார். எனவே ஆபிரகாம் கடவுளுக்கு பெயரிட்டு அழைக்கிறார் (தொநூ. 22:12-14). இஸ்ரவேலரின் இறைவனுக்கு உருவம் இல்லை. ஆகவே உருவ வழிபாட்டிற்கு இஸ்ரவேலர் வரலாற்றில் இடமில்லை. கடவுளுக்கு தோற்றமில்லாத போது அவர் ஆவியாகயிருக்கிறார். அவரைத் தொழுகை செய்பவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுகை செய்யவேண்டும் என்ற கோட்பாடு உறுதியாக கடைபிடிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவும் இக்கோட்பாட்டை வலுவாக கடைபிடிக்கச் சொன்னார் (யோவா. 4:23-24). இயேசு இறைவனை

ஆவியாகவும், தோற்றமில்லாதவராகவும் காண்பதோடு, நமக்கும் அதை வெளிப்படுத்துகிறார் (யோவா. 4:24). தொடக்க நூலில் கடவுள் ஆவியாகயிருப்பதாக கூறப்படுகிறது (தொநூ. 1 : 2). யோவான் நற்செய்தி நூலாசிரியர் இறைவனை வார்த்தையாக காண்கிறார். ஆகவே தோற்றமில்லாதவர் அனைத்தையும் தோற்றுவிப்பவராக இருக்கிறார். தம்மால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்தையும் பாதுகாக்கிறவராகவும், பராமரிக்கிறவராகவும் செயல்படுகிறார். ஆனால் அவருக்கு உருவம் இல்லை. அவருக்கு உருவம் யாராலும் வழங்கப்பட இயலாது. இஸ்ரவேலரின் நம்பிக்கையை நாமும் கடைபிடித்து பல்சமய சூழலில் கடவுளின் பெயரில் சண்டைகள், வன்முறைகள் இல்லாமல் அமைதியோடும், நம்பிக்கையோடும் அதே சமயத்தில் மனித திட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் இறைவனை உட்படுத்தாமல், இறைத்திட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் மனிதர் தங்களை கீழ்ப்படுத்துவதே தோற்றமில்லாத இறைவனின் ஆளுகையை ஏற்று வாழ்வதாகும்.

### *2. தோற்றமாகிறவர் :*

தோற்றமில்லாத இறைவன் தம்மை இயேசு கிறிஸ்துவின் வாயிலாக தம்முடைய செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறார். தந்தையாம் இறைவனை, அதாவது காணமுடியாதவராயிருக்கிற இறைவனை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். எப்படியெனில் இறைவனின் குண இயல்புகளை இயேசுவில் காணமுடிகிறது. இறைவனின் பேராற்றலை இயேசுவில் காணமுடிகிறது. இறைவனின் தன்மைகளை இயேசு கிறிஸ்துவில் காணமுடிகிறது. ஒரு முறை பிலிப்பு இயேசுவை நோக்கி “தந்தையாம் இறைவனை காட்டும் அது எங்களுக்குப் போதும் என்றார் (யோவா 14:8). அதற்கு இயேசு “என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்” (14:9) என குறிப்பிட்டார். ஆகவே தோற்றமில்லாத இறைவன் இயேசுவின் வாயிலாக தம்மை வெளிப்படுத்தி, தம்மால் படைக்கப்பட்ட மக்களை அவர் வாயிலாக மீட்டுக்கொள்கிறார். இயேசு கிறிஸ்துவின் அனைத்து செயல்பாடுகளுக்கும் ஆவியாரின் துணையும் ஈடுபாடும் இருப்பதாகவும், ஆவியாலே இதை செய்கிறார் என இயேசு கிறிஸ்து வெளிப்படையாக குறிப்பிட்டார் (லூக். 4 : 18). இயேசு தம்மை பிரபலப்படுத்தாமல் ஆவியாரை மட்டும் வெளிப்படுத்துகிறார். அவர் வல்ல

செயல்கள் செய்யும் போது "ஆவியில் கலங்கி" அதாவது ஆவியாரின் வேதனையை வெளிப்படுத்தி அற்புதங்கள் செய்கிறார். ஆவியாரின் தோற்றம் இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது.

### *3. தொடர்ந்து செயல்படுகிறவர் :*

தோற்றமில்லாத இறைவன் ஆவியாராக இயேசு கிறிஸ்துவில் செயல்பட்டு ஒதுங்கி விடாமல் தொடர்ந்து செயல்படுகிறார். தொடக்கத்தில் இருந்த ஆவியார், தொடர்ந்து செயல்படுகிறார் என்பது தான் கிறிஸ்தவ நம்பிக்கை. கடவுளின் ஆவியார் படைப்பு துவங்கி வரலாற்றில் செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறார். படைப்பில் செயல்பட்ட ஆவியார், படைப்பை விட்டு ஒதுங்கி விடாமல் படைப்போடு இணைந்து படைப்பைப் பாதுகாத்து வருகிறார். தம்மால் படைக்கப்பட்ட மனிதனும், படைப்புகளும் வீழ்ச்சியுறுவதைக்கண்ட இறைவன் அவைகளை மீட்டுக் கொள்வதற்காக இயேசுவோடு இணைந்து செயல்பட்டு, படைப்பையும் மனிதனையும் மீட்டுக்கொள்கிறார். மனிதனையும், படைப்பையும் மீட்டுக்கொண்ட ஆவியார் அத்தோடு நின்றுவிடாமல் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இவ்வுண்மையை இயேசு கிறிஸ்து தம்முடைய இவ்வுலக வாழ்வின் இறுதிக்கட்டத்தில் தம்முடன் இருந்தவர்களுக்கு எடுத்துக்கூறினார் (யோ. 16 : 1-13). உண்மை ஆவியார் வரும்போது சகல உண்மைகளுக்குள் உங்களை நடத்துவார். இயேசுவின் இந்த கூற்றுப்படி "எதிர் நோக்கியிருக்கும் தூய ஆவியாரின் உண்மை நிலைக்கு நம்மை உட்படுத்தி அவர் நம்மை சகல உண்மைகளுக்கும் வழி நடத்தி செல்வார் என்ற நம்பிக்கையின் ஒளியில் புதிய இஸ்ரவேலராகயிருந்து இறைவனுக்கும், மனிதருக்கும் ஏற்புடையவராக வாழ்ந்து, கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முக்கியப்படுத்தாமல், இறையுண்மைகளுக்கு கீழ்ப்படிந்து இறைத்திட்டத்திற்கு விட்டுக்கொடுத்து, ஆவியாரின் கற்றுத்தருதலை கேட்டு உண்மை கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

"வாரும் தூய ஆவியாரே, எங்களுக்குக் கற்றுதாரும், உம்முடைய வழியில் நடக்க உம் ஆற்றலைத் தாரும்'' என கேட்டுக்கொண்டேயிருப்போம். தூய ஆவியார் நம்மை தூய வழியில் நடத்திச் செல்வார்.

அருள்திரு. E. **ஹென்றிதாஸ்**

**24-05-2015** ***பெந்தக்கோஸ்து விழா***

# தூய ஆவியாரே வாரும், எம்மைப் புத்தாக்கம் செய்யும்

## COME HOLY SPIRIT RENEW US

| | |
|---|---|
| எசேக் 37:1-14 | திப 2:1-13 |
| திபா 104:24-35 | யோவா 16:1-11 |

**"என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள்..."**
**எசேக் 37:14**

***இறைவேண்டல் :** எங்கள் தூய கடவுளே! எங்களை தூய்மைப்படுத்தவும், தெளிவுபடுத்தவும், ஆற்றல்படுத்தவும், வளமைப்படுத்தவும் தூய ஆவியாரை தந்திருக்கிறீர். எங்களில் செயல்படும் தூய ஆவியார் எங்கள் ஆலோசகராகவும், எங்களை ஆற்றுப்படுத்துகிறவரையும், புத்தாக்கம் செய்கிறவராயும் இருந்து, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட நீதிக்கு நாங்கள் சான்றுபகர எங்களை ஆற்றல்படுத்த வேண்டுமென்று உம்மோடு ஒரே ஆவியராய் இணைந்து ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம். ஆமென்.*

படைப்பு (தொநூ 1), தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிறப்பு (விப. 19), இயேசு கிறிஸ்துவின் பிறப்பு (மத். 1:18-25), திருச்சபையின் தோற்றம் (திப. 2:1-11) போன்ற நான்கு நிகழ்வுகளும் திருமறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவைகள் வரலாற்றில் மாற்றத்தைக் கொண்டு வந்தவைகளாகக் காணப்படுகின்றன. இந்த நான்கு நிகழ்வுகளுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. அதாவது, அவைகள் நடைபெற முழுக்காரணமாய் இருந்தவர் தூய ஆவியார் என்பதே அந்த ஒற்றுமை. தூய ஆவியார் தண்ணீர் மீது அசைவாடிய வேளையில், உருவமற்ற வெறுமையான நிலையிலிருந்து படைப்பு வெளிவருவதை தொடக்க நூலில் படிக்கிறோம். சீனாய் மலையில் தூய ஆவியானவரின் பிரசன்னம் பேரிடியாய் முழங்கி (வி.ப. 19 : 6), ஆண்டவர் நெருப்பாய் இறங்கி (வி.ப. 19 : 18) வந்த போதுதான் இஸ்ரவேல் மக்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக மாறினர். அதுமட்டுமல்ல, தெரிவு செய்யப்பட்ட மக்கள் நாடு கடத்தல், போர்கள், அடிமைத்தனம் முதலியவற்றால் செயலற்ற மக்களாக மாறிய வேளையில் இறைவன் தன் தூய ஆவியாரைப் பொழிந்து அவர்களுக்கு புதிய ஆற்றலையும் புதிய வல்லமையையும் அளித்தார் (எசே. 37).

மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளும் எங்கு தூய ஆவியார் இருக்கின்றாரோ அங்கு புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்ற உண்மையை சுட்டிக்காட்டுகின்றன. பெந்தகோஸ்தே நாள் பஸ்காவுக்குப் பின்னால் வரும் 50 -வது நாளைக் குறிக்கும். அந்த நாளை திருச்சபையின் பிறந்த நாள் எனலாம். அந்த ஒரே நாளில் 3000 பேர் சபையில் சேர்ந்தனர். தேங்கி கிடந்த காட்டு வெள்ளம் திறந்து விட்டது போல திருச்சபை திருப்பணி செய்ய விரைந்தது. கோழையான மனிதர்கள் மாற்றம் பெற்று வீரர்களாயினர். திருப்பணி நேரமிருந்தால் செய்யப்படுவது என்னும் நிலை மாறி, திருப்பணியே வாழ்வாக அமைந்தது. நாள் தோறும் அப்பம் பிடுதலிலும், திருத்தூதர் போதனையிலும், கூட்டுறவிலும் உறுதியாய் தரித்திருந்தனர். வாழ்வில் மகிழ்ச்சியைக் கண்டனர். சபைகள் நிறுவ அது உலக சபையாக மாறியது. தூய ஆவியாரை வாழ்வில் செயல்பட அனுமதிக்கின்ற வேளையில் சாவு வீழ்ந்து வாழ்வு உருவாகிறது. பழையவை போய் புதியன உருவாகின்றன. எனவேதான் தாவீது அரசர், ''கடவுளே புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்'' (திபா. 51:10) என்று மன்றாடுகிறார். தூய ஆவியாரை வாழ்வில் செயல்பட அனுமதித்தவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து தியானிப்போம்.

### *1. புதிய அனுபவம் :*

பெந்தகோஸ்தே நாளில் பிரிந்து இருந்தவர்கள் ஒரே சிந்தையோடு கூடி வந்த போது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போலத் தூய ஆவியார் அவர்கள் தங்கியிருந்த வீட்டை நிரப்பினார் (திப. 2:1). கூடியிருந்த மக்கள் தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்ட போது அச்சம் அவர்களை விட்டு மாறியது. வெவ்வேறான மொழிகளில் இறைவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள். இவர்கள் என்ன பேசினார்கள் என்பது வேற்று மொழிகளைப் பேசும் மக்களுக்கு அவர்தம் மொழிகளால் அறியப்பட்டது. இந்நிகழ்ச்சி அவர்தம் வாழ்வில் காணாத புதிய அனுபவமாகும். எனவே எல்லோரும் மலைத்துப்போய் வியந்து நின்றனர் (திப. 2:7). இந்த அனுபவம் இறைமக்களை கற்றுக்கொள்ளுதல், கூட்டுறவு, இறைவேண்டல், தொழுகை, பகிர்தல், ஒருமனம், மகிழ்ச்சி என்னும் உண்மைகளுக்குள் நடத்தியது (திப. 2:42-47). அவர்கள் பெற்ற புதிய அனுபவம் வெறும் வரங்கள் மற்றும் அந்நிய பாஷைகளினால் மட்டும் நின்று விடாமல், உண்மைக் கிறிஸ்தவ பண்புகளினால் வாழ்க்கையை கட்டி எழுப்ப காரணமானது.

தூய ஆவியார் ஒருவரே நம்மைப் தூய்மைப்படுத்தி, புதிய அனுபவத்துக்குள் வழி நடத்தக்கூடியவர். ஒவ்வொரு விசுவாசியையும் திருச்சபைக்குள் நடத்தி, திருச்சபையில் மக்களுடன் பேசுகிறவர். ''ஆவியார் சபைக்குச் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்''

என்பதால் திருச்சபைக்கு தூய ஆவியாரே செய்தியைத் தருகிறார். எந்த மனிதன் தூய ஆவியாரை அசட்டைப் பண்ணுகிறானோ அந்த மனிதன் தூய ஆவியாரின் சத்தத்தைக் கேட்கவும், புதிய அனுபவத்தைப் பெறவும் முடியாது.

## *2. புதிய ஆற்றல் :*

ஆண்டவர் இயேசுவை சிலுவையில் தொங்குகின்றவராகக் கண்ட சீடர்கள் அவரை விட்டுப் பின் வாங்கிச் சென்றனர். இயேசு கிறிஸ்து இறந்து அடக்கம் பண்ணப்பட்டதைக் கண்ட சீடர் பேதுரு "மீன் பிடிக்கப் போகிறேன்'' (யோவா. 21:1-3) என்றார். ''நான் உம்மோடு கூட இறப்பதானாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்'' (மாற். 14:31) என்று வீரவசனம் பேசிய பேதுருவுக்குத் தனக்குத் தேவை இறை நம்பிக்கை மட்டுமல்ல அதை செயலில் காட்டக் கூடியத் தீவிரம் என்பது தெரியவில்லை. தைரியம் இல்லாததால் சாதாரண ஒரு பணிப்பெண் முன் இயேசுவை மறுதலித்தார் (மத். 26:9-25). ஆனால் தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட பின் தலைமைக் குருக்கள், பரிசேயர்கள் முன்னிலையில் ''நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள், என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எங்களால் எடுத்துரைக்காமல் இருக்க இயலாது" (தி.ப. 4:20) எனத் தீர்க்கமாய்ச் சொல்லியதோடு உரோமை நகர் வரை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொண்டு சென்றதாக மரபு கூறுகிறது.

தூய ஆவியார் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள், சாட்சிகளாய் இருப்பீர்கள் உலகெங்கும் நற்செய்தியை அறிவிப்பீர்கள் (திப. 1:8) என்ற இறைவனின் வாக்கு இன்றும் இறைமக்களுக்கு இறை ஆற்றலைக் கொடுத்து சான்றாக நிற்க உதவிச் செய்கிறது. ஆண்டவரின் ஆவி, ஞானம், மெய்யுணர்வு, அறிவுத்திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப் பற்றிய அச்ச உணர்வு இவற்றைத் தரும் என இறைவாக்கினர் கூறுகிறார் (எசா. 11:2). கிரகாம் ஸ்டெயின்ஸ் என்ற ஆஸ்திரேலியப் பணியாளரும் பிள்ளைகளும் எரித்துக் கொல்லப்பட்ட பின்னும் அவரது மனைவி இன்னும் இந்தியாவை விட்டு ஓடாமல் பணி செய்வது தூய ஆவியாரின் பெலன்தானே! தூய ஆவியாருக்கு வாழ்வில் இடம் கொடுத்தால் புதுபெலன் பெற்று நற்சாட்சிகளாய் வாழமுடியும்.

## *3. புதிய பார்வை :*

யூத மக்கள் தங்களை மீட்க வரும் மேசியாவை ஒரு அரச மரபு நிறைந்த கடவுளாய் எதிர்பார்த்தனர். ஆனால் இயேசுதான் மேசியா எனவும், மேசியாவின் குணநலன்களாகப் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவை அனைத்தும் இயேசு நாதரில் நிறைவேறியது என்றும்

எவரும் நம்பவில்லை. ஏன்? சீடர்கள் கூட நம்பவில்லை (யோவா. 14: 8-9). சிலுவை மரணமும் இயேசு நாதருக்குரியது அல்ல என எண்ணினர். ஏனென்றால், இயேசு நாதரைக் குறித்த திருவசனங்களிலும் தீர்க்க தரிசனங்களிலும் சீடர்களுக்குத் தெளிவு ஏற்படவில்லை. ஆகவேதான் எம்மாவு ஊருக்குச் சென்ற சீடர்களோடு நடந்து சென்ற ஆவியார், அவர்கள் இயேசு கிறிஸ்துவை உணராத நிலையைக் கண்டு "இறைவாக்கினர் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே'' என சீடர்களைக் கூறுகிறார். மந்த இருதயமுள்ளவர்களாய்க் காணப்பட்ட சீடர்களுக்கு திருவசனங்களைக் கூறித் தெளிவுப்படுத்துகிறார் (லூக். 24:26). திருவசனங்களில் தேறினவர்களிடம் அருட்பணியினை தொடரவும் வலியுறுத்துகிறார்.

செபதேயுவின் மனைவி தன் மக்கள் யாக்கோபுக்கும், யோவானுக்கும் ஆட்சிபீடம் கிடைக்க பரிந்துரை செய்கிறார் (மாற். 10: 35-40). ஆனால் உண்மையான தேவை இயேசு பருகிய கிண்ணத்தில் பருகுவது என இயேசு சொல்லி விளக்கிய போது, தூய ஆவியாரது துணையால் புதிய பார்வை பெற்றனர். அதன் விளைவால் யாக்கோபு இயேசுவுக்காக முதலில் தன் உயிரைக் கொடுக்கும் பேற்றினைப் பெறுகிறார். யோவானோ நான்காம் நற்செய்தியை எழுதிவிட்டு திருத்தூதர்களில் கடைசியாக இறக்கும் வாய்ப்பைப் பெற்றார். இவ்வாறு அதிகார இருக்கைகளன்று இயேசு கிறிஸ்துவுக்காய் சான்று பகரும் வாழ்க்கை முறைகளே தேவை என்பதனைத் தூய ஆவியாரின் அருளால் இவர்கள் உணர்ந்தார்கள்.

தூய ஆவியார் கிரியைகளினால் அல்ல கிருபையினால் மட்டுமே அருளப்படுகிறார். மனிதனின் புறச்செயல்கள், உளநிலைகள், கடவுள் நமக்கு அருளும் கொடைகள் இவற்றின் வழியாக ( 1 கொரி. 2:12) 'ஒரு நபர்' என நம்மில் உள்ளுறைகிறார், நம்மில் சான்று பகர்கிறார், பரிந்து பேசி இறைவேண்டல் செய்கிறார் (உரே. 8:26), நம் உள்ளத்தோடு தம்மையே ஒன்றிக்கிறார் (8:16). அவர்தான் தூய ஆவியார். அவரை நம் வாழ்வில் செயல்பட அனுமதிப்பதும், ஆவியரின் ஆசிகளைச் சுதந்தரித்துக் கொள்வதும் நம் கையில்தான் உள்ளது. எப்படியெனில் தூய ஆவியார் இறையடியவர்களிடம் செயல்பட்டபோது அவர்கள் அனைவரும் தூய ஆவியாரை செயல்பட அனுமதித்ததோடு நில்லாமல் அவருக்கு முழுமனதோடு ஒத்துழைப்பு வழங்கினார்கள். பாவத்தின் வழி சாரமற்றுப்போன நம் வாழ்வு புதுப்பிக்கப்பட தூய ஆவியாரை வாழ்வில் செயல்பட அனுமதிப்போம். உலர்ந்த எலும்புகளைக் கண்ட எசேக்கியேல் அந்த எலும்புகள் ஆவியினால் உயிர் பெற்றதைக் கண்டு புத்தாக்கம் பெற்றது போல (எசே. 37:1-10) புத்தாக்கம் பெறுவோம்.

அருள்திரு. **P. ராஜா ஜெயசிங்**

# கடவுளின் அருட்பணியே நமது திருக்காட்சி

## GOD'S MISSION IS OUR VISION

திருமறைப்பாடம் : 2கொரி 6:1-10

**"இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!"** 2கொரி 6:2

எங்கே மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ, துன்புறுத்தப் படுகிறார்களோ, நாகரீகமற்றவர்களாக காணப்படுகிறார்களோ, உதாசீனப்படுத்தப் படுகிறார்களோ, அப்போது கடல் கடந்து, தேசங்கள் தீவுகள் கடந்து இம்மக்களைக் குறித்த பாரத்தை கடவுள் அவரால் அறியப்பட்டவர்களுக்கு கொடுக்கிறார். அதன் மூலம் அருட்பணி இயக்கங்கள் உருவாகி பூமியின் கடையாந்திரங்களில் இருக்கும் மனிதனுக்கும் நற்செய்தியை எடுத்துரைத்து அடிமைச் சங்கிலிகள் தகர்க்கப்படுகின்றன. அவ்வரிசையில் ஏற்பட்டதுதான் திருமதி. பிராண்ட் அம்மையாரின் வட தமிழக மலைகளின் திருப்பணிகள். அத்திருப்பணி இன்று கன்னியாகுமரிப் பேராயத்தின் கீழ் 'அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு' என்ற பெயரில் நடைபெற்று வளர்ந்து வருவது சிறப்பு. இது கடவுளின் அருட்பணி. இந்த அருட்பணி நமது திருக்காட்சியாக வெளிப்பட வேண்டும். எனவே இந்த D.M.P.B. நாள் எப்படிபட்ட நாளாக இருக்க வேண்டும் என்பதை தியானிப்போம்.

### *1. நினைவு கூர வேண்டிய திருநாள் :*

எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுத்து கானானை வந்தடைந்த மக்களுக்கு, இளைய சமுதாயத்தினருக்கு அதை நினைவு படுத்த வேண்டுமென்று கடவுள் அறிவுறுத்துகின்றார். இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின் சந்ததியார் அதை அறிந்து கொண்டு அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளை சொல்லும் படிக்கு கர்த்தர் விரும்புகிறார் (திபா. 78:6). அநேக தினங்களை கொண்டாடுகின்ற நாம் நமது DMPB -இன் தினத்தையும் நினைந்து கொண்டாட கடமைப்பட்டிருக்கிறோம்.

நாமும் அடிமைப்பட்டிருந்தோம், அறியாமையில் மூழ்கியிருந்தோம். அருள்திரு. றிங்கல் தௌபே போன்றவர்களால்

ஒளிபெற்றோம், வாழ்வு பெற்றோம். நமக்கு வாழ்வு கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக நாம் திருப்பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். இந்நாளில் இதற்கு காரணமாய் அமைந்தவர்களை, முன்னோடி அருட்பணியாளர்களை, திருப்பணிபயணத்தில் இன்னுயிர் ஈந்தவர்களை, ஊக்குவித்த பேராயர்களை, வழிநடத்திய போதகர்களை, கொடுத்தவர்களை, ஜெபித்தவர்களை நாம் நினைவு கூர வேண்டும். D.M.P.B. திருப்பணியினால் நாங்கள் வாழ்வு பெற்றோம், ஒளிபெற்றோம் என்று சான்று பகரும் மக்கள் கூட்டம் பெருக நமது ஜெபக்குழுவை தந்த இறைவனை நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆண்டவருக்கு நன்றிச்சொல்லி இறை ஆசி பெறுவோம்.

## 2. நினைவு கூர்ந்து செயல்பட வேண்டிய திருநாள் :

நினைவு கூர்வது மட்டுமல்ல செயல்பட நம்மை தூண்ட வேண்டிய, அர்ப்பணிக்க வேண்டிய நாளும் இதுவாகும். யோபு. 4:20 -ல் சொல்லப்பட்டது போல "காலை முதல் மாலை வரைக்கும் மடிந்து கவனிப்பார் ஒருவருமில்லாமல் நித்திய அழிவடைகிறார்கள்" இப்படிப்பட்ட நிலையில் கடவுளை அறியாமல் சாகும் ஆத்துமாக்களுக்காக 'போ.. ஜெபி.. அனுப்பு.. என்ற அழைப்பை நாம் நமதாக்கிக் கொள்வோம்'.

கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை, ஆந்திரா, ஒடிசா, சத்தீஸ்கர் என நமது தூரப்பார்வைகள் வளர்ந்து கோண்டே செல்கின்றன. தாங்குவதற்கு சபைகள் உண்டு, ஜெபிப்பதற்கும் ஜெபக்குழுக்கள் உண்டு. ஆனால் விரைவுடன் செயல்பட செயல் வீரர்களுக்கு பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நாம் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டிய நேரமிது.

இந்த நாள் நற்செய்தி அறிவிக்கின்ற நாள் (2அர. 7:9) நீ இந்த காலத்தில் மௌனமாயிருந்தால் (எஸ். 4:14) இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள் (2கொரி. 6 : 2). இவ்வசனங்களை அடிக்கடி நினைவு படுத்திக்கொள்வதோடு அறுப்புக்கு எஜமான் வேலையாட்களை அனுப்பும்படி அவரிடம் வேண்டிக்கொள்வோம்.

D.M.P.B. ஆண்டவர் நமக்குத் தந்த அருட்பணி, வாய்ப்புகள் நிறைந்த திருப்பணி, சோர்ந்து போகாமல், துவண்டு போகாமல், அசதியாய் இராமல், பின்வாங்கிப் போகாமல் இறைவனின் நற்செய்திப் பணியை நமது தரிசனமாகக்கொண்டு செயல்படுவோம். இறை நாமம் ஓங்கட்டும்.

அருள்திரு. R. **சார்லஸ்**
D.M.P.B.

**31-05-2015** *திரித்துவ ஞாயிறு*

# மூவொரு கடவுளையே நாம் தொழுகிறோம்

## WE WORSHIP THE TRIUNE GOD

தொநூ 1:1-28 2கொரி 13:11-14

திபா 2 யோவா 1:1-18

**“ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக”** 2கொரி 13:14

***இறைவேண்டல் : அன்பின் கடவுளே! உம் வளமை, அறிவு, நுட்பம் எத்தனை பெரியது! உமது நடுத்தீர்ப்புகளும் உமது வழிகளும் ஆராய்ந்து அறிய முடியாதவைகள். உம்மை நீர் அறிவாளிகளுக்கு வெளிப்படுத்தாமல் உம் பிள்ளைகளாம் எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளீர். மூவொரு கடவுளாக வெளிப்பட்ட உம்மை சார்ந்து உம்மிலே நம்பிக்கை கொண்டு மகிழ்வுடன் உம் மாட்சியை வெளிப்படுத்த அருள்தாரும். மூவொரு கடவுளாகிய உம்மை உண்மையுடன் தொழுதிட உம் அருளைத் தர வேண்டுமென்று மூவரில் ஒருவராம் உம் திருமைந்தர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.***

தொழுகை கிறிஸ்தவ வாழ்வில் முக்கியமானது. தொழுகையின் வழியாக நாம் கடவுளோடு இணைகிறோம், கடவுளின் ஆசிகளுக்காய் நன்றி கூறுகிறோம். நமது தொழுகைகள் மூவொரு கடவுளின் தன்மையினை வெளிப்படுத்துகின்றன. உற்சாகத்தோடும், உண்மையோடும் நாம் வழிபடும் திரித்துவ கடவுளின் தன்மையினையும் செயல்பாட்டினையும், தொழுவதினால் கிடைக்கும் நன்மைகளையும் புரிந்து கொள்வது மிகவும் கடினமானது. திரித்துவம் என்பது கடவுள் மூவரில் ஒருவராக, மூன்று தன்மையில் செயல்படும் இறைவன் என்பது திருமறை உண்மை. திரித்துவம் என்னும் வார்த்தை திருமறையில் இல்லாவிட்டாலும், திரித்துவம் எனும் கருத்து (concept) திருமறையில் ஆழமாக உள்ளது. நமது தொழுகை, நமது பாடல்கள், நமது இறைவேண்டல்களில் திரித்துவக் கோட்பாடு வெளிப்படுகிறது. திரித்துவத்தை புரிந்து கொள்ளும் போது கடவுளின் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால, செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். திரித்துவம் (Trinity) எனும் வார்த்தையினை தொர்த்துலியன் எனும் திருச்சபை தந்தை முதன்முதலில் வடிவமைத்தார். அந்தியோக்கியாவை சார்ந்த தியோப்பிலாஸ் என்பவர் தனது போதனையிலும், எழுத்திலும் முதன்முதலில் பயன்படுத்தினார். இந்த திரித்துவக் கடவுளை நாம் எதற்காகத் தொழுகிறோம் என்பதை சிந்திப்பது சிறப்பானது.

### *1. நம்மை படைத்த மூவொரு கடவுள் :* (தொநூ 1:26)

"அப்பொழுது கடவுள், மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்..."

படைப்பில் கடவுளின் மும்மை தன்மை வெளிப்படுவதை இங்கே புரிந்து கொள்ள முடிகிறது. இவ்வசனத்தில் கடவுள் "என்" உருவிலும் "என்" சாயலிலும் என பயன்படுத்தாமல் ''நம்'' உரு, ''நம்'' சாயல் எனப் பயன்படுத்துகிறார். தமது பன்மை நிலையினையே இங்கே கடவுள் வெளிப்படுத்துகிறார். நாம் ஏன் திரித்துவ கடவுளை தொழுகிறோம் என்றால், அவர் நம் அனைவரையும் படைத்தவர் என்பதே காரணம். கடவுள் படைப்புகள் அனைத்தையும் தமது வார்த்தையினாலேப் படைத்தார். ஆனால், மனுக்குலத்தை படைத்தபோது தமது வார்த்தைக்கும் மேலாக தமது செயல்பாட்டின் வழியாகவே படைத்தார். மனிதர் கடவுளால், அவரது உருவிலும், அவரது சாயலிலும் படைக்கப்பட்டதினால் படைப்பில் சிறப்பைப் பெறுகின்றனர். ஆகவே மனிதனால் கடவுளின் தன்மைகள், கடவுளின் செயல்பாடுகள் வெளிப்பட வேண்டும். அதோடு நமது தொழுகைகள் நம்மை படைத்த கடவுளின் புகழினைப் போற்றுவதாய் அமைதல் வேண்டும்.

இன்றைய தொழுகைகளில் படைப்பாளரை முக்கியப்படுத்தாமல் தொழுகை நடத்துகிறவர்களை முதன்மைபடுத்தும் நிலை உள்ளது. தொழுகைக்குரியவர் இறைவன் ஒருவரே. அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும் (யோவா. 4:24). அதோடு, ''ஆண்டவரின் பெயரைப் புகழுங்கள்; ஆண்டவரின் கோவிலுள் நிற்பவர்களே! நம் கடவுளின் கோவில் முற்றங்களில் உள்ளவர்களே! ஆண்டவரைப் புகழுங்கள்'' (திபா. 135:1-3) எனத் திருமறை கூறுகிறது. ஆகவே, நமது தொழுகைகள் தனிநபர் புகழ் போற்றுவதாய் அமையாமல், நமது சுயத்தன்மை வெளிப்படுவதாய் அமையாமல் நம்மைப் படைத்த மூவொரு கடவுளை முதன்மைப்படுத்துவதாய் அமைதல் வேண்டும். இயேசு கிறிஸ்து சமாரியப் பெண்ணிடம் குறிப்பிட்டது போன்று நாம் யாரை வழிபடுகிறோம் என்பதை அறிந்து வழிபடுதல் நமது தொழுகைக்கு மெருகூட்டும், நாமும் நன்மை பெற முடியும்.

### *2. நம்மில் குடி கொள்ளும் மூவொரு கடவுள் :* (யோவா 1:14)

"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து....... மாட்சியைப் பெற்றிருந்தார்."

கடவுள் தமது வார்த்தையினால் உலகினைப் படைத்தார். அப்படைப்போடு கடவுளின் செயல் நிறைவுற்றதாக திருமறையில் சொல்லப்படவில்லை. கடவுள் தொடர்ந்து செயல்படுகின்றவராகவே இருக்கிறார், யோவான் 1 : 1-18 வரையுள்ள பகுதியில் வார்த்தையாய் படைப்பிலே செயல்பட்ட கடவுள், அதாவது, தொடக்கத்தில் கடவுளோடும், கடவுளாகவும் இருந்த வார்த்தை (யோவா. 1:12), வாழ்வாகவும் மனிதருக்கு ஒளியாகவும் இருந்த வார்த்தை (யோவா. 1:4) மனிதரானார்; மனிதரிடையே குடிகொண்டார். அதாவது, மூவொரு கடவுளாகிய ஆண்டவர் மானிட மகனாய் மனிதரில் வாழ்கிறார். இதுதான் கிறிஸ்து பிறப்பு. ஆகவே மூவொரு கடவுள், தமது உருவிலும், தமது சாயலிலும் படைக்கப்பட்ட மனிதரில் குடிகொள்கிறார் அல்லது வாழ்கிறார். எனவே, அவரை நாம் தொழ வேண்டும். நம்மிலே குடிகொள்ளும் மூவொருவர் அருளும், உண்மையும் நிறைந்தவர் (யோவா. 1:14); நம் வழியாக அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி (யோவா. 1:9). ஆனால், மனிதரில் குடிகொள்ளும் அவரை உலகு அறிந்து கொள்ளவில்லை (யோவா. 1:10). காரணம், கடவுள் குடிகொள்ளும் நம்மிலும், நமது வாழ்விலும் வழிபாட்டிலும் கடவுளின் தன்மை வெளிப்படவில்லை. அதோடு அவர் அவருக்குரிய நம்மிடமே வாழ்ந்தார், அவருக்குரிய நாமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவா. 1:11). ஆகவே, நமது வழிபாடுகள் பயனற்றவைகளாக மாறிவிட்டது. அவரிடம் நம்பிக்கை கொண்டு, அவரை ஏற்றுக்கொண்டு. அவரது பிள்ளைகள் எனும் உரிமையினைப் பெற்றவர்களாகிய நாம் அனைவரும் (யோவா. 1:12) கடவுளின் அருளையும் அவரது உண்மையினையும் நம் வாழ்வின் வழியாக வெளிப்படுத்துவது என்பது உண்மையோடும் உற்சாகத்தோடும் அவரை வழிபடுவதாகும். கடவுள் நமது உண்மை நிலையினையே விரும்புகிறார். ஆகவே நம்மோடு வாழ்கிறவர்கள் நம்மிலே குடிகொள்ளும் கடவுளைக் ஏற்றிட நமது வழிபாடுகள் வாழ்வாக அமைவது சிறப்பானது,

### 3. நம்மில் தொடர்ந்திருக்கும் மூவொரு கடவுள் :

**(2கொரி 13:13)**

“ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.”

மூவொரு கடவுளின் செயல்பாடு முடிந்துவிட்ட செயல்பாடல்ல, தொடர்ந்திருக்கும் செயல்பாடாகும். அவரை நம்மோடு எப்போதும்

இருப்பவராகப் புரிந்துகொள்ள வேண்டும். நம்மைப் படைத்தவர், நம்மிலே குடிகொள்கிறவர், எப்போதுமே நம்மோடு இருக்கிறார். நம்மோடு இருக்கிறவர் அன்பும், அமைதியும் என்றுமே அளிக்கின்றவர் (2கொரி. 13:11). ஏன் நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம் என்றால் அவர் அன்பும் அமைதியும் உடையவராய் நம்மோடிருந்து நாமும் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற நம்மை அழைக்கிறார் என்பது உண்மை. மூவொரு கடவுளை வழிபடும் ஒவ்வொரு வழிபாட்டின் நிறைவிலும் மூவொரு கடவுளின் பெயரிலே இறைவாழ்த்து அல்லது இறையாசி கொடுக்கப்படுகிறது. நமது வழிபாடுகளில் கடவுளின் இருப்பு நிலையினை மும்மை நிலையில் நாம் உணர்கிறோம் என்பது தான் இதன் பொருளாக உள்ளது. இவ்வுலகில் அவரது சாயலிலும், உருவிலும் படைக்கப்பட்டு அவரை வழிபடுகின்ற இறைமக்கள் அனைவரும் அவர் நம்மிடம் எதிர்பார்க்கின்ற அன்பு, அமைதி ஆகியவற்றை நமது அன்றாட வாழ்வின் வழியாக வெளிப்படுத்த வேண்டும்.

தூய பவுலார் பல்வேறு விதமான பிரிவினைச் சூழலோடு கடவுளை வழிபட்டு வந்த கொரிந்து திருச்சபையார் (1கொரி. 1:10-17) அன்பும் அமைதியும் உடையவராய், இறை நம்பிக்கையோடு இவ்வுலகில் வாழ வலியுறுத்துகிறார். ஏனெனில், கொரிந்து திருச்சபையார் கிறிஸ்துவின் ஆற்றலை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே தூய பவுலார் “கிறிஸ்து உங்களிடையே என்னைப் போல வலுவற்றவராக இல்லை ; மாறாக அவர் வல்லமையோடு செயல்படுகிறார். ஏனென்றால் அவர் வலுவற்றவராய் சிலுவையில் அறைப்பட்டார். ஆனால் கடவுளின் வல்லமையினால் அவர் உயிர் வாழ்கிறார்’’ என நம்மோடு தொடர்ந்திருக்கும் கிறிஸ்துவின் தன்மையினைக் குறிப்பிடுகின்றார். கடவுள் நம்மோடு தொடர்ந்திருக்கும் நிலையில் நாம் எப்படியிருக்கிறோம் ? நாம் அவரோடிருக்கிறோமா? நாம் கிறிஸ்துவோடு இணைந்திருந்தால் மட்டுமே கனிகொடுக்க முடியும். கொடி, திராட்சை செடியோடு இணைந்திருந்தாலன்றி தானாக கனிதர முடியாது (யோவா. 15:4). ஆகவே நாமும் அன்பு, அமைதி போன்ற நற்கனிகளை உலகிலே தரவேண்டுமென்றால் நம்மோடிருக்கும் மூவொரு கடவுளோடு நாமும் இணைந்திருக்க வேண்டும். அவரை முழுவதுமாக நம்பி வாழவேண்டும். நம்மிலே இயசே கிறிஸ்து செயலாற்றுகிறார் என்பதை எல்லா நிலையிலும் உணர்ந்திட வேண்டும் (2கொரி. 13 : 5,6). மூவொரு கடவுளை உண்மையோடும் உற்சாகத்தோடும் உலகிலேயே தொழுது வாழ

அழைக்கப்பட்ட அனைவரும் அவரே படைப்பாளர், நம்மிலே குடிகொள்கிறவர், நம்மோடு தொடர்ந்து செயல்படுகிறவர் எனும் நிலையில் கடவுளின் தன்மையினை புரிந்து நம்பிக்கையோடு வாழ்வது மட்டுமல்லாது, அவரை நம்மோடு வாழும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளவும், நம்மோடிணைந்து அவரை வழிபடுவதற்கும் ஏற்ற நிலையில் கடவுளை வழிபடுவதினால் கிடைக்கும் மகிழ்வில் நிலைத்திருப்போம், நமது நடத்தையினை சீர்படுத்தி, கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்வோம் (2கொரி. 13 :11). மட்டுமல்லாது, இந்நிலையில் கடவுளை வழிபடுவதினால் கடவுள் அருளுகின்ற அன்பும் அமைதியும் பெற்று இறையவரோடு இணைந்து வாழ்ந்து மகிழ்வோம். அன்பும். அமைதியும். நட்புறவும், அருளும் வழங்கும் மூவொரு கடவுள் நம்மோடு இருப்பராக, ஆமென்.

அருள்திரு . A. **மகேர்ஷால் அஸ்பாஸ்**

# கவலை வேண்டாம்

திருமறைப்பாடம் : மத் 6:25-34

**"எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள்"** மத் 6:31

வாய் பேச இயலாத இருவர். பெற்றோர்களின் முன் ஏற்பாட்டின் படி திருமணம் செய்து மிக சந்தோஷமாய் வாழ்ந்தனர். வாய் பேச இயலவில்லை என்றாலும் அன்புக்குக் குறைவில்லை. இருவரும் ஒருவரையொருவர் அதிகமதிகமாய் அன்பு கூர்ந்தனர். அன்பின் அடையாளமாய் ஒரு குழந்தையும் பிறந்தது. இதுவரை மிகவும் அன்பு செய்த கணவர் மெதுமெதுவாய் மனைவியை நேசிப்பதை, உடன் பேசுவதைக் குறைக்கத் துவங்கினார். வீட்டில் தன்னோடு பேசும் மொழி தன் கணவனுக்கு மட்டுமே (வாய் பேசாத மொழி) தெரியும். அந்தக் கணவனும் தன்னிடம் பேசாமல் தன்னை வெறுப்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அதுவே கவலையானது. . . . ஒருநாள் ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்து விடுகிறாள். அக்கடிதத்தில் தான் அன்புக்காய் ஏங்குவதாய்க் கூறினாலும் கடைசியில் இரண்டு வரிகள் உள்ளதை அசைத்த வரிகள் "அன்பு தோற்றது" "கவலை ஜெயித்தது". ஒரு மனிதனில் கவலை குடிகொண்டு கவலை வெற்றி கொண்டால் வாழ்க்கை பழுதாகிவிடும். எனவே நம்மீது பரிவு கொண்ட ஆண்டவர் கவலைப்படாதீர்கள் என அறிவுரை தருகிறார்.

ஒவ்வொரு மனிதனையும் கவலை வாட்டி வதைக்கின்றது. கவலை இல்லாத மனிதர்களே இல்லை. மனிதர்களிடம் இல்லாத கவலையும் இல்லை. இன்று கவலைகள் மனிதனை ஆண்டுகொண்டிருக்கின்றன. கையளவே உள்ள இதயத்தில் கடலளவு கவலைகள். மிக வலிமையானவர்களை கூட வலிமையற்றவர்களாய் மாற்றிவிடும் இக்கவலை நம்மையும் விடவில்லை. நாமும் இக்கவலையைச் சுமந்துக் கொண்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து நம் அருகில் இருந்தும் சீஷர்களைப் போன்று கவலைப்படுகிறோம். (மாற். 4 : 38) நகோமியைப் போன்று வாழ்வைக் கசப்பாய் நினைக்கிறோம். ஆனால் கவலையானது

நமக்கு பெரும் ஆபத்தை உருவாக்கும் என்பதை மறந்து விடக் கூடாது. கவலை நம் வாழ்வின் முற்றுப்புள்ளி இடும் ஆயுதம் என்பதனை நினைவில் வைத்துள்ளோமா? எனவே ஆண்டவர் இயேசு எதைப் பற்றி கவலைப்படாதீர்கள் என்று நம்மை ஆற்றல்படுத்துகிறார் என்பதைத் தியானிப்போம்.

### 1) ஏன் கவலைப்படக்கூடாது ?

கவலை என்பது ஒரு மரணவலை. அந்த (க) வலையில் சிக்குபவர்கள் அதற்கு ஈடாக உயிரைத்தான் கொடுக்க வேண்டும். பொதுவாக, கவலை ஒரு மனிதனை நெருக்கினால் முதலாவது தாக்குவது உடலில் செரிமான பகுதியைத் தான். கவலை கொண்டோர்கள் எந்த உணவை உண்டாலும் செரிமானம் ஆகாது. எனவே தான் கவலை கொண்டோரால் சாப்பிட உற்சாகம் காட்ட முடியவில்லை. இதனை மருத்தவ ரீதியாகவும் நிரூபித்துள்ளனர். ஓர் ஆராய்ச்சியாளர் ஒரு பூனையைப் பிடித்து கட்டிப்போட்டு நல்ல உணவுகளைக் கொடுத்தார். அப்பொழுது அதன் செரிமான உறுப்பை ஸ்கேன் மூலம் பதிவு செய்தார். சாப்பிட்டாலும் செரிமானத்திற்கான அமிலம் சுறுசுறுப்பாய் இயங்குவதை உறுதி செய்தார். இப்படி பலநாள் செய்தார். பூனை நன்கு கொழு கொழு என்று வளர்ந்தது. அதே பூனையை அதற்கு பின் ஒரு பெரிய நாயை அருகில் கட்டி வைத்துவிட்டு வழக்கமாய் கொடுக்கும் நல்ல தரமான உணவைக் கொடுத்து ஸ்கேன் மூலம் பதிவு செய்தார். இப்போது உள்ளே சென்ற உணவு ஜீரணிக்காமல் அப்படியே இருந்தது. காரணம் அருகில் நாய் இருந்ததினால் அந்த பயம் நிறைந்த கவலையினால் உணவை உட்கொண்டது. ஆனால் உணவைச் செரிமானம் செய்யும் அமிலமோ சுரக்கவில்லை என்பதனை ஸ்கேன் மூலம் உறுதிசெய்தார். செரிமானம் ஆகாததினால் அந்த உணவே விஷமாய் மாறுகிறது. இன்று இதே நிலை மனிதனுக்கும் உண்டு. எப்பொழுது ஒரு மனிதன் கவலை கொள்கிறானோ அப்பொழுது அவனது செரிமான உறுப்பு வேலை செய்யாது. இது பல பக்க விளைவுகளை உருவாக்குகிறது. எனவே நம் மீது அக்கறை கொண்ட இயேசுகிறிஸ்து கவலைப்படாதீர்கள் என அறிவுறுத்துகிறார்.

அ) திருமறை கவலையானது இருதயத்தை (நீதி. 12 : 25) ஒடுக்கும் என நம்மை எச்சரிக்கின்றது. அதைப் போன்று மருத்துவர்களும் இருதய நோய் கொண்டவர்களைக் கவலைப்படாதிருங்கள் என்று அறிவுறுத்துகிறார்கள். அமெரிக்காவில் மாரடைப்பானது அதிகமாக

திங்கள்கிழமை வருவதாக ஆய்வில் கண்டறிந்துள்ளனர். காரணம் ஞாயிற்றுக்கிழமை உற்சாகமாய் இருந்துவிட்டு திங்கள் கிழமை வேலைக்கு செல்ல வேண்டும் என்ற கவலை.

(ஆ) தமிழ் இலக்கியங்களில் கவலை என்பதற்கு ஏற்றம் என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஏற்றம் என்பது கிணற்றில் இருந்த தண்ணீரை வெளியேற்றும் குவளை (நீர் கமலை) போன்றது. இந்த ஏற்றத்தின் வேலை தண்ணீர் நிறைந்த கிணற்றில் தண்ணீரை வெளியேற்றி காலிசெய்வது. இதைப் போன்றுதான் கவலை என்ற ஏற்றம் ஒரு மனிதனுக்குள் வந்ததும் அவனுக்குள் இருந்த உயிரை வெளியேற்றி அவனை காலி செய்கிறது. எனவே நாம் வாழ வேண்டும் என்பதற்காய் ஆண்டவர் நம்மை கவலைப்படக்கூடாது என்கிறார்.

(இ) ஆங்கில இலக்கியங்களில் கவலையை Driver Ants என்ற பயங்கரமான ஆப்பிரிக்க எறும்புகளுக்கு ஒப்பிடுவார்கள். இவை பல்லாயிரக்கணக்கில் இணைந்து படையெடுத்துவரும் வழியில் எவ்வளவு பெரிய மிருகமானாலும் சில மணித்துளிகளில் தின்று தீர்த்துவிடும். ஒரு பெரிய யானையைக் கூட மூன்று மணி நேரத்தில் தின்று விடும் என்றால் Driver Ants எவ்வளவு கொடியது அல்லவா! அதைப் போன்று கொடியது கவலை. நம் கவலையை விட்டுவிடுவோம்.

### *2) கவலையான தருணங்களில் நாம் செய்ய வேண்டியது என்ன ?*

இன்றைய திருமறைப்பகுதியில் இரண்டு படைப்புகளைக் கவனித்து பார்க்க இயேசுகிறிஸ்து சொல்கிறார் (1) பறவைகளை (மத். 6:26) (2) காட்டு மலர்ச் செடி (மத். 6:28) காட்டு மலர்ச் செடி எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். காட்டு மலர்ச் செடியானது எந்த இடத்திலும் வளரும் எந்த இடத்திலும் மன ரம்மியமாய் பூத்துக் குலுங்கும். அது குப்பைமேடாய் இருக்கட்டும் மண்மேடாய் இருக்கட்டும் வெயிலாகட்டும் குளிராகட்டும் எந்த நிலையிலும் காட்டு மலர்ச் செடியை ஒன்றும் செய்யாது. யார் அருகில் சென்றாலும் அது தம் கடமையை செவ்வனே நிறைவேற்றி எல்லாருக்கும் மணம் தரும். அந்தக் காட்டு மலர்ச் செடியைப் பார்த்து நம்மை கற்றுக்கொள்ள சொல்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காட்டு மலர்ச் செடியைப் போன்று எந்த இடத்தில் இருந்தாலும் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் மன மகிழ்வாய் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். எதிர்பார்ப்பும் ஆசையும் விரிவடையும் போது

கவலையும் விரிவடைகிறது. கவலையான தருணங்களில் காட்டு மலர்ச் செடி நமக்குக் காட்டும் வழியை மறந்து விடாதிருக்க திருமறை தரும் சில ஆலோசனைகள்.

1) எசாயா 43 : 18  முந்தினவைகளை நினைக்க வேண்டாம்

(2) 1பேதுரு 5 : 7 கவலைகளை ஆண்டவரிடம் வைக்க வேண்டும்

பொதுவாக நடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல், இல்லாததைப் பற்றி ஏங்காமல், நடந்ததை இறைச் சித்தமாய் ஏற்று அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து வாழ்வது கவலையை விரட்ட எளிமையான வழி.

கவலைகள் சிறு கடுகு போன்றது. நமது கண்ணின் அருகில் வைத்து பார்த்தால் மிகப் பெரியதாய் தெரியும். அதே கடுகை மிகத் தூரமாய் வைத்துப் பார்த்தால் , சிறியதாய், ஏன் தெரியாமல் கூட போகும். கவலையும் அப்படியே. நாம் நம்மை காப்பாற்றிக்கொள்ள அதைத் தள்ளி வையுங்கள். அருகில் வைத்தால் அது பெரியதாய்த் தோன்றும். அதுவே வாழ்வின் தடையாய் இருக்கும். எனவே இயேசுகிறிஸ்து சொல்வதைப் போல் கவலையடையாமல் வாழ்வோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**02-06-2015** *கன்னியாகுமரிப் பேராய நாள்*

# மகிழ்ந்து கொண்டாடுவோம்

## BE GLAD AND CELEBRATE

இச 15 : 1-15 லூக் 3 : 1-11
திபா 136 1கொரி 1 : 5-18

**"தாழ்வுற்றிருந்த நம்மை நினைவு கூர்ந்தவர்க்கு நன்றி செலுத்துங்கள்"**
**திபா 136:23**

நமது கன்னியாகுமரிப் பேராயம் இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடை. இருள் சூழ்ந்து, நாகரிகமற்று, கல்வியறிவற்று, மருத்துவ வசதியின்றி இருந்த நம் மாவட்டத்தில் நற்செய்தியாம் இறை ஒளியை உதிக்கச்செய்து, இருளகற்றி, ஒளியேற்றி, நாகரிகம், கல்வி, மருத்துவம், பல்வேறு வேலைவாய்ப்புகளைத் தந்து இறைவனைத் தொழுது கொள்ள திருச்சபைகளைத் தந்து, வாழ்வித்த இறை அடியார்களின் ஒப்படைப்பு வாழ்விற்காக இறைவனுக்கு நன்றிச் சொல்லி, கடவுள் நமக்குத் தந்த பேராயத்திற்காக இறைவனைப் போற்றி இறை ஆசி பெற்றிட இந்நாள் நம்மை அழைக்கின்றது. இந் நன்னாள் நாம் கொண்டாடி மகிழ்கின்ற நாள். பேராய நாளை நாம் எப்படி மகிழ்ந்து கொண்டாட வேண்டும் என்பதை திருமறை வழியாகத் தியானிப்போம்.

### *1. இணைந்து கொண்டாட வேண்டும் :*

"சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது" (திபா 133 : 1).

பேராய நாளை இணைந்து ஒற்றுமையுடன் கொண்டாடி மகிழ்வது சிறப்பு மிக்கது ஆகும். சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது இனிமை மிக்கது என்று திருப்பாடகர் தாவீது பாடியுள்ளார். எனவே, இறைவன் நமக்கு வழங்கிய நம் பேராயத்தின் பிறந்தநாளை இணைந்து கொண்டாட வேண்டும்.

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்ததை நினைவு கூரும்படி விழா கொண்டாட மோசே கட்டளையிட்டார். அதை இணைந்து கொண்டாட வேண்டும் என்றும் கூறினார் (விப. 12). மோசேயின் அழைப்பிற்குக் கீழ்ப்படிந்த மக்கள் விடுதலையின் பண்டிகையாகிய பஸ்காவை இணைந்து கொண்டாடினார்கள் (எண். 9 : 5) பண்டிகையை இணைந்து கொண்டாடும்போது மகிழ்ச்சி கிடைக்கிறது.

ஏசா, யாக்கோபு, சகோதரர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றி, ஏமாந்து போனதால் பிரிந்து மறைந்து வாழ்ந்தார்கள். ஆனால், இருவரும் ஒன்றுபட்டபோது மகிழ்வு ஏற்பட்டது. எனவே தான் யாக்கோபு ஏசாவிடம் ''உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பது போல் இருக்கிறது'' என்றார். பிரிவினை மகிழ்ச்சியைக் கெடுக்கிறது. ஆனால் இணைவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

கொரிந்து பட்டணம் ''கிரேக்கத்தின் அணையா விளக்கு'' என்று போற்றப்பட்டது. இங்கு செழுமை ஒழுக்கக்கேடு பிரிவினை உணர்வுகள் மலிந்து காணப்பட்டன. திருச்சபை மக்கள் கடவுளைச் சாராமல் ஆன்மிகத் தலைவர்களைச் சார்ந்து செயல்பட்டதால் பிரிவினைகள் புகுந்தன. (1கொரி. 1: 12) எனவே தூய பவுலார் நீங்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருங்கள் உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள் என்றார் (1கொரி. 1 : 10).

எனவே கடவுள் நமக்குத் தந்த பேராயத்தால் நாம் பெற்ற பெரும் நன்மைகள் அனுபவித்து வரும் ஆன்மிக உணர்வுகள் இவைகளை நினைத்து, இணைந்து கொண்டாடி மகிழ்வோம்.

### 2. பகிர்ந்து கொண்டாட வேண்டும் :

''உனக்குக் கட்டளையிட்டுச் சொல்கிறேன் உன் சகோதரனுக்கும் உன் நாட்டிலுள்ள வறியவர்க்கும் தேவையுற்றோருக்கும் உன் கையைத் தாராளமாய்த் திற'' (இச 15:11).

இஸ்ரயேல் மக்கள் விடுதலையின் ஆண்டைக் கொண்டாடும் போது அடிமையானவர்களை அதாவது 6 ஆண்டுகள் அடிமையாய் இருந்து பணி செய்தவர்களை ஏழாவது ஆண்டில் விடுவிக்க வேண்டும். அப்படி அவர்கள் விடுதலை பெற்றுச் செல்லும் போது உன் கையைத் தாராளமாகத் திறந்து உதவி செய்ய வேண்டும், விடுதலையை மகிழ்ந்து கொண்டாட அவர்களை வெறுங்கையராக அனுப்பக் கூடாது தாராளமாகக் கொடுத்து அனுப்ப வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றனர். (இச. 15 :11)

தொடக்க கால திருச்சபையில் பகிர்வு தாராளமாக இருந்தது. எதையும் தன்னுடையது என்று சொல்லவில்லை. அனைத்தையும் பொதுவாக அனுபவித்தார்கள் (திப. 2 :42-46) அங்கு மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது.

முழுக்கு முனிவர் யோவான் தன்னிடம் திருமுழுக்குப் பெற வந்தவர்களிடம் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்றச் செயல்களால்

காட்டுங்கள் என்று சொன்னபோது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட மக்களுக்கு மறுமொழியாக ‘‘இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்’’ என்றார் (லூக். 13:7-11). எனவே பகிர்தல் கொண்டாட்டத்தின், திருச்சபை அறத்தின் ஒரு பகுதி, ஒரு பொறுப்பு என உணர வேண்டும். நாமும் இல்லாதவர்களோடு பகிர்ந்து பண்டிகையைக் கொண்டாடுவோம்.

கிராமம் ஒன்றில் இல்லத்தலைவர் ஒருவர் ஆற்றில் தூண்டில் போட்டு இரண்டு மீன்களைப் பிடித்தார். மனைவியிடம் கொடுத்து ஒன்றை குழம்பு வை, மற்றொன்றை பக்கத்து வீட்டிற்குக் கொடு என்றார். இதைப் பார்த்து கொண்டிருந்த பட்டணத்து விருந்தாளி ஒருவர் ‘‘தாங்கள் ஏன் இப்படி செய்கிறீர்கள்’’ என்று கேட்க இல்லத் தலைவர் ‘‘கெட்டு நாசமாகி போவதற்கு பதில் அவர்களாவது மகிழ்ச்சியாய்ச் சாப்பிடட்டுமே’’ என்றார். உடனே பட்டணத்து விருந்தாளி நான் தவணை முறையில் குளிர்சாதனப் பெட்டி ஒன்று வாங்கித் தருகிறேன். மீதி இருப்பதை இப்பெட்டியில் சேமித்து வையுங்கள் என்றார். அன்றோடு பகிர்தல் நின்றது. ஆனால் ஒரு நாள் வாகன இட நெருக்கடியில் மேம்பாலம் அமைக்கும் பணியை அரசு மேற்கொண்டது. இதனால் மின்தடை செய்யப்பட்டது. தொடர்ந்து மின்தடை இருந்ததால் குளிர்சாதனப்பெட்டியில் இருந்து மீன் கெட்டு போய் நாற்றம் வீசியது. அந்த மீன் வெளியே வீசப்பட்டது. ஐயோ, பகிர்தல் இல்லாததால் நாற்றம் எழுந்தது என்று சிந்தித்த இல்லத்தார் பகிர்தலைத் தொடர்ந்தனர். நாற்றம் மாறியது. இறைவன் தந்த ஆசீர்வாதத்தை ஏழைகள் ஆதரவற்றவர்கள் கைம்பெண்கள் இவர்களுக்குக் கொடுத்து பேராய நாளை பகிர்ந்து கொண்டாடுவோம்.

### 3. நன்றியுடன் கொண்டாட வேண்டும் :

**‘‘கடவுளுக்கு நன்றிப் பலி செலுத்துங்கள்’’ (திபா 50 : 14).**

திருப்பாடகர் ஆசாப் சொல்லும்போது கடவுளுக்கு நன்றிப்பலி செலுத்த வேண்டும் என்கிறார். தாவீது தனது திருப்பாடலில் ஆண்டவரின் கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே (திபா. 103: 1,2) என்று பாடுகின்றார். நாம் தாழ்வுற்றிருந்த போது நம்மை நினைவு கூர்ந்தார். (திபா. 136:23) எனவே நாம் இறைவனுக்கு நன்றி சொல்லி கொண்டாட வேண்டும்.

இயேசுகிறிஸ்து எருசலேம் செல்லும் வழியில் பத்து தொழுநோயாளர்கள் அவரிடத்தில் ‘‘ஐயா எங்களுக்கு இரங்கும்’’ என்று

உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள். உடனே இயேசுகிறிஸ்து "உங்களைக் குருக்களிடம் காட்டுங்கள்" என்று சொல்ல அவர்கள் அவ்வாறே போகும் வழியில் சுகம் பெற்றிருந்தனர். அதில் ஒரு நபர் மட்டும் வந்து நன்றி சொன்னார். அவரது நன்றியுணர்வை இயேசுகிறிஸ்து மெச்சுகின்றார் (லூக் 17 : 11-19). இத்தகைய நன்றியுணர்வு நம்மிடம் தேவை.

நாம் நமது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்போம். எத்தனை சறுக்கல்கள், எத்தனை பாடுகள், எத்தனை இடறல்கள், எத்தனை வீழ்ச்சிகள், எத்தனை ஏளனங்கள். இவைகளைத் தாங்கிச் செல்ல ஆற்றல் வழங்கிய இறைவனுக்கு நன்றி சொல்லி கொண்டாடுவோம்.

"கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கிறேன்
கண்ணீரோடு கர்த்தாவே நன்றி சொல்கிறேன்
நன்றி சொல்கிறேன் நான் நன்றி சொல்கிறேன்
அப்பா உமக்கு நன்றி ராஜா உமக்கு நன்றி" என்ற பாடலைப் பக்தனோடு இணைந்து பாடி, ஆண்டவர் தந்த பேராயத்தின் பிறந்த நாளை இணைந்து, பகிர்ந்து, நன்றியுடன் கொண்டாடி மகிழ்ந்து இறைப் பிரசன்னத்தை உணர்ந்து இறை ஆசி பெறுவோம்.

திரு. R. **டேவிட் ஜெபசிங்**

**07-06-2015** *மாணவர் ஞாயிறு*

# விண்ணிலிருந்து வரும் ஞானம்

## WISDOM FROM ABOVE

1அர 3:16-28 யாக் 1:1-8
திபா 119 :33-40 லூக் 10:21-24

**“உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடம் கேட்கட்டும்; அப்பொழுது அவரும் ஞானத்தைக் கொடுப்பார்.”** யாக் 1:5

***இறைவேண்டல் :*** *ஞானத்தின் உறைவிடமாம் கடவுளே! நீரே ஞானத்தின் அனைத்துத் தேடலுக்கும் மனித அறிவுக்கும் வழிகாட்டியாய் இருக்கிறீர். உம் திருவுளச் சித்தத்தால் வாழ்கிறோம். உமது ஞானத்தால் உம் பிள்ளைகளாகிய எங்களை நிறைத்தருளும். ஞானம் விண்ணிலிருந்து வருகிறது என்பதை உணர உணர்வுள்ள இருதயத்தை தாரும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தைத் தேடவும், அதன் வழி இவ்வுலகத்தின் தீமைகள் மீது வெற்றிக் கண்டு, நிறைவுள்ள வாழ்வு வாழவும், உம் அருள்தர வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறேம். ஆமென்.*

ஞானம் என்ற சொல் எளிதில் புரிய முடியாதது. வழக்கமாக இது வயது முதிர்ந்தவர்களிடம் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. பல நேரங்களில் அறிவையும், ஞானத்தையும் நாம் குழப்பிப் பார்ப்பதுண்டு. ஞானம், விவேகம், மெய்யுணர்வு என்பது அறிவையும் தாண்டியச் செயல் மட்டுமல்ல, இது கடவுளால் அருளப்படும் ஓர் ஈவு, இது விண்ணிலிருந்து வருவது என்றும் பார்க்கலாம். ஆயினும் இதற்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டுமெனில் அறிவை சரியான விதத்தில் பயன்படுத்துதலே ஞானம் எனலாம். (Right use of the knowledge is wisdom). கல்வி அறிவுக்கும், ஞானத்திற்கும் சில நேரங்களில் தொடர்பில்லாமல் கூட இருக்கலாம். இன்றைய கல்விமுறைகள் ஞானத்தைவிட அறிவுப் பெருக்கத்தையே முன்னிறுத்துகின்றன என்பது வருந்தத்தக்க செய்தியாகும். எனவே இன்னும் ஆழமாகப் புரிய திருமறையிலிருந்து சில கண்ணோட்டங்களை பார்ப்போம்.

### *1. ஞானத்தைப் பயன்படுத்திய கடவுள் :*

கடவுள் எந்த அளவு வரலாற்றுக்கு முற்பட்டவரோ அது போன்று ஞானமும் வரலாற்றுக்கு முற்பட்டது என்பதை திருமறை காட்டுகிறது. கடவுள் பூமியை நிலைநாட்டுவதற்கு ஞானத்தை பயன்படுத்துகிறார்.

“அவர் ஆற்றலால் மண்ணுலகைப் படைத்தார். ஞானத்தால் பூவுலகை நிலைநாட்டினார். கூர்மதியால் விண்ணுலகை விரித்தார்” என்ற எரேமியாவின் கூற்று சற்று கூர்மையாக சிந்திக்கத்தக்கது (எரே 51 :15). படைப்போடு ஞானத்தை தொடர்புபடுத்தும் யூத இலக்கியம் இதனை ஒரு பெண்பால் நபராக சித்தரிக்கிறது. உலகம் படைக்கப்படும் முன்பே கடவுள் ஞானத்தை முதற்படைப்பாக ஏற்படுத்தியதாகவும், அந்த ஞானம் கடவுளுக்கு உதவி செய்ததாகவும் திருமறை காட்டுகிறது (நீமொ 8 :22-24). இந்த அடிப்படையில் கடவுளுக்கும் ஞானத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகவும், அதனை கடவுள் தன் படைப்பாற்றலுக்கு பயன்படுத்தியதாகவும் யூத இலக்கியம் போற்றுகிறது. எனவே ஞானம், அடிப்படையில், பரத்திலிருந்து நமக்கு அளிக்கப்பட்டுள்ள, ஈடு கட்ட முடியாத ஓர் அருட்கொடை என்பதைப் புரியலாம். கடவுளின் ஞானம், அறிவு ஆய்வுக்கு எட்டாதவை (உரோ 11 : 33). அவை அவரிடம் கொட்டிக்கிடக்கிறது.

## 2. ஞானத்தைக் கற்றுக்கொள்ள அழைக்கும் கடவுள் :

ஞானம் கடவுளிடமிருந்து புறப்படுகிறது, உண்மைதான். ஆனால் அது கடவுளால் மனிதருக்கு பல கோணங்களிலிருந்தும் வழங்கப்படுகிறது. “ஞானம் கூப்பிடுகிறது, ஊர் சந்திகளிலும், நகர் வாசல்களிலும் கூவி கூப்பிடுகிறது” என நீதிமொழிகள் கூறுகிறது (நீமொ 8 :15). இது எப்படியெனில் கடவுள் இயற்கையின் வழியே ஞானத்தைக் கற்றுக்கொள்ள மனிதரை அழைக்கிறார். ஞானம் ஓர் இடத்தில் மட்டுமே குவிந்து கிடக்கும் தன்மையுடையதல்ல. மாறாக, எல்லா இடங்களிலும் கூவி கூப்பிடுகிறது. அதற்கு செவி சாய்ப்பது நமது கடமை. இயற்கை உயிரிகளைக் (எறும்பு) கண்டு ஞானம் அடை (நீமொ 6 :6-8). கடவுள் கேட்கிறார்: “நாரைக்கு ஞானத்தையும், சேவலுக்கு அறிவையும் கொடுத்தவர் யார்?” (யோபு 38:36). ஆண்டவர் இயேசு கூறினார், “பாம்பைப் போல முன்மதியுடையோராகவும்,புறாவைப்போல கபடு அற்றவர்களாகவும் இருங்கள்” (மத் 10:16). பிற உயிர்களிடம் கடவுளின் ஞானம் புதைந்துள்ளதாக திருமறை சுட்டுகிறது. மனிதர் மட்டுமே ஞானத்தைக் கற்றுக்கொள்ள அழைக்கப்படும் உயிரி ஆகும். இதர உயிரிகள் மனிதருக்கு கற்றுக் கொடுப்பவை என்பதை திருமறை உறுதியாகக் கூறுகிறது. யூத இரபி யோகன்னான் கூறும் போது, “பின்பற்ற வேண்டிய பண்புகள் இவை என நீதிச்சட்டத்தில் ஒரு வேளை கட்டளையிடப்படாவிடினும், பூனையிடமிருந்து அடக்கத்தையும், எறும்பிடமிருந்து திருடுவதற்கு எதிரான போதனையையும்,

புறாவிடமிருந்து தகாத உறவுக்கு எதிரான பண்புகளையும் நாம் கற்றுக்கொள்ள முடியும்'' என்கிறார். ஆக, இயற்கையின் வழி நாம் ஞானத்தை அடையமுடியும் என்பது உறுதி. ஆனால் இன்று அறிவு பெருக்கத்தின் வழி அல்லது பல மொழிகளைக் கற்பதின் வழியே ஞானத்தை அடையமுடியும் என நினைக்கின்ற பெருங்கூட்டத்தினரை காணமுடியும். திருமறை கூறுகிறது, இந்த ஞானம் படிப்பறிவில்லாதவர்க்கும் கிடைக்கும், இயற்கையைப் பார்த்தும் பெறலாம். மொத்தத்தில் கடவுளுக்குப் பயப்படும் பயமே ஞானத்தின் தொடக்கம் ஆகும். அறிவுப் பெருக்கம், ஆலைமயம், சுரங்கமயம், இவைகளையும் தாண்டிய கடவுளைக்குறித்த அச்சம் வழி மட்டுமே ஞானத்தை கற்றுக் கொள்ள முடியும் என்கிறது (யோபு 28) திருமறை.

### *3. ஞானத்தை வழங்கும் கடவுள் :*

கடவுளின் அழைப்புக்குச் செவிமடுக்கும் மக்களுக்கு கடவுள் ஞானத்தை வழங்குகிறார். அவர் ஒருவரே பல்வேறு வழிகளில் ஞானத்தை வழங்குகிறார் (நீமொ 2: 6) அவரது விருப்பத்திற்கு ஏற்ப நடப்போர்க்கு அவர் ஞானத்தையும், அறிவையும், மகிழ்ச்சியையும் வழங்குவதாக திருமறை கூறுகிறது (சஉ. 2:26). ஆண்டவரை அழைத்து அவரிடம் ஞானத்தை கேட்டால் அவர் தருகிறார். தானியேலின் இறைவேண்டலைக் கேட்ட ஆண்டவர் அவருக்கு விவேகத்தையும், மெய்யுணர்வையும் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது (தானி 9:22). அத போல சாலமோனுக்கும் ஞானம் கிடைத்தது. ஒருவர் ஆண்டவரின் அறிவுரைக்கு செவிமடுத்து, கண்டிப்பையும் ஏற்றுக்கொண்டால் அவர் காலமெல்லாம் ஞானமுள்ளவராக மாறுவார் (நீமொ 19 : 20). ஆண்டவரது வழியில் நடப்பதால் தம் பிள்ளைகளுக்கு ஏற்படும் சில சிக்கல் நேரங்களில் எதிரிகளுக்கு எதிரான வாக்கையும், ஞானத்தையும் தருவதாக ஆண்டவர் வாக்களிக்கிறார். ஒருவருக்கு ஞானம் குறைவு என அவர் கருதி கடவுளிடம் கேட்டால் அவர் உதாரத்துவமாக அனைவருக்கும் நிச்சயமாக வழங்குவார். ஆனால் கேட்போர் இருமனம் உடையோராக, அதாவது, சந்தேகத்துடன் கேட்பவராக இருத்தல் கூடாது என்பது அழுத்தமாக அறிவுறுத்தப்படுகிறது (யாக் 1 : 1-8). அப்படி கடவுள் வழங்கிய ஞானம் மக்களுக்கு பல வழிகளில் நன்மை செய்கிறது. நேர்மையாளரின் வாய் ஞானத்தை அறிவிக்கும். அவர்களது வாய் நீதியை அறிவிக்கும் (திபா 37 : 30 ; நீமொ 8 : 13 -21). ஞானிகள் பொதுவாக மக்களின் கோபத்தை தணிப்பவராக அமைவர் (நீமொ 29 :8). உணர்ச்சிமிக்க பேச்சுக்களால் மற்றவர்களை உசுப்பிவிடுதல் எளிது. ஆனால் அமைதியை ஞானிகளால் மட்டுமே கொண்டுவர முடியும்.

விண்ணிலிருந்து வரும் ஞானம் மனிதருக்கு வழங்கப்படும் போது நீதிக்குரிய, அமைதிக்குரிய மனப்பான்மை உருவாகுவதாக பார்த்தோம். மண்ணுலகம் அவ்வாறு ஒரு காலத்தை முழுமையாக அடையும் என்ற தரிசனத்தைக் குறித்து பேசும் போது 'மண்ணுலகம் கடவுளைப் பற்றிய அறிவினால் நிறைந்திருக்கும்' என திருமறை கூறுகிறது (எசா 11 :9 , ஆபகூக் 2 : 14). ஆண்டவர் இயேசு அந்த ஞானத்தின் ஊற்றாக பாலஸ்தீனா நாட்டில் சிறுவயதிலிருந்து நிறைந்து காணப்பட்டார். ஆகவே அவர் ஞானத்திலும், உடல் வளர்த்தியிலும், மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்புடையவராக வளர்ந்தார் (லூக் 2 : 41-52) எனக் காண்கிறோம். இதனை அன்றைய சமகால மக்கள் ''இவன் இந்த ஞானத்தை எங்கிருந்து பெற்றான்'' என ஆச்சரியப்பட்டனர் (மத் 13 : 53). சாலமோன் அரசனின் ஞானத்தைக் குறித்தும் பலர் ஆச்சரியப்பட்டனர். இன்று நாம் பல நேரங்களில் நவீன அறிவைக் கொண்டு ஞானத்தை எடை போட நினைக்கிறோம். விண்ணிலிருந்து வரும் ஞானத்தை கொச்சைப்படுத்தும் நவீன அறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். எனவே தான் பவுல் கூறும் போது, ''கடவுளின் ஞானம் உலகிற்கு பைத்தியமாகத் தென்படுகிறது. வெறும் வெற்றிகளின் அடையாளங்களின் வழியே மட்டும் ஞானத்தைத் தேடாமல், தோல்விகளை, சவால்களை சந்திக்கும் சிலுவைகளின் அடையாளங்கள் வழியேயும் ஞானத்தைத் தேட வேண்டும்'' என உரத்த குரலில் கூறுகிறார் (கொரி 1 :22 -25). இதனை கடவுளிடம் கொண்டிருக்கும் அச்சம் வழியேதான் நாம் பெறமுடியும். விண்ணிலிருந்து வரும் ஞானம் நம் அனைவருக்கும் கிடைக்க கடவுள் அருள் தருவாராக !

அருள்திரு. அறிவர். **சாலமன் விக்டசு**

**14-06-2015** சுற்றுச் சூழல் ஞாயிறு

# கடவுளின் மாட்சியை அறிவிக்கும் படைப்பு

## CREATION PROCLAIMS GLORY OF GOD

நீமொ 8:22-31 திவெ 21:1-8
திபா 19 லூக் 8:22-25

**"இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்."** திவெ 21:5

**இறைவேண்டல் :** *முழு உலகையும் படைத்த எம் கடவுளே! நீர் தந்துள்ள சுற்றுப்புற சூழலுக்காக உம்மைத் துதிக்கின்றோம். உம் படைப்புகள் அனைத்தும் உம் மாட்சியை அறிவிக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்து உம்மை மாட்சிமைப்படுத்த அருள்தாரும். மனிதர்களின் சுரண்டலாலும், மாசுபடுதலினாலும் அழிவுக்குள்ளாயிருக்கும் படைப்பினை பாதுகாக்கவும், படைப்பை முழுமையாக்கி அதன் வழியாய் உமது கிருபையை அனுபவிக்கவும் ஆற்றலும் தொலைநோக்கு பார்வையையும் தந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

பிரமிக்கத்தக்க படைப்பின் வரலாறு கடவுளின் படைப்பாற்றலை அழகாய் வெளிப்படுத்துகின்றது. கடவுளின் உன்னதமான தன்மையும் அவருடைய முடிவில்லாத அன்பும் படைப்பின் வழியாக விளங்குகின்றது. படைப்புகள் மானிட உள்ளத்தை புத்தாக்கம் செய்து புத்தெழுச்சியைக் கொடுத்து மகிழச்செய்கின்றது. கடவுள் தன்னுடைய ஜீவ சுவாசத்தை முதல் மனிதனின் நாசியிலே ஊதி அவனை ஜீவ ஆத்துமாவாகச் செய்து அவரின் படைப்பாற்றலை மட்டுமல்ல மனிதன் இறை ஆவியுடன் வாழ வேண்டும் என்பதையும் மனுக்குலத்தின் மீது வைத்த அன்பையும் வெளிப்படுத்துகின்றது. உலகிலுள்ள அனைத்தையும் அவருடைய வார்த்தையினால் படைத்த இறைவன் தன் வார்த்தையின் வல்லமையை நிரூபித்தார். அவருடைய வார்த்தையால் நம்மை சுற்றியிருக்கும் அனைத்தையும் அவர் படைத்தார். தான் படைத்த மண்ணினாலே தான் படைப்பில் வைத்த அன்பின் அடையாளமாக ஆதாம், ஏவாள் என்ற முதல் மனிதர்களை படைத்தார். இவ்விதமாக படைக்கப்பட்ட மானிடத்திடம் கடவுள் எதை எதிர்பார்த்தார் என்றால் இந்த படைப்புகள் படைப்பாளராகிய இறைவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதுவே. படைப்புகள் இறைவனை எவ்விதம் மகிமைப் படுத்துகின்றன என்பதையும்

படைக்கப்பட்ட மனிதனில் எவ்விதம் இறைவன் மகிமைப்படுத்துகிறான் என்றும், இன்னும் அதிகமாய் இறைவன் மகிமைப்படுகிறார் படைக்கப்பட்ட படைப்புகள் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்று சிந்திக்கலாம்.

### *1. இறை மாட்சியைப் பேசும் படைப்பு :*

**(Creation Speaks the Glory of God) :** (திபா 19:1)

“வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன.” தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தில் இருள் இருந்தது. கடவுளின் ஆவியார் நீர்த்திரளின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (தொநூ 1:1,2). நீர்த்திரள் மேல் அசைவாடிக்கொண்டிருக்கும் இறைவனின் குரல் கடலின் மேல் ஒலிக்கின்றது. அவைசாடும் கடல் அலைகளும், அதின் வழி உண்டாகும் இன்னிசை நாதமும் காண்கின்றவரையும் கேட்கிறவரையும் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்து இறைவனை மாட்சிபடுத்த உந்துகின்றது. இவ்வளவு பரந்து விரிந்து கிடக்கும் கடலைப் பார்த்து இறைவன் விண்ணுலகுக்கு கீழ் உள்ள நீர் எல்லாம் ஓர் இடத்தில் ஒதுங்க நீர் திரளுக்கு இடையில் வானம் தோன்றுக. வானத்தில் ஒளிதோன்றுக. உலர்ந்த தரை தோன்றுக என்றார். அது அவ்வாறே ஆயிற்று. உலர்ந்த புல்பூண்டுகள், விதைதரும் செடிகள், கனிதரும் மரங்கள் அனைத்தையும் பார்த்து இறைவன் மகிழ்ந்தார். அவற்றை நல்லது என்று கண்டார். கடவுள் படைத்த உலகைப் பார்த்து கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

கடவுளால் படைக்கபட்ட உலகில் இறைவன் எதை நிறைவேற்ற கட்டளை இட்டாரோ அவற்றை அவைகள் தவறாமல் செய்கின்றன. இதனால் இறைவன் மகிமையடைகின்றார். இவ்வுலகம் இருக்கும் நாள் வரை விதைக்கும் காலமும், அறுவடைக்காலமும், குளிரும், வெப்பமும், கோடைக்காலமும், குளிர்காலமும், இரவும், பகலும், மழையும், பனியும் இறைவனின் கட்டளை படியே உண்டாகி அதின் அதின் ஒழுங்கில் செயல்படுவதால் இறைவனின் திருப்பெயர் மாட்சிபடுகின்றது.

படைப்புகள் யாவும் ஒழுங்கின்படியே படைக்கப்பட்டு இயங்கி வந்தாலும் அவைகள் யாவும் இறைவனைத் துதிக்கவும் மகிமைப்படுத்தவும் விடாமல் மனிதர்களால் அச்சுறுத்தப்பட்டு படைப்பு சீர் அழிந்து வருகின்றது. இதற்குத் காரணம் மனிதனின் இடையூறுகள் என்றால் தவறில்லை. பெருவெள்ளப் பெருக்கினால் இவ்வுலகம் அழிக்கப்பட்ட காரணம் மனிதனின் தவறான வாழ்வு ஆகும். உணவு உற்பத்தி குன்றுவதற்கு காரணம் மனிதனின் பேராசையே ஆகும். இயற்கையை

அழித்துவிட்ட படியால் இயற்கையாக கிடைக்கும் உணவுகள் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறன. கடவுளின் படைப்பின் ஸ்திரதன்மை மறுக்கப்பட்டு பேராசையால் இறைவனை மகிமைபடுத்தும் காடுகளை அழித்தும் மண்ணின் மேல்தட்டில் இருக்கும் தண்ணீரை ஆழ்குழாய் கிணறு வழியாக சுரண்டியெடுத்து இயற்கையின் சம நிலையை இழக்கச் செய்வதால் இயற்கை மிகவும் வேதனையுடன் காணப்படுகிறது. இதனால் பேரிடர் உருவாகி மனிதனை அழிக்கும். இப்போது பொலிவிழந்த இயற்கை இறைவனின் படைப்பின் நோக்கத்தை மனிதனுக்கு விவரித்து இறைவனை மகிமைப்படுத்துகின்றது.

## *2. வாழ்வை உறுதிசெய்து மாட்சிப்படுத்தும் படைப்பு*

**(Creation glorifies through life affirming) :** (தொநூ 8:21b)

“. . . இனி எந்த உயிரையும் அழிக்கவே மாட்டேன்.”

கடவுள் மனிதனானார். அவர் இறை அன்பை மனிதனுக்கு வெளிப்படுத்தி அவனுக்கு அறிவும், புத்தியும், சக்தியும் கொடுத்து அனுதினமும் பாதுகாத்து வருகின்றார். கடவுள் படைத்த இயற்கையான சூரியன் உதித்தல், மறைதல், நல்ல காற்று, காலநிலை, இவைகள் மாறி மாறிவரும் காலங்களுக்கு ஏற்ற விதைப்பும் அறுப்பும், மனிதனின் வாழ்வாதாரங்களாக இருந்து மானிட வாழ்வை உறுதி செய்கிறது. மானிட வாழ்வுக்கு தேவையான உணவு இருக்கும் போது உயிர் பாதுகாப்பு ஏற்படுகின்றது. அதற்காகவே மண்ணுலகெங்கும் விதைதரும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் படைத்து இவைகள் மனிதனுக்கு உணவாகட்டும் என்றார் (தொநூ 1:29).

இறைவன் தன்னோடு இருக்கும் படிக்கும், தன்னைப்போன்று தொடர் படைப்புக்கு உதவியாயிருக்கும் படிக்கும் படைக்கப்பட்ட மனிதனை தமது சாயலிலே படைத்து, அவனுக்கு படைப்புகள் மீது பெயரிடும் அதிகாரம் கொடுத்து, படைப்பாளரோடு ஒரு புது உறவை ஏற்படுத்திட இறைவன் விரும்பினார். அதற்காகவே அவனுக்குத் தேவையான உணவையும், அவன் உயிர் வாழ தேவையான காற்றையும் கொடுத்து வாழ்வை உறுதிப்படுத்தியிருக்கின்றார். ஆனால் இன்று இறைவன் படைத்த இயற்கையில் மாசு படிந்து மனிதனின் வாழ்நாள் குன்றிப்போயிற்று. ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் முப்பது இலட்சம் மக்கள் மாசுபடிந்த காற்றினால் மடிகின்றனர். இன்றைய தொழில்சாலைமயமாதல், பட்டணவாழ்வு மோகம், பொருளாதார போட்டிகள், உணவு பொருட்கள் உற்பத்தியில் ரசாயன இடு உரங்கள், பணம்

சேகரிக்க உயிரினங்களை கொலை செய்தல் ஆகியவற்றால் இயற்கை தரும் பாதுகாப்பு உறுதி கெட்டுப்போய்விட்டது.

கடவுள் மனிதனை வளமிகு நாட்டில் வைத்து காத்து வருகிறார். அந்த நாட்டில் ஆறுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், ஏரிகள் எல்லாம் உண்டு, கோதுமை, திராட்சை, அத்தி, பார்லி, மாதுளை ஆகியவைகள் உண்டு. அங்கு ஒலிவ எண்ணெய், தேன் உண்டு, பஞ்சமின்றி மனிதன் உணவு உண்டு, எக்குறையும் இன்றி வாழ்ந்து இறைவனை மகிமைப்படுத்த வேண்டும். இவற்றைத் தந்த இறைவனின் படைப்பை பாதுகாத்து இறைவனை மகிமைப்படுத்துவது நம் கடமையாகும். ஆனால் இன்று படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது (உரோ 8:22) வாழ்வை உறுதிசெய்யும் ஆண்டவரின் படைப்பு பாதுகாக்கப்பட முயல்வோம்.

## *3. வாழ்வைப் பாதுகாத்து மாட்சிப்படுத்தும் படைப்பு*

## **Creation preserves and glorifies God :**

“மண்ணுலகு இருக்கும் நாளளவும் விதைக்கும் காலமும் அறுவடைக் காலமும், குளிரும் வெப்பமும், கோடைக்காலமும், குளிர்க்காலமும் பகலும் இரவும் என்றும் ஒய்வதில்லை” (தொநூ 8:22) இறைவன் படைக்கிறவர், பராமரிக்கின்றவர், பாதுகாக்கின்றவர். மண்ணுலகு இருக்கும் நாளளவும் விதைப்பும் அறுப்பும் குளிரும் வெப்பமும் கோடைக்காலமும் குளிர்க்காலமும் பகலும் இரவும் ஓய்வதில்லை என்று இறைவன் நோவாவின் பலியின் சுவையை ஏற்று இந்த உடன்படிக்கையைப் பண்ணினார்.

இதில் ஒன்றும் குறைவு படாமல் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. கடவுள் பூமியை பாதுகாப்பேன் என வாக்குறுதியளித்திருக்கிறார். இதுவே இறைவன் அளித்த முடிவில்லா அன்பு, பாதுகாக்கும் அன்பு, பராமரிக்கும் அன்பு. ஆனால் இன்று படைப்புகள் யாவும் பேறுகால வேதனைப்படுகின்றது. இன்று மனிதனின் எண்ணிக்கை பெருகுவதாலும், பட்டணங்களில் குடியேறும் மக்கள் தொகை பெருக்கத்தாலும் சுற்றுப்புறச் சூழல் மாசுபட்டு மனிதனின் வாழ்வு உத்தரவாதம் இன்று அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. ஆறுகளில் கலக்கும் கழிவுநீரினாலும் நீர்வாழ் உயிரினங்கள் அழிந்து வருகின்றன. அணு உலைகளின் கழிவுகள் கடலில் கலப்பதால் மீன்கள் அணுக்கதிர்களின் பாதிப்பிற்குள்ளாகிறது. அதை உண்ணும் உண்டாகி மனித உடலின் உறுப்புகள் சேதமடைகின்றன. இதனால் ஆயுசு நாட்கள் குறையும் நிலை

பெருகிவிட்டது. உலக மாசு கட்டுப்பாட்டு வாரியங்கள் எவ்வளவு முயற்சித்தும் செயற்கை இரசாயன உலகவாழ்வில் ஆள்கொல்லி நோள்களான புற்றுநோய் பரவுவது உலக அரங்கில் சுகவாழ்வை அச்சுறுத்துகின்றன. கடவுள் உலகை அழிப்பதில்லை என உறுதியளித்தார். மனிதன் படைப்புகளை கர்ப்ப வேதனைப்படுத்தி தன் வாழ்வை அழிக்கிறான். பரிசுத்த பவுலின் நம்பிக்கையின் அடிப்படையில் மாசில்லாத படைப்புகள் உருவாக மனிதன் சுய விருப்பத்தின்படி பராமரிக்காமல் அதை தனக்கு அடிமையாக்கிக் கொள்வதன் மூலம் அழிவை தானாகவே தேடிப் பெற்றுக் கொள்கிறான்.

படைப்புகள் யாவும் படைத்தவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே படைத்தவரின் நோக்கம். ஆனால் மானிட பாவம் படைப்புகளில் புகுந்து படைப்பை மாசுபடுத்துகின்றது. மாசு படிந்த படைப்பை வெறுக்க முடியாது. காரணம் படைப்பு இறைவனுடையது. அதை பண்படுத்தவும் பாதுகாக்கவும் வேண்டியது நம் உணவு கடமை. நாம் நல்ல நிலத்தில் வாழ்ந்து வருகிறோம். நாம் வாழும் நல்ல நிலத்தை மாசுபடாமல் ஏன் பாதுகாக்க இயலாது. நிலத்தைப் பண்படுத்தி பாதுகாக்கும்போது ஒரு புது உலகம் உண்டாகும். அதில் இவ்வித தீங்குகள் ஒன்றும் பற்றிக் கொள்வது இல்லை. அங்கு நாம் புசித்து குடித்து மகிழ்ந்து இருக்கும் போது கடவுளை மகிமைப்படுத்தும்படி இறைவன் கட்டளையிட்டார். அவர் கட்டளையை ஏற்று நாம் வாழும் போது மனிதன் மத்தியில் கடவுள் வாசம் பண்ணுவார். நாமும் அவருடன் அந்த புதிய உலகில் வாழ்ந்து மகிழ்வோம்.

அருள்திரு. S. **ஐசாயா**

**21-06-2015**

# உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரைத் தொழுவோம்

## WORSHIP THE LORD IN TRUTH AND SPIRIT

| | |
|---|---|
| எசா 6 : 1-8 | 2தெச 2 : 13-17 |
| திபா 139 | யோவா 4 : 15-26 |

**"கடவுள் உருவமற்றவர் அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்."** யோவா 4:24

**இறைவேண்டல் :** *என்றென்றும் வாழும் ஆற்றல் நிறைந்த கடவுளே, எங்கள் பற்றுறுதி அறிக்கையினால் நிலையான திரித்துவத்தை உணரவும், இணைந்து அவரைத் தொழவும் அருள் தந்திருக்கிறீர். இந்தப் பற்றுறுதியிலும் தொழுகையிலும் உறுதியாய் நிலைத்திருக்க உதவி தாரும். கடைசியில் உம் நிலையான மாட்சியில் உம்மைக் காண எங்களைச் சேர்த்தருள வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

திருமறையில் வேறெங்கும் வர்ணிக்கப்படாத உண்மை நிகழ்வொன்று இங்கே விவரிக்கப்படுவது சிறப்பு. அதுவும் இயேசுவின் அன்புச் சீடர் யோவான் இந் நிகழ்வை மிக விளக்கமாக எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையே இடம் பெற்ற உரையாடலின் தன்மையும் அதன் நன்மையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வுரையாடல் இடம் பெற்ற இடம் யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்தின் அருகே அமைந்த சமாரியாவின் சீகார் என்னும் சிற்றூர் ஆகும். இங்கே யாக்கோபின் கிணற்றின் ஓரமாய் இயேசு பயணத்தின் போது களைப்புற்றவராய் அமர்ந்திருக்கிறார். அப்போது ஏறக்குறைய நண்பகல் 12-ம் மணி வேளை. இயேசுவின் சீடர்கள் உணவு வாங்கிவர நகரத்திற்குச் சென்றிருந்தனர். இச்சமயம் தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் உரைத்த வாக்குகள் இன்றைய உலகில் இக்காலச் சூழலில் மாந்தர்க்கு இன்றியமையாததாகும்.

### *1) தொழுகையில் உண்மை வேண்டும் :*

"உண்மையாய் வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபடவேண்டும்"(யோவா 4 : 23).

உலகில் உண்மையை நிலை நாட்ட வேண்டும் என உன்னதர் இயேசு கிறிஸ்து விரும்புகிறார். உருண்டை உலகில் உருட்டும், புரட்டும்,

திருட்டும் மலிந்து விட்ட அவலங்களைக் கண்டிடலாம். இயேசு கிறிஸ்து தன்னை அறிமுகம் செய்திடும் போது ''வழியும் உண்மையும் நானே'' என்றும் ''உண்மையான திராட்சைச்செடி நானே''என்றும் குறிப்பிடுகிறார் (யோவா. 14:6; 15:1). வார்த்தையில் மட்டுமன்று, வாழ்க்கையிலும் உண்மையை வாழ்ந்து காட்டுகிறார்.

சமாரியப்பெண் தங்கள்குல வழக்கப்படியான சில ஆசாரங்களைக் கடைப்பிடித்து. ஆசாபாசமாய் வாழ்ந்தவள் இவள் மேசியாவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாள்.

இயேசு கிறிஸ்துவை முதலில் யூதராகக் காண்கிறாள், பின்பு இறைவாக்கினராகக் காண்கிறாள், இறுதியில் மேசியாவாக அறிந்து கொள்கிறாள்.

இங்கே கிறிஸ்து இயேசுவின் பண்புகளில் உண்மை மிகவும் வலியுறுத்தப்படுகிறது. உமக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றாலும் இப்போது உம்முடன் இருப்பவர் உம் கணவர் அல்ல எனவே நீர் கூறியது உண்மையே என அவளின் குடும்ப வாழ்வின் போலித்தனத்தை கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். (யோவா. 4 :18) அவளும் இந்த அனுபவத்துடன் உண்மையாகவே கிறிஸ்துவைக் கண்டேன் எனும் காட்சியை ஊருக்குள் புகுந்து சான்றாக உரைக்கிறாள். மேலும் இயேசுகிறிஸ்து கூறுகையில், யாரை வழிபடுகிறீர்கள் எனத் தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள். ஆனால் நாங்கள் தெரிந்துவழிபடுகிறோம் (யோவா. 4 : 22) என வாழ்விலும் தொழுகையிலும் உள்ள உண்மையுள்ள நிலையை எடுத்துக் கூறுகிறார்.

இன்று இதுபோல அறியாத கடவுளை வழிபடும் கூட்டம் அநேகம். எங்கள் சபையில் தான்கடவுள் உள்ளார். எனவே எம்மிடம் வாருங்கள் தொழுகைக்கு எனத் திரிபு நெறிகள் கூறி திருச்சபைகளைப் பிரித்துச் செல்லும் போலிகளைப் பார்த்தும், ஆகாயத்தில் சிலம்பம் பண்ணும் ஆன்மீகம் இல்லாதவரைப் பின் தொடர்ந்தும் அலைந்துதிரிந்து அலைமோதும் ஆன்மாக்களைக் கண்டறிந்து தொழுகையில் உண்மை வேண்டும் எனும் நற்செய்தியை இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து கூறி தொழுகையை உண்மையாக்கவேண்டும். பாடகனின் பக்திபரவசப் பாடல் ஒன்று கூட நமக்குத் தொழுகையைப் பற்றிய பாடம் கற்றுத் தருவதை உணர்வோம்.

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

வெண்மையும் சிகப்பும் ஆனவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்

எனவே தொழுகையில் உதட்டளவில் அல்ல உள்ளத்தால் உன்னதரை உண்மையுடன் வழிபட வேண்டும். தூய ஆவியாரின் ஆற்றலோடு தூய கடவுளைத் துதித்துத் தொழுகை செய்ய வேண்டும். பவுலும் சில்வானும் திமொத்தேயுவும் தெசலோனிக்கத் திருச்சபைக்கு எழுதும் இரண்டாம் திருமுகத்தில்

"நாங்கள் கடவுளுக்கு உங்கள் பொருட்டு என்றும்
நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் ஏனெனில்
தூய ஆவியால் தூய்மையாக்கப்பட்டு நீங்கள்
உண்மையை நம்பி மீட்பு அடையும் படி
கடவுள் உங்களை முதன்முதலாகத் தேர்ந்து கொண்டார்".

(2 தெச. 2:13) என்கிறார்கள்.

தொடக்ககாலத் திருச்சபையில் தெசலோனிக்கேயரை திசைதிருப்பும் வண்ணம் கடவுளின் நாள் கடந்து வந்து விட்டது எனக் கூறி போலி நற்செய்தியாளர்கள் எழும்பி மக்களை மனங்கலங்கடித்து நிலைகுலையச்செய்து திகிலுறுத்தி ஏமாற்றி கிளர்ச்சி செய்தனர். நெறி கெட்டவர்கள் தங்களைத் தொழுகைக் கூடங்களில் கடவுளாகக் காட்டி கோவிலில் அமர்ந்து கொண்டு இறைமக்கள் வழியாக வரும் தொழுகையைத் தாங்களே ஏற்றனர் (2தெச. 2:2-4). எனவே தொழுகையில் உண்மை வேண்டும்.

### *2) தொழுகையில் உணர்வு வேண்டும் :*

"அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம் நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள்" (யோவா 4 : 28,29)

உரையாடலின்போது உள்ளத்தில் எழுந்த உணர்வால் உற்சாகத்தோடு அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் ஓடோடிச்சென்று கிறிஸ்துவைப்பற்றி அறிவித்து அவரைக் காட்டி பிற மக்களும் கிறிஸ்துவைத் தொழுதிட வழி காட்டுகிறாள்.

இன்று பல திருச்சபைத் தொழுகைகளில் தன்னலங்கள் தொனித்திடக் காணலாம். நான் மட்டும், என் குடும்பம் மட்டும், என் செல்வம் மட்டும் என்னும் இறுமாப்புடன் கூடிய தொழுகை இடம் பெறக் காணலாம். இதனால் தொழுகை வேளையில் அநேகர் அழுகின்றனர். தொழுகையில்

தொய்வும் தோல்வியும், அயற்சியும், முயற்சியற்ற சோர்பு நிலைகளும் ஏற்படுகின்றன. பலர் தாங்கள் கண்ட கடவுளை, தாங்கள் தொழும் கடவுளை பிறரும் காணவேண்டும் கண்டு களிகூர வேண்டும் என்ற உணர்வுநிலை கொள்வதில்லை. பிறர் நலமின்றிப் பிறக்கும் தன்னலக்காரர்களால் தொழுகை மனித ஆளுகையாகவும் மாறிடக் காணலாம். எனவே தொழுகையினூடே இடம் பெற வேண்டிய உணர்வு திருச்சபைகளில் தணிந்துள்ளன.

குடத்தை விட்டுவிட்டாள்! குதூகலம் கொண்டு விட்டாள்! குவலயத்து மக்கள் இயேசுவைக் குலத்தெய்வமாய் வழிபட வேண்டும் என்னும் உணர்வு கொண்டு உற்சாகமாய் ஓடினாள் ஊருக்குள். உற்சாகமாய் உரைக்கிறாள் நற்பரனைக்குறித்து நற்செய்தி.

எபிரேயத்திருப்பாடலில், ‘‘ஆண்டவரே! உம் வழிகளை அவர்கள் புகழ்ந்து பாடுவர்; ஏனெனில், உமதுமாட்சி மிகப் பெரிது, ஆண்டவரே! நீர் உன்னதத்தில் உறைபவர்; எனினும் நலிந்தோரைக் கண்ணோக்குகின்றீர் ஆனால், செருக்குற்றோரைத் தொலையிலிருந்தே அறிந்து கொள்கின்றீர் எனத் தாவீது உணர்வுடன் கவிதை பாடுகிறார் (திபா 138 : 5,6).

ஆசாரியனைத் தூபம் காட்டிட அனுமதியாது ஆலயத்தில் அகந்தையுடன் தூபம் காட்டி அழிந்த உசியா அரசன் மறைந்த ஆண்டில் எருசலை ஆலயத்தினுள் சென்றார் ஏசாயா. அங்கே ஆண்டவரின் அருட்காட்சியைக் காண்கிறார். சேராபீன்கள் சூழ நின்று கடவுளைத் தூயவர்! தூயவர்! மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது எனப் போற்றிடும் காட்சி கண்ட ஏசாயா தொடக்கத்தில் அசுத்த உதடு உடையவன் எனத் தன்னைக் கூறிடினும், பலி பீடத்தின் நெருப்பு பொறியுடன் கட்டிய குறட்டால் நாவு தொடப்பட்டதும் தொழுகையில் உணர்வோடு கூடிய உற்சாகம் கொள்கிறார் எனக் காண்கிறோம் (ஏசா. 6 :1-8).

தூதர்கள் மட்டுமல்ல இறைவாக்கினர் மட்டுமல்ல தரணியோர் அனைவரும் தளராமனமுடன் கடவுளை உணர்வுடன் தொழுது கொண்டாடிட அறைகூவல் விடுகிறார்.

இன்றைய திருச்சபைகளில் ஆண்டுக்கொருமுறை ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டம் என்ற தலையங்கத்தில் நற்செய்திப்பெருவிழாக்கள், சபை நாள் விழாக்கள் என்றிடும் நாட்கள் மட்டும் தானா தொழுகையில் உணர்வோடு கூட உற்சாகம் காட்டுகின்றோம், மற்ற நாட்களில் எழுப்புதலற்ற மழுப்புதல் மட்டும் தானா எனச் சீர்தூக்கிப் பார்த்திடல்

வேண்டும். அனைத்துத் தொழுகைகளிலும் அனலுமில்லை குளிருமில்லை என்றிடும் அவலநிலை அகன்றிட வேண்டும். அனைவரும் அனுதினம் ஆண்டவர் திருமுன்னர் தொழுகையில் உணர்வோடு உற்சாகம் காட்டிட வேண்டும்.

தஞ்சை வேதநாயகர், சரபோஜி மன்னரின் அரச அவைப்புலவராய் வாழ்ந்த காலத்தில் பாடியபாடல் இது.

பாடித்துதி மனமே பரனைக் கொண்
டாடித்துதி தினமே
நீடித்த கால மதாகப்பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் . . . . . பாடி

இதில் பரனைக் கொண்டாடித் தினமும் பாடித்துதி. . . என உணர்ந்து தொழுகைப் பாடலைத் தொடர்கிறார்.

### *3) தொழுகையில் உறவு வேண்டும் :*

“நீர் யூதர், நானோ சமாரியப்பெண். . . நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி? என்று கேட்டாள் ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை” (யோவா 4 : 9)

இன்றைய உலகில் சாதியின் பெயரிலும் சமயத்தின் பெயரிலும் பிரிவினைகள். பின்ன பேதகங்கள் தொழுகையிடங்களிலும் திருவருட்சாதனங்கள்வழங்கும் நிகழ்வுகளிலும், கிண்ணங்களில் கூட பிரிவினை எண்ணங்கள் இல்லாமல் இல்லை. குடிக்கும் தண்ணீரையும் சிரட்டையில் குடிக்கக் கொடுத்திடும் அவலம் சிந்தனைக்குரியது. தூய பவுலார் குறிப்பிடுகையில், கிறிஸ்துவுக்குள் யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் என்கிறார் (கலா 3 : 28). எல்லாரும் இறையரசில் சரிநிகர் சமம். இயேசு கிறிஸ்துவும் தம் இறைப்பணியின் இறையியல் பயணத்தில் சமாரியப் பெண்ணிடம் உரையாடுகிறார். உயர்வு தாழ்வு நிலையில் நில்லாது எல்லாரும் கடவுளின் மக்கள் எனக் கனிவுடன் பேசுகிறார். இதனால் இப்பெண் இயேசு கிறிஸ்துவைத் தொழுது கொள்கிறார்.

தாழ்குலத்தவள், ஏழை , தீண்டத்தகாதவள், ஒதுக்கப்பட்டவள், ஒடுக்கப்பட்டவள், ஒழுக்ககேடான வாழ்வு கொண்டவள் எனினும் இவளை ஓரம்கட்டாமல் கிறிஸ்து ஆத்துமத்தாகம் மிகுந்தவராய் இவளைத் தேடி வருகிறார். பொது இடத்தில் சந்திக்கிறார். தண்ணீரை உருவகமாகக் கொண்டு தம்மை ஜீவதண்ணீராய்க் கொண்டு, ஆன்மிக உறவில்,

இறைஉறவில், மனித உறவில் நின்று உரையாடுகிறார்.ஊரார் கூட இப்பெண்ணை உதவாக்கரை என உதறித்தள்ளினர். ஆனால் அந்த ஊரார் கூடி இவளில் ஆன்மீக உறவு கொண்டு, இறைமைந்தர் இயேசு கிறிஸ்துவில் உறவு கொண்டு தொழுகை செய்திடும் வாழ்வுக்கு வழி காட்டுகிறார் இயேசுகிறிஸ்து.

பகைவரிடமும் உறவுகாட்டி பவுலும் சீலாவும் சிறையில் பாடித் தொழுகை செய்கின்றனர். அடித்தவனைப் பார்த்து "உனக்கு கேடு ஒன்றும் செய்யாதே" எனக் கூறி அவனிடம் இன்பர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பேசித் தொழுகையில் உறவை நிலப்படுத்திய சான்று தொடக்ககாலத்திருச்சபையில் கண்டிடலாம். அடித்தவனும். அடிப்பட்டவர்களும் உறவு கொண்டு ஒன்றாய்க் கூடி நன்றாய்ப் பாடி தொழுகை செய்தனர் இயேசுகிறிஸ்துவை.

குமரிப்பேராய வரலாற்றில் சாதிக் கொடுமை தகர்த்தெறிய தூய ஆவியாரின் தூண்டுதலால் செயல்பட்ட றிங்கல் தௌபே, மகாராசர் வேதமாணிக்கர் என்பாரின் போதனைகள், சாதனைகள் சிறப்பிற்குரியது. மேலும் தொழுகையில் உறவு வேண்டும் எனும் அடிப்படையில் உருவான தென்னிந்தியத்திருச்சபை உருவாக்க முறையில் உழைத்திட்டோர், உடன்பட்டிட்டோர் உலகிலும் உன்னதத்திலும் உயர்ந்தோராய்க் கருதப்படும் உத்தமர்களே. அவர்கள் உன்னதர் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிட்டோர் என்பது மறக்கவோ, மறைக்கவோ முடியாத செயல்கள்.

உறவு நெறியில் நின்றிட்ட பக்தனின் பாடல் வரிகள் பாடிடற்குரியது,

விசுவாசிகள் என்னும் கூட்டமுண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

. . . . திறவுண்ட வாசல். .

தொடக்காலத் திருச்சபையில் அப்பம்பிடுதல், இறைவேண்டல் ஏறெடுத்தல், ஒருமனம் கொள்தல் ஆகிய பண்புகளைக் கொண்டு தொழுகையில் மக்கள் திளைத்திருந்தனர். தொழுகையின் போது கைம்பெண்கள், எளியோர், நலிந்தோர், நசுக்கப்பட்டோர் அனைவரும் கவனிக்கப்பட்டனர். ஏற்றத்தாழ்வில்லா உறவு முறை தொழுகையில் உண்ணும் உணவுடன் பண்ணும் ஜெபமுடன் அனைவரும் மனித உறவில் மட்டுமல்லாது இறை உறவிலும் நடைதொடர்ந்தனர்.

ஆக, நம்முடைய தொழுகையில் உண்மை வேண்டும், தொழுகையில் உணர்வு வேண்டும், தொழுகையில் உறவு வேண்டும்.

அருள்திரு. D.S. **செல்வராஜ்**

**28-06-2015**

# சீடத்துவத்தின் மதிப்பு

## COST OF DISCIPLESHIP

தானி 6:11-23 | 2கொரி 6:1-10
திபா 34 | மாற் 10:35-45

**“...உங்களுக்குள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்.” மாற் 10:44**

***இறைவேண்டல் : எங்களை அன்புடன் ஏற்கும் கடவுளே, சீடர்களாய் நாங்கள் பின் தொடர எங்கள் தலைமைக் குருவாய் உம் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவை அருளினீர். நாங்கள் அவர்கள் போதனைகளை எங்களுள் பதித்து எம்மை வெறுத்து, சிலுவை சுமந்து பாதச்சுவடுகளைத் தொடரவும், கிறிஸ்தவ வாழ்வில் சீடத்துவத்தின் மதிப்பினை உணர்ந்து அனுதின வாழ்வில் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாய் வாழ அருள்வேண்டி, இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். ஆமென்.***

கடவுளின் அழைப்பைப்பெற்று அவரது சீடராய் வாழ்வது கிறிஸ்தவ பக்தி வாழ்வின் வழிமுறையாக திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவின் சீடராவதற்கு சிறப்பு அறிவோ, அந்தஸ்தோ தகுதிகளாக குறிப்பிடப்படமால் இறைவனிடமிருந்து வரும் அழைப்பே அடிப்படை தகுதியாக கொள்ளப்படுகிறது, இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் 12 பேர் அழைப்பு பெற்று,பேய்களைதுரத்தவும், நோய்களை நீக்கவும், நற்செய்தியை அறிவிக்கவும், நற்செயல் புரியவும்,நற்சான்றுபகரவும் அதிகாரம்பெற்று அனுப்பப்பட்டனர். அனுதினமும் அவர்கள்தன்னலம் வெறுத்து, சிலுவை சுமந்து, அவரையே பின் தொடர்ந்து, அவரைப் போலவே வாழ அறிவுறுத்தப்பட்டனர்.

கிறிஸ்தவ சீடத்துவத்தின் மதிப்பு குறித்து திருமறை கற்றுத்தரும் உண்மைகளை கவனத்தில் கொள்வது பக்தி வாழ்வுக்கு பயனளிக்கும்.

### *1. சூழ்நிலைகளால் மாறாத மதிப்பு :*

“.......... தமது வழக்கத்தின்படி நாள்தோறும் மூன்றுவேளையும் தம் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்தினார்,“ (தானி. 6:10).

பாபிலோன் பேரரசரால் சிறைபிடிக்கப்பட்ட தானியேலும், அவரது நண்பர்களும் சிறந்த புத்தி, நிறைந்த பக்தி மிக்க கொண்டவர்களாயிருந்தனர். எனினும் கல்தேயர் கல்வியைப்பெற கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களது அனுமதியின்றி பெயர்களையும் மாற்றினர்., விரும்பாத உணவை உண்ணவும், பானத்தைபருகவும், கட்டாயப்படுத்தப்பட்டனர். எனினும் அரசரது சிறப்புணவினாலும், திராட்சை இரசத்தாலும் தம்மை தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது, என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார். (வ.8). பாரசீகரின் சட்டங்கள் மாறாதிருப்பது போல தான் வழிபடும் கடவுளின் திட்டங்களும் மாறாதவையே (வ.15) என பாரசீகர் பாணியிலேயே எதிரிகளுக்கு பதிலுரை கொடுத்தார்,

தானியேல் தமது வழக்கப்படி நாள்தோறும் மூன்று வேளையும் முழந்தாளிட்டு மன்றாடினார், தானியேலின் பற்றுறுதி போரசர் தரியுவை சிந்திக்க வைத்தது. அத்துடன் சிங்கக்குகை நிகழ்வு அரசரின் சிந்தனையை சீரமைத்தது, ”நீ இடைவிடாமல் வழிபடும் உன் கடவுளால் உன்னை சிங்கங்களினின்று விடுவிக்க முடிந்ததா?” (வ.20) என்று கேட்டதற்கு, தானியேலின் பதில் ”ஆம்” என்பதாயிருந்தது. சீறும் சிங்கங்கள் சீடனுக்கு சிறந்த பாதுகாப்பே தவிர பயமுறுத்தலோ,பாதிப்போ அல்ல, விசுவாச வீரனுக்கு சாதகமில்லாத சூழ்நிலையிலும் சாதனைகள் புரிய முடியும் என்பதற்கு தானியேல் சிறந்தசான்று. சீடரின் பாடுகள் எளிதில் தாங்கக்கூடியவை; அவை சிறிது காலம்தான் நீடிக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் (2கொரி 4:17).

## 2. பாடுகளால் பாதிப்படையாத மதிப்பு :

“அனைத்து சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம் ”(2 கொரி.6:4)

சீடனின் அழைப்பு மதிப்புமிக்கது. ஆனால் உழைப்பு கடினமானது, வெறும் செழுமையை, வளமையை அளிக்கும் சாதனையாக நற்செய்தி இருந்திருப்பின் சிலுவை சுமக்க வேண்டிய கடினம் இருந்திருக்காது, ஆனால் இயேசு கிறிஸ்துவின் அழைப்போ நேரடியாக சிலுவையுடன் தொடர்புடையது (மத் 16 : 23-24). ஒரு குறிப்பிட்ட கால அளவு கொண்டது அல்ல, அனுதின அனுபவமாயிருப்பது கட்டாயம் (லூக். 9 : 22).

பாடுகளும், பலன்களும் இணை பிரியாதவைகள். பாடுகளில்லாத வாழ்க்கை கிறிஸ்தவ பக்தி வாழ்வாகாது. இதனால் தான் பாடுகளின்

போது பக்தர்கள் புகழ்பாடி இறைவனிடம் வேண்டினர் (அப். 16 : 24-25). பாடுகள் நம்மை பக்குவப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் மனித வாழ்வைப் பூரணப்படுத்திய பாடுகள் (எபி. 5 : 8) நமது பக்தி வாழ்வையும் பூரணமாக்கும் காரணியாகவே புரிந்து கொள்ள வேண்டும். இறைப்பற்றாளர் யோபு குறிப்பிடும் போது என்னை அவர் புடமிட்டால், நான் பொன் போல் துலங்குவேன்"என்கிறார். (யோபு. 23 : 10)

தூய பவுலார் சீடத்துவத்தின் மதிப்பு குறித்து கொரிந்து திருச்சபைக்கு அறிவு புகட்டுகிறார். சோதனை, இடர், நெருக்கடி, அடிக்கப்படுதல், அடைக்கப்படுதல் போன்ற அனைத்து வகையான நெருக்கடிகள் நடுவிலும் இறைமக்களை உலக மக்கள் எவரும் எந்தக்குறையும் கூறாவண்ணம், எவருக்கும் இடையூறு செய்யாமல் நாங்கள் கடவுளின் பனியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம்" என்கிறார். போற்றலும், தூற்றலும், புகழ்தலும், இகழ்தலும் எங்களை எந்த வகையிலும் பாதிப்பதில்லை. அனுதினமும் செத்துப் பிழைக்கிறோம் ஆயினும் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று பெருமிதப்படுகிறார். சிலுவை சுமக்கும் பாதையில் பாடுகள் எதிர் பார்க்கப்பட வேண்டியடிவையே (லூக். 9 : 23) என சிந்திப்பது நன்று.

### *3. சீடத்துவத்தின் மதிப்பு ஏற்பதில் அல்ல கொடுப்பதில்:*

"மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற்10:45).

இயேசு கிறிஸ்து தன் நெருக்கடியான திருப்பணிக்கிடையில் தனது பாடுகளையும், அதனால் உண்டாகும் பலன்களையும் குறித்து பல நிலைகளில் சீடர்களுக்கு தெளிவு படுத்தினார். திருவிழா காலத்தில் இயேசுவைக் காண ஆவலாய் வந்த கிரேக்கர்களைப் பார்த்து, "கோதுமை மணியானது மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவார். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்" என்றார் (யோவா. 12 : 20-26)

செபதேயுவின் மக்கள் எளிய முறையில் அரியணையைப் பெற ஆசை கொள்ளாமல், இயேசு கிறிஸ்துவின் நிபந்தனைக்கு இணங்கினர் (10 : 38). அவ்வாறே பிற்காலத்தில் நிறைவேற்றினர். யாக்கோபு இரத்த

சாட்சியானதுடன், யோவான் பல நிலைகளில் பாடுகளை ஏற்று இறந்தார். சீடர்கள் பாடுகளில்லாத, பாதுகாப்பை தேடாமல், விழுவதும், மடிவதும்,எழுவதும் சீடத்துவத்தின் தனி சிறப்பு என்பதை இயேசு கிறிஸ்து தெளிவு படுத்தினார்.

சிலுவையின் கீழ் பெருமூச்சும், வியர்வையும், இரத்தமும், தளர்வும், வீழ்ச்சியும் உண்டு. ஆயினும் உறுதியான குறிக்கோள் நோக்கி முன்னேற வேண்டிய பொறுப்பும் ஒரு சீடருக்கு உண்டு. போராடிப், போராடித்தான் முன்னேற வேண்டும். வெற்றி நமதே ஏனெனில் வெற்றி சிறந்தவர் நம் முன்னே நடந்துச் செல்கிறார். திரித்துவ கடவுளின் திருப் பெயரால் திருமுழுக்கு பெற்று, இயேசுகிறிஸ்துவின் திருவுடலையும், உதிரத்தையும் நற்கருணையில் ஏற்றுக்கொள்ளும் நாம் அவரது பாடுகளுக்கும் பங்காளிகள் என்பதை மறவாதிருப்போம். பாடுகளின் பாதைகளில் ஆசீர்வாதமே தவிர பாடுகளே இல்லாத ஆசீர்வாதங்களல்ல (யோ. 14 : 1) என்பதை மனதில் கொள்வோம்.

உண்மையான சீடத்துவத்தின் மதிப்பை சூழ்நிலை, பாடுகள், நெருக்கடிகள், இழப்புகள் எந்த வகையிலும் குறைக்காது, மாறாக உயர்த்தும் என்பதற்கு உத்தமனாகிய தானியேலும், பக்தனாகிய தூய பவுலாரும், நம் ஆண்டவருக்கு சான்றாளர்களே. நாமும் அந்நிலைக்கு உயர ஆசிப்போம். அருள் நாதரின் ஆசி பெற்று மதிப்புடன் வாழ்வோம்.

அருள்திரு. D. **ஜாண் ஜெபதாஸ்**

**01-07-2015**

*அருணோதயத் தொழுகை*
*தேசிய மருத்துவர்கள் நாள்*

# உன் நம்பிக்கை வீண் போகாது

திருமறைப்பாடம் : மாற் 5 : 22-43

"**அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விட்டு விடாதீர்.**" **மாற் 5:36**

உலகை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த மாவீரன் பேரரசர் அலெக்சாண்டர் ஆவார். அவர் மாசிடோனியாவிலிருந்து புறப்பட்ட போது தம் சொத்துக்களை எல்லாம் நண்பர்களுக்குத் தானமாய்க் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். அப்பொழுது உடன் இருந்தவர், "ஐயா எல்லாவற்றையும் இப்படித் தந்துவிட்டீர்களே உங்களுக்கு என்னதான் மிச்சம்" என்றார். அதற்கு அலெக்சாண்டர் புன்முறுவலுடன் உதிர்த்த வார்த்தை, "நம்பிக்கை." ஆண்டவர் இயேசு ஜெப ஆலயத் தலைவன் யவீருவைப் பார்த்து சொன்ன வார்த்தை "நம்பிக்கையை மட்டும் விட்டுவிடாதீர்". இன்று எல்லோர்க்கும் சொல்லப்படும் ஆலோசனை நம்பிக்கையை மட்டும் விட்டுவிடாதீர்கள். பொதுவாக, இரண்டு நம்பிக்கைகள் மிக முக்கியமானவை ஒன்று இறைநம்பிக்கை, மற்றொன்று தன்னம்பிக்கை. இவை இரண்டும் இரு கண்கள் போன்றவை வாழ்வின் அடிப்படையே நம்பிக்கை தான். எனவே தான் யோபுவும் அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாக இருப்பேன். (யோபு 13:15) எனத் தமது அசையா நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். இன்று நமக்குள்ள தலையாய பிரச்சனை உறுதியற்ற நம்பிக்கை. மழைக்காய் இறைவேண்டல் செய்யச் செல்லும் போது குடை இல்லாமல் ஜெபிக்க செல்வது போன்றது நமது நம்பிக்கை. யுத்தக் களத்துக்குப் பயிற்சி இல்லாமல் முன் அனுபவம் இல்லாமல் சென்ற தாவீது கோலியாத்தை எதிர்த்து நின்றது இறை நம்பிக்கை (1 சாமு. 17:45). மலையுச்சியில் நின்று கொண்டிருந்த ஒருவன் திடீரென்று கால் தவறி கீழே விழுந்தான் விழும் போது ஒரு மரத்தின் கிளையைப் பிடித்துத் தொங்கினான் கீழே பார்த்தால் பயங்கர பனிமூட்டம் ஒன்றும் தெரியவில்லை. எவ்வளவு ஆழத்தில் ரோடு என்பது அவனுக்குப் புலப்படவில்லை. எனவே உயிருக்குப் போராடிய அவன் பயந்து காப்பாத்துங்க, காப்பாத்துங்க எனச் சத்தம் போட்டான். யாரும் வரவில்லை, கடவுளை அழைத்தான், கடவுளும் பேசினார், என்னால் உன்னைக் காப்பாற்ற முடியும் என்று நம்புகிறாயா? அவனும்

அவசரமாக "நிச்சயமாக" என்று பதில் சொன்னான். அப்படியென்றால் நீ பிடித்து கொண்டிருக்கும் மரக்கிளையை விட்டுவிடு என்றார். அவனும் கடவுள் சொன்னதைச் சிந்தித்து விட்டு அச்சத்துடன் மீண்டும் மக்களைப் பார்த்து கூப்பிட ஆரம்பித்தான். இறுதியில் காப்பாற்ற யாரும் இன்றி அவன் கிளையில் தொங்கியபடி இறந்து போனான். மறுநாள் அந்த வழியில் சென்ற ஒரு சில மனிதர்கள் கிளையில் தொங்கிய உடலை கண்டு ஆச்சரியப்பட்டனர். காரணம் சில அடி தூரத்திலே தரை இருந்தது. பாவம் தரையில் குதித்து தப்பித்திருக்கலாம் எனப் பேசியவாறு சென்றனர் நம்பிக்கை மிக முக்கியமானது.

ஏன் ஆண்டவர் இயேசு யவீருவிடம் நம்பிக்கையை மட்டும் விட்டுவிடாதே என்று கூறினார் என்பதனை இன்று சிந்தனை செய்வோம்.

### *1. நடந்தது எதுவும் முடிவல்ல :*

இழப்பு என்பதும் தோல்வி என்பதும் வாழ்வின் முடிவல்ல ஒன்றின் முடிவில் இன்னொன்று தொடங்குகிறது. நடந்தது எதுவும் கடைசியானது அல்ல, நம்பிக்கையை விட்டுவிடாதே. யவீரு தன் மகளின் நோய் நீக்க இயேசுவை அழைக்க வருகிறார் இயேசுவும் அழைப்பை ஏற்று உடன் செல்கிறார். ஆனால் செல்லும் வழியில் யவீருவின் வேலைக்காரர் யவீருவிடம் வந்து மகள் இறந்து போனாள் என்று துக்கச் செய்தியைக் கூறுகிறான். அதனை உணர்ந்த இயேசு யவீருவிடம் நடந்தது எதுவும் முடிவல்ல என்பது போல் உன் நம்பிக்கையை விட்டுவிடாதே விசுவாசமுள்ளவனாய் இரு என கூறுகிறார். யவீரும் நம்பிக்கை கொள்கிறார் எப்படியென்றால் மகள் இறந்து போனாள் என்ற செய்தியைக் கேட்டவுடனே அலறி அடித்து இயேசுவை விட்டு முந்திக் கொண்டு ஓடாமல் துக்கச் செய்தியைக் கேட்ட பிறகும் இயேசுவின் கூடவே செல்கிறார். அவருக்குப் புரிந்தது நடந்தது முடிவல்ல. ஏன் நாம் மட்டும் நடப்பதை எல்லாம் முடிவாக எண்ண வேண்டும். நம்பிக்கையை உயிரோடு வைத்திருந்தால் நாம் பின் வாங்க மாட்டோம். யோபுவின் நம்பிக்கையைச் சிலந்திப் பூச்சியின் (யோபு 8:14) நம்பிக்கைக்கு ஒப்பிடுவார்கள். காரணம், நம்பிக்கையை உயிரோடு வைத்திருந்தார். எனவே தான், இயேசுவும் யவீருவிடம் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது என்பதற்காய் நம்பிக்கையோடு இரு என ஆற்றல்படுத்துகிறார்.

எட்மண்ட் ஹிலாரி என்பவர் எவரெஸ்ட் சிகரம் ஏறினார். அதில் தோல்வி அடைந்தார். பலரின் ஏளனச் சிரிப்பு அவரின் காதை வந்தடைந்தது. நடந்தது முடிவல்ல என்பதினால் மலையைப் பார்த்து எவரெஸ்ட் சிகரமே! நீ என்னைத் தோற்கடித்துவிட்டாய், நான் திரும்ப

வருவேன். திரும்பி வந்து உன்னைத் தோற்கடிப்பேன் ஏனெனில் இதற்கு மேல் உன்னால் உயர முடியாது. ஆனால் நான் நம்பிக்கையினால் இன்னும் வளர்வேன் என்ற உறுதியோடு சொன்னார். நடந்தது முடிவல்ல மீண்டும் வந்தார். எவரெஸ்டை அடைந்தார்.

## 2. முடியாதது என ஆண்டவர் முன் எதுவும் இல்லை :

நம்பிக்கை இருந்தால் அடுத்த நிமிடத்தை மகிழ்ச்சியாக்க முடியும். துக்கச் செய்தியைக் கேட்ட பின்னும் சற்றேனும் பதட்டப்படாமல் மீண்டும் இயேசுவையே பின் தொடர்ந்தார். மகளின் இறுதி சடங்கைக் குறித்து யோசிக்காமல் இயேசுவின் பயணத்தில் கூடவே செல்கிறார். காரணம், இயேசுவால் எல்லாம் கூடும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை, வெற்றி பெற வேண்டும். இறைநம்பிக்கையில் நாம் வழுவிப் போகக் கூடாது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இவர்களை நெபுகாத்நேச்சர் தீச்சூளையில் அக்கினிக்குள் தூக்கிப் போடுவதாய் மிரட்டிய போதும் அவர்கள் அசையவில்லை, காரணம் இவர்களிடம் இறைநம்பிக்கை அசையாமல் இருந்தது. எங்கு இறைநம்பிக்கை அசையாமல் இருக்கிறதோ அங்கு இறைவன் இருக்கிறார். 1982 -ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவை உலுக்கிய நிகழ்ச்சி ஒரு குழந்தையின் பிறப்பு. காரணம் அக்குழந்தை பிறந்த பொழுது இரண்டு கால்களும் இல்லை இரண்டு கைகளும் இல்லை பெற்றோரே வெறுக்கும் அவலம். பலரின் வார்த்தையை அலங்கோலமாய் குழந்தையை வேதனைப்படுத்தியதால் குழந்தை வளரவும் தடுமாறியது. ஆனால் தாயார் அக்குழந்தைக்கு ஆண்டவர் உன்னிலும் ஒரு திட்டம் வைத்திருப்பார் என்று நம்பிக்கையை ஊட்டி வளர்த்தார்கள். 15 வயதில் கிறிஸ்துவை அறிந்தான். யோவான் 9:3 அவன் உள்ளத்தைத் தொட்டது கை, கால் இல்லாதவளின் உள்ளத்தை ஒரு பஸ் நிகழ்ச்சி அசைத்தது. தானும் வாழ முடியும் என்று நீச்சல் பயிற்சி, computer பயிற்சி, வாயால் எழுதும் பயிற்சி எனத் தன்னை மெருகேற்றிக் கொண்டார். என்ன அதிசயம்! இன்றும் “Life without Limp” என்ற நிறுவனத்தின் இயக்குனராக சிறப்புறச் செயல்படுகிறார். நடந்தது முடிவல்ல. காரணம் இறைவனால் எல்லாம் முடியும். எனவே தான் யவீருவிடம் ஆண்டவர் இயேசு நம்பிக்கையை மட்டும் விடாதே எனக் கூறுகிறார். அதன் படி யவீருவும் இருந்ததால் இழந்த தம் மகளை மீண்டும் பெற்றுக் கொண்டார். நாமும் இழந்த இன்பத்தை மீண்டும் பெற முடியும். இயேசுவை நம்புவோம் இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**05-07-2015** *பொறுப்பாண்மை ஞாயிறு*

# பொறுப்பாண்மை : வெளிப்படைத் தன்மையும் கணக்கு ஒப்புவித்தலும்

## STEWARDSHIP : TRANSPARENCY AND ACCOUNTABILITY

விப. 36:2-7 பிலி. 4:10-20

திபா. 116:12-19 லூக். 19:11-27

**“அதற்கு அவர் அவரிடம் ‘நன்று நல்ல பணியாளரே மிகச்சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பத்து நகர்களுக்கு அதிகாரியாய் இரும் என்றார்”** லூக். 19:17

***இறைவேண்டல் :*** *ஆற்றல் நிறைந்த கடவுளே! உமது ஒரே திருமைந்தரை உலகிற்கு ஆனுப்பி எங்களுக்காக சிலுவை வரை அற்பணிக்க செய்தவரே! அவைகளில் உண்மையோடு செயல்பட்டு வெளிப்படைத் தன்மையோடும் செயல்பட்டு கணக்கொப்புவிக்கும் பொறுப்பாளர்களாய் செயல்பட அருள்தாரும். நீர் வழங்கியிருக்கும் படைப்பின் அருட்கொடைகளையும் வளங்களையும் பொறுப்போடு பயன்படுத்தி வாழ்வில் நிறைவையும் மகிழ்வையும் பெற உங்களை ஊடகங்களாக்க இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

பொறுப்பாண்மை என்பது ஒரு தனிநபர், அரசு, வணிக மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்புகள் பொறுப்புக்களை கையாள்வது தொடர்பான ஒரு கருத்து ஆகும். ஒரு தரப்பு பொறுப்புக்களை பெறும் பொழுது, அந்த பொறுப்புக்கள் தொடர்பாக அவர்கள் எடுக்கும் முடிவுகளும், செயல்பாடுகளுக்கும், விளைவுகளுக்கும் அவர்களே முழுமையான பொறுப்புடையவர்கள் என்பது பொறுப்பாண்மை ஆகும். பொறுப்பாண்மை தெளிவாக பொறுப்புக்களையும், அந்த பொறுப்புக்களை முறையாக செய்யாவிட்டால் அதற்கான தண்டனைகள் அல்லது விளைவுகளை வரையறை செய்கிறது.

‘இந்த உலகத்தில் மனிதனின் தேவைகள் சந்திக்கப்பட அனைத்து வளங்களும் உள்ளன. ஆனால் அவனது பொறுப்பற்ற தன்மைகளான போட்டி மனப்பாண்மை, பொறாமை, முறையற்ற செயல்களினால், தேவைகள் சந்திக்கப்படாமல் போய்விடுகிறது’ என மகாத்மா காந்தியடிகள் கூறினார்.

இன்றைய சமய, சமூக, அரசியல் பொருளாதாரத்தில் முறையற்ற செயல்களான லஞ்சம், ஊழல், மது, போதை, சுரண்டல் மற்றும் பதுக்கல் போன்றவை தீய சக்திகளாக தலை விரித்தாடுகிறது. இச்சூழலில் நாம் நமது உறவை இறைவனோடும், மனிதனோடும், இயற்கையோடும் பொறுப்புடன் இணைந்து வலுப்படுத்த அழைக்கப்படுகிறோம். பொறுப்பான்மையுடன் செயல்பட வேண்டும் என விரும்பும் ஒருவர் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஒரே நேரத்தில் சரியான முறையில் பணிசெய்ய இயலாது (மத். 6:24) என்பது இயேசு கிறிஸ்துவின் போதனை ஆகும். ஆண்டவரின் மக்களாக இருக்கின்ற நம்முடைய வாழ்விலும் பொறுப்பாண்மையுடன் செயல்பட திருமறை தரும் ஆலோசனையை சிந்திப்பது நன்மை பயக்கும்.

## *1. பொறுப்பாண்மையும் வெளிப்படைத்தன்மையும்* (Stewardship and Transparency) :

வெளிப்படைத்தன்மை என்பது பொறுப்புக்களிலும் செயல்பாடுகளிலும் இருக்கின்ற நேர்மைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒருவரிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பில் அவர் வெளிப்படைத்தன்மையுடையவராக இருந்தால் அவர் தன்னுடைய பொறுப்பில் உண்மையுள்ளவராக இருக்கிறார் எனக் கூறலாம்.

இஸ்ரவேல் மக்கள், சந்திப்புக் கூடார வேலைக்காகவும், அதிலுள்ள அனைத்து திருப்பணிக்காகவும் மோசேயினிடத்தில் காணிக்கைகளை கொடுத்தனர் (விப. 35 : 21) இதைப்பெற்றுக் கொண்ட மோசே ஆண்டவரிடத்திலிருந்து அறிவுக்கூர்மையும் தொழில் திறமையும் பெற்றிருந்த கலைஞர்கள் மோசேயினிடத்தில் காணிக்கைகளை பெற்று பணிகளைத் தொடர்ந்தனர். எப்போது அவைகள் போதுமானதாக அமைந்ததோ அப்போது அவர்கள் மோசேயிடம் அதை தெரிவித்தனர். மோசேயும் 'இனிமேல் தூயகத்துக்காக காணிக்கை கொண்டுவரவேண்டாம்' என கட்டளை பிறப்பிக்கின்றார் (விப. 3 : 6). இங்கு பொறுப்பாண்மையில் காணப்பட்ட வெளிப்படைத் தன்மையை காணமுடிகிறது. இது கிறிஸ்தவ பொறுப்பாண்மைக்கு மிக இன்றியமையாததாகும்.

இன்றைய காலச் சூழலில் லஞ்சம் ஊழல் போன்றவை மக்களின் வெளிப்படைத் தன்மை இல்லாததை குறிக்கின்றது. எங்கு வெளிப்படைத்தன்மை இருக்கின்றதோ அங்கே நீதியும் நியாயமும் உண்மைத்தன்மையும் இருக்கும்.

## 2. பொறுப்பாண்மையும் கணக்கொப்புவித்தலும் (Stewardship and Accountability):

கணக்கு ஒப்புவித்தல் என்பது ஒருவரிடத்தில் கொடுக்கப்பட்ட செயலுக்கு உண்மையாய் இருப்பது ஆகும். பொறுப்பை கொடுத்தவருக்கு அதைக்குறித்த அனைத்து விளக்கங்களையும் கேட்டு பெற்றுக் கொள்வதற்கு உரிமையும் உண்டு. எனவே பொறுப்பாண்மையுடையவர் பிறரது உடைமைகளை பொறுப்பாக பெற்றிருப்பவர். அவர் அதற்குரிய கணக்கை அதற்குரியவர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

தூய பவுல், பிலிப்பிய மக்களிடம் உதவிக்காக வேண்டினார். அதனை ஏற்றுக் கொண்ட மக்கள் எப்பாப்பிராதித்து வினிடத்தில் காணிக்கைகளை கொடுத்தனுப்பினர். இதற்காக மக்களுக்கு நன்றி சொல்லும் வகையில் நீங்கள் எனக்கு இருமுறை உதவினீர்கள், நீங்கள் கொடுத்தவைகளை பெற்றுக்கொண்டேன்; அதனால் நிறைவடைந்தவனுமாயிருக்கிறேன் என எழுதுகின்றார். (பிலி 4 : 18), இது பவுலடியாரின் கணக்கு ஒப்புவிக்கும் தன்மையை காண்பிக்கிறது..

ஆண்டவர் நம்மிடத்தில் கொடுத்துள்ள வளங்கள். கடமைகள். பதவிகள், பணிகள் இவைகளுக்கு பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம். இறைவன் நமக்கு தந்திருக்கும் இயற்கைவளங்கள், இவ்வுலகச் செல்வங்கள் அனைத்தையும் அவர் கொடுத்துள்ள கொள்கைகளின் அடிப்படையில் அவைகளை பயன்படுத்துவதும், கணக்கு ஒப்புவிப்பதும் நம்முடைய கடமையாகும்.

நாம் வாழும் இன்றையச் சூழலில் பொறுப்பாளர்கள் கணக்கு கொடுக்க தவறுவதினால் தங்கள் பொறுப்பாண்மையிலிருந்து தவறிவிட்டு தடுமாறும் நிகழ்வுகளும் அதிகமாகிக்கொண்டுவரும் இச்சூழலில் கிறிஸ்துவை பின்பற்றுகின்ற நாம் நம்முடைய பொறுப்புகளை மறுசீராய்வது அவசியம்.

டானியேல் வெப்ஸ்டர் (Daviel webster) 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க நாட்டில் சிறந்த அரசியல் மேதையாகவும்,ஆற்றல் மிகு பேச்சளாராகவும் திகழ்ந்தார். அவரை மரியாதை செய்யும் நோக்குடன் அவரது ரசிகர்கள் சிறப்பு விருந்திற்கு ஏற்பாடு செய்தனர். விருந்தின்போது ஒரு ரசிகர் அவரிடம் உங்கள் மனதில் குடிகொண்டிருக்கும் முக்கியமான சிந்தனை எது? என்று கேட்டார். மறுமொழியாக 'நான் கடவுளுக்கு

கணக்குக் கொடுக்கவேண்டியவன் என்ற சிந்தனையே என் மனதின் சிந்தனை என்றார். அதுபோல நம்மிடம் தரப்பட்டுள்ள பொறுப்புகளை குறித்து நாம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள் என்று பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்வோம்.

### *3. பொறுப்பாண்மையும் பிரதிபலனும்* (Stewarship and Reward):

குறுக்கு வழிகளில் செய்யப்படும் எந்த ஒரு செயலும் ஆண்டவர் விரும்பும் செயல் அல்ல. குறுக்கு வழிகளில் செயல்பட்டு பதவிகளையும், அதிகாரத்தையும், பொருளாதாரவளர்ச்சியையும் எட்டிப்பிடிப்பது உண்மையான பொறுப்பாண்மையின் பரிசு அல்ல. அப்பரிசு ஆண்டவரிடம் இருந்து வரும் நிலையான பிரதிபலன் அல்ல.

இவ்வுலகில் ஆண்டவர் நம்மீது வைத்துள்ள பொறுப்புக்களை உண்மையாய் நிறைவேற்றினால் அதற்குபிரதிபலன் உண்டு என்பதை லூக் 19 :11-27 வரையுள்ள பகுதி நமக்கு விளக்குகிறது. எஜமான் தன் பணியாளர்களிடத்தில் கொடுக்கப்பட்ட பொறுப்பை உண்மையாக நிறைவு செய்த இரண்டு பணியாளர்களை பாராட்டி சிறப்பான பிரதிபலனை கொடுக்கின்றார்.

பொறுப்புடன் உண்மையாய் பணிச் செய்வோருக்கு கடவுள் தரும் பரிசு அதிகமான பணிசெய்யும் வாய்ப்புக்களே என்பதை இப்பகுதி கற்றுத்தருகிறது. பொறுப்பற்றவர் தண்டிக்கப்படுவதையும் இந்நிகழ்வு நம்மை எச்சரிக்கிறது.

திருமுழுக்கு யோவான், ‘‘மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் அதற்காக நீங்கள் உங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்... உங்கள் சம்பளமே போதும் என்றிருங்கள்’’ என ஆலோசனை கூறுகிறார் (லூக். 3: 8-14). இது உண்மையான பொறுப்பாண்மைக்கு அடிப்படையாக அமைகிறது. இதனால் வரும் பிரதிபலன் சிறப்பானது.

எனவே உண்மையான பொறுப்பாண்மை வெளிப்படைத் தன்மையோடும், கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற சிந்தனையோடும் செயல்படும்போது சிறப்பான பிரதிபலனை ஆண்டவர் நமக்கு தருவார்.

அருள்திரு M.P. **விஜயகுமார்**

# இறையியல் கல்வி :
# நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்தலும்
## THEOLOGICAL EDUCATION : KNOWING AND DOING FAITH

| | |
|---|---|
| விப 3:1-12 | 2திமொ 2:1-13 |
| திபா 111 | யோவா 12:20-36 |

**"....என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்;.... அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்.... அவர்களின் துயரங்களை நான் அறிவேன்."** விப 3:7

***இறைவேண்டல் : நல் ஆயரராம் இறைவா, நீரே நல் ஆயராயிருந்து உண்மையை பயிற்றுவிக்கவும் அதன்படி வாழவும் எங்களை அழைத்திருக்கிறீர். நாங்கள் உமது திருவாக்கையும், திருவிருப்பத்தையும் அறிந்து மற்றவர்களுக்கும் அறிவிக்க, புரிய வைக்க வேண்டிய அறிவு நுட்பம், அறிவுத்திறனையும் தாரும். உண்மையுடனும் உளத் தூய்மையுடனும் உமக்குப் பணியாற்ற ஒப்படைப்புள்ள அனைவரையும் இறையியல் பயிற்சிக்காக தந்தருளும். அவர்கள் உமது திருவாக்கை புரிந்து அதை விவரித்துக் கூறும் வரங்களால் எல்லையினை அகலப்படுத்தி, அனைத்து மக்களையும் உண்மை, நீதி எனும் நிலையில் மகிழ்வுடனும், ஆயத்தங்களுடனும், சிறந்த உள்ளத்துனும் செயல்பட ஊக்கம் தர உன்னதர் இயேசுவில் வேண்டுகிறோம். ஆமென்.***

கல்வி என்பது 'கில்லுதல்' என்ற வேர்ச் சொல்லிருந்து உருவெடுத்தது. இதன் பொருள் 'தோண்டுதல்' என்பதாகும். இது தேடலின் வழி கிடைக்கும் ஓர் அரிய வாய்ப்பு. தேடல் என்பது கற்றலின் தொடர்முயற்சி. இது அன்றாட வாழ்வியற் பயிற்சியின் நிறைவு. கற்றல் பண்பாடு, பழக்க வழக்கம் மற்றும் புத்தகங்கள் வழியாக அமைகிறது. கற்றலுக்கு கேட்டல், அறிதல், சிந்தித்தல், தெளிதல், கூடல் எனும் ஐந்து படி நிலைகள் உள்ளன. "வாசிப்பதை ஆழமாக உள்வாங்கி யோசிப்பதன் வழியாக வெளிச்சமுறுவதேக் கல்வி" என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணியன் பூங்குன்றனார் கூறியுள்ளார். இதில் இறையியல் கல்வி சற்று ஆழமானப் பொருளைக் கொண்டுள்ளது.

இறையியல் கல்வி என்பது இறையுறவைப்பற்றியது. அதாவது, இறைவனோடு மனுக்குலம் கொண்டுள்ள உறவு பற்றியது. இந்த உறவு அடிப்படையில் இறையரசுக்கான தகவுகளை இவ்வுலகில் நிறுவ இறையியல் கல்வி பயன்படுகிறது. அந்த இறையரசில் சமன்செய்ய

வேண்டியது இறைசாயல் ஆகும். இம்முயற்சிக்கு இறையியல் கல்வி பாலமாக அமைகிறது. மட்டுமன்றி, திருமறையைப் பொருளுணர்ந்து இலட்சியக் கண்ணோட்டத்தோடு அறிவியல் சார்ந்து விளக்கவும் இறையியல் கல்வி பயன்படுகிறது. இறையியல் கல்வி ஒருமனிதர் மடமையைப்போக்கி அவரிடமிருந்து அனைத்து ஆற்றலையும் வெளிக்கொணரச்செய்கிறது, படிக்கக்கேட்ட முதலாம் ஒப்பந்த நூலில் இடம் பெற்றுள்ள விடுதலைப் பயண நூலின் இடம்பெறும் இஸ்ரேயலர் விடுதலை வரலாறு ஆண்டாண்டு காலமாக அடிமைத்தளையில் கிடந்த இஸ்ரயேலர்களின் நம்பிக்கையை அறிவிக்கும் இறைக்கல்வியாகும். இறையியல் கல்வியை சுருக்கமாக 'இறைக்கல்வி' எனவும் கூறலாம்.

வாழ்வில் நிலைகுலைந்து கொத்தடிமைகளாய்க் இடந்த இஸ்ரயேலர் எழுப்பிய அவலக்குரலைக் கடவுள் கேட்டு, அறிந்து, உள்வாங்கி, தெளிந்த பின்னர் விடுவிக்கும் பணிக்கு மோசேயை அழைத்த நிலை இறையியல் கல்வியின் அழுத்தமான தொடக்கமாகும். இவண் இதன் ஆழமான உண்மையினை சில படிநிலைகளில் சிந்திப்போம்.

### *1. நம்பிக்கையில் இணைக்கும் இறையியல் கல்வி :*

**(விப 3:8)**

உலக வரலாற்றுத்தாழ்வாரத்தில் அடிமைத்தனம் கோலோச்சிய வரலாற்று நிகழ்வுகளே அதிக பக்கம் இடம்பிடித்திருக்கின்றன. சிறுபான்மை ஆதிக்கவாசிகளின் பிடியில் பெரும்பான்மை மக்களின் வாழ்வு விளிம்புக்கு விரட்டப்பட்டன. இஸ்ரயேலர்களும் எகிப்தியர்களின் ஆதிக்கப்பிடியில் சிக்கி உரிமை மறுக்கப்பட்டவர்களாய், ஓரங்களுக்குத் தள்ளப்பட்டவர்களாய். முகவரி கிழிக்கப்பட்டவர்களாய், மனித மாண்பு அற்றவர்களாய் நடத்தப்பட்டனர். கோசேன் குடியிருப்புவாசிகள் (தொநூ .46:33-34) கொல்லைப்புறத்தில் அல்லோலப்பட்டதற்கு எடுத்துக்காட்டாக அன்றாடம் பளுவான வேலைகள் இவர்கள்மேல் திணிக்கப்பட்டன. எகிப்தியர் தங்களின் பொருளாதார மேன்மைக்காக இஸ்ரயேலர்களின் உழைப்புச் சுரண்டப்பட்டது(விப.1 :10-13). இஸ்ரயேலரின் விடுதலைக்கு யாரும் அக்கறைக்காட்ட முன்வராததால் அவர்களின் நம்பிக்கைக்கேள்விக் குறியானது. சொல்லால் வடிக்கமுடியாத அளவுக்கு சோதனைகள் அவர்களைத் தொட்டன. கடவுள் தங்கள் புலம்பலைக் கேட்பாரோ, தங்கள்மேல் கண்ணோக்கமாயிருப்பாரோ, தங்கெளுக்கெனத் தந்த உடன்படிக்கையை நினைவு கூர்வாரோ என எழுந்த கேள்விகளினால் மக்கள் நம்பிக்கையிழந்து நின்றனர் (விப 2:23). நம்பிக்கையிழந்து விரக்தியில் வீழ்ந்த இஸ்ரயேலரை நம்பிக்கையில் இணைக்க இடையீடு செய்கிறார்.

நீண்ட நாட்களாக அடிமைத்தளையில் கிடந்த அமெரிக்க வாழ்கருப்பர்களை விடுவிக்க இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற அமெரிக்க இறையியலாளர் மார்ட்டின் லுத்தார்கிங் என்பவரை இறைவன் பயன்படுத்தினார். 1963-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் நோக்கியப் புறப்பட்ட விடுதலைப் பயணமுடிவில் “எனக்கு ஒரு கனவு உண்டு” (I have a dream) என நம்பிக்கையோடு உரைத்த எழிச்சிமிகு உரையே அமெரிக்க வாழ் கருப்பர் இன விடுதலைக்கு கையெழுத்துப்போட வைத்தது. "நிச்சயமாகவோ முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண் போகாது” (நீதி. 23: 18) என்ற உறுதியுடன் முன்னேறச் சொல்லித் தருவதுதான் இறையியல் கல்வி.

பல துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளான இஸ்ரயேலர்களை நம்பிக்கையோடு காத்திருக்கும்படியும், கவலைகள் மற்றும் வறுமைநிலையிலும் நம்பிக்கை இழக்காமல் விழித்திருங்கள் எனவும் ஆபகூக் இறைவாக்கினர் கற்றுக்கொடுத்தார் (ஆப. 1: 2-9) . மாமன்னர் அலக்சாண்டர் தமது சொத்து அனைத்தையும் எளியவர்களுக்கு பகிர்ந்து கொண்டிருக்கும் போது அமைச்சர் ஒருவர் அவரைநோக்கி “எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் இறுதியில் மிச்சம் மீதி உமக்கு இருப்பதில்லை” எனக்கூறினார். “நம்பிக்கை என்னும் அழியாச் சொத்து என்னில் இருக்கும்போது இதைவிட பலமடங்கு சொத்தை என்னால் சம்பாதிக்க முடியும்" என்றாராம். நம்பிக்கை தரும் கல்வியே இவ்வுலகில் அனைத்து செல்வங்களுக்கும் மேலானது. இறைவன் இஸ்ரயேலர்களை நம்பிக்கையில் இணத்ததே (விப. 3:8) இறைக்கல்வியின் அடித்தளமாகிறது.

## *2. நற்செய்திப் பணியில் இணைக்கும் இறையியல் கல்வி:* (விப 3:10)

நற்செய்திப்பணியைப்பற்றி குருவானவர் கொடுத்த செய்தியால் கவர்ந்த பெண்மகள் ஒருவர் குருவானவரிடம்‘‘எனக்கு நற்செய்திப் பணியாற்ற விருப்பம்தான், ஆனால், எனக்கு பத்து குழந்தைகள் இருக்கின்றனர். அதனால் என்னால் எப்படி நற்செய்திப் பணி செய்யமுடியும் ? ‘‘எனக் கவலையுடன் கேட்டார். அதற்கு அந்த குருவானவர், "உங்களுக்கு நற்செய்திப் பணி செய்யும் ஆர்வத்தை கொடுத்த இறைவன் மக்களையும் சேர்த்தே கொடுத்திருக்கிறார். எனவே முதலில் உங்கள் பிள்ளைகளுக்கு நற்செய்தியைப் போதியுங்கள் உங்கள் வீட்டில் இணைந்து இறைவனை தொழுங்கள். அதுவே நீங்கள் செய்யும் பொருளுள்ளத் தொழுகை’’ என்றாராம். தொலைதூரத்தில் சென்று முன்பின் தெரியாதவர்களுக்கு நற்செய்திப் பணி செய்ய துவங்குவதற்கு

முன் முதலில் திருச்சபையின் உள்ளியல்பிலிருந்தே, அதாவது, ஒரு தனிக் குடும்பத்திலிருந்து, ஒரு திருச்சபையிலிருந்து ஒரு சமூகத்திலிருந்து தொடங்க வேண்டும் என்பது நற்செய்திப் பணியின் சாரமாகும்.

மறைபரப்புப்பணியின் அறைகூவலைத் தரும் "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்.... சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்" (லூக் 4:18) எனும் வாக்கின்படி சிறைப்பட்ட இஸ்ரயேலரை விடுவிப்பதே தம் தலையாய நோக்காகக் கொண்ட இறைவன், தம் இனக்குழுவினரிடம் இனமானப்பற்று கொண்டிருந்த மோசேயை அழைத்தார். நாணல்பெட்டியினுள் குழந்தையாய் தடாகத்தின் மேல் தவழ்ந்த மோசே சகல அதிகாரமும்பெற்ற இளவரசியின் அரவணைப்பில் வளர்ந்து (விப. 2:1-10), மீதியான் நாட்டில் ஆடுமேய்ப்பவராகத் தன்னை அடையாளப் படுத்தினார் (விப. 2:16-22). கோசேன் நாட்டினர் வறுமையில் வாடி வலுவிழந்து ஏகபோக எகிப்தியனால் திணிக்கப்பட்ட கடின வேலை கலையிழந்த மேனியை, குழி விழுந்த விழிகளைக் கண்டு பொறுக்க வொட்டாமல் தன் இனத்தைக் தாக்க வந்த எகிப்தியனை காபத்து செய்து மனித மாண்பைக் காக்கத் துடியாய் துடித்த மோசே தன் இனத்தவர் விடுதலைக்கு நற்செய்தியாகிறார் என்ற உண்மையைத் தள்ளி வைக்க இயலாது. இஸ்ரயேலருக்கு விடுதலையே நற்செய்தி. வாழும் கடவுளை வழிபட வாய்ப்பு கிடைப்பதே அவர்களுக்கு நற்செய்தி (விப 3:12) . இனமான விடுதலைக்கு இடம் கிடைத்ததே மோசேக்கு நற்செய்தி. சொந்த இன விடுதலைப்பணி செய்வதே மோசேயின் நற்செய்திப்பணி. 'இருக்கிறவராக இருக்கிறவர் நானே, தயக்கம் வேண்டாம் புறப்படு" என மோசேயிடம் கூறியதே நற்செய்திப் பணியில் இணைக்கும் இறைக்கல்விக்கு அடித்தளமாகிறது. தூயபவுல் தீமொத்தேயு ஒப்படைப்போடு பணிபுரிய நற்செய்தி தருகிறார் ( 2தீமொ. 2: 1-10).

ஒடுக்கப்பட்டோரின் உரிமை நிலை நிறுத்தப்பட யாரெல்லாம் உழைக்கின்றனரோ அவர்களே இயேசு கிறிஸ்துவின் சீடராகின்றனர் (எபி.11:25). ஆங்கிலிக்கன் சபைப் பேராயர் டெஸ்மெண்ட் டூடு (Desmond Tutu- 1931) பெயரில் தொடங்கப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ் 2015-ல் உலகெங்கும் 72 மில்லியன் ஏழைக்குழந்தைகள் உதவிபெறப் போகின்றனர் எனும் செய்தி அந்த எளியவர்களுக்கு நற்செய்தியாகிறதன்றோ.

### *3. நற்செயலில் இணைக்கும் இறையியல் கல்வி:* (விப 4:20)

"நல்ல சிந்தனைகள் சிந்திக்கக்கூடிய மனிதர்களைக் சென்றடைகின்றன; ஆனால் நற்செயல்களோ மனிதகுலம் முழுவதும் சென்றடைகின்றன" என்று எமிலி பிசில் கூறுகிறார். ஆயிரம்பேர்

கூட்டம்போட்டு இந்த உலகத்தில் எங்கும் குப்பை கொட்டிக்கிடக்கின்றது எனப்பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவர் மட்டும் துடைப்பத்தை எடுத்துப்பெருக்க ஆரம்பிப்பார் என்றால் அவரின் செயல்பாடுதான் இரும்பை இழுக்கும் காந்தத்தைப்போல அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும். நற்செயல்கள் எப்பொழுதுமே மிகப்பெரியத் தாகத்தை ஏற்படுத்தக்கூடியவை. ஏழைஎளியவருக்கும், விதவை அநாதைகளுக்கும் தீங்கு இழைக்காமல் நற்செயல்கள் செய்வதற்கான அழைப்பை இறைவன் இஸ்ரயேலர்முன் வைக்கிறார். (விப .22 :2066). நற்செயல் புரிவதற்கென்றே மனுக்குலம் படைக்கப்பட்டிருக்கின்றது (எபே. 2:10) என்கிறது திருமறை. நற்செயலில் முழுமையாக தம்மையே ஈடுபடுத்திய இயேசுவே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

மோசே தம் சொந்த மக்களை மீட்டெடுக்கும்பொருட்டு தம் மனைவியையும் தம் புதல்வர்களையும் ஒரு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு எகிப்துநாட்டுக்குத் திரும்பிச் சென்றார். கடவுளின் கோலையும் மோசே கையிலெடுத்தார் (விப. 4:20). வாக்களிக்கப்பட்ட நாடாகிய பாலும், தேனும் பொழியும் கானானுக்கு தம்மக்களை சேர்க்க வேண்டும் எனும் கடவுளின் திருத்திட்டத்தை நிறைவேற்றப் புறப்பட்டார். நற்செயல் செய்ய தயங்கிய, தடுமாறிய மோசேயை திடன்பெறச்செய்து நற்செயல் செய்ய செயல்படுத்தினார். இதுவே மோசேயை நற்செயலில் இணைக்க ஏற்படுத்திய இறைவனின் செயல். அடக்கி அடிமைப்படுத்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டி விடுதலைக்காகப்போராட அழைப்பு விடுவிக்கிறார் (விப. 4: 1). போரட்டம் மெதுவாக முன்னேறியது. மோசேயும் மக்களும் இணைந்து விடுதலைப்பணிக்காக செயல்படத் தொடங்கினர். நம்பிக்கையை வெளிப்படுத்திய மக்களுக்கும் தலைவனுக்கும் பார்வோன் விடுதலையை செயல்படுத்தினார். தன் வாழ்வு தன் வேலை என சுயமாக சிந்திக்கும் இக்காலத்தவருக்கு தம் அரசபோக வாழ்வைத்துறந்து தம்முன் கண்ட இஸ்ரயேலரை விடுவிக்க உழைத்த உழைப்பு நற்செயலுக்கு அடித்தளமாகிறது.

கிறிஸ்தவர்கள் பிறசமயத்தினரால் ஈர்க்கப்படக் காரணம் இறைக்கல்வியின் விளைவால் அவர்கள் வெளிப்படுத்தும் இறைவன்பால் கொண்டுள்ள நம்பிக்கையும், பெலன்குன்றியவர்கள் மீட்புக்கான நற்செய்திப்பணியும், நலிந்தவர்களுக்கு செய்யும் நற்செயல்களின் அடையாளங்களாக செயல்படுத்தும் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், சமூக பணிகள் போன்றவையன்றோ.

அருள்திரு. S. **வில்சன்**

**19-07-2015**

# இறைமக்கள் : உப்பும் ஒளியும்

## PEOPLE OF GOD: SALT AND LIGHT

| | |
|---|---|
| எசா 49 : 1-7 | எபே 5: 1-5 |
| திபா 27 | மத் 5 :13-16 |

**“நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்... நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்...” மத் 5:13,14**

***இறைவேண்டல் : அருள் நிறைந்த தந்தையே ! இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் வழியாக நீர் மானுடம் மீது உமது அன்பையும், உலகில் உமது மாட்சிமையையும் வெளிப்படுத்தியிருக்கிறீர். உம் வழியாக நாங்கள் உலகில் பாடுகளை ஏற்றுக்கொள்ளும் போது உம் திருப்பெயர் மாட்சிக்காக உப்பாகவும் ஒளியாகவும் சான்று பகர அருள் செய்தருள வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டிடுகிறோம் -ஆமென்.***

இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவில் கூறப்பட்டுள்ள பாக்கிய வசனங்களில் இறைமக்களின் பண்பு நிலைகளும் அவற்றின் விளைவான பேறுகளும் (Blessedness) விளக்கப்பட்டுள்ளன. இறுதியான பாக்கிய வசனத்தில் இறையரசின் மக்களுக்கெதிரான உலகத்தின் மனநிலையை (attitude) இயேசுகிறிஸ்து விளக்குகிறார் (வ. 10-12). அதைத்தொடர்ந்து இதற்கு நேர் எதிரான நிலை, அதாவது, இறையரசின் மக்கள் எவ்வாறு உலகத்துக்கு நல்ல தூண்டுதலாக (Inspiration, influence) மாற வேண்டும் என்றும் கூறுகிறார். இதற்கு ‘உப்பு’ மற்றும் ‘ஒளி’ ஆகிய உருவகங்களைப் பயன்படுத்துகிறார். இறை மக்கள் என்பவர்கள் கடவுளின் மக்கள். கடவுளையும், அவரது மைந்தர் இயேசு கிறிஸ்துவையும் நம்பி, அவர் விருப்பத்தின் படி செய்பவர்கள் (யோவா 1 : 12, மத் 5:9). அவர்களே இறையரசின் மக்களாக முடியும் (மத் 7 :21). இறைமக்கள் உலகத்திலுள்ள பிற மக்களை விட வேறுபட்டவர்களாக, கடவுளின் உயர் தன்மைகளை வெளிப்படுத்துபவர்களாக வாழ எதிர் பார்க்கப்படுகிறார்கள் (மத் 5: 38-48). நம் நற்செய்தி பகுதியில் இறைமக்களின் சான்று பகரும் வாழ்வு எனும் குறிக்கோள் தெளிவுப்படுத்தப்படுகிறது. ‘உப்பு’ மற்றும் ‘ஒளி’ என்ற உருவகங்கள் வழி கடவுள் எதிர்பார்க்கும் இறைமக்களின் சான்றான வாழ்வு பற்றி இங்கு சிந்திப்போம்.

## *1. உப்பின் சுவை வாழ்வு* (Flavour of salt) :

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?..." (மத் 5:13).

மனித வாழ்வையும், மனித உடலையும் பராமரிப்பதில் உப்பின் முக்கியத்துவத்தை மனிதர் உணர்வதில்லை. மனித உடலின் இரத்த ஓட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு உப்பு எப்போதும் உண்டு. உப்பின் அளவு குறைவதும் அதிகரிப்பதும் பல நோய்களுக்கும், இறப்புக்கும் காரணமாகலாம்.

திருமறையில் உப்பு பல நிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கைக்கு அடையாளமாகவும் (லேவி 2:13), தூய்மையாக்கும், குணமாக்கும் பொருளாகவும் (2 அர 2 :20, 21), உணவுக்கு சுவைதரும் பொருளாகவும் (யோபு 6:6), உணவு கெடாமல் பாதுகாக்கும் பொருளாகவும் (லூக் 14: 34, 35) கூறப்பட்டுள்ளது.

உப்புக்கு பல குணங்கள் உண்டு. திருமறையில் சொல்லப்பட்டுள்ள மேற்கூறிய தன்மைகளில் இயேசு கிறிஸ்து பேசும் சூழலுக்கு பொருத்தமானது 'சுவை' அல்லது Flavour ஆகும். சுவையற்ற உணவுக்கு சுவை தரும் தன்மை உப்புக்கு உண்டு. "... உப்பு உவர்ப்பற்றுப் போனால் ..." என்ற வாக்கியம் சிந்திக்கத் தகுந்தது. சுவையற்ற உணவு உப்பின்றி உண்ணவும் முடியாது (யோபு 6:6).

உப்பின் வழியாக இயேசு கிறிஸ்து கூறும் உண்மை என்ன? இறையரசின் மக்கள் உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என உணர்த்துகிறார். அதாவது, உலகத்தை கடவுளுக்கு ஏற்புடையதாக, கடவுள் விரும்பும் நிலைக்கு மாற்ற வேண்டியது இறைமக்களின் கடமையாக எதிர்பார்க்கிறார். உலகத்தில் உள்ள தீமைகளான சுவையற்ற தன்மைகளை இறைமக்கள் தங்கள் உவர்ப்புத்தன்மையால் (Flavour) மாற்றி நல்ல சுவையை உருவாக்க வேண்டும். உப்பு அதன் உவர்ப்பை (சாரத்தை) இழந்தால் பயனற்றதாய் வெளியே கொட்டப்படும். அது போல இறைமக்கள் உலகத்திதின் தூய்மைக்கோடுகளால் சுவை இழக்காமலிருக்க வேண்டும் (1 கொரி 15:33). இழந்தால் பயனற்றவர்களாய்த் தள்ளப்படும் நிலை ஏற்படும். நமது நீதியான, சுவையான வாழ்வு பிறரின் மாற்றத்திற்கு காரணமாய் அமைய வேண்டும்.

பத்து நீதிமான்கள் இருந்தால் சோதோமை அழிக்காமல் விடுவதாக கடவுள் ஆபிரகாமுக்கு கூறியதும் (தொ நூ 18:32), நீதியைக் கடைபிடித்து உண்மையை நாடும் ஒரு மனிதரைக்கண்டுபிடித்தால் எருசலேமை மன்னிப்பதாகக் கடவுள் கூறியதும் (எரே 5:1) பிறருக்காக சுவைதரும் வாழ்வு வாழ நம்மைத் தூண்டுகிறது.

## *2. ஒளியின் நற்செயல் வாழ்வு* (Good work of light) :

ஒளி இருளை அகற்றும். மறைவாய் இருப்பதை வெளிப்படையாக்கும் தன்மை கொண்டது. ஒளி நன்மை நிறைந்தது. நீதியையும் உண்மையையும் உலகுக்கு காட்டும் (எபே 5:9). இறைமக்கள் இருளிலிருந்து ஒளிக்கு நேராக வாழ அழைக்கப்பட்டவர்கள் (1 பேது 2:9). உண்மையான, முழு முதல் (true and original) ஒளி இயேசு கிறிஸ்துவே (யோவா 8:12). இந்த ஒளி கடவுளையும், அவரது மைந்தர் இயேசு கிறிஸ்துவையும் நம்பும் அனைவரின் உள்ளங்களிலும் தரப்பட்டிருக்கிறது (2 கொரி 4:6). எனவே, இறைமக்கள் இந்த உண்மை ஒளியை மாசற்றதாய் உலகுக்கு காட்ட வேண்டும். ஒளியின் தன்மை நற்செயலும், இருளின் தன்மை தீமையும் ஆகும். உண்மை ஒளி ஒளி பெற்ற மக்கள் தங்கள் நற்செயலின் வழி அந்த ஒளியை உலகுக்கு காட்ட வேண்டும்.

a) இறைமக்களின் ஒளி (நற்செயல்) பிறரின் பார்வையில் அமைய வேண்டும். அதாவது, விளக்கு விளக்குத்தண்டின் மீது இருப்பது போலவும், மலையின் மீதுள்ள பட்டணம் மறைக்கப்படாமல் இருப்பது போலவும் அமைய வேண்டும் (மத் 5:14,15). ஒருவர் பிறரிடம் காட்டும் பரிவான செயல்களால் அது அங்கீகரிக்கப்படுகிறது (யோவா 13:35).

b) இறைமக்கள் பெற்ற ஒளியைப் பிரதிபலிக்க வேண்டும். அதாவது, விளக்குத்தண்டின் மீதுள்ள விளக்கு அனைவருக்கும் ஒளி வீசுகிறது. காரணம், அது மூடிவைக்கப்படவில்லை, வெளிப்படையாய் இருக்கிறது. ஏற்றப்பட்ட விளக்கு தன்னில் இருக்கும் ஒளியை மறைக்காமல் பிறர்பயன்பட ஒளிர்வது போல இறை மக்கள் பெற்ற ஒளி உலக மக்கள் முன் ஒளிர (பிரகாசிக்க) வேண்டும் (மத் 5:16). இருளில் ஒளிர்ந்து உலகின் தீமை எனும் இருள் அகற்றுபவர்களாய் வாழ வேண்டும் (பிலி 2 : 14 - 15).

c) ஒளியாய் வாழ்வதன் நோக்கம், மக்கள் அனைவரும், பிறமக்களும் கடவுளைப் போற்றிப் புகழவேண்டும் என்பதாகும். அதாவது,

ஒளிபெற்ற மக்கள் நற்செயல் என்னும் ஒளி வீசும் போது பிறமக்களும் அவ்வொளியை ஏற்பார்கள். நமது செயல்கள் பிறருக்கு பயனுள்ள, சான்றான செயல்களாக அமைந்தால் நம் வழியாய் பிறமக்கள் கடவுளைப் போற்றுவர் (மத் 5:16, 1 பேது 2:11-12).

ஏசாயா இறைவாக்கினர் வழி ஆண்டவர் கூறும் வார்த்தையிலும் இஸ்ரேயல் கடவுளிடம் திரும்பி வரும் போது இஸ்ரயேலை பிறமக்களுக்கு ஒளியாக ஏற்படுத்துவதற்காக கடவுள் கூறுகிறார் (எசா 49:6). நாம் ஒளி பெற்ற மக்கள். எனவே ஒளியின் மக்களாய் பிறர் பயன்பட வாழ வேண்டும் (எபே 5:1-8).

சுவை தரும் உப்பாக, நன்மை தரும் ஒளியாக இவ்வுலகில் வாழ்ந்தால் வாழ்வின் குறிக்கோள் நிறைவாகும். கடவுளின் திருப்பெயர் புகழப்படும்.

அருள்திரு. S.E. **சிமியோன்**

**26-07-2015**

# கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பட்டது அருள்பொழிவுத் திருப்பணி

## ORDAINED MINISTRY : MARKED BY THE WOUNDS OF CHRIST.

1சாமு. 22:12-23 | கலா 6:11-18

திபா 56 | யோவா 21:15-19

**“.......என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்.”** கலா. 6:17

***இறைவேண்டல் : தந்தையாம் கடவுளே! இவ்வுலகில் பல தரப்பட்ட பணிவிடைக்காக மக்களை தெரிந்துகொண்டு வழி நடத்துபவரே, ஆயர் பணிவிடையின் வாயிலாக பரிவும், இரக்கமும் மக்களை சென்றடையவும், கிறிஸ்துவின் காயங்களால் அளையாளமிடப்பட்டது என்பதை அறிந்து செயல்படவும், உமது அரசின் வளர்ச்சியை இப்பணி உருவாக்கிடவும் பேரருள் தர தாழ்மையுடன் வேண்டுகிறோம் அன்பின் இறையே, ஆமென்.***

Ordination என்ற ஆங்கிலச்சொல் 'Order' என்பதிலிருந்து பிறந்தது. 'திருச்சபையின் திருப்பணியினை ஒழுங்குபடுத்தும் அலுவலுக்கென்று மக்களை ஏற்படுத்துவது என்பதுதான் இந்த சொல்லின் பொருளாகும். எந்த ஒரு சமுதாயத்திலும் ஒழுங்கு என்பது தன்னியல்பாக வருவதில்லை. ஆகையால் இத்தகைய ஓர் அலுவலை ஏற்படுத்துவது தேவையாகிறது, திருச்சபை என்பது அழைக்கப்பட்டு , தெரிவு செய்யப்பட்ட மக்களால் ஆன அமைப்பு இப்படிப்பட்ட சமுதாயத்திற்கும் அழைப்பும் தெரிவுமே ஒழுங்கை கொண்டு வருவதற்கு அடிப்படையாக அமைகிறது. இயேசு கிறிஸ்துவும் தம் இறப்பிற்கு பிறகு இப்பொறுப்பை தொடரவேண்டும் என்பதற்காகவே 12 சீடர்களைத் தெரிந்தெடுத்தார். தாம் தெரிந்தெடுத்த சீடர்களை இறைப்பணிக்கென அனுப்பும்போது ”இதோ ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன் ”(மத். 10: 16) எனக் கூறினார். மேலும் “உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்'' (மத். 28: 20) எனத் தொடர்ந்து தம் உடனிருத்தலின் நம்பிக்கையைக் கொடுக்கின்றார்.

“திருச்சபையால் அருட்பொழிவு பெற்ற திருப்பணியாளர்கள் சாக்கிர மெந்தை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஆன்மிக ஆற்றல்

அவர்கள் மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது" என John of Paris கூறுகின்றார் (The priesthood is the spiritual power conferred on the ministers of our church by Christ for the purpose of dispensing the sacraments to the faithful). எனவே திருச்சபையின் திருப்பணிக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் திருச்சபையின் சாக்கிரமெந்துகளை செயல்படுத்துவதற்கான சமயம்சார்ந்த உரிமைகளையும் பெற்றுக்கொள்கின்றனர். உரோமன் கத்தோலிக்க திருச்சபையினர் அருட்பொழிவை சாக்கிரமெந்தாகவே இன்றும் பின்பற்றி வருகின்றனர்.

எனவே அருள்பொழிவு திருப்பணி கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பட்டு கொடுக்கப்பட்டதாகும். இத்திருப்பணியின் தன்மைகள் எப்படிப்பட்டதாக அமையவேண்டும் என்பதை சிந்திப்போம்.

### *1. அருள்பொழிவுத் திருப்பணி : கிறிஸ்தவ சேவைக்கான அழைப்பு*

கிறிஸ்தவத்தின் மையம் சிலுவையே. சிலுவையின் வழியாக உலகம் கிறிஸ்துவுக்காக சிலுவையில் அறையப்பட்டுள்ளது. இச்சிலுவையின் வழியாக சுயம்சார்ந்த சிந்தனைகள் மறைந்து சேவை மனப்பான்மை உருவாக்கப்படுகிறது. மேலும் சிலுவை கிறிஸ்துவின் சுய படையலையும் மானிடத்தின் மீது கொண்ட கிறிஸ்துவின் அன்பையும் வெளிப்படுத்துகிறது. தூய பவுலார் கலாத்தியர் திருமுகத்தில் கிறிஸ்துவுக்காக தம் பணியை முக்கியப்படுத்தி 'என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம் (கலா 6:17) எனக் கூறி கிறிஸ்துவின் காயங்களை எப்போதும் தம் உடலில் சுமந்து வருவதாக குறிப்பிடுகின்றார். அந்த தழும்புகள் கிறிஸ்துவுக்காக என்பதை நினைவுகூரும் போது அது கிறிஸ்துவைப்போல அன்பினால் இச்சமுதாயத்திற்கு சேவை செய்ய நம்மை தூண்டுகிறது.

பவுலடியாரின் எழுத்துக்களில் சிலுவை என்பது மாற்றத்தை கொண்டுவருகிற நிகழ்வு எனக் கூறுகின்றார். அதை உறுதிப்படுத்த ''உலகைப்பொறுத்த வரையில் நானும் சிலுவையில் அறைப்பட்டிருக்கிறேன்''. (கலா 6: 14(6)) என எழுதுவதினூடாக கிறிஸ்துவுக்காக காயங்களை ஏற்று அவர் பணியை தம் புதிய வாழ்வினூடாக செயல்படுத்தி வருகின்றார் எனக் குறிப்பிடுகிறார். எனவே தூயபவுல் கடவுளின் சார்பாக மானிடத்திற்கு சேவை செய்வதற்காகவே தம்மை ஆண்டவர் தெரிந்தெடுத்தார் என்பதில் தெளிவாக இருந்தார்.

எனவே அருட்பொழிவு திருப்பணியும் கிறிஸ்துவின் சிலுவையினூடாக ஏற்றுக்கொண்ட காயங்களால் அடையாளமிடப்பட்டு சேவை செய்ய நம்மை தூண்டுகிறது.

### *2. அருட்பொழிவுத் திருப்பணி : காயங்களை ஏற்றுக்கொள்ள அழைப்பு*

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தாம் ஓர் நல்ல ஆயன் என்பதை தம் உரையாடலினூடாக வெளிப்படுத்துகின்றார் . 'யோனாவின் மகன் சீமோனே (யோவான் 21:15) என அழைத்து அருட்பணியின் பொறுப்பை கொடுக்கின்றார் மத்தேயு 16:16-19 இல் இயேசு கிறிஸ்து பேதுருவை திருச்சபைக்கு அடித்தளமாய் இருப்பாய்'' எனக் கூறுகின்றார். அதனடிப்படையிலேயே ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் பேணி வளர்க்கின்ற கட்டளையையும் பெற்றுக்கொள்கிறார் (யோவா 21:15-16 ), இங்கு பேதுருவுக்கு கொடுக்கப்படுகின்ற அழைப்பு இயேசுகிறிஸ்து தம் மந்தைகளிடத்தில் அன்பு செய்ததுபோல, அவரும் இயேசுவின் மந்தைகளிடத்தில் அன்பு செய்ய வேண்டும் என்பதாகும் (யோவான் 10:11-18). இந்த அழைப்பு கிறிஸ்துவைப்போல வாழ்ந்து அவருக்காக காயங்களை ஏற்றுக்கொள்வதாகும். அதன் வழியாக கடவுளை மாட்சிப்படுத்த வேண்டும் என்ற அழைப்பும் பேதுருவுக்கு கொடுக்கப்படுகின்றது.

எனவே அருட்பொழிவு திருப்பணி கிறிஸ்துவைப்போல காயங்களை ஏற்றுக்கொள்கின்ற பணி என்பதனை இயேசுவுக்கும் சீமோன் பேதுருவுக்கும் இடையேயான உரையாடல் தெளிபடுத்துகின்றது.

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த நாட்களில் ஜெர்மன் நாட்டைச்சார்ந்த படை வீரர்கள் வெரோணாவின் வடபகுதியிலுள்ள கியாசா என்ற மலைப்பட்டணத்தார் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தபடியால் அவர்களை சுட்டுக்கொல்ல சென்றனர். இதை அறிந்த Domenico Mercante என்ற அருள்தந்தை அவர்களுக்குப்பதிலாக தன்னை சுட்டுக்கொல்லும்படியாக தானாக முன்வந்து தம் விருப்பத்தை தெரிவித்தார். அதை ஏற்றுக்கொண்ட ஜெர்மானியர்கள் அவரை சுட்டுக்கொல்ல படைவீரரில் ஒருவருக்கு கட்டளை பிறப்பித்தனர். ஆனால், அந்த படைவீரனோ, நான் ஒரு அருள்தந்தையை சுட்டுக்கொல்லமாட்டேன்", என மறுப்பு தெரிவித்தார். இதைக்கேட்டு கோபமடைந்த ஜெர்மானியர்கள் படைவீரரையும், அருள்தந்தையையும் ஒன்றாக வைத்து சுட்டுக்கொன்றனர்.

எனவே அருட்பொழிவு திருப்பணியானது பிறருக்காக காயங்களை ஏற்றுக்கொள்ளும் அருட்பணி என்பது தெளிவாகிறது.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

# நூறு மடங்கு ஆசி

திருமறைப்பாடம் : தொநூ 26:12-24

**"ஈசாக்கு அந்த நாட்டில் பயிரிட்டு அதே ஆண்டில் நூறுமடங்கு அறுவடை செய்தார்..."** தொநூ 26:12

திருமறையில் ஒரு சிறப்பான மனிதர் ஈசாக்கு. எப்படியெனில், ஈசாக்கு ஒருவரே நூறுமடங்கு நன்மை பெற்றவர் என்பது திருமறையின் சான்று. வாழ்வில் பல மடங்கு முன்னேற வேண்டும் என்பது நம் அனைவரின் விருப்பம். அதற்காக பல முயற்சிகளை எடுக்கிறோம். ஆனால் ஈசாக்கு நூறு மடங்கு ஆசியைப் பெற என்ன செய்தார் ?

மனித குணங்களை தேள், பசு, சந்தனக்கட்டை போன்றவைகளின் தன்மைகளோடு இணைத்துக் கூறுவார்கள்.

***தேள் :*** நன்மை ஏதும் செய்யாமல் பிறரைக் கொட்டிக் கொட்டிக் காயப்படுத்துவதே இதன் வேலை. இதனை போன்று சில மக்கள் சமுகத்துக்குப் பயன் எதுவும் கொடுக்காமல், பிறரை வார்த்தையால் கொட்டிக் கொட்டி வேதனைப்படுத்துவதையே தொழிலாய்க் கொண்டிருப்பார்கள். இவர்கள்மனித மிருகங்கள்.

***பசு :*** நாம் எந்த அளவிற்கு உணவு கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு பசு பால் கொடுக்கும். இதைப் போன்று கிடைக்கும் ஆதாயத்தைக் கணக்கு போட்டுப் பார்த்து அதன் அடிப்படையில் உழைப்பவர்கள். இவர்கள் சாதாரண மனிதர்கள்.

***சந்தனக்கட்டை :*** தனக்கு என்று எந்தப் பலனையும் எதிர் பாராமல் தன்னைத் தேய்த்து பிறருக்கு மணம் தரும் பண்பினைக் கொண்டது சந்தனம். இதனைப் போன்று மற்றவர்கள் நன்மை பெற வேண்டும் என்று தம்மையே விட்டுக் கொடுத்து வாழ்பவர்கள், இவர்கள் மனிதரில் புனிதமானவர்கள்.

சந்தனக்கட்டை போன்று பிறர் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று, ஈசாக்கு தாம் தோண்டிய கிணற்றை, பெலிஸ்தியர்களும், கேராருர், மேய்ப்பர்களும் சொந்தம் பாராட்டிக் கேட்ட பொழுது அவர்களோடு எதிர்த்து சண்டைக்குச் செல்லாமல் விட்டுக்கொடுத்ததினால் ஈசாக்கு இறைவனால் நூறு மடங்கு ஆசீர்வதிக்கப்பட்டார்.

திருமறையிலும், லோத்துவுக்காய் ஆபிரகாம் விட்டுக்கொடுத்த பொழுது ஆபிரகாம் உயர்த்தப்பட்டார். "விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை, கெட்டுப் போக நினைப்பவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை." எதையும் சண்டையிட்டுச் சாதிக்காமல் விட்டுக் கொடுத்துச் சாதிக்கப் பழகுவோம். இது நூறு மடங்கு உயர்வு பெற வழி வகுக்கும். குரங்கைப் பிடிக்கும் முறைகளில் ஒன்று, மரப் பொந்துகளில் குரங்கு விரும்பி சாப்பிடும் பொருளை வைத்து விடுவர். குரங்கும் பொந்துக்குள் கையைவிட்டு வேகமாகப் பொருளைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று, மிக வேகமாய்க் கையைவிட்டு பொருளைப் பற்றி கொள்ளும். பின் பொந்தில் இருந்து கையை எடுத்தால் கை வெளியில் வராது, முயற்சிக்கும், ஆனால் தோற்கும். காரணம், குரங்கு தம் கையில் உள்ளதை விட்டுக் கொடுக்காது. விட்டுக் கொடுக்காத குரங்கு மாட்டிக் கொள்ளும்.

### *விட்டுக் கொடுப்பதற்குத் தடையாய் இருப்பவை எவை ?*

எதற்குப் பிரச்சனை ? என்று விட்டுக் கொடுக்க நினைப்பதுண்டு, ஆனால் நம்மில் பலருக்கு மனம் வருவதில்லை. பொதுவாக விட்டுக் கொடுக்க முடியாமைக்கு சில தடைகள் மனிதரில் உண்டு. அவைகள் :

1) ஆசை, 2) நான் செய்வதே சரி என்ற இறுமாப்பு

### *(1) ஆசை :*

கடலில் கப்பல் செல்கிறது. தண்ணீர் இருந்தால் தான் கப்பல் செல்ல முடியும். தண்ணீர் இல்லாமல் கப்பல் செல்ல முடியாது. அதே வேளையில் அத்தண்ணீர் கப்பலின் வெளியே தான் இருக்க வேண்டும். உள்ளே வந்தால் கப்பல் மூழ்கிவிடும். அதைப்போன்று, வாழ்க்கையில் ஆசை என்பது மனதின் உள்ளே வந்துவிடக் கூடாது. வந்துவிட்டால் மனிதன் எழுந்திருக்கவே முடியாது. ஈசாக்கு நூறுமடங்கு ஆசி பெற முதல் காரணம், அவர் "ஆசையைக் குறைத்துக் கொண்டார்"(26:14,15). எப்படியென்றால், தாம் வெட்டின கிணற்றை பெலிஸ்தியர் வந்து மூடின பொழுது அந்தப் பெலிஸ்தியரை எதிர்த்து நிற்காமல், தம் கிணறு போய்விட்டதே எனக் கவலை கொள்ளாமல், அடுத்த முயற்சியில் இறங்குகிறார். ஆசை இல்லாததினால் சோர்வை உருவாக்கவில்லை. ஆசை இல்லாத மனிதனால் தான் விட்டுக்கொடுக்க முடியும். இன்று மனிதனின் ஆசைகள் அவனைப் பல்வேறு இன்னல்களுக்கும், குழப்பங்களுக்கும் ஆளாக்குகின்றன. பொன்னாசை உறவை வெட்டும்; பொருளாசை பகையை மூட்டும்; பெண்ணாசை மிருகமாக்கும்; பேராசை உயிரை வாங்கும். வேர்கள் பாதிக்கப்படாதவரை வெட்டப்பட்ட மரம்

மீண்டும் வளர்ந்து தழைப்பது போல, மனதில் புதைந்துள்ள ஆசை வேரோடு பெயர்க்கப்படாத வரை விட்டுக் கொடுத்தல் நடைபெறாது. பகைவனை அடக்குபவனை விட ஆசைகளை அடக்குபவனே மாவீரன். ஆசையை அடக்கி ஈசாக்கைப் போல் விட்டுக் கொடுத்தால் நூறு மடங்கு ஆசி பெறலாம்.

ஆஸ்திரியா நாட்டில் மேரிகவுண்டெஸ் ஆர்கோ என்ற பெண்மணி தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு தங்கப் பெட்டி கிடைத்தது. அதைத் தான் போகும் இடங்களுக்கெல்லாம் மேரி மறைத்து எடுத்துச் செல்வார். 1948 - ம் ஆண்டு, ஜீன் 23 -ம் நாள் பேருந்தில் பயணம் செய்யும் போது இருக்கையின் மேல் இருக்கும் லக்கேஜ் வைக்கும் இடத்தில் தங்கப் பெட்டியை வைத்துவிட்டு, அதன் கீழே அமர்ந்து கொண்டார். பேருந்து குலுங்கவே தங்கப்பெட்டி தலையில் விழுந்து அங்கேயே இறந்தாள். ஆசை அதிக ஆபத்தானது என்பது இங்கு தெளிவாகிறது.

### *(2) நான் செய்வதே சரி என்ற இறுமாப்பு :*

விட்டுக் கொடுக்க முடியாமைக்கு இரண்டாவது தடை “ தான் செய்வது மட்டும் சரி, மற்றவர்கள் செய்வது எல்லாம் தவறு” என்கிற தவறான எண்ணம். திருமறையில் ஈசாக்கு தம் தந்தை வெட்டின கிணறு (26 :15) என்ற எதிர்பார்ப்போடு கிணறு வெட்டுகிறார். ஆனால் பெலிஸ்தர், கேராரூர், மேய்ப்பர்கள் சொந்தம் பாராட்டிய பொழுது எதிர்த்து சண்டையிடாமல் விட்டு விட்டுச் செல்கின்றார். தான் நினைத்தது சரி என வாதிடாமல் விட்டுக் கொடுத்த ஈசாக்கு நூறுமடங்கு ஆசியைப் பெறுகிறார். “நிறை குடம் தளும்பாது, குறை குடம் கூத்தாடும்.” கனிகள் நிறைந்த மரம் எப்போதும் வளைந்தே நிற்கும். அறிவு நிறைந்த மக்கள் கனிகள் நிறைந்த மரத்தை போன்றும், நிறை குடத்தை போன்றும் அடக்கமாக இருப்பார்கள். “யாரொருவர் தன்னைப்பற்றி மித மிஞ்சி நினைத்துக் கொள்கிறாரோ அவருடைய வீழ்ச்சிக்கு அவரே காரணம்” என்று ஷேக்ஸ்பியர் கூறுகிறார். “நான்” என்கிற எண்ணம் தான் எவைகளையும் விட்டுக்கொடுக்க விடுவதில்லை. பார்வோன் இஸ்ரவேலரை விடாது துரத்த காரணம் “நான்”. நான்தான், நான்தான் என்று முன்னிலைப் படுத்தினால் பின்னுக்குப் போய்விடுவோம். நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தின கல்லைப் பார்த்து தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. “ஏன் எனக்கு மதிப்பில்லை? நானும் ஒரு கல் தானே” என்று ஓலமிட்டது. அப்பொழுது தெருவில் கிடந்த கடப்பாரை கூறியது,

ஏய் குறுணி ! காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக் கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால் இரத்தினக்கல் அப்படியா ! நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலை காட்டியதே இல்லை. எங்கோ மண்ணில் மறைவில் அது தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. நான்தான், நான்தான் என முன்னிலைப்படுத்தும் நீ பின்னாகச் செல்கிறாய். தன்னை வெளிப்படுத்தாத இரத்தினம் முதன்மையாகிறது. மழைத்தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடி வந்து விடுகிறது. அது போல இறைவனுடைய அருளானது தற்பெருமையும், கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை, பணிவுள்ளவர்களின் உள்ளத்தில் தான் தங்கி நிற்கும்.

''நான்'' விலகினால் தான் விட்டுக் கொடுக்க முடியும். விட்டுக் கொடுப்பது லாபமே தவிர நஷ்டமல்ல. விட்டுக்கொடுப்பதினால் மகிழ்ச்சி கிடைக்கும். அன்பு கிடைக்கும், நண்பர்கள் கிடைப்பார்கள். ஒரு முறை இரண்டு சகோதரர்கள் வயல் வரப்பு பிரச்சனைக்காய் நீதிமன்றம் சென்றார்கள். நாட்கள் மாதங்களானது. மாதங்கள் வருடங்களானது. ஆனால் பிரச்சனை தீர்ந்த பாடில்லை. இவர்கள் வழக்குரைஞர்களுக்குப் பணம் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். ஒருநாள் மூத்தவன் ஒரு பலாப்பழத்தோடு தம் வழக்குரைஞரைப் பார்க்கச் சென்றான். அவர் வீட்டை அடைந்ததும் மெதுவாய் கேட்டை திறந்து உள்ளே வர முயற்சித்தார். அப்பொழுது வீட்டின் மேல்மாடியில், இவரின் வருகையை கவனித்துக் கொண்டிருந்த வழக்குரைஞரின் மனைவி, வழக்குரைஞரிடம், ''எவ்வளவு நாளா இந்த மனுஷன் வரப்புப் பிரச்சனைக்காய், உங்களை பார்க்க வந்திட்டுருக்காரு, பாவம், அவருடைய கேஸை முடிச்சு அனுப்பக்கூடாதா,'' எனக் கேட்டாள். அவரோ ''அவன் கேஸை முடிச்சா நமக்குத் தினம் தினம் பலாப்பழம் யார் தருவார் ? என்றார். இப்படி இவர்கள் பேசுவதை வாசலில் வந்தவர் கேட்க, ஒரு கணம் திகைத்துப் போனார். தம் சொந்த சகோதரனுக்குக் கொடுக்காத நாம் வழக்குரைஞருக்கு கொடுக்கிறோமே, என யோசித்தவராய், திரும்பி தம் வீட்டிற்கு சென்றார். தம் கையில் இருந்த பலாப்பழத்தை இரண்டாக வெட்டி, தம் மகளிடம், '' இதை கொண்டு சித்தப்பாகிட்ட கொடுத்து, அப்பா தப்பு செய்திட்டாங்களாம், வரப்பு உங்களுடையதாம், அதனால அப்பா கேஸை வாபஸ் வாங்க போறாங்களாம்'' என்று கூறி அனுப்பினான். அவளும் போய் அப்பா தந்த பலாப்பழம் என்று அப்பா சொன்னதைச் சொன்னதும், தம்பி ஓடிவந்து அண்ணனை அணைத்துக் கொண்டு

அழுதாராம். "நான்" என்பது மாறி, விட்டுக்கொடுத்தால் எப்பொழுதுமே ஒரு தனி மகிழ்ச்சி தான். நான் விலகி நாம்உருவானால் தான் உறவு வளரும்.

ஈசாக்கு தான் தோண்டிய கிணற்றை விட்டுக் கொடுத்ததினால் நூறு மடங்கு ஆசி பெற்றார். இயேசு கிறிஸ்து "ஒருவர் உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேல் உடையையும் எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள்" என்பது விட்டுக்கொடுத்தலையும், அது கடவுளைப்போல நிறைவுள்ளவர்களாய், அதாவது, ஆசி பெற்றவர்களாய், வாழ்வதற்கு அழைத்துச் செல்லும் என்கிறார் (மத். 5:40,48). நாமும் விட்டுக் கொடுத்து ஆசி பெற்று, நிறைவுடன் வாழ்வோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**02-08-2015**

# அருள்பணி : கடவுளின் வேதனையைப் பகிர்தல்

**MISSION : SHARING GOD'S PAIN**

எசா 6:1-8 திப 9 10-18
திபா 40 1-13 லூக் 10 1-11

**"...யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?"** எசா 6:8

***இறைவேண்டல் :*** *அனைத்து ஆற்றலும் நிறைந்த அன்பின் இறைவா ! கிறிஸ்து வழியாக எங்களை வெறுமையாக்கி, தன்னலமற்ற திருப்பணி செய்யவும், கடவுளின் வேதனையைப்பகிரவும் அறைகூவல் தந்திருக்கின்றீர். அநீதியினால் தாக்கப்பட்டு துயர் அனுபவிக்கும் மக்களோடு இணையவும் அவர்களின் துயர்துடைக்கும் கருவியாக திருச்சபை செயல்படவும், ஆற்றல்படுத்தும். இம்மக்கள் தங்கள் போரட்டத்தில் உம்மைக் கண்டு சிலுவைக்கும், உண்மையான திருப்பணிக்கும் வழியைக் காண அருள் செய்யும். சிலுவை வரை தன்னை தாழ்த்திய இயேசு கிறிஸ்துவில் வேண்டுகிறோம். ஆமென்.*

மனுக்குலம் முழு வாழ்வை அடைவது கடவுளின் திருத்திட்டம். அதற்கு கடவுள் அந்தந்த காலத்தில் இறைவாக்கினர்களை, அரசர்களை, சீடர்களை மற்றும் அப்போஸ்தலர்களை தெரிந்து கொள்கிறார். இவர்கள் வழி கடவுள் செயல்படுவதே அருட்பணி ஆகும். இந்த அருட்பணி வழி மனித வாழ்வு முழுமையடைய தடையாய் இருப்பவைகளை கடவுள் அறிந்து தமது வேதனையை பகிர்கிறார். நடைமுறையில் நாம் எவற்றின் மீது அதிக அன்பும் கரிசனையும் காட்டுகிறோமோ அதற்காக நமது வேதனையை மற்றும் கரிசனையைப் பகிர்ந்து கொள்கிறோம்.

## *1. அருட்பணியின் முதன்மை - தூயநிலை*

**(Priority of Mission is Holiness) : (எசா 6:7)**

"அதனால் என் வாயைத் தொட்டு, "இதோ இந்த நெருப்பு பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது" என்றார். (எசா. 6:7) மனிதம் புனிதமாக வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். இந்த விருப்பத்திற்கு எதிரான செயல்கள் அனைத்தும் கடவுளுக்கு வேதனையை உருவாக்கும் செயல்களாகும். எனவே மனிதன் பாவத்திலிருந்து விடுதலைபெற கடவுள் தாமே துன்பங்களை ஏற்று வேதனைப்படுகிறார். அவரது அருட்பணியின்

முதன்மை என்பது தூய்மை நிலையே. நாம் எவற்றில் எல்லாம் எவ்வாறு தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை இறைவார்த்தை வழி புரிந்துகொள்ள எசாயா இறைவாக்கினரின் அழைப்பு முன் உதாரணமாக உள்ளது. அதில் தூய்மையே கடவுளின் மிக சிறப்பான தன்மையாக விளக்கப்படுகிறது. அத்தோடு திரித்துவ கடவுள் அறியப்படுவது தூய்மை நிலையில் என்பதை பின்வரும் பகுதிகள் தெளிவுபடுத்துகிறது.

தந்தையாம் கடவுள் தூயவர் (லூக். 1 : 49, யோவா. 17 : 11)

மைந்தராம் கடவுள் தூயவர் (லூக். 1 : 35, அப். 3 : 14)

தூய ஆவியாராம் கடவுள் தூயவர் (மத். 1:18 , லூக். 1:15)

மேலும் நம்மை குறித்த கடவுளின் அழைப்பும் விருப்பமும் தூயநிலை. (1தெச. 4:3,7, லேவி. 20:7,8). "நீங்கள் தூயவராய் இருங்கள். ஏனெனில் நான் தூயவர்." கடவுளால் கழுவப்பட்டு நாம் தூயவராக்கப்பட்டவர்கள் என்றும் திருமறை கூறுகிறது. (1 கொரி. 6:11, லேவி. 11:45, 1பேது. 1:16). எனவே நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர்களும் தூய மக்களினமாகவும் மாற்றப்பட்டிருக்கிறோம். (1 பேதுரு 2:9,10 இத்தூய நிலை கடவுளை காண உதவுகிறது.

## *2. அருட்பணியின் முதன்மை – அமைதி* (Priority of Mission is Peace) :

கடவுளின் புனிதமான பண்புகளில் ஒன்று அமைதி. எனவே அவர் சமாதான காரணர் எனப்படுகிறார். இதனை அவரது மீட்பின் செயல்களான அவரது பிறப்பு, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் நிகழ்வுகளில் புரிந்து கொள்ள முடிகிறது. சமாதானமற்ற நிகழ்வுகளை கடவுள் கண்டு வேதனையும் கரிசனையும் உடையவராய் தம்மை வெளிப்படுத்துகிறார். பின் வரும் திருவசனங்கள் சமாதானத்தின் முதன்மையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

எசா. 9 : 6 . . . . அமைதியின் அரசர்

எசா. 53 : 5 . . . . சமாதானத்தின் ஆக்கினை

மத். 5 : 9 . . . . அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். . . .

யோவா. 14 : 27. . . . அமைதியினை உங்களுக்கு விட்டு செல்கிறேன் . . .

உரோ. 14 : 17. . . இறையாட்சி என்பது நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாக கொண்டது. 1பேதுரு 3:10-11-ல் வாழ்க்கையில் இன்பம் காண வழி காட்டும் ஆலோசனை மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அத்தோடு 2தெச. 3 : 16 ல் அமைதியை அருளும் ஆண்டவர் . . . உங்களுக்கு அமைதி அளிப்பாராக என்றும் கூறப்பட்டுள்ளது.

அநீதியன் செயல்களால் அமைதியினை இழந்து நிற்கும் வேளையில் நீதியின் வழி அமைதியினை நிலைநாட்ட கடவுள் வேதனைப்படுகிறார். நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் கடவுளின் ஆளுகையின் செயல்களை செய்வதாக ஆண்டவர் கூறுகிறார் (மத். 5: 10).

### 3. அருட்பணியின் முதன்மை போதிப்பதும் கற்றுக்கொடுப்பதும் (Priorty of Mission is Preaching and Teaching) :

ஆண்டவரைப்பற்றி அறிவிப்பதும் கற்றுகொடுப்பதும் அருப்பணியின் இரண்டு கண்கள் போன்றது ஆகும். “என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்” எனத் தூய பவுலார் வழி நிறைவேற்ற போகும் தம் திருப்பணித் திட்டத்தை ஆண்டவர் வெளிப்படுத்துகிறார் (அப் 9: 16). தவறான பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், விடமுடியாத தீய பழக்கங்கள் இவைகளில் இருந்து விடுதலை பெற போதனை அவசியமாக உள்ளது. எனவே கடவுள் திருவுளம் பற்றி கூறிய அவருடைய வார்த்தைகளை கேட்டு மனுக்குலம் முழு வாழ்வுக்கு நேராக மாற்றம் பெற கடவுள் கரிசனைக் கொள்கிறார். இதனை பின்வரும் திருவசனங்கள் தெளிவுப்படுத்தியது. எசா. 55 : 10,11 - “மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. . . அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டு செல்லும் வாக்கும் இருக்கும்” யோவா. 1 : 14 - “வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடி கொண்டார். . .”

மத். 28:18,19- “விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது.. . . நான் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள் இதோ, உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என்று கூறினார். அத்தோடு மத். 24: 35-ல் “விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா.” எனப் படிக்கிறோம். எனவே கடவுளின் வார்த்தையினை அறிந்தும் அறியாதவர்கள் போல நடந்து கொள்வோமானால் நமக்கு ஓர் நியாயத்தீர்ப்பு உண்டு. என்னை புறக்கணித்து நான் செய்வதை ஏற்றுக் கொள்ளாதவருக்கு தீர்ப்பளிக்கும் ஒன்று உண்டு. . . அது தண்டனை தீர்ப்பு அளிக்கும். எனவே அருட்பணி வழி முழு வாழ்வை பெற முதன்மை, தூய்மை நிலை ஆகும். அமைதியோடும் ஆண்டவர் கற்று தந்தவைகளை அறிவிப்போம். அதுவே நாம் கொள்ளும் கரிசனையாக கடவுளின் வேதனைகளை பகிர்ந்து வாழ்வோம் இது நமது வரலாற்றில் நிகழ்ந்த அநேக நற்செய்தியாளர்களின் அனுபவம் எனலாம்.

அருள்திரு. அறிவர். A.R. **செல்லையா**

**09-08-2015**

# திருமணத்தை மதித்தல்

## HONOUR MARRIAGE

மலா 2:13-16 1கொரி 13:1-14
திபா 45 மாற் 10:2-9

**“உனக்கும் உன் மனைவிக்கும் உன் இளமையில் நிகழ்ந்த திருமணத்திற்கு ஆண்டவர் சாட்சியாய் இருந்தார்.”** மலா 2:14

***இறைவேண்டல் :*** *குடும்பங்களை வடிவமைக்கும் கடவுளே, அன்பைப் பகிரும் நிலையில் ஆணையும், பெண்ணையும் சிறப்பாய்ப் படைத்து திருமண உடன்பாட்டில் அமைந்திருக்கும் அனைவர் மேலும் உமது முகத்தின் வெளிச்சம் வீசுவதாக. அவர்கள் ஒருவரிலொருவர் மகிழவும், மகிழ்விக்கவும், மதிப்பளிக்கவும் அருள் செய்வீராக. அவர்களை நம்பிக்கையினால் நிறைத்து, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ வாய்ப்பருள வேண்டுதல் செய்கிறோம். ஆமென்.*

வாழ்க்கை என்ற பயணத்தில் திருமணம் மிக முக்கியமான நிகழ்வு ஆகும். இது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனிதமான சமூக அமைப்பு. திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்ட முறை ஆகும். ‘திரு' என்றச்சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு போன்ற பொருள்த் தருகின்றது. எனவே அத்தகைய அழகு, செல்வம், செம்மை, சிறப்பு ஆகியவை மணமக்களிடையே சேரவேண்டும் என்பதால் ’திருமணம்’ என்றச்சொல் பண்டைய நாளிலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றது. திருமணம் என்பது இன்ப உணர்விற்குத் தீனிபோடும் முயற்சி மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் இன்பம் துன்பம் இரண்டிலும் சமபங்கிட்டு மனிதரின் அறக்கடமையை நிறைவேற்றத் தொடரும் முதல் நிகழ்ச்சி ஆகும்.

ஓர் ஆணும் பெண்ணும் மன அளவிலும், உடல் அளவிலும் ஆன்மிக அளவிலும் சமூக அளவிலும் ஒன்றிணைந்து அன்பிலும் தோழமையிலும் நாள்தோறும் வாழ இறைவன் முன்னிலையில் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை தான் திருமணம். திருமணம் நடைபெறாமல் ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வது திருச்சபைக்கும் நம் நாட்டின் சட்டத்திற்கும், பண்பாட்டிற்கும் ஏற்புடையதல்ல.

இன்றைய திருமறைப்பகுதியில் இறைவாக்கினர் மலாக்கி (மல்கியா) சமூக சீர்கேடுகளுக்கு எதிராகக்குரல் கொடுக்கிறார். அதாவது, இன்றையச்சூழலில் பெருகி வருவது போல அன்று மணவிலக்கு அதிகமாகக் காணப்பட்டது. எனவே மணவிலக்கு திருமணத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்துகின்றது. திருமணத்திற்கும். அதன் நிரந்தரமான, நிலையான உறவுக்கும் ஆண்டவரே சான்றாக இருக்கின்றார். மேலும் கணவனும் மனைவியும் இணைந்தே முழு ஆளுமையை உருவாக்குகின்றனர் என்கிறார்.

இன்றைய நம் தலையங்கம் திருமணத்தை மதித்தல் என்பதாகும். திருமணத்தை ஒருவரும் அற்பமாய் எண்ணாமலும், தவறான சிந்தனையுடன் செய்யாமலும், கருத்தோடும் இறைவேண்டலோடும் திருமணம் ஏற்படுத்தப்பட்டிருப்பதன் இறை நோக்கத்தைக் கருத்திற் கொண்டு செய்வது சிறப்பு இத்தைகைய திருமணத்தை மதிக்க நம்மிடம் தேவையானவை எவை?

## *1. இறை அச்சம்* (Fear of God) :

"ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறு பெற்றோர்" (திபா 128:1).

குடும்ப வாழ்வில் இறை அச்சம் மிக மிக அவசியம். இறை பயம் இறைவனின் ஆசியைத்தரும். திருமண வாழ்வில் மகிழ்ச்சியைத்தரும். கடவுளுக்கு அஞ்சி நடத்தல் நன்மைத்தரும் என்று திருப்பாடல் ஆசிரியர் தனது 128-ம் பாடலில் கூறுகின்றார். இறை பயம் உள்ளவர்களாக வாழச் செய்ய வேண்டியவை :

i) ***இறை வேண்டல் :***

திப 2:42-ல் தொடக்ககால திருச்சபை மக்கள் இறைவேண்டலில் தரித்திருந்தார்கள். இறை வேண்டல் குடும்ப வாழ்வின் தேவைகளை இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ள உதவுகிறது. இறைபயம் உடையவர்களாக நம்மை மாற்றுகிறது.

இணைத்திருமுறையில் தோபித்து ஆகமம் 8-ஆம் அதிகாரத்தில் தோபியா என்பவர் சாரா என்பவரை;த் திருமணம் செய்துக் கொள்கிறார். இவர்கள் தங்கள் திருமண வாழ்வை தொடங்கும் முன் ஆண்டவரை நோக்கி தங்களைக் காத்திடுமாறு வேண்டினர். அவர்களின் வேண்டுதலாவது: "எங்கள் மூதாதையரின் இறைவா, உம்மை போற்றுகிறோம்" என்று தொடங்கி, "என்மீதும் இவள் மீதும் இரக்கம் காட்டும். நாங்கள் இருவரும் முதுமை அடையும் வரை இணைபிரியாது

வாழச்செய்யும்'' என்று வேண்டுதல் ஏறெடுத்து, இருவரும் இணைந்து ''ஆமென் ஆமென்'' என்றுக்கூறினார்கள். இத்தகைய வேண்டுதல் அவர்களுக்கு இறை ஆசியைத்தந்தது.

ii) ***இறைவார்த்தையின்படி வாழ்தல் :***

திருமறையைக் கற்று அதன்படி வாழ்தல் அவசியம். யோவா. 2:5-ல் கானா ஊரில் நடைபெற்ற திருமணத்தில் திராட்சை இரசம் குறைபட்ட போது இயேசு கிறிஸ்துவின் தாய் பணியாளர்களிடம், ''அவர் உங்களுக்கு சொல்வதையெல்லாம் செய்யுங்கள்'' என்றார். இயேசு கிறிஸ்து சொன்னதை செய்து ஆசி பெற்றனர். கடவுளின் வார்த்தையாகிய மன்னாவை கற்று, திருச்சபை தொழுகைகளை நேசித்து கடவுளைத்தொழுது கொண்டு இறைபயத்துடன் வாழ்ந்து திருமணத்தை மதித்து இறை ஆசி பெறுவோம்.

## 2. அன்பு (Love) :

''ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' திருமணத்தை மதிக்கின்ற ஒவ்வொருவரும் அன்புடன் வாழ்தல் அவசியம். இதைத்தான் இயேசுகிறிஸ்து ''ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' என்றார் (யோவா. 13:34). அன்பு நிறைந்த கணவன், பாசம் நிறைந்த மனைவி, கீழ்ப்படிந்து அறிவிலும் ஞானத்திலும் வளரும் குழந்தைகள் இவர்கள் குடும்பத்தின் அடித்தளங்கள்.

எப்படி ஒரு வீடு செங்கற்களால் கட்டப்படுகின்றதோ, அப்படியே குடும்பம் அன்பு என்னும் கற்களால் கட்டப்படவேண்டும். அன்பு இருக்கும் இடம் வீடு போன்றது. அன்பு இல்லாத இடம் விடுதி போன்றது. வீட்டில் குடும்பம் தங்கும். விடுதி பலர் வந்து போகும் இடம். குடும்பம் இணைந்திருப்பது பணம், செல்வம், அந்தஸ்து ஆகியவற்றால் அல்ல. மாறாக அன்பு நிறைந்த இதயங்களால் தான். அன்பு இருந்தால் குடும்பம் சுடர்விளக்கு. அன்பில்லையேல் அணைந்த விளக்கு.

யோபு 2: 9-ல் அன்பற்ற மனைவி யோபுவிடம் "கடவுளைப் பழித்து மடிவதுதானே?" என்றார். எனவே யோபு, ''என் மனைவிக்கு என் மூச்சு வேறுபட்டிருக்கிறது'' (யோபு 19:17) என்று வேதனையோடு கூறுகிறார். அன்பின்மை வேதனையை ஏற்படுத்துகிறது.

மாற் 10:7,8-ல் கணவன், மனைவி இருவரும் ஒன்றித்து அன்பு செலுத்த வேண்டும் என்று ஆலோசனை தருகிறார் இயேசு கிறிஸ்து.

அன்பு இல்லையென்றால் ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் போல ஆகிவிடுவேன் என்று தூய பவுலார் கொரிந்தியருக்கு கூறும் அறிவுரையில் கூறியுள்ளார் (1கொரி 13 :1). அத்துடன் அன்புடன் வாழ்வது நன்மை தரும் என்பதை 1கொரி 13-ம் அதிகாரத்தில் கூறுகிறார். இதைதான் பக்தன், ‘‘அன்பே பிரதானம். சகோதர அன்பே பிரதானம்’’ எனப் பாடுகின்றார்.

எனவே அன்புடன் வாழ்ந்து திருமணத்தை மதித்து நல்ல குடும்பத்தைக் கட்டியெழுப்ப முயற்சிப்போம்.

### *3. புரிந்து கொள்ளுதல்* (Understanding) :

குடும்ப வாழ்வில் விரிசல்கள் பெருகிவிட்ட காலகட்டம் இது. கடவுள் மணவிலக்கை ஆதரிப்பவர் அல்ல. அதை வன்மையாக கண்டிக்கிறார் என்பதற்கு இன்றையத் திருமறைப்பகுதிகள் நமக்கு ஆதாரம். பிரச்சனை இல்லாத திருமண வாழ்வு அமைய புரிந்து கொள்ளுதல் தேவை. புரிந்து கொள்ளுதல் இல்லையேல் திருமண வாழ்வு இனிமையை அல்ல கசப்பையே ஏற்படுத்தும்.

ரூத் தனது மாமியார் நகோமியைச் சரியாகப் புரிந்து கொண்டார். எனவேதான் மாமியாரைப்பின் தொடர்ந்து வந்து ஆசியைப் பெற்றார் (ரூத் 1) இத்தகையப் புரிந்து கொள்ளுதல் இன்றையக் குடும்பத்தில் தேவை. கணவன், மனைவி, மாமியார், மாமனார், பிள்ளைகள் இடையில் உண்மையாகப் புரிந்து கொள்ளுதல் இருந்தால் மகிழ்ச்சி உண்டு.

புரிந்து கொள்ளுதல் இருக்கும் இடத்தில் விட்டுக் கொடுத்தல் தாமாக வந்துவிடும். இயேசுகிறிஸ்துவின் தாய் மரியாள் யோசேப்பு ஆகியோர் திருமண வாழ்வில் புரிந்துகொள்ளுதல் இருந்தபடியால் இயேசு கிறிஸ்து பிறக்கும் வரை யோசேப்பு தன் ஆசைகளை விட்டுக்கொடுத்தார். தன் சந்தேகத்தை விட்டு விட்டார். கண்ணும் கருத்துமாகத் தன் மனைவியைப் பாதுகாத்தார் (மத். 1:18-25).

புரிந்து கொள்ளுதல் நம்பிக்கைத்துரோகத்தை மறையச் செய்கிறது. ‘நம்மை ஒன்றாக இணைத்தவர் கடவுள்’ என்ற புரிந்து கொள்ளுதல் இருக்கும்போது எவரும் மணந்த மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டார் (மலா. 2:14,15) என்று மலாக்கி இறைவாக்கினர் தெளிவுபடுத்துகின்றார்.

புரிந்து கொள்ளுதல் உள்ள இடத்தில் சந்தேகம் இல்லை. நான் என்ற ஆணவப்பேச்சு இல்லை, சுயநலம் இல்லை. வன்முறை இல்லை. மணவிலக்கு இல்லை. மாறாக விட்டுக் கொடுத்தல், பரிவு, அரவணைப்பு, மகிழ்ச்சி, ஆகியவை உண்டு. எனவே ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு திருமண வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்த முயற்சிப்போம்.

அன்பர்களே! ‘‘மணமுறிவை நான் வெறுக்கிறேன்....... மணமுறிவு செய்கிறவன் வன்முறையை மேலாடை கொண்டு மறைக்கிறான்....... ஆகையால் எச்சரிக்கையாயிருங்கள்’’ (மலா. 2:16) என்று மலாக்கி இறைவாக்கினர் வழியாக கடவுள் எச்சரிக்கிறார். எனவே, இறைபயத்துடன், அன்புகாட்டி, புரிந்து கொண்டு திருமணத்தை மதித்து வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாய் நடத்தி நற்சான்றுடன் வாழ்ந்து நல்ல சமுதாயத்தை உருவாக்கி மகிழ்வுடன் வாழ்வோம், இறை ஆசியைப் பெறுவோம்.

திரு. R. **டேவிட் ஜெப சிங்**

**15-08-2015** *இந்திய விடுதலை நாள்*

# சமூக இசைவு
## COMMUNAL HARMONY

தொநூ. 11:1-9 2திமொ. 2:14-26
திபா. 66 மத். 5:38-48

**“தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்.”** மத். 5:39

நம் நாடு ஒரு சமயச் சார்பற்ற நாடு , உலக நாடுகளின் வரிசையில் பல, சமயச்சூழலில் தேசிய ஒருமைப்பாடு சமூக ஒற்றுமை, சமயச் சார்பின்மை ஆகியக் கொள்கைகளை வலுப்படுத்தத் தொடர்ந்து முயன்று வரும் நாடுமாகும். அதே நேரத்தில் கடந்த சில ஆண்டுகளாக 1982-க்கு பின் நம்மிடையே இணைக்கமுள்ள சமுதாயமாக வாழ்வதில் பல்வேறு பிரச்சனைகள் எழுந்துள்ளது. இதற்குக் காரணம் சமயத்தில், அரசியல் கலந்துள்ளதால் சமுதாயத்தையும் கறைபடுத்திவிட்டது. ஒரே சமுதாய உடன்பிறப்புக்களாய் வாழ்ந்து வரும் கிறித்தவம், இஸ்லாம், சீக்கியம், புத்தம், இந்து சமயம் போன்ற சமய பிரிவுகளை கொண்டு இந்தியர் எனும் ஒரு சொல்லால் இணக்கமுடன் வாழ்ந்தவர்கள் தான் அரசியல் கட்சிகளாலும் சில குறிப்பிட்ட தன்னல அரசியலாளர்களாலும் பிளவுபட்டு உள்ளனர்.

நாடு விடுதலைப் பெற்று 58 ஆண்டுகளாகும் இந்தத் தருணத்தில் சமய பூசல் எனும் தீய ஆற்றலிருந்து இன்னும் விடுதலையடையாதிருக்கம், அடிப்படை வாதிகளும்,சமய வாதிகளும் விடுதலையடைந்து ஓர் இணைந்து (இணக்கமான) சமுதாயவாதிகளாக செயல்படச் செய்வதே இன்றைய தொழுகையின் முதன்மை நோக்கமாகும்.

இதற்கு துணை நிற்கும் மறை நூல்களின் பகுதிகளிலிருந்து இணைந்து கற்றுக்கொள்வோம்.

### *1. பழிவாங்காதிருத்தல் :* (மத் 5:38,39)

சமுதாய இணக்கத்திற்கு அல்லது இணந்த சமுதாய வாழ்விற்கு பழிவாங்காதிருத்தல் மிக முக்கிய காரணியாக இருக்கிறது. அருள் நாதர் இயேசுகிறிஸ்து இதனை முதன்மையான கூறுபாடாகக் கண்டார். இஸ்ரயேல் மக்களின் கூட்டு வாழ்வு ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளுதலில் அமைந்தது.

தொடக்க நூலில் யாக்கோபின் புதல்வர்கள் தங்கள் இளைய சகோதரர் யோசேப்புக்கு தீங்கு இழைத்தபோது அவர்களிடையே ஓர் அமைதியின்மை நிலவுகிறது. காலங்களால் காயம் மாறிவிடும் தருணத்தில் யோசோப்பு தன் சகோதாரர்களை பழிவாங்காமல் அவர்களை மனப்பூர்வமாக மன்னித்துவிட்டார் (ஆதி.45). ஆகவே அவரது சகோதரர்களும் உரையாடும் போதும் பகைமையை வெளிப்படுத்தாது செயல்படும் சூழல் அமைந்தது. இதனால் பஞ்சத்தில் வாடிய சகோதரர்களும் குடும்பமாக எகிப்தில் யோசேப்போடு தங்கிடும் சூழல் ஏற்பட்டது.

மன்னிக்கும் மான்பு சிதைத்த உறவை மறுபடியும் கட்டுகிறது பழிவாங்கும் எண்ணமோ சமுதாய உறவை சிதைத்துவிடுகிறது. உலகில் எங்கெல்லாம் பழிவாங்கும் செயல்கள் நடந்தேறியதோ அங்கெல்லாம வன்முறைகளும் அமைதி குலைச்சல்களும், உயிர்சேதங்களுமே ஏற்பட்டிருக்கிறது. இன்று சமுதாயத்தில் ஆன்மீக பழிவாங்கல்களும், அரசியல் பழிவாங்கல்களும் என்று பழிவாங்குதலின் பரிமாணங்கள் உள்ளன. இதனால் பாதிப்படைவது அல்லது இழப்படைவது அரசியல் தலைவர்களோ, ஆன்மீக தலைவர்களோ அல்ல அடிப்படையில் ஏழை நடுத்தரவர்க்கத்தினதே இத்தகைய நெருக்கடிக்கும் துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

திருமறை (உபா. 32:35, ரோமர்.12:19, எபிரேயர்.10:30) பழிவாங்குதலும். பிழைகளுக்குரிய தண்டனை வளங்குவதும் இறைவனின் செயல் என்கிறது. மனிதன் தனது செயலை செய்யத் தவறிடும் போதும், இறைவன் செய்வதை தானே செய்யும்போதும் சமுதாயம் இணக்கத்திலிருந்து பழிவாங்கல் எனும் தீமை ஏற்படுகிறது. நாம் இணைந்த சமுதாயமாக வாழ ஆண்டவர் விரும்பாத பழிவாங்கும் செயலை விட்டுவிடுவோம்.

***2. பகைக்காதிருத்தல் :*** **(மத். 5:43, 44)**

சமுதாய இணக்கத்திற்கு அன்பு எந்த அளவிற்கு அடிப்படையாக இருக்கிறதோ அந்த அளவிற்கு பகை இதற்கு எதிரிடையாக உள்ளது. இன்றைய சமுதாய பகைமையினால் அமைதியிழந்து தவிக்கின்றது சமயத்தில் பெயரால் சாதியின் பெயரால் பொருளாதரத்தின் வடிவால் பகைமை நாள்தோறும் நடக்கிறது.

இரு வீட்டினர் ஒருவரை ஒருவர் பகைத்தால் அது அமைதியை குலைத்து விடுமாயின் இரண்டு சமூகம் அல்லது இரண்டு நாடுகள் பகைத்துக் கொண்டால் மொத்த உலக அமைதியே கெட்டுப்போய்விடும். இப்படிப்பட்ட பகைமையின் வெளிப்பாடே அயோத்தி, கோத்ரா, மும்பை தாஜ் ஹோட்டல், அமெரிக்க இரட்டை கோபுரம் தாக்கல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தியது. திருமறையின்படி பகைமை பாராட்டல் என்பது கடவுளுக்கு விருப்பமில்லாத பாவமாகும்,(I யோவா. 4: 20) இப்படி உடன்பிறப்புக்களைபகைப்பவர்கள் கொலை செய்த குற்றம் புரிந்தோராவர், பகைமை சமூகத்தில் ஓரே இல்லத்தில் வாழ்பவர்கள் கூட பகைவர்களாக வாழுகின்றனர். ஓரே கிராமத்தில் பட்டணத்தில் வாழுபவர்களும் பகைவர்களாக இருப்பது இன்று எங்கும் காண்கிற அனுபவமாகும். இதனால் சமுதாய இணக்கம் கெட்டுவிட்டது.

சமயத்தின் பெயரால் நமது மாவட்டத்தில் பல பகைகள் ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்றன. சில நிகழ்வுகள் மட்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன மற்றவை மறைக்கப்பட்டுவிடுகின்றன. இத்தகைய பகைமைக்கு பல நேரங்களில் நாமே காரணமாகிவிடுகிறோம். இதனால் இணக்கத்திற்குப் பதில் பிணக்கம் ஏற்படுகிறது. இந்தியாவில் நாம் சமுதாய இணைவுக்கு மாதிகளாகச் செயல்படுவோம்.

### *3. தூய்மை காத்தல் :* (மத். 5:48)

இணைந்த சமுதாய வாழ்விற்கு தூய்மை காத்தல் என்பது மிக முக்கியம் மனிதனில் உள்ள தூய்மைகேடு, பற்றுறுதியின்மை ஆகியவை நமது சமுதாயத்தில் அமைதி குலைச்சலை ஏற்படுத்தி விடுகிறது. பாவத்தில் விழும் மனிதன் அதிலிருந்து வெளிவராமல் தீமையோடு உடன்படிக்கைச் செய்வதனால் தனி மனித அமைதியும் கெட்டுவிடுகிறது.

தூய்மை வாழ்வை குறித்து பவுலர் தீமோத்தேயுவிற்கு எழுதிய கடிதத்தில் தூய வாழ்வு வாழுபவர் சமுதாய ஒற்றுமைக்குச் செயலாற்றும் தகுதி வாய்ந்த புதிய பாண்டங்கள் என்கிறார் (2திமொ. 2:21).

இயேசு கிறிஸ்து தாம் வாழ்ந்த சமுதாயத்தில் பரிசேயர், சதுசேயர், சமையவல்லுனர்கள் போன்ற பல தூய்மையற்ற மக்களினங்களுக்குள்ளே தம்மை தூயவராகக் காத்துக்கொண்டதால் சுற்றிலும் அலை மோதியும் அவர் இருந்த இடத்தில் தூய மக்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்ந்தார். பொறாமையினால் இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தவனே அல்லாது அவரில் இருந்த தூய்மைகேடு அல்ல.

சமுதாய நல்லிணக்கத்திற்கு நம்மில் உறுதித் தேவை அது. தூய்மை வாழ்வின் அடையாளமாக இருக்கவேண்டும். சமுதாய இணக்கத்துடன் வாழ்கிறோம் என்று அடையாளப்படுத்த நாம் தீமையோடு கரம் கோற்கவோ அல்லது பெரும்பான்மை தீமை சமுதாயத்தோடு அடையாளப்படுத்தத் தேவையில்லை. தூய்மை நாட்டத்துடன் பற்றுறுதியை காத்தவர்களாக நீதி செய்கிறவர்களாக, குரல் கொடுக்கிறவர்களாக வாழ்வதே ஒருங்கிணைந்த சமுதாய அமைதியை ஏற்படுத்தும். சமுதாய இணக்கம் என்று நமது அற ஒழுக்கத்தை கைவிட்டு நாம் அவர்களோடு இருக்கிறோம் என்று கூறாமல் அனைத்தையும் தன்பால் இழுக்கும் ஒளியினைப் போன்று சமுதாயத்திற்கு ஒளி கொடுப்பவர்களாக வாழ்வதே நம்மை குறித்த கடவுளின் விருப்பமாகும்.

சமுதாய இணக்கம் வெறும் பேச்சளவில் நில்லாது செயல் வடிவம் பெற்றிட நாம் நம்மில் உள்ள பழிவாங்கும் எண்ணங்களை விடுத்து நம்முடன் பல்சமய நம்பிக்கையுடன் வாழும் நமது உடன் நட்புக்களை பகைத்துக்கொள்ளாமல், நமது பற்றுறுதியை தூய்மையுடன் காத்துக்கொள்வது அர்த்தமுடையதாக அமையும். இந்தியா இஸ்லாமியர்களுக்கே, சொந்தம், கிறிஸ்தவர்களுக்கே சொந்தம், இந்துக்களுக்குத்தான் சொந்தம் என்று கூறி கூறுபோட்டுக்கொள்ளாமல் ‘‘இந்தியா இந்தியர்களுக்கே’’ என்ற பொதுமை சிந்தையுடன் செயல்படுவோம். இந்த விடுதலைத் திருநாள் அர்த்தமுடையதாக அமைய ஆண்டவரின் ஆசி அனைவரிலும் அருளப்படுவதாக ஆமென்.

அருள்திரு. P. **ஜேக்கப் பீற்றர்**

**16-08-2015**

# திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும்

## BAPTISM : DYING AND RISING UP WITH CHRIST

| | |
|---|---|
| தொநூ 7:11-24 | உரோ 6:1-14 |
| திபா 29 | யோவா 12:20-26 |

**“நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள், கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்” உரோ 6:11**

***இறைவேண்டல் : என்றென்றும் வாழும் கடவுளே, உமது பேரிரக்கத்தால் திருமுழுக்கின் வாயிலாய் நீர் எங்கள் ஆண்டவரென்றும், நாங்கள் உமது மக்கள் என்றும் உறுதிசெய்துள்ளீர். உமது உடன்படிக்கையில் எங்களை ஏற்றுக்கொண்டிருப்பதற்காக நன்றி படைக்கின்றோம். நாங்கள் உமது அன்பிலும், வழிகாட்டுதலிலும், நம்பிக்கையிலும் வளர எங்களுக்கு அருள்செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டுகிறோம், ஆமென்.***

நமது திருச்சபையின் திருவருட்சாதனங்களில் ஒன்றாகக் கருதப்படும் திருமுழுக்கு என்பது திருமறைச் சிந்தனைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும். திருமறை திருமுழுக்கைக் குறித்து தெளிவான விளக்கங்களைத் தருகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் திருமுழுக்குக்கு முன்னோடி என்று கருதப்படும் விருத்தசேதனம் வெறும் ஓர் அடையாளமாகவே கருதப்பட்டது. ஆனால் திருமுழுக்கு வெளிப்படையான அடையாளம் என்றாலும் அதன் உட்பொருள் மிக முக்கியமானது. ஆனால் அதன் முறை (Mode of Baptism) முக்கியமானதல்ல. திருமுழுக்கின் முறைகளை முன் வைத்து திருச்சபைகளில் பிரிவினைகளையும் வாக்குவாதங்களையும் இன்று நாம் காண முடிகிறது. திருமுழுக்கில் கிறிஸ்துவோடும், அவருடைய உடலாகிய திருச்சபையோடும் ஒருவர் இணைக்கப்படுகிறார் என்பதை முக்கியப்படுத்த வேண்டும்.

### *1. திருமுழுக்கு - கிறிஸ்துவின் இறப்பு, உயிர்த்தெழுதலில் இணைதல்* (Baptism-Union with the Death and Resurrection of Christ):

கிறிஸ்துவின் முழுக்காகிய சிலுவை இறப்பிலும், சிலுவையிலிருந்து பிரிக்கக் கூடாத அவரது உயிர்த்தெழுதலிலும் ஒருவர் எவ்வாறு திருமுழுக்கின் வழியாகப் பங்கு பெறுகிறார் என்பதின் விளக்கமே

உரோ. 6:1-14 வரையுள்ள பகுதியாகும். இச்சிந்தனை இயேசு கிறிஸ்துவின் போதனையிலும் அடங்கியிருந்தது. அது நம்மை அவரோடு, அவர் பாடுகளில் நாம் திருமுழுக்கின் வழியாய் பங்குபெற அழைக்கின்றதாய் அமைந்தது (மாற். 10 :38; லூக், 12 :50).

கிறிஸ்துவுக்காக திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் அவருடைய இறப்புக்குள்ளாகத் திருமுழுக்குப் பெற்றோம். அதன் வழி அவரோடு அடக்கம் பண்ணப்பட்டோம். ஒரு புது உறவில் அவரோடிணைந்த நாம் “கிறிஸ்துவை இறந்தோரிலிருந்து எழுப்பின கடவுளின் வல்லமையைப்பற்றும் நம்பிக்கையின் வழியாய் அவரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம்” (கொலோ. 2 :12) ரோம. 6:5,6,11) எனவே, பாவத்தில் நிலைத்திருக்க முடியாது, “புதிய படைப்பாக்கப்பட்டிருக்கிறோம்“(2கொரி 5:17), இதன் வழியாய் உண்டாகும் நம்பிக்கை என்னவெனில் நாம் கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டதுண்டானால் அவரோடு மகிமையில் வெளிப்படுவோம் (கொலோ. 3 :1-3). திருச்சபை கிறிஸ்துவின் உடல். ஆகையால் திருமுழுக்கின் வழியாய் மக்களை அந்தக் கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கிறது.

திருமறை விளக்கங்கள் பல இப்பகுதியில் திருமுழுக்கின் ஒருமுறையான (one mode of Baptism) மூழ்குதலை (immersion) உட்புகுத்துகின்றன. ஆனால், அதற்குரிய சாத்தியக் கூறுகளில்லை. மேலோட்டமாகத் தோன்றினாலும் “கிறிஸ்துவுக்குள்ளாகத் திருமுழுக்குப் பெற்றோம்” (Baptised into Christ) அவருடைய இறப்பிற்குள்ளாகத் திருமுழுக்கு பெற்றோம் (Baptised into Death) (ரோ. 6:3 ; கலா 3 :27), மற்றும் “ஒரே உடலுக்குள்ளாகத் திருமுழுக்குப் பெற்றோம்” (Baptised into one body) (Iகொரி. 12:13) ஆகிய கருத்துக்கள் கூறுவதெல்லாம் “கிறிஸ்துவுடன் இணைதல்” என்ற கருத்தே அல்லாமல் வேறல்ல. இந்த இணைதல் (Union)மீட்பின் நன்மைகளை அனுபவிப்பவர்களாகவும், அவருடைய ஆட்சிப் பொறுப்பில் (Lordship) பங்காளிகளாகும் வாக்குறுதியையும் தருகிறது.

## 2. திருமுழுக்கு - கிறிஸ்துவோடு எழும் புது வாழ்வு (Baptism : Arising New life in Christ) :

இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு அவர் கூறிய தம் இறப்பின் அது குறிக்கும் பாடுகளின், தொடக்கம் எனலாம். அதுவே அவருடைய பணிவிடைத்துவத்தின் தன்மையின் வெளிப்படையான முதல் அடையாளம் எனலாம். சிலுவை மற்றும் கல்லறையில் அவருடைய

திருமுழுக்கு முழுமையடைந்தது என்பதை உணரமுடிகிறது. மனித பாவத்தின் ஆழமும் தீமையின் ஆற்றலும் மற்றும் கடவுளின் அன்பின் ஆற்றலும் அதன் ஆழமும் ஒன்றையொன்று சந்தித்தன; அது சிலுவையில் வெளிப்படுத்தப்பட்டது. பின்பு தம்மைப் பின்பற்றுபவர்களை இந்த மீட்பின் பணிவிடையை இந்தத் திருமுழுக்கின் வழியாய் செய்ய அழைக்கிறார் (மத். 28 :19). எனவே திருமுழுக்கு சீடத்துவத்துக்கான குறிப்பிட்ட வழிப்பாதை ஆகும், (Baptism is the passage way into discipleship). இதுதான் ஒரு கிறிஸ்தவ வாழ்வின் அடையாளம் (மாதிரி). இதற்கு கிறிஸ்தவ திருமுழுக்கு ஒரு படிப்படியான முன்னேற்றம் (process) என்று எடுத்துக் கொள்ளுகின்றபொழுது திருமுழுக்கின் வழியாய் மனித வாழ்வில் எல்லா நிலைகளிலும் இறையருள் மற்றும் பற்றுறுதி ஆகியவை ஒன்றோடொன்று செயல்படுகின்றதாக (an interply between divine grace and human faith) அமைகின்றது. இந்த முன்னேற்றத்திற்கான பயணம் மறைந்திருக்கும் இறையருளின் ஆழங்களில் தொடங்குகிறது. அது மனிதனோடுள்ள ஐக்கியத்திற்கான கடவுளின் நிலையான விருப்பத்தில் உருவாக்கமெடுத்து, வெளியரங்கமான மனித வாழ்வின் அடித்தளத்திலும், வாழ்வின் உள்ளறிவிலும் செயல்படுகிறது.. இதை தான், தூய பவுல் திருமுழுக்கின் பலன் என்பது கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வு என்று குறிப்பிடுகிறார். திருமுழுக்கு பெற்றவர்“புதுப்படைப்பு” (New creation) என்றும், அவர் பழைய தன்மைக்கு இறந்து கிறிஸ்துவுடன் புதிய தன்மைக்கு எழுப்பப்படுகிறார் (2கொரி. 5:17) என்றும் விளக்குகிறார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து புதிய வடிவம் பெற்று மிகுந்த விளைச்சலைக் கொடுக்கிறது (யோவா. 12:20-26). அது போன்று திருமுழுக்குப் பெற்று கிறிஸ்துவுக்குள் புது வாழ்வைப் பெற்றவர்கள் பிறருக்குப் பயன்தரும் வாழ்வு வாழக் கடமைப்பட்டவர்கள். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றி வாழ்வோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவார், எனக்கு தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும் என்றார் இயேசு கிறிஸ்து. எனவே, புதிய வாழ்வை கிறிஸ்துவில் சொந்தமாக்கியவர்கள் பிறருக்கு தொண்டு செய்வோராக வாழ்ந்து இறையரசின் மக்களாய் வாழ நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

**23-08-2015**

# திருவிருந்து எனும் திருவருட்சாதனம்

## SACRAMENT OF HOLY COMMUNION

2அர 4:42-44 — 1 கொரி 11:23-30

திபா 100 — யோவா 6:15-59

**"நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தி-ருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்"**

**1கொரி 11:26**

***இறைவேண்டல் : உன்னதரான கடவுளே! திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் மானுடவாழ்வின் முழுமையை எங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். திருவிருந்து என்னும் திருவருட்சாதனத்தை வாழ்வில் செயல்படுத்த எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறீர். அதன்வழியாய் நாங்களும் உம்முடைய பாடுகளிலும், இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்கடைய அருள்தரும். இதன்வழியாக நாங்களும் அவருக்குரியவர்கள் என்பதை உறுதி செய்ய அருள் தாரும் என்றும் எங்களுடன் வாழ்ந்து வழிகாட்டும் இறைமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.***

சாக்கிரமெந்து என்பது பற்றுறுதி அறிக்கை என புரிந்துகொள்ளலாம். அதாவது, வாழ்நாள் முழுவதும் உண்மையாய் சேவை செய்ய உறுதி ஏற்பது. விசுவாசியாத கண்களுக்கு திருவருட்சாதனத்தின் பொருள் வெளிப்படுவதில்லை. தூய அகஸ்டின் என்பவர் "இறைவனின் அருட்கொடைகளில் மேலானது மனுக்குலத்தை தூய்மைப்படுத்தும் தூய சின்னமாம் நற்கருணை" என்கிறார்,

இறைவன் நமக்கு தந்திருக்கும் அருட்கொடைகளில் இரண்டு திருவருட்சாதனங்கள் முக்கியமானவை.

1) இயேசு கிறிஸ்து பெற்றுக்கொண்டது - பாவமன்னிப்புக்கான திருமுழுக்கு,

2) இயேசு கிறிஸ்து ஏற்படுத்தினது = வாழ்விற்கு ஆதாரமான தூய நற்கருணை

நம் ஆண்டவர் தன் வாழ்வின் இறுதியில் நமக்கு விட்டுச் சென்ற அவரது திருவுடல் திரு இரத்தம் இவற்றின் ஆன்மிக உண்மையை அறிந்து கொள்ள வேண்டும், இயேசு கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையின் மையம் "திருவிருந்து." கடவுள் இயேசுகிறிஸ்துவில் தூய ஆவியரின்

ஆற்றல் வழியாகத் தரும் அருட்கொடை . கிறிஸ்துவின் திருவுடலாம் திருச்சபையின் இதயமாகிய திருவிருந்தினை திருத்தூதர் பவுல் 'அன்பின் விருந்து' எனக்குறிப்பிடுகிறார். கடவுள் தன்னை நமக்காக தந்திருக்கிறார் என்பதற்கு அடையாளம் தான் திருவிருந்து. இயேசு கிறிஸ்து தியாக சீலராக முழு மனு குடும்பத்திற்கும் உடலையும், இரத்தத்தையும் பகிர்ந்தளித்து இறையரசின் அனுபவங்களை நமக்கு உணர்த்துகின்றார்.

***1) இறையரசிற்குரியோராய் மாற்றும் விருந்து :*** (1கொரி. 11:28)

"ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும்".

பஸ்கா விருந்து சமூக விடுதலையின் நல் உறவை உருவாக்குகிறது. திருவிருந்து ஆன்மிக விடுதலையின் நல் உறவை உருவாக்கி, இறையரசுக்குரியோராய் மாற்றுகிறது. Dunn என்ற இறையியலாளர்"இயேசுவின் 'மேஜை ஐக்கியம்' அமைதி, நம்பிக்கை, சகோதரத்துவம் இவற்றை உள்ளடக்கிய இறையரசின் அனுபவத்தைத் தருகிறது" என்கிறார்.

இறையரசுக்குரியோராய் மாறுவது என்பது நாம் சாவிலிருந்து வாழ்வுக்கும், பாவத்திலிருந்து அருளுக்கும் கடந்து செல்வது (Pass over) ஆகவேதான் திருத்தூதர் பவுலார் எந்த மனுஷனும் தன்னைத் தான் சோதித்தறிந்து விருந்தில் பங்கு பெற அழைக்கிறார் (1கொரி. 11:28).

தவறிப் போன இளைய மைந்தன் சாவிலிருந்து வாழ்வுக்கும், பாவத்திலிருந்து அருளுக்கும் கடந்து வந்து விருந்தில் பங்கு பெற்றபோது வீட்டுக்குரியவனாக மாறுகிறான் (லூக். 15).

இயேசு கிறிஸ்து ஏற்படுத்தின திருவிருந்தின் அனுபவத்தை தன் திருப்பணியின் தொடக்கத்தில் வெளிப்படுத்தினார்.

"மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல இறைவார்த்தையால் பிழைப்பர்" என்றவர் (மத். 4:3). திருப்பணியின் தொடக்கத்தில் மனம் மாறுங்கள். விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என இறையரசிற்குரியோராய் மாற அழைக்கிறார் (மத். 4:17). இறையரசிற்குரியோராக மாற்ற தான் விருந்தாகப்போகிறேன் என்பதை தூய நற்கருணை வழி வெளிப்படுத்தினார். பஸ்கா விருந்தில் பரிசேயர் சீமோன் வீட்டில் தன் சீடர்கள் மத்தியில் "என் உடல் என் உதிரம்" என்று அப்பத்தையும் ரசத்தையும் எடுத்து விருந்தினை ஏற்படுத்தினார். பெத்சாயிதா பட்டணத்து வனாந்தரத்தில் இறையரசிற்குரியோராய் மாற வேண்டும் என தனக்கு முன்

இருந்த பெருந்திரள் மக்களுக்கு போதித்தவர் 5 அப்பத்தையும் 2 மீனையும் எடுத்து மாபெரும் விருந்தினை ஏற்படுத்தினார் (லூக். 9:11,16).

கீரியும் பாம்பும் சண்டைபோடும்போது கீரியை பாம்பு கொத்திவிட்டால் கீரி அவ்விடத்தில் ஓடி மூலிகை புல்லின் மேல் புரண்டு அதனை உண்ணும். அப்போது விஷமானது முறிக்கப்படும். மீண்டும் போரிட்டு வெற்றி கொள்ளும் நம்மையும் சத்துருவானவன் தீண்டி பாவவிஷம் ஆத்துமாவை அழிக்கும்போது தூய நற்கருணையின் வழி இறைஆற்றல் பெற்று புத்துயிருடன் சவால்களை சந்தித்து இறையரசிற்குரியோராய் மாற வேண்டும்.

***2) இறையரசின் முன்சுவையைத் தரும் விருந்து :*** **(மத் 26:29)**

‘‘இனிமேல் என் தந்தையின் ஆட்சிவரும் அந்நாளில் தான் நான் உங்களோடு திராட்சப்பழ இரசத்தைக் குடிப்பேன்......”

இயேசுகிறிஸ்துவின் கடைசி விருந்து நிகழ்வில் காட்டிக்கொடுப்பவன்,மறுதலிப்பவன், விட்டுவிட்டு ஓடுகிறவர்கள் என்ற பலதரப்பட்ட மக்கள் மத்தியில் இறையரசின் முன்சுவை தரும் விருந்தை ஏற்படுத்தினார். கடவுளின் அரசில் நம்முடன் விருந்தில் பங்கேற்கும் இறைவன் அதன் அடையாளமாக திருவிருந்தை மாற்றுகிறார்.

"கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர்"என்ற கூற்றுக்கு (மத். 8:11) முன்சுவையாக அமைகிறது. இதனை வெளிப்படுத்தும் வண்ணமாய் கானாவூர் திருமண வீட்டில் இயேசு கிறிஸ்து தண்ணீரை ரசமாக மாற்றி இறையரசின் விருந்தினை பிரதிபலிக்கிறார்.

மட்டுமல்ல "அப்பத்தின் வீடு" எனப்படும் பெத்லகேமில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்பது அவர் எல்லாருக்கும் விருந்தாகப்போகிறார் என்பதை உணர்த்த தீவனத் தொட்டியில் படுக்கவைக்கப்படுகிறார். அந்த ஆண்டவர் "வாழ்வுதரும் உணவு நானே" என்கிறார்.

இறையரசின் விருந்தில் பங்கு பெறும்போது இயேசுகிறிஸ்துவின் தன்மை நமக்குள் வரவேண்டும். நானும் கிறிஸ்துவுக்காக பிட்கப்பட, ரத்தம் சிந்த, இழக்க ஆயத்தமாக இருக்கிறேன்; நானும் விருந்தாகப் போகிறேன் என்று ஒப்புவிக்க வேண்டும். தூய பவுலார் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்படுகிறபோது, ஆண்டவரே நீர் யார்? எனக் கேட்டார்.

"நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்று அங்கு வெளிப்பட்ட கிறிஸ்துவை பார்த்தபோது இனி நானல்ல கிறிஸ்துவே (கலா. 2:20) என்று மாற்றமடைகிறார். அதுபோல இறையரசின் முன் சுவையாகிய தூய

நற்கருணையில் பங்கு பெறும்போது இயேசு கிறிஸ்துவைப் பார்க்க வேண்டும். அவரைப்போல் மாற்றமடைந்து, அந்த மாற்றம் சமுதாயத்தில் வெளிப்பட வேண்டும்.

ஜஸ்டின் மார்ட் ஐயர் என்பவர் "அப்பமும் ரசமும் இறைவேண்டல் என்கிற வார்த்தையால் உடலும், உதிரமுமாக மாறி, இறை பிரசன்னம் தொடர்கிறது" என்கிறார். நம்மிலும் மாற்றத்தை உருவாக்கும் ஆன்மிக உணவாக திருவிருந்து அமைய வேண்டும்.

### *3) இறைமக்களை ஒன்றாக்கும் விருந்து :* (1 கொரி 10:3,4)

‘‘அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிக உணவை உண்டனர்.

அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிகப் பானத்தைப் பருகினர்’’

இறைவன் அருளும் மாபெரும் அருட் கொடை "உறவு வாழ்வு." தொடக்க கால மூதாதையர்கள் விலக்கப்பட்ட கனியை உண்டதால் மனிதன் உடன் வாழ் மனிதனோடும், இறைவனோடும், படைப்புகளோடும் இருந்த உறவு துண்டிக்கப்பட்டு விட்டது. மீண்டும் மனிதன் மனிதனோடும், இறைவனோடும், படைப்புகளுடன் ஒன்றுபட இயேசு கிறிஸ்து தன் உடலையும் ரத்தத்தையும் விருந்தாக பகிர்ந்தளித்து தூய நற்கருணையை ஏற்படுத்தியுள்ளார்,

எனவே தூய திருவிருந்து வெறும் நினைவு கூருதலின் அடையாளமல்ல, ஒருமைப்பாட்டின் அடையாளம். "அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்ளுகிறோம்" (1 கொரி 10 :17). பல கோதுமை மணிகள் ஒன்றிணைந்த அப்பத்தைப் போன்று நாம் பலராயினும் தூய விருந்தில் பங்கேற்கும்போது கிறிஸ்துவின் திருவுடலோடும், விருந்தில் பங்கு பெறும் அனைவருடனும் நாம் ஒன்றுபடுகிறோம்,

போன்காஃபர் என்ற இறையியலாளர், ‘‘மனுக்குலம் இறைவனோடு ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் அன்பு செயலின் அடையாளம் திருவிருந்து’’ என்கிறார். பேராயர் நியூபிகின் திருவிருந்தினை "ஆயர், இறை மக்களுடன் இணைந்து எடுப்பதால் இயேசு கிறிஸ்துவின் உடலாலும் உதிரத்தாலும் அனைவரும் இறைவனுக்குள் சரிசமமாகிறோம்" என்கிறார். இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் வலது இடது பக்கத்தில் அமர்ந்திருக்க வாஞ்சித்தல் (மத். 20:21), எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மை பின்பற்றினோமே லாபம் என்ன ?

(லூக் 18;28). இவ்விதம் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் இருந்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் இறுதி விருந்தில் பங்கு பெற்றபின், இணைந்து ஒருமனப்பட்டு, இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள் (தி.ப.1:13,14).

இறைப்பணியின் அடிப்படை இறையரசு. மானிடத்தை இறையரசிற்குரியோராய் மாற்ற இயேசு கிறிஸ்து தன்னையே விருந்தாக்கினார். "திருவிருந்து என்னும் திருவருட்சாதனம் பிரிவினையை அகற்றி இறையரசிற்குரியோராய் மாற்ற இறைவன் தந்த அருட்கொடை" என இறையிலாளர் குஸ்டாவோ குட்டியறஸ் கூறுகிறார். சீனா தேசத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு இருந்த காலத்தில் விசுவாசிகள் பின் வாங்கி போகாமல் பாதுகாக்க போதகர்கள் வியாபாரிகளாக கிறிஸ்தவர்கள் வீட்டில் சென்று பொருட்களுடன் மறைத்து வைத்திருக்கும் இயேசுவின் ரத்தத்துடன் கலந்த மாம்சத்தைக் கொடுக்க, வீட்டார் குடும்பத்துடன் இறைவேண்டல் செய்து தூய திருவிருந்தைப் பகிர்ந்து கொண்டு இறையரசிற்குரியோராய் தங்களை காத்துக் கொண்டனர்.

கடவுளைப்போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே. அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே. அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா!

அருள்திரு. G. **சதிலால் விஜின்**

**30-08-2015**

# பன்மைத்துவம் : பொதுவான மனித நேயமும் நம்பிக்கையைப் பகிர்தலும்

## PLURALITY : COMMON HUMANITY AND FAITH SHARING

யோனா 4:1-11 திப 8:26-40
திபா 82 மத் 22:1-14

**"நீ அந்தத் தேரை நெருங்கிச் சென்று அதனோடே கூடவே போ" திப 8:29**

**இறைவேண்டல் :** ***அனைத்து ஆற்றலுமுள்ள கடவுளே, அனைத்து மனிதரையும் உமது சாயலாகவே படைத்தீர், மனிதரால் உருவாக்கப்பட்ட தடைகளை அகற்றுவதால் உலகம் எனும் குடும்பத்தின் பொதுவான மனித நேய அழகை நாங்கள் உணருகிறோம். தேவையோடிருக்கும் எங்கள் சகோதர, சகோதரிகளோடு கரிசனையை பகிர்வதில்தான் எங்கள் பற்றுறுதியை உறுதி செய்கிறோம் என்பதை உணர எங்களுக்கு உதவிச் செய்யும். பன்மை நம்பிக்கை சூழலில் வாழும் மக்களோடு ஒரே மக்களாய் இணைந்து வாழ எங்களை வழிநடத்தும். மனித நேயத்திற்கு வழிகாட்டியாம் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

பன்மை என்பது பலவகை நிலைகளைக் குறிக்கிறது. பல மொழிகள், இனங்கள், கலாச்சாரங்கள், பல நிறங்கள் என பன்மை நிலைகள் நம்மைச் சூழ்ந்துள்ளன. இச்சூழ்ந்துள்ளன. இச்சூழலில் மனித நேயத்துடன் கிறிஸ்துவை அச்சாகக் கொண்டு வாழ்ந்து நம் சூழலில் வாழும் இதர மக்களை (கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள்) உடன்பிறப்புகள், இறைமக்கள் என்ற உணர்வோடு அணுக வேண்டும். கடவுள் அனைவருக்கும் பொதுவானவர், அனைவரும் அவர் படைப்பு. நன்மையான கொடைகள், முழுமையான அருட்கொடைகள் அனைத்தும் அவர் வழியே அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. நீதியும், நேர்மையும் அன்பும், தியாகமும், உண்மையும், தூய்மையும், இரக்கமும் இறைவனின் நல் இயல்புகள். இத்தகைய இயல்புகளை அணிந்து கொண்டு பற்றுதியுடன் வாழ நாம் அழைக்கப்படுகிறோம். இன்று வன்முறை, தீவிரவாதம், ஆதிக்கம், ஆணவம் போன்ற சமுதாயத்தின் இந்த பன்மை தன்மையை தகர்த்து வருகின்றன. இறைவனில் நாம் அனைவரும் உடன்பிறப்புகள் பிறசமயத்தவர்களும், அனைத்து மக்களும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்களே என்ற பொதுவான மனித நேயத்தை, உண்மையை மாசுபடுத்தும் செயல்களை திருமறையின் துணை நின்று சிந்தித்து வேரறுப்போம்.

### 1. வரங்களிருந்தும் கனியற்ற வாழ்வு :

அதற்கு ஆண்டவர், “நீ இவ்வாறு சினங்கொள்வது முறையா?” என்று கேட்டார் (யோனா 4 : 4).

கடவுளின் அன்பையும், விருப்பத்தையும் (Love and will of God) நினிவேக்கு சுமந்து செல்ல அழைக்கப்பட்டவர் யோனா. யோனா என்பதற்கு புறா என்பது பொருள். கடவுள் யோனாவுக்கு நிறைந்த அருட்கொடைகளை (வரங்களை) அளித்திருந்தார். ஆற்றலாய் செய்தி சொல்லும் வரம் (3:2) இறைவேண்டல் செய்யும் வரம் (2:7), இறைவாக்குரைக்கும் வரம் (3:4). கடவுள் எபிரெயருக்கு மட்டுமல்ல. நினிவே மக்களுக்கும் கடவுள். கடவுளை அறியாத தவறுகளில் திகழ்கிற நினிவே மக்களும் கடவுளின் அன்புக்கு உட்பட்டவர்கள் என்ற உண்மையை யோனா உணராமலிருந்தார். சினமும், சீற்றமும் நிறைந்து, மனித நேயமும் அன்பும் இல்லாத மனிதனாய் யோனா காட்சியளிக்கிறார். அருட்கொடைகள் (வரங்கள்) நிறைந்த யோனா கனியில்லாதவராய், தன் சூழலின் பன்மை நிலையை உணராதவராய், மனித நேயத்தோடு நம்பிக்கையைப் பகிராமல் இருந்தார். கனியில்லாத வரம் பதர் போன்றது. இறையன்பு அவரில் காய்த்து கனிய கடவுள் யோனாவை வடிவமைத்தார்.

### 2. அழைப்பிருந்தும் ஆயத்தமில்லாத வாழ்வு :

“அந்த பணியாளர்கள் வெளியே சென்று வழியில் கண்ட நல்லோர் தீயோர் யாவரையும் கூட்டி வந்தனர்” (மத் 22 : 10).

தூய மத்தேயு பன்மை இல்லாத விருந்தை முன் வைத்து எச்சரிக்கிறார். அழைப்பு என்பது அனைவருக்கும் பொதுவானது. அழைப்பில் வேறுபாடுகள் இல்லை ஆனால் ஆயத்தமில்லாத விருந்தாளிகள் அழைப்பை அசட்டை செய்கிறார்கள். விருந்தாளிகளில் சிலர் விவசாயிகள், சிலர் வியாபாரிகள், சிலர் கொலையாளிகள் (மத் 22: 5, 6). இவர்கள் ஒன்று சேர முடியாதவர்கள். எதிர் எதிர் திசைகளில் சுய நலன்களுடன் வாழ்பவர்கள். விருதுக்கு அழைப்பு பெற்றும் ஆயத்தமற்று காணப்பட்டனர். பொதுவான மனித நேயமற்றவர்கள், பன்மை தன்மைகளில் ஒன்றிணைய முற்படாதவர்கள். இவர்கள் தங்களை தாங்களே மிகைப்படுத்திக் கொளளும் மக்கள். இப்பகுதியில் வரும் திருமண ஆடை அணியாத விருந்தாளி (மத் 22 :12) தன்னைத் தானே மிகைப்படுத்திக் கொள்பவன். தன்னை வேறுபடுத்திக் கொள்பவன். இவர்கள் அனைவரும் பிறிது ஒருவருடன் பன்மை குணங்களில் இணைய மறுப்பவர்கள். நற்குணங்களில் மற்றவர்களை அங்கீகரிப்பதில் எதிரானவர்கள்.

சுயநலம், இலாபபோக்கு, பெருமை, தரம் தாழ்ந்த எண்ணம், கருத்தும் - கரிசனையும் அற்ற வாழ்வு போன்றவை தான் இதற்கு காரணங்கள். நற்செயல்கள், நற்குணங்கள் இவைகளில் ஒன்றிணைந்து மனித நேயத்துடன் வாழ இறைமகன் இயேசு கிறிஸ்து வாழ்ந்து காட்டி அழைக்கிறார். அழைப்புக்கு ஆயத்தமாவோம்.

## 3. வாசித்தும் அறிந்து கொள்ளாத வாழ்வு :

‘‘அப்போது பிலிப்பு, இந்த மறைநூல் பகுதியிலிருந்து தொடங்கி, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார்’’ (திப 8 : 35).

எத்தியோப்பிய அரசு அலுவலர் ஓர் நிதியமைச்சர். அவர் தமது தேரில் அமர்ந்து ஏசாயா இறைவாக்கு நூலை படித்துக் கொண்டிருந்தார். பணத்தோடு சமூகத்தை பார்த்து பழகிய அவரால் திருமறையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பிலிப்பு ‘‘துன்புறும் அன்பை’’ நற்செய்தியாக அறிவிக்கிறார் (தி ப 8 : 32 - 33). நிதியமைச்சர் இயேசு கிறிஸ்துவை;ஞ் புரிந்து கொண்டார். திருமுழுக்கு பெற்றார் (8 : 37). கேட்கும் நிலையிலிருந்து செயல் நிலைக்கு தன்னை தயாரிக்கிறார். ‘என் மகன் இவர்’ என்ற இறை அங்கீகாரத்தைப் பெற ஒப்படைக்கிறார். அதுவே திருமுழுக்கின் பொருள். வெளியிலிருந்து வந்த எத்தியோப்பியர் வழிநெடுகே (காசாவுக்கும் - ஆரோனுக்கும் இடைப்பட்ட தூரம் 20 மைல்) பிலிப்புவோடு உரையாடி வாசித்த நற்செய்தியின் உட்கருத்தை வாழ்வோடு இணைத்து புரிந்து கொண்டார், நற்செய்தியாளராய் மாறினார் (8 : 40). வாசித்து அறிந்து கொண்ட போது பிற இனத்தவர்கள் ஒரு மந்தைகள் இணைத்து கொள்கின்றனர். பிலிப்புவின் மனித நேயத்துடன் கூடிய சான்றுள்ள தொடர்பும், நம்பிக்கை பகிர்தலும் நிலையான இறை ஊற்றாய் எத்தியோப்பியரின் இதயத்தை உருமாற்றியது.

கனியுள்ள வாழ்வு வாழ்ந்து, அழைப்புக்கு அடிபணிந்து, திருமறையை உணவாக்கி, அனைவரையும் அன்பு செய்து மதித்து, மனிதநேயத்துடன் நம்பிக்கையை பகிர்வோம். இதயங்களை சான்று வாழ்வின் வழி விளை நிலங்களாக்குவோம்.

அருள்திரு.M. **பிரேம்சிங் ஜெயக்குமார்**

# நீதியை விதையுங்கள்

மத். 25:15-29

**"....நீதியை விதைப்போரே உண்மையான ஊதியம் பெறுவர்."** நீமொ. 11:18

ஒரு பெரியவருக்கு வித்தியாசமான பழக்கம் ஒன்று இருந்தது, ஊரில் எந்த நல்ல நிகழ்வு நடந்தாலும் தம் கையில் உள்ள கைத்தடியை யார் வழியாவது அனுப்பிவிடுவார். அதற்கு பிறகு ஒருநாள், அவ்வழியாய் வரும்போது " விருந்து சமயத்தில் உங்கள் வீட்டுக்கு வந்தேன். திரளான கூட்டமாய் இருந்தது. அச்சமயத்தில் என் கைத்தடியை மறந்து விட்டுச் சென்று விட்டேன்" என்று நலமாய்ப் பேசி, கைத்தடியை வாங்கிச் செல்வார். இப்படி இந்தப் பெரியவர் மக்களை ஏமாற்றுவார். ஒரு நாள் அவரின் வீட்டில் மகளுக்குத் திருமணம் நடந்தது. எல்லோரையும் அழைத்திருந்தார், மக்களுக்குப் பதிலாய், இருக்கைகளில் ஒவ்வொரு கைத்தடிகள் தான் வைக்கப்பட்டிருந்தன. மக்கள் எவரையும் காணவில்லை. அடுத்த நாள் மக்கள் ஒவ்வொருவராக வந்து "நேற்று நாங்கள் வந்தோம், திரளான கூட்டம், கைத்தடியை மறந்து விட்டுவிட்டுச் சென்றுவிட்டோம், தற்பொழுது எடுக்க வந்துள்ளோம்" எனப் பேசியபோது தமது ஏமாற்று வேலையை நினைத்து வருத்தப்பட்டார். நீதியை விதைக்கிறவன் தான் உண்மையான பலனைப் பெறமுடியும் (11:18). நாம் வாழ்வில் மகிழ்ச்சியை பெற வேண்டுமானால் நேர்மையை விதைக்க வேண்டும். எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். நேர்மை தலையாய பண்புகளில் ஒன்று, "அது அழகான அணிகலன்." நேர்மையான மனிதன் இறைவனின் உன்னதமான படைப்பு. ஆனால் இன்று நேர்மைக்கு அதிக பஞ்சம். எல்லோரும் நேர்மையை விதைக்க வேண்டும், ஆனால் சிலர் விதைப்பது மட்டுமே பெரிய செய்தியாக மாறுகிறது.

நாம் வைத்திருப்பவைகளில் மிகவும் மதிப்பு வாய்ந்தது நேர்மை ஒன்றே. அதை நாம் மிகவும் மதிக்க வேண்டும். ஒரு முறை முல்லா தம் நண்பர்களிடம் "உண்மையின் மதிப்பு அதிகம்" என்று பேசிக்கொண்டிருந்தார். மற்றவர்கள், இதை உங்களால் நிரூபிக்க முடியுமா! என்று கேட்க "மிகவும் எளிது, எப்பொழுதும் அதிகமாகக் கிடைக்கும்

பொருளின் மதிப்பு குறைவாக இருக்கும், குறைவாக கிடைக்கும் பொருளின் மதிப்பு அதிகமாக இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டு, தங்கமும், இரும்பும். குறைவாகக் கிடைக்கும். தங்கத்தின் விலை அதிகமாகவும், அதிகமாக கிடைக்கும் இரும்பின் விலை குறைவாகவும் இருப்பதைப் போல் தான் இதுவும்'' என்றார். நேர்மை தங்கத்தைப் போன்றது. அது இன்று குறைவாகவே உள்ளது. நாம் நேர்மையை விதைத்தால் தான் மெய்யான பலனைப் பெறமுடியும்.

இன்று எங்கும் கலப்படம். பொருள் முதல் ஆன்மிகம் வரை கலப்படம் தொடர்கிறது. காலாவதியான பொருட்கள், தரமற்ற தயாரிப்புகளினால் மக்கள் எவ்வளவாய் வேதனையை அனுபவிக்கிறார்கள். எனவே நாம் நேர்மையை விதைக்க வேண்டும்.

## *ஏன் நேர்மையை விதைக்க வேண்டும் ?*

### *1) நேர்மை நம்மைப் பாதுகாக்கும்*

''நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும்'' (நீமொ 13 : 6)

அனைத்திலும் நேர்மையாய் இருந்தால் அதுவே நமக்கு நல்ல பாதுகாப்பு. உண்மை பேசுபவர்கள் ஒருபோதும் பேசியதை ஞாபகத்தில் வைக்க வேண்டாம். அநீதியாய் இருந்தவர்கள் இன்று நன்றாய் வாழ்ந்திருக்கிறார்களா ? அநீதியாய் வாழ்பவர்கள், கவுதாரிப் பறவை அடைகாப்பது போன்றவர்கள் (எரே. 17:11). கவுதாரி பறவை தன் முட்டை, பிற பறவைகளின் முட்டை என வேறுபாடு தெரியாமல் அடைகாக்கும். கடைசியில் எதையும் பெற்றுக் கொள்ளாது. யாக்கோபு தவறாய் சொத்தைப் பெற்றார். அவரால் நிம்மதியாய் அனுபவிக்க முடிந்ததா? (தொநூ. 31:41) இல்லை, ஊர் சுற்றி திரிந்தார். ''தீய வழியில் சம்பாதிக்கும் பெரும் பொருளை விட, நேர்மையோடு ஈட்டும் சிறு தொகையே மேல்'' (நீதி. 16:8). ஓர் இராணுவத்தில் பணி செய்தவர் இராபர்ட். ஓய்வு பெற ஐந்து வாரங்கள் மட்டும் இருந்த நிலையில், இராணுவத்தின் முக்கிய இரகசியங்களைப் பிளாஸ்டிக் பையில் மறைத்து வைத்திருந்தபோது, கையும் களவுமாய்ப் பிடிபட்டார். அந்த ஆவணங்களைப் பக்கத்து நாட்டுக்கு விலை பேசியிருந்தார் என்ற உண்மை தெரிய வந்தபொழுது, நல்ல தந்தையாய், நல்ல கணவராய் இருந்த அவர் அனைத்தையும் இழக்கின்றார். நேர்மை ஒன்று தான் நம்மைப் பாதுகாக்கும். நல்லவன் என்ற முக மூடி நமக்குத் தேவையில்லை. நாமே நல்லவர்களாய், நேர்மையாய் வாழ்வது சிறந்தது.

***2) நேர்மை நம்மை உயர்த்தும் :*** (நீமொ. 11 :34)

நேர்மை என்பது வெள்ளைத்தாள் போன்றது. ஒருமுறை அழுக்குப் பட்டால், மறுபடியும் வெண்மையாக்க முடியாது. பழைய ஏற்பாட்டு யோசேப்பு, அரியணை பெற துணையாய் இருந்தது நேர்மை. ஒருவர் தன்னுடைய இரண்டு குழந்தைகளை விளையாட்டு அரங்கத்திற்குக் கூட்டிச் சென்றார். அவர் டிக்கட் கவுண்டரில் போய் ஒரு டிக்கட் என்ன விலை என்று கேட்க, டிக்கட் கவுண்டரில் இருந்தவர், ''பெரியவர் என்றால் 5 ரூபாய், குழந்தைகளுக்கு 6 வயதுக்குக் கீழ் என்றால் காசு இல்லை. ஆறு வயதுக்கு மேலே என்றால் அதே போன்று 5 ரூபாய், டிக்கட் எடுக்க வேண்டும்'' என்று கூறினார். உடனே அவர், ''பெரியவனுக்கு 7வயது ஆகிறது, அவனுக்கும் எனக்கும் சேர்த்து 2 டிக்கட் கொடுங்கள்'' என்றார். அப்பொழுது கவுண்டரில் இருந்தவர் பெரிய பையனை ஏற இறங்கப் பார்த்து விட்டு அவனுக்கு 7 வயதுன்னு நீங்க சொல்லி தான் தெரிகிறது. ஆறு வயது தான் என்று நீங்கள் சொல்லியிருந்தால், நான் விட்டிருப்பேனே, உங்களுக்கு 5 ரூபாய் மிச்சமாயிருக்குமே என்று சொன்னார். அதற்கு அத்தந்தை, ''நீங்கள் சொல்கிற மாதிரி, அவனுக்கு 6 வயது என்று பொய் சொல்லியிருந்தால் எனக்கு 5 ரூபாய் மிச்சம் தான். ஆனால், என் அப்பா ஐந்து ரூபாய்க்காக அற்புதமாகப் பொய் சொல்கிறாரே என்று என் மகன் எண்ணுவான். இந்த ஐந்து ரூபாயை மறுபடியும் சம்பாதிக்க முடியும், ஆனால் அவன் மனதில் ஒரு கறை ஏறிவிட்டால் அதைக் கடைசி வரை எடுக்க முடியாது. எனவே நேர்மை பிள்ளைகளை உயர்த்தும் என்பதைப் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே எனக்குப் போதும்'' என்றார். திருமறையில் தாலந்து உவமையில், ஐந்து, இரண்டு தாலந்து பெற்றவர்கள் எஜமானுக்கு நேர்மையாய் இருந்ததினால் அவர்களை உயர்வுக்கு வழிநடத்துகிறார். உண்மையுள்ளவர்கள் நிறைவான ஆசி பெறுவார்கள்.

ஆபிரகாம் லிங்கன், தம் தொடக்க காலத்தில் ஒரு மளிகைக் கடையில் வேலை செய்யும்போது, ஒருநாள் இரவு கடையை மூடும் போது கணக்கு பார்த்தார். அப்பொழுது விற்ற பொருளை விட பணம் சற்று அதிகம் இருந்தது. உடனே சிந்தித்துப் பார்த்தார். இது எப்படி ? இது யாருடைய பணம் கணக்குப் பார்த்து கண்டுபிடித்த அவர் அந்த இரவே அந்தப் பணத்தைக் கொண்டு போய் உரியவரின் வீட்டைத் தேடி கண்டுபிடித்து, பணத்தை ஒப்படைத்தார். நேர்மை உள்ளவர்கள் உயர்த்தப்படுவார் என்பதற்கு இணங்க ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாய் உயர்த்தப்பட்டார்.

நேர்மையாய் விதைத்தால் உண்மையான பலனைப் பெறுவோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**06-09-2015** ***கல்வி ஞாயிறு & ஆசிரியர் ஞாயிறு***

# இயேசுவே குரு
## JESUS THE GURU

நீமொ 4:1-19 திப 22:1-5
திபா 111 லூக் 4:31-44

**"அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில், அவர் அதிகாரத்தோடு கற்பித்தார்."** லூக் 4:32

***இறைவேண்டல் :*** *அனைத்திற்கும் உறைவிடமான கடவுளே, அனைத்து அறிவு நுட்பத்திற்கும், அறிவுத் திறனுக்கும் ஆக்கத் திறனாக இருப்பவரே, கல்விக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கும், கற்றுக்கொடுக்கும் நற்பணியில் இணைந்திருக்கும் ஆசிரியர்களுக்கும் உமது அறிவையும் அதிகாரத்தையும் அருள் செய்வீராக. கல்வி அறிவு உம் திருவுளத்திற்கு ஏற்புடையதாகவும், படைப்பின் வளமைக்கும், நன்மைக்கும் ஆக்கம் தருவதாகவும் அமைந்தருள அருள்தாரும். எங்கள் நல்ல குருவாம் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 5-ம் தேதி இந்தியா முழுவதும் ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. ஒரு ஆசிரியராகப் பணியாற்றி இந்தியக் குடியரசின் தலைவராக உயர்ந்த டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்த நாளையே ஆசிரியர் நாளாகக் கொண்டாடுகின்றோம். ஆசிரியர் பணி புனிதமானது, பிறரை வாழவைப்பது, ஒருவர் தன்னை யார் என்பதை அறியச் செய்வது என ஆசிரியர் பணியின் சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே சொல்லாம்.

அமெரிக்கா ஐக்கிய நாட்டின் பால்டிமோர் நகரில், கறுப்பு இனமக்கள் வாழும் ஓர் சேரிப்பகுதியில் வாழ்ந்த 200 இளைஞர்கள் குறித்து ஒரு சமூகவியல் பேராசிரியர் ஆய்வு ஒன்றை நடத்தினார். இறுதியாக அவர்களில் ஒருவர் கூட வாழ்க்கையில் முன்னேறுவதில்லை என்ற தனது தீர்வைக் கொடுத்தார். சுமார் 20 ஆண்டுகள் கழித்து இவரது ஆய்வறிக்கையைப்படித்த மற்றொரு சமூகவியல் பேராசிரியர் அதே 200 பேரிடம் ஆய்வு நடத்த விரும்பி அவர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்களில் 176 பேருடன் அவரால் தொடர்பு கொள்ள முடிந்தது, முதல் பேரசிரியர் கண்ட முடிவிற்கும், இவர்களது வாழ்விற்கும் பெரிய வேறுபாடு காணப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் மருத்துவராக, பொறியியலாளராக, பேராசிரியராக, ஆராய்ச்சியாளராக, அதிகாரிகளாக

நாட்டின் பல்வேறு பகுதியில் காணப்பட்டனர். இதற்கான காரணத்தைக் கேட்ட போது, “அந்த சேரிப்பகுதியில் வந்து குடியேறிய ஒருபெரியவர் அந்த இளைஞர்களை நல்வழிப்படுத்தி, வழிகாட்டியாக இருந்து சிறந்தவர்களாக உருவாக்கினார்” என்றார். அவரை அந்தப்பகுதி மக்கள் Master (ஆசிரியர்) என்று அழைத்தனர். இன்று மலைவாழ் மக்கள் மத்தியில் பணிசெய்யும் நமது அருட்பணியாளர்களை அந்த மக்கள் பெரிய வாத்தியார், சின்ன வாத்தியார் என்று அழைக்கின்றனர். திருமறையின் பார்வையில் ஆசிரியர் பணியை பெற்றோர், போதகர், வயதுமுதிர்ந்தோர் அனைவரும் நிறைவேற்ற வேண்டும். (இச. 6:7; 1கொரி. 12:8). ஆசிரியருக்கு சிறந்த மாதிரி இயேசு கிறிஸ்துவே. நற்செய்தி நூற்களில் இயேசுவை பிறர் அழைத்ததாக குறிப்பிடப்படும் இடங்கள் 90. அவற்றில் 60 இடங்களில் அவர் ‘போதகரே’ என்று அழைக்கப்பட்டதாகக் காண்கிறோம். இயேசு கிறிஸ்துவும் தம்மைப்பற்றி யோவா. 13:13 -ல் குறிப்பிடும்போது போதகர் என்றேக் குறிப்பிடுகின்றார். இன்று ஒரு குரு அல்லது போதகர் என்ற நிலையில் இயேசு கிறிஸ்துவின் சிறப்பான அணுகு முறைகளைக் குறித்தும் அவற்றின் வழி நாம் கற்றுக்கொள்ளும் உண்மைகள் குறித்தும் சிந்திப்போம்.

### *1. தன் கருத்தை பிறர்மீது திணிக்காதவர் :* **லூக் 10 :25-37**

இந்த திருமறைப்பகுதியில் இயேசுவிடம் வந்த திருச்சட்ட அறிஞர் தான் கடவுளின் திருச்சட்டத்தின்படி குற்றம்சாட்டப்பட முடியாதவன் என்ற தீர்மானத்துடன் இயேசுவிடம் வந்தார் (லுக். 10:29). அன்பு ஒன்றே திருச்சட்டத்தின் நிறைவு என்பதிலும் அவர் தெளிவுடன் இருந்தார் (லூக். 10:27,28). ஆனால், யாரிடம் அன்பு செலுத்துவது என்பதில் அவனது தீர்மானத்தை தவறு என்று நேரடியாக அவனைக் குற்றம்சாட்டாத இயேசு, அவனே தனது தவறை உணரச் செய்கின்றார். அவர் சொன்ன உவமையின் முடிவைக்கூட அவர் கூறாமல் அவனே தெளிவாய் தீர்மானிக்க விட்டு விடுகின்றார் (லூக் 10:36,37). இன்று நாம் நமது கருத்தை எப்படியாவது பிறர் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று திணிக்க முற்படுகின்றோம். இயேசு கிறிஸ்துவின் அணுகுமுறையில் திணித்தலுக்கு இடம் இல்லை.

### *2. ஒருவனை அவன் யார் என்பதை அறியச்செய்யும் குரு :* **யோவா 8:1-11**

இப்பகுதியில் தங்களைக் குற்றமற்றவர்கள் என நினைத்துச் கொண்டு, விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணை குற்றவாளியாக நிறுத்தி தண்டனை வழங்கத் துடிக்கும் ஒரு கூட்டத்தினரைக் காணலாம் (யோவா. 8:3-5). ஆனால், இயேசு கூறிய பதிலினால் தாங்கள் பாவிகள் என்பதை உணர்ந்து கொண்டார்கள் (யோவா. 8:7,9). பொதுவாக வேதபாரகர், பரிசேயர்

தங்களை நீதிமான்களாகக் கருதும் எண்ணம் கொண்டவர்கள். பரிசேயர், ஆயக்காரர் உவமையில் பரிசேயருடைய இறைவேண்டல் அவர்களது இயல்பை வெளிப்படுத்துவதாக உள்ளது (லூக் 18:11,12). அப்படிப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என்பதை உணர்ந்து கொள்ள இயேசு கிறிஸ்துவின் அணுகுமுறை உதவியது. நாம் மற்றவர்களை குற்றவாளிகள் ஆக்க முயலாமல் அவர்கள் தங்களை சீர்படுத்தும்படி, குறைவை உணரச் செய்ய வேண்டும் (கலா 6:1).

## 3. எளிதில் புரிந்து கொள்ளும் வழிமுறைகளை ஏற்படுத்தினார்:

இயேசு கிறிஸ்து தனது கருத்துக்களை எளிமையான வழிமுறைகளை பயன்படுத்தி மக்கள் மனிதில் பதிய வைத்தார்,

a. ***உவமைகளை பயன்படுத்தினார் :*** (மத் 10:35)

இறையரசின் மறைபொருட்களை எளிதில் புரியும்படி உவமைகள் வழியாக மக்களுடன் இயேசு கிறிஸ்து பேசினார். (எ.கா.) மத். 13:1-8. அவர் கூறிய உவமைகள் மக்கள் எளிதில் இயேசுவின் கருத்துக்களை புரிந்து கொள்ளும்படியாய் அமைந்தது. இந்த பகுதியில் இறைவனுடைய வார்த்தை அனைத்து மக்களையும் சந்தித்தாலும் கேட்பவரின் உள்ளம் முழுமையாக ஆயத்தப்படுத்தப்படாவிட்டால் அது பலன் தராது என்ற கருத்தை தெளிவுப்படுத்துகின்றது.

b. ***சூழ்நிலைகளை பயன்படுத்தினார் :*** (மத் 12:9-13)

இங்கு ஓய்வுநாளில் சூம்பின கையுடைய மனிதனை பயன்படுத்தி மனிதனுக்கு பயன் தராத சட்டங்கள் தவறு என்பதை மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்தார். நாமும் பிறருக்கு ஒரு உண்மையைக் கற்றுக்கொடுக்கும் போது புரியாத தத்துவங்களை பேசாதபடி, எளிதில் புரியும் படியான வழிமுறைகளை பயன்படுத்தி கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு சிறந்த போதகராக, குருவாக இயேசு கிறிஸ்து காட்டிய சிறந்த மாதிரிகளைப் பின்பற்றி மக்கள் புரிந்துகொள்ளும்படி நமது கருத்துக்களை பகிர்ந்து கொள்வோம்.

அருள்திரு. **J. விக்டர் ஞானராஜ்**

# கடவுளின் விடுதலைப்பணியில் பெண் பங்காளர்கள்

## WOMEN PARTNERS IN GOD'S LIBERATIVE ACT

விப 1:15-22 உரோ 16:1-16
திபா 148 லூக் 8:1-3

**"....இவர்கள் தங்கள் உடமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்."** லூக் 8:3

**இறைவேண்டல் :** ***அருள் நிறைந்த கடவுளே, இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் பங்கேற்க பெண்களை அழைத்து ஆற்றலையும் அருளையும் தந்தீர். உம் திரு மைந்தரின் உயிர்ப்புக்கு முதல் சான்றாகும் ஆசியை பெண்மணிக்குக் கொடுத்தீரே. அனைத்து பெண்களும் அடிமைத் தளைகளை அறுத்து உம்மில் விடுதலை தரும் அருள் பணியை இணைந்து நிறைவேற்ற இரக்கம் பாராட்டிட இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

விடுதலைப்பணி என்றவுடனேயே நம் மனதில் வரும் பெரியோர்கள்- நெல்சன் மண்டேலா, மகாத்மாகாந்தி, அம்பேத்கர் எனும் பட்டியல். திருமறையில் விடுதலைப்பணி என்றவுடன் நம் மனதில் வருவது நோவா, மோசே, ஆரோன், நீதித் தலைவர்கள், இறைவாக்கினர்கள் அரசர்கள், இயேசு கிறிஸ்து போன்றோர். இப்படி பொதுவாழ்விலும் திருமறையிலும் விடுதலைப்பணியானது ஆண்கள் வழியாகவே மேலோங்கி நிற்கிறதைக் காணலாம். ஆனால் கடவுளின் விடுதலைப் பணியில் பெண்கள் பலர் பங்காளர்களாயிருந்து இறை விருப்பத்தை நிறை வேற்றுகின்றனர் என்பதை திருமறையில் மட்டுமல்லாது இன்று நாம் நடைமுறையிலும் காண முடியும்.

ஆலயத் தொழுகையில் பங்கு பெறுவது முதல் ஆற்றல் மிகு ஆலோசனைகள் வழங்குவதுவரை திருச்சபையில் பெண்களின் பங்களிப்பு சிறப்பாகவே உள்ளது.

விடுதலைப் பணி என்பது, ஒருவர் தான் அறிந்தோ அறியாமலோ ஒரு கட்டுக்குள் நிலைப்பட்டு, அக்கட்டிலிருந்து வெளிவர இயலாதிருக்கும் நிலையில் அவரை வெளிக் கொண்டு வருவது ஆகும். அது கருத்தியல் சார்ந்த நிலையாகவோ, இருக்கலாம். சமுதாயகட்டுப்பாடு சார்ந்தோ

இருக்கலாம். ஆனால் விடுதலை என்பது அனைவருக்கும் தேவை. மேலும் விடுதலைப் பணி என்பது மனித சேவை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இவ்விடுதலைப்பணியில் இறைத்திட்டத்தை நிறைவேற்ற பெண்களும், பங்காளர்களே, என்ற உணர்வு வேண்டும். திருமறையில் நாம் அறிந்த சில கருத்துக்களைப் பார்ப்போம்.

### *1. இறையச்சத்துடன் விடுதலைப் பணி செய்த பெண்கள்:* (விப 1:15-22)

இஸ்ரயேல் மக்கள் எகிப்தியரால் கொடுமைப்படுத்தப்பட்டு, கடினமான சாந்து, செங்கல், வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும், அவர்கள் வாழ்வு சார்ந்து, நொந்துபோகும் படி செய்து அவர்கள் தலைமுறையினர் பூமியில் வளராதபடி எகிப்தியமன்னர் ஒரு கண்ணியை வைத்தார். எபிரேயப் பெண்கள் பிள்ளைபேற்றின் போது ஆண் குழந்தையை பெற்றெடுத்தால் அதை கொன்று விடுங்கள். பெண் குழந்தையைப் பெற்றெடுத்தால் வாழட்டும் என மருத்துவத் தாதியர்களான சிப்போரா, பூவா ஆகியோருக்கு கட்டளையிட்டார்.

தாதியப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் எகிப்திய மன்னர் தங்களுக்கு கூறியபடி செய்யாமல் ஆண் குழந்தைகளையும் உயிரோடு காத்துக் கொண்டனர்.

விடுதலைப்பணி என்பது தன்னை, தன் சுயத்தை, தன் மன்னர் விருப்பத்தை, தன் குடும்ப விருப்பத்தை நிறைவேற்றுவது அல்ல. மாறாக கடவுளுக்கு அஞ்சி கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவது ஆகும்.

1870-ம் ஆண்டு டிசம்பர் 9-ம் நாள் பிறந்த ஐரோப்பிய பெண்மணியான ஐடா சோபியா ஸ்கடர். தன் மருத்துவ அருட்தொண்டரான தந்தையை பார்க்க வேலூர் அருட்பணி பங்களா வந்தார். இந்நிலையில் ஒருவர் தன்னுடைய மனைவி பிரசவவேதனையாய் துடிக்கிறார், எப்படியாவது அவரை காப்பாற்றுங்கள் என்று புலம்பிய பெண்ணின் கணவரிடம் இதோ என் தந்தை தான் மருத்துவர். உடனடியாக அவரை அனுப்பி வைக்கிறேன் என்றார். சிறுமி ஐடா ஸ்கடர். ஆனால் பெண்ணின் கணவரோ வேண்டாம் அம்மா ஆண்கள் மருத்துவம் பார்க்க எங்கள் சமூகம் ஏற்றுக்கொள்ளாது என வேதனையோடு திரும்பிச் சென்றார். ஐடா ஸ்கடர் பலமுறை எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. மறுநாள் அந்தப்பெண் மரணமடைந்த செய்தி இவர் தம் காதுகளில் எட்டியது. வாழவேண்டிய வயதில் இறந்து விட்டாரே இது இறைச் சித்தமா இல்லவே இல்லை என தீர்மானித்த ஐடா 1895-ல் ஃபிலடெல்பியா

பெண்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவக் கல்வியினை வெற்றிகரமாக முடித்து பெருஞ்செல்வந்தரான ஷெல் என்பவர் தன் மனைவி, மேரி டேபர்ஷெல் நினைவாக கொடுத்த பத்தாயிரம் டாலர் பணத்தில் மேரி டேபர்ஷெல் நினைவு பெண்கள் மருத்துவமனையை நிறுவி இறை அச்சத்துடன் இந்திய மண்ணின் மக்களுக்கு மருத்துவத்தின் வழியாக விடுதலைப்பணி செய்தார். இத்தகைய காட்சியுடன் தான் நாமும் விடுதலைப் பணியாற்ற நம்மையும் ஆண்டவர் அவ்வண்ணமே எதிர்பார்க்கிறார்.

## *2. இறை ஆற்றலுடன் விடுதலைப்பணி செய்த பெண்கள் :*

**(உரோ 16:4)**

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய மடலில் பிரிஸ்கில்லாவும், ஆக்கிலாவுக்கும் வாழ்த்து சொல்லி அவர்கள் பணியை நினைவுகூர்கிறார். அவர்கள் என் உயிரைக் காக்க தலைகொடுக்கவும் முன் வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். என்கிறார். (உரோ 16:4) ஆற்றலுடன் விடுதலைப்பணி செய்ய ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

விரைவாக தண்ணீர் ஓடும் ஓடையில் எதிராக நீந்தும் மீனாய் நாம் ஆற்றலோடு கிறிஸ்தவ வாழ்வில் ஆற்றலாய் செயல்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் விடுதலைப் பணியில் சில இடங்களில் ஆற்றல் நிறைந்த விடுதலைப் பணி வெளிப்பட்டதை காண்கிறோம். ஆலயத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வில் கயிறுகளால் ஒரு சாட்டையை பின்னி ஆடு, மாடு, புறா, விற்போரையும், நாணயம் மாற்றுவோரையும் துரத்தி, இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள் என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்கள். என்று சாடுகின்றார் (யோவா 2: 1416)

நமது திருவிதாங்கூர் பகுதியில் அருட்தொண்டராக வந்த மீட் ஐயர் கிபி 1835 ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார். ஆனால் அவர் தம் மனைவி திருமதி ஜோகன்னா மீட் அவர்கள் உணவுமின்றி உடையின்றி கல்வியின்றி வாழும் பெண்குழந்தைகளை காக்க இறை ஆற்றலுடன் செயல்பட்டார். கணவரோடு ஊர் திரும்ப வேண்டும் என்ற உணர்வின்றி இறை ஆற்றலுடன் இறை சித்தம் நிறைவேற்ற பாடுபட்டார். இவரது ஆற்றல் நிறைந்த செயல்பாட்டால் ஒரு ஆண்டிற்குள் நெய்யூரில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறார்கள் கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களில் பயில ஆரம்பித்தனர். இப்பணியை தாமே நேரடியாக கவனித்து செயல்படுத்தினார். இப்பணிக்கென தன்னையே கொடுத்தார். உடல்

நலக்குறைவால் சரியான மருத்துவமின்றி 1848 பெப்ரவரி 6-ம் நாள் இவ்வுலக வாழ்வை தன் 45 வது வயதில் நெய்யூரில் நிறைவு செய்தார். ஆற்றல் நிறைந்த விடுதலைப் பணிக்கு சான்றானார்.

### 3. ஆர்வத்துடன் பங்களித்து விடுதலைப்பணி செய்த பெண்கள் : (லூக் 8:2-3)

ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும் சூசன்னாவும் மேலும் பல பெண்களும் அவரோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்கு பணிவிடை செய்து வந்தார்கள். இயேசுகிறிஸ்துவின் விடுதலைப் பணியை தங்கள் உடைமைகளைக் கொண்டு தாங்கின பெண்கள் பலர் இருந்தனர்.

D.M.P.B. என்ற மலை நாட்டு விடுதலை திருப்பணியில் ஜெபி, போ, அனுப்பு என மூன்று வார்த்தைகள் முக்கியத்துவப்படுத்தப் படுகிறது. மக்கள் விடுதலை வாழ்வுக்காக ஜெபித்து தாங்குவது அல்லது தன்னையே அற்பணிப்பது அல்லது கொடுத்து தாங்குவது சிறப்பானதாகும். சமுதாயத்தில் வசதி படைத்த பெண்கள், திருப்பணியில் கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகரவும், நற்செய்தியை பறைசாற்றவும் தங்கள் உடைமைகளால் தாங்கினார்கள்.

திருத்தூதர் பணிகள் 9:36-ல் யோப்பா நகரில் தொற்காள் என்ற பெண் சீடர் தம் உடைமைகளைக் கொண்டு ஆடைகளையும், அங்கிகளையும் தைத்து இல்லாதோருக்கு கொடுத்து, உதவி செய்தார். நம் திருச்சபை வரலாற்றிலும் திருவிதாங்கூர் வட்டமாக இருந்த நாட்களில் நமது தாய்மார்கள் மேலாடை அணிய உயர் சாதியினர் என அழைக்கப்படுவோர் தடை விதித்திருந்தனர். இதை மனிதாபிமானமற்ற செயலாக நமது மண்ணில் வந்த அருள் தொண்டர்களின் மனைவியர் கண்டு தங்கள் உடைமைகளைக் கொண்டு குப்பாயம் என்னும் மேலாடையை பெண்களுக்கு வழங்கினர். இதன் விளைவாக மேலாடை பேராட்டம் நடைபெற்றது.

கி பி 1822 முதல் 1823 வரை முதல் பேராட்டம்

கி பி 1828 முதல் 1830 வரை இரண்டாவது போராட்டம்

கி பி 1855 முதல் 1859 வரை மூன்றாவது போராட்டமாக

வெடித்தது. இவை நம் மக்களுக்கு சமூக அடிமைத்தனத்திலிருந்து விடுதலை தேடித் தந்தது.

இயேசு கிறிஸ்து விடுதலைப் பணியில் தந்தையின் திருவிருப்பம் நிறைவேற்றினார், அதற்காக செயல்பட்டார், மட்டுமல்ல, ஆற்றலுடன், சாட்டையால் துரத்தி விடுதலைப்பணி செய்தார். பறவைகளுக்கு கூடுகளுண்டு, நரிகளுக்கு குழிகளுண்டு மானிட மகனுக்கோ மண்ணில் தலை சாய்க்க இடமில்லை எனக் கூறி தன்னையே நமக்காய் தந்து விடுதலைப் பணி செய்தார். நாம் சமுதாயத்தில் பல்வேறு தீமையின் கட்டுகளோடு இருக்கும். மக்களைப் பார்க்கும் போது இயேசு கிறிஸ்துவின் தாகம் நம்மில் ஏற்பட வேண்டும்.

1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் தேதி மனிதன் முதல் முதலாக சந்திரனின் கால் வைத்தான். அனைவரும் வெகு விமரிசையாக அந்தநாளை கொண்டாடினர். அன்று நண்பகல் ஆசிரம சகோதரி ஒருவர், அன்னை தெரசாவிடம், ‘‘அம்மா சந்திரனில் நீங்கள் ஒரு நாள் கால் வைப்பீர்களா?’’ என்று கேட்டார். அதற்கு அன்னை தெரசா சிரித்துக் கொண்டே அங்கும் ஏழைகளுக்கு என் விடுதலைப்பணி தேவைப்படுமாயின் உங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு அங்கே போவேன் என்றார். வாழ்வு, பணி, சிந்தனை அனைத்தும் மற்றவர் வாழ்வின் விடுதலைக்கே பயன்படுத்துவோம்.

திருமதி. **லலிதா தேவகடாட்சம்**

**20-09-2015**

# எனது அமைதியை உங்களுக்கு வழங்குகிறேன்

## MY PEACE I GIVE TO YOU

| | |
|---|---|
| சக 8:12-19 | உரோ 5:1-5 |
| திபா 119:161-176 | யோவா 16:16-33 |

**"என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன்."** யோவா 16:33

***இறைவேண்டல் : அமைதியின் கடவுளே! இனம், பேராசை, கையூட்டு, உண்மையற்ற நிலை, மானிட உரிமைகளை மதிக்கா நிலை, நாட்டின் குழப்பமான நிலை இவைகளின் வழியாக ஏற்படும் சண்டைகள் கசப்புகள் போன்றவைகளால் எங்கள் சமுதாயம் அமைதியிழந்து காணப்படுகிறது. தீமைகளால் உடைந்து நிற்கும் சமுதாயத்தில் இறைமகனின் அமைதியை நிலைநாட்டப்படுவதற்கு அடையாளமாக இந்த உலகத்தை நீர் புதுப்பித்து நீதியின் வழியாக அமைதி, இசைவு, இவைகளை கிறிஸ்து வழி தாரும். இவைகளை அமைதியின் அரசராகிய இயேசுவில் வேண்டுகிறோம்.***

***- ஆமென்.***

அமைதியான கடல், அலைகள் இல்லை. ஆகா! என்ன அழகு குதித்து விளையாடுவதற்கு இது சரியான இடம் என நண்பர்கள் இருவர் அக்கடலில் குளிக்கலாயினர். கரையோரத்தில் குளித்தவர்கள் அலைகள் தான் இல்லையே என சற்று ஆழத்திற்கு சென்றனர். ஏதோ தங்களை இழுப்பது போலிருந்தது அந்தோ பரிதாபம் ! கணநேரத்தில் நீரோட்டத்தால் இழுத்து செல்லப்பட்டு மாண்டு போயினர்.

இப்படிதான் உலக அமைதி வெளிப்படையாய் அடக்கிவைக்கப்பட்டு அமைதியாக இருப்பது போன்று காட்சி தருகின்றது. ஆனால் அதற்குள் சிக்கி கொண்டால் வாழ்க்கையை அலைக்கழித்து விடும். காரணம் அன்பும், உறவும் ,பகிர்வும், மன்னிப்பும், தியாகமும் இருக்க வேண்டிய சமூகத்தில் பிரிவும், வம்பும். சுயநலமும். ஏமாற்றமும், சுகபோகமும் மலிந்து கிடைக்கிறது. இப்படிபட்ட அமைதியற்ற சமூகத்திற்கு இயேசு கிறஸ்து கூறும் பதில் ”என்வழியாய் நீங்கள் அமைதி காண்பீர்கள்”. உலகம் தரும், அமைதிக் குலைச்சலை தவிர்த்துவாழ உலகத்தை வென்ற இயேசுகிறிஸ்துவின் தகவுகளைக் கொண்டு உலக தீமைக்கெதிராக துணிவுடனிருக்க ஆண்டவர் இயேசு கூறுகிறார் (யோவா. 16:33).

யூதர்களின் பகைமையைக் குறித்து பல இடங்களில் சீடர்களுக்கு சுட்டிகாட்டிய ஆண்டவர் யோவான் 16-வது அதிகாரத்தில் திட்டவட்டமாக யூதர்களின் செயல்களைக்குறிப்பிட்டு தமது அடியவர்களிடம் அவர்களின் தீச் செயல்களை சந்திக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்கிறார்.

இத்தகு தீச்செயல்களுக்கு காரணம் யூதர்கள் கடவுளையும் அவரது மைந்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அறியாததே (யோவா15:21) என்று சுட்டிக்காட்டிய இயேசுகிறிஸ்து,தான் உலகத்திலிருந்து எடுபடுகிற போது சீடர்களை தேற்றவும் நீதிக்கு நேராய் நடத்தி கடவுளை சார்ந்து வாழவும் ஏற்புடைய தூண்டுதலைத் தரும் தூய ஆவியாரைத் தருவதாக வாக்கு பண்ணுகிறார் (யோவா. 16 : 5-11). இயேசு கிறிஸ்துவும், தந்தையாம் கடவுளும் சீடர்களிடம் அன்பு கொண்டுள்ளதால் (யோவா. 16 : 27) சீடர்கள் சிதறடிக்கப்பட்டாலும் கிறிஸ்துவின் அமைதியை காண்பார்கள். காரணம் கிறிஸ்து உலகை வெற்றி கொண்டவர். அது அவர்களுக்கு நல்லதொரு பாடம் என்பதை இயேசு கிறிஸ்து தெளிவு படுத்துகிறார்.

### *1. அழுகையைத் தரும் உலகம் :*

உலகத்தின் செயல்கள் கிறிஸ்துவையும் அவரது தகவுகளையும் ஏற்காததால் கிறிஸ்துவின் அடியார்களை பகைக்கிறது. யூத தலைமைத்துவம் இயேசு கிறிஸ்துவை உலகத்தின் பார்வையில் பார்த்தபடியினால் (உலக அரசு அதிகாரம் சார்ந்து, உலக அமைப்புகள் சார்ந்து) கிறிஸ்துவை ஏற்க முடியவில்லை. "உலகமே அவனுக்கு பின் செல்கிறது" என்று தங்கள் பலம், செல்வாக்கு குறைவதற்குள் அவரை கொலை செய்து விட வேண்டும் என்பதுவே அவர்கள் நோக்கமாயிருந்தது. இதை இயேசு கிறிஸ்து சிலுவை மொழியில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்கிறார்.

இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்து உலகத்தின் பாவத்தைக் கண்டித்து ஒரு தனித்துவமான வாழ்க்கையை நடத்தி தம்முடைய அன்பை பாமரர்களோடும், பாதிக்கப்பட்ட மக்களோடும் வெளிப்படுத்தியதால் உலகம் அவரைப் பகைத்தது. உலக அதிகாரம் அடிமைப்படுத்துவதற்கு அல்ல என்பதை சுட்டிகாட்டியது உலகம் அவரை பகைப்பதற்கு காரணமாய் இருந்தது (யோவா. 15 : 18-19).

இயேசு கிறிஸ்துவை சார்ந்து வாழும் சீடர்களையும் உலகம் பகைக்கும். இயேசு கிறிஸ்துவின் சீடர்களைத் தொழுகை கூடங்களிலிருந்து வெளியாக்கினர் (யோவா. 9:22-34). அடியவர்களை கொலை செய்வதோடு அதனை இறைத் தொண்டாக நினைத்தனர்

(திப. 7:57-59). இத்தகைய நிலை கிறிஸ்துவின் அடியவர்களுக்கு அழுகையைத் தருவதாகவே இருக்கும்.

இயேசுகிறிஸ்து தம் அடியவர்கள் சிதறடிக்கப்பட்டு போவார்கள் என்றதுபோல் (யோவா. 16:31-32) யூதத் தலைமையும், ரோமானிய பேரரசும் கிறிஸ்துவின் அடியவர்களுக்கு துன்பத்தையும், அழுகையையும் கொடுத்து கொண்டேயிருந்தார்கள். காரணம் அவர்களது உலக வேட்கை கிறிஸ்து தரும் இறை அமைதிக்கு எதிரானது; சுய நல ஆடம்பரங்கள் சார்ந்தது. அவர்களால் இறையடியவர்களை புரிந்துக்கொள்ள முடியவில்லை (தி.ப. 4:12)

இன்றும் உலகம் இறைத் தகவுகளை வெளிப்படுத்துவோருக்கு தீமையையே தந்து கொண்டிருக்கிறது. கையூட்டு பெறும் அதிகாரிகளிடையே தூய கரம் உள்ள அதிகாரி சீரழிக்கப்படுகிறார். ஏழைகளை குடிகாரர்கள், ஊதாரித் தனமானவர்கள், உழைக்காதவர்கள் என்று சொல்லும் பலர் குறுக்கு வழியில் செல்வத்தை பெருக்கிய சுய நலத்தையும், சுகபோகத்தையும் வளர்த்து கொண்டிருப்பதைக் கண்கூடாக காண முடியும். இறை அச்சத்தோடு நன்மை செய்கிறவர்கள் அதிகமாய் நெருக்கப்படுகிற நிலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இது உலக வாழ்வில் மட்டுமல்ல திருச்சபை வாழ்விலும் இன்று தீமைகள் அதிகாரத்தை பிடுங்கும் நிலையில் வளர்ந்து கொண்டே தானிருக்கிறது. ஆம் இந்த உலகம் அழுகையையே பரிசாகத் தருகிறது.

## 2. அமைதியைத் தரும் கிறிஸ்து :

உலகம் அழுகையைத் தரும் நிலையில் கிறிஸ்து தம் அடியவர்களுக்கு அமைதியை ஈவாகத் தருகிறார். இதையே இயேசுகிறிஸ்து தமது அடியவர்களிடம் கூறுவதாக யோவான் 16 : 33 -ல் காண்கிறோம். என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் அவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்" என்கிறார். கிறிஸ்து தரும் அமைதி மயான அமைதியல்ல கல்லறையின் வெளியே பளிங்கு கல் போட்டு பார்வைக்கு நலமாய் வைக்கலாம். ஆனால் உள்ளே இருப்பதோ? கிறிஸ்து தருவது அப்படிப்பட்ட அமைதியல்ல, இன்று உலகம் தர நினைக்கும் அமைதி இப்படிப்பட்டதே சமூக பிரச்சனைகளில் அமைதிக் குலைச்சல்கள் (சமய வெறி, சாதிய வெறி, வர்க்க போராட்டம்) ஏற்படும் போதெல்லாம் அரசு 144 தடை உத்தரவை அமல்படுத்தி, மக்களை நடமாடுவதற்கோ, கூடி பேசுவதற்கோ வாய்ப்பு தராமல் தங்கள் ஆயுதங்களால் அடக்கி, அமைதி

நிலவுகிறது என்கிறது. இது மயான அமைதி, உறவும், அன்பும், பகிர்வும், மன்னிப்பும், ஒப்புரவும், ஏற்றுக் கொள்ளுதலும் அங்கே இல்லை. ராமாவிலே ஒரு குரல் கேட்கிறது. ஒரேபுலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது. இராகேல் தன் குழந்தைக்காக அழுது ஆறுதல் பெற மறுக்கிறார் (மத். 2:11). ஏரோதின் அமைதிக்காக பல குழந்தைகள் சாகக் கொடுக்கப்பட்டு அமைதி குலைச்சலாக்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்து இயேசுவின் பிறப்பில் பாடப்பட்ட பாடல் கிறிஸ்து இயேசு தரும் அமைதிக்கு சான்று பகருகின்றது. லூக். 2:13-14 வசனங்களில் "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதியுண்டாகுக". இங்கே உலகில் கடவுளுக்கு உகந்தோருக்கு என்பது (இறை அடியார்களுக்கு இறைத் தகவுகளை கைக்கொள்ளுபவர்களுக்கும் அமைதி உண்டாகும். காரணம் அன்பும், உறவும், பகிர்வும், தியாகமும், மன்னிப்பும் அவர்களோடிருக்கும். அவர்களினிமித்தம் உன்னதத்தில் கடவுள் மாட்சியடைவார் என்கிறது.

இயேசு கிறிஸ்து ''என் அமைதியை உங்களுக்கு விட்டு செல்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல என யோவான் 14 : 27 -ல் கூறுகிறார். காரணம் இறைவன் தரும் அமைதியில் கலக்கமும் இல்லை, மருட்சியும் இல்லை. திடனும், நம்பிக்கையும் இருக்கும் என்பதை உணர முடியும். ஆனால் லூக்கா 12 : 51 -ல் "மண்ணுலகில் அமைதியை அல்ல பிளவை உண்டாக்க வந்தேன்" என்று இயேசு கிறிஸ்து கூறுவதில் உறவுக்குட்படாத அமைதி பிளவையே ஏற்படுத்தும் என்கின்ற அடித்தளத்தில் நின்று இயேசு நாதர் கூறுவதை உணரலாம்.

இறை இயேசுவில் அன்பிற்கு இனியவர்களே ! இன்றும் நன்மை செய்வதால், உறவுளை சீர்படுத்துவதால், மனம் நிறைந்து பழகுவதால், திருப்தியோடு கூடிய வாழ்வு நெறிகளால் மனம் அமைதி காண வேண்டும். இதுவே கிறிஸ்து தரும் அமைதி. இது கிறிஸ்து தரும் பகிர்வாலும், உறவாலும், பிறரை ஏற்கும் பண்புகளாலும் வளர முடியுமே தவிர சுய நல போங்குகளால் வளர முடிவதில்லை என்பது உறுதி.

இன்று கிறிஸ்தவர்கள் உள்பக்கம் செதில் அரித்து வெளிப்பக்கம் வர்ணம் பூசப்பட்ட மூங்கில்களாக இருந்து கொண்டிருக்கிறோம். வெளியில் கிறிஸ்து, அவர் தரும் விடுதலை வாழ்வு, மன்னிப்பு, தியாகம் - சிலுவை என்றெல்லாம் சொல்லுகிற நாம் உள்ளான நிலையில் பதவி வெறி, அதிகாரம், ஆணவம், ஆன்மிகப் பெருமை, சுய நலம், பகை, விரோதம், காம விகாரம், பண ஆசை என்று எல்லாத் தீமைகளுக்கும் இடம்

கொடுக்கிறோம். லஞ்சம் ஒழிப்போம் என்கிறோம், பதவிக்காக எதையும் கொடுக்க முன்வருகிறோம். மன்னிப்போம் மறப்போம் என்கிறோம். திருச்சபைகளில் கோஷ்டிகளை உருவாக்கி மற்றவர்களைத் தகர்ப்பதற்கு திட்டமிடுகிறோம். இப்படிப்பட்ட தீமை தரும் உலக போங்குகளால் நிச்சயமாக கிறிஸ்து தரும் அமைதி உருவாக முடியாது.

தன்னை தாழ்த்தி இதோ இனி நான் ஆண்டவருக்கு அடிமை, உமது திருவுளமே எனக்கு ஆகட்டும் என்ற மரியாளைப் போல தங்களை தாழ்த்தவும், இறைத் திருவுளத்திற்கு ஒப்பு கொடுப்பதுமே உண்மை அமைதிக்கு வழிகாட்டும்.

கிறிஸ்து தரும் அமைதி பகட்டிலும், பார்வையிலும் அல்ல உள்ளத்திலும், உறுதியிலும் பிரதிபலிக்கும் அனுபவம். அத்தகு அமைதி வாழ்வை கிறிஸ்து நமக்கு தருவாராக.

அருள்திரு. A. **ஜெப சுஜி**

**27-09-2015** ***தென்னிந்தியத் திருச்சபை நாள்***

# வழிபாட்டில் ஒற்றுமை

## UNITY IN WORSHIP

நெகே 2:17-20 உரோ 8:31-39
திபா 66 லூக் 9:1-6

**என் கடவுளின் அருட்கரம் என்னோடு இருக்கிறதையும், மன்னர் எனக்கு உரைத்ததையும் அவர்களுக்குச் சொன்னேன். அவர்களும் "வாரும் கட்டுவோம்" என்றனர்; நற்பணி செய்ய தங்களை தயார் செய்து கொண்டனர்.**
**நெகே 2:18**

**இறைவேண்டல் :** ***திருச்சபையை ஆண்டு வழிநடத்தும் ஆற்றல் நிறைந்த கடவுளே, தென்னிந்தியத் திருச்சபை எனும் அருட்கொடைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். திருச்சபை தெளிவாக உம் திருக்காட்சியைப் பார்க்கவும், நம்பிக்கையின் ஒற்றுமையை உள் வாங்கி பன்மை சூழலில் தைரியமாய் உமக்கு சான்று பகர அருள்தாரும். வேறுபாடுகளை களைந்து அனைத்து அறிவுக்கும் மேலான உம் அன்பால் ஒன்றிணைக்கப்பட அருள் வேண்டி இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம். ஆமென்.***

தென்னிந்தியாவில் 1947-ஆம் ஆண்டு வரை பல்வேறு திருச்சபைகள் மேலை நாட்டுத் திருச்சபை அமைப்புகளுக்கு உட்பட்டு செயல்பட்டு வந்தன. இவைகளில் பிரதானமான சபைகளான காங்கிரிகேஷனல், பிரஸ்பித்தேரியன், ஆங்கிலிக்கன், மெதடிஸ்டு என்னும் நான்கு சபைகள் ஒருறுப்பியல் முறையில் (Organic Union) 1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் ஒரே திருச்சபையாக உருவானது. தற்போது தென்னிந்தியத் திருச்சபை 22 பேராயங்களை கொண்ட ஒரே திருச்சபையாக பரந்த ஒற்றுமைக்காக (Wider Union) உழைத்து வருகிறது. தென்னிந்தியத் திருச்சபை அருட்பணி தகவுகளுடன் வழிபாட்டுத் திருச்சபையாக (Liturgical Church) இறை மக்களை ஆன்மிக வாழ்வில் வளமைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

திருச்சபை இறைமக்களின் ஒற்றுமைக்கும் வழிபாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் தருகின்றது. கிறிஸ்தவ தொழுகை தனி மனித வாழ்வின் மையமாகவும், உள்ளூர் திருச்சபையின் ஒற்றுமைக்கு அஸ்திபாரமாகவும் அமைந்துள்ளது. தொழுகையின் வழியாக உள்ளூர் திருச்சபையின் ஒற்றுமை வலிமையடைவதுடன் உலகளாவிய கிறிஸ்தவ

சமூகங்களிடையே பற்றுறுதியும் கலாச்சாரப் பண்பும், தொடர்புபடுத்தப்படுகிறது. திருச்சபை தொழுகையில் அழுத்தம் பெறும். இணைந்து வாழ்தல், பகிர்தல், பொதுவான பற்றுறுதி ஆகியவற்றை கொய்னோனியா (Koinonia) என்னும் கிரேக்க வார்த்தையின் மூலம் புரிந்து கொள்கிறோம்.

திருமறையில் (Koinonia) என்னும் சொல் முதல்முறையாக அப்போஸ்தலர் 2 : 42-47-வரையுள்ள பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் ஒரே மனம், நட்புறவு, இணைந்த நம்பிக்கை, ஆகிய பண்புகளுடன் இறை வார்த்தைகளை கேட்டல், செப வாழ்வு, அப்பம் பிடுதல், பகிர்தல் போன்ற செயல்களில் இணைந்து ஈடுபட்டனர். இன்றைய அருளுரையில் இறைவனை இணைந்து வழிபடுவதால் கிடைக்கும் தூண்டுதல்கள் (inspirations) முக்கியப் படுத்தப்படுகிறது. இதற்கு நெகேமியா ஒரு சான்றாளராக திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

### *1. ஒரே மனம்* **(One Mind) :**

கிறிஸ்தவ வழிபாட்டின் வழியாக சாதி, மொழி, இனம் ஆகிய வேறுபாடுகள் மாறி மனித மனங்கள் ஒன்றுபடுகின்றன. உரோ 8:31-39-இல் கிறிஸ்துவின் அன்பு மனங்களை ஒன்றிணைக்கும் கருவியாக கூறப்பட்டுள்ளது. இந்த உலகில் நாம் பல சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறோம். இவை ஏழ்மை, நோய்கள், ஏற்றத்தாழ்வுகள், தோல்வி போன்ற முகங்களாக வெளிப்படுகின்றன. ஆனால் சிலுவையில் இருந்து வெளிப்பட்ட இறை அன்பை ஆதாரமாகக் கொண்டு நமது மனங்கள் ஒன்றுபட்ட நிலையில் வாழ்ந்தால் சாவே எதிரே வந்தாலும், நாம் அவற்றை மேற்கொள்ள முடியும். இறை மக்கள் ஒரே மனத்தவராய் வாழ்வதால் இறைமக்களிடையே நட்புறவும், சகோதரத்துவமும் வளர்ச்சியடையும். நெகேமியா 2:19,20 ஆகிய வசனங்களில் கடவுளின் மக்கள் ஒரே மனத்தவராய் செயல்பட்டதால் சன்பல்லாத், தொபியா போன்ற எதிர்ப்பாளர்களையும் தோற்கடிக்க முடிந்தது. ஆன்மிக வாழ்வில் எதிர்ப்புகளும், எதிர்மறையான காரியங்களும் நிகழ்வது இயல்பு. ஆனால் இறைமக்கள் ஒரே மனத்தவராய் கூடி வாழும் போது வெற்றி வாகை சூடுகிறோம்.

### *2. பொதுவான பற்றுறுதி* **(Common Faith) :**

கிறிஸ்தவ வழிபாட்டில் பொதுவான பற்றுறுதி மிக முக்கியமான பண்பாக உள்ளது. ரோமர் 6 : 1-10 வரையுள்ள வசனங்களின்படி

திருமுழுக்கின் வழியாக நாம் கிறிஸ்துவுடன் இறந்து அவருடன் வாழ்கிறோம். என்னும் பொதுவான பற்றுறுதியில் வாழ்ந்து வருவதாக பவுலடியார் குறிப்பிடுகிறார். 1கொரி. 12:13-ல் யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்கு பெற்றோம் எனக் கூறி திருமுழுக்கினால் உருவாகும் ஒரே பற்றுறுதியை வலியுறுத்துகிறார். திருவிருந்தின் வழியாக எந்தவித வேறுபாடும் இல்லாமல் அனைவரும் ஒரே வரிசையில் அமர்ந்திருந்து இயேசுவுடன் உணவருந்த முடியும் என்ற பொதுவான நம்பிக்கையை திருச்சபை ஏற்படுத்தியுள்ளது. இன்று திருச்சபைகளில் தலைமுறை தலைமுறையாக காணப்படும் பல்வேறு பிரச்சனைகள், வேறுபாடுகள் ஆகியவற்றை திருமுழுக்கு, திருவிருந்து, திருப்பணி ஆகியவற்றின் மூலம் வெளிப்படும் பொதுவான பற்றுறுதியினால் மாத்திரமே மேற்கொள்ள இயலும்.

### *3. இணைந்து செயல்படுதல்* (Joint Action) *:*

கிறிஸ்தவ வழிபாடு, இறை மக்கள் இணைந்து செயல்பட தூண்டுதல் தருகிறது. நெகேமியா 2 : 16-18 வரையுள்ள வசனங்களில் நெகேமியா கடவுளின் ஆதரவுடனும் மன்னரின் உதவியுடனும் எருசலேமின் மதில்களை பழுதுபார்க்க தயாரானபோது சிறந்த நிர்வாகிகளை மட்டும் நாடாமல் தன்னுடன் இணைந்து செயல்படும் உழைப்பாளிகளை தெரிவு செய்தார். இறை மக்களின் கூட்டு முயற்சியால் எதிர்ப்புகளுக்கிடையேயும் கட்டுமான பணியை வெற்றிகரமாக செய்ய முடிந்தது. நெகேமியா 3 : 1-32-ல் குருக்கள், நகை வல்லுநர்கள், வாசனை திரவியம் செய்வோர், வியாபாரிகள், அதிகாரிகள், பெண்கள், ஆகிய அனைவரும் நெகேமியாவின் தலைமையில் இணைந்து செயல்படுவதை படிக்கிறோம். 1கொரி. 2:7-ல் பவுலடிகளார் கூறும்போது தூய ஆவியானவரின் அருட்கொடைகளும் பொது நன்மைக்காகவே தரப்பட்டுள்ளதாக கூறுகிறார்.

தென்னிந்திய திருச்சபை உலகளாவிய ஐக்கியத்தை நிலைநாட்டும் வகையில் இதர திருச்சபைகளுடனும் திருச்சபை சாரா அமைப்புகளுடனும் இணைந்து செயல்படுகிறது. குறிப்பாக தென்னிந்தியத் திருச்சபை, வட இந்தியத் திருச்சபை, மார்த்தோமா திருச்சபைகள் இணைந்து திருச்சபை கால அட்டவணையை (Joint Lectionary) பயன்படுத்துவது சிறந்த உதாரணமாகும்.

**4. உலகுக்குச் சான்று பகர்தல் (Witnessing to the world ) :**

கிறிஸ்தவ வழிபாடு இறைமக்கள் இணைந்து உலகில் சான்று பகரவும் தொண்டு செய்யவும் நமக்கு உந்துதல் தருகிறது. கிறிஸ்தவ தொழுகையின் மூலம் நம்பிக்கைக் கொண்டோரிடையே ஏற்படும் ஒற்றுமை அன்றாடக பணி வாழ்வில் வெளிப்பட வேண்டும். லூக். 9 : 1-6-ல் இயேசு நாதர் தனது 12 சீடர்களையும் ஒன்றாக அழைத்து பேய்களை அடக்கவும், பிணிகளை போக்கவும், இறையாட்சியை அறிவிக்கவும், ஆற்றலையும், அதிகாரத்தையும் கொடுத்து உலகுக்கு அனுப்பினார். உலகுக்கு சான்று பகருதல் அவரை வழிபடுவோருக்கு இறைவனால் தரப்படும் வாய்ப்பு ஆகும். சான்று பகரும் திருப்பணியில் கூடுதல் வசதிகளை எதிர்பாராமல் கிடைக்கக் கூடிய வாய்ப்புகளையும் வசதிகளையும் பயன்படுத்தி துரிதமாக செயல்பட வேண்டும் என இயேசு நாதர் இப்பகுதியில் வலியுறுத்துகிறார்.

திபா. 66-ல் இறைவன் இஸ்ரவேலருக்கு செய்த உதவிகளை கடவுள் நமக்கு இன்றும் செய்து வருகிறார். எனவே கடவுளுக்கு நன்றி கூறுவதற்கு அடையாளமாக, கடவுளுக்கு சான்று பகரும் பணியில் ஈடுபட வேண்டும் என தாவீது அரசர் வலியுறுத்துகிறார்.

தென்னிந்தியத் திருச்சபை ஒவ்வொரு உள்ளூர் திருச்சபையையும் சமூகத்தில் இறைவனுக்கு சான்று பகரும் இயக்கமாக வடிவமைத்துள்ளது. நோயுற்றோர், துன்புறுவோர், வறுமையில் வாழ்வோர், கடினமான இடங்களில் குடியிருப்போர், உரிமைகள் மறுக்கப்பட்டோர் ஆகியோரிடையே இறையாட்சியின் தகவுகளை பரப்பி, சான்று பகர உள்ளூர் திருச்சபைகள், தொழுகையின் வழியாக தயாரிக்கப்படுகின்றன.

இன்று திருச்சபையில் நிலவும் நிர்வாக சீர்கேடுகள் வெளிப்படையான பணி முறைகள் இல்லாமை சாதியின் பெயரால் திருச்சபைகள் பிரிந்து நிற்பது பரந்த ஒற்றுமைக்கு உழைக்காமல் மெத்தனமாய் இருப்பது போன்றவை நமது தொழுகையின் ஒற்றுமையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

நமது அன்றாடத் தொழுகைகள் நம்மை ஒரே மனத்தவராக மாற்றி பொதுவான பற்றுறுதியை பாதுகாக்கவும், இணைந்து செயல்படவும், உலகுக்கு சான்று பகரவும் தூண்டுதல் தர வேண்டும். அத்தகைய தொழுகை முறைகள் உயிரோட்டமான கிறிஸ்தவ வாழ்வுக்கு பெரும் துணையாக அமையும்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் விஜயன்**

# முதியோரின் ஞானம்
## WISDOM OF THE ELDERLY

| | |
|---|---|
| யோசு 23:1-6 | 1தீமொ 5:1-10 |
| திபா 120 | லூக் 2:25-35 |

"மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன" லூக் 2:30,31

***இறைவேண்டல் : எங்கள் மூதாதையரின் கடவுளே! எங்களுடைய வாழ்வுக்கு மாதிரியாக இருக்கும் முதியோரை மதிக்க எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறீர். அனேகருக்கு சான்றாக மாறிய அவர்கள் வழி நடக்க எங்களுக்கு அருள்தாரும். முதியோருக்கு உமது திறனையும், ஆற்றலையும் அருளிச்செய்யும். முதியோரை பண்புடன் பராமரித்து நடத்தும் பொறுப்பை இறைப்பணியாக ஏற்கும் வலிமையை உமது பிள்ளைகளாம் எங்களுக்குத் தாரும். சிலுவையின் துன்ப நேரத்திலும் பொறுப்பை கண்ணியமாக நிறைவேற்றிய இயேசு கிறிஸ்துவில் இவைகளை வேண்டுகிறோம். ஆமென்.***

முதியோர் என்ற சொல் Elder, Older, adult, Senior citizen போன்ற ஆங்கிலச் சொற்களில் பயன்படுத்தப்படுகின்றன. முதியவர்களின் பட்டறிவும், ஞானமும், அனுபவங்களும் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் மிகப்பெரிய சொத்து. முதிர் வயது பருவம் என்பது மனித வாழ்வின் இரண்டாம் குழந்தைப் பருவம் என்றும் கூறுவர். எனவே முதியோரை மிகுந்த கவனத்துடனும் மரியாதையுடனும் பராமரித்தல் வேண்டும். இன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், அரசும் முதியோரைப் பற்றிய கரிசனையை வலியுறுத்துகின்றன. அதன் விளைவால் அக்டோபர் 1 -ஆம் நாள் உலக முதியோர் தினமாக ஆசரிக்கப்படுகிறது. முதியோரின் ஞானம் நாட்டுக்கும் வீட்டுக்கும் தனிமனிதனுக்கும் பயனுள்ளதாக அமைகின்றது.

நம் நற்செய்தி பகுதியில் கூறப்பட்டுள்ள சிமியோனின் பாடலில் அமைந்துள்ள அவரது ஆன்மிக அனுபவங்கள் முதியோரின் மேன்மையைக் காட்டுகிறது. முதியோரை ஏற்றுக்கொள்ள தயங்கும் இளையோருக்கு சிமியோனின் சமூக மற்றும் ஆன்மிக அனுபவங்கள் தரும் வாழ்வின் அடித்தளங்களை காண்போம்.

### *1. ஆண்டவரைக் கனம்பண்ணும் முதியோர் :* (லூக் 2 : 32)

முதியோர் தூரக்காட்சியும், பொது நோக்கும், பரந்த மனப்பான்மையும் உள்ளவர்கள். இதனை சிமியோன் கூறுகையில் "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுக்கொண்டன" (லூக். 2 : 31) என தன் எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். முதியோர் என்றால் பழமைவாதிகள் என்ற எண்ணம் அனைவருக்கும் எழுவதுண்டு. ஆனால் இங்கே சிமியோன் குழந்தை இயேசுவை கரத்தில் ஏந்தி புகழ்ந்தார். இது புதுமையான ஒரு செயலாக அமைந்துள்ளது. உலக மீட்புக்கான ஆண்டவரின் அருஞ்செயல், கடவுள் மனிதனானார் என்று தன் ஆசியுரையிலே வெளிப்படுத்துகிறார்.

குழந்தை இயேசு வழியாக இவ்வுலகிற்கு ஒளி வந்ததாகவும், இவ்வொளி வழியாக பிறஇனத்தார் கடவுளை கண்டடைவர் எனவும் குறிப்பிடுகிறார் (லூக் 2:32).

மீட்பின் திருப்பணியை மையப்படுத்தி அதை தன் கண்கள் கண்டதாகக் கூறுகிறார். இது ஒரு முதியவரின் நல்ல உள்ளத்தைக் காட்டுகிறது. ஆண்டவரைப் புகழ்வதும், ஆண்டவரைக் கனம் பண்ணுவதும் நமது தலையாயக் கடமை என்பதை சிமியோன் வெளிப்படுத்துகிறார். இயேசுவின் திருமுழுக்கிற்கு பிறகே திருப்பணியின் வழி அவருடைய புகழ் எங்கும் பரவியது (லூக். 4:14-15) எனக் காண்கிறோம். ஆனால் குழந்தையாக ஆலயத்திற்கு கொண்டு சென்றபோதே சிமியோன் அவரது புகழைக் கண்டு அதனை வலியுறுத்தி அனைவரும் கனப்படுத்த வழி செய்தார்.

ஆசாரியனாகிய ஏலி, சிறுவன் சாமுவேலிடத்தில் ஆண்டவர் பேசுகிறார் என அறிந்த போது சிறுவனை வெறுக்கவில்லை. ஏலி தன் குடும்பத்திற்கு எதிரான வார்த்தைகளைக் கடவுள் சொன்னார் என்பதை அறிந்தும் அவர் கடவுளைக் கனப்படுத்தினார் (I சாமு. 3:18).

விசுவாசிகளின் தந்தையான ஆபிரகாம் பல்வேறு நிலைகளில் சோதிக்கப்பட்டாலும் ஒவ்வொரு நிலையிலும் கடவுளை கனப்படுத்தினார்.

முதியோர் தங்கள் தலைமுறைக்கு முன் உதாரணமாக கடவுளை மாட்சிப்படுத்துகின்றனர். கடவுளை கனம் பண்ணும் இவர்களைக் கனம் பண்ணுவது நமது கடமையாகும்.

### *2. ஆண்டவரைக் கற்பிக்கும் முதியோர் :* (லூக் 2 : 25-26)

சிமியோன் என்னும் சொல்லுக்கு 'கேட்டல்' (to hear) என்பது பொருள். பெயருக்கேற்ப சிமியோன் என்ற பெரியார் ஆண்டவரின் வார்த்தைகளை கேட்டறிந்து, அவைகளின்படி நடந்தபடியால் அவர் நேர்மையானவர், இறைப்பற்று கொண்டவர் எனவும், தூய ஆவியை பெற்றிருந்தவர், எனவும் அறியப்படுகிறார். மேசியாவைக் காணுமுன் சாவதில்லை என்ற வாக்குறுதியைப் பெற்றிருந்தார். தமது பக்தி வாழ்வின் வழியாக அக்கால மக்களுக்கு கடவுளை கற்பிக்கும் கருவியாக இவர்

இருந்தார். நேர்மையும், இறைபற்றும் கொண்டோரிடத்தில் தூய ஆவியார் இருப்பார் என்பதை சிமியோன் என்ற முதியவர் வெளிப்படுத்தினார்.

முதியோர் தம் வாழ்வில் ஆண்டவரை கற்பித்தார்கள் என்பதற்கு திருமறையும், நாம் வாழும் சமூகமும் சான்றாக அமைகின்றது. ஆபிரகாம் தனது முதிர்ந்த நிலையில் பற்றுறுதியை வெளிப்படுத்தினார். சாமுவேல் ஆண்டவரைக் குறித்து தெளிவாக கற்பித்தார் (I சாமு. 12 : 13-17).

நம் இல்லங்களில் வாழும் முதியவர்களும் இளையோருக்கு ஆண்டவரைக் குறித்து தெளிவாக கற்பிக்கின்றனர். நற்செய்தியாய் வாழும் முதியோரை நன்றாய் நடத்திட உறுதியேற்போம்.

### 3. ஆண்டவரைக் காணச் செய்திடும் முதியோர் :
**(லூக் 2 : 29)**

லூக்கா நற்செய்தி நூலில் அடங்கியுள்ள பாடல்களில் சிமியோனின் நற்செய்தியும் ஒரு பாடலாகும். இது ஆலயத்திற்குள் பாடப்பட்ட பாடலாகும். இங்கு மக்கள் அதிகமாக வந்து போகுமிடம். எனவே இந்த இடத்தில் ஆண்டவரை காணும்படி அறிமுகம் செய்கிறார். தான் வாழ்வில் முழு மன நிறைவடைந்ததாகவும் முழு அமைதியோடு தான் இவ்வுலகத்தை விட்டு செல்வதாகவும் கூறினார். கடவுளைக் காண ஆலயம் செல்ல வேண்டும் என்ற நல்ல பண்பையும் கற்றுக்கொடுத்தார். முன்மாதிரியாகவும் காண்பித்தார். முதிர் வயதில் வாழ்ந்த பலர் இறைவனை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கண்டதோடு, பிறரை காணச்செய்யவும், கடவுளைக் காண தூய்மையான வாழ்வு மிக அவசியம் என்பதையும் வலியுறுத்தினர். கடவுளைக் காண விழையும் சமூகம் அமைந்தால், சமூகத்தில் அமைதியும் நீதியும் ஏற்படும். நாம் வாழும் சமூகத்திலும், இதுபோன்ற முதியோர் உண்டு. தங்களது வாழ்வின் அனுபவங்களாலும், தெளிவான முன் மாதிரிகளை காட்டும் முதியோருக்கு பணி செய்வதும், அவர்கள் காட்டும் ஆன்மீக வாழ்வை தொடர்வதும் நமது கடமையாகும்.

மாண்புடைய, பக்தி நிறைந்த முதியவர்களைக் கொண்ட நாம் வாழும் குடும்பமும் சமூகமும் ஆசி பெற்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவர்களது அறிவையும், அனுபவங்கள் மற்றும் பக்தி வாழ்வையும் கடைபிடிக்கும் குடும்பங்களும், சமூகமும் வளம் பெறும். ஆனால் இன்றுள்ள சமூக அமைப்பில் பெருவாரியான முதியோர், முதியோர் இல்லங்களிலும், காப்பகங்களிலும், அன்பற்ற பிள்ளைகளோடும் சிக்கி தவிக்கின்றனர். இவர்களை ஏற்றுக் கொள்வதும், இவர்களுக்கு பணிவிடை செய்வதும் நமது கடமை என்பதை திருமறை கட்டளையிடுகிறது. இவர்களது அனுபவங்களையும் அறிவையும் ஏற்றுக்கொண்டு வாழ்வது தனி மனித, சமூக மற்றும் திருச்சபையின் கடமையாகும்.

அருள்திரு. S. **பெல்சன் கிராமணி**

**01-10-2015** *அருணோதயத் தொழுகை*

# முதியோர் வழி ஆசி

திருமறைப்பாடம் : இச 5:6-22

> **"உன் தந்தையையும் தாயையும் மதித்து நட, இதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் நீ நெடுநாள் நலமுடன் வாழ்வாய்"**
>
> **இச 5:16**

ஆதரவற்ற முதியோர் இல்லத்திற்கு தள்ளப்பட்ட வயதான தாய், தினம் தினம் தன் அறையில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்து. வெளியே யாரையோ எதிர்பார்த்து எட்டிப் பார்த்துக் கொண்டேயிருப்பார். இரவு தூங்கச் செல்லும் முன் அவர் தம் குறிப்பேட்டில் (டைரியில்) எழுதுவது, "இன்னும் என்னைப் பார்க்க யாரும் வரவில்லை". தன் மரண நாள்வரையும் அந்த வயதான தாய் எழுதிய ஒரே வாசகம் இன்னும் என்னை பார்க்க யாரும் வரவில்லை என்பதாகும். இரண்டாம் குழந்தை பருவத்தில் இருக்கும் முதியோரை வீட்டில் வைத்து அன்பு கூராமல் முதியோர் இல்லத்தில் தள்ளுவது பாவம். கொடிது கொடிது ஆதரவு இல்லாத முதுமை கொடிது. எனவே தான் தாவீதும் இம்முதுமையை (சங். 71 : 9) குறித்து பயப்படுவது திருமறையில் கூறப்பட்டுள்ளது. நுகர்வுக் கலாச்சாரத்தில் ஒருமுறை பயன்படுத்தும் பொருளைப் போல் இன்று முதுமையானவர்களை வீட்டைவிட்டுத் தூக்கி எறிவது சகஜமாகிவிட்டது. எனவே தான் ஆண்டவர் கூறும் ஆசிகளில் ஒன்று, பெரியவர்களை மதித்தால் நெடுநாள் வாழும் ஆசீர்வாதம் கிடைக்கும் என்பது. நாம் முதியோர்களை பேணி மதித்து நடந்தால் நலமான வாழ்க்கையைப் பெறலாம். முற்காலத்தில் விருந்தினர் வந்தால் இவர் என் தாத்தா, இவர் என் பாட்டி, அத்தை, மாமா என உறவுகளை அறிமுகம் செய்வர். ஆனால் இன்று சார் இது நான் நேற்று வாங்கின சோபா செட், இது இன்று வாங்கிய கம்பியூட்டர் என்று உயிரற்ற பொருள்களை அறிமுகம் செய்யும் காலத்தில் அக்டோபர் 1-ஐ உலகமே முதியோர் மீது கரிசனை கொள்ள தூண்டுவது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகப் பெரிய சவால். ஒரு கிறிஸ்தவ முதியவர், இல்லத்தில் கடைசியாய்ச் சொன்ன வார்த்தை, என் மரணத்தின் செய்தி இந்த இல்லத்திற்குள்ளேயே இருக்கட்டும். இதைப்போன்ற கண்ணீர் வார்த்தை நம்மில் ஒருவருக்கும் வந்து விடக்கூடாது. நம் இறைவன் முதியோரை அன்பு கூரும் இறைவன். இறைவன் ஆபிரகாமை அழைக்கும்

போது ஆபிரகாம் ஒரு முதியவர். மோசையை இறைவன் அழைக்கும் போது இவரும் ஒரு முதியவரே. இயேசுவை ஆசீர்வதித்த அன்னாள், சிமியோன் ஆகியோரும் முதியவர்களே. ஆனால் நாம் முதியோரை அணுகுகிற விதமே தனி. நாம் முதியவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு திருமறை தரும் இரண்டு ஆலோசனைகள்.

### *1) முதியவர்களை இழிவாக எண்ணக்கூடாது :*

**(நீதி. 23 : 22)**

பெற்றோரை கவனிக்காத மாநிலத்தில் முதன்மை இடமாய் நம் தமிழ் மாநிலம் விளங்குகிறதாம். வயது முதிந்தவர்களைப் பெருசு என்றும் கிழம் என்றும் எவ்வளவாய் பலர் அசட்டை செய்கிறார்கள் அல்லவா! (3 : 12) பெற்றோரை எக்காரணம் கொண்டும் இகழக்கூடாது. நலமான வார்த்தைகளால், அன்பான மனதால் முதியோரை அணுக வேண்டும். எனவே தான் திருமறையில் யோசேப்பு (ஆதி. 47: 1-10) தம் தகப்பனை பார்வோனின் அரண்மனையில் சந்திக்கும் போது அரச அரியணையிலிருந்து பார்வோனை இறங்கிவரச் செய்து தம் தகப்பனாகிய யாக்கோபைக் கொண்டு நாட்டின் மிகப்பெரிய அரசராகிய பார்வோனை ஆசீர்வதிக்கச் செய்வார். சுருங்கச் சொல்வது என்றால் பார்வோனின் (ராஜா) தலையில் யாக்கோபு தம் கைகளை வைத்து ஆசீர்வதிக்கச் செய்து, யோசேப்பு தம் தகப்பனை கனப்படுத்தினார். யோசேப்பின் ஆசீர்வாதங்களுக்கு ஒரு காரணம் அவர் பெற்றோரை மதித்தவர். நாம் ஏன் முதியவர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்றால் அதற்கு காரணம் நாம் பிள்ளைகளுக்கு தரும் நல்ல பயிற்சி அது. நாம் முதியோரைப் பராமரித்தால் அதைப் பார்த்து நம் பிள்ளைகள் நம்மை, பிற்காலத்தில் பராமரிப்பர். வயதான பெற்றோரை (ஈசாக்கு) ஏமாற்றின யாக்கோபுவின் நிலை நமக்கு ஓர் எச்சரிப்பு. ஆனால் கனப்படுத்திய யோசேப்பு நமக்கு ஒரு மாதிரி. எனவே முதியோரை இகழாமல் கனப்படுத்தி இறைவன் தரும் நன்மையைப் பெறுவோம்.

### *2) முதியவர்களிடம் கடுமையாக நடக்கக்கூடாது* :

**(1திமொத். 5 : 1)**

ஒரு மனிதனுக்கு 35 வயதுக்கு மேல் புதிய செல் உற்பத்தியாவது குறைந்துவிடுகிறது. முதியோர் இரண்டாம் குழந்தை பருவத்திற்கு தள்ளப்படுகின்றனர். முதியோரை ஒரு குழந்தையைப் பராமரிப்பது போல் பராமரிக்க வேண்டும். ஆனால் முதியவர்களின் வார்த்தைகளுக்குக் கடுமையான பதிலையோ, வார்த்தையையோ கொடுத்து பலர் வேதனைப்படுத்துகின்றனர். ஒரு குடும்பத்தில் ஒரு வயது முதிர்ந்த பெரியவர் தம் மூத்த மகனிடம் இது என்ன என்று ஒரு பொருளை

குறித்து கேட்டார். மகன் பொறுமையாகப் பதிலைச் சொன்னான். சிறிது நேரம் கழித்து மீண்டும் பெரியவர் அதே பொருளைப் பற்றிக் கேட்டார். மகன் சற்று கோபத்தோடு அதான் ஏற்கனவே சொன்னேனே என்று பதில்ச் சொன்னான். சிறிது நேரம் தாண்டி பெரியவர் அதே பொருளைப் பற்றி இது என்ன என்று கேட்க மகன் கொதிப்படைந்தவனாய் உமக்கு பைத்தியமா என்று திட்டி விடுகிறான். ஆனால் மூத்த மகன் அன்று தூங்கச் செல்லும்போது தற்செயலாய் தம் தகப்பனாரின் டைரியைப் பார்க்க நேரிட அதைத் திறந்து வாசித்தார். அதில் குறிப்பிட்ட நிகழ்வு அவரின் கண்களில் இருந்து கண்ணீரை வரவழைத்தது. அது என்னவென்றால் மூத்த மகன் சிறுவனாய் இருக்கும் போது ஒரு பறவை பற்றி 99 தடவை இது என்னது என்று கேட்டபிறகும் தகப்பனார் மிக பொறுமையாய் அதுவும் சந்தோஷமாய் பதில் சொல்லியிருக்கிறார். காரணம் அவன் என் மகன் அல்லவா என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த இரண்டாம் குழந்தை பருவத்தைக் கண்டு கடுமையாக நாம் நடந்துகொள்ளக் கூடாது . ரூத் தன் வயதான மாமியாகிய நகோமியைக் கடுமையான வார்த்தைகளால் நடத்தாமல் இதமான வார்த்தைகளால் (ரூத். 1 : 16,17) நகோமியின் உள்ளத்தைச் சந்தோஷப்படுத்தினாள். உங்கள் வீட்டில் ஒரு வயதானவர் இருந்தால் ஒரு வைரம் இருப்பதற்கு சமம் என்பது கிரீஸ் நாட்டு பழமொழி.

முதியவர்களை நெல்லிக்கனிக்கு ஒப்பிடுவார்கள் காரணம் சாப்பிடும் போது கசக்கும், பின் இனிக்கும். அதைப் போன்றே முதியோரின் ஆலோசனையும். இயேசுகிறிஸ்து தம் தாயார் வயதான காலத்தில் கஷ்டப்படக்கூடாது என்பதற்காய் யோவானிடம் ஒப்படைக்கிறார். நமக்கும் இந்தக் கரிசனை வேண்டும். முதியோர் கரிசனை உள்ளவர்கள் தான் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

சிந்தனைக்கு ( ஒரு முதியோர் இல்லத்தில் தள்ளப்பட்ட தாய் - கண்ணீரோடு சொன்னது)

நீ இருக்க ஒரு கருவறை இருந்தது என் வயிற்றில்

நான் இருக்க ஒரு இருட்டறை கூடவா இல்லை உன் வீட்டில் . . . . .

முதியோரை நேசிப்போம், நெடுநாள் வாழ்வோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**04-10-2015**

***இறைமக்கள் ஞாயிறு***

# இறைமக்களின் திருப்பணி

## MINISTRY OF THE LAITY

1சாமு 25:14-28 1தெச 4:1-12
திபா23 லூக் 10:25-37

**அதற்கு திருச்சட்ட அறிஞர் "அவருக்கு இரக்கம் காட்டியவரே" என்றார். இயேசு, "நீரும் போய் அப்படியே செய்யும்" என்று கூறினார். லூக். 10 : 37**

***இறைவேண்டல் : ஆற்றல் நிறைந்த கடவுளே! வாழ்வின் சட்டங்களைத் தந்து, உமது பிள்ளைகளாக, அவைகளின் படி வாழவும், உம்மை ஏற்றுக்கொள்ளவும் உதவி செய்பவரே, நாங்கள் தீமையை தெளிவாக அறிந்து பாவத்தின் ஆற்றலுக்கு எதிர்த்து நிற்கவும், அதன் மூலம் எங்கள் வாழ்வும், இந்த உலகமும் தூய்மையில் வளரவும், இவ்வுலக வாழ்விலும், மறுஉலக வாழ்விலும் அமைதி பெற்று வாழவும், அருள் செய்தருள வேண்டுமென்று திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். – ஆமென்.***

கிறிஸ்தவ உலகை, இறைப்பணியாளர், இறைமக்கள் என்று இரண்டாகப்பிரிப்பர். இறைப்பணியாளர்களைக் குறிப்பிடும் தூயபவுலார் அவரே சிலரைத்திருத்தூதராகவும்,சிலரை இறைவாக்கினராகவும் வேறுசிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதர்களாகவும் ஏற்படுத்தினார் என்கிறார்(எபே. 4:11). இறைமக்களோ, இறைமகனின் மந்தையின் ஆடுகள், இறைமக்களைக் குறித்து சொல்லும் தூய பேதுரு, நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவழி மரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர். தூயமக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்து என்கிறார் (1பேது. 2:9). இறைவனின் உரிமைச் சொத்தான இறைமக்கள் திருப்பணிச் செய்ய அழைக்கப்பட்டவர்கள், கடமைப்பட்டவர்கள். இத்திருப்பணி பல முகங்களைக் கொண்டது. பழைய ஏற்பாட்டு பகுதி சமாதானத் திருப்பணிக்கு சான்றாயுள்ளது. நிருப பகுதி ஆற்றுப்படுத்தும் திருப்பணிக்கு சான்றாயுள்ளது. இறைமக்கள் பணிக்கு இறை மகன் தரும் உவமை வழி மூன்று குறிப்புகளை தியானிப்போம்.

### *1. இன்னலில் இணைந்துக் கொண்ட திருப்பணி :*

என்னுடையது எனக்கு, உன்னுடையது எனக்கு, என்னுடையது உனக்கு, என்று சொல்லும் முத்தரப்பு மக்கள் இந்த மண்ணில் வாழ்கின்றார்கள். 'உன்னுடையது எனது' என்று வாழும் கள்வர்கள்

எருசலேமிலிருந்து எரிகோவிற்கு போகும் நபரின், ஆடைகளை உரிந்து, அவரை அடித்து குற்றுயிராக விட்டுப் போனார்கள் (லூக் 10 : 30). இறைச் சாயல் வெளிப்படுத்தும் மனிதன், மானுடம், காரணமின்றி, காயமேற்று, வதைத்து குற்றுயிராய் கிடந்தார். இப்பாதையில், சமயத்தின் பணியாளர்களான குருவும், லேவியரும் வந்து கொண்டிருந்தார்கள், குற்றுயிராய் கிடப்பவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார்கள், துயருற்று துடிக்கும் மனிதனைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தை மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் (உபா. 5 : 9) என்னும் திருவசனம் வந்திருக்கக்கூடும் அல்லது சீடர்களைப் போல் இவன் செய்த பாவத்தின் பலன் (யோவா. 9:2) என்று எண்ணியிருக்கலாம். இன்னலில் இருப்போருடன் இணைந்து கொள்ளவில்லை, சமாரியரோ தன்னை இணைத்துக் (INCLUDE) கொண்டார், இயேசு கிறிஸ்துவும் மானுடத்துடன், இன்னலுறும் மானுடத்துடன் தன்னை இணைத்துக்கொள்வதையே மனுவுருவேற்பு (INCARNATION) உறுதி செய்கிறது.

## 2. இனியதை ஈந்துவிட்ட திருப்பணி :

சமாரியர், யூதர்களால் ஒதுக்கப்பட்டவர்கள், கலப்பினத்தவர்களாய் கருதப்பட்டவர்கள். இவர்களில் ஒருவர் பயணம் செய்து வருவதற்கு தனது விலங்கை பயன்படுத்தினார். திராட்சை மதுவையும், எண்ணெயையும் உடன் எடுத்து பயணித்துள்ளார், இவைகள் அனைத்தும்,பயணத்திற்கு இன்றியமையாதவைகள். சமாரியர் குற்றுயிராய் கிடந்தவர் காயங்கள் குணப்படுத்த எண்ணெயையும்.காயங்களையும் புரையோடாதிருக்க திராட்சை இரசத்தையும் வார்த்தார், தன் சுயவாகனத்தில் காயப்பட்டவரை ஏற்றி தான் நடந்து சென்றுள்ளார். மேலும் அவனுக்காக இரண்டு தெனாரியத்தை (சத்திரம்) சாவடி பொறுப்பாளரிடம் கொடுத்தார்... ஒரு தொழிலாளியின் இரண்டு நாள் கூலியை குற்றுயிரானவரின் விடுதலைக்காய், பராமரிப்புக்காய் செலவிட்டார். (லூக் 10:35) தன்னிடமுள்ள அத்தனை ஆற்றல்களையும், உவமைகள், அருள்செய்தி அரும் அடையாளங்கள் வழி மானுடத்திற்கு ஈந்த இறைமகன், தான் தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் உடலையும், உதிரத்தையும், உயிரையும்,மானுடஈடேற்றத்திற்காய் ஈந்ததை நினைவுகூர்தல் (லூக். 22:14-20) வேண்டும்.

### 3. இரணியம் (பணம், பொன்) கடந்த கரிசனைத் திருப்பணி:

பாதையோரத்தில் கிடந்தவரை சாவடியில் கொண்டு சேர்த்ததுடன், தன்னுடமைகளில் சிலவற்றை சத்திரக்காரரிடம் கொடுத்ததுடன் தன் கடமை தீர்ந்து விட்டதாக கருதவில்லை. மேலும் "இவரைக் கவனித்துக்கொள்ளும், இதற்கு மேல் செலவானால் திரும்பி வரும் போது உமக்குத் தருவேன்" என்றார் (லூக். 10 : 35). தொடரும் வாழ்வின் முழு மனிதனாய் வாழ்வதற்கு செய்ய வேண்டிய உதவியை செய்ய பொறுப்பேற்றார். இயேசு கிறிஸ்து "இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்'' (மத். 28 : 20) என்று பொறுப்பேற்றார்.

வாழ்வின் பல்வேறு சூழல்களில் இன்னலில் சிக்கி துயருறுவோர் பலர். இவர்கள் பொருளாய் வைத்து (SUBJECT) ஆயாமல் இணைத்து கொண்டு, இயன்ற உதவியைச் செய்து, அவர்கள் பாதிப்புகளிலிருந்து விடுதலைப் பெற்று வாழ, தொடர்ந்து நம்பிக்கையூட்டுவோம், ஆதரவு கொடுப்போம், இறைமகன் மனம் மகிழ்வார்.

அருள்திரு. **பாலஸ் செல்வமணி**

**11-10-2015**

*மாற்றுத்திறனுடையோர் ஞாயிறு*

# மாற்றுத்திறனாளியின் மாண்பும் சார்புநிலையும்

## DIFFERENTLY ABLED : DIGNITY AND DEPENDENCE

விப 4:10 - 17 திப 3 : 1 -10

திபா 103:1-33 மத் 17: 14-21

**". . . மனிதனுக்கு வாய் அமைத்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது செவிடாக அல்லது பார்வையுள்ளவனாக அல்லது குருடனாக வைப்பவர் யார்? ஆண்டவராகிய நான் தானே" விப 4 : 11.**

**இறைவேண்டல் :** ***வாழ்வை முழுமையாக்கும் கடவுளே! திருமைந்தர் வழியாக உடல், உளம் சார்ந்து வளர்ச்சியினை எதிர்நோக்கும் மக்களை ஆரோக்கியப்படுத்துபவரே, அவர்களின் நல்வாழ்வுக்காக நாங்களும் எங்களது திறமைகள், வரங்கள், அருட்கொடைகள் அனைத்தையும் பங்களிக்க ஆற்றல் படுத்தும். மாற்றுத்திறன் படைத்தோரின் திறமைகளுக்கு மதிப்பளித்து, அவர்களும் உம் படைப்பின் மக்களே என்பதை உணர்ந்து அவர்களை அங்கீகரித்து செயல்பட அருள்தாரும் எங்கள் இறையே ஆமென்.***

மனிதன் படைப்பின் மகுடம், கடவுளின் கரத்தின் கிரியை மனித தவறுகள், கவனக் குறைவுகள் காரணமாக உடல் ஊனமுற்றோராக பிறந்து அல்லது விபத்துகள் மூலம் உடல் ஊனமுற்றவராக்கப்பட்ட மனிதர்கள் சொல்லொண்ணாத் துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகின்றனர். மானுடத்தில் இவர் தம் எண்ணிக்கை பெருகி வருகிறது. மாற்றுத் திறனாளிகள் என்று அறியப்படும் இவர்களது மாண்பினை காக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. மாற்றுத்திறனாளிகள் நம்மில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை சார்லெட் எலியட், லூயி பிரெயில், ஹெலன் கெல்லர், பில் ஜர்வின், ஐசக் வாட்ஸ் இன்னும் பலர் நிரூபித்துள்ளனர். உடலில் ஏற்பட்டுள்ள ஊனமே அல்ல உள்ளத்தின் ஊனமே ஊனம் என்று தங்களது ஊனத்தை வென்று சாதித்துக் காட்டிய பலரை வரலாற்றிலும், அனுதின வாழ்வில் கண்டும், மாற்றுத்திறனுடையோர் இன்றைய சமுதாயத்தால் மனிதர்களாக மதிக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. மாற்றுத்திறனுடையோரிடம் மறைந்து கிடக்கின்ற திறமைகள் வெளிக்கொணரப்படாமல் இருக்கும்நிலை மாற வேண்டும். இத்தகைய சமூக அவலம் மாற வேண்டும். அவர்களும் நம்மைப்போல் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்களே என்ற உணர்வோடு அவர்தம் மாண்பை மதிக்க, காக்க அழைக்கப்படுகிறோம். மாற்றுத்திறனாளிகளின் மாண்பு மதிக்கப்பட, காக்கப்பட நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில பண்புகளை சிந்திக்க முற்படுவோம்.

## 1. அடையாளம் காணுங்கள் :

அடையாளங்காணுதல் (Identifying) என்பது அனைவருடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதாகும். மாற்றுத்திறனாளிகளை பொறுத்த மட்டில் அவர்கள் மூன்று நிலைகளில் அடையாளம் காணப்பட வேண்டும்.

1) குறைகளை அடையாளம் காணுதல்
2) மாற்று வழிகளை அடையாளம் காணுதல்
3) திறமைகளை அடையாளம் காணுதல்

### அ) குறைகளை அடையாளம் காணுதல் :

குறைகளை அடையாளங்காணுதல் என்பது மிக முக்கியமானது. குறைகளை அடையாளங்காணுவது மட்டுப்படுத்துவதற்காக அல்ல. மாறாக, நிவிர்த்தி செய்வதற்காகவே. ஆரம்பத்திலேயே குறைகள் அடையாளம் கண்டால் அதனை நிவர்த்தி செய்வது எளிது. வீட்டில் குழந்தைகளுக்கு ஏற்படும் குறைகளை அடையாளங்காண வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு, குறைகளை சரியாக அடையாளங்காணாமல் அலட்சியப்படுத்துவோமேயானால் அது பெரிய பாதிப்புகளை உண்டுபண்ணும். குறைகள் அடையாளங்காணப்பட்டு அதற்குரிய தகுந்த சிகிச்சைகள், பயிற்சிகள் கொடுக்கப்படும் போது குறைகளற்ற வாழ்வு வாழ வழி உண்டு. 60% பாதிப்புகளுக்கு காரணம் அவர்களின் குறைகள் தகுந்த நேரத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே. கவனக்குறைவு அலட்சியம் இவையே ஊனத்திற்கான முக்கியக் காரணமாக அமைகிறது. இதற்கான விழிப்புணர்வு பெறுதல் அவசியம்.

### ஆ) மாற்று வழிகளை அடையாளம் காணுதல் :

ஊனமுற்றோருக்கு மற்ற மனிதர்களை போல வாழ அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் மாற்று வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். மாற்று வழிகள் கண்டுபிடிக்கப்படாத பட்சத்தில் ஊனமுற்றவருடைய வாழ்வு முடங்கிப் போய் விடும் அபாயம் உண்டு. இஸ்ரவேல் மக்களை விடுதலை செய்ய விரும்பிய கடவுள் மோசேயை அழைத்த போது மோசே தனது குறையை கடவுளிடம் கூறுகிறார். அப்பொழுது கடவுள் அந்த குறையை மேற்கொள்ளும் மாற்றுவழியை கூறுகிறார். தான் பேச இயலாதவன் என்ற மோசேயிடம் ஆரோன் உனக்குப் பதிலாக ஜனங்களோட பேசுவான். அவன் உன் வாய்க்கு வாயாக இருப்பான் என்று கூறுகிறார் (விப 4 : 10-16).

### இ) திறமைகளை அடையாளம் காணுதல் :

மாற்றுத்திறனாளிகளின் மாண்பு காக்கப்பட அவர்களது திறமைகள் அடையாளங்காணப்பட வேண்டியது மிக மிக அவசியம் திறமை இல்லாதவர் என்று எவருமே இல்லை என்பர். மாற்றுத் திறனாளிகள் பலர் பல்வேறு துறைகளில் கொடிகட்டிப் பறக்க காரணம் அவர்களது திறமை கண்டறியப்பட்டு அவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டதே என்றால் அது மிகையல்ல. எனவே மாற்றுத்திறனாளிகள் பலர் பிச்சையெடுக்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுவதற்கு காரணம் அவர்களது திறமை அடையாளம் காணப்படாததே என்பது தெளிவு, சர்க்கஸ் கொட்டகை ஒன்றில் ஒரு யானை சிறிய நாற்காலி மேல் உட்கார்ந்து பயிற்சியாளருடைய கட்டளையின்படி வித்தை காட்டிக் கொண்டிருந்தது. மக்கள் இதனை பார்த்து ஆரவாரம் செய்தனர் 4 நண்பர்கள் அங்கிருந்தனர் ஒருவன் கேட்டான் இந்த யானையால் எப்படி இந்த நாற்காலிமேல் இருக்க முடிகிறது? அந்த அளவிற்கு யானை பயிற்சி பெற்றிருக்கிறது என்றான் இரண்டாமவன். மற்றொருவன் அந்த யானை அந்த பயிற்சியாளரால் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்றான் அடக்கு முறைக்கு எதிரான சிந்தனை கொண்ட அந்த நண்பன். கடைசியானவன் ஒருவன் பட்டென்று சொன்னான் அந்த யானைக்கு தனது திறமை, பலம் தெரியவில்லை. திறமைகள் அடையாளம் காணப்படாவிட்டால் கேலிப்பொருளாகிப் போக வேண்டிய அவலம் வந்து சேரும் என்பது உண்மை.

## 2. அங்கீகரியுங்கள் :

மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய அங்டச்காரத்தை கொடுப்பதில்லை. அவர்கள் பாவிகள் என்றும் தங்கள் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்றும் எண்ணுகிறோம். சமுதாயத்தின் ஓர் அங்கமாய் வாழ்வதற்கான அங்கீகாரம் மாற்றுத்திறனாளிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை அனைவரும் உணரவேண்டும். பிறவியிலேயே பார்வை இழந்த மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தனர். சீடர்கள் இயேசுவிடம் இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம். இவன் செய்த பாவமோ இவனுடைய பெற்றோர்கள் செய்த பாவமோ? என்று கேட்டார்கள்.

சீடர்களின் கேள்வி ஒட்டு மொத்த சமுதாயத்தினுடைய மன ஓட்டத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளது. இவன் பாவி எனவே இவனை ஏற்றுக்கொள்ளலாகாது என்று அவனை தள்ளிவிட முயன்ற சீடர்களிடம் இயேசு கிறிஸ்து. இவன் பாவத்தினால் இப்படிப் பிறக்கவில்லை. கடவுளின்

மாட்சியை வெளிப்படுத்தும்படி இப்படி பிறந்தான் என்று கூறி ஓர் சிறந்த அங்கீகாரத்தை தருகிறார். அவன் பார்வையற்றவனாக பிறந்ததே கடவுளை மகிமை வெளிப்படுத்துவதற்கான தகுதி கடவுளின் கிரியைகள் இவனில் வெளிப்படும் (யோவா 9: 1 - 7) என்னும் இயேசுவின் வார்த்தைகள் அங்கீகாரமின்றி தவிக்கும் மாற்றுத்திறனாளின் மனதிற்கு அருமருந்தாய் அங்கீகாரத்திற்கு ஆதாரமாய் உள்ளது.

மாற்றுத்திறனுடையோர் அங்கீகாரமின்றி அலையும் அவலநிலையை களைய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நொண்டி சப்பாணி, குருடன், செவிடன், ஊமையன் என்னும் வார்த்தைகளை உபயோகிக்காமல் ஒரு குறிப்பிட்ட உறுப்புகளால் செய்யப்பட வேண்டிய பணியை மற்ற உறுப்புகளின் உதவியால் செய்து நிறைவேற்றும் திறன்படைத்தோர் என்னும் பொருள் பொதிந்த மாற்றுத்திறனாளிகள் என்னும் பெயர் மாற்றம் ஒரு மாபெரும் சமூக அங்கீகாரம்.

கும்பகோணத்தை சார்ந்த இருதயராஜ் பார்வையற்றவர். இன்று அப்பகுதியில் அவர் பிரபலமான கார் மெக்கானிக் வண்டியின் சத்தத்தை வைத்தே எந்த பகுதியில் பழுதுள்ளது என கூறும் ஆற்றல் படைத்தவர் ஒருமுறை இவரிடம் வண்டியைப் பழுது பார்க்க கொண்டு வந்தவர்கள், மறுமுறை வேறு எங்கும் செல்லமாட்டார்கள் என்று கூறுமளவுக்கு இவர் புகழ்பெற்றிருப்பது, மக்கள் இவரது திறமை மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும், மக்கள் அவருக்குத் தந்திருக்கும் அங்கீகாரத்தையும் காட்டுகிறது. இந்த அங்கீகாரம் இவரது மாண்பை இன்னும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

### 3) அரவணையுங்கள் :

மாற்றுத்திறனாளிகளுக்கு பெரிதும் தேவை நமது பரிதாபமல்ல, பாசமே. அவர்களை காணும் போது அவர்களுக்காக பரிதாபப்பட்டு சில்லரைக் காசை வீசிவிட்டு போய்விட்டால் நமது கடமைமுடிந்து விட்டது. என்று எண்ணுகிறோம். மாற்றுத்திறனாளிகளும் மாண்புடையோரே என்று உணர்ந்து அவர்களை அரவணைக்கவும், ஆதரிக்கவும் அழைக்கப்படுகிறோம். தனக்கு ஏதாவது சில்லரை கிடைக்குமா என்று தேவாலய வாசலில் காத்துக்கிடந்த முடவனுக்கு என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன் (திப. 3 : 1 - 10) என்று கூறிய பேதுரு தனது கையை நீட்டி அவனை அணைத்து, தூக்கிவிட்டார். மாற்றுத்திறனாளிகளுக்கு தன் அன்பை, கரிசனையை ஆதரவை பேதுரு

காட்டியதன் மூலம் அந்த மாற்றுத்திறனாளி இறை ஆற்றலை உணர்ந்தான். மாண்பு மிக்கதோர் வாழ்வு பெற்றான். போதிய அன்பும் பாசமும் பரிவும் கிடைக்காததால் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தவும், நிரூபிக்கவும் இயலாமல் அபலைகளாய் அலைந்து திரியும் மாற்றுத் திறனாளிகள் எத்தனை எத்தனை பேர். நம்முடைய பாசமும் பரிவுமே அவர்களது தேவை. நமது அடி மனதில் உறங்கிக் கொண்டிருக்கிற பாசம், பரிவு, நட்பு, நம்பிக்கை, அன்பு முதலியவற்றை தட்டியெழுப்பி மாற்றுத்திறனாளிகளை அரவணைப்போம்.

1982ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் தேதி ஆஸ்திரேலியா நாட்டுத் தம்பதியருக்கு மெல்போர்ன் நகரில் ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். இரண்டு கைகளும் இல்லை, இரண்டு கால்களும் இல்லை. ஏதோ ஒரு சதைப்பிண்டம் போல இருந்த அந்தக் குழந்தையை கொன்று விடவே அனைவரும் ஆலோசனை கூறினர். ஆனால் அக்குழந்தையை கடவுள் தங்களுக்கு தந்த பரிசாக ஏற்றுக்கொண்ட அதன் பெற்றோர் அக்குழந்தையை பாசம், பரிவு, நம்பிக்கை இவைகளை ஊட்டி வளர்த்தனர். இன்று நிக் என்று அனைவராலும் அறியப்படும் Nick vujicic மக்களை நம்பிக்கையோடு செயல்படத் தூண்டும். உலகின் Best motivator ஆக அறியப்படும் நிக் ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற நற்செய்தியாளராகவும் இறைப்பணியாற்றி வருகிறார். மேடையில் நிக்கின் பேச்சை கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் காத்துக் கிடக்கின்றார்கள். என்னைப் புறந்தள்ளி விடாமல் அரவணைத்து வளர்த்தெடுத்த என் பெற்றோருக்காக கடவுளுக்கு நன்றி கூறுகிறேன் என்று நிக் கூறும்போது மக்களின் கரவொலி விண்ணை முட்டுகிறது.

மாற்றுத்திறனாளிகளை அலட்சியப்படுத்தாமல் அடையாளம் காணவும் அற்பமாய் எண்ணாமல் அங்கீகரிக்கவும் அவதூறு கூறாமல் அரவணைக்கவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார். மாற்றுத்திறனாளிகளும் மாண்புடன் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன் பெல்**

**11-10-2015** NMS ஞாயிறு

# இயேசு கிறிஸ்துவின் திருப்பணி : ஓர் அருள்பணிப் பார்வை

எசா 35:1-10 திவெ 21:1-7

திபா. யோவா 4:1-15

**“ஐயா அத்தண்ணீரை எனக்குக் கொடும்.” யோவா 4:15**

திருப்பணி அல்லது இறைப்பணி என்பது எளிமையானதல்ல. மிகுந்த இறைவேண்டலோடும், இறை ஆற்றலோடும் செய்வதாகும். திருப்பணியின் நோக்கம் அன்பு, நீதி, தாழ்மை, அர்ப்பணம், தியாகம் என்பதில் அடங்கும். இயேசு கிறிஸ்துவின் திருப்பணியைக் குறித்து மாற்கு நற்செய்தியாளர், “ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார்” (மாற் 10:45), என்று கூறுகிறார். தொண்டு ஆற்றுவது என்றால் தாமே பணியாளனாக மாறி பணிச் செய்வது தொண்டு ஏற்பது என்றால் தலைவராக (எஜமானன்) இருந்து பலரை பணிச்செய்ய வைப்பது. ஆனால் இயேசுகிறிஸ்து தாமே பணிவிடைக்காராக வந்தார். இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார் (லூக் 19:10) என்று தூய லூக்கா நற்செய்தியாளரும், திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம், அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன் (மத் 5:17) என்று மத்தேயு நற்செய்தியாளரும் இயேசு கிறிஸ்து நற்செய்தி பணி குறித்து சொன்னவைகளை படம் பிடித்து காட்டியுள்ளார்கள். இதைமையமாக கொண்டு இயேசுகிறிஸ்துவின் திருப்பணியில் அருட்பணி கண்ணோட்டம் என்ன என்பதை தியானிப்போம்.

## *1. அருட்பணி நற்கிரியைகளுக்கு மாதிரி :*

“இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க, அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்” என்று மத்தேயு 5:16லும், நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும் படி கடவுள் முன் கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார் என்று எபே 2:10லும், மிகச்சிறியோராகிய என் சகோரதர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை யெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று மத். 25:40-லும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பசி, பட்டினி, வியாதி, துன்பத்தால் வாடுவோர், இனம், சமயம் என்ற பிரிவினையிலுள்ளோர், சிறைப்பட்டோர், இவர்களின் விடுதலைக்கு நம்முடைய பங்கு என்ன? என்பதை சிந்திக்க வேண்டும். தொற்காள் என்ற பெண் சீடர் ஆடை இல்லாதோர்க்கு ஆடைதைத்து கொடுத்தார் (திபா 9:36 - 42). சிறு பையன் ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் பகிர்ந்தான் (யோவான் 6:9). இவையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் பங்கு வகித்தன. எனவே நம்மால் இயன்றதைச் செய்து கனியுள்ள வாழ்வு வாழ்வோம். இருளை நீக்கி வெளிச்சம் கொடுப்போம். நன்மைச் செய்தால் மேன்மை உண்டு.

## 2. அருள்பணி - நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்:

யூதர்கள் நியாயப்பிரமானத்தை சட்ட நூலாக பயன்படுத்தினார்கள். ஆனால் வாழ்கையில் அது செயலற்றதாக இருந்தது. யூதர்கள் விபசாரத்தில் கையும், மெய்யுமாக பிடிப்பட்ட பெண்ணை இயேசு கிறிஸ்துவிடம் அழைத்து வந்தனர். ஒரு கையில் கற்கள் இன்னொரு கையில் சட்டநூல், சட்ட நூல் சொல்வது விபசாரத்தில் ஈடுபடுவோர் கல்லெறிந்து கொலைச் செய்யப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ உங்களில் தவறு இல்லாதவர் முதலாவது கல்லெறியட்டும் என்று மனச்சான்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். குற்றம் சாட்டியவர்கள் குற்றவுணர்வுடன் திரும்பிச் சென்று விட்டனர் (யோவா 8: 5-9).

இன்று நம்முடைய செயல்பாடும் இப்படிதானே? பேசுவது ஒன்று செய்வது மற்றொன்று. பக்தன் அழகாக பாடுகிறார்.

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களேன்
பேச்சில் அல்ல செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களேன்.

திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுகிறிஸ்துவிடம் போதகரே நிலை வாழ்வை பெற்றுக்கோள்ள நான் என்னச் செய்ய வேண்டும் என்று கேட்டார். இக்கேள்விக்கு இயேசுகிறிஸ்து சட்ட நூலை பயன்படுத்தி உன்னிடத்தில் நீ அன்பு காட்டுவது போல மற்றவரிடமும் காட்டு என்று பதில் கொடுத்தார் (லூக் 10: 25-37). நாமும் இதை சிந்தித்து பிறரிடம்

அன்புகாட்டுவோம். ஏனெனில், அன்பு அனைத்தையும் தாங்கும், சகிக்கம். அன்புக்கு பொறாமை இல்லை, அன்பு தீங்கிழைக்காது. இதை உணர்ந்து நியாயப்பிரமானத்தை நிறை வேற்றி அருட்பணிச் செய்வோம்.

### *3. அருள்பணி நிலை வாழ்வின் சுதந்தரம் :*

இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் உயர்வு தாழ்வுகள் அகற்றப்பட்டன. இனவெறிகள் உடைத்தெறியப்பட்டன. யூதர்கள் சமாரியரோடு தொடர்பு வைத்திராத காலத்தில் யூதராகிய இயேசுகிறிஸ்து சமாரிய பெண்ணிடம் தாகத்துக்கு தண்ணீர் கொடு என்று கேட்க தொடர்ந்து இருவருக்கும் நடுவில் நடைபெற்ற உரையாடலில் இயேசு கிறிஸ்து சாதிய கட்டுபாடுகளை அகற்றி நிலை வாழ்வைக் கொடுக்கும் ஜீவத் தண்ணீரைக் கொடுத்து சமாரியப் பெண்ணை முதல் அருட்பணியாளராக சான்றாக மாற்றினார். அப்பெண் ஊருக்குள் சென்று மக்களிடம் வந்து பாருங்கள் என்றுக் கூற அப்பெண்ணின் வார்த்தையினால் சமாரியாவில் பலர் நற்செய்தியில் நம்பிக்கைக் குரியவர்களானார்கள் (யோவா 4).

தூய பவுலார் நற்செய்தியை அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமை, அறிவிக்காவிட்டால் ஐயோ கேடு (1 கொரி 9:16) என்கிறார். இந்நாள் நல்ல செய்தியின் நாள், மௌனமாய் இருந்தால் நாம் குற்றவவளிகள் ஆவோம். (2 அர 7:9). எனவே இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகாளகிய நாம் அருட்பணி என்பது நற்கிரியைகளுக்கு மாதிரி, நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல், நிலை வாழ்வின் சுதந்தரம் என்பதை உணர்ந்து அருட்பணியில் பங்காளிகளாவோம். இறையரசின் நிலை வாழ்வுக்கு பலரை தகுதியுடையவர்களாக மாற்றி இறையவரின் மேன்மையான ஆசிகளை பெற்று மகிழ்வோம்.

அருள்திரு. **P. நெல்சன்**

**18-10-2015** ***இளையோர் ஞாயிறு***

# பொருளுள்ள வாழ்வு தேடலில் இளையோர்

## YOUTH IN SEARCH OF A MEANINGFUL LIFE

தொநூ 39-1-23 எபி 12:1-11
திபா 17 மத் 6:24-34

**"நீங்களும் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய இயலாது."**
**மத் 6:24**

***இறைவேண்டல் : அருள் நிறைந்த கடவுளே! இவ்வுலகில் தந்திருக்கும் இளையோருக்காக உம்மை மாட்சிப்படுத்துகிறோம். அவர்கள் உமது பிள்ளைகளாக வாழவும், உமது திருவுளத்தை அறிந்து அதன்படி செய்யவும், நன்மை, தீமை, இவைகளை ஆய்ந்தறிந்து, உமது பார்வைக்கு ஏற்புடையதாயிருப்பதை செய்யவும் அதன் வழியாக அனைத்து படைப்புகளுக்கும் நன்மை செய்கிறவர்களாயிருக்கவும் அருள் தாரும். இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். - ஆமென்.***

இளைஞர்கள் இறைவனுக்கு ஏற்புடையவர்கள். இளமைப்பருவம் வாழ்வின் அருட்கொடை. வாழ்வுத்தேடலில் தொடக்கமே இளமைப்பருவம். "தேடல் இல்லாத வாழ்வு குட்டையில் தேங்கிய தண்ணீர் போன்றது" என்று அறிஞர் சிரில் கூறினார். தேடல் இருக்கும் வரைதான் வாழ்வின் பொருளும் இருக்கும். தேடல் உலகத்தொடக்கத்திலிருந்தே நிகழும் செயல். இது பல முறைகளில், பல வகைகளில் பல நேரங்களில் எனக் கூறிக்கொண்டே போகலாம். அன்புத்தேடல், ஆரோக்கியத்தேடல், அறிவுத்தேடல், ஆன்மிகத்தேடல், பொருள் அல்லது செல்வம் தேடல் என பலவற்றைக் கூறலாம். தேடலில் செல்வமா? கடவுளா? என்பதை மத்தேயு நற்செய்தியாளர் முன் வைக்கிறார். செல்வத்தைத் தேடி ஓடும் இளைஞர்கள் இறைனைத்தேடுவதில் பின் தங்கியுள்ளனர். உலகமே வாழ்வு , ஊடகமே செல்வம் என நினைத்து அதுவே பொருளுள்ள வாழ்வு தேடலாகும். பொருளுள்ள வாழ்வுத் தேடலில் எவ்வண்ணம் இருத்தல் வேண்டும் என்பதை இன்றைய திருமறை பாடங்கள் வழிக்காண்போம்.

### *1. மாசற்ற வாழ்வு :*

இளைஞன் ஒருவன் இறைவனைத்தேடினான். அவன்கண்களுக்கு அவர் தென்படவில்லை. அருகே உள்ள மடத்தில் வாழும் துறவியிடம் சென்றான். 'கடவுளை காண வேண்டும்' என்ற தனது

விருப்பத்தைக் கூறினான். கலங்கிய தண்ணீரால் தேங்கிக் கிடந்த கண்மாயின் கரையில் அவனை அழைத்து வந்தார் அந்த துறவி. "இந்த தண்ணீரில் உன் முகத்தைபார்" என்றதும் இளைஞன் நன்றாகப்பார்த்தான். தன் முகத்தைக் காணவில்லை என பதில் கூறினான். இரண்டு நாளுக்குப்பின் தெளிந்த தண்ணீர் குட்டையில் முகத்தை பார்க்க கூறினார். அப்படி பார்த்து முகத்தைக் கண்ட அந்த இளைஞன் இதற்கும் இறைவனைக்காண கேட்டதற்கும் என்னப் பொருத்தம்? என கேட்டான். "அழுக்கும் திருக்கும் உடைய மனதுடையோர் இறைவனை காண இயலாது, மாறாக, தூய்மையும் மாசற்றதுமான உள்ளத்தார் இறைவனைக் காணலாம்" எனத் துறவி இளைஞனுக்கு விளக்கினார்.

தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் , ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். மத் 5:8). கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கல்ல தூய வாழ்விற்கே அழைத்தார்.(1தெச. 4:7) என தூய பவுலார் குறிப்பிடுகிறார். மாசற்றதாய் வாழ்வதே பொருளுள்ள வாழ்வுக்கான தேடல். மாசற்றதாய் வாழ்வதே கடவுளுக்கு உகந்த வாழ்வு.

இளைஞர்களின் தூய வாழ்வுக்கு இடையூறாய் பல வாய்ப்புகள் வரலாம். வாழும் சூழலில், பணியிடங்களில், நண்பர் வட்டங்களில், பழக்கவழக்கங்களில் பாவம் செய்வதற்கென பல சூழல்கள் அமையலாம், 17 வயதுக்கொண்ட இளைஞன் எனத் திருமறையில் (தொநூ. 37:2) அறிமுகப்படுத்தப்பட்ட யோசேப்பு போத்திபாரின் வீட்டில் இருந்தபோது பாவம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. இந்த மாபெரிய தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்வது எப்படி ? என உணர்ந்து பாவத்துக்கு விலகி நின்றான். தாவீது அரசர் அரண்மனையில் உலாவிக் கொண்டிருந்தபோது தன் பார்வையில் பட்ட பத்சேபாளை தன்வயப்படுத்தி தன் குற்றத்தை மறைப்பதற்காக அப்பாவிக் கணவனைப் கொன்றான். பாவம் செய்வதற்கான சூழலில் ஒருவர் வீழ்ந்தார், இன்னொருவர் விலகினார்.

இளைஞர்களே, மாசற்ற வாழ்வு வாழ்வதே பயனுள்ள வாழ்வு கடவுளின் வார்த்தையை முன் வைத்து தியானித்து அவற்றின்படி வாழ தீச்செயலுக்கு விலகிய யோசேப்பை மாதிரியாக்குவோம்.

***2. மனக்கவலையற்ற வாழ்வு :*** **(மத். 6:25)**

கவலையற்ற வாழ்வு வாழ்வதே செயல்படும் இளைஞனின் அடிப்படை இலக்கணம். ஆசைப்படும் பொருள் கிடைக்காத போதும் எதிர் பார்ப்பும் விருப்பம் நிறைவேறாதப் போதும், இளைஞன் கவலைப்படுகிறான்.

வெள்ளம் பெருக்கெடுத்து வந்தால் தான் ஆறு தூய்மையாகும் என்பதுபோல சில நேரங்களில் இடுக்கண்ணும் இடையூறும் வருவது கவலையில் தெளிவடையவே. துன்பம் அடைந்து விட்டோமென்று துவண்டுவிடக் கூடாது. துன்பத்தில் இன்பம் கண்டோம் என்ற எண்ணத்தில் வரும்போது நாம் தாமாகவே கவலையை ஒழித்து விட்டோம் என்பதே பொருள்.

ஹென்றி போர்டை அவருடைய எழுபத்தி ஐந்தாம் வயதில் பேட்டிக்கண்ட ஒருவர் தாங்கள் நல்ல உடல் நலத்துடனும், அமைதியான மன நிலையுடன் செயலாற்ற காரணம் என்ன? என்று கேட்டார், அதற்கு அவர், "நான் இரண்டு சட்டங்களை வரையறுத்துக்கொண்டு அவற்றின்படி நடந்து வருகிறேன். அவை என்னவென்றால் நான் அதிகமாய் உண்பதில்லை. எதையும் நினைத்து அதிகமாய் கவலைப்படுவதில்லை என்பதே"என்றார்.

நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து " உயிர்வாழ எதை உண்பது, எதைக்குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்" எனக் கூறினார் (மத். 6:25). இன்றைய இளைஞர்கள் வாழ்வைக்குறித்தும் உணவைக்குறித்தும் கவலை அடைகின்றனர், வயிறார உண்பதும் நாகரிமான உடை அணிவதுமே கவலையற்ற வாழ்வு என நினைக்கின்றார். அதுவே பொருளுள்ள வாழ்வு என எண்ணுகின்றனர். உணவு, உடை, இவற்றைவிட இறைவனோடு உள்ள உறவை பொருளுள்ள வாழ்வு. உங்கள் கவலைகளை எல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் (1பேது. 5 :7) எதைப்பற்றியும் கவலைப்படாமல், நன்றியோடு கூடிய இறைவேண்டல் செய்வதுதான் (பிலிப். 4:6) கவலையற்ற வாழ்வின் அடித்தளம்.

தூய பவுலார் சிறைச்சாலையில் அடைப்பட்டபோது கவலையின்றி துன்பத்தில் கடவுளைத் துதித்தும் திருப்பாடலைப்பாடியும், பொழுதைக் கழித்தார். திறக்கப்பட்ட சிறைச்சாலையில் விடுதலையில் விளைந்த வித்தானார். பொறுப்புள்ள வாழ்வுக்கு மனக்கவலையைத் துறந்து வாழ்வோம்.

### *3. மகிழ்வின் வாழ்வு :*

“இளையோரே! இளமைப்பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே” எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கத் தான் விரும்புகிறோம். மகிழ்ச்சியை எப்படியாயினும் அடைய வேண்டுமென்று இளைஞர்கள் விழைகின்றனர்.கண்கவர் காட்சிகளில், காதுக்கினிய பாடல்களில்,

இயற்கையின் எழிமிகு தோற்றங்களில், பொழுது போக்கு நிகழ்ச்சிகளில், போதை தரும் தவறான பழக்கவழக்கங்களில் மகிழ்ச்சி தேங்கி கிடக்கின்றது என இளம் தலைமுறையினர் என்ணுகின்றனர். இப்பழக்கங்களில் பெறும் மகிழ்ச்சி போலியானது. பிற நிகழ்ச்சிகளில் கிடைக்கும் மகிழ்ச்சியைவிட சுய முயற்சியில் பெறும் மகிழ்ச்சியே விலைமதிப்பு மிக்கது.

மிக கோபக்காரரான ஒருவர் அலுவலகப் பணியைவிட்டு வீட்டுக்கு வந்தார். கோபத்தோடு வந்த அவரில் கண்களில் குறைக்கூற எதுவும் தென்படவில்லை. வீட்டில் மனைவி அத்தனை கடமைகளையும் சரியாக நிறைவேற்றி இருந்தாள். சோர்போடு வந்த அவரை சுறுசுறுப்பு ஆக்குவதற்கு ஒரு குவளை தேநீர் தந்தார் மனைவி. மெல்ல கையில் எடுத்த குடித்ததும்“ஏன் தேநீருக்கு சர்க்கரைப் போடவில்லை?” எனக் கோபமாக கேட்டார் கணவர். ஒரு கரண்டியுடன் வந்த மனைவி குவளையில் இருந்த தேநீரை நன்றாக கலக்கினார். பின்பு கணவர் தேநீரைக் குடிக்கவே மலர்ந்த முகத்தோடு மனைவியைப் பார்த்தார். உண்மைதான், எப்படி தேநீரில் சர்க்கரை மறைந்து அடியில் இருந்ததோ அதுபோல் எல்லோரிடம் மகிழ்ச்சி அறிப்படாமல் நமக்குள்ளே இருக்கிறது. நமக்குள் இருக்கும் திறமை, ஆற்றல், மகிழ்ச்சி இவைகளை வெளிக்கொணர நமது உழைப்பை நம்பி வாழ்தல் நல்லது (1தெச. 4:12). பிறர் உழைப்பைச் சுரண்டி பிறர் பொருளை வஞ்சித்து பிறர் திறனைக்கண்டு ரசித்து வாழ்வது மட்டும் மகிழ்வான, வளர்வான, வாழ்வன்று, தூய பவுலாரும் சுய முயற்சியில் உயர்ந்தார். அதில் அவருக்கு அளவில்லா ஆனந்தம் கிடைத்தது. மகிழ்ச்சியான வாழ்வு அமைதியைத் தரும் அமைதியான வாழ்வில் திருப்தி வரும். திருப்தியான வாழ்வில் நிம்மதி பிறக்கும். நிம்மதியான வாழ்வில் நிமலன் இயேசு இருப்பார். மகிழ்ச்சியாய் வாழ்தலை பொறுப்புள்ள வாழ்வுக்கு சான்று என உணர்ந்து வாழ இளைஞர்கள் அழைக்கப்படுகிறீர்கள்.

இளையோரே உங்கள் பருவம் ஆண்டவரின் ஈவு, அவரின் அருள்கொடை. பொருளுள்ள வாழ்வு தேடி அதில் நிறைவடைவோம்.

அருள்திரு. S. **வில்சன்**

**25-10-2015** *சீர்திருத்த ஞாயிறு*

# சீர்திருத்தப்பட்ட, சீர்திருந்தும் திருச்சபை

## CHURCH : REFORMED AND REFORMING

இச 26:4-11 திப 2:43 -47
திபா 109:21-31 மத் 13:33-35

**"ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவி-ல் தவறாது கூடி வந்தார்கள்."** திப 2:46

**இறைவேண்டல் :** *என்றென்றும் வாழும் ஆற்றல் நிறைந்த கடவுளே! உமது நம்பிக்கையின் மக்கள் அனைவரையும் தூய்மைப்படுத்தி ஆளுகிறவரே நீர் தந்துள்ள நல் ஈவாகிய திருச்சபைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஒருமைப்பாட்டில் நிற்கவும், சாதி, இனம், மொழி போன்ற வேறுபாடுகளைத் தாண்டி உமக்கு சான்றாய் செயல்படவும், உலகத் திருச்சபைகள் ஒன்றுபடவும், இணைந்து செயல்படவும், ஒற்றுமைக்கு அடையாளமாய் திகழவும் அருள்செய்ய வேண்டுமென்று திருச்சபையின் தலைவராய் ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். - ஆமென்.*

ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் கடவுளால் அழைக்கப் பெற்ற மக்கள் இயக்கமே திருச்சபை ஆகும். கடவுள் தமது அன்பை உலகில் வெளிப்படுத்த திருச்சபையை ஓர் ஊடகமாகத் தேர்ந்துள்ளார்.

எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தளையில் கட்டுண்டிருந்த போது கடவுள் அவர்களுக்கு விடுதலை வழங்கினார். முழு விடுதலையோடு கடவுளை வழிபடத் தொடங்கினர். வாழ்வில் பெற்றுக் கொண்ட மறுமலர்ச்சியை நன்றியுடன் கொண்டாட அழைப்புப் பெற்றனர் (இச 26: 4-11). எகிப்திய அடிமைத்தனம் போன்று கிறிஸ்தவ வரலாற்றிலும் இருள் சூழ்ந்த ஓர் காலம் இருந்தது. திருச்சபை தலைவர்களின் தவறானக் கருத்தியல்களால் கிறிஸ்தவ உலகம் கட்டுண்டு கிடந்தது. இந்நிலையில் விடிவெள்ளியாகத் தோன்றி, திருச்சபையில் மறுமலர்ச்சியைக் கொணர்ந்தார் மார்டின் லூதர். கி.பி. 1517 அக்டோபர் திங்கள் 31-ம் நாள் விட்டன்பர்க் திருச்சபையில் தொடங்கிய மறுமலர்ச்சி உலகெங்கும் பரவியது. சீர்திருத்த ஞாயிறாகிய இன்று திருச்சபை பெற்றுக் கொண்ட மறுமலர்ச்சியை நன்றியுடன் நினைவுகூர்தல் நன்று. சீர்திருத்தம் என்பதை ஒரு தனி நபரின் அறவாழ்வில் நிகழும் நல் மாற்றம், ஒரு சமூகத்தில் ஏற்படும்

புனரமைப்பு, வரலாற்றில் நிகழ்ந்த புரட்சிகரமான கட்டம் என்னும் பொருள்களில் புரிந்து கொள்ளலாம். மேலும் சீர்திருத்தம் என்பது வரலாற்றில் நடந்து முடிந்த ஒரு நிகழ்வு அல்ல. மாறாக, வாழ்வில் தொடர் மாற்றத்தை உருவாக்குவது என்பது தான் இதன் உண்மை பொருளாகிறது. மேலும், சீர்திருத்தம் என்பது பற்றுறுதிக்கு ஒரு தெளிவான மறு வரைவிலக்கணம் தருகிறது. எனவே, இன்று திருச்சபை எத்தகைய தகவுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை தியானிப்பது சாலச்சிறந்தது.

தொடக்கக்கால திருச்சபையினரின் வாழ்வு, தூயாவியாரின் ஆட்கொள்ளுதலாலும் திருத்தூதர்களின் ஆற்றல் மிக்க அருளுரைகளாலும் மறுமலர்ச்சியடைந்தது. அதோடு பலரது வாழ்வையும் மறுமலர்ச்சியடையச் செய்தது (திப. 2:43-47). இதை அடிப்படையாகக் கொண்டு ஒரு திருச்சபை எவ்வாறு மறுமலர்ச்சியடைந்து பிறரை மறுமலர்ச்சியடைய செய்ய வேண்டும் என்பது குறித்து சிந்தனைச் செய்யலாம்.

### *1. பாசத்துடன் ஒன்றித்தல் :*

'நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்' (திப 2:44).

இறையரசின் தகவுகளை வாழ்க்கைப் பாடமாக்கிக் கொண்ட தொடக்கக் காலத் திருச்சபையினர் மனமிசைந்து இணைந்து வாழ்ந்தனர்.

'எங்கே இருவர் மூவர் அல்லது எங்கே உறவு இருக்கின்றதோ அங்கே வருவேன்' என ஆண்டவர் கூறுகிறார். எனவே இவர்களின் வழிபாடும் பொருளுள்ளதாக மாறியது. தம் மக்களுக்காக இயேசுகிறிஸ்து மன்றாடிய போது ஒன்றிப்பை முதன்மையாக்கினார். தாம் தன் தந்தையோடு ஒன்றுபட்டிருந்ததைப் போன்று தம் அடியவரும் ஒன்றித்தித்திருக்க வேண்டுமென்று ஏங்கினார் (யோவா. 17:20-23). ஆண்டவரின் விருப்பத்தை தொடக்கக் காலத் திருச்சபையினர் இனிதே நிறைவேற்றினர்.

திருச்சபைக்கு வழங்கப்படும் உருவகங்களிலே ''கிறிஸ்துவின் உடல்'' என்பது மிகவும் சிறந்த ஒன்றாகும். கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட திருச்சபை எனும் உடலில் அனைத்து கிறிஸ்தவர்களும் உறுப்புகளாய் இருக்கின்றனர். எனவே பிரிவினைகள் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையைக் காயப்படுத்தும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். மாறாக, அன்பின் அடிப்படையில் இணைந்துச் செயல்படும் போது, கிறிஸ்துவை தலையாகக் கொண்ட திருச்சபை என்னும் உடல்

வளருகின்றது (எபே. 4: 15. 16). இவ்வளர்ச்சி எண்ணிக்கைப் பெருக்கத்தைக் குறிக்காமல் உயர்ந்த வாழ்க்கை நெறியைக் குறிக்கின்றது.

இறைமக்களிடையே கருத்து வேறுபாடுகள் எழுவதைத் தவிர்க்க முடியாது தான். ஆனால், அவைகளை திருமறை ஒளியில் திறந்த மனதுடன் உரையாடி தீர்வு காண முற்படுதல் வேண்டும். ஆண்டவரின் போதனையுடன் இணைந்துச் செல்கின்ற கருத்தை மனப்பூர்வமாக ஏற்று, வாக்குவாதங்களைத் தவிர்த்தல் நல்லது. இத்தகையச் சூழலில் விட்டுக் கொடுக்கும் ஒருமைப்பாடு திருச்சபைக்குத் தேவையாகும். இந்த ஒருமைப்பாட்டை சிதையாமல் காத்துக் கொள்ள வேண்டும் என திருமறை ஆலோசனை தருகின்றது (எபே. 4:3; பிலி. 2:2).

எனவே, கிறிஸ்துவின் உடலாக அழைக்கப் பெற்றுள்ள திருச்சபையினர் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கிறவர்களாகவும், பிறரிடம் கரிசனையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஒருவர் பளுவை இன்னொருவர் தாங்கிக் கொள்வதும் ஒருமைப்பாடு தான். இந்த தாங்கிக் கொள்ளும் ஒருமைப்பாடு திருச்சபைக்குத் தேவை. இத்தகைய மனநிலையுடன் கடவுளை வழிபட ஒன்றிணைந்தால் அது மறுமலர்ச்சியின் வழிபாடு எனலாம்.

### *2. பரிவுடன் பகிர்தல் :*

“அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர்” (திப. 2:45).

இயேசு கிறிஸ்துவின் போதனையால் கட்டப் பெற்றிருந்த தொடக்கக் காலத் திருச்சபையினர் இறையன்பை பகிர்தல் வழியாக வெளிப்படுத்தினர். தேவையில் இருப்போர்க்கு உதவும்படி தங்கள் நிலபுலன்களையும், உடைமைகளையும் விற்க முன்வந்தனர். உணவு உண்ணும் போதும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து உண்டனர். யாரும் எவற்றையும் தனக்கென்று வைத்திருக்கவில்லை. தங்கள் உடைமைகளைப் பொதுவாக்கினர்.

திருச்சபையில் ஒருவர் தேவையுடனிருந்தால் கிறிஸ்துவின் மனதுருகும் அன்பு நம் உள்ளத்தில் வரவேண்டும். ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறுவது போன்று (1 கொரி 12: 25) ஒருவரின் இல்லாமை திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களையும் உந்தித் தள்ள வேண்டும். அனைவரும் சமநிலையில் மனநிறைவுடன் இருப்பதைக் கண்டு மகிழும் கண்கள் நமக்கு தேவை.

உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால், அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்? (1 யோவா. 3:17)

என்று தூய யோவான் கேள்வியெழுப்புகின்றார். சொல்லளவில் நம் அன்பு நில்லாமல் செயலளவில் அன்பை வெளிக் காட்டுதல் நன்று. எனவே தியாக உணர்வுடன் தேவையில் இருப்போர்க்குப் பகிர்ந்தளிப்பது இறைமக்களின் கடமையாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சீவலப்பேரி என்றொரு கிராமம் உள்ளது. அங்குள்ள ஓர் கிறிஸ்தவப் பள்ளியில் நல்லக்கண்ணு என்ற சிறுவன் பயின்று வந்தான். இந்தச் சிறுவன் ஆண்டவரை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். ஆனால் ஞாயிறு பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று வந்தான். ஒருநாள் நல்லக்கண்ணு காலை உணவு உண்ணும் நேரத்தில் “அம்மா பசியாயிருக்கு கொஞ்சம் பழையது கொடுங்க” என்றொரு குரல் தொனித்தது. நல்லக்கண்ணுவின் உள்ளம் உருகியது. தான் உன்னை வைத்திருந்த கஞ்சியை அந்த ஏழை மனிதருக்கு கொடுத்து விட்டு, சோற்றுப் பானையிலிருந்த நீராகாரத்தை குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டான். அந்த ஏழையின் மகிழ்வைக் கண்டு அகமகிழ்ந்தான். ஞாயிறு பள்ளியில் கற்றுக் கொண்ட நற்சிந்தனைகளை வாழ்ந்துக் காட்டினான். நல்லக்கண்ணு ஆண்டவரை முழுமையாக ஏற்றுக்கொண்டு டக்கர் என்ற அருட்பணியரால் 1845-ம் ஆண்டில் திருமுழுக்குப் பெற்றார். இந்தச் சிறுவனே பிற்காலத்தில் பலராலும் புகழப் பெற்ற ஈசாக்கு ஆபிரகாம் என்ற ஆயராக உயர்ந்தார். சிறுவயதிலேயே பரிவுள்ளத்துடன் பகிர்ந்தளித்த இவரது வாழ்வு இன்று நமக்கு அறைகூவல் விடுகின்றது அல்லவா? உளமாரப் பகிர்ந்து, ஏழையரின் மகிழ்வில் இறைவனைக் காண்போம்.

### *3. பற்றாளராய் வாழ்தல் :*

“ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்” (தி.ப. 2:46, 47).

தொடக்கக் காலத் திருச்சபையினரின் ஒன்றிப்பும், பகிர்வும் மனிதரிடையே உள்ள உறவிற்கு உயிரூட்டமும் வழங்கின. அதோடு, ஆண்டவரிடம் உண்மையானப் பற்றுக் கொள்ளவும் அவர்கள் தவறவில்லை. நாள்தோறும் ஆலயத்தில் கூடிவந்தனர். மனதளவில் இணைந்து கடவுளை வழிபட்டனர். வீடுகள் தோறும் அப்பம் பிட்டு, வழிபாட்டையும் வாழ்வையும் ஒன்றிணைத்தனர். கடவுளை வாயாரப் போற்றிப் புகழ்ந்தனர். அவர்களின் நற்செயல்களும் கடவுளுக்குப் போற்றுதலை வழங்கின.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறிய புளிப்புமா உவமையின் கருத்து சிந்திக்கத் தகுந்தது. புளிப்புமா, புளிப்பற்ற மாவில் ஊடுருவிச் சென்று மாவு

முழுவதையும் புளிப்பேறச் செய்கின்றது (மத். 13:33-35). அது போன்று ஒருவரின் அல்லது திருச்சபையின் பற்றுமை வாழ்வு சமூகத்தில் போற்றத் தகுந்த மறுமலர்ச்சியை உண்டாக்குகின்றது. எனவே, பற்றுறுதி கடவுளோடு நம்மை இணைத்து அவர் வாழ்வில் நமக்குப் பங்களித்து பற்றாளரின் வாழ்வு வாழ நம்மை தூண்டுகிறது.

தொடக்கக் காலத் திருச்சபையினரின் இறைப்பற்றுள்ள வாழ்வு, சுற்றியுள்ள மக்களையும் கவர்ந்தது. இதனால் எல்லா மக்களின் நல்லெண்ணத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார். இதனால் திருச்சபை வளர்ந்தோங்கியது.

இன்றும் திருச்சபை மற்றும் இறைமக்களின் வாழ்வு முறையை சமுதாயம் கூர்ந்து கவனிக்கின்றது. பிறர் எள்ளி நகையாடும் விதத்தில் அமைந்துள்ள அதிகார ஆசை, பதவிக்கானச் சண்டைகள் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும். இறைப்பற்றாளராய் வாழ்ந்து திருச்சபையை மறுமலர்ச்சியடையச் செய்வோம்.

அசிசி பட்டணத்து பிரான்சிஸ் ஒரு முறை தன் நண்பர் டவயோ அவர்களிடம் ‘‘நாம் போதிக்கச் செல்வோம்’’ என்று கூறிப் புறப்பட்டார். இருவரும் நகரத் தெருக்களில் அடக்கம், ஒடுக்கமாகச் சுற்றி அலைந்து இல்லம் திரும்பினர். ‘‘போதிக்காமல் வந்து விட்டோமே’’ என்றார் லியோ, ‘‘ஏற்கனவே போதித்துவிட்டோம். உமக்கு நினைவில்லையா? இறைவேண்டல், தூய்மை, அடக்கம், இறை எண்ணம் கொண்டு வாழ்தலே சிறந்த போதனை’’ என்றார் பிரான்சிஸ். தன் வாழ்வு முழுவதும் எளிமையும், இனிமையும், தூய்மையுமாக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை தம் பக்கம் கவர்ந்தார் பிரான்சிஸ். ஆம் ! இயேசு கிறிஸ்து என்ற ஒளியும், அவருக்குள் நாம் அடையும் புதுவாழ்வும் சமூகத்தில் காட்டப் பெறல் வேண்டும். நமது இறைபற்றுள்ள வாழ்வு பலரது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

இறையன்பர்களே ! திருச்சபையில் சீர்த்திருத்தம் என்பது என்றோ முடிந்துவிட்ட நிகழ்வல்ல. அது ஓர் தொடர் நிகழ்வு. பாசத்துடன் ஒன்றித்து, பரிவுடன் பகிர்ந்து, பற்றாளராய் வாழ்ந்து திருச்சபையை மறுமலர்ச்சியடையச் செய்வோம். சமூகத்திலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவோம். அப்போது இறையரசு இவ்வுலகிலேயே வளர்ந்து பெருகும்.

திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

# இரட்டிப்பான ஆசி

திருமறைப்பாடம் : செக் 9:12-14

**"...இருமடங்கு நன்மைகள் நான் உங்களுக்குத் தருவேன்" செக். 9:12**

சீனாவுக்கு சென்ற முதல் அருட்பணியாளர் ஹட்சன் டெய்லர் (1832 - 1905). இவர் ஆண்டவர் தந்த தரிசனத்தோடு சீனாவில் திருப்பணி செய்ய, தம் வசதியான வாழ்வை விட்டு, வீட்டை விட்டு, எந்தக் கலாச்சாரமும் இல்லாத ஒரு பகுதியில் இறைப்பணி செய்தார். அவர் தங்கியிருந்த இடம் மிகவும் ஆபத்தான இடம். தாம் கொண்டு சென்ற பணமும் தீர்ந்தது. கடைசியில் ஒரே ஒரு பணம் மட்டும் மிஞ்சியது. அந்த ஒரு பணமும் நாளைக்கு உணவுக்கு ஆகும் என்று பத்திரமாய் வைத்துவிட்டு தூங்கச் சென்றார். திடீரென்று கதவு தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்து பார்த்தால், அங்கு ஓர் ஏழை மிகுந்த சோர்வோடு தன்னுடைய வீட்டுக்கு வந்து ஜெபியுங்கள் என அழைத்தார். அவரும் என்ன பிரச்சினை என்று வினவ, பசிக் கொடுமை என்றார். உடனே மிஷனெறியும் அந்த வீட்டுக்குச் சென்று தம்மிடம் இருந்த ஒற்றை ரூபாயைக் கொடுத்து ஜெபித்து விட்டு வந்தார். வீட்டிற்கு வந்து நன்றாகத் தூங்கி விட்டு, காலையில் உணவுக்காக என்ன செய்வது என யோசித்தபோது, தபால் வழி அவருக்கு 12 வெள்ளிப் பணம் அவரது திருப்பணிக்காக ஒருவர் அனுப்பியது அவருக்குக் கிடைத்தது. இது எவ்வளவு ஆச்சர்யம் அல்லவா! ஆண்டவர் தம் மக்களை இரட்டிப்பான நன்மைகளினால் நிரப்புகிறார். திருமறையில் இருமடங்கு நன்மையைப் பெற்றவர் எலிசா (2அர. 2:9). தாம் பெற்ற இரு மடங்கு நன்மைகளினால் எலியா செய்த கடைசி அற்புதத்தைத் தம் முதல் அற்புதமாய்ச் செய்தார் (2அர. 2:14). இதுவரை மதிக்கப்படாத எலிசா இருமடங்கு நன்மை பெற்ற பின் இறைவாக்கினர் 50 பேர் எலிசாவைத் தரை மட்டும் வணங்கி மரியாதை செய்கின்றனர். மேலும், எலியாவை விட திரளான அற்புதங்களை ஆண்டவரின் நாமத்தை கொண்டு நிறைவேற்றுகிறார். இவ்வளவு உயர்வாய் இரட்டிப்பான நன்மையைப் பெற எலிசா என்ன செய்தார் என்பதை இங்கு சிந்தனை செய்வோம்.

### 1. இணைந்து பணி செய்த எலிசா : (2அர 2 : 2)

எலிசா எலியாவின் அனைத்துத் திருப்பணிகளோடும் தம்மை இணைத்துக் கொண்டார். கில்கால் பணி, பெத்தேல் பணி, எரிகோ பணி என அனைத்திலும் எலியாவை விட்டுப் பிரியாது பற்றிக் கொண்டவராய் இணைந்தே நிற்கிறார். ஆண்டவரின் திருப்பணியில் இணைந்து செயல்படுபவர்கள் இரட்டிப்பான நன்மைகளைப் பெறுகிறார்கள். ஆபிரகாமோடு லோத்து இணைந்து பணி செய்த போது நன்மையைப் பெற்றார். பிரிந்து சென்ற போது வெறுமையை பெற்றான். ரூத் நகோமியுடன் இணைந்த பொழுது அவர்களின் வம்ச வழியில் இயேசுகிறிஸ்து வருகின்றார். ஆனால் பிரிந்து சென்ற ஓர்பாள் சரித்திரத்தில் காணாமல் போய் விடுகிறார். இணைந்திருப்பவர்கள் நன்மையிலும் நன்மை பெறுகிறார்கள். இணைந்திருப்பதை தான் ஆண்டவரும் விரும்புகிறார். பவுலடியாரும் அதனை வலியுறுத்துகிறார் (1கொரி 1 : 10). இன்று மனிதன், தம் மனதுக்குள் பிறரைக் கற்பனை பண்ணிக் கொண்டு ஓயாமல் சண்டை போடுகிறார்கள். மிருகக் காட்சி சாலையில், பொதுவாக நரியை வைக்கமாட்டார்கள். காரணம் என்னவென்றால், நரியை பழக்கப்படுத்த முடியாது; அது யாரையும் சேர்ந்திருக்க விடாது. இன்று நரி போல் இருப்பதினால் இரு மடங்கு நன்மையை இழக்கிறோம். ‘‘ஒன்றுபட்டு உழைத்தால் மலையைக் கூட தங்கமாக மாற்றலாம்’’ என்பது சீனப் பழமொழி. நெகேமியாவோடு மற்றவர்கள் இணைந்து பணி செய்த பொழுது நெகேமியா அலங்கத்தை 52 நாள்களில் கட்டி முடிக்கின்றார். இறைவனின் பணியை இணைந்து நிறைவேற்றும் பொழுது அதன் பலன் சிறப்பானது. எலிசா - எலியாவோடு இணைந்து பணி செய்ததினால் இரட்டிப்பான நன்மையைப் பெற்றார்.

### 2. வீண் பேச்சைத் தவிர்த்து தீர்மானத்தில் உறுதியாய் இருந்த எலிசா : (2அர 2:3,5)

எலியாவைப் பின் தொடர்ந்து வந்த எலிசாவை கில்கால், பெத்தேல், எரிகோ போன்ற இடங்களில் இறைவாக்கினர், மக்கள், தடைபண்ணுகிறார்கள். அவர் சோர்வடையப் பேசுகிறார்கள், ஆனால் எலிசாவோ, எலியாவைப் பின் தொடரக் கூடிய தம் தீர்மானத்தில் உறுதியாய் இருந்தார். ‘‘நான் உம்மை விடுகிறதில்லை’’ (2 : 2) என்ற அவரது தீர்மானம் சற்றேனும் அசையவே இல்லை, அது போல தம் தீர்மானமான பயணத்தில் ‘‘தேவையில்லாத பேச்சை’’ தவிர்க்கிறார். எப்பொழுதுமே தேவையற்ற பேச்சுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும், தேவையற்ற

பேச்சு நமது தீர்மானத்தை சீர்குலைத்துவிடும். ஒவ்வொரு இடங்களிலும் தேவையில்லாமல் மற்றவர்கள் இவரிடம் பேசியபோது ‘‘சும்மா இருங்கள்: என வீண் பேச்சைத் தவிர்த்தார். ‘‘வீண்பேச்சைத் தவிர்ப்பவர்களும்’’ இரு மடங்கு நன்மையைப் பெறுகிறார்கள் என்பதற்கு எலிசா ஒரு சான்று.

இன்று தேவையில்லாத பேச்சுகள், தேவையில்லாத உரையாடல் எவ்வளவு வேதனையைத் தருகிறது அல்லவா. பிறரின் தேவையில்லாத பேச்சைத் திருமறையானது விரியன் பாம்புக்கு ஒப்பிடுகிறது (சங். 140:3). அந்தளவில் பிறரிடம் தேவையற்றுப் பேசும்போது நமது தீர்மான வாழ்வு திசை திரும்பிவிடுகிறது. சிலரின் பேச்சைக் கவனித்தால் மற்றவர்களைக் குறை சொல்லியே பேசுவார்கள். இன்னும் சிலர் பிறரைக் குத்தியே பேசுவார்கள். இவைகளைக் கவனித்தால் நம் மனம் தான் சஞ்சலப்படும். எலிசாவைப் போல் ‘‘சும்மா இருங்கள்’’ என்று வீண் பேச்சுக்காரர்களை விரட்டியடிக்க வேண்டும். அப்பொழுது தான் நமது தீர்மானம் உறுதியாக இருக்கும். ஒரு முறை ரேடியோவை கண்டுபிடித்த மார்க்கோனிக்கு பாராட்டு விழா நடந்தது. விழா மேடையில் மார்க்கோனிக்கு அருகில் இருந்தவர் வளவளவென்று, தொனதொனவென்று வீணாய் பேசினார். மார்க்கோனியிடம், ‘‘உங்க ரேடியோவிலே அப்படி என்னதான் சிறப்பு?’’ என ஏளனமாய் கேட்டாராம். அதற்கு மார்க்கோனி, ‘‘என் ரேடியோவை நான் எப்பொழுது நினைத்தாலும் on செய்யலாம் off செய்யலாம். ஆனால் உங்க வாயை.....!’’ எனத் தெளிவாய்ச் சொல்லி வீண் பேச்சைத் தவிர்த்தார், வீண் பேச்சை தவிர்ப்பது நமது முன்னேற்றத்துக்கு மிகவும் நல்லது.

### *3. நல்லதைத் தெரிந்து கொண்ட எலிசா :* (2அர 2:9)

எலிசா உலகப் பொருளைத் தெரிந்துக் கொள்ளாமல், ஆவிக்குரிய வாழ்வை தெரிந்து கொள்வதினால் இரண்டு மடங்கு நன்மையைப் பெறுகிறார். ஏவாளின் உலகப் பொருள் மீது கொண்ட பற்றும், லோத்துவின் மனைவியும், ஆகாபும் உலகப் பொருளின் மீது கொண்ட பேராசையும் அழிவுக்கான பாதையில் கொண்டு சென்றதை திருமறை கூறுகிறது. நாம் எவைகளை நமது வாழ்வின் அடிப்படையாகத் தெரிந்து கொள்கிறோமோ அதைப் பொறுத்துதான் நமது வாழ்க்கை அமைகிறது. நமது வாழ்க்கையின் நடைமுறைகளைக் கவனித்துப் பார்த்தால் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதை தீர்மானிக்கவே பல மணிநேரம் ஆகிவிடும். ஏன் இந்த நிலைமை ! எலிசாவைப் போல் நல்லதைத் தெரிந்து கொள்ளவில்லை. ஒருமுறை ஒரு பெண் தன்னுடைய வீட்டு வாசலில் மூன்று பெரிய மனிதர்கள் காத்திருப்பதைக் கண்டாள். ‘‘நீங்கள் யார்?’’

எனக் கேட்டாள். அவர்கள் தங்களை அறிமுகம் செய்தனர். ஒருவர் பெயர் செல்வம் (wealth), அடுத்தவர் பெயர் வெற்றி (success), மற்றவர் பெயர் அன்பு (love) என அறிமுகம் செய்து, எங்கள் மூவரில் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வர ஆசைப்படுகிறார் என்றதும், தம் கணவரிடம் ஆலோசிக்க வீட்டிற்குள் ஓடினாள், அவர்கள் சேர்ந்து ஆலோசித்து "அன்பை" அழைத்தனர். என்ன ஆச்சரியம் மூவரும் சேர்ந்தே வீட்டிற்குள் சென்றனர். அந்த மூவரும் சேர்ந்து "நீங்கள் செல்வத்தையோ அல்லது வெற்றியையோ அழைத்திருந்தால் மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் நீங்கள் அன்பை அழைத்ததால் நாங்களும் உடன் வந்தோம், அன்புள்ள இடத்தில் செல்வமும், வெற்றியும் கூடவே இருக்கும்" என்று கூறினர். சரியான தெரிந்து கொள்ளுதல் ஆசிர்வாதத்துக்கு வழிவகுக்கும்.

எலிசா, திருப்பணியில் தம்மை இணைத்து, வீண்பேச்சைத் தவிர்த்து, சரியானதைத் தெரிந்து கொண்டதினால் இரு மடங்கு ஆசி பெற்றார். நாமும் இந்த எலிசாவைப் போல் வாழ்வோம். இரு மடங்கு ஆசி பெறுவோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**01-11-2015** *உலக ஞாயிறுப்பள்ளி நாள்*

# திருச்சபையில் சிறார்கள்

## CHILDREN IN THE CHURCH

விப 2:1-10 3யோவா 1 - 15

திபா 47 மத் 18 : 1-10

**“இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருத வேண்டாம்; கவனமாயிருங்கள்! ” மத் 18:10**

**இறைவேண்டல் :** ***‘குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களை தடுக்காதீர்கள்’ என்று கூறிய மனதுருக்கத்தின் கடவுளே, எங்கள் திருச்சபையிலுள்ள சிறார்கள் தடையில்லாமல் உம் அன்பை அனுபவிக்க அருள்தாரும். சிறுவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கி, உம் அன்பை வெளிப்படுத்தி, அவர்களுக்கு பணிவிடை செய்ய திருச்சபையாம் எங்களை தகுதிப்படுத்தும். சிறுவர்களுக்கு ஆசி வழங்கின இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் பணியும் முழுமையான நற்செய்தியாகும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் அனைத்து சூழலும் இடம் பெறுவதால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி முழுமையானது. அவ்வாறே அனைத்து மனிதர்களையும் உள்ளடக்கிய செய்தியை திருமறை தருகின்றது. இயேசு கிறிஸ்துவின் போதனையில் சிறுவர்கள் பற்றிய சிறப்பு இடம் பெறுகின்றனர். இந்த சிறப்பை நீண்ட காலத்துக்குப் பின்புதான் திருச்சபை அடையாளம் கண்டது. அதுவே திருமறைப் பள்ளி என்ற பெயரில் ராபர்ட்ரெய்க்ஸ் அவர்களால் 1780 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வீதியில் தொடங்கப்பட்ட திருமறைப்பள்ளி திருச்சபைக்குள் படிப்படியாக கடினப்பட்டு வந்தது. திருச்சபை திருமறைப்பள்ளியின் தேவையை உணர்ந்ததால் சிறுவர்கள் மத்தியில் இறைப்பணி வளர்ந்தது.

“சிறுவர்களை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துதல்” என்பதே திருமறைப்பள்ளியின் நோக்கமாகும். திருச்சபை, திருமறைப்பள்ளி எதையெல்லாம் கற்றுக்கொள்ளவில்லையோ அதையெல்லாம் கற்றுக் கொடுப்பதாய் அமையக்கூடாது. மாறாக, கிறிஸ்தவப் பண்புகளில் எவையெல்லாம் நடைமுறையில் இல்லையோ அதை வாழ்வில் செயல்படுத்துவதற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும். இன்று திருச்சபை சிறுவர்களை கற்றுக் கொள்பவர்களாகவே கட்டி வைத்திருக்கின்றது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் போதனை மற்றும் வாழ்வின் பார்வையில் திருச்சபை சிறுவர்களை முழுமையான மாதிரியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### 1. இடறலுக்குரியோரல்ல இறையரசுக்குரியவர்கள் (மத் 18:6)

பிள்ளைகளைச் சுமையாகக் கருதாதபடி சுமந்து கொண்டு செல்வது பெற்றோரது கடமை (இச 1:31) கடவுளும் இஸ்ரயேல் மக்களை பிள்ளைகளைப்போன்று சுமந்து கொண்டு வந்தார். பிள்ளைகள் நன்மை தீமை அறியாதவர்கள் (39). நன்மை தீமை அறியாதவர்களை நன்மையான வழிகளில் நடத்துவது திருச்சபையின் கடமை. மனோவா தனக்கு குழந்தை கிடைக்கும் என்ற இறைவாக்கை கேட்ட போது (நீத 13:12) "எப்படி பிள்ளையை வளர்க்க வேண்டும் ? எப்படி நடத்த வேண்டும்?" என்று கேட்டார். திராட்சைரசம், மதுபானம் குடியாமல் வளர்க்கப்பட வேண்டும் என்று மனோவாவிற்கு சொல்லப்பட்டது. சிறுவர்களை இடறச்செய்கின்ற நிகழ்வுகளை திருச்சபை விட்டுவிட்டு இறையரசுக்குரியோராக அவர்களை நன்மையான வழிகளில் தயாரிக்கவேண்டும். இன்று திருச்சபைக்குள்ளிருக்கும் மாதிரியில்லா வாழ்வு வளரும் குழந்தைகளுக்கு இடறுதற்குரியதாய் இருக்கின்றது. இடறல்களை கொடுப்பவனுக்கு ஐயோ என்கின்றார் இயேசு கிறிஸ்து (மத் 18:7). இடறலாயிருக்கும் கால், கை, கண் போன்ற உடல் உறுப்புக்கள் அகற்றப்படவேண்டும் (8,9). இக்கருத்து சிறுவர்களுக்கு இடறலாயிருப்போர் திருச்சபைக்கு வெளியே நிற்க வேண்டும் என்பதே ஆகும் (மத் 18:5). சிறுவர்களை ஏற்றுக்கொள்பவர் தன்னை ஏற்றுக்கொள்வதாக இயேசு கிறிஸ்து கூறுகின்றார்.

### 2. இகழ்ச்சிக்குரியோரல்ல இரக்கத்திற்குரியவர்கள் : (மத் 18:10)

சிறுவர்கள் உதவாதவர்களாய் அற்பமானவர்களாக எண்ணப்பட்டார்கள். ஆகவே மிக எளிதாக சிறுவர்களை கொடுமைப்படுத்தும் நிகழ்வுகளை அதிகமாக காணலாம். ஆனால், திருமறை உயர்ந்தோருக்கு இகழ்ச்சி வருவதாக கூறுகின்றது. பிரபுக்களின் மேல் இகழ்ச்சி வரப்பண்ணி, எளியவனை, சிறியவனை உயர்த்துவேன் (திபா 107:40,41). இஸ்ரயேலரது ஆண் குழந்தைகள் இகழ்ச்சிக்குரியவராக கருதப்பட்டனர். ஆனால், மோசேயை நதியில் குழந்தையாகக் கண்டபோது இரக்கம் பெற்றார் (விப 2:6) விடுதலை வீரராக, ஆண்டவரின் கருவியாய்ப் பயன்படுத்தப்பட்டார்.

எசேக்கியேல் இஸ்ரயேலரை குறிப்பிடும் போது இகழ்ச்சிக்குரியவராயிருந்தோர் மீது ஆண்டவர் இரக்கம் காட்டினார் இகழ்வோரிடத்தில் உயர்த்தினார். ஆனால், இஸ்ரயேலரும் தங்கள் பிள்ளைகளை வழிவிலகச் செய்தனர் எனக் கூறுகிறார் (எசே 16:5,6,20). வன்முறைவாதிகள் பிள்ளைகளையும் கொல்லும் அளவிற்கு இரக்கமில்லாதவர்களாய் வளர்ந்து வருகின்றார்கள். பார்வோன் இஸ்ரயேல்

ஆண்குழந்தைகள் மீது இரக்கமற்றவராயும், ஏரோது இரண்டு வயதுக்குட்பட்டோர் மீது இரக்கமற்றவராயும் இருந்தனர் (விப 1: 16,22; மத் 2: 16) இந்நிகழ்வுகள் மாபெரும் அழுகுரலை உருவாக்கியது. சிறியோரை இகழ்வாய் பார்க்க வேண்டாம் என்று இயேசு கிறிஸ்து குறிப்பிடுவதோடு இறை தூதரின் அரவணைப்பு அவர்களோடு இருக்கின்றது என்றார். அதிக அக்கறையுடன் இரக்கம் காட்டப்பட வேண்டியவர்கள் சிறுவர்கள்.

### *3. இடம் மறுப்பிற்குரியோரல்ல இறையாசிக்குரியவர்கள்:* (மத் 19:14)

யூத சமூகத்தில் சிறுவர்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படாதவர்கள். இக்கருத்தே சீடர்களாலும் பின்பற்றப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் கை தங்கள் பிள்ளைகள் மீது படவேண்டும் என்ற எண்ணம் புரட்சியான எண்ணம். பிள்ளைகள் ஆன்மிக உருவாக்கத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பெற்றோரிடம் இருந்தது. சீடர்கள் யூத நம்பிக்கையில் இன்னும் தொடருகின்றார்கள். ஆகவே, சிறுவர்களுக்கு இடம் மறுத்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து இடம் கொடுங்கள் என்று கூறி அவர்களுக்கு ஆசி வழங்கினார்.

ஆகாரும் பிள்ளையும் இடம் மறுக்கப்பட்டு விரட்டி விடப்பட்டனர். ஆனால், கடவுள் ஆகாரின் அழுகுரலைக் கேட்டார். அவர் மகனைப் பெரிய இனமாக்குவேன் என்ற ஆசியை வழங்கினார். ஆண்டவர் பிள்ளையுடன் இருந்தார் (தொநூ 21:14,16,20).

யூத சமூக வரையறையில் சிறுவர்கள் வெளியே நிறுத்தப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் போதனை சிறுவர்களை ஆலயத்திற்குள் நுழையச் செய்தது; ஆர்ப்பரிக்கச் செய்தது (மத் 21: 15, 16). இயேசு கிறிஸ்து போதகர் நடுவில் உட்காரவும், பேசவும், கேட்கவும், வினா எழுப்பவும் செய்தார் (லூக் 2 : 46). இயேசு கிறிஸ்துவின் மாதிரியை திருச்சபை பின்பற்றும் போது சிறார்களை இடம் மறுப்பிற்குரியவர்களாய்க் கருத முடியாது.

சிறுவர்களை இடறலுக்குரியவராய், இகழ்ச்சிக்குரியவராய், இடம் மறுப்பிற்குரியவர்களாய் திருச்சபை காணாமல் இறையரசுக்குரியோராய், இரக்கத்திற்குரியவராய், இறையாசிக்குரியவராய்க் கண்டு சிறியோரை திருமறைநிழலில் தயாரிக்க வேண்டும். 3யோவான் 4-ல் சொல்லப்படுகின்ற "என் பிள்ளைகள் உண்மைக்கேற்ப வாழ்ந்து வருகிறார்கள்" என்ற சான்றான வாழ்வால் வருகின்ற மகிழ்ச்சி இன்றைய திருச்சபையின் எதிர்பார்ப்பாய் அமையட்டும்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

# இந்தியத் திருச்சபைகளின் கூட்டமைப்பு

தென்னிந்தியத் திருச்சபை, வட இந்தியத் திருச்சபை ஆகிய ஐக்கிய சபைகள் திருச்சபை ஒன்றிப்புப் பணியைத் தங்களோடு நிறுத்திக் கொள்ளாமல் இதர திருச்சபைகளையும் ஒன்றிப்பு பணியில் ஈடுபட அழைத்தன.

இதனடிப்படையில் நடைப்பெற்ற பல்வேறு திருச்சபை ஒன்றிப்பு உரையாடல்களில் குறிப்பிடத்தக்கது இந்தியாவில் பேராயர் ஆளுகை முறையைப் பின்பற்றும் தென்னிந்தியத் திருச்சபை, வட இந்தியத் திருச்சபை, மலங்கரை மார்த்தோமா, சிரியன் திருச்சபை ஆகியவை இணைந்து உருவாக்க விழையும் இந்தியத் திருச்சபைகளின் கூட்டமைப்பு என்பதாகும். இதன் நோக்கம் இந்தியாவில் ஒரு பொதுவானத் திருச்சபை அமைப்பை உருவாக்குவது ஆகும்.

1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மூன்று திருச்சபை களிடையிலான ஒன்றிப்பு உரையாடலில் சிறிது தடங்கல் ஏற்பட்டது. ஆனால் மீண்டும் 1999 -ஆம் ஆண்டு இந்த ஒன்றிப்புப் பணி துரிதமடைந்தது.

1999 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி முதல் 14-ஆம் தேதிவரை கேரளாவில் சரல்குன்று என்னுமிடத்தில் நடைபெற்ற நிர்வாகக் குழு கூடுகையில் இத்தியத் திருச்சபைகளின் கூட்டமைப்பு என்ற பெயர் C.S.I., C.N.I., M.T.C. கூட்டுக்குழு என்னும் பெயருக்குப் பதிலாக பரிந்துரைக்கப்பட்டது. 2000-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைப்பெற்றக் கூடுகையில் இந்தியத் திருச்சபைகளின் கூட்டமைப்பு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஓர் உறுப்பியல் மற்றும் ஒரு நிலை இணக்க ஒருமைப்பாடு முறைகள் இல்லாத வேறு ஒரு முறை திருச்சபை ஒன்றிப்புக்கு பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் Communion அல்லது Koinonia முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொய்னோனியா (Koinonia) என்பதற்கு “ஐக்கியம்” என்பது பொருள். இந்தச் சொல் ஆவிக்குரிய புரிந்து கொள்ள முடியாத ஐக்கிய உறவைக்

குறிக்கும்; சமூகத்தில் சகோதர சகோதரிகளிடையே உருவாக்கப்பட்டு வெளிப்படுத்துகின்ற உறவை குறிக்கும். இந்திய திருச்சபைகளின் கூட்டமைப்பு கூட்டுக் குழுவின் சட்டத்திட்டங்களை திருத்தியமைத்தல், பொதுவானத் திருமறைக் கையேடு ஒன்றினை உருவாக்குதல், ஒரிசா மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளல், வாலிபர் மற்றும் பெண்களுக்கான கூடுகைகளை நடத்துதல், சமூக அரசியல் பிரச்சனைகளைக் கையாளுதல் முதலியவற்றில் கூட்டாக இணைந்து பணியாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புகிறது. இந்தியத் திருச்சபைகளின் கூட்டமைப்பு என்பது மூன்று திருச்சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுப் பெயர் அல்ல. மாறாக திருச்சபையின் ஒற்றுமைக்கு பாடுபடும் C.S.I., C.N.I., M.T.C. கூட்டுக் குழுவுக்குத் தரப்பட்ட மறுபெயராகும்.

தென் இந்தியத் திருச்சபை, வட இந்தியத் திருச்சபை, மார்த்தோமா திருச்சபைகளுக்கிடையிலான கூட்டுக்குழு உருவானதிலிருந்தே பல்வேறு கூட்டு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அவைகள் மூன்று திருச்சபைகளிடையிலான ஒருமைப்பாட்டுணர்வுகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்தன. முதல் கூட்டுக்குழு கூட்டத்தில் ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை நடைமுறையில் பார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். அத்தோடு உள்ளூரிலும், வட்டார அளவிலும், தேசிய அளவிலும் நமது பணித்திட்டங்களால் ஒற்றுமை வெளிப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. முதல் கூட்டுக்குழு திருச்சபைகளுக்கு விடுத்த வேண்டுகோளில் நற்செய்தி சொல்லப்படாத ராஜஸ்தான் போன்ற இடங்களில் நற்செய்தி அறிவிக்க கூட்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்; திருப்பணிக்கான பயிற்சி மற்றும் இறையியல் கல்வியில் கூட்டு முயற்சி ஏற்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது. ஒரே விசுவாசத்தை அறிக்கை செய்து, ஒரே நற்செய்தியை அறிவித்து, ஒரே திருமுழுக்கு மற்றும் திருவிருந்தில் பங்கெடுத்து மூன்று திருச்சபைகளும் இணைந்து செயல்படுவதால் மட்டும் கிறிஸ்துவின் கிருபையை வெளிப்படையாக அறிவித்துச் சான்று பகர இயலும் என நம்பினர். நவம்பர் மாதம் இரண்டாவது ஞாயிறு ஐக்கிய ஞாயிறு என்று ஐக்கிய சபையில் பங்கேற்கும் மூன்று திருச்சபைகளாலும் அழைக்கப்படுகிறது.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் விஜயன்**

**08-11-2015** *ஒன்றிப்பு ஞாயிறு*

# விளக்குத்தண்டின் மீதுள்ள விளக்கு

## LIGHT ON THE LAMP STAND

சக 4:1-14 1 கொரி 3 : 10-15

திபா 27 மத் 5:14-16

**"விளக்கை ஏற்றி .... விளக்குத் தண்டின் மீதே வைப்பர்." மத் 5: 15**

***இறைவேண்டல் :** ஒளியின் கடவுளே, இருளை அகற்ற உலகில் ஒளியாய் வந்த இயேசு கிறிஸ்துவுக்காக உமக்கு நன்றி சொல்லுகிறோம். நீர் எங்களுக்கு தந்திருக்கும் பன்மை நிலைகளுக்காக உம்மைப் போற்றுகிறோம். அனைத்துவிதமான வேறுபாடுகளையும் மேற்கொண்டு ஒன்றாய் இருக்க உம் ஆற்றல் தாரும். இந்த பன்மை நிலைகள் எங்கள் கூட்டுறவை ஒன்றுபடுத்தட்டும். இருள் எங்களை மேற்கொள்ளவிடாது உண்மையாய் ஒளிரும் விளக்குத் தண்டின் மீதுள்ள விளக்குகளாய் எங்களை மாற்றும். எங்கள் வழியாய் உலக இருள் அகல எங்களை உம் கருவிகளாக்கும். உன்னத ஒளியாம் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

ஒளி என்பது மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இயேசு கிறிஸ்துவை ஒளிக்கு ஒப்புமைப்படுத்திக் கூறும் தூய யோவான் அடிகளார் இயேசுவை உலகின் ஒளி எனவும், அந்த ஒளி இருளிலே ஒளிரக் கூடியது என்றும் எல்லா மக்களையும் ஒளிரவைக்கக்கூடிய ஆற்றலுள்ளதாகவும் இருக்கிறது என்கிறார் (யோவா 1 : 5,9). ஒளி அனைவருக்கும் பயன் தரக்கூடியதாக அமைய வேண்டுமெனில் அது உயரமான இடத்தில் வைக்கப்பட வேண்டும், அதைத்தான் விளக்குத்தண்டு (lamp post / stand) என்று இயேசு குறிப்பிடுகிறார். எனவே விளக்கை மரக்காலால் மூடிவைக்காமல், மலைமீதுள்ள நகரம் எளிதில் அடையாளப்படுத்தப்படுவது போல விளக்கையும் உயரமான இடத்தில் / வைக்க வேண்டும் என்று ஆலோசனை சொல்கிறார். கிறிஸ்துவாகிய ஒளியைப் பெற்று கிறிஸ்துவின் அடியவர்களாக வாழும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவாகிய விளக்குத்தண்டின் மீது ஒளிர வேண்டும். அங்ஙனம் ஒளிர்வதே நன்மை தருவதாக அமையும்.

***1. பயன் தரும் ஒளி :*** **(மத். 5:15)**

ஒளி ஒரு போதும் தனக்காக எரிவதில்லை, மாறாக அது பிறருடைய பயன்பாட்டிற்காகவே எரிகிறது. வீட்டிலுள்ள அனைவரும் வீட்டிலிருக்கும் விளக்கால் பயன் பெறுகின்றனர். மேலும் விளக்கு தன்னைக் கரைத்து பிறருக்கு ஒளி தருகிறது. தன்னைக் கரைத்து எரிகின்ற மெழுவர்த்தி ஒன்று மனிதரைப் பார்த்து ' மனிதா' உன் வாழ்வுக்காக என் வாழ்வைக் கரைத்துக் கொண்டிருக்கிறேன்; உன் வாழ்வினால் நன்மை பெற்றது எத்தனை பேர்? என்று கேட்பது போன்று காட்சி ஒன்று சித்தரிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவாகிய விளக்குத்தண்டில் ஒளிரும் ஒவ்வொருவரும் தம்மைக் கரைத்துப் பயனுள்ள வாழ்வு வாழ வேண்டியது அவசியமாகும். திருமுழுக்கு முனிவர் யோவானைக் குறித்து, எரிந்து சுடர்விடும் விளக்கு' என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். அதோடு அவரது ஒளியில் நீங்கள் சிறிது நேரமே களிகூர்ந்தீர்கள் என்று முழுக்கு முனிவர் யோவானின் ஒளி வாழ்வினால் முழுமையான பலனைப் பெறாத மக்களைக் கடிந்து கொண்டார் (யோவா. 5:35), முழுக்கு முனிவர் யோவான் தம்முடைய வாழ்வையே அர்ப்பணித்தார். இதனை கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் மிகுந்த விலைச்சலை அளிக்கும் என்கிறார் இயேசு (யோவா 12 :24). கிறிஸ்துவாகிய விளக்குத்தண்டில் ஒளிரும் ஒவ்வொருவரும் பிறருக்கு பயனுள்ள வாழ்வு வாழ ஆயத்தமாவோமாக.

***2. பாதை காட்டும் ஒளி :*** **(மத். 5:14)**

விளக்குத் தண்டின் மீது ஒளிரும் விளக்கு பாதைகாட்டும் ஒளியாக விளங்குகிறது. இஸ்ரவேலரது விடுதலைப்பயணத்தில் அவர்கள் இரவில் தடுமாறிச் சென்றுவிடாதபடி இரவில் ஆண்டவர் நெருப்புத்தூணாய் இருந்தார் (விப. 13:21). திருப்பாடகர் 'ஆண்டவரது வார்த்தை தமது காலடிக்கு விளக்கு'என்று முழங்குகின்றார் (திபா. 119: 105). அதே வேளை தாம் நடக்கின்ற பாதை சரியானது என்று தாமாகப் பாதைகளை வகுத்துச் செல்லும் போது ஒளி தடுத்தாட்கொள்கிறது என்பதையும் திருமறை தெளிவுபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக தூய பவுலார், தமது பாதை சரியானது என்று தீர்மானித்துச் சென்றவேளை ஒளியால் தடுக்கப்பட்டு கீழே விழுந்தார். அடுத்தார் உதவியின்றி அடுத்த அடி எடுத்து வைக்க இயலாதபடி வேதனைப்பட்டார் (திப 9:1-9). கடற்கரையில் ஒளிரும் கலங்கரை விளக்குக் கப்பலுக்குப்

பாதைகாட்டுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பினால் பாதை தெரியாமல் இருளில் உழன்று கொண்டிருந்த மக்கள் பெரிய ஒளியைக் கண்டு கொண்டார்கள் என்ற இறைவாக்கு நிறைவேறியதாக தூய மத்தேயு அடிகளார் குறிப்பிடுகிறார். (மத். 4:15). இன்று கிறிஸ்துவின் ஒளியூட்டப்பட்டு, கிறிஸ்துவாகிய விளக்குத் தண்டின் மீது எரிந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் பிறர் கிறிஸ்துவைக் கண்டு கொள்ள ஊடகங்களாகச் செயல்பட வேண்டும்.

### *3. நற்செயல்களால் வெளிப்படும் ஒளி :* (மத். 5:16)

கிறிஸ்துவின் ஒளியைத் தரிசித்து தங்கள் நற்செயல்களால் அதனை சமூகத்தில் வெளிப்படுத்த அழைக்கிறார் இயேசு. தூய யோவான் அடிகளார் தமது திருமுகத்தில் தூய்மையான உறவு வாழ்வுதான் ஒளிவாழ்வுக்கு அடிப்படையானது என்கிறார். இதனை, கடவுள் ஒளியாயிருக்கிறார் எனவும், அவருடைய பிள்ளைகள் ஒளியில் நடந்தால் ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்பர் என்றும் கூறுகிறார் (1 யோவா 1:7 ) இதற்கு ஒருபடி மேலே ஒளியில் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தம் சகோதர சகோதரிகளைப் பகைப்பவர்கள் பொய்யர் எனவும், அவர்கள் இருளிலே இருக்கிறவர்கள் எனவும் எச்சரிக்கிறார் (1 யோவா 1:9-11). தூய பவுலார்' ஒளி பெற்ற மக்களாய் வாழுங்கள் என்று அழைப்பு விடுக்கிறார். நற்செயல்களைச் செய்யாத கொடியவர்களிடமிருந்து ஒளி முற்றிலுமாகப் பறிக்கப்படும் என்று கடவுள் எச்சரிக்கிறார் (யோபு 38:15). ஒளியின் மக்களாய் வாழும் நம் ஒவ்வொருவருடைய நற்செயல்களும் பிறர் கிறிஸ்துவின் ஒளியைக் கண்டு கொள்ள காரணமாய் அமைய வேண்டும்.

அருள்திரு. A. **பிறைட் சாலமோன்**

**15-11-2015** *பெண் குழந்தைகள் ஞாயிறு*

# பெண் குழந்தையைப் பாதுகாத்தல்

## PROTECTING THE GIRL CHILD

யோபு 42:10-17 திப 16:16-18

திபா 45:8-14 மத் 15:21-28

**"இயேசு மறு மொழியாக அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது." மத். 15:28**

**இறைவேண்டல் :** ***இரக்கமுள்ள கடவுளே, பலமிழந்தவரை பலமுள்ளவராயும், புறக்கணிக்கப்பட்டோரை ஏற்கப்பட்டோராய் உம்திருமைந்தர் மாற்றியமைத்ததற்காய் உம்மை புகழுகிறோம். புறக்கணிப்பின் நிலைமையிலுள்ள பெண் குழந்தைகளை கரிசனையாய் ஏற்று புது நம்பிக்கை அருள்வீராக. நாங்களும் பெண் குழந்தைகளை சமூகத்தின் முழு அங்கத்தினர்களாய் ஏற்கவும், அவர்களுக்குரிய சமூக மரியாதை கிடைக்க உழைக்கவும் துணை தாரும். நீர் அவர்களில் வழங்கியுள்ள திறமைகள் சமூகத்தை வளமையாக்கும் வழிகளாகட்டும். வாழ்வுக்கு வழியாம் மீட்பர் இயேசு கிறிஸ்து வழி வேண்டுகிறோம். ஆமென்.***

இன்று நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகம். நவ நாகரிக உலகம். கணினிமயமாக்கப்பட்ட உலகம். ஆனால் தீமைகள் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்கிறோம். ஆணும் பெண்ணும் சமம், பெண்ணினம் விடுதலை பெற்றுவிட்டது, ஆணுக்கு நிகரான எல்லா வேலைகளையும் பெண் செய்கிறாள் என்று ஒருபுறம் கூறினாலும், பெண்ணினத்திற்கு உண்மையான விடுதலை கிடைக்கவில்லை என்றே கூறலாம். ஆணாதிக்கச் சமூகம் பெண்களைப் போகப்பொருளாகப் பார்க்கின்றது. ஊடகங்கள் தவறான கதாபாத்திரங்களாகப் பெண்களைச் சித்தரிக்கிறது. பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் முற்றுப் பெறாத ஒன்றாகக் காணப்படுகிறது. கோயில்களில் தேவதாசிகளாக பெண்கள், குழந்தைகள் இருந்த காலம் மாறி, கோயில் பூசாரிகளால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்து தூக்கி வீசி எறியப்படுகிறார்கள். குழந்தைத் திருமணம், தொழிற்சாலைகளில் பெண் குழந்தைகள் பணியமர்த்தப்படுதல், பெண் குழந்தை எனில் கருவறையையே கல்லறையாக மாற்றுதல், சரியான உணவு கொடுக்கப்படாமல் இருத்தல், கற்பழிக்கப்படுதல், குடும்பங்களில் உரிமைப் பங்கு பெண்களுக்குக் கொடாமல் இருத்தல் எனப் பெண்களின் பிரச்சனையை அடுக்கிக்கொண்டே போகலாம்.

டெல்லியில் நாடால் என்ற பகுதியில் பல பெண் குழந்தைகள் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட நிகழ்வு உலகத்தையே உலுக்கியது. சென்னையில் நீதிபதி உடன் பணியாற்றிய பெண் வக்கீலை கற்பழித்த நிகழ்ச்சி பெண்கள் இடையே பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. 5- வயது பெண் முதல் 60 வயது பெண் வரை பாலியல் கொடுமைக்கு ஆளாவதை ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

படைப்பாளராம் கடவுள் தம்முடைய சாயலாக மனிதனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் (தொநூ. 1 : 26, 27). ஆண்களைப் போல பெண்களும் இறைப்பணியைப் பல கோணங்களில் செய்திருப்பதை திருமறை சுட்டிக் காட்டுகின்றது. ஆக குடும்பங்களில் கடவுள் தந்திருக்கும் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளைப் போன்று பேணிக் காக்கப்பட வேண்டும்.

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில் என்பது குழந்தைகள் குறித்து திருமறை கூறும் உண்மை (திபா 127 : 3). ஆண் குழந்தையானாலும் சரி, பெண் குழந்தையானாலும் சரி, அது கடவுள் கொடுத்த உரிமைப் பேறு என்ற சிந்தனை மனுக்குலத்திற்கு வேண்டும்.

நம் நற்செய்திப் பகுதியில் பிற இனத்தவரான கானானியப் பெண் தன் மகளின் நலனுக்காக இறை மைந்தரின் பாதம் பணிந்து வேண்டுதல் செய்து பெற்ற நன்மையை சிந்திப்போம்.

### *1. பரமனை அறிந்திருந்தார்* (மத். 15 : 22)

இயேசு கிறிஸ்து யூத மக்களுக்கு விடுதலையாளர் மட்டுமல்ல, பிற சமூக விடுதலையாளர் என்ற நம்பிக்கையுடையவராய் காணப்பட்டார். இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்றும் தாவீதின் மகன் என்றும் அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்து பரிவு மிகுந்த கடவுள் என்பதை அறிந்திருந்தபடியினால் ஆண்டவரே தாவீதின் மகனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டார். பெண் குழந்தை என்று அந்த கானானியப் பெண் அந்த குழந்தையை வெறுத்து விடவில்லை, பேய்பிடித்து கொடிய வேதனைப்படுகிற குழந்தை என்று கைவிடவில்லை. குழந்தைக்கு விடுதலை வேண்டும் என்று கூப்பிட்டார். கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் உணவு கொடுப்பவர் நம் ஆண்டவர். நல்ல பதிலை கொடுப்பார் தன் மகளை பாதுகாப்பார் என அறிந்திருந்தார்.

### *2. பற்றுறுதியினால் பணிந்து கொண்டார்* (மத். 15: 25)

இயேசு கிறிஸ்து அவள் தன் பெண் குழந்தையின் மேல் வைத்திருந்த பாசத்தைக் கண்டார். பிள்ளையின் நலனுக்காக தன்னைத் தாழ்த்தினார். அவர் பாதத்தில் அர்ப்பணித்தார். இயேசு கிறிஸ்து தாழ்நிலையில் உள்ளவர்களுக்கு கருணை காட்டுபவர் என்பதை

அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து தன் மகளைப் பிடித்திருந்த பேயை துரத்தி விட வேண்டும் என்று வேண்டினார். இயேசு கிறிஸ்து அமைதியாக இருந்து விட்டு முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும் பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல எனக் கூறினார்.

இயேசு கிறிஸ்து இஸ்ரவேலரை தன் பிள்ளைகள் என்றும் பிற இனத்தவளாகிய தன்னை , தன் மகளை நாய்க்குட்டி என்றும் சொல்லியதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஏனெனில் யூதர்கள் பிற இனத்தவரை நாய்கள் என்றே கூறி வந்தனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யூதர்கள் பயன்படுத்திய சொற்றொடரை பயன்படுத்தினாரே தவிர அவரைக் கொச்சைப்படுத்த கூறவில்லை. இது அவரின் பற்றுறுதியை சோதிப்பதற்கு கூறியிருக்க வேண்டும். கானானியப் பெண் அழகிய பதில் ஒன்றை கூறுகின்றார். தன்னை நாய்க்குட்டியின் நிலைமைக்கு தாழ்த்துகிறார்.

உண்மை தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளைத் தின்னுமே என்றார் (மத். 15:27) இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளால் அவர் பற்றுறுதி குறையவில்லை. நாய்களைப் போல் நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று கூறுகின்றார். எச்சில் கிடைத்தால் அதுவே போதும். எச்சிலால் நாய் பிழைக்கும் உம் நாவின் சொற்கள் என் மகளுக்கு விடுதலை கொடுக்கும் என்று கூறுகின்றார்.

### *3. பற்றுறுதியால் பாராட்டப்பட்டார்* (மத். 15 : 28)

அம்மா, உம் நம்பிக்கை பெரிது என்று ஆண்டவர் பாராட்டினார். தாயின் பற்றுறுதி மகளுக்கு விடுதலை கொடுத்தது. நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். சமுதாய கட்டுப்பாடுகளை கடந்து கானானியப் பெண் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் பணிந்தார். இயேசு நாதரும் சமய சமூக கட்டுப்பாடுகளை அறுத்து கானானிய பெண்ணின் மகளுக்கு விடுதலை கொடுத்தார்; அப்பெண்ணை பாதுகாத்தார்.

அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் (யோவா. 1:12). அவராலேயன்றி வேறொருவராலும் மீட்பு இல்லை (தி.ப. 4 :42) இயேசு கிறிஸ்து யூதருக்கு மட்டும் மீட்பர் அல்ல. அவர் உலக மீட்பர் என வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்து கானானியப் பெண்ணின் மகளை தீயவனின் பிடியிலிருந்து பாதுகாத்தது போல் நாமும் நமது பெண் குழந்தைகளை சமுதாய தீமையிலிருந்து பாதுகாக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக! ஆமென்.

அருள்திரு **சார்லெட் சௌந்தரராஜன்**

**22-11-2015**

# வறுமைக்கான கிறிஸ்தவப் பதில்

## CHRISTIAN RESPONSE TO POVERTY

ஆமோஸ் 8 : 4-7 யாக். 2: 1-7

திபா. 145 லூக். 16 :19-31

**"..... மகனே நீ உன் வாழ் நாளில் நன்மைகளையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள் இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்." லூக். 16:25**

***இறைவேண்டல் :*** *வாழ்வின் கடவுளே! வறுமை, ஏமாற்றம், துன்பம் நிறைந்த உலகில் உம்மை பற்றும் பற்றுறதியில் வாழ அருள்தாரும். வறுமையில் வாழ்ந்தாலும் உம் பராமரிப்பை உணர அருள்தாரும். அனுதின உணவை தயவுடன் தந்து எங்களை ஆற்றல்படுத்தும். வறுமையில் வாடும் மக்களை கரிசனையோடு வழிநடத்தவும் வாழ்வில் வளமையை உருவாக்கவும் திருச்சபை செயல்படவும், கிறிஸ்துவுக்கு சான்றுடன் வாழ்ந்திட தகுதிப்படுத்திட தாழ்மையுடன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டுகிறோம். ஆமென்.*

இங்கு இலாசர் ஏழையின்பிரதிநிதியாகவும், செல்வந்தன் செல்வந்தர்களின் பிரிதிநிதியாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். செல்வந்தனின் சுயநலம், இரக்கமின்மை, சகோதரத்துவமின்மை ஆகியவை இங்கு வெளிப்படுகிறது. வறுமை, கடவுளுக்கும் மானுடத்திற்கும் எதிரானது. கடவுள்-மனிதன், மனிதன் - மனிதன் என்ற உறவைச் சிதைக்கிறது. அறவாழ்வு பாதிப்பு அடைகிறது.

வறுமை என்பது பொருளாதார பிரச்சனை மட்டுமல்ல அது சமய, சமூக, கலாச்சார, பொருளாதார, ஆன்மிகம் சார்ந்த பிரச்சனையே ஆகும். வறுமை கடவுளால் படைக்கப்படவில்லை. சமூக அவலங்களின் பக்க விளைவே வறுமை. 1995-இல் UNO (ஐக்கிய நாடுகள் நிறுவனம்) கோபென்ஹேகன் என்ற இடத்தில் நடைபெற்ற சமூக முன்னேற்ற மாநாடு (World summit for social Development) ஒரு செயல் திட்டத்தை உருவாக்கியது. அதன் அடிப்படையில் 1996-ம் ஆண்டை அனைத்துலக வறுமை ஒழிப்பு ஆண்டு என்று கடைப்பிடித்தது. தொடர்ந்து 1997 முதல் 2006 வரையுள்ள 10 ஆண்டுகள் வறுமை ஒழிப்புக்கான ஆண்டுகளாக திட்டமிடப்பட்டது. ஆனால் இன்னும் வறுமை தீர்ந்தபாடில்லை. 37 சதவீதம் மக்கள் வறுமை கோட்டிற்குள் வாழ்கிறார்கள். வறுமையுள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 138 -வது இடத்தைப் பெற்றுள்ளது. இத்தகைய

சூழலில் இன்றைய திருமறைப்பகுதிகள் உணர்த்தும் வறுமைக்கான கிறிஸ்தவ பதிலைச் சிந்திப்போம்.

### *1. சுயநலம் தவிர்த்தல் வேண்டும் :* (லூக். 16:19)

செல்வந்தன் விலை உயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். வாசல் அருகே இலாசர் என்னும் ஏழையும் இருந்தார். இலாசர் செல்வந்தனின் மேசையிலிருந்து விழும் உணவு துண்டுகளால் தன் பசியை ஆற்ற விரும்பினார். ஆனால் அதுவும் கிடைக்காமற் போனது. இதற்கு காரணம் செல்வந்தனின் சுயநலமே ஆகும்.

எட்டாம் நூற்றாண்டு தீர்க்கதரிசியாகிய ஆமோசின் பணி செல்வந்தர்களின் சமூகவாழ்வில் காணப்பட்ட சுயநலத்தைக் காண்பிக்கிறது (ஆமோஸ். 8:5) பட்டண வாழ்வும், வாணிபமும், பேராசையும், சுயநலமும் பெருகியிருந்த காலத்தில் சுயநலவாதிகளால் வறியவர்களாக்கப்பட்ட ஏழை மக்களுக்காக ஆமோஸ் இறைவாக்கினர் சிங்கம் போல் கர்ச்சித்து எழுந்தார். சமயவாழ்வில் ஏழைகளை மதிக்காமல் செல்வந்தர்களைச் சார்ந்து நிற்கும் சுயநலத்தையும், திருமறை சுட்டிக்காட்டுகிறது (யாக். 2:1-7). சுயநலமில்லாதோர் மீட்பு அடைய முடியும் என்கிறார் இயேசு கிறிஸ்து. நாம் ஏழைகளைக் கண்டால் ''ஐயோ பாவம்'' என்கிறோம். இயேசு கிறிஸ்துவோ ஏழைகள் பேறுபெற்றோர் என்கிறார். செல்வமுடையோரை ''ஐயோ, கேடு!'' என்கிறார். செல்வத்தால் ஆடம்பரத்தோடு வாழ்ந்து களிப்புற்றிருப்பது சுயநலத்தை வளர்க்கும்; அடுத்திருக்கும் வறியவர்களைக் காணும் பார்வையை அகற்றும். எனவே, சுயநலம் தவிர்த்து பிறர்நலம் பேணுவது வறுமையை அகலச் செய்யும்.

### *2. பகிர்தல் வேண்டும்* ( லூக். 16 : 21)

இலாசர் செல்வந்தனின் மேசையிலிருந்து விழும் உணவினால் தம் பசியை ஆற்ற விரும்பினார். ஆனால் உணவு அவருக்குப் பகிரப்படவில்லை. தருமம், ஈகை, உதவி, நிவாரணம், காணிக்கை ஈதல் போன்ற உயரிய மனிதநேயப் பண்புகள் குறைந்து கொண்டிருக்கும் காலத்தில் இயேசு கிறிஸ்து ஓர் இளைஞரிடம் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு, அப்பொழுது விண்ணகத்தில் செல்வராய் இருப்பாய், பின்பு என்னைப் பின்பற்று என்றார் (மத். 19:21). இங்கு செல்வத்தைப் பகிர்ந்தளிப்பது வறுமையை ஒழிக்க உதவும் என்று இயேசு கிறிஸ்து கற்றுத் தருகிறார்.

தொடக்ககால திருச்சபையிலும் எளியவர்கள் ஆதரிக்கப்பட்டனர். கிறிஸ்தவ ஈகை என்னும் நற்பண்பு உதயமானது. மேலும் பொதுவுடைமைக் கருத்து திருச்சபையில் வலியுறுத்தப்பட்டது. (தி.ப. 2:44,45;4:34,35). விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை அல்ல, தேவைகளை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை வாழ திருத்தூதர்கள்

அழைத்தனர். தூய பவுல் கடினமாக உழைத்து பொருள் ஈட்டி அதனை வறியவர்களுடன் பகிர்ந்து கொண்டார் (தி.ப. 20:33-35). பெறுவதை விடக் கொடுப்பதே நலம் எனப் போதித்தார். பேராயர் Dom Helder camara கூறுகிறார்.

"When I give food to the poor, They call me a saint, But When I ask why the poor have no food, They call me a Communist"-

பகிர்தல் என்பது இங்கு பொருத்தமுடையதாக அமைகிறது. உள்ளவன் இல்லாதவன் (Have and Have not) என்ற வேறுபாட்டை களையச்செய்கிறது. இது வறுமை நிலை நீங்க வழிகாட்டுகிறது.

### *3. சகோதரத்துவத்தை வலுப்படுத்த வேண்டும் :*

**(லூக். 16 : 24)**

செல்வந்தன் பூமியில் வாழ்ந்த போது வாசல் படியில் கிடந்த இலாசருவைச் சகோதரனாக நினைக்கவில்லை. தனக்கிருந்த 5 சகோதரர்களிடமும் கொண்ட கரிசனையை தனக்கு அறிந்திருந்த, வேதனையோடிருந்த இலாசருவிடம் காட்டவில்லை. இங்கு உண்மையான சகோதரத்துவத்தைச் செல்வந்தர் வெளிப்படுத்தவில்லை. "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்." என்ற மகாகவி பாரதியாரின் கூற்று இங்கு பொருத்தமுடையது.

நாம் வாழும் உலகில் சகோதரத்துவத்தை வலுப்படுத்துகின்ற பொழுது செல்வந்தன், ஏழை என்ற நிலை மாறி சமநிலை ஏற்படும். "மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புற வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக எல்லாரும் சமநிலையில் இருக்க வேண்டுமென்றே சொல்லுகிறோம். இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது. அவர்களுடைய குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும் போது உங்கள் குறையை நீக்குவார்கள். இவ்வாறு உங்களிடையே சமநிலை ஏற்படும்." என்ற கூற்று வறியவர்கள் மீது சகோதரத்துவ உணர்வை உருவாக்குகிறதாய் அமைகிறது (2கொரி. 8 : 13,14). தங்களை மனமுவந்து வறுமைக்கு அளித்த லேவியரின் குலத்தில் தான் இயேசு கிறிஸ்து தலைமைக் குருவாக வந்தார். ஓர் ஏழையாக வெளிப்பட்டார். இதைக் குறித்து தூய பவுல் சொல்லும்போது "நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருட்செயலை அறிந்திருக்கிறீர்களே. அவர் செல்வராய் இருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையில் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" என இயேசு கிறிஸ்து மனுக்குலத்தோடு தம்மை இணைத்த நிலையை விளக்குகிறார் (2கொரி. 8: 9). நாமும் சகோதரத்துவத்தை வலுப்படுத்தி வறுமையை ஒழிப்போம்.

அருள்திரு. **J. நசல் ஐசக்**

**29-11-2015** *வருகையின் ஞாயிறு*

# நற்செய்தியின் கொண்டாட்டம்

## (மரியாள் எலிசபெத் சந்திப்பு)

## CELEBRATING THE GOOD NEWS

## (Meeting of Mary with Elizabeth)

விப 2 : 1-10 திப 9:10-18

திபா 117 லூக் 1:46-56

**"எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்ட பொழுது அவருடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று."** லூக் 1:41

**இறைவேண்டல் :** *உம் திருமகனின் பிறப்பிற்காய் மரியாளை தெரிந்தெடுத்த அன்புக்கடவுளே! உமது அழைப்பை தெளிவாகப் புரிந்துகொண்டு தன்னையே அர்ப்பணித்த மரியாளைப் போன்று நாங்களும் எங்களை அர்ப்பணித்து வாழ வழிகாட்டும். மரியாவும், எலிசபெத்தும் ஒருவரையொருவர் சந்தித்து வாழ்த்தி இறைமகன் இவ்வுலகத்தில் வரவிருக்கின்றார் என்ற நற்செய்தியை கொண்டாடினதைப் போல நாங்களும் கொண்டாட அருள்தர வேண்டுமென்று அடிமையின் உருவாய் வந்த இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

மீட்பரின் பிறப்பைப் பற்றிய மங்களச் செய்தியைப் பெற்றுக் கொண்ட மரியாள் மகிழ்வதையும் மீட்பரின் வருகையைப் பற்றி அறியவந்த எலிசபெத்து மகிழ்வதையும் மேசியாவின் உடனிருப்பைஉணர்ந்து தன் வயிற்றிலுள்ள குழந்தை அக்களிப்பால் துள்ளியதையும் நற்செய்திப் பகுதியில் படிக்கின்றோம்.

ஈரமான இதயங்கள் துன்பங்களையும், துயரங்களையும் பார்ப்பதில்லை ! இதயங்களின் உறவுகளையே பார்க்கிறது. எலிசபெத்துக்கு உதவி தேவைப்படுகிறது என்று அறிந்தவுடன் தனது துன்பத்தைப் பார்க்காமல் உதவிட ஓடிவந்தவர்தான் இந்த மரியாள். ஒரு ஆண் ஒரு பெண்ணைப் புரிந்து கொள்வதை விட, ஒரு பெண் தான் அடுத்தப் பெண்ணை புரிந்து கொள்ள முடியும் என்பார்கள். இது மரியாள் எலிசபெத்து சந்திப்பில் உண்மையாகிறது. மரியாள் எலிசபெத்து என்ற இரண்டு உள்ளங்களின் மகிழ்வு, நான்கு கண்களின் சந்திப்பு. இது இனிய உறவின் இதய சந்திப்பாக அமைந்தது.

மரியாள், எலிசபெத்து சந்திப்பு உறவு சார்ந்த சந்திப்பு, உள்ளங்கள் சந்தித்த சந்திப்பு. இந்த சந்திப்பில் நற்செய்தி எப்படி கொண்டாடப்படுகிறது என்று தியானிப்போம்.

***1. உடன் இருப்பில் :*** **(லூக் 1:39,40)**

மரியாள் எலிசபெத்தை சந்தித்து உடன் இருந்து வாழ்த்துகிறார். கலிலேயாவிலிருந்து சமாரியாவைக் கடந்து யூதேயாவுக்குச் சென்று வாழ்த்துகிறார், இது வாழ்த்துச் செய்தியல்ல, வாழ்த்துச் செயல். முதிர்ந்த வயதில் கர்ப்பிணியாக இருக்கும் எலிசபெத்துக்கு ஒரு பெண்ணின் உடன் இருப்புத்தேவை என உணர்ந்து நீண்ட தூரம் பயணப்பட்டு வருகிறார் மரியாள். மரியாள் சுமார் மூன்றுமாதம் எலிசபெத்தோடு இருந்தாள் என அறிகின்றோம் (லூக் 1:56). இந்த சந்திப்பில் சொன்ன வாழ்த்து சாதாரணமானது அல்ல, அது உறவு சார்ந்தது; அது உயிரூட்டமுள்ள வாழ்த்து. ஆகவேதான் எலிசபெத்தின் வயிற்றிலுள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளியது (லூக் 1 :41). எலிசபெத்தை தூய ஆவியால் ஆட்கொள்ளச் செய்தது. ஆம், அங்கே நற்செய்தி கொண்டாடப்படுகிறது. நற்செய்தியாம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு உலகை சந்தித்து வாழ்த்து கூறிய கடவுளின் உடனிருப்பு. "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசா 9 :2) என்ற இறைவாக்காளர் ஏசாயாவின் அருள் வாக்கு நற்செய்தியாம் இயேசு கிறிஸ்துவின் உடனிருப்பு. இத்தகைய உறவில் உடன் இருப்பில் நற்செய்தி கொண்டாடப்படுகிறது.

***2. உதவி செய்வதில் :*** **(லூக் 1 : 46-55)**

நீண்டபயணம் மேற்கொண்டு வந்த மரியாள் மூன்று மாத காலம் எலிசபெத்தோடு இருந்து விருந்துண்டு செல்வதற்காக அல்ல முதிர்ந்த வயதில் நிறைமாத கர்ப்பிணியாய் இருக்கும் எலிசபெத்துக்கு உதவியாக இருந்து பணிவிடை செய்து, நற்செய்தி கொண்டாடவே. மரியாளின் பாடல்களை உன்னிப்பாக பார்க்கும்போது (லூக் 1: 46-55) எலிசபெத்துக்கு அவரால் நிறைவேற்றப்பட்ட உதவிகள் வெளிப்படுத்தப்படுகிறது. ஆம் நற்செய்தியாய் இவ்வுலகில் வந்த இயேசு கிறிஸ்து பணிவிடை செல்பவராக வெளிப்பட்டார் ( யோவா 13 : 14-15). கிறிஸ்துவின் பிறப்பாலும் சந்திப்பாலும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட, பாமர மக்கள் ஏழைகள், நோயாளிகள், இடையர்கள், போன்றோர் இறையாட்சியின் முதல் குடிமக்கள் என்ற உயர்வடைவதும் நற்செய்தியின் கொண்டாட்டமே.

மரியாள் எலிசபெத்து சந்திப்பில் உள்ளான உடனிருப்பும். உண்மையான பணிவிடையும் இருந்தது. அதுவே நற்செய்தியின் கொண்டாட்டம்.

நாம் இன்று ஒருவரை ஒருவர் சந்திக்கும் சந்திப்பில் நற்செய்தி கொண்டாடப்படுகிறதா? சில சந்திப்புக்கள் சங்கடத்தை உருவாக்குகிறது. சில சந்திப்புக்கள் சந்தேகத்தை உருவாக்குகிறது. சில சந்திப்புக்கள் அச்சத்தை தருகிறது. நம் சந்திப்புக்கள் ஒருவரில் ஒருவர் உடனிருக்கவும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதிலும் முதிர்ச்சியடைய வேண்டும். அப்போது மட்டுமே நம் உள்ளங்களில் இயேசு கிறிஸ்து பிறக்க முடியும் அதற்காக நம்மை இந்த வருகையின் காலங்களில் ஆயத்தப்படுத்துவோம். வருகைதரும் ஆண்டவரை சந்தித்து நிறைவாழ்வை நிலைவாழ்வை சொந்தமாக்கிக் கொள்வோம் ஆமென்.

அருள்திரு. S. M. **டேனியல் தேவதாசன்**

# உயர்வுக்கு வழி

திருமறைப்பாடம் : தொநூ 41:37-45

**"......நீரே என் அரண்மனையின் பொறுப்பை ஏற்பீர். உம் வார்த்தைக்கு என் மக்கள் எல்லோரும் அடிபணியட்டும்"** தொநூ. 41:40

சில மாதங்களுக்கு முன்பு அரசுத் தேர்வின் வழியாய் அரசு அதிகாரிகள் (பணியாளர்கள்) அரசுப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். அதில் சிலர் தவறான வழியில் வினாத்தாளைப் பெற்று, பணம் கொடுத்து அதிகாரிகளாய் மாறியதாக ஒரு வழக்கு நிலுவையில் இருப்பதை த நாம் அறிவோம். ஆனால் திருமறையில் யோசேப்பு என்ற இறையடியார் நேர்மையான முறையில் வாழ்ந்து, தனக்குக் குடியுரிமை இல்லாத இடத்தில், தான் எண்ணிப்பார்க்காத நிலையில், ஆண்டவரின் இரக்கத்தால் அதிகாரியானார் எனத் திருமறை கூறுகின்றது.

### *யோசேப்பு :*

யாக்கோபின் பதினொன்றாவது மகன். இவர் தாயார் பெயர் ராகேல். தந்தையினால் அதிகம் நேசிக்கப்பட்டவர். தந்தை இவருக்கு பலவர்ண அங்கியைக் கொடுத்து, அன்பு காட்டியதால் உடன் பிறந்த சகோதரர்களின் எதிர்ப்புக்கு உள்ளானார். இந்த எதிர்ப்பு யோசேப்பை எகிப்தின் சிறை வரைக்கும் கொண்டு சென்றது.

### *யோசேப்பு பெற்ற உயர்வுகள் :*

தொநூ 41:38 "இறையாவி பெற்றுள்ள இவரைப்போல் (யோசேப்பு) வேறெவரையும் நாம் காண முடியுமோ"? என்ற சான்று.

41:39 சிறந்த மதிநுட்பமும் (விவேகம்) ஞானமும் உள்ளவர் என்ற சான்று.

41:42 அரசரின் முத்திரை மோதிரம் பெற்றார்.

41:43 அனைவரும் இவருக்கு முழந்தாளிட்டு மதிப்பு கொடுக்கும் பேறுபெற்றார்.

இவ்வாறு எத்தனை எத்தனை சிறப்புகள். சொந்த சகோதரர்களால் வெறுக்கப்பட்டு, விற்கப்பட்ட, இந்த யோசேப்பு இவ்வளவு பெரிய அதிகாரியாக மாற என்ன செய்தார்.

***யோசேப்பின் பண்புள்ள வாழ்க்கை :*** (தொநூ 43 : 30)

நமக்கு அண்மையில் உள்ள சிங்கப்பூர் நாடு 1946 - இல் இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. 1963 ச.கி.மீ. மட்டுமே கொண்ட சிங்கப்பூரில் எந்த விளைபொருளும் கிடையாது. நாட்டைச்சுற்றி நான்கு பக்கமும் கடல். வறுமை, வேலையின்மை, தொழிற்சங்கங்களின் தாள முடியாத தொந்தரவு, குடிப்பதற்குத் தண்ணீரைக் கூட பக்கத்து நாட்டில் இருந்து கடன் வாங்கும் நிலை. இந்தப் பரிதாப நிலையில் இருந்து இருபத்தைந்தே ஆண்டுகளில் சிங்கப்பூர் வளர்ந்து காட்டியது. ஜப்பானுக்கு அடுத்தபடி மிகுந்த தனிநபர் வருவாய் உடைய நாடாக அது உருவாகக் காரணம் ''பண்புவளம்'' தான். மனித குலத்தில் ஒரு மனிதனின் உயரிய குணம் எதுவெனில் ''பிறர் துயரில் பங்கேற்பது'' தான். மிகவும் தாழ்ந்த குணம் பிறர் துயரைப் பரிகாசம் செய்வது. பிறப்பின் காரணமாக மனிதர்கள் தாழ்வடைவதில்லை. குணத்தாலும், செயலாலும் தாழ்வடைகிறார்கள். யோசேப்பு, தனக்கு தீங்குக்கு மேல் தீங்கு செய்த தம் சகோதரர்கள், தமக்கு முன்பாக வெறுமையாய் நின்ற போது அவர்கள் மீது கோபப்படாமல், அவர்களின் நிலைமையை எண்ணி உணர்ச்சி வசப்படுகிறார்; இரக்கம் செய்கிறார்.

***யோசேப்பின் சிறப்பான பண்புக்கு சில எடுத்துக்காட்டுகள் :***

H தந்தை (யாக்கோபு) பிற சகோதரர்களைப் பார்த்துவா என்றதும் கீழ்ப்படிந்து செல்லும் (37 : 14) நல்ல கீழ்படிதலின் பண்பு.

H போத்திபாரின் வீட்டில் உண்மைக்கு மாதிரியான பண்பு. (39 : 1, 23)

H பார்வோனுக்கு நல் ஆலோசனை சொல்லும் திறமையான பண்பு.

H பஞ்சத்தில் அரசை நிர்வகிக்கும், நிர்வாகத் திறமை

சகோதரர்களை ஏற்றுக்கொள்ளும், கடவுளின் குணம் (மன்னிப்பு)

இவ்வாறு நல்ல பண்புகளைக் கொண்டதால் யோசேப்பு உயர்வுக்கு நேராய் வழிநடத்தப்பட்டார். ஒரு முறை வீதி வழியே ஆபிரகாம் லிங்கன் போய்க் கொண்டிருந்தபோது எதிரே வந்த ஒரு குதிரை வண்டிக்காரன் வணங்கினான். '' ஐயா உங்கள் பொருள் ஒன்று நீண்ட நாட்களாகவே என்னிடம் உள்ளது. உங்களைத் தேடித் தேடிக் கடைசியாக இன்று தான் கண்டுபிடிக்க முடிந்தது.'' என்றான். ஆபிரகாம் லிங்கன் அதற்கு முன் அந்த மனிதனைப் பார்த்ததும் இல்லை, அவனிடம் எந்தப் பொருளையும் கொடுத்ததும் இல்லை. இருந்தாலும் கேட்டு வைப்போம் என்று எண்ணி, ''அப்படி என்னப்பா என் பொருள் உன்னிடம் இருக்கிறது ?'' என்று கேட்டார். உடனே அவன் ஒரு மழுங்கிப் போன கத்தியை எடுத்து நீட்டி,

"இது தான் உங்களுக்குச் சொந்தமானது" என்றான். "இது என்னுடையதா?" என்று திகைப்புடன் கேட்டார் லிங்கன். "ஆமாம் ஒரு பெரியவர் என்னிடம் இந்தக் கத்தியைக் கொடுத்து, நீ காணும் மனிதர்களில் அழகில்லாதவர் யாரோ அவரிடம் இதைக் கொடு" என்று கூறினார். அழகில்லாதவர் யார் என்று இத்தனை நாளும் தேடினேன். கடைசியில் உங்களைத்தான் கண்டுபிடிக்க முடிந்தது என்று கூறினான். இந்த நிலையில் அந்த மனிதன் மீது சற்றேனும் கோபப்படாமல், நன்றி என வாங்கிக் கொண்டார். இந்த நல்ல குணம் தான் ஆபிரகாம் லிங்கனைப் பெரிய அதிகாரியாய் மாற்றியது. அதுபோல, நல்ல பண்பு யோசேப்பை நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தது.

### *யோசேப்பின் சோராத மனம் :*

"சிலுவையின்றிச் சிம்மாசனம் இல்லை, வலி இல்லாமல் துன்பம் இல்லை" என்பார்கள். அதைப்போன்று சோதனையான சமயங்களில் சோர்ந்து போகாமல் இருந்தால் தான் உயர்வைப் பெற முடியும். கிராமப்புற விளையாட்டுப் போட்டிகளில் வழுக்கு மரம் ஏறும் போட்டி எல்லோரையும் கவரும் போட்டி. இப்போட்டியில் மரம் ஏறுபவர்கள் இலகுவாய் ஏற முடியாது. மரத்தில் வடியும் எண்ணையைத் தாண்டி, முகத்தில் அடிக்கும் தண்ணீரைக் கடந்து உச்சத்துக்குச் சென்றால் பண முடிச்சு நிச்சயம். சோர்ந்து போவோர் கீழே வந்து விடுவர். சோராத மனம் உயர்வு பெறும்.

***யோசேப்பு சோர்ந்து போகவில்லை என்பதற்கான எடுத்துக்காட்டு :***

- தந்தை சொன்னபடி சீகேமுக்கு சகோதரர்களைப் பார்க்கச் செல்கிறார், அங்கே காணவில்லை. தோத்தானை நோக்கி மீண்டும் நடக்கிறார். யோசேப்பு சோர்ந்து போகவில்லை.
- சகோதரர்களின் கிண்டல்களில் (சொப்பனக்காரன்) சோர்ந்து போகவில்லை.
- போத்திபாரின் கொடுமையிலும் சோர்ந்து போகவில்லை.
- சிறைவாழ்க்கையைக் கண்டும் சோர்ந்து போகவில்லை.

ஆக, துன்பங்களைக் கண்டு சோர்ந்து போகாத நிலை யோசேப்பை உயர்வுக்கு நேராய் கொண்டு வந்தது. வெள்ளம் பெருக்கெடுத்து வந்த பிறகு தான் நதி சுத்தமாகும். பெரிய பெரிய துன்பங்களைச் சந்திக்கும்போதுதான் மனம் தெளிவாகிப் பக்குவம் கிடைக்கும். துக்கப்படுகிறவர்களே பொறுமையாய் இருங்கள். ஏனெனில், சூரியன் மேகங்களுக்குப் பின்னே மறைந்திருக்கிறான். மேகங்களுக்கு அஞ்ச வேண்டாம். துன்பம் அடைந்து

விட்டோம் என்று துவண்டு விடாதீர்கள். சிறைச்சாலைக்குத் தள்ளப்பட்ட யோசேப்பு தான் தேசத்தையே ஆண்டார் என்பதை மறந்துவிட வேண்டாம். சோராத மனம் இறைவனிடம் கேட்போம்.

கடலுக்கு அடியில் உள்ள சிப்பிக்குள்ளே சிறு பூச்சிகள் சந்தோசமாய் வாழுமாம். திடீரென்று, ஒருநாள், தேவையில்லாத மணல்கள் வந்து பூச்சிகள் இருந்த இடத்தில் வந்து நெருக்குமாம். அப்பொழுது பூச்சிகள் துடிக்கும், வேதனையில் கண்ணீர் விடும், இது என்ன கொடுமை என்பது போல் கலங்கும். ஆனால் இந்த துன்பம் நிரந்தரம் இல்லை. காரணம் அந்த பூச்சியும், மணலும் இணைந்து, ஒரு நாளிலே அழகான முத்தாய் மாறிவிடுகிறது. துன்பத்தில் சோராத சிறு பூச்சிகள் முத்தாய் மாறுகிறது. நாம் துன்பத்தில் சோர்ந்து போகாதிருப்போம். (எபே 3 : 13, உரோ 12 : 12; யாக் 5 : 13)

கொஞ்சகாலம் சோதனைகளினாலே துக்கப்படுவீர்கள், நிறைவிலோ, புகழ்ச்சியும், கனமும், மகிமையும் வந்து சேரும் (1பேது. 1:6-7) அப்படியே யோசேப்பின் நல்ல குணமும், சோர்ந்து போகாத மனமும் அவரை உயர்த்தியது. உலகத்தை மீட்ட இயேசு கிறிஸ்துவும் சிலுவைப் பாடுகளில் சோர்ந்துபோகவில்லை. பாடுபட்டார்; துன்பமேற்றார், சிலுவையில் அறையப்பட்டார். அது உலகத்தின் மீட்பிற்கு வழி திறந்தது. நாம் பண்புள்ளவர்களாய், சோராத உள்ளத்தோடு வாழ்ந்து உயர்வு பெறுவோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

**06-12-2015**

***வருகையின் இரண்டாம் ஞாயிறு & விவி□ய ஞாயிறு***

# இறைவாக்கு : தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே

## WORD OF GOD : INSPIRED TO INSPIRE

1அர 19 : 1-21 திவெ 10 : 1-11
திபா 119 : 33-40 லூக் 1 : 39-45

**“உம் கட்டளைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும்...”** திபா 119:35

***இறைவேண்டல் :*** *எல்லாவற்றையும் படைத்து செயல்படுத்தும் கடவுளே, அனைத்து படைப்புகளும் உமது வார்த்தைகளால் வடிவம் பெற்றன. எழுதப்பட்ட உம் திருவார்த்தைகளைக் கற்று அவற்றால் தூண்டப்படும்போது எங்கள் வாழ்வில் மாற்றத்தைக் கண்டு அவைகளினூடாக பிறர் தூண்டப்படவும் அருள்தாரும். உம் திருவார்த்தையைக் கற்றுக் கொள்ளும் ஆற்றல் தந்து, எங்களைச் சீர்படுத்த, துணைசெய்ய மனிதராய் வடிவம் பெற்று உலகில் வந்த வார்த்தையாம் இயேசு கிறிஸ்து வழி வேண்டுகிறோம். ஆமென்.*

‘வார்த்தை’ (Word) என்பது செயலையும் அதைத்தொடர்பு படுத்தலையும் குறிக்கிறது. ஒரு மனிதனின் குணநலனும், விருப்பமும் வார்த்தையில் வெளிப்படுவது போல இறைவாக்கு கடவுளை வெளிப்படுத்துகிறது. இறைவாக்கு பற்றி திருமறையிலும் கிறிஸ்தவத்திலும் மூன்று கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அவை :

i. இறைவாக்கு என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. அதாவது, இறைவாக்கு மனிதர் ஆனார். இங்கு கடவுளின் விருப்பம் (Will), நோக்கம் (Purpose), தன்மை (Nature) ஆகியவை இயேசு கிறிஸ்து வழியாக வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டன என்று விளக்கப்படுகிறது.

ii. இறைவாக்கு என்பது இயேசு கிறிஸ்துவாகிய நற்செய்தியைக் குறிக்கிறது. இது இயேசு கிறிஸ்துவைக் குறித்த செய்தி. இது இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, இறப்பு, உயிர்த்தெழுதல் வழி கடவுள் எதை நிறைவேற்றினார், எதை உலகுக்கு தெரியப்படுத்தினார் என்பதைக் குறிக்கிறது.

iii. இறைவாக்கு என்பது முழுத் திருமறையையும் குறிக்கிறது. திருமறையில் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான காட்சியை உறுதிப்படுத்துவதும் (Setting the Scene of the advent of Christ), அவருடைய வருகையின் நிகழ்வைக் கூறுவதும், இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், இறப்பும், உயிர்த்தெழுதலும் பற்றுறுதியாளர் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பற்றுறுதியாளர் வாழ்வில் விசுவாச ஒழுங்கு முறையாக தரப்பட்டிருக்கும் திருமறை கடவுளின் வார்த்தை என்பது நமது நம்பிக்கை. திருமறை இறைவனிடமிருந்து வந்தது (Scripture as divine Origin) என்பது உண்மை. ஏனெனில், அது கடவுளால் தூண்டப்பெற்றது. தூய ஆவியரின் தூண்டுதலால், மனிதர் கரங்களால் எழுதப்பட்டது. “மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது” (2 திமொ. 3 : 16).

பொய்யுரையாத கடவுள் (எபி. 6 : 18), இறை வார்த்தையின் வழியாகப் பேசுகிறவராய் இருக்கிறார். தூய பவுல் தெசலோனிக்கே மக்களுக்கு எழுதினபோது, ‘‘உண்மையாகவே அது கடவுளுடைய வார்த்தைதான்; அதுவே நம்பிக்கை கொண்ட உங்களில் செயலாற்றுகிறது” என்கிறார். ‘இறைவாக்கு’ விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாய், வழிகாட்டியாய், இறை தூண்டுதலைத் தருவதாய் அல்லது தாக்கத்தை ஏற்படுத்துகிறதாய் காணப்படுகிறது. இந்த இரகசியத்தை உணர்ந்தவர்கள், அவர்கள் வாழ்க்கையில் ஒழுங்குகளை (discipline) உடையவர்களாய் இருப்பர். இறைவார்த்தை என்பது தூண்டுதல் தருவதற்காகவே தூண்டப்பட்டு தரப்பட்டிருக்கிறது. சில தூண்டுதல்களை இங்கு சிந்திப்போம்.

### 1. *இறைவார்த்தை வாழத் தூண்டுகிறது :* (1அர. 19:1-21)

திருமறை எளிய சிந்தனை மிகுந்த கேள்விகளோடு வாழத் தூண்டுகின்றது (Bible inspires us to live with simple and thoughtful questions).

எலியாவிற்கு அது அதிர்ச்சியான செய்தி. வாழ்க்கையை குறித்த பயம், தனிமை, பாலைநிலப் பயணம், களைப்பு வருகிறது. இந்நிலையில் தட்டி எழுப்பப்பட்டார் (19 : 5), உணவூட்டப்படுகிறார் (1அர. 19:1-7). இலக்கை (Destiny) குறித்த புரிதல் ஏற்படுகிறது. "நீ நீண்ட பயணம் செய்ய வேண்டும்’’ (வ. 7). அதன் பின் கடவுளின் மலை மட்டும் நடந்து போகிறார், குகையில் தங்குகிறார். கேள்வி எழுப்பப்படுகிறது, எலியாவே, இங்கே உனக்கு என்ன வேலை? (What are you doing here, Elijah?). பல வேளைகளில் இது போன்ற கேள்விகள் நம் உணர்வை, நம் சூழலை, நம் நிலையை கடவுளிடம் மனம் திறந்து சொல்லத் தூண்டுகிறது (வ. 14). எளிய கேள்விகள் வாயிலாக கடவுள் பேசுகிறவராய் இருக்கிறார். இறைவார்த்தை நம்மோடு கேள்விகள் கேட்க நாம் அனுமதிக்க வேண்டும். நாம் அனுமதிக்கும் போது கடவுளின் தூண்டுதலை, வழிகாட்டுதலைப் பெற்றுக்கொள்கிறோம்.

'Open Heart, Open Home'. என்ற நூலை Karen Burton Mains என்பவர் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறார்: “நான் கடவுளை சார்ந்திருக்கிறேனா?, என்னுடைய திறமையை பயன்படுத்தும் போது நான் கடவுளை சாருகிறேனா? நான் மற்றவர்களுக்கு வெறுமனே கருத்து சொல்ல விரும்புகிறேனா? அல்லது கடினமான சத்தியங்களை, வாழ்க்கையில் நடைமுறைபடுத்தச் சொல்கிறேனா? என்னுடைய மிகுதியான செல்வத்திலிருந்து பணத்தை கொடுப்பதில் அவரை

சார்ந்திருக்கிறேனா? வழக்கமான தசமபாகத்தில் மட்டும் திருப்திப் பட்டு விடுகிறேனா? என்னுடைய இல்லத்தை திறந்து உபசரிக்க நான் ஆயத்தமாய் இருக்கிறேனா? உணவை சுவைத்து வார்த்தைகளை கொட்டும் மக்களில் திருப்தி படுகிறேனா? அல்லது இதயத்தோடு இதயமாய், ஆத்துமாவோடு ஆத்துமாவாய், சிந்தையோடு சிந்தையாய் கட்டப்பட்ட (bond), கட்டப்படுகிற அனுபவத்தை விரும்புகிறேனா? நான் தொடர்ச்சியாக கடவுளுடைய உதவியை சார்ந்திருக்கிறேனா? அல்லது நானாகவே எல்லாம் செய்ய முயல்கிறேனா?'' என்கிறார். இங்கு இறைவார்த்தை எலியாவுக்குத் தூண்டுதல் தந்து வாழ்வில் முன்னோக்கிச் செல்ல உதவியது. தேங்கி கிடந்தவரை வாழத் தூண்டியது. இறை வார்த்தை நம்மை வாழத் தூண்டுவதற்கு நாம் இறை வார்த்தைகள் நம்மோடு உறவாடவும், கேள்விகளை கேட்கவும் நாம் கேள்விகளை எழுப்பவும் இடம் தர வேண்டும், தருவோமானால் அது நம்மை வாழத் தூண்டும்.

### *2. இறை வார்த்தையைப் பெற்றவர் பிறரையும் வாழ்விக்கின்றார் :* (திவெ 10:1-11)

இறை வார்த்தையை வாழ்வில் பெற்றுக்கொண்டவர்கள், தங்கள் சொல், செயல், சிந்தையால் பிறரையும், சமூகத்தையும் வாழத் தூண்டுகின்றனர்.

நீதிமான்களின் வாய் வாழ்வுதரும் ஊற்று என்று நீதிமொழிகளில் படிக்கிறோம். ஆண்டவரை அறிந்த ஒருவர் பேசும் வார்த்தை வாழ்வு தரும் ஊற்றுதான். அவ்வார்த்தைகளினால் களிப்பு உருவாகும். மரியாளின் வாழ்த்து அடுத்த தலைமுறையை தூண்டுதல் தந்தது எனலாம் (Godly people's words can inspire next generation, that reveal the power of God's word). மானிடராய் பிறக்கப்போகும் வார்த்தையாம் கடவுளை தனக்குள்ளே சுமக்கும் மரியாளின் ஆற்றலுள்ள வார்த்தைகள் எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தையைத் தூண்டியது.

மூப்பராகிய யோவான் கண்ட திருக்காட்சியில் இறைவார்த்தையை உட்கொண்டார். வாயில் தேனைப் போலவும், வயிற்றில் கசப்பாயும் இருந்த இறைவார்த்தை அவரைத் தூண்டியது. பல்வேறு நாட்டினர், மொழியினர், அரசர்கள் பற்றி இறைவாக்குரைக்க தூண்டப்பட்டார். பல மக்கள், அரசர்கள் தன் நிலை உணர்ந்து, புதியவர்களாய் வாழ அவர்களைத் தூண்ட யோவான் தூண்டப்பட்டார் (திவெ. 10:9-11).

கடவுளின் வார்த்தையைப் பெற்றுள்ள, அதால் தூண்டப்பெறும் நாம் பிறருடைய வாழ்விலும் இறைவாக்கானது தாக்கம் ஏற்படுத்தும் வண்ணம் நமது வாழ்வை வடிவமைத்துக் கொள்வோம். கடவுளின் தூண்டுதலால் வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்கு இன்று வரை நம்மை தூண்டிக்கொண்டே இருக்கிறது என்பதற்கு உயிருள்ள சான்றுகளாய் வாழ்வோம்.

திரு. S. **ஆர்தர் பெனடிக்ட்**

**13-12-2015** *வருகையின் மூன்றாம் ஞாயிறு*

# பாவக்கட்டிலிருந்து விடுதலை

## DELIVERANCE FROM THE BONDAGE OF SIN

விப 14:1-4 உரோ 8:1-11
திபா 37:1-12 யோவா 8:31-38

**"மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்."** யோவா. 8:36

***இறைவேண்டல் : விடுதலையாளராம் அன்பின் கடவுளே! மீட்பின் நம்பிக்கையை உமது திருமைந்தர் இயேசுகிறிஸ்து வழியாய் எங்களுக்கு வழங்கினீர். பாவத்தின் கட்டுகளில் உடைந்துபோயிருக்கும் உம்மக்களை விடுதலையாக்கும். நாங்கள் சந்திக்கும் சவால்களை சந்திக்க உம் தயவைத் தாரும். நாங்கள் சந்திக்கும் துயர்களிலும் உடைவுகளிலும் உமது மீட்பின் செயலாக்கத்தை காண அருள்தாரும். விடுதலையின் எதிர்நோக்குடன், விடுதலையாளர் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். ஆமென்.***

விடுதலை என்பதை விரும்பாதோரே உலகில் இல்லை. "படைப்பு அனைத்தும் அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற பேறுகால வேதனையுற்று தவிக்கிறது" என விடுதலையின் தவிப்பை தூய பவுல் எடுத்தியம்புகிறார் (உரோ. 8:19-23). குறிப்பாக, மனுக்குலம் பாவ அடிமைத்தனக் கட்டுகளில் சிக்குண்டு தவிக்கிறது. மாயையான உலகின் சிச்சைகள் அதற்குக் காரணமாகின்றன.

பாவம் எனும் சொல் திருமறையில் குறி அல்லது இலக்கு தவறுதல், அக்கிரமம், மீறுதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டுகிறது. மனிதன் கடவுளை மறந்து, உலகு சார்ந்து தன் சுய விருப்பப்படி கடவுளுக்கும், கடவுளுடைய வார்த்தைகளுக்கும் எதிராக வாழ விழைவதே மனிதனை பாவத்தின் அடிமைத்தனத்திற்குள்ளாக்குகிறது. இந்த பாவ அடிமைத்தனத்தினின்று ஒருவராலும் மீள முடியவில்லை. ஏனென்றால் மாம்சம் ஆவிக்கு எதிராக செயல்படுகிறது (Split personality in a person). ஆனால், யோவான் நற்செய்தியாளர், இப்படிப்பட்ட பாவத்தின் கட்டிலிருந்து இயேசு கிறிஸ்துவால் விடுதலை தர முடியும் எனக் கூறுகிறார். ஆக, பாவம் பற்றியும், அதனின்று பெறும் விடுதலை பற்றியும் நான்கு குறிப்புகளின் வாயிலாகச் சிந்திப்போம்.

### 1. அறிந்து செய்யும் பாவம் :

இந்த வசனத்தின் வழி பாவம் என்பது அறிந்து செய்யும் ஒன்றாக தூய பவுல் காட்டுகிறார். ஊன் இச்சை கடவுளுக்கு எதிரான பகை. அது கடவுளுடைய திருச்சட்டத்துக்கு கீழ்படியாமலும், கீழ்படியக் கூடாமலும் இருக்கிறது (உரோ 8:1-11). எப்படியெனில், உலக நாட்டம் திருமறையை படிப்பதற்குக் கூட இடமளிப்பதில்லை. சிலர் படிப்பதற்கு நேரமில்லை என்கிறார்கள். சிலர் படித்தாலும் திருமறையின் படி இக்காலச் சூழலில் வாழ முடியுமா? என்கிறார்கள். உலகு சார்ந்து மக்களும், அரசியல்வாதிகளும் செல்கின்ற பாதையில் சென்றால் தான் வாழ முடியும், ஆதாயம் பெறமுடியும் என்கின்றனர். கடவுளின் கட்டளைகளை அறிந்தும், கடவுள் மனுக்குலத்தை உலகில் படைத்த நோக்கத்தை அறிந்தும் வெளியரங்கமாக ஆலயம் செல்வதும், ஆலயத்தின் ஈடுபாடுகளில் கலந்து கொள்வதும், திருப்பணிக்கு கொடுப்பதும் இன்று வெறும் சடங்காக மாறிக் கொண்டிருக்கிறது. இவை கடவுளுக்கு கீழ்படியாமல், அறிந்து செய்யும் பாவமாக எண்ணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற கடவுளை நோக்கி முறையிட்டனர். அவர்கள் வேதனையைக் கண்டு, மோசேயின் வழி கடவுள் அவர்களை கானானுக்கு வழிநடத்துகிறார். முன்னால் செங்கடல், பின்னால் எகிப்தின் படை. மோசேயிடம் சொன்னார்கள், "பாலைநிலத்தில் செத்தொழிவதைவிட எகிப்தியருக்கு ஊழியம் செய்கிறதே எங்களுக்கு நலம்" எனக் கூறினர் (யாத். 14:12). எகிப்தில் அனுபவித்த வேதனைகளை அறிந்தும் கூட கடவுளை வழிபட அனுமதியாத அந்நாட்டிலே வாழ்வது நலம் என துணிகரமாகப் பேசினர்.

### 2. அறியாமல் செய்யும் பாவம் :

'அறியாமல் செய்யும் பாவம்' என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும். பலர் இதை ஏற்றுக் கொள்வதில்லை. "மக்கள் அறியாமையில் வாழ்ந்து காலத்தில் கடவுளை இதனைப் பெருட்படுத்தவில்லை" எனத் தூய பவுல் கூறுகிறார் (திப 17: 30). இந்தப் பகுதியில் தூய பவுல் மக்கள் கடவுளைப் பற்றி அறியுமுன் செய்த செயல்களைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், அறியாமல் செய்யும் பாவம் என்பது, 'தான் செய்வது பாவம் என்று அறியாமலே பாவத்தில் உழுகின்ற ஒருவரின் செயல்கள்' எனலாம். சாது சுந்தர்சிங், "ஒரு மனிதன் ஒரு குடம் தண்ணீரைச் சுமக்கின்ற போது அது அவனுக்குச் சுமையாக இருக்கின்றது. ஆனால் அவன் குளத்தில், தண்ணீருக்குள் மூழ்கி நிற்கும்போது ஆயிரக்கணக்கான குடங்கள் தண்ணீர் அவன்

தலைமேலிருந்தாலும் அவனுக்கு அதன் சுமை தெரியாது. அது போல பாவம் செய்ய முற்படுகின்ற போது ஒருவன் கடவுளின் தண்டனை பற்றி பயப்படுகிறான். பாவ வாழ்விலே மூழ்கிவிட்டால் அவன் செய்வது அவனுக்குப் பாவமாகவே தெரியாது'' என்கிறார். ஆக, பாவத்தின் மேல் பாவம் செய்கிறவர்களும், திருவசனங்களினால் உணர்வடையாமலும், தகாத செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் பாவத்தையும், பாவத்தின் பலனையும் அறியாமலும் வாழ்கின்றனர்.

### 3. அழிவுக்கு நேரான பாவம் :

யோவான் 8:37-ல் "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை" என இயேசு கிறிஸ்து கூறுகிறார் (யோவா 8:34). காயீனிடம் "பாவம் ... உன் வாயிலில் படுத்திருக்கும்" என்று பாவத்தின் பிடியில் சிக்குண்ட மனிதனின் தப்ப இயலாமையைக் கடவுள் விளக்குகின்றார் (தொநூ 4:4). தூய பவுல் பாவத்துக்குக் கட்டுண்ட வாழ்வை, "இரங்கத்தக்க மனிதன் நான்; சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்?" என்கிறார் (உரோ 8:24). 'பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு' என்று பாவ வாழ்வினால் நிலையான வாழ்வை மனிதன் இழப்பான் (உரோ 6:23) என்று கூறிய தூய பவுலார், 7:24-ல் உரோம தண்டனையான மனித சரீரத்துடன் இறந்த உடலைக் கட்டி சுமந்து செல்லும் ஒன்றை, துர்நாற்றத்தை சுமக்கும் நிலையை, பாவ வாழ்வினால் உழல்பவருக்கு ஒப்பிடுகிறார். அப்படிப்பட்ட சீரழிந்த வாழ்விலிருந்து ஒருவரும் தானாய் விடுதலையைப் பெற்றுக் கொள்ள இயலாது. யார் என்னை விடுதலையாக்குவார் என வினாவுகிறார்.

### 4. அருளால் விடுதலை அளிக்கும் ஆண்டவர் :

பாவத்திலிருந்து விடுதலை அளிக்க குமாரன் ஒருவராலேயே ஆகும் என இயேசு கிறிஸ்து சொல்கிறார் (யோவா 8:36). கடவுளை விட்டு பாவத்தினால் தூரம் சென்ற, இழந்த மனிதனைத் தேடி வந்தேன் (லூக் 19:10) என்றவர், மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்ததாக கூறுகிறார். சிலுவையை நோக்கிப்பார்த்தால், நமது வாழ்வை மறுபடியும் ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தால், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும் (1யோவா 1:7b). அருள் நிறைந்த ஆண்டவரிடம் வருவோம். விடுதலை வாழ்வைப் பெற்றுக் கொள்வோம். இறை உருவில் படைக்கப்பட்ட நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழ்வோம்.

அருள்திரு. D. **சேம் கிறிஸ்டோபர்**

**20-12-2015** ***வருகையின் நான்காம் ஞாயிறு***

# மாரநாதா - ஆண்டவரே, வாரும்

## MARAN-ATHA - O LORD COME

எரே 23:1-8 திவெ 22:6-21
திபா 28 யோவா 14:8-14

**"...ஆண்டவராகிய இயேசுவே வாரும்."** திவெ 22:20

***இறைவேண்டல் : எங்கள் மீட்பராம் கடவுளே! உமது படைப்பாகிய இவ்வுலகில் உமது அரசை நீர் உருவாக்கியிருப்பதற்காக உம்மைப் போற்றுகிறோம். உம் அரசை வெளிப்படுத்தும் திருச்சபையின் வாழ்வுகளில் நாங்கள் பங்குபெற்று எங்கள் வாழ்வின் வழியாக நீர் எங்களில் வர உம்மை வேண்டுகின்றோம். உமது நிலையான ஆளுகையின் திருக்காட்சியை எங்களில் பெற்றுகொள்ள அருள்செய்ய வேண்டுமென்று முடிவில்லாது என்றென்றும் ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.***

மகாராசன் வேதமாணிக்கம் அவர்கள் 1818ஆம் ஆண்டு அருள்திரு. சார்லஸ்மீட் என்னும் மேனாட்டு திருத்தொண்டரை மயிலாடிக்கு அழைத்து வந்தார். வெள்ளைக்காரப் பாதிரியார் வருகிறார் என்று கேள்விப்பட்ட அவ்வூரார் தம் நிலை உணராமல் கூட்டமாக அவரைப் பார்ப்பதற்குக் கூடினர். மேலாடையின்றி காணப்பட்ட பெண்களின் நிலை கண்டு சினமுற்று, "உங்கள் உடலை மூட ஒரு முழம் துண்டு கிடைக்கவில்லையா?" என்று வினவினார். தங்கள் உடலை மூடினால் கிடைக்கும் தண்டனையைக் குறித்து அம்மக்கள் எடுத்துக் கூறினர். இதனைக் கேட்டு துயருற்ற போதகர் இந்நிலை மாற உழைத்தார். அதன் விளைவு தான் 1822, 1828, 1855 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று மேலாடைக் கலகங்கள். போதகரின் வருகையின் பயனாக தென்திருவிதாங்கூர் விடுதலை பெற முடிந்தது.

கடவுள் நம்மைச் சந்திக்க வருகிறார். இவ் எதிர்பார்ப்பு இறைமக்களின் உள்ளங்களில் மேலோங்கி வரும் வேளையில் அவர் முன் நிற்க ஆயத்தப்படும் நாம், பாவங்களுக்குக் காரணமான நம் சமூகத் தீமைகளையும், இதற்கு துணை போன தனிமனித வாழ்வின் தீமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். இத்தீமைகளை மாற்ற கடவுள் இன்னும் செயல்படுகிறார்; விடுதலையையும் தருகிறார். நீரோ (கி.பி. 54 -68), தொமிசியன் (கி.பி 89-96) மன்னர்களின் காலங்களில் கிறிஸ்தவர்

மிகவும் துன்புறுத்தப்பட்டனர். உரோமப் பேரரசர் சீசரை வழிபட பணிக்கப்பட்டனர். இத்தனிமனித உரிமை மறுப்புக்கு எதிரான குரல்களும் உரோம அரசுக்கு எதிராக ஒலித்தன. உரோம அரசை நேரிடையாக எதிர்ப்பது கடினமானது. துயருற்றிருந்த கிறிஸ்தவருக்கு நம்பிக்கையையும், மன அமைதியையும் கொடுப்பதற்காக ஒருவரையொருவர் சந்திக்கும் போது "மாரநாதா" (ஆண்டவரே வாரும்) என்று அடையாள மொழிநடையுடன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். கிறிஸ்துவின் முதலாம் வருகை, இரண்டாம் வருகை என்று வரையறைக்குட்படுத்தி வகுத்துக் கொள்ளாமல் அனைத்தையும் இணைத்து கிறிஸ்து தினமும் நம்மிடையே வருகிறார் என்ற ஆன்மீகப் பயிற்சியுடன் முன்னேறுவது சிறப்பானது. நம்மைத் தேடிவருகிற ஆண்டவர் எப்படிப்பட்டவர் என்ற கருத்தியலைக் கொண்டு அவரது இருப்பு நிலையின் அடிப்படையில் மூன்று உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

## *நம்மைத் தேடி வரும் ஆண்டவர் எப்படிப்பட்டவர்?*

### *1. முதன்மையானவர் :* (The Pre – existed One) (திவெ 22:13)

ஆண்டவர் முதலும், தொடக்கமும் ஆனவர் (the first and the beginning). தீமைகளின் பிடியிலும், துன்பங்களின் அலையிலும் வாழும் இறைப்பற்றாளருக்கு முதன்மையானவர் நம்மைத் தேடி வருகிறார் என்பது மன உறுதியைக் கொண்டு வருகிறது. முதன்மையானவர் கடைநிலை மனிதருடன் தம்மை இணைத்துக் கொண்டார் (யோவா 1 : 14) என்பது மனித அறிவுக்குத் தூரமாய் நிற்பது ஆகும். நம்மைத் தேடிவரும் ஆண்டவரின் முதன்மைத் தன்மையை இருநிலைகளில் புரிந்து கொள்ளலாம். ஏன் ஆண்டவர் முதன்மையானவர்?

#### (i) *கடவுளோடிருந்தமையால் முதன்மையானவர் :*

தொடக்கத்தில் கடவுளோடிருந்தவர் (யோவா 1:2). தூய பவுலார் கிறிஸ்துவின் மேன்மையைக் குறித்து கூறும்போது விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை; கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை; அரியணையில் அமர்வோர்; தலைமை தாங்குவோர்; ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய், அவருக்காகப் படைக்கப்பட்டன (கொலோ. 1:16,17) என்கிறார். இதன் வாயிலாக அவரது இருப்பு நிலையின் முதன்மையை அறிகிறோம்.

#### (ii) *தகுதியின் அடிப்படையில் முதன்மையானவர்:*

ஒருவரது தகுதிகள் அவரை முதன்மைக்கு நேராகக் கொண்டு வரும். ஆண்டவரது தகுதிக்கும் உலகியல் சார்ந்த தகுதிக்கும் வேறுபாடு

உண்டு. ஆண்டவரின் தகுதி உலக முறையினைப் போன்று ஆற்றலால் கிடைத்ததன்று. தம்மை இழக்கக் கொடுத்ததினால் கிடைத்தது (யோவா. 10:18). கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்து தம்மை வெறுமையாக்கி, அடிமையின் வாழ்வை ஏற்று, சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுள் அவரை உயர்த்தினார் (பிலி. 2: 611) என்ற தூய பவுலாரின் சிந்தனை இதைத் தெளிவுப் படுத்துகிறது. இறைப்பற்றாளர் வாழ்வில் கிடைக்கும் உயர்வுகள் உலகத் தகுதியின் அடிப்படையில் வருபவைகளாகப் புரிந்து கொள்ளாமல், உலக மக்கள் வாழ்வுக்காகத் தன்னை, உப்பைப் போன்று, இழக்க கொடுப்பதற்காகக் கிடைப்பவை எனப் புரிந்து கொள்ளல் வேண்டும். இன்று மனிதர் முதன்மையானவரான படைப்பாளரை விட்டு, முதன்மையற்றவைகளான படைப்புகளை (பதவி, உயர்வு, பணம். . .) முதன்மையாக்குவதையும் உணர வேண்டும் (உரோ. 1:20-25). நம்மைச் சந்திக்க முதன்மையானவர் வருகிறார். வெளிவேடக்காரராய் அன்று, தூய்மை நிறை உள்ளத்துடன் ஆண்டவரே வாரும் (திவெ. 22:20) என்ற உணர்வுக் குரலுடன் வரவேற்க ஆயத்தமாவோம்.

## 2. *முன்னுரைக்கப்பட்டவர்* (The foretold one) (திவெ. 22:16)

தேடிவரும் ஆண்டவர் முன்னுரைக்கப்பட்டவர். தாவீதின் குலக்கொழுந்தும் வழித்தோன்றலுமானவர், ஈசாய் என்னும் அடிமரத்தின் தளிர் (எரே. 23:5; எசா. 11:1) என்று இறைவாக்கினரால் முன்மொழியப்பட்டவர். “எனக்குப் பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்” என்று யோவானால் சான்று பகரப்பட்டவர் (யோவா. 1:15). மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்குபவர் (திபா. 96:13) என்று திருப்பாடல் ஆசிரியரால் முன்பாடப்பட்டவர். இவ்வாறு குறிக்கப்பட்ட ஆண்டவரை ஞானமுள்ளவர், நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர் (எரே. 23:5) என்று கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த எரேமியா இறைவாக்கினர் குறிப்பிடுகிறார். முன்னுரைக்கப்பட்டவர் கடவுளின் அருள் கொடையாகிய ஞானத்தைப் பெற்றுள்ளதால் நீதியையும், நேர்மையும் உலகில் நிலைநாட்டுபவராய் இருக்கிறார். இவ்வுலக வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஞானத்தைக் கடவுளிடமிருந்து பெற்று வாழும் போது நம் செயல்பாடுகள் நீதியும், நேர்மையும், அமைதியும் உடையதாய் இருக்கும் (திபா. 85:10). முன்னுரைக்கப்பட்ட ஆண்டவர் நீதியும் நேர்மையும் உடையவராய் வருகிறார். அவரது நீதிக்கு முன் நம் நீதி எப்படிப்பட்டது? அவரது நேர்மைக்கு முன் நம் நேர்மை எப்படிப்பட்டது?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒரு முறை வங்கக் கவிஞர் ரபீந்திர நாத் தாகூரைச் சந்தித்து பேசிக் கொண்டிருக்கும் போது, ''மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமராக இருக்கும் நான், என் மக்களை நல்வழியில் நடத்த ஒரு தலைவரை முன்மாதிரியாக வைக்க விரும்புகிறேன். யாரை தெரிவு செய்யலாம்?'' என்றாராம். அதற்கு தாகூர் மறுமொழியாக, ''மக்கள் மேல் கொண்ட அன்பினால் அவர்களுக்காக தம் உயிரையே கொடுத்த இயேசு தான் இவ்வுலகின் தலைவர், நீங்கள் அவரைப் பின்பற்றுங்கள்'' என்று கூறினாராம். அவர் தான் உண்மையான ஆளுகையைத் தருபவர். ஆண்டவரின் ஆளுகை நீதியும் நேர்மையும் உடையது. முன்னுரைக்கப்பட்ட ஆண்டவர் நம்முடன் இருப்பதை உணராமல் பல நேரங்களில் பிலிப்புவைப் போன்று கேள்விகள் கேட்டும் (யோவா. 14:9), சீடர்களைப் போல் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டும் (திப 1:10) இருக்கின்றோம். கடவுளைக் கண்டு கொள்ளுதல் என்பது நீதி நிறைந்த செயல்பாடுகளில் அடங்கியுள்ளது என்பதை இயேசு தம் சீடர் பிலிப்புவுக்குப் புரிய வைக்கிறார் (யோவா. 14:12). முன்னுரைக்கப்பட்டவரை நீதியின் செயல்களால் ஆண்டவரே, வாரும் (திவெ. 22:20) என்ற உரிமைக் குரலுடன் வரவேற்க ஆயத்தமாவோம்.

### *3. முழுமையாக்குகிறவர் :* (The One who gives wholeness)

(திவெ 22:13)

முழுவாழ்வை வழங்குவதற்காக ஆண்டவர் வருகிறார். இந்த முழுமையைக் குறிக்க அடையாளமாகக் கிரேக்க மொழியின் முதல் எழுத்து அல்பாவும், இறுதி எழுத்து ஓமேகாவும் பயன்படுத்தப்பட்டுள்ளன (திவெ. 22:13). முழுமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் ''பிளேறோமா'' என்பதாகும். இச்சொல் ஆண்டவரின் இருப்பு நிலையின் முழுமையை விளக்குகிறது. திரிபுக் கொள்கையினர் ''கடவுளின் தன்மை சிறிது சிறிதாக பலர் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; இயேசு கிறிஸ்துவும் அவ்வரிசையில் ஓரளவு வெளிப்படுத்தியுள்ளார்'' எனப் போதித்து வந்தனர். தூய பவுலார் இக்கொள்கையினை எதிர்த்து கடவுள் தம் முழுநிறைவையும் கிறிஸ்துவில் குடிகொள்ளச் செய்தார் என்று கிறிஸ்துவின் முழுமையைக் குறிப்பிட்டார் (கொலோ. 1:19, 2:9) இம்முழுமையை மானுடம் பெற வேண்டும் (எபே. 4:10) என்பதற்காக இயேசு கிறிஸ்து தம்மை ஒப்படைத்தார். புதுப்படைப்பின் வாயிலாக இதனை நாம் கிறிஸ்துவில் பெற்றுக் கொள்கிறோம் (திவெ. 21:5). இந்த முழுமைவாழ்வு மானிடருக்கு மட்டுமன்றி படைப்பனைத்துக்கும் உரியது (உரோ. 8: 21,22). இந்நிலையை பெற்றுக் கொள்ள கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கும்

நாம் ஆண்டவரது விடுதலைச் செயல்களை உலகில் செய்வதுடன் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் (யோவா. 14:12).

ஒரு தந்தை தன் மகனுக்கு துண்டுகளாக கிழிக்கப்பட்ட உலக வரைபடத்தைக் கரத்தில் கொடுத்து, துண்டுகளைச் சரியாக ஒட்டி உலகை முழுமைப்படுத்தக் கூறினார். சற்று நேரத்துக்குப் பின் சரியாக ஒட்டிய உலகப்படத்துடன் மகன் தந்தையிடம் சென்றான். தந்தை வியப்புற்று, "மகனே எப்படி முழுமையாக ஒட்டினாய்?" என்று கேட்டார். அதற்கு மகன் பதிலாக, "இக்கிழிந்த உலகப்படத்தை ஒட்டுவது கடினம் தான். ஆனால் கிழிந்த துண்டுகளுக்குப் பின்னால் இயேசுவின் உருவப் படம் இருந்தது. உடைக்கப்பட்ட இயேசுவின் உடல் பாகங்களை எடுத்து சரியாக ஒட்டினேன். திருப்பிப்பார்த்த போது முழுமையான உலகப்படம் கிடைத்தது" என்றான். இன்றும் உலகம் பல தீமைகளால் உடைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவில் இணையும் புதிய சமுதாயத்தை உருவாக்குவோம். முழுமையாக்குகிற ஆண்டவர் வருகிறார். ஆண்டவரே வாரும் (திவெ. 22:20) எம்மை முழுமையாக்கும் என்ற விண்ணப்பக் குரலுடன் வரவேற்க ஆயத்தமாவோம். ஆம், முதன்மையானவர் வருகிறார்; முன்னுரைக்கப்பட்டவர் வருகிறார்; முழுமையாக்குகிறவர் வருகிறார் ஆண்டவராகிய இயேசுவே வாரும். ஆமென்.

அருள்திரு. S. **கிரீஷ் குமார்**

**24-12-2015** **கிறிஸ்துப் பிறப்பு ஆயத்தத் தொழுகை**

# உலகில் அமைதி

## PEACE ON EARTH

எசா 52:7-10 தீத்து 2:11-14

திபா 96 லூக் 1:67-79

**"...நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் . . . விண்ணி-ருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது."** லூக் 1 : 79

***இறைவேண்டல் : எங்கள் மீட்பரான கடவுளே, எங்களையும் முழுபடைப்பையும் மீட்டு துய்மைப்படுத்த இயேசுகிறிஸ்துவை அருட்கொடையாக்கினீர். அவர் வருகையால் உலகம் அமைதி காண வழிகாட்டினீர். அவரை ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றும் நாங்கள் இவ்வுலகில் அமைதி ஏற்படுத்தும் ஊடகங்களாய் மாற அருள்தாரும். என்றென்றும் உம்மோடும் தூய ஆவியாரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். ஆமென்.***

'ஷாலோம்' (Shalom) என்ற எபிரேயச் சொல்லும் 'ஐரேனே' (eirene) என்ற கிரேக்கச் சொல்லும் அமைதி என மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இன்று அமைதியின்மையினால் பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வன்முறை, தீவிரவாதம், கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள், வேலையின்மை, சுயநலம் இவைகள் அமைதியை குலைக்கின்ற காரணிகள். இத்தகைய காரணிகளால் உண்டாகும் அமைதியற்ற சூழலில் உலகமே அமைதிக்காக ஏங்கி கொண்டிருக்கின்றது. இச்சூழலில் இயேசுகிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் செய்ய வந்த முழுக்கு முனிவர் யோவானின் பிறப்புக்கு பின் அவரது. தந்தை சகரியா மகிழ்ந்து, "நம்மை அமைதி வழியில் நடத்திச் செல்லும் விடியல் விண்ணிலிருந்து நம்மைத் தேடி வருகிறது" என்று பாடுகின்றார். ஆகவே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு உலகிற்கு அமைதியை தந்தது. அவரது பிறப்பு எப்படி உலகில் அமைதியை ஏந்படுத்தியது என்பதை இன்றைய திருமறைப்பகுதிகளை மையப்படுத்தி தியானிப்போம்.

### *1. இருள் அகன்றதால் அமைதி*

இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தரவும்... விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது (லூக் 1 : 78).

உலகம் பாவ இருளின் பிடியில் சிக்கி தவித்து கொண்டிருந்தது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இருளை அகற்றியது. தொடக்கத்தில் ஆதாம்,

ஏவாளின் கீழ்ப்படியாமை இருளை ஏற்படுத்தியது. இருள் அமைதியின்மை ஏற்படுத்தியது. பயம் ஆட்கொண்டது. சுயநலம் மலிந்ததால் அடிமைத்தனம் மலிந்தது. அடிமைத்தனத்தினால் அமைதியின்மை ஏற்பட்டது. யூதர்கள் உரோமர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு இருந்தனர். இதனால் பல்வேறு துன்பங்கள் அனுபவித்தனர். அமைதியின்மையில் அமைதி தரும் பேசியாவை எதிர்பார்த்தனர். எசாயா இறைவாக்கினரின் இறைவாக்கு இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது. இதைத்தான், “ காரிருளில் நடந்து வந்த மக்கள் சாவின்பேரொளியைக் கண்டார்கள். வாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது” (எசா 9:2 ; மத் 4: 16) என்று ஏசாயா இறைவாக்கினர் குறிப்பிட்டுள்ளார்.

சகரியா சொல்லும் போது ‘நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார்’ (லூக் 1:71) என்கிறார். ஆக இயேசு கிறிஸ்துவின் பிறப்பால் இருள் அகன்றது. அமைதி ஏற்பட்டது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தவர்கள் மந்தை மேய்க்கும் ஆயர்கள். இறைமகனின் பிறப்பின் நற்செய்தி முதலில் அவர்களுக்கு கிடைத்தது. அந்தச் செய்தி அவர்கள் சமுதாயத்தில் முதலிடம் பெற உதவியது. நம்மண்ணிலும் நற்செய்தி ஒளி உதிப்பதற்கு முந்தைய சூழலை சிந்தித்து பார்த்தால் எத்தனை வேதனைகள், துன்பக் கதறல்கள், சறுக்கல்கள், அடிகள், அவமானங்கள், இவைகளால் அமைதி இல்லாச்சூழலில் இயேசு கிறிஸ்து எனும் நற்செய்தி ஒளி வந்தது. இருள் அகன்றது. எனவே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இருளை அகற்றி உலகிற்கு அமைதியை தந்தது.

## 2. இறை நீதி மலர்ந்ததால் அமைதி

“. . . தூய்மையோடும் நேர்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி பணி செய்யுமாறு வழிவகுத்தார்” (லூக். 1:75).

நீதி மறுக்கப்பட்ட நிலையில் அநியாயம் கட்டவிழ்க்கப்பட்டு மலிந்து காணப்படச் சூழலில் இறை மைந்தர் இயேசுகிறிஸ்து விடியலாக. நீதியின் சூரியனாக இப்பூமியில் மலர்ந்தார். இறைவாக்கினர் ஆமோஸ் வாழ்ந்த காலகட்டத்தில் நீதி நியாயங்கள் புரட்டப்பட்டன. சமயத்தின் பெயரால் ஏழைகள் ஒடுக்கப்பட்டனர். “நீதியை எட்டிக்காயாய் மாற்றுகின்றார்கள். நல்லோரைத் துன்புறுத்துகிறீர்கள், கையூட்டு வாங்குகிறீர்கள், வறியோருக்கு நீதி வழங்க மறுக்கிறீர்கள், நீதியை நஞ்சாக மாற்றினீர்கள் நேர்மையின் கனியை எட்டிக்காயாய் மாற்றினீர்கள்” (ஆமோஸ் 5 : 7, 12, 6 : 12) என்று ஆமோஸ் சாடுவதன் வழியாக அறிந்துக்

கொள்ளலாம். இத்தகைய நிலை தான் இயேசுகிறிஸ்துவின் காலத்திலும் காணப்பட்டது. பரிசேயர்கள் மறைநூல் வல்லுநர்கள் ஏழை மக்களை கொடுமைப்படுத்தினர். ஏழைகள் ஆலயத்திற்குள் சென்று கடவுளை வழிபட முடியாத நிலை காணப்பட்டது. ஆலயத்தில் பிற இனமக்கள் அமர்ந்து வழிபடும் இடத்தில் கடைகளை வைத்து வியாபாரம் செய்து அநீதி இழைத்தனர். இதை இயேசு கிறிஸ்து கண்டித்து எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி நீதியை நிலைநாட்டுகிறார் (மத் 21: 12-13, மாற் 11: 15-19, லூக் 19: 45 - 47, யோவா 2: 13 - 22). மல்கியா 4 : 2 -ல் ''என் பெயருக்கு அஞ்சி நடக்கிற உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான்'' என்று படிக்கிறோம். அப்படியானால் கடவுளுக்கு அஞ்சி நடக்கும் போது நீதி நம்மில் மலரும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பால் நீதி மலர்ந்தது. இதனால் அமைதி ஏற்பட்டது. இவ்வுலகில் அலெக்சாண்டர், என் போன்றோர் என எல்லோரும் பிறருடைய இரத்தத்தைச் சிந்தியே உலகில் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றோம். ஆனால் இயேசு கிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்தி உலகில் சமாதானத்தை ஏற்படுத்தினார் என்றார் நெப்போலியன்.

அன்பர்களே! இயேசுகிறிஸ்துவின் பிறப்பு உலகிற்கு அமைதி தந்தது. எல்லாரும் ஒன்றாய் வாழும் போது அமைதி மலர்கிறது. ''வன்முறை இல்லாத நிலை, உண்மை, நீதி இவைகள் நிலை நாட்டப்படும்போது அமைதி ஏற்படுகின்றது'' என்று மார்ட்டின் லூத்தர் கிங் கூறினார். அப்படியே இயேசு கிறிஸ்துவை நம்பி அவர் பிறப்பால் இருள் நீங்கி, நீதி மலர்ந்து உலகிற்கு அமைதி ஏற்பட்டது (லூக் 2 : 13,14) என்பதை உணர்ந்து, உலகில் அமைதியை ஏற்படுத்தும் ஊடகங்களாக வாழ்ந்து கிறிஸ்து பிறப்பு பண்டிகையை கொண்டாடி இறை ஆசி பெறுவோம்.

அருள்திரு. அறிவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

**25-12-2015**

***கிறிஸ்துபிறப்புத் திருநாள்***

# கிறிஸ்து பிறப்பு - ஓர் புதிய உதயம்

## CHRISTMAS - A NEW DAWN

எசா 9:1-7 கலா 4 : 1-7

திபா 98 லூக் 2:1-14

**“காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்.”** கலா 4:4,5

***இறைவேண்டல் : உண்மையும் அருளும் நிறைந்தவராக உம் ஒரே மைந்தரை உலகுக்கு அனுப்பிய இம்மானுவேலராம் கடவுளே, உம் திருவெளிப்பாட்டை நாங்கள் பெற்றுக்கொள்ள உம் ஆற்றலால் எங்களை தூய்மைப்படுத்தும். மகிழ்ச்சியோடு புதுப்பாட்டை நாங்கள் உமக்காக பாடவும், உம் பிள்ளைகளாக களிகூரவும், பூமியின் கடையெல்லை வரைக்கும் அனைத்து மக்களுக்கும் நற்செய்தியைப் பகரவும் உம் அன்புக்கு ஊடகங்களாக எங்களை உருவாக்கும். உம்மோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகைச் செய்யும் இம்மானுவேலராம் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.***

பறக்கும் தட்டை முதல் முதல் வடிவமைத்த ரைட் சகோதரர்கள் தங்கள் சகோதரிக்கு கீழ்க்கண்டவாறு செய்தியினை தட்டச்சு செய்தியாக (Telegraphic message) அனுப்பினர்: “நாங்கள் தற்போது பறக்கும் தட்டில் 120 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இல்லம் வருகிறோம்”. தன் சகோதரர்கள் பறக்கும் தட்டில் பறந்து வருவதை அதிக மகிழ்ச்சியுடன் உலகிற்கு அறிவிக்க விரும்பிய சகோதரி அச்செய்தியினை உள்ளூர் பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுகொண்டாள். அடுத்தநாள் பத்திரிகையில் அச்செய்தி கீழ்கண்டவாறு பிரசுரிக்கப்பட்டிருந்தது: “ரைட் சகோதரர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இல்லம் வருகிறார்கள்”. பத்திரிகையில் பறக்கும் தட்டு முக்கிய செய்தியாக இடம் பெறவில்லை. இன்று கிறிஸ்துபிறப்பு பண்டிகை கொண்டாட்டங்களிலும் இயேசு கிறிஸ்து பாலன் முக்கியப்படுத்தப்படாதபடி நமது கொண்டாட்டங்கள் அமைந்துள்ளன. இயேசு கிறிஸ்துவின் தகவுகள் நமது உள்ளங்களில் உதயமாவதே கிறிஸ்து பிறப்பின் உண்மையான ஆயத்தங்களாம்.

காலம் நிறைவேறினபோது கடவுள் தம் மைந்தரை உலகத்தில் அனுப்பினார்.

பிறப்பு என்பது மனித வாழ்வில் ஒரு புதிய தொடக்கம். ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் திருத்திட்டத்துடனேயே உலகில் பிறக்கின்றன. இறைத்திட்டத்தின் அடிப்படையிலேயே குழந்தைகள் குடும்பங்களில் தரப்படுகின்றன. இறைவனின் திருத்திட்டத்தை அறிந்து கொள்வதும், அதற்கேற்ப குழந்தைகளை வளரச் செய்வதும் குடும்பம், திருச்சபை, சமூகம் ஆகியவைகளின் உன்னதமான கடமைகளாம்.

திருமைந்தர் உலகத்தில் அனுப்பப்பட உரிய காலத்தினை தெரிவு செய்த கடவுள் உரிய ஆயத்தங்களையும் செய்திருந்தார்.

''ஏற்ற காலம் தோன்றினீர் கன்னியிடம் பிறந்தீர்... பாரில் வந்தீர் மாந்தனாய்'' என்பது இதனை நினைவூட்டும் பாடல்.

ரோமர்கள் உலகம் முழுவதையும் ஒரே குடைக்குள் கொண்டு வந்திருந்த காலம் அது. உலகம் முழுவதும் குடிமதிப்பெழுதப்படும்படி அகஸ்து சீசரால் கட்டளை பிறந்தது இறைவனின் திருத்திட்டமே. ஏனெனில், தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் படியாக யோசேப்பின் குடும்பம் பெத்லகேமுக்குச் செல்ல வேண்டும். கடவுள் மனிதர்களை தமது திருத்திட்டத்திற்கு ஏற்ப செயல்படச் செய்கிறார். குழந்தை பிறக்க வேண்டிய இடம் பெத்லகேம் என மீகா இறைவாக்கினர் வழியாகவும் (மீக் 5:2), கன்னியின் வயிற்றில் பிறப்பார் என ஏசாயா இறைவாக்கினர் வழியாகவும் (எசா 7:14) முன்னறிவிக்கச் செய்தார். இயேசு பிறந்த செய்தியினை நட்சத்திரம் வழியாக ஞானியர்க்கு உணர்த்திய இறைவன், தூதர்கள் வழியாக ஆயர்களுக்கு செய்தியை அறிவிக்கிறார். இவைகள் யாவும் இயேசு குழந்தை பிறப்புக்காய் கடவுள் செய்த முன் ஆயத்தங்களே. இன்றும் நம் ஒவ்வொருவரைக் குறித்தும் இறைத் தீர்மானங்கள் உண்டு. இறைவனின் திருத்திட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடல் ஆகாது.

திருமைந்தரின் பிறப்பின் வழியாய் உலகத்தில் புதிய உதயங்கள் உருவாயின. இவ்வுதயங்களை நமக்காகவே இறைவன் உருவாக்கியுள்ளார்.

## *1. புதிய அடித்தளம்* (New Foundation) :

கலா 4:5-இல் தூய பவுலார், ''கிறிஸ்து இயேசு திருச்சட்டத்துக்கு உட்பட்டவராக அனுப்பப்பட்டவர்'' என்றுக் குறிப்பிடுகிறார். திருச்சட்டம் என்பது மக்கள் வாழ்வோடு பிணைக்கப்பட்டிருந்தது. திருச்சட்டமே மக்களை வழிநடத்தும் ஊடகமாக;ச் கருதப்பட்டது. ஆனால், இத்திருச்சட்டம் எந்த ஒரு மனிதரையும் நீதியராக்கவில்லை. மாறாக, தண்டனைத் தீர்ப்பையே உறுதிப்படுத்தியது. கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்பதாகவே சுட்டிக்காட்டப்பட்டது. வாழ்வுக்குரிய திருச்சட்டம், மீட்பினை வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் இயேசு கிறிஸ்து திருச்சட்டத்தை அன்பின் சட்டமாக்கினார். ''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்ற புதிய விளக்கத்தினால் உயிரூட்டம் அளித்தார்.

ஆகவேதான் “திருச்சட்டத்தை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்” எனத் தெளிவுப்படுத்தினார் (மத் 5:17). அந்த அன்பின் சட்டத்தால் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டிய பெண்மணிக்கு மன்னிப்பின் வழியாக புதுவாழ்வு வழங்கினார் (யோவா 8:1-8). இந்த புதிய அடித்தளத்தில் மானுட வாழ்வு கட்டப்படும்போது வாழ்வு சிறப்பு பெறுகிறது என்பதற்கு எசா 11:6-ம் வசனம் வலுவானதாகவே அமைந்துள்ளது. ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கியிருக்கும் என்பதை ஆட்டுக்குட்டி ஓநாயை தன் இல்லத்தில் விருந்துண்ண அழைத்து தங்க வைத்திருப்பதுபோலவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஓநாய் பட்சிக்கின்ற தன் சுய நிலையை விடுத்து ஆட்டுக்குட்டியின் உணவு, புல், தழை மேய்வதாக, அதாவது, அதனுடைய இயல்பு நிலையிலே மாற்றம் ஏற்படுவதாக கூறப்பட்டுள்ளது. மேலும், பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும், பால் குடி மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எப்படியானது? அன்பு அடித்தளமானால் பகைகள் வேரறுக்கப்படுவது உறுதியே. நமது குடும்பங்களும் அன்பிலே கட்டப்படட்டும். அதன் செயலாக்கத்தை திருச்சபையில், வாழ்வில் வெளிப்படுத்துவோம். கிறிஸ்து பிறப்பு நம் வாழ்வுக்கு புதிய அடித்தளமாக அமையட்டும்.

### *2. புதிய அங்கீகாரம்* **(New Acceptance)** :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பால் அதுவரையிலும் அங்கீகாரம் பெறாதிருந்தோர் சமூகத்திலும், திருச்சபையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொண்டனர். கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் ... அனுப்பினார் (கலா 4:5). பெண்கள் இரண்டாம் நிலை குடிமக்களாக கருதப்பட்டிருந்த அக்காலத்தில் ஆண்களுக்குரிய உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு புதிய அங்கீகாரங்களை இவர்களுக்குப் பெற்றுத் தந்தது. சாதாரண நிலையில் இருந்த பெண் மரியாள், முதுமை நிலையில் இருந்த எசபெத் ஆகியோர் இறை தரிசனங்களை பெற்று கொண்டது இதன் முன் அடையாளங்கள். பெயரிடும் உரிமை ஆண்களுக்கு மட்டுமே இருந்த அக்காலத்தில் சகரியா என்னும் ஆசாரியனின் நாவு கட்டப்பட்டு அவர்தம் குழந்தைக்கு பெயரிடும் சிறப்பினை அன்னையாகிய எசபெத் பெற்று கொள்கிறாள்.

ஆயர்கள் என்போர் அக்காலத்தில் சமூக அங்கீகாரத்தினை பெறமுடியாதவர்கள்; திருமணம், குடும்பம் என்ற வாழ்வு நிலை மறுக்கப்பட்டவர்கள்; தீண்டத்தகாதவர்கள்; ஆலயத்திலும் ஏற்கப்படாதவர்கள்; நம்பகத் தன்மையற்றவர்கள்; நீதிமன்றங்களிலும் அவர்களது சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள். ஆனால், கிறிஸ்து பிறப்பின் முதல் செய்தி இவர்களுக்கே அறிவிக்கப்படுகிறது. கடை

நிலையிலுள்ளோர், எளிமையிலும், குறைகளிலும் வாழ்ந்தோர் முதல்நிலை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர். ஏரோது போன்ற உலக அதிகார வட்டங்கள், ஆசாரிய, பரிசேயர் போன்ற ஆன்மிக வட்டங்கள், அதுவரையிலும் தாங்கள் பெற்றுவந்த முக்கியத்துவத்தினை இழந்து கதிகலங்கி நின்றனர். கலேயராகிய பேதுரு, யாக்கோபு, யோவான் போன்றோர் ஆலயத்தின் அதிகாரங்களில் அமருகின்றனர். ‘‘மேடுகள் தகர்க்கப்பட்டு பள்ளங்கள் நிரப்பப்படும்’’ என்ற திருமுழுக்கு யோவானின் திருச்செய்தி இயேசுகிறிஸ்துவின் பிறப்பில் நிறைவுபெறுகின்றது.

வயல்வெளியும், ஆவின் கொட்டகையும் இறைபிரசன்னம் மிகுந்த இடங்களாயின. எங்கும் கடவுளைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது. (யோவா 4:21) என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தை இங்கு நிறைவேறுகிறது. கடவுள் மனுமைந்தர் ஆனதால் அவரது வாசமும் உலகினில் வந்தது. (வெளி 21:3). கடை நிலையில் வாழ்ந்தோர் முதல்நிலை என்னும் அங்கீகாரத்தினை இயேசு கிறிஸ்துவின் பிறப்பால் பெற்றுக்கொண்டனர். நமது பார்வையும் விரிவடைந்து நமது கரிசனைத் தளங்களும் தாழ்நிலை நோக்கி செல்லட்டும். கிறிஸ்து பிறப்பு புதிய அங்கீகாரத்தைத் தரட்டும்.

### *3. புதிய ஆளுகை* **(New Governance)** :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பால் ஆளுகைத் தலங்களில் புதிய இலக்கணங்கள் பிறந்தன. ஏசாயா இறைவாக்கினர் இவ்விதமாய் உரைக்கிறார்: ‘‘மிதியான் நாட்டுக்குச் செய்தது போல அவர்களுக்குச் சுமையாக இருந்த நுகத்தை நீர் உடைத்தெறிந்தீர்; அவர்கள் தோளைப் புண்ணாக்கிய தடியைத் தகர்த்துப் போட்டீர்; அவர்களை ஒடுக்குவோரின் கொடுங்கோலை ஒடித்தெறிந்தீர். அமளியுற்ற போர்க்களத்தில் போர் வீரன் அணிந்திருந்த காலணிகளும், இரத்தக் கறைபடிந்த ஆடைகள் அனைத்தும் நெருப்புக்கு இரையாக எரிக்கப்படும். ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்’’ (எசா 9:4-6). இயேசு கிறிஸ்துவாகிய குழந்தையைக் குறித்து ஏசாயா இறைவாக்கினர் சொல்லும் வார்த்தை நமது சிந்தனைக்குரியது. வமைமிகு இறைவன், என்றும் உள்ள தந்தை, அமைதியின் அரசர் என்கிற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள். கடவுள் வமை மிகுந்தவர். அதே வேளையில் அவர் தந்தையின் அன்பு கொண்டவர். உலகத்தில் அமைதியினை விரும்புபவர். உயர்நிலைகளில் இருக்கும் அதிகாரம் மிகுந்தோரும் கடை நிலையில் இருக்கும் அடிமைகளும் வாழும் உலகில் சமாதானம் எப்படி நிலவ முடியும். இது எப்படி சாத்தியமாகுமெனில் ஆற்றல் மிகுந்த இறைவனின் சார்பு நிலை எளியோர் பக்கம் சாய்வதால் வயோரின் அடக்குமுறையும், கொடுங்கோலும் எளியோரிடம் எடுபடுவதில்லை. ‘‘என்னுடைய எதிரிகளின் கண்முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர். என்

தலையில் நறுமண தைலம் பூசுகின்றீர், எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது'' (திபா 23:4) என்ற திருப்பாடகரின் வார்த்தை இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகிறது.

ஏசாயா இறைவாக்கினர், ''காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் சுடரொளி உதித்துள்ளது'' (எசா 9:2) என்கிற இறைவாக்கினரின் வார்த்தைகள் இயேசுகிறிஸ்துவால் நிறைவேறுகின்றன. செபுலோன், நப்த ஆகிய நாடுகள் அக்காலத்தில் தொடர் யூத்தங்களினால் சிதைந்து சின்னாபின்னமாகி இருள்நிறைந்த பூமியாய் அறியப்பட்டிருந்தது. இதுவே கலேய நாடு என்றழைக்கப்பட்டது. வரலாற்றில் ஈரான் மன்னன் இதற்கு 'குப்பைத் தொட்டிகளின் நாடு' என்று அர்த்தம் கொள்ளும் 'காபூல்' என்ற பெயரை இதற்கு சூட்டினான் (1அர 9:11,12). இயேசு கிறிஸ்து தாம் வாசம் பண்ணுவதற்காக இருள் மிகுந்த இதே இடங்களையே தெரிந்து கொண்டார் (மத் 4:13). அவர் வாசம் பண்ணியதால் காரிருள் பேரொளியாகியது.

சிறுவன் ஒருவன் கிறிஸ்து பிறப்பு பண்டிகையினை முன்னிட்டு கடைவீதிக்கு நாய்குட்டி ஒன்று வாங்கச் சென்றார். கடையில் நாய்க்குட்டிகளை பார்வையிட்டான். கொழுமையான நாய்க்குட்டிகள் கடைக்காரரின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் ஓடோடி வந்தன. சற்று தூரத்தில் நடக்க இயலாதபடி குட்டி நாய் ஒன்று நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்தது. சிறுவனின் பார்வை நொண்டி வந்த நாய்க்குட்டியின் மீது பதிந்தது. அதனுடைய விலையைக் கேட்டான். கடைக்காரர் அவனிடம் அது ஒன்றிற்கும் பயனற்றது. உன்னோடு அது விளையாடாது. கொழுமையான குட்டிகளில் ஒன்றை தெரிந்து கொள் என்று சொன்னார். ஆனால் அச்சிறுவன், ''அந்த குட்டி நாய்க்கு என்ன விலை கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டான். கடைக்காரர் மிகக் குறைந்த விலையினை சொன்றனர். ஆனால், சிறுவன் மற்ற நாய்க்குட்டிகளுக்குரிய கிரயத்தை அந்த குட்டிக்காக கொடுக்க முன் வந்தான். கேள்விக்குறியோடு அந்த கடைக்காரர் அந்த சிறுவனை ஏறிட்டு பார்த்தார். சிறுவன் சொன்னான் ''அந்த நாய்க்குட்டியை என்னால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் அந்த நாய்க்குட்டியைப் போல நானும் ஒரு கால் இல்லாதவன்'' என்று மரச்சட்டம் பொருத்தப்பட்ட தனது காலைத் தூக்கி காட்டினான். அந்த நாய்க்குட்டியை மகிழ்ச்சியோடு தன் இல்லத்திற்கு வாங்கிச் சென்றான்.

இயேசுகிறிஸ்துவின் மானிடப்பிறப்பும் இத்தகையது. நமக்காகவே வந்தார். புதிய உதயங்களை தந்தார். கிறிஸ்துவின் பிறப்பை சொந்தமாக்குவோம். புதய உதயங்களை உலகிற்குச் சொல்லுவோம்.

அருள்திரு **D.ஜஸ்டின் தேவதாசன்**

**27-12-2015** *கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு*

# குடும்பம் நலமருளும் இடம்

## FAMILY AS HEALING SPACE

தொநூ 33 : 1-11 எபே 6 : 1-9
திபா 91 லூக் 19 : 1-10

**"இன்றைக்கு இந்த வீட்டிற்கு மீட்பு வந்தது."** லூக் 19:9

***இறைவேண்டல் :*** ***குடும்பத்தை அருள்கொடையாக மனுக்குலத்திற்கு வழங்கிய கடவுளே! எங்கள் வாழ்விடங்களுக்காகவும் குடும்பங்களுக்காகவும் உமக்கு நன்றி சொல்லுகிறோம். நாங்கள் மனித வளங்களை எங்கள் குடும்பங்களில் வளப்படுத்தவும், உலக சமூகத்தோடு பகிர்ந்து கொள்ளவும், எங்கள் குடும்பங்கள் நலமருளும் இடங்களாகவும், அதன் வழியாக குடும்ப உறவுகள் சிறக்கவும் வேண்டுமென்று நாசரேத்தில் குடும்ப வாழ்வில் மகனாக வாழ்ந்த எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.***

குடும்பம் என்பது கடவுளின் அருட்கொடை. இந்தக் குடும்பம் உறவுகளால் ஆனது. ஒரு தரமுள்ள சமூகத்தை உலகில் உருவாக்க குடும்பத்தினுடைய பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக அமைகிறது. கடவுள் குடும்பங்களில் எதிர்பார்ப்பது உடல் சார்ந்தும் உளம் சார்ந்தும் ஆரோக்கியம் பெற்று கிறிஸ்துவைத் தலையாய்க் கொண்டு வாழும் வாழ்க்கை முறையே ஆகும். ஆனால் இன்று ஊடகங்களின் தாக்கத்தால் இறக்குமதி செய்யப்பட மேற்கத்திய கலாச்சாரச் சீரழிவால் உணர்வுகள் மிதிக்கப்பட்டு, உறவுகள் சிதைக்கப்பட்டு குடும்பங்கள் அதன் உண்மைத் தன்மையை இழந்து நிற்கின்றன. அன்பு, அமைதி, அரவணைப்பு, சகிப்புத்தன்மை, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுதல் போன்றவை குடும்பங்களில் குறைந்துபோய்க் காணப்படுகின்றன. இன்று குடும்ப நல நீதி மன்றங்களில் விவாகரத்து கேட்டு வரிசையில் நிற்போரின் எண்ணிக்கை தமிழகத்தில் மலிந்து காணப்படுகின்றன. இவர்களில் பெரும் பான்மையோர் கிறிஸ்தவர்கள் என்பது வேதனைக்குரியது.

கற்றுக்கொள்ள வேண்டிய இடம், ஒருவரையொருவர் புரிந்து சரிசெய்துகொள்ள வேண்டிய இடம், இன்பத்தையும், துன்பத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டிய இடம், நலம் அருள வேண்டிய இடம் தற்போது

நவீனம் என்ற பெயரில் நலிவடைந்து நிற்கின்றது. இப்படி உருவிழந்து, நலிந்து நிற்கும் குடும்பங்கள் நலம் பெற்று நானிலத்தில் நிமிர்ந்து நிற்க திருமறை காட்டும் மூன்று வழிகளைத் தியானிப்போம்.

### *1. ஒப்புரவாகுதலின் இடம் :* **(தொநூ 33:1-11)**

குடும்பங்கள் குலைந்து போவதற்கு முக்கியக் காரணியாய் அமைவது, ஒருவர் செய்யும் தவற்றை நினைவில் நிறுத்திக்கொண்டு அவற்றை தருணம் பார்த்து வெளிக்கொணர்வதேயாகும். முழுவதும் நவீனமயமாக்கப்பட்ட உலகில் ஒருவரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொண்டு ஒப்புரவாகும் தன்மை தற்காலக் குடும்பங்களில் தணிந்து போயுள்ளது. ஒப்புரவாகுதல் என்பது உடைந்த உறவைத் திரும்பப் பெறுவதாகும். அகத்தில் கசப்பையோ வெறுப்பையோ நிறுத்தி புறத்தில் ஒப்புரவை நிகழ்த்துவது ஒருபோதும் பயன் தராது. மாறாக, மனதை வெறுமையாக்கி முழுமையாக ஒருவருக்கொருவர் ஒப்புரவாக கடவுள் நம்மை அழைக்கிறார்.

விவிலியத்தில் ரெபேக்காள் தன் பிள்ளைகளிடம் காட்டிய பாரபட்சம், தவறான ஆலோசனை போன்றவை யாக்கோபு - ஏசா இடையே பிரிவைத் தேடித்தந்தது. அதே வேளையில் தனது தவறைப் புரிந்து கொண்ட போது யாக்கோபு ஏசாவோடு ஒப்புரவாகிறார். இந்த பரஸ்பர ஒப்புரவில் எவ்வித கசப்புணர்வும், காழ்ப்புணர்ச்சியும் இல்லை.

முதலில் ஏசாவின் ஆஸ்திக்கும், ஆசிக்கும் ஆசை கொண்ட யாக்கோபு ஒப்புரவாகிய பின்னர், தன் ஆஸ்தியை ஏசாவோடு பகிர்ந்துகொள்ள முன் வந்தார். அதற்கு ஏசா, எனக்குப் போதுமானது உண்டு. உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றார் (தொநூ 33 : 9).

ஏசாவின் இந்த வார்த்தையை மட்டும் எல்லாக் குடும்பங்களும் நடைமுறைப் படுத்தினால் சொத்து சண்டைகளும், சகோதரச் சண்டைகளும் ஏற்படா என்பது திண்ணம்.

தன்னைக் கொலை செய்ய தேடிய (தொநூ 27 : 41) ஏசாவின் முகத்தில் கடவுளின் முகத்தை காண செய்தது ஒப்புரவே ஆகும்.

ஒப்புரவு, சகோதர உறவுகளுக்குள் மட்டும் நடப்பது அல்ல. குடும்பத்தின் எல்லா உறவுகளுக்கும் அவசியமானது. தூய பவுல் 1கொரிந்தியர் 7 : 11 -இல் கணவன் - மனைவி இருவருக்கும் இடையேயான ஒப்புரவை முக்கியப்படுத்துகிறார்.

இன்று பெருவாரியான குடும்பங்கள் சிதைவடைவதற்கு ஒப்புரவின்மையே காரணியாய்த் திகழ்கிறது. கர்வம், வீண் பெருமை, ஆணவம், அகங்காரம் போன்றவை ஒப்புரவுக்குத் தடையாக இருக்கின்றன. இவைகளை விட்டொழிக்க இறைவன் நம்மை அழைக்கிறார்.

## 2. ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும் இடம் : (லூக் 19 : 1-10)

ஒருவரையொருவர் புரிந்து கொள்வதே ஏற்றுக்கொள்ளுதலின் முதற்படி எனலாம். அல்லலுறும் குடும்பங்கள் அக்களிப்படைய நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளுதல் அவசியமாகிறது. கடவுள் ஏற்படுத்திய குடும்பத்தில் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் போன்ற உறவு முறையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை களைந்து உள்ளபடியே ஒருவரை யொருவர் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு குடும்பங்களிடையே குறைந்து வருகிறதைக் காண்கிறோம். இன்றைய சூழலில் ஒருவரது அந்தஸ்து, குடும்பப் பெருமை, பொருளாதார வலிமை போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டே உறவுகளைத் தீர்மானிக்கிறோம்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, சமூகத்தில் பாவி என முத்திரையிடப்பட்டு உறவுகளால் உதாசீனம் செய்யப்பட்ட சகேயுவைத் தம்மிடமாய் ஏற்றுக்கொள்கிறார். இயேசு கிறிஸ்து சகேயுவை ஏற்றுக்கொண்டதின் வாயிலாக நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால், ஒருவரை ஏற்றுக்கொள்வதற்கு எதுவுமே தடையாய் இராது என்பதைத்தான். தன் தவறை உணர்ந்த சகேயு அவற்றை அறிக்கையிட்டு தன்னை கிறிஸ்துவிடம் ஒப்படைக்கிறார். அப்படியானால் ஒருவரை தெளிவுறப் புரிவதும், ஒருவரில் உளம் சார்ந்து எழும் மாற்றமுமே ஏற்றுக்கொள்ளுதலின் அடையாளமாக இருக்கிறது. இந்த அடிப்படையில் மாற்றம்பெற்ற ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ள பிலமோனை வலியுறுத்துகிறார் பவுலார். (பிலே.)

## 3. ஒன்றித்து வளரும் இடம் : (எபே 6 : 1-9)

தூய பவுல் எபேசுத் திருச்சபை மக்களுக்கு உறவுகளின் உண்மைத்தன்மையையும், உன்னதத்தையும் விவரிக்கிறார். பெற்றோர், பிள்ளைகள், பணியாளர்கள், எஜமான்கள் என எல்லோரும் இறைப் பயத்தோடே இறைவனை முன்னிறுத்திச் செயல்பட அழைப்பு தருகிறார். எல்லா உறவுகளும் பின்பற்ற வேண்டிய மாதிரியாக, கடவுள் தம் உறவையே காட்டுகின்றார்.

ஒன்றித்து வாழ்வதும், வளர்வதும் நன்மை, இனிமை போன்ற நற்றகவுகளை நல்கும் நன்மாதிரி என்பதே தாவீதரசனுடைய அனுபவத்தின் அறைகூவலாகும் (திபா. 133 : 1).

கடவுள் காட்டும் உறவில் பாரபட்சம் இல்லை. தற்கால குடும்பங்களில் பெற்றோர் - பிள்ளைகள், கணவன் - மனைவி என உறவுகளுக்கு எல்லைகளையும் வரையறைகளையும் வகுத்து ஒருவரையொருவர் மிகைப்படுத்தியும், வேறுபடுத்தியும் காட்டுகிறோம். உறவுகளோடு பயனுள்ள விதத்தில் நேரம் செலவளிக்காமை, குடும்பமாக இணைந்து ஆலயம் செல்லாமை, வழக்கொழிந்து வரும் குடும்ப இறை வேண்டல், ஒருவேளை உணவைக் கூட இணைந்து உண்ணாமை எனக் குடும்பங்கள் பின்பற்றி வரும் இத்தகைய நடைமுறையால் உறவுகள் இணைந்து வளர்வது சாத்தியமற்றுப் போகிறது. இது இறைவனின் பெருவிருப்பத்திற்கு எதிரானது என்பதை உணர அழைக்கப்படுகிறோம்.

குடும்பம், படைப்பில் வெளிப்பட்ட கடவுளின் பெரு நோக்கு. கடவுளின் திட்டப்படி அது நலமருளும் இடம். இப்படிப்பட்ட குடும்பத்தின் மேன்மையை மாண்பை இறை வார்த்தை சார்ந்து பேணவும் உறுதிப் பூணவும் கடவுள் திருமுன் நம்மை ஒப்படைப்போம்.

திரு. R. **ஜெஸ்பேன் ராபின்**

**31-12-2015** ***ஆண்டு இறுதி நாள்***

# ஆண்டவரிடம் வாருங்கள் அகமகிழுங்கள்
## COME TO THE LORD AND REJOICE

இச 26:1-15 | 2கொரி 1 : 3-11
திபா 103:1-13 | லூக் 17:11-19

**"நீயும் லேவியரும் உன்னோடு உள்ள அந்நியரும், கடவுளாகிய ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளை முன்னிட்டு அக்களியுங்கள்"** இச 26:11

**இறைவேண்டல் :** ***ஆற்றல் நிறைந்த கடவுளே! நன்மைகளைத் தந்து காலங்கள் வழியாக தந்த அனைத்து அருட்வளங்களுக்காக உம்மைப் போற்றுகிறோம். நம்பிக்கையற்ற சூழலில் வாழும் நாங்கள் உம்மோடு இணைந்து உம்மில் அகமகிழ அருள்புரிய வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் எல்லா காலமும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.***

2015 -ம் ஆண்டில் பல்வேறு சவால்களையும் எதிர்பார்ப்புகளையும் மேற்கொண்டு நல்ல எதிர்நோக்குடன் இந்த ஆண்டை நாம் தொடங்கியிருப்போம். ஆனால் நம் வாழ்வில் வந்த தடைகள் , ஏமாற்றங்கள், இழப்புகள், இன்ப துன்பங்கள், வெற்றி தோல்விகள், நலம் நலமின்மைகள் என அனைத்தையும் தாண்டி இறைவன் இம்மானுவேலராக நம்மோடு இருக்கின்றார் என்பதையும், கடவுளாகிய ஆண்டவர் தந்த நன்மைகளை முன்னிட்டு அகமகிழ்ந்தோம் என்பதையும், கிறிஸ்தவ வாழ்வில் இவைகளினூடே நாம் பயணிக்கிறோம் என்பதையும் புரிந்து கொண்டோம். இவ்வாண்டிறுதி தொழுகையிலும் கடவுளை தொழுதுகொள்ள அருளையும் ஆயுளையும் பெற்று, ஆண்டவரிடம் வந்த நாம் எவ்வாறு ஆண்டவருக்குள் தொடர்ந்து அகமகிழ்கிறோம் என்பதை தியானிப்போம்.

### *1. துன்பத்தின் வழி அகமகிழ்வோம்* (இச 26:6)

துன்பத்தின் வழியாக அகமகிழ்வது ஒரு கடுமையான செயல். வாழ்க்கை இன்பமும், துன்பமும் இணைந்தது. துன்பத்தை தவிர்க்க இன்பத்தை மட்டும் காண முயற்சிப்பது தோல்வியைத் தரும். ஆயினும் துன்பத்தில் இறைத்துணை நாடி வாழ்வில் முன்னோக்கிச் செல்வது அகமகிழ்வை தரும். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் கடினமான அடிமை வேலை செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். அப்போது இவர்கள்

கடவுளாகிய ஆண்டவரை நோக்கி குரல் எழுப்பினார்கள் (விப 2:23-25). ஆண்டவர் அவர்களுடைய குரலை கேட்டு, அவர்களுடைய துன்பத்தையும், வருத்தத்தையும், வேதனையையும் கண்டு தம் வலிய கரத்தாலும், ஓங்கிய புயத்தாலும், அஞ்சத்தக்க பேராற்றலாலும், அடையாளங்களாலும், அருள் செயல்களாலும் எகிப்திலிருந்து பாலும் தேனும் வழிந்தோடும் கானான் நாட்டிற்கு புறப்பட செய்தார் (இச 26:6-9). யோசேப்பு 17 வயதாக இருக்கும் போது தம் சொந்த சகோதரர்களால் ஆழ்குழியில் தள்ளப்பட்டார். காசுக்காக இஸ்மவேலரிடத்தில் விற்கப்பட்டார் (தொநூ 37:23,28). தம் சகோதரர்களைப் பார்த்து, ''நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பது போல் திரளான மக்களை உயிரோடே காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்'' என்று கூறினார் (தொநூ 50:20). யோசேப்பு எல்லாத் துன்பங்களையும் கடவுளுக்காக அதை அகமகிழ்வோடு ஏற்றுக் கொண்டு எகிப்தின் ஆளுநராக உயர்த்தப்பட்டார் (தொநூ 41:37-57). புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து சிலுவையைச் (துன்பம்) சுமந்தார். சீடர்களுக்கும் துன்பத்தையும் சிலுவையையும் குறித்து தெளிவாக போதித்தார் (மத் 16: 21-28). உலகில் உங்களுக்கு துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள், நான் உலகின் மீது வெற்றிக்கொண்டு விட்டேன் என்று கூறினார் (யோவா 16 :33b). இயேசு நாதர் மலைப்பொழிவில், ''என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி உங்களைப் பற்றி இல்லாத பொல்லாதவைகளை எல்லாம் சொல்லும் போது நீங்கள் பேறுபெற்றவர்களே. மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்'' (மத் 5: 11-12) எனப் போதித்தார். தூய பவுலார், ''என் வலுவின்மையிலும் , இகழ்ச்சியிலும் இடறலிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு அகமகமகிழ்கிறேன்'' என்று கூறுகிறார் ( 2 கொரி 12:10). தூய பேதுரு, துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும் போது ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டது என வியக்காதீர்கள், மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்'' (1பேது 4: 12-16) எனக் கூறுகிறார். முன்னாள் மதுரை பேராயர் தேவதாஸ், ''ஆண்டவர் தம்மை துன்பங்களிலிருந்து விடுவியாமல் துன்பங்களோடே விடுவிக்கின்றார்'' என்று கூறினார். இஸ்ராயேல் மக்கள் துன்பத்தை அனுபவித்தாலும் இன்பத்தை கண்டு அகமகிழ்ந்தார்கள். யோசேப்பு துன்பப்படுத்தப்பட்டதால் இன்பத்தை கண்டு அகமகிழ்ந்தார். நன்மை, நீதி குடும்பத்தில், சமூகத்தில், திருச்சபையில் செய்யும் போது துன்பம் வரும். துவண்டு போகாமல் ஆண்டவரிடம் வந்து புதிய ஆண்டில் அகமகிழுவோம்.

## 2. நம்பிக்கையின் வழி அகமகிழுவோம் (2 கொரி 1:9)

ஓர் கிறிஸ்தவர் கிறிஸ்துவைப் போல் துன்புறுவதற்கும் இறைவனிடம் நம்பிக்கை கொண்டு வாழ்வதற்கும் அழைக்கப்பட்டவர். ஆசியாவில் பெரும் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்த கொரிந்து திருச்சபை மக்கள், கடவுள் தாம் எங்களைக் காப்பாற்றினார் என்ற நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர் (2கொரி 1:5,6, 8-11). நாம் அவ்வாறு காப்பாற்றபடுவதால் நம்பிக்கையுடையவர்களாய் வாழ அழைக்கப் பட்டிருக்கின்றோம். துன்பங்கள் நிகழும் போது முழுமையான நம்பிக்கையை விடாமல் இருக்க வேண்டும். யோபுவிற்கு நிகழ்ந்த துன்பம் போல் நாம் நினைக்க வேண்டும். கடவுள் நம்மைத் தண்டிக்கிறார் என்றோ, கடவுள் நம்பிக்கையில் பயனில்லை என்றோ நினையாமல் எல்லா மக்களுக்கும் நிகழ்வது போலவே கடவுள் நம்பிக்கையுடையவருக்கு துன்பங்கள் நிகழும் என்னும் தெளிவுடன் அந்நேரங்களில் கடவுள் பெயரில் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அதுவே உண்மையான நம்பிக்கை என்று நாம் அறிய வேண்டும். கடவுள் விடுவியாமல் போனாலும், அவர்மேல் நம்பிக்கையாய் இருப்போம் என்று சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கூறியதை நினைவில் கொள்வோம். எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் நம்பிக்கையின் மேன்மையை குறித்து சொல்லப்படுகின்றது. சிலர் தோல்வியையும் வெற்றியையும் அகமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நாம் உணரலாம் (எபி 11 :33-40). தூய பவுலைப் போல தீராத துயரங்கள் வரினும், "என் அருள் உனக்கு போதும்" என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து, அதில் உறுதியாய் இருப்போம் (2கொரி 12:7-10). அற்புதம் நிகழவேண்டுமென விரும்பி ஒரு பிரசங்கியாரிடமிருந்து மற்றொரு பிரசங்கியாரிடம் செல்வதும், ஒரு அற்புத சுகம் அளிக்கும் கூட்டத்தினின்று மற்றொரு கூட்டத்திற்கு செல்வதும் நமது நம்பிக்கையின்மையை காட்டுகிறது. நம்பிக்கையை குறித்து யோக்கோபு எழுதிய கடிதத்தில், நம்பிக்கையும் நற்செயலும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை குறிப்பிடுகின்றார்(யாக் 2:14-17), புதிய ஆண்டு நம்பிக்கையின் வழியாக ஆண்டவரிடம் வந்து அகமகிழுவோம்.

## 3. நன்றியுள்ள வாழ்வு வழி அகமகிழுவோம் (லூக் 17:14)

இயேசுநாதர் கலிலியோ, சமாரியா வழியாக எருசலேமுக்கு சென்று கொண்டிருந்த போது 10 தொழுநோயாளிகள் ஆண்டவரிடம் வந்து 'எங்களுக்கு இரங்கும்' என்று உரக்க குரல் எழுப்பி வேண்டினார்கள். அவர் அவர்களை பார்த்து, "நீங்கள் போய் உங்களை குருக்களிடம் காண்பியுங்கள்" என்றார். அவர்கள் புறப்பட்டு போகும் போது அவர்கள்

நோய் நீங்கிற்று. அவர்களுக்குள் ஒருவர் தம் பிணி தீர்ந்துவிட்டதைக் கண்டு உரத்தக் குரலில் கடவுளை போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து, அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியர். இயேசு அவரை பார்த்து, ''பத்து பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றி புகழ அந்நியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பி வரக் காணோம்'' என்றார். 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல அன்றே மறப்பது நன்று' என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறம் அன்று, அவர் செய்த தீமையை ெ மறப்பதே அறம் என்று இக்குறள் விளக்கம் தருகிறது. நாமும் ஆண்டவரிடம் வந்து ஆண்டவர் செய்த நன்மைகளை முன்னிட்டு நன்றி வாழ்வு வாழ்ந்து அகமகிழ்வோம்.

புதிய ஆண்டில் யாராலும் ஏமாற்றப்படாதவாறு, யாரையும் ஏமாற்றாமல் புதிய சிந்தனையோடும் புதிய படைப்போடும், புதிய காட்சியோடும் துன்பம் வந்தாலும் நம்பிக்கையோடு நன்றியுள்ள வாழ்வு வாழ்ந்து அகமகிழ கடமைப்பட்டிருக்கின்றோம். ஏப்ரல் 17, 2005-ல் வெளிவந்த the week ஆங்கில வார இதழில் சூனிய காரர்கள், மந்திர வாதிகள் , மாயாவிகள், குறிசொல்லுபவர்கள் (wizards) பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. 28 ஆண்டுகள் பொதுவுடமை கட்சி ஆட்சிபுரிந்த மேற்கு வங்கத்தில், நிமித்திகர், மந்திரவாதிகள்ஆகியோர் தங்கள் தொழிலில் தழைத்து வருவதாகவும், அவர்களில் சிலர் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 15 கோடி வரை சம்பாதித்து வருவதாகவும் அக்கட்டுரை கூறப்பட்டிருந்தது. இதில் அரசியல்வாதிகள் வெற்றி வாகை சூடுவதற்காகவும், தொழில் அதிபர்கள் தங்கள் தொழிலில் லாபம் வந்து குவியவும் இவர்களைத் தேடி வருகின்றார்கள். பெரிய நன்மைகளைக் கொண்டு வருவதற்காக மந்திரிக்கப்பட்ட சிறப்பு தாயத்துக்கள், வைரம், வைடூரியம் , கேமேதகம் போன்றவை இவர்கள் விற்கின்றார்கள். இவ்வாறு தெய்வீக சிறப்பு ஆற்றல்களை (special divine powers) பெற்றவர்களாகத் தங்களை காட்டிக்கொள்ளும் மாயாவிகள் பெரும் பணக்காரர்களாக இருக்கின்றனர். நாத்திகர்களும் புறசமயத்தவர்களுமாக மேற்கு வங்க மக்கள் மத்தியில் தழைத்து வரும் இந்த மூட நம்பிக்கைகள் கிறிஸ்தவத்தில் இல்லையா? அவர்கள் போன்ற மாயாவிகளும் நிமித்திக்காரர்களும் இறை(டை)த்தரகர்களும் கிறிஸ்தவத்திலும் பெரும் அளவில் இருக்கின்றனர், வளர்ந்தும் வருகின்றனர் என்ற விடையே நமக்கு கிடைக்கின்றது. கடவுளுடைய சிறப்பு ஆற்றலை நாங்கள் பெற்றிருக்கிறோம்

எங்களுக்கு குணமாக்கும் வரம், அற்புதங்களை செய்யும் வரம், வரப்போவதை முன்னறிவிக்கும் வரம் ஆசி வழங்கும் வரம் எல்லாம் உண்டு. கடவுள் எங்களோடு (உங்களோடு அல்ல) நேரடி தொடர்பு கொண்டுள்ளார் என்று மக்களிடையே தங்களை இறை(டை)த்தரகர்களாக அறிமுகப்படுத்துகின்றனர். துரஅதிஷ்டங்கள் துன்பங்கள், நோய்கள், தோல்வி, நஷ்டங்கள் அனைத்தும் நீங்க வேண்டும் என்றும், இன்பம், சுகம் வெற்றி லாபம், குழந்தைச் செல்வம் இவைகள் கிடைக்க வேண்டும் என்று இந்த மாயாவிகளை மக்கள் நாடுகின்றனர். இந்த கிறிஸ்தவ மாயாவிகள் மக்களை திருப்திபடுத்தும் வகையில் வாக்குறுதிகளை அள்ளி வீசி , புற சமய மாயாவிகள், தாயாத்துகளையும் கற்களையும் விற்பதுபோல இவர்களும் தங்க சாவி , கிருபாசன பெட்டி , கைக்குட்டை, அபிஷேகம் செய்யப்பட்ட செங்கல் போன்றவைகளை விற்பனைக்கு முன் வைக்கின்றார்கள். இவர்கள் தங்கள் சுய விளம்பரத்திற்காக தொலைகாட்சியை நாடுகின்றனர். இவர்கள் வெற்றி லாபம் , சுகம், ஆசி , செல்வம், இவைகள் மட்டுமே கூறி மக்களை ஏமாற்றி வியாபார பக்திக்கு (commercialized piety ) இழுத்துச் செல்லுகின்றனர். வாழ்வோர் தாழ்வோர், இன்பமோ துன்பமோ, வெற்றியோ தோல்வியோ, சுகமோ சுகவீனமோ எதுவுமே கிறிஸ்துவின் அன்பை விட்டு எங்களை பிரிக்காது என்ற கிறிஸ்துவின் செய்தியை இந்த மாயாவிகள் கொடுப்பதில்லை. அன்புள்ள கடவுளை அணுக அவர் விருப்பம் அறிய , நிவிர்த்திகாரர்களும் இறை(டை)தாரர்களும் தேவையில்லை என்பதை உணர்ந்து, ஆண்டவரிடம் வந்து ஆண்டவரோடு குடும்பமாக, சபையாக புதிய ஆண்டில் நுழைவோம்.

அருள்திரு **T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

# மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெறும் திருச்சபை

திருமறைப்பாடம் : திப 4:32-37

**"அவர்கள் அனைவரும் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர்..... மக்கள் இவர்களைப் பற்றிப் பெருமையாக பேசினர்" திப 4:33;5:13ஆ**

நான் மிகவும் பின்தங்கிய கிராமப்பகுதி ஒன்றில் அமைந்துள்ள திருச்சபையில் உறுப்பினன். இளைஞர் பணி, நற்செய்தி மன்றம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்தேன். கிறிஸ்து பிறப்பு காலம் பவனிப்பாடல் (41 நாட்கள்) காலத்திலும், பிற முக்கிய நிகழ்சிகளின் போதும் திருச்சபைக் கட்டிடத்திலும் சபை வீட்டிலும் பிற இளைஞர்களுடன் தூங்கி எழுந்த பல இரவுகள் இன்னும் பசுமையான நினைவுகளாய் நிற்கின்றன. கட்டிட பணிகள் நடந்தபோது கடற்கரையிலுள்ள கைதைப்படப்பின் கீழ் படுத்து அதிகாலைக் குருத்து மணல் அள்ளியது முதல் வெளியிடங்களில் சென்று நன்கொடை வசூலித்தது வரை பல்வேறு நிகழ்வுகள் நினைவிலுள்ளன,

பல குறைகள் இருந்தாலும் என் ஊர் திருச்சபைக்கு நான் பெரிதும் கடன் பட்டவன். இசைப்பயிற்சி, திருப்பணிக்கு ஒப்படைக்க தூண்டல் முதலிய நல்லப் பயன்களை இத்திருச்சபை அளித்துள்ளது. கிராமிய முன்னேற்ற இயக்கம் ஒன்றின் ஆயத்தக் கூட்டம் இத்திருச்சபையிலேயே நடந்தது. வெளியூர்களிலும், வெளி நாடுகளிலும், வாழ்ந்தாலும் நானும் என் குடும்பத்தவரும் எங்கள் ஊர் திருச்சபையைப் பெரிதும் நேசிக்கிறோம்.

எங்கள் திருச்சபையின் வழியாக நடைபெறும் நல்ல பணிகள், நல்ல திருப்பணியாளர்-போதகர்களை முன்னிட்டு கிறிஸ்தவரல்லாத ஊர்மக்கள் மெச்சிப் பேசுவதை அறிந்து என் நெஞ்சம் மகிழும், பிரிவினை சண்டை, சச்சரவுகள் முன்னிட்டு அவர்கள் முகம் களித்துக் கொள்வதைப்பார்த்து என் உள்ளம் உடைந்து உருகும். இப்படியிருக்க நிறை குறைகள் நடுவிலும் கடவுள் இந்த ஊர் திருச்சபையைப் பற்றி ஒரு நல்ல நோக்கு வைத்திருக்கிறார். புண்பட்ட நம் உடலைக் கிறிஸ்து புறக்கணிக்கவில்லை என்ற நம்பிக்கையுடன் என் ஆன்மிகப் பயணம் என் சொந்த சபையோடு இணைந்து தொடர்கிறது.

தொடக்கத் திருச்சபையின் அனுபவம் ஒவ்வொரு ஊர் திருச்சபைக்கும் ஓர் உந்துதலாயிருக்கிறது. நாம் எடுத்துக் கொண்ட விலியப் பகுதியின் அடிப்படையில் சுற்றுப்புறத்தில் உள்ள பொதுமக்களின் நல்லெண்ணத்தை பெற ஓர் ஊர் திருச்சபை மூன்று உண்மைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

### *1. ஒரே உள்ளம் ஒரே உயிர் :*

பல்வேறு பின்னணிகள், தகுதிகள், மனப்பாங்குகள் உடையவர்கள் ஒரு திருச்சபையின் ஒரே உள்ளம், ஒரே உயிர் ஆக இருக்க முடியுமா ? ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் முடியாது. ஆனால் எல்லோரும் சேர்ந்து கிறிஸ்துவை பார்த்தால் இது இயலக்கூடியதே. அடிப்படையில் "சுயநலம்" என்னும் நச்சுப் பாம்பை சிலுவையின் ஆணிகளைப் பாய்ச்சி கொன்றுவிட வேண்டும். திருச்சபை மக்களின் ஒற்றுமையை முன்னிட்டு தான் ஒரு திருச்சபை புனிமாகிறது என்ற அடிப்படை உண்மை மனத்தில் இருத்தல்

நல்லது " வெளியிலுள்ள குப்பை கூளங்களை சபையிலே கொண்டு வந்து குவிக்காதீர்கள்" என்ற அறிவிப்பு அங்கு வரும் ஒவ்வொருவருடைய இதயத்திலும் எழுதப்பட வேண்டும். நம்மில் ஒற்றுமையும் ஒருமனமும் இல்லையேல் நாம் இயேசு கற்பித்த இறைவேண்டலை மனதார ஏறெடுக்கவே இயலாது. சபையின் ஒருமையை குலைத்த அனனியா -சப்பீரா, தங்கள் சுயநல வேட்கையால், சாகடிக்கப்பட்டார்கள். உடனே திருச்சபையார் யாவரையும், இதை கேள்வியுற்ற அனைவரையுமே பேரச்சம் ஆட்கொண்டது. (திப 5:11). ஏன் இந்த அச்சம் இக்காலத்தில் இல்லை ? பெருவாரியானோரும அனனியா- சப்பீராவாக இருப்பதுதான் காரணமா?

### 2. உயிர்த்தெழுதலின் மக்கள் :

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கல்லறையின் வெளியே காணமுடிந்தது. பேடிகள் பேராற்றல் பெறும்போது, வேறுபட்டவர்கள் ஒன்றுபடும்போது உறங்கி கிடப்பவர்கள் உற்சாகமாக இயங்கும் போது கிறிஸ்துவைக் காணலாம். உயிர்த்தெழுதலின் ஆற்றல் கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கேற்க நம்மை ஏவ வேண்டும் (பிலி 3:10) .இங்கிலாந்து நாட்டில் (உயிர்த்தெழுதலின் மக்கள்) என்ற பெயரில் ஆண்டுக்கொரு முறை, தூய வாரத்தைத் தொடர்ந்து வரும் வாரத்தில் கடற்கரை பகுதியான ஓர் இடத்தில் ஆயிரக்கணக்கில் கூடுகிறார்கள். பாடுவதும், ஜெபிப்பதும் திருவசனச் சிந்தனையும் ஒரு புறமிருக்க, மறுபுறம் தங்கள் சமூகத்தில் நடமாடும் பேய்களை ஓட்ட , அழுக்கை அகற்ற கிறிஸ்தவர்களாக என்ன செய்யலாம் என்று சிந்தித்து திட்டமிடுவார்கள் . குமரி மாவட்டச் சூழலில் அப்படி ஒரு திட்டம் ஏற்பட்டால் (எகா) வடசேரி பேருந்து நிலைய பல ஆண்டுகளாக குண்டு குழிகள் அழுக்குகளோடு பயணிகளை ஆட்டிப்படைப்பதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர கிறிஸ்தவர்கள் என்ன செய்யலாம் என்ற முடிவு ஏற்படலாம். ஓதுக்கப்படும் பணம் எங்கு போய் சேருகிறது. அவ்வப்போது மேல் தளத்தில் இலேசாக மணபோட்டு மூடி, மழை வெள்ளம் வந்து அதைச் சேறாக்கி , நிலைமையை மேலும் மோசமாக்கும் மர்மம் என்ன, எங்கிருந்து ஆய்வைடத தொடங்கி எப்படி பிரச்சனைக்கு முடிவு கட்டலாம், முதலிய கேள்விகளைக் கேட்டு கிறிஸ்தவர்கள் உற்சாகத்துடன் செயல் பட்டால் கிறிஸ்தவரல்லாதப் பொதுமக்களின் நல்லொண்ணத்தைப் பெறலாம் அல்லவா? அதுபோல உள்ளூர் தளத்தில் இருக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் சபை மக்கள் முன்னணியில் இருக்கலாமே,

### 3. உடைமைகள் பகிர்வு:

தூய ஆவியின் நிரப்புதால் ஏற்பட்ட பரவச உற்சாகத்தாலும் தியாகமிக்க ஒப்படைப்பாலும், உடைமைகளைப் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளும் உயரிய செயல்பாடு மலர்ந்தது. பர்ணபா ஒரு செல்வந்தராயிருந்தும் தம் உடைமைகளையெல்லாம் விற்று பொது நிதியில் சேர்க்க திருவடியார் பாதங்களில் படைத்தார். இந்தச் செயல்பாடு இன்று எங்கே? என இதை தெரிந்தவர்கள் கேட்பது நியாயமே. இதையொட்டிய வரலாற்றை தாழ்மைசூயாடு எடுத்துக் கூற வேண்டும். உணவுப் பந்தியில் பரிமாறுவதிலேயே பிரச்சனை ஏற்பட்டது. பல இனத்தவர் பண்பாட்டவரிடையே திருச்சபை பரவியபோது பொதுவுடமையைச் செயல்படுத்துவது மிகவும் கடினமாகப்பட்டது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் எதிர் பார்த்த படி உடனே நிகழவில்லை. பொதுவுடமைக் கொள்கைகர்ன காட்சி விவிலியத்திலிருந்து எழுந்ததே ஆனால் பொதுவுடமைக் (கம்யூனிசம்) கொள்கையின் அடிப்படையில் கூட்டி இணைக்கப்பட்ட சோவியத் யூனியன் உடைந்துவிட்டது. இக்கொள்கையை ஓரளவில் நிறைவேற்றும் நாட்கள் வறுமை ஏற்றத்தாழ்வுகளுக்கு விடை காண முடியாமல் திணறுகின்றன. முதலாளித்துவமும், உலகச் சந்தை ஏற்பாடும் தான் இன்று வெற்றிபெற்று ஆட்டிப்படைக்கின்றன. இதனால் எளியோர் - வலியோர் இடையே இருக்கும் பிளவு பெரிதாகிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் நம் ஊர் சபை என்ன செய்யலாம் என்று ஜெபித்தோடு சிந்தனை செய்ய வேண்டும். முதலாளித்தவ நாடுகளின் ஆக்கிரமிப்பும் பல்துறைகளில் தனியார்மயமாகின்ற நிலை சுரண்டலும் ஆண்டவரின் ஆட்சிக்கு எதிரானவை என்பதை அருளுரைகளிலும் உரையாடல்களிலும் எடுத்துக் கூற வேண்டும். இயேசு சீக்கிரம் வரப் போகிறார் என்று பரவசமூட்டி அப்பாவி விசுவாசிகளை சுரண்டி, தங்களின் பணம், சொத்து, சுகம் ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று பார்த்துக் கொள்வோரின் மாய்மாலத்தை அம்பலப்படுத்த வேண்டும். இந்த அடிப்படை உண்மைகளை அறிந்து ஆர்வத்தோடும் தூய ஆவியின் துணையோடும் சொல்லத் தெரியாதவர்களை அருளுரையாற்ற அனுமதிக்க கூடாது. மேலும் கிறிஸ்து பிறப்பு காலத்தில் விதவைச் சேலை, கல்வியாண்டில் தொடக்கத்தில் ஏழை மாணவர்களுக்கு படிப்புதவி, திருமண உதவி முதலியவற்றை செய்வதுடன் நம் சமூக கடமை முடிந்தது என்று நினைப்பது அபாயகரமானது. நம் சபை வருவாயில் கணிசமான அளவு சமுக் மறுமலர்ச்சிப் பணிகளுக்காக கொடுக்கப்படுகிற அளவில் சபை நிருவாக, திருப்பணி முறைகளை விவிலிய அடிப்படையில் மாற்றுருவாக்கம் செய்ய வேண்டும். சமூக மேம்பாடு, மறுமலர்ச்சி என்றவுடனேயே அதற்கு வெளிநாட்டுப்பணம் வந்தால் தான் என்பது நம் பிற்போக்குச் சிந்தனையையே வெளிப்படுத்துகிறது. சபையாக ஆயர்வட்டமாக, பேராயமாக நாம் உண்மையுடன் மிகக் கூடியமட்டும் முயற்சி செய்தால், சபைக்கு வெளியிலுள்ளவர்கள் நம்மை மெச்சுவார்கள். புரிந்து கொள்வார்கள்.

இலட்சிய காட்சிகளை மூச்சு விடாமல் பேசி ஒலிபெருக்கியின் மூலம் சமூகத்தில் இரைச்சலை ஏற்படுத்துவதால் நம் சபை ஊருக்கு நச்சரிப்பாகவே இருக்கும். ஒரு பக்கம் பக்தி பரவசம் எழுப்பி மறுபக்கம் அதிகாரம் - ஆளுகைத் தளத்தில் அரசியல் தில்லுமுல்லு காட்டினால் ஊர்மக்கள் முகம்களித்தக் காறித் துப்பத்தான் செய்வார்கள். சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பது இயேசுவின் அடியார்களாகிய கடவுளின் பிள்ளைகளுக்குரிய தாரக மந்திரம் என்று மனத்தார ஏற்றுக் கொள்ள வேண்டமூ. ஊரிலுள்ள அனைவரும் உலகிலுள்ள அனைவரும் திருச்சபை உறுப்பினர்கள் ஆகப் போவதில்லை. ஆனால் அவர்கள் நல்லெண்ணத்தை பெறும் அளவில் அவர்கள் நம்மைப் பற்றியப் பெருமையாகப் சூபசி கொள்ளும் அளவில் நாம் வாழ்வதும் செயல்படுவதும் இயேசு சீடத்துவ வாழ்வில் மிகவும் குறைந்த பட்சம் நாம் செய்யக் கூடியதாகும். ஆண்டவர் பலத்தால் அப்படிச் செய்ய நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. அறிவர். **இஸ்ரயேல் செல்வநாயகம்**

*சங்கவிழா*

# ஒப்படைப்புடன் கொடுப்போம்

தொநூ. 4 : 1-7 2கொரி. 8 : 1-8
திபா. 67 லூக். 21 : 1-4

**“அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்ட போதும் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள், அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள்.”** 2கொரி 8 :2

கடமைக்காக மட்டும் தங்கள் பணிகளைக் கவனிக்கின்ற சூழல் அனைத்து நிலைகளிலும் அதிகரித்து வருகின்றதை நம்மால் அறிய முடிகின்றது. கடவுளைத் தொழுது கொள்வதிலும் கடவுளுக்கென்று காணிக்கை படைப்பதிலும் கடமைக்காக செயல்படுவதைக் கடவுளின் மக்கள் என்று சொல்லிக் கொள்கின்ற மக்களின் வாழ்வில் காண இயலும். ஆசிவழங்கி ஆற்றல்படுத்தி வழிநடத்தும் கடவுளுக்கு நன்றி செலுத்தவதற்காக வழிபடும் இடத்தில் திருப்பணிக்கொடை கொடுப்பது தொன்று தொட்டு நிகழ்ந்து வருவதை திருமறை தெளிவாக கற்றுத்தருகிறது.ஆண்டிற்கு இருமுறையாக அறுப்புகால பண்டிகை என்று ஆசரித்து செலுத்தப்படுகின்ற காணிக்கைகளின் (வி.ப. 23 : 16) தொடர்ச்சியாக சங்கப்பண்டிகை திருச்சபைகளில் வருடத்திற்கு இருமுறை ஆசரிக்கப்பட்டு கடவுளுக்கு நன்றி செலுத்துகின்ற பேற்றினை கடவுளின் மக்களுக்கு திருச்சபைகள் ஏற்படுத்தித் தருகின்றன. ஒப்படைப்புச் சிந்தனையோடும் உயிரோட்டத்தோடும் காணிக்கை படைத்த நிலையிலிருந்து மெல்ல மெல்ல விலகி, கடமைக்காகவே சங்கவிழா ஆசரிக்கின்றோமோ என்ற கேள்வியும் எழாமலில்லை. கடவுளுக்கு நன்றி செலுத்தவதற்காகவா? அல்லது திருச்சபையின் முழு உறுப்பினர் நிலையை உறுதிபடுத்துவதற்காகவா? என்ற குழப்பத்தில் இருந்து மீள முடியாமல் சங்ககாணிக்கை படைக்கின்ற இறைமக்களும் இல்லாமல் இல்லை. இந்நிலையில் திருப்பணிக்கொடை எப்படி படைக்கப்பட வேண்டும் என்னும் தெளிவினை புரிந்து கொள்ளுதல் பொருளுள்ள சங்கவிழாக் கொண்டாட்டத்திற்கு அடிகோலும்.

திருமறையின் வெளிச்சத்தில் நாம் புரிந்து கொள்ள முயலும் போது காயீனின் நிகழ்வு (தொ.நூல் 4:5), அனனியா, சப்பீரா நிகழ்வு (தி.ப 5 :2) காணிக்கைப் படைத்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறியை இயேசு கற்றுத் தருகின்ற நிகழ்வு (மத் 5 : 23-24) ஆகிய பகுதிகள் ஏன் காணிக்கைகள் கடவுளால் அங்கீகரிக்கப்படாமல் போகின்றன என்பதைக் குறித்த விளக்கங்களைக் கற்றுத்தருகின்றன. மாறாக, கருத்தோடு படைக்கப்பெற்ற ஆபேலின் காணிக்கை (தொநூ. 4 : 4) மாசிதோனிய திருச்சபையினரின் காணிக்கை (2கொரி. 8: 1-4) ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை ஆகியன ஏற்புடைய நிலையில் அமைந்திருந்தன. எந்நிலையில் ஏற்புடைய காணிக்கைகள் சிறப்பு பெற்றிருந்தன என்பதையும் அவை உணர்த்தும் உண்மைகளையும் சிந்திப்போம்.

### *1. ஆபேலின் காணிக்கை - முதன்மையானது மட்டுமல்ல முழுமையானது :*

காயின் படைத்த காணிக்கை கடவுளால் கனிவுடன் கண்ணோக்கப்படவில்லை (தொ.நூ 4 : 5) ஏன்? எனும் கேள்வியைக் கேட்டால் நிலத்தின் பலனிலிருந்து காயின் காணிக்கைகளைக் கொண்டு வந்தார் எனவும் ஆபேலும் தன் மந்தையிலும் கொழுத்த

தலையீறுகளைக் கொண்டு வந்தார் எனவும் பதில் கிடைக்கிறது (4 : 3, 4). காயீன் காணிக்கை படைக்க வேண்டுமே என்பதற்காகப் படைக்கிறார். ஆபேலோ தேடித் தெரிந்து தலையீறுகளை மட்டுமல்ல, கொழுமையானவைகளைப் படைக்கிறார். கடவுளுக்குக் காணிக்கை படைப்பதிலே ஆபேல் கொண்ட கவனம் கடவுளின் பார்வையில் கனிவுடன் கண்ணோக்கப்படுகின்றது. ஒப்புக்காகப் படைக்கப்படுகின்ற காணிக்கைகளை விட ஒப்படைப்புடன் படைக்கப்படும் காணிக்கைகளை கடவுள் விரும்புகிறார். ஆபேலின் காணிக்கை முதன்மையானதாக மட்டுமல்ல முழுமையானதாகவும் இருந்தது.

ஆபேல், காயீனுடைய பலியை விட மேலான பலியை கடவுளுக்கு செலுத்தினார் எனத் திருமறை குறிப்பிடுவதைச் சான்றாகச் சொல்ல இயலும் (எபி. 11 : 4).

### *2. ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை - இரண்டு காசு இரண்டு உண்மை :* (லூக் 21 :1-4)

ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை இயேசுகிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டு அடையாளம் காட்டப்படுவதாக மட்டுமே புரிந்தால் அச்செய்தியின் சாராம்சம் முற்றுப்பெறுவதில்லை. மாறாக இரண்டு காசுகளும் வெளிப்படுத்துகின்ற இரண்டு உண்மைகளை உணர்வது அப்பகுதிக்கு அழுத்தம் தரும்.

(அ) கடவுளின் பராமரிப்பில் ஏழைக் கைம்பெண் கொண்டிருந்த நம்பிக்கை அதாவது எனக்குரியவை அனைத்தையுமே கொடுத்துவிட்டாலும் கடவுள் என்னை முழுமையாகப் பராமரிப்பார் என்னும் உறுதியான நம்பிக்கை .

(ஆ) பராமரிப்புப் பணி திருச்சபைக்கு உண்டு. வாழ்வுக்கு தேவையான ஆதாரம் இன்றி, வாழ துடிக்கின்ற மக்கள், சமூகத்தில் உண்டு (ஏழைக் கைம்பெண் போன்றோர்). அவர்களின் இல்லாமையையும், இயலாமையையும் திருச்சபை உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

அப்படியென்றால் மட்டுமே சங்கவிழாக்கள் தோறும் உரத்த குரலில் முழங்குகின்ற சங்கம் கூடி ஏழைக்கென்று என்னும் பாடல் பாறை மீது பதியப்பட்ட சித்திரமாகும். இல்லையேல் தண்ணீரில் வரையப்பட்ட கோடுகளாய் மாறும்.

### *3. மாசிதோனிய திருச்சபையினரின் காணிக்கை- பணம், பொருள் சார்ந்தது மட்டுமல்ல வாழ்வு சார்ந்தது :* (2கொரி 8: 5).

மாசிதோனிய திருச்சபையினர் தங்களை முழுமையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள் என்பதை தூய பவுலார் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது திருமுகத்தில் குறிப்பிடுகின்றார். எதையாவது எப்பொழுதாவது எப்படியாவது கொடுத்துவிட்டால் போதும் என்ற மனநிலையில் காணிக்கை படைத்தல் அல்லது பொருள் சார்ந்தது மட்டுமே என மதிமயங்கித் திரிபவர்களுக்கு இப்பகுதி உரக்கக் கூறுவது என்னவென்றால் காணிக்கை படைத்தல் வாழ்வு சார்ந்தது என்பதல்ல வாழ்வை கடவுளுக்கு ஒப்படைத்து வாழ்வதாகும். வாழ்க்கை நெறிமுறைகளில் இயேசுகிறிஸ்து வகுத்து தந்த வாழ்வியலே கடவுள் விரும்புகின்ற, நம்மில் கடவுள் எதிர்பார்க்கின்ற நன்றிப்படையல் ஆகும். ஆகவே படைக்கின்ற காணிக்கைகளை விட படைப்போரின் வாழ்வைக் கடவுளுக்கு ஏற்புடையதாக அமைத்தல் வேண்டும்.

சங்கவிழா பொருளுள்ள கொண்டாட்டமாக அமைய ஒப்புக்காக அல்ல ஒப்படைப்போடு காணிக்கை படைப்போம். நம்மைப் பராமரிப்பவர் கடவுளே. மட்டுமன்றி பராமரிப்புப் பணி திருச்சபைக்குரியது என உணர்வோம். நம்மை முதன்மையாக கடவுளுக்கு படைப்பதே மேலான காணிக்கை என்பதை அறிந்து கொள்வோம்.

அருள்திரு. R. **ஐசக் மெரின் சிங்**

# வளர்ச்சிக்குப் படிகள்

திருமறைப்பாடம் : லூக் 2:41-52

**"இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்"** லூக் 2:52

ஒருவர் தன் இல்லமொன்றில் அழகிய போன்சாய் ரகச் செடிகளை வளர்த்து வந்தார். அவைகளில் பெரும்பாலானவை 10 வருடங்கள், 20 வருடங்கள் வளர்ச்சியில் மிகப்பெரிய மரங்களாக மாற வேண்டியவை. ஆனால், வெறும் குட்டைச் செடிகளாகவே காட்சி தந்தன. அவைகளின் வளர்ச்சி கட்டுத்தப்படுத்தப்பட்டு செடிகளாக நின்றன. அவ்வண்ணமே இறையறிவில் வளர்ந்து கனி தர வேண்டிய இளம் சிறார்கள் உலக அழுத்தம், நண்பர்கள், இணையதளங்கள், கைப்பேசிகள், கலை உலக தாக்கத்தால் வளர்ச்சி குன்றி, விசுவாச வாழ்வில் பின் தங்கி உள்ளனர். ஒரு ஆண்டு காலம் திருமறைக் கல்வி வழி நம் இளம் சிறார்கள் வளர்ந்துள்ளார்க்கள். நற்பண்புகள் பெற்றுள்ளார்கள்.

நம் திருச்சபைகளில் பெரும்பாலும் சீனியர் வகுப்பிற்குப் பிறகு மாணவ மாணவியரின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. காரணம் யார்? திருச்சபையா? திருமறைப்பள்ளியின் ஆசிரியரா? கல்விச் சுமையா? திருமறைக் கல்வி புகட்டும் முறையா? பெற்றோரா? நம் திருமறைக் கல்வி அனைத்து வயதினரும் வளர உதவி உள்ளதா?

வேர் விட்டு முளைத்து வளரும் செடிக்கு ஒருவர் நீர் பாய்ச்சுகிறார், இன்னொருவர் உரமிடுகின்றார், இன்னொருவர் களைகளை அகற்றி வெட்ட வேண்டியவற்றை வெட்டி, கடும் வெயில், மழை நடுவிலும் பிற உயிரினங்களால் தீங்கு வராதபடி பாதுகாக்கின்றார். அவ்வண்ணமே நம் திருமறைப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் வளர திருச்சபை, இல்லம், ஆசிரியர் பங்கும் சிறப்பானது. இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வளர்ச்சியில் ஆலயம், பெற்றோர், ஆசிரியர் தந்த சிறப்பான பங்களிப்பை தியானிப்போம்.

### *1. திருச்சபை/ஆலயம் வளர்ச்சிக்கு வாயில்:*

இயேசு கிறிஸ்து எருசலேம் ஆலயத்தில் கேட்டல், கவனித்தல், செயல்படுத்தல் ஆகிய பண்புகள் வழி வளர்வதற்குரிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தினார். அவர் எருசலேம் ஆலயத்தில் தங்கிவிட்டார் (லூக் 2 : 43), போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார் (லூக் 2: 46). இச்செயல்கள் வழி கேட்பதற்கும், கவனிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் தீவிரமாயிருந்தார் என்பதை புரிந்து கொள்ளமுடியும். இயேசுகிறிஸ்துவின் வளர்ச்சிக்கு ஆலயம், போதகர்கள், இறைமக்கள் உறுதுணையாக நிற்கின்றனர். இன்றும் நம் இளம் சிறார்களின் வளர்ச்சிக்கு நாம் உறுதுணையாக இருக்கின்றோமா? நம்முடைய திருமறைப்பள்ளி உறுதுணையாக இருக்கின்றதா?

சாமுவேல் என்ற இறைவாக்கினரின் வாழ்வின் திருப்புமுனை ஆலயத்தில் தொடங்குகின்றது. நான் யார்? கடவுள் யார்? எதற்காக வாழ்கிறேன்? எப்படி வாழ வேண்டும்? என் வாழ்வில் கடவுளின் விருப்பம் என்ன? என்ற கேள்விகளுக்கு ஏலி தெளிவு பெற ஏலி உதவி செய்கின்றார் (1 சாமு 3:9).

இன்றும் நம் இளம் சிறார்கள் ஆலயத்திற்கு இதே கேள்விகளோடு இயேசுவைக் காண வருகின்றார்கள். வழிகாட்டும் ஏலிக்களாக இருந்து, நம் இளம் சிறார்களுக்கு மறைக் கல்வியும் ஆலயங்களும் வளர்ச்சிக்கு வித்திடும் வாயில்களாக உள்ளனவா?

### *2. இல்லங்கள் வளர்ச்சிக்கு கல்விக் கூடங்கள்:*

இயேசுகிறிஸ்துவின் கேள்விகளையும், பதிலையும் கேட்டு அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்து போயினர் (லூக் 2:47). இயேசுகிறிஸ்துவின் வளர்ச்சியில் இல்லம் சிறந்த கல்விக் கூடமாக பங்காற்றி உள்ளது. இயேசுகிறிஸ்து யூத சமயக் கல்வியைத் தெளிவாக கற்றுக் கொள்ளவும் புரிந்து கொள்வதற்கும்

பெற்றோர் உதவி செய்தார்கள். இதை நாம் அவர் எருசலேம் ஆலயத்தில் உறவாடிய விதத்திலும், அவருடைய திருப்பணிகள் வழியும் புரிந்து கொள்ள முடியும். 12 வயதிலிருந்து ஒவ்வொருவரும் யூத சமயக் கடமைகள் நிறைவேற்ற வேண்டும். எருசலேம் ஆயத்திற்குச் செல்ல வேண்டியதும் அவசியம். இதை நிறைவேற்ற மரியாளும், யோசேப்பும் இயேசுவை அழைத்துச் செல்லுகின்றனர். இல்லத்தில் பயிற்றுவிக்கப்பட்ட பக்தி வாழ்வு, ஆலயத்திலும் வெளிப்பட பெற்றோரே காரணமாகின்றனர். இறை நம்பிக்கை நம் இளம் சிறார்கள் மனதில் வளர ஆலயங்கள் மாத்திரமல்ல, இல்லங்களும் வழிகாட்டும் கல்விக் கூடங்களாகத் திகழ வேண்டும்.

“குழந்தைகள் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு அப்படியே நடப்பதில்லை. ஆனால், அவர்களைப் பார்த்து அப்படியே நடக்கத் தவறுவதில்லை” என்கிறார் ஒரு அறிஞர். நம் இளம்சிறார்கள் இயேசுகிறிஸ்துவை காண திருமறைக் கல்வியில் வளர நம் இல்லங்கள் கற்பிக்கும், கற்றுக்கொள்ளும் கல்விக் கூடங்களாக மாற வேண்டும். இல்லம் தான் உலகின் தலை சிறந்த பல்கலைகழகம், நம் குழந்தைகள் இறையறிவிலும், பன்முகத் திறமைகளும் பெற்று வளர உதவுவோமா? சாமுவேல் என்ற குழந்தை இறைவாவாக்கினராக வளர்வதற்கு எல்கானா, அன்னாளின் பங்கு பெரியது. மோசே துன்பத்தைச் சுமப்பதற்கும், இஸ்ரேயல் மக்களோடு பாடுகள் ஏற்றுக்கொண்டு வாழத் துணிந்ததற்கு மோசையின் பெற்றோரே காரணம். திமோத்தேயு சிறந்த விசுவாச வீரனாக வளர அவன் பெற்றோரே காரணம்.

நம் இல்லங்களில் இளம் சிறார்கள் விசுவாச வாழ்வில் வளர இடம் உண்டா? பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, வீட்டிலும், வெளியிலும் (இச 6:6-9) சாட்சிகளாக உருவாக்க வேண்டியது நம் கடமையன்றோ? நம் பிள்ளைகளை பொறியியல் வல்லுநர்களாக, மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, பல்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக உருவாக்கத் தெரிந்த நாம், நம் பிள்ளைகள் விசுவாச வாழ்வில் வளர வழிகாட்ட மறந்துவிடுகின்றோம். நம் இல்லங்கள் இறையறிவில் வளர உதவும் கல்வி கூடமாக இருக்கின்றதா?

### *3. ஆசிரியர்கள் வளர்ச்சிக்கு உதவும் கருவிகள்:*

இயேசுகிறிஸ்து எருசலேம் ஆலயத்தில் கேள்விக் கணைகள் தொடுத்த போது போதகர்கள் அவரை மட்டம் தட்டவில்லை. மாறாக, பேசவும், சிந்திக்கவும், பதிலளிக்கவும் வாய்ப்பு கொடுக்கின்றனர். எங்களை விட அதிகம் படித்த மேதையா? நீ சிறுவன் தானே? என்று அதட்டவில்லை. மாறாக, அவர் வளர்வதற்கும், கருத்து பரிமாற்றம் செய்வதற்கும் இடம் தருகின்றனர். பெரும்பாலும் நம்முடைய திருமறைக் கல்வி பயிற்றுவிப்பதில் ஒரு வழித்தொடர்பு தான் நடைபெறுகிறது. எந்த வகுப்பில் இருவழித் தொடர்பு நடைபெறுகிறதோ அங்கே பேசவும், சிந்திக்கவும், பதிலளிக்கவும் செயல்படவும், வாய்ப்பு ஏற்படும். இயேசு கிறிஸ்துவின் வளர்ச்சியில் ஆசிரியர்களான போதகர்கள் அவர் இறையறிவில் வளர்ந்து பெருகத் தூண்டும் கருவிகளாகச் செயல்படுகின்றனர்.

நம் திருமறைப் பள்ளி வகுப்பில் தலை, இடை, கடை, மாற்றுத்திறனுடையோர் என பல பிரிவுடையவர்களின் நிலை அறிந்து சமூக, பொருளாதார பின்னணியத்தை புரிந்து இறையறிவில் வளர நாம் தூண்டுதல் தரும் கருவிகளாகச் செயல்பட வேண்டும். திருமறைப்பள்ளியில் ஆசிரியர்கள் பெரும்பாலும் பரிசு என்ற இலக்கை நோக்கி மாணவர்களை பயணிக்க வைக்கின்றனர். இதைத் தவிர்த்து இறையறிவில் வளர தூண்டும் கருவிகளாகச் செயல்படுவோமா?

அருட்பணியாளர் பவுலை உருவாக்கியது, சிறந்த இறையிலாளராக மாற்றியது கமாலியேல் என்ற ஆசிரியர் தான். ஒரு சிற்பி சதாரணக் கல்லை உளி, சுத்தியல் கொண்டு செதுக்கி, அடித்து, வடிவமைத்து பேசும் சிற்பங்களாக மாற்றுகின்றார். அதுபோன்று இறையறிவில் வளரத் தயங்கும் மாணவர்களின் ஆர்வமின்மை அகற்றி பேசும் பொற் பாத்திரங்களாக வடிவமைக்கும் ஆற்றலுடையவர்கள் ஆசிரியர்கள். நம் இளம் சிறார்கள் இறையறிவில் வளரத் தூண்டும் கருவிகளாக ஆசிரியர்களாகிய நாம் செயல்படுகின்றோமா?

இயேசுகிறிஸ்துவின் வளர்ச்சியில் திருச்சபை/ஆலயம், இல்லம், ஆசிரியர்கள் உதவினாலும், தனக்கு கிடைத்த வாய்ப்புக்களை கருத்தோடு பயன்படுத்தினார். இறையறிவில் வளர்ந்தார். நாமும் ஆண்டவர் நமக்கு தந்துள்ள ஆலயம், திருமறைப்பள்ளி, பெற்றோர், ஆசிரியர் வழி இறையறிவில் வளருவோம், வளர்ந்து கனிதருவோம்.

அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**

*பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழா*

# இறைவன் எதிர்பார்க்கும் மாசற்ற வாழ்வு

திருமறைப்பாடம் : திபா 119:9-16

**“இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?”** திபா 119:9

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிப்பு என்று தேசிய குற்றப்பிரிவு ஆவண காப்பகம் அதிர்ச்சி தகவலை வெளியிட்டது. அதில்

பெண்கள் மீதான வன் செயலில் ஈடுபட்ட சிறுவர்களின் சதவீதம் 132.3
பெண்களை மானபங்கப்படுத்திய சிறுவர்களின் சதவீதம் 70.5
கற்பழிப்பு குற்றங்களில் ஈடுபட்ட சிறுவர்களின் சதவீதம் 60.3

ஒட்டுமொத்தமாக இந்திய தண்டனைச் சட்டத்தின்படி கைதான சிறுவர்களின் சதவீதம் 66.3 இவர்கள் அனைவருமே 16 முதல் 18 வயது கொண்டவர்கள் என்பதுதான் அதிர்ச்சியான தகவல்.

இன்று இளைஞர்களின் வாழ்வை ஆதிக்கம் செலுத்துவது, கவர்ந்திழுப்பது ஊடகங்கள். கடவுளின் ஆற்றல்களுக்கு அடிபணிய வேண்டிய இளைஞர்கள் ஊடகங்களுக்கு அடிமையாவதினால் அதில் வரும் தீமைகள் இளைஞர்களை மாசு நிறைந்த வாழ்வுக்கு கொண்டு சென்று விடுகின்றது. அதனால்தான் திருப்பாடல் ஆசிரியர் கேள்வி எழுப்பி, விடைக்கொடுக்கிறார். உம் வாக்கை கடைப்பிடிப்பதால் அன்றோ. கடவுளின் வாக்கு இளைஞர்களை மாசற்றவர்களாய் காத்துக்கொள்கிறது. இறைவாக்குக்கு அடிபணிந்து வாழ்ந்ததினால் தங்களை பாதுகாத்த இளைஞர்களை பார்ப்போம்.

### *1. மாசற்ற வாழ்வு வாழ்ந்த தானியேல் :*

‘‘அரசனது சிறப்புணவினாலும் அவன் பருகி வந்த திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்துகொண்டார்” (தானி. 1:8).

சிறைக் கைதியாக பாபிலோனுக்கு கொண்டுவரப்பட்ட இளைஞர் தானியேல். பல திறமைகளுக்கு சொந்தக்காரர். அரண்மனையில் பணியாற்றும் வாய்ப்பு பெற்ற இளைஞர்களில் ஒருவர். அரண்மனையிலே பணியாற்ற வேண்டுமென்றால் உடலிலே வளர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். உடல் வளர்ச்சி பெற அரசன் உண்டுவந்த சிறப்புணவு கொடுக்கிறார்கள். அரசன் வாக்கா, ஆண்டவரின் வாக்கா இதில் எதன்படி செயல்படுவது இதுதான் தானியேலுக்கு வந்த சோதனை. அரச உணவிலே மதுபானம், மாம்ச உணவு முக்கிய இடம் வகிக்கும். இதை உண்டால் உடல் ஆற்றல் கிடைக்கும். ஆனால்,

இறை ஆற்றல் கிடைக்காது என்பதை உணர்ந்த தானியேல் அதை மறுத்து காய்கறி, பருப்பு உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்து இறைப்பற்றுடன் வாழ தீர்மானித்தார். இதன் விளைவு உடல் ஆற்றலையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்கிறார். இதனால் அரண்மனையில் முதலிடம் பெறுகிறார். தன்னை மாசற்றதாய் காத்துக்கொண்டபடியினால் உயர்வை பெற்றுக்கொள்ள முடிந்தது. இன்று மதுபானத்திற்கும் மாம்ச உணவிற்கும் முதலிடம் கொடுத்து தன் உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக்கொள்ளும் இளைஞர்களுக்கு தானியேலின் வாழ்வு ஒரு உதாரணமாக அமையட்டும்.

### *2. மாசற்ற வாழ்வு வாழ்ந்த யோசேப்பு :*

தொடக்க நூல் 39 : 9 இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யலாமா? என்றார்.

யோசேப்பின் அழகு, திறமை, பொறுப்புணர்வு இவை எதிர் பாலினரின் மாம்ச இச்சையை தூண்ட காரணமானது. ஆனாலும் யோசேப்பு இந்த தீச்செயலை செய்வது கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்வதாக கருதினபடியால் தீச்செயலை விட்டு ஓடுகிறார். இதனால் தண்டனையும் பெறுகிறார். கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்வதா? தன்னை நம்பி பெரிய பொறுப்பை ஒப்படைத்த வீட்டின் தலைவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதா? இதில் யோசேப்பின் நிலைப்பாடு கடவுளை சார்ந்து தனக்கு பொறுப்பை தந்த வீட்டின் தலைவனுக்கு உண்மையாய் இருந்து மாசற்ற நிலையில் தன்னை பாதுகாத்ததுதான். தீச்செயலை செய்யாதபடி விலகி ஓடினதால் வந்த தண்டனையை ஏற்றுக்கொண்டார். நல்ல செயலுக்கு வந்த தண்டனையை ஏற்றுக்கொண்டது கடவுளின் பார்வையில் உயர்ந்ததாக இருந்தபடியால் கடவுள் அவரை பார்வோனின் வீட்டில் முதன்மையாக உயர்த்தினார். கடவுளின் வாக்குக்கு ஏற்ப தன்னை பாதுகாத்துக் கொண்டதினால் வந்த வாழ்வு அவரை உயர்த்தியது.

### *3. மாசற்ற வாழ்வு வாழ்ந்த தீமோத்தேயு :*

‘‘பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு” (1தீமோ. 4:19).

எபேசுத் திருச்சபையில் ஆயராக இறைப்பணி செய்த இளைஞர் தீமோத்தேயுக்கு தூய பவுலார் ஆலோசனை கூறுகிறார். காரணம், இளமையில் பேசும் வார்த்தை முக்கியம். இளைஞர்களுக்கு கோபம் அதிகமாக வருவதால் முன்பின் யோசிக்காமல் பேசுவார்கள். கடவுள் பயம் அற்ற வார்த்தைகள், செயல்கள் வெளிப்படும். எனவே, தான் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு என்கிறார். இன்று குடும்பத்துக்கும், திருச்சபைக்கும், சமூகத்துக்கும் இளைஞர்கள் முன்மாதிரியாய் வாழும்போது எதிர்கால சமூகம் நல்ல தகவுகளை பெற்றுக்கொள்ளும். இளைஞர்களே இப்பக்தி முயற்சி சங்க ஆண்டுவிழாவில் கடவுளின் வாக்கால் உங்கள் வாழ்வை மாசற்றதாய் பாதுகாத்துகொள்ளுங்கள்.

தானியேலைப் போல் யோசேப்பைப் போல், தீமோத்தேயுவைப் போல், மாசற்ற வாழ்வு வாழ்ந்து கடவுள் தரும் உயர்வை பெற்றுக்கொள்வோம்.

அருள்திரு. **N. சாமுவேல்**

*பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா*

# நம்பிக்கை வழி நல்வாழ்வு

திருமறைப்பாடம் : 2அர 4:1-7

**"...நீயும் உன் புதல்வரும் பிழைத்துக் கொள்ளுங்கள்."** 2அர. 4:7

காலமெல்லாம் இயேசுவை நம்பி வாழ்ந்தேன், செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காய் செய்தேனே. எனக்கு ஏன் இந்த நிலைமை? குடும்பத்தில் பிரச்சனை, வறுமை, நோய், இழப்புகள், கடன் தொல்லை. கடவுள் என்னை கைவிட்டு விட்டார் என்று பலவேளைகளில் புலம்புகிறோம். ஆனால் இங்கு நாம் வாசிப்பது என்ன? கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்த ஒரு குடும்பம். குடும்பத்தின் நிலை இருள்மயமானது. காரணம் குடும்பத் தலைவன் மரித்துவிட்டான். கணவன் மனைவிக்கு விட்டுச்சென்றது பெருங்கடன். கடனை தீர்க்க முடிவில்லை. அவளது சொத்து 2 ஆண் குழந்தைகள். கடன் கொடுத்தவன் அந்த இரு குழந்தைகளையும் அடிமையாக்கிக்கொள்ள தீர்மானித்தான். இனி அவளுக்கு வாழ்வு உண்டா? வாழ்வு பெற்றுக்கொள்ள அவள் என்ன செய்தாள்?

## *1. இறையடியவரிடம் ஓடினாள் :*

கடன் பிரச்சினையில் இருந்து விடுபட தீர்க்கதரிசியிடம் இப்பெண் சென்றாள். ஆம்! நாம் விடுதலை பெற, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இறைவனுடைய சமூகத்துக்குச் செல்ல வேண்டும்.

2 இரா. 19 : 9-20;

2 இரா. 19 : 35-36

அசீரியா ராஜா, இஸ்ரவேல் ராஜாவாகிய எசேக்கியாவுடன் போர் தொடுக்க நினைத்தார். அதற்கான நிருபத்தைக் கொடுத்தனுப்பினார். எசேக்கியா தேவனுடைய சமூகத்தில் சென்று ஜெபித்தார். ஜெபம் கேட்கப்பட்டது. நடந்தது என்ன? போர் இல்லை. வெற்றி கிடைத்தது. கர்த்தர் யுத்தம் செய்தார். இறை சமூகத்தில் வெற்றி உண்டு.

**2. இறைவன் விசாரிக்கிறார் : (2 இரா 4 : 2)**

நான் உனக்கு என்ன செய்ய வேண்டும். வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்று தீர்க்கர் கூறினார். நாம் கடவுளுடைய சமூகத்தில் சென்று ஜெபிக்கும் போது கடவுள் நம்மை விசாரிக்கிறார். விசாரித்து அப்படியே விட்டு விடுவதில்லை. தேவைகளைச் சந்திக்கிறார்.

மாற்கு 10 : 46-52 - பர்திமேயுவிடம் 'இயேசு நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டு அவருக்கு பார்வை கொடுத்தார். தேவையை சந்தித்தார்.

தொநூ. 21 : 17-20 - ஆகாரை விசாரித்து தேவையை சந்தித்தார்.

2 இரா 4 : 2 -ல் தீர்க்கன் விசாரிக்கிறார்.

**3. இறை ஆசியைப் பெற்றுக்கொள்ள விசுவாசித்தாள் : (2இரா 4:3,4)**

நம் விசுவாசம் யாரிடம் உள்ளது? கன்மலையாகிய கிறிஸ்து மீது கட்டப்பட்டதாக அமைய வேண்டும்.

a. நூற்றுக்கதிபதியின் விசுவாசம் (மத். 8 : 5-10)

b. கிரேக்க ஸ்திரீயின் விசுவாசம் (மாற். 7 : 25-30)

**4. இறையாசியைப் பெற்றுக்கொண்டாள் : (2இரா 4:5,6)**

கீழ்ப்படியும் போது ஆசீர்வாதம். கானாவூர் கலியாண வீட்டில் இயேசு சொன்ன வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்த போது தண்ணீர் ரசமாக மாறியது (யோவா. 2:1-10).

யோவான் 21 : 1-11 -ல் இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து படவுக்கு வலது புறமாக வலை வீசியபோது திரளான மீன்கள் கிடைத்தது. நாமும் திருமறை வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் போது ஆசீர்வாதம் உண்டு. இந்த ஏழைப் பெண் எலிசாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தாள். ஆசீர்வாதத்தைப் பெற்றாள்.

**5. இறையடியவரிடம் அறிவித்தாள் : (2இரா 4:7)**

தான் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட நேரத்தில் அதை தேவனுடைய மனுஷனுக்கு அறிவித்தாள். அவரது ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்தாள். நாமும் எந்த சூழ்நிலையிலும் கடவுளுடைய சமூகத்துக்கு கடந்து சென்று, இறைவனிடத்தில் விசுவாசம் வைத்து இறைவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்.

- அருள்திரு. **பேபி கமலா ஜஸ்டஸ்**

*ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா*

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

திருமறைப்பாடம் : 2குறி 26:1-21

**"அவன் ஆண்டவரைத் தேடிய காலமெல்லாம் கடவுள் அவனுக்கு வெற்றியை அளித்தார்."** 2குறி 26:5

"மனிதன் மீனைப் போல நீந்தவும், பறவைகளைப் போல் பறக்கவும் கற்றுக்கொண்டான். ஆனால் மனிதனாக வாழக் கற்றுக்கொள்ளவில்லை" என்றார் மார்டின் லூதர் கிங். பரந்து விரிந்த உலகில் மனிதனின் பலவிதமான கண்டுபிடிப்புகள் ஆச்சரியமானவை. ஆனால், மறுபக்கம் இறைச்சாயலில் இறைவனால் படைக்கப்பட்ட மனிதனோ மனித நேயமற்று, கொலை கொள்ளை, பாலியல் வன்முறை, திருட்டு, ஏமாற்றம், தற்கொலை என்ற தீய நிலையில் தன்னை அழித்துக் கொண்டிருக்கிறான். இச்சூழலில் தான் ஆண்கள் சங்க ஆண்டுவிழா கொண்டாட நாம் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆண்டவருக்காய் அரும் பெரும் செயல்கள் செய்து ஆண்டவரோடு இருந்து ஆசி பெற்றவர்களையும், ஆணவத்தால் ஆண்டவரை எதிர்த்து அழிந்தவர்களையும் நாம் திருமறையில் காணலாம். இந்நிலையில் யூதா அரசர் உசியாவின் வாழ்வினின்று சில உண்மைகளை சிந்திப்போம்.

## *1. கடவுளை தேடின காலம் - வாழ்வு காலம் :*

உசியா என்பதன் பொருள் யெகோவா என் பெலன் என்பதாகும். இந்த உசியா தன் இளவயதில் யூதாவின் அரசரானார். 52 வருடம் ஆட்சி செய்தார். இறைத் திருக்காட்சியில் புத்திமானாயிருந்த சகரியா இவருக்கு உதவியாயிருந்தார். உசியா அரசர் ஆண்டவரின் பார்வையில் நேர்மையானதை செய்தார் (2 குறி. 26:4) என்று திருமறை சொல்லுகிறது. இவர் கடவுளைத் தேடினார். கடவுளை தேடினபடியால் கடவுள் அவர் பக்கமிருந்தார். அவன் செய்த எல்லா யுத்தங்களிலும் அவனுக்கு வெற்றியே கிடைத்தது என்று 2 குறி. 26:5-7 யில் நாம் படிக்கிறோம். இதனால் அவருடைய புகழ் எகிப்தின் எல்லை வரை எட்டினது. அவர் ஆற்றல் மிக்கவராய் விளங்கினார் (2 குறி. 26:8). அவருக்கு பலத்த போர் வீரர்கள் ஏராளம் இருந்தார்கள். அவருக்கு ஏராளம் ஆடு, மாடுகள், திராட்சைத் தோட்டங்கள் இருந்தன. அவர் கடவுளை தேடின

காலத்தில் இப்படி அதிக உயர்வுகளையும் ஆசிகளையும் பெற்றார். இந்தக் காலம் வாழ்வு காலமாக அமைந்தது.

## 2. *கடவுளை மீறின காலம் – தாழ்வு காலம் :*

அரசர் உசியா எப்போது கடவுளை மீறினார்? அவர் வலிமை மிக்கவர் ஆன போது ஆணவம் கொண்டார். எப்படியென்றால், தனக்கு கேடுண்டாகும் மட்டும், அழிந்துபோகுமட்டும் அவருடைய மனம் ஆணவம் கொண்டது என்று திருமறை கூறுகிறது. (குறி 26:16). உள்ளத்தில் ஆணவம் வந்தவுடன் கடவுளுக்கு விரோதமாக துணிகரமாக பாவம் செய்கிறார். என்ன பாவம் செய்தார்? ஆசாரியர்கள் செய்ய வேண்டிய தூபம் காட்டுகிற பணியை செய்ய ஆண்டவரின் ஆலயத்தின் தூப பீடத்துக்குள் பிரவேசித்தார். ஆசாரியனாகிய அசரியா மற்றும் அவருடன் பணி செய்த எண்பது ஆசாரியர்களின் வார்த்தைகளையும் உதறிவிட்டு ஆணவத்தோடு துணிகரமாக பாவம் செய்கிறார்(2 குறி. 26:17-18). இவர் பாவம் செய்தபடியால், கடவுளை மீறின படியால் அவருக்கு தாழ்வு காலம் வந்தது. என்ன நடந்தது? தூபபீடத்துக்கு அருகில் நிற்கும் போதே தொழுநோய் அவனுடைய நெற்றியிலே தோன்றியது. அரசரான உசியாவின் தொழுநோய் கண்டு ஆசாரியர்கள் அவரை வெளியேற்றினார்கள். அவன் தான் இறக்கும் வரை ஆலயத்துக்கு புறம்பாக ஒரு தனித்த வீட்டிலே தொழுநோயாளியாகவே வாழ்ந்தார் (2 குறி. 26: 19-21). காரணம், கடவுளை மீறினார்.

அன்பர்களே, உசியா அரசர் கடவுளை தேடின காலத்தில் வாழ்வு பெற்றார். கடவுளை மீறின காலத்தில் வாழ்வை இழந்தார். நாமும் சிந்திப்போம். கடவுளை தேடுவோம். வாழ்வு பெறுவோம்.

அருள்திரு. **G. ஜெபின்**

# உளமார இசை பாடுங்கள்

திருமறைப்பாடம் : எபே 5:9-21

**"...உளமார இசைப்பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்...." எபே 5:19**

இசைக்கு மயங்காதோர் எவரும் இல்லை. இசைக்கு பல்வேறு நிலைகளில் ஆற்றல் உண்டு. குறிப்பாக, கிறிஸ்தவ இசைக்கு (பாடல்களுக்கு) திருமறைப் போதனைகள், வரலாற்றில் கடவுளின் மீட்பின் செயல்பாடுகள், இறையடியார்களின் பல்வேறு அனுபவ வெளிப்பாடுகள் போன்றவைகள் உள்ளடங்கிய தனிச் சிறப்பு உண்டு. இப்பாடல்களை உற்சாகத்தோடும் கருத்தோடும் பாடும்போது நாம் இறை ஆற்றல் பெறுகின்றோம்.

திருச்சபை தொழுகைகளுக்கு அழகு சேர்ப்பது கருத்து நிறைந்த ஆன்மிக பாடல்கள். கிறிஸ்தவ வாழ்வில் இன்றியமையாத ஒன்று ஒருவருக்கொருவர் புத்தி சொல்வது ஆகும். தூய பவுலார் எபேசு திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில் முப்பெருந்தன்மைகளுடைய பாடல்கள் வழியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்று ஆலோசனை கூறுகிறார்.

**முதலாவதாக,** "திருப்பாடல்கள்". திருமறை இலக்கிய நூல் பிரிவில் திருப்பாடல் (சங்கீதம்) தனிசிறந்த இடத்தை பெறுகிறது. இவை தனிப்பட்ட இறையடியார் அல்லது ஒரு கூட்ட மக்களின் இறைப்புகழ், இறைவேண்டல், இறையனுபவ வெளிப்பாடு மற்றும் இறை நம்பிக்கையை மேம்படுத்தும் படையல்களாகவும், இறை ஆலோசனை தரும் பாடல்களாகவும் அமைந்துள்ளன. முதல் திருப்பாடல் ஆலோசனையாகவே தொடங்குவது குறிப்பிடத்தக்கது. இவைகளில் பல பாடல்களுக்கு இசை வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது. (எகா திபா. 4.5,6). இன்னும் பல திருப்பாடல்கள் ஞானப்பாடல்களிலும், கீர்த்தனைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.

**இரண்டாவதாக,** "கீர்த்தனைகள்." கீர்த்தனைகள் தன்னாட்டுத் தன்மை கொண்டது. அந்தந்த மொழி, கலாச்சார அடிப்படைகளில் தனிசிறப்பு மிக்கவைகள். நாம் கிறிஸ்தவ பாமாலை புத்தக தொகுப்பில் பயன்படுத்துகின்ற ஞானக் கீர்த்தனைகள் இந்திய நாட்டு இசையடிப்படையில் பல்வேறு இராகங்களிலும், தாளங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அநேக கிறிஸ்தவ கவிஞர்கள்,

பேராயர்கள், போதகர்கள், இறைப்பணியாளர்களின் அனுபவப்படையல்கள். இவைகளும் இறைப்புகழ், இறை நடத்துதல், கிறிஸ்தவ வாழ்வியல், இறை நம்பிக்கை போன்ற பல கூறுகளைக் கொண்டவை.

**மூன்றாவதாக,** "ஞானப்பாட்டுகள்." இவைகள் பன்னாட்டு அளவில் இயற்றப்பட்டவை. மேலை நாட்டு கிறிஸ்தவ இசைத்தொகுப்பாளர்கள் வழியாக சீரான அளவீடுகளில் (Metric scale and sylable) வடிமைக்கப்பட்டுள்ளன. இவைகளும் அநேக இறைஅடியவர்களின் அனுபவ வெளிப்பாடுகள். ஒவ்வொரு பாடல்களுக்கும் பின்னணி வரலாறுகள் உள்ளன. இவைகள் ஆங்கில, ஜெர்மானிய மொழிகளில் எழுதப்பட்டவை. பின்னர் உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு கிறிஸ்தவத் தொழுகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவைகள் நமக்குத் துன்ப வேளைகளில் ஆறுதலாகவும், புது நம்பிக்கை தருகின்றதாகவும், இறை ஆலோசனை நிறைந்தாகவும் அமைந்துள்ளன.

இறைப்பணியாளர்கள் திருமறை போதனைகள் அடங்கிய இறை ஆலோசனைகள் கொடுத்து, அனேகரை இறை அன்புக்கு நேராக வழிநடத்துகின்றனர். இதற்கு இணையாக இச்சீரிய பணியை பாடல்களும் செய்கின்றன. இவ்விதமான பாடல்களை கருத்துணர்ந்து பாடும் போது இறை ஆலோசனைகள் பெறுகின்றோம், ஒருவருக்கொருவர் புத்தி சொல்கிறோம். இதனை தூய பவுலார் கூறும்போது, இம்முப்பெருந்தன்மைகள் அடங்கிய பாடல்கள் வழியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தந்தையாம் கடவுளைப் போற்றி, இறை அச்சத்துடன் ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள் என ஆலோசனை கூறுகிறார் (எபே. 5:19-21)

கிறிஸ்தவத் தொழுகைக்கு அழகு சேர்ப்பவை பாடல்கள் ஆகும். இச்சீரிய பணியினைப் பொறுப்புடன் செய்வது, தொழுகைகள் மற்றும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கு அழகு சேர்க்கும் பாடகர் குழு ஆகும். ஓராண்டு காலம் அற்புதமாய் வழிநடத்திய ஆண்டவரை மனதாரப் போற்றி, வருகிற புதிய ஆண்டிலும், இனி வரும் காலங்களிலும் முன்னேற்றமான பாதைகளில் சென்று பாடல்கள் வழியாக இறைவனுடைய திருப்பெயரை மாட்சிமை படுத்துவோம். ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுவோம். இறைவன் தம் அருளுடன் தொடர்ந்து நடத்துவாராக.

அருள்திரு. D. **ஒனேசிமஸ் சகாயம்**

# உலகின் முதல் நூல்

திருமறைப்பாடம் : யோசு 1 : 1-8; மத் 5 : 1 -20

**“இந்த திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே... அப்பொழுதுதான் நீ செல்லும் இடம் எல்லாம் நலம் பெறுவாய்; வெற்றி காண்பாய்”** யோசு 1:8

இந்த உலகத்தில் நல்ல மாற்றங்களை கொண்டு வரவேண்டுமென்றால், நம்பிக்கை மனதில் ஏற்பட வேண்டுமென்றால் இருள் அகலவேண்டுமென்றாலும் நல்ல புத்தகங்களை வாசிப்பது மிகவும் அவசியம். உலகில் நீதியும் சமதர்மமும் தழைத்து மனிதர் ஒருவருக்கொருவர் அன்புறவில் வளர்வதற்கான கருத்தை உருவாக்குவது நல்ல புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஆகும். உலகத்தின் மாமனிதர்களெல்லாம் நன்கு புத்தக வாசிப்பாளர்களாகவும் அதன் வழி நல்ல கருத்துக்களை உலகிற்கு தந்தவர்களாகவும் உள்ளனர். தனிமனித வாழ்வில் நூலகம் நல்ல சூழ்நிலையை உருவாக்க உதவுவதோடு பல்வேறுபட்ட நன்மையைச் செய்ய தூண்டுகிறது. புத்தக வாசிப்பும், அதன் கருத்துக்களை மனிதன் ஏற்று கொள்ளுவதும் வாழ்வின் தீமைகளைக் களைய உதவுகிறது. உலகின் மிகப்பெரிய சிறைச்சாலை ரண்யாவின் ‘கார்காவ்’ சிறையாகும். இங்கே 40000 கைதிகளுக்கு மேல் உள்ளனர். தங்களது வேலை நேரம் போக மீத நேரம் புத்தக வாசிப்புக்கு என கைதிகள் செலவிட வேண்டும். இதன் நோக்கம் மனிதர்கள் திருந்தி தங்கள் வாழ்வின் உயரிய நிலையை அடையவேண்டும் என்பதே. நமது திருமறையும் மனிதர்களின் வாழ்க்கை தரம் உயர பல நல்ல கருத்துகளை எடுத்துரைக்கிறது.

இஸ்ரவேல் மக்களுக்கு முதன் முதலாவதாக புத்தகம் என கடவுளால் அறிமுகப்படுத்தப்பட்டது திருச்சட்டநூல் (நியாயப்பிரமாணம்) ஆகும். திருச்சட்டநூல், மனிதரிலே புது யுகம் உருவாக உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. இது வாழ்வின் சட்டமாகும் போது அவமானம் நேரிடாது என்பதே கடவுள் வகுத்த வழி. நூலக ஆண்டு விழாவில் முதல் நூலான திருச்சட்ட நூல் வழியாக தரப்பட்ட வாழ்வியல் தகவுகளை தியானிப்போம்.

## *1. புத்தகம் வாயை விட்டு பிரியாதிருக்க வேண்டும் :*

‘‘ஆண்டவர் யோசுவாவிடம் இந்த நியாய பிரமாண புத்தகம் உன் வாயை விட்டு பிரிய கூடாது’’ என்றார். யோசுவாவிடம் ஆண்டவர் சொன்ன நியாயப்பிரமாண புத்தகம் வாழ்க்கையே நெறிபடுத்த பயன்படும். நம்முடைய திருமறையும் நாம் பாதை மாறி செல்லாதபடிக்கு நமக்கு நல்ல ஆலோசனை புத்தகமாகவும் பயன்படுகிறது. வாழ்க்கைக்கு தேவையான அனைத்து கொள்கைகளும் இதில் நிறைந்துள்ளது. இதை போலத்தான் நல்ல நூல்களும் மனிதனின் வாழ்க்கையே தெளிவுபடுத்த உதவுகிறது.

இங்கிலாந்து நாட்டிலுள்ள HAY -ON- WYE என்ற கிராமத்தின் மொத்த மக்கள் தொகை சுமார் 2000கும் கீழே தான் உள்ளது. ஆனால், அவ்வூரில் உள்ள நூல்களோ 15 லட்சத்திற்கும் மேலாகும். ஒவ்வொரு ஆண்டும் பெரும் அளவில் புத்தக சந்தையை அவர்கள் நடத்தி வருகிறார்கள். உலகின் பல இடங்களிலிருந்தும் பெரும் எழுத்தாளர்கள் பலர் இதில் கலந்து கொள்ளுகின்றனர். ஏனெனில் மக்கள் தவறான பாதைகளில் சென்று தங்களது வாழ்க்கையை சிதைத்து விட கூடாது. அதற்கு சிறந்த வழி நல்ல புத்தகம் அவர்களை விட்டு பிரிய கூடாது. இன்று வாழ்க்கையிலே பொழுது போக்கிற்காக அதிக நேரங்களை மக்கள் செலவு செய்கின்றனர். நல்ல சிந்தனைகள் ஒருமுகப்படவேண்டும். நல்ல ஆலோசனைகள் நம்மிலிருந்து பிறக்க வேண்டும். நமது வாழ்க்கை மற்றவர்களுக்கும் பயனுள்ள வகையில் அமைய வேண்டுமெனில் திருமறை, நல்ல புத்தகங்கள் நம் வாழ்க்கையை விட்டு நீங்காதிருக்க வேண்டும்.

'வாயை விட்டு பிரியாதிருப்பதாக', என்ற கட்டளை ஆழமானது. திருச்சட்ட நூலிலுள்ள விழுமியங்களை தழுவி ஒருவர் வாழும் போது எப்போதும் அவர் வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் வரும். பிறரை அழிக்கிற வார்த்தைகளல்ல, கட்டுகிற வார்த்தைகள் (Not destructive but constructive words) வரும். சிறு குழந்தை தாயை விட்டு பிரியாதிருப்பது போல திருச்சட்ட நூல் நம் வாயை விட்டு பிரியாதிருப்பதாக.

### *2. புத்தகம் ஒலியாய் இருக்க வேண்டும் :*

'அதை விட்டு வலது, இடது புறம் விலகாதிருப்பாயாக'(யோசு. 1:7ஆ).

வாகனங்களை ஓட்டுவோர் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் ஓட்டுவதற்கு Indicator lights மிகவும் உதவி செய்கிறது. வலது புறம் திரும்ப Indicator ஒளியும் ஒலியும் எழுப்பி எச்சரிக்கை அடையாளம் காட்டுகிறது. திருச்சட்டநூல் தீய வழியில் மனிதன் திரும்பும் போது எச்சரிக்கை ஒலி செய்கிறது. நல்ல வழியில் செல்லும் போது தெரியப்படுத்துகிறது. கடவுள் யோசுவாவிடம் போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு . . . இதைப் பரிந்துரை செய்தார்.

தீமை நிறைந்த இந்த உலகத்தில் நாம் வாழுகிறோம். எனவே நமது வாழ்க்கையை சரியாக பண்படுத்த வேண்டும். புத்தகங்களை வாசித்து நல்ல கருத்துகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். புத்தக ஒலி, எச்சரிக்கை ஒலியாகவும் encouraging ஒலியாகவும் அமைந்திருக்க வேண்டும். நமது கருத்துக்கள் மருந்தாய் பிறருக்கு பயன்பெற வேண்டும். கணிணி காலத்தில் இருக்கிற மனிதர்கள் வாழ்க்கையில் தோல்வியுற காரணம் அவர்களிடம் உள்ள நம்பிக்கையின்மையே ஆகும். அதோடு பகுத்தறிவு இன்மையும் ஒரு காரணம். நம்பிக்கை என்பது உள்ளத்திலிருந்து வெளிப்படுகிறது. அதுதான் பகுத்தறிவுக்கு ஊன்றுகோல் இந்த சிந்தனைகள் புத்தக வாசிப்பின் மூலம் நமக்கு கிடைக்கிறது. இப்படி பட்ட முன்னேற்றும் கருத்துக்களை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டுமெனில் புத்தகம் நமது வாழ்வில் ஒலியாய் இருக்க வேண்டும். காற்றில் ஒலியின் வேகம் எவ்வளவு அதிகமாக பரவுகிறதோ அதைபோல நல்லகருத்துக்கள் நம்மிடமிருந்து மற்றவர்களுக்கு நல்ல ஒலியாக பரவட்டும்.

### *3. புத்தகம் ஒழியாதிருக்க வேண்டும் :* (மத் 5:17,18)

மனிதன் அழிந்தாலும் புத்தகம் அதன் வார்த்தைகள் அழியாது. வாடிகன் நகரில் மிகப் பழமையானதும் பெரியதுமான நூலகம் அமைந்தள்ளது. இதற்கு வாடிகன் நூலகம் என்று பெயர். இதில் உலகில் உள்ள பழைய வரலாறுகள் அடங்கிய அரிய புத்தகங்கள் உள்ளன. 1475ல் ஆரம்பிக்கபட்ட இந்த நூலகம் உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மத தலைவர்களின் வரலாறுகள் புத்தகவடிவிலும், ஓலைச் சுவடி வடிவிலும் இங்கே வைக்கப்பட்டுள்ளது. இந்த நூலகத்தை ஆரம்பித்த மனிதர்கள் இன்று இல்லாவிட்டாலும் புத்தகங்கள் அழியாமல் உள்ளது. நமது திருமறையும் கூட உலகில் வாழ்வதற்கான பல்வேறு கருத்துக்களை நமக்கு முன் எடுத்துவைக்கிறது. திருமறையில் இடம்பெற்றுள்ள மனிதர்கள் இன்று உலகில் இல்லாவிட்டாலும் அவர்கள் வழி சொல்லபட்ட கருத்துகள் அழியாமல் நிற்கிறது. எளிமையான வழியில் கடவுள் பயத்துடன் வாழும் இவ்வுலக வாழ்க்கையே சிறப்பானது. எப்பொழுதும் மனிதனுக்கு இன்பம் தரும், இந்த உலகில் தவறான ஒழுக்கங்களை பின்பற்றுகிற பொழுதே மனிதன் தன் நிலையிலிருந்து மாற்றமடைகிறான், என்பதையும் மனிதர்கள் ஒழுக்க நெறிகளை எப்படி பின்பற்றுவது என்பதை விவிலியம் நமக்கு முன் வைக்கிறது. மனித வாழ்க்கை இவ்வுலகில் நிரந்தமானது அல்ல. எனவே நமது வாழ்க்கை பயனுள்ளதாய் அமைய வேண்டும். அதற்கு நாம் புத்தகங்களை நேசிக்க வேண்டும். கடமைக்காக அல்ல. உண்மையாகவே, . அதை நேசித்து வாசித்து பயன்பெறுவோம்.

உலகிலே பல புத்தகங்கள் அழிந்தாலும் சுழிக்கப்பட்டாலும் கடவுளால் உருவாக்கப்பட்ட திருச்சட்டநூல் அல்லது திருமறை அதிலுள்ளதெல்லாம் நிறைவேறாத வரை அழியாது (மத் 5 : 17, 18). நம் வாழ்க்கை பலரும் வாசிக்க விரும்பும் சிறந்த புத்தகமாக இருப்பதாக.

திரு A.R. **சுஜந்த்**

# எளியோரும் நம் சகோதரர்களே

திருமறைப்பாடம் : மத் 25:31-46

**"மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" மத் 25:40**

எளிமையான வாழ்விலும் மகிழ்ச்சியோடு வாழலாம் என்று வாழ்ந்து காட்டியவர் கன்ஃபூசியஸ் என்ற தத்துவ ஞானி. தவறான வழிகளில் செல்வம் சேர்த்து ஆடம்பர வாழ்வு வாழ்வது வீணானது என்று சாடினார். "எனக்கு கொஞ்சம் உணவும், குடிக்க தண்ணீரும் போதும்; தூங்குவதற்கு மெத்தையோ, கட்டிலோ, தலையணையோ தேவையில்லை என் கைகளைத் தலையில் மடித்து வைத்துக் கொண்டே நான் தூங்கி ஓய்வு பெறுவேன். தவறான அடித்து வழியில் சேர்த்த பணமும், புகழும் காற்றால் சென்று மறையும் மேகங்களை போல நிலைத்து நிற்காமல் மறைந்து விடும் என்கிறார். கன்ஃபூசியஸ். எளியோரின் தோழமை வாழ்ந்தார் என்கிறது அவரது வரலாறு.

இன்றைய உலகில் எளியோராய் அலைந்து திரியும் மக்கள் ஏராளம். பசி, பஞ்சம், கல்விகற்க முடியாத சூழல் நோயுற்றோர் ஓரங்கட்டப்பட்ட மக்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலச்சூழலில் எளியோர் ஆண்டு விழாவை ஆசரிக்கிற நாம் இயேசு நாதர் கற்றுத்தரும் எளிய வாழ்வைக் கற்று எளிய வாழ்வுக்குரியோரை சமச்சீர் வாழ்வுக்குரியோராய் இணைத்து வாழ இறைவன் விரும்புகிறார். இந்நிலையில் நம் ஒவ்வொருவரின் பங்களிப்பு என்ன என்பதை தியானிப்போம்.

## *1. ஆதரிப்போம் :*

. . . இரக்க செயல்கள் புரிவதிலும் அவர் முற்றிலும் ஈடுப்பட்டிருந்தார் (தி ப 9 : 36b)

யோப்பா நகரில் நன்மைகளை, இரக்க செயல்களை செய்து வந்த பெண் சீடர் தபித்தா என்ற என்ற தொற்காவின் ஆதரவு நிறைந்த வாழ்க்கை எளியவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியை தந்தது.

தொற்கா இறந்த பிறகு தான் அவளது ஆதரவு நிறைந்த வாழ்வு சான்று பகருகிறது. எளியோரை ஆதரித்ததன் வழி உயிரோடு எழுந்து இறைவானால் மேன்மைப்படுத்தப் படுகிறாள்.

"ஆடைகள் தைத்து அங்கிகள் செய்து
இல்லாதோர்க்கு கொடுத்த பாட்டி
இறந்த பின்னும் இந்த பாட்டி
உயிருடன் எழுந்தாள் பாட்டி"

என்ற பாடல் வரிகள் தொற்காவை போல எளியவர்கள் வாழ்வில் ஆதரவு கொடுத்து சான்றான வாழ்வு வாழ அழைக்கிறது.

இந்த சமூகத்தில் ஏழைகள் எளியவர்கள் ஆதரிக்கப்படாத சூழல் காணப்படுகிறது. இச்சூழலில் நம் பேராயத்திலும் எளியோர் நலத்திட்டங்கள் வழி ஆதரித்து வருவது சிறப்பான ஒன்று. எளியவரை நினைப்போம், ஆதரவு கொடுப்போம்.

### 2. அரவணைப்போம் :

. . . ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார் (லூக் 16:23)

லூக்கா 16-ம் அதிகாரத்தில் இரண்டு விதமான மனிதர்கள் காட்டப்படுகிறார்கள். விலையுயர்ந்த ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்த செல்வர் மற்றொருவன் உடல் முழுவதும் புண்ணாய் இருந்து ஏழையாய் வாழ்ந்த இலாசர். இலாசர் ஆதரவு இழந்த நிலையில் தன் பசியையாற்ற செல்வரை நாடி செல்கிறான். ஆனால் எதிர் பார்த்த அரவணைப்பு உலக வாழ்வில் கிடைக்கவில்லை. இந்நிலையில் இறந்து வானதூதரால் ஆபிரகாமுடைய மடியில் அரவணைக்கப்படுகிறான் (லூக்கா 16:22).

நம்முடைய பேராயமும் எளியோர் மீது கரிசனை கொண்டு எளியமக்களாகிய மாற்றுத் திறனாளிகளுக்காக பாடசாலைகளை ஏற்படுத்தி அரவணைப்பது சிறப்பானது.

நாமும் எளியோரை ஆதரிப்போம்

புகழ்பெற்ற வயலின் கலைஞர் நிக்கோலே பாகானினி ஒரு சமயம் தெருவோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையோரத்தில் ஒரு சிறுவன் ஒரு வயலின் வைத்துக் கொண்டு தன்னால் இயன்றமட்டும் அதிலிருந்து இசைத்துக்கொண்டு மக்களிடம் ஏதாவது உதவிச் செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தான். பாகானினி அவனை பற்றி விசாரித்தார். உண்மையில் அவன் தன்னுடைய நோயுற்ற தாய்க்கு மருத்துவம் செய்யவும், தன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு உணவு வழங்கவும் இப்படி உழைப்பதாக தெரிய வந்தது. பாகானினி விரைந்து அந்த சிறுவனிடம் சென்று அவன் கையிலிருந்த வயலினை வாங்கி அற்புதமான சில பாடல்களை இசைத்தார். மக்கள் ரசித்தார்கள். பிறகு தனது தொப்பியை மக்கள் மத்தியில் வீசினார். கூடியிருந்த மக்கள் பணத்தை போட்டார்கள் தொப்பியில் பணம் நிரம்பி வழிந்தது. அதைச் சிறுவனிடம் கொடுத்து எளிய உதவியை செய்து விட்டு எந்த சலனமுமின்றி அமைதியாக நகர்ந்தார் பாகானினி.

இறை மகன் இயேசு கிறிஸ்துவும் பிறமக்கள் மீது ஆழ்ந்த கரிசனையுடையவராக இருக்கிறார். அனைவரும் எளியோரை நினைவு கூர வேண்டும், உதவ வேண்டும் என விரும்புகிறார் அந்த உதவியை தான் இறைவனுக்கு நாம் செய்வதாக தான் கூறுகிறார் (மத் 25: 40)

ஆதரிக்க யாரும் இல்லாத போது
அரவணைக்க உற்றார் மறுத்த போது
கரம்பிடித்து உன்னை அணைத்த
அன்பரின் அன்பை மறந்திடாமல்

நாம் மனிதநேயத்தோடு உதவிகள் செய்வோம். ஆதரவற்றோரை ஆதரித்து அரவணைப்போம் இறைவனின் அரசை கட்டுவோம்.

திரு. M.R. **மில்ட்டன் மார்க்**

# தென்னிந்தியத் திருச்சபை தொடக்க வரலாறு

20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அனைத்து உலகத் திருச்சபைகளிலும் மிஷனரி இயக்கங்களிலும் சபைகளின் ஐக்கிய உணர்வு உருவாகியது. இதற்கு 1910-ஆம் ஆண்டு எடின்பரோவில் நடைபெற்ற மிஷனரி சங்க ஆலோசனைக் கூட்டத்தின் உணர்வு பூர்வமான சிந்தனைகள் ஆகும். அதில் பங்குபெற்ற இந்திய போதகர்களான K.T. பால் V.S. அசரிய ஆகியோருடைய எழுச்சிமிக்க பேச்சுக்கள் அனைத்துலக திருச்சபைகளிலும் சபை ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்கிற்று. அமொரிக்காப் பல சபைகள் இணைந்து 1957-இல் கிறிஸ்துவின் ஐக்கிய சபை (United Church of Christ) என ஐக்கியம் உருவாயிற்று.

1832-இல் இங்கிலாந்தில் சபை ஆட்சியாளர்கள் ஒன்றிணைந்து வேல்ஸ் சபை ஆட்சி ஒருமைப்பாடாக Congregational Union of England and Wales என்ற ஐக்கியம் உருவாயிற்று.

1941-இல் ஜப்பானில் ஜப்பானிய மூப்பர் ஆளுகை சீர்திருத்த சபையும் ஜப்பானிய மெதடிஸ்ட் திருச்சபையும் ஒருமைப்பட்டு ஜப்பானில் கிறிஸ்து சபை (The Christ Church of Japan) என்ற ஐக்கியம் உருவானது.

1900-ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் ஐக்கிய சுயாதீன சபை (Union Free Church of Scotland) உருவாயிற்று.

1946-இல் பிலிப்பையின்ஸ் தீவுகளிலுள்ள மூப்பர் ஆளுகை சபை, சபை ஆளுகை சபை, ஐக்கிய சகோதரர் சபை, கிறிஸ்துவின் சீடர் சபை, கிறிஸ்துவின் ஐக்கிய சபை, மெதடிஸ்ட் சபை, சுயாதீன் மெதடிஸ்ட் சபை, வேறு சில சபைகளும் சேர்ந்து பிலிப்பையின்ஸ் இவாஞ்சலிக்கன் சபை (Evangelican Church of Philypeans) என உருவாயிற்று.

தென் இந்தியாவில் சபை ஆட்சி, மூப்பர் ஆட்சி, பேராயர் ஆட்சி, ஆகிய பாரம்பரியங்கள் உள்ள சபைகள் ஒருமைப்பட்டது இந்திய திருச்சபையின் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும். இங்கு சபை ஒருமைப்பாடு பல்வேறு வகைகளில் வெளிப்பட்டது. இந்தியாவில் பல மிஷன்கள் பணி செய்து வந்தன. S.P.G. (Society for propagatting Gospel) CMS (Church Mission Service) முதலிய மிஷனரி சங்கங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை, திருநெல்வேலி ஆகிய பட்டணங்களிலும்

வெஸ்லியன் மிஷனரி சங்கம் திருச்சிராப்பள்ளியிலும், ஸ்காட்லாந்து மிஷனரி சங்கம் இந்தியாவில் முக்கிய பகுதிகளிலும் அமெரிக்கன் மிஷன் பம்பாய், மதுரை, இலங்கை ஆகிய இடங்களிலும் பேசிப் மிஷன் மங்களூரிலும் வேலை செய்தன. இவ்வாறு பல மிஷன்களின் பாரம்பரிய அடிப்படையில் கிறஸ்தவர்கள் தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு உருவாக்கப்பட்ட சபைகள் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்தது.

இதனால் சபைகள் ஒன்றோடு ஒன்று ஒத்துழைப்பு கொடுக்கவும் நெருங்கிய ஒருங்கிணைப்பும் தேவை என உணர்ந்தன. இந்த ஒருமைப்பாட்டு உணர்வின் அடிப்படையில்.

1901-இல் ஸ்காட்லாந்து சுயாதீன சபையும், அமெரிக்காவின் மூப்பர் ஆளுகை சீர்திருத்த சபையும் தென் இந்தியாவில் ஒருமைப்பட்டன. அதன்பின் இந்தியாவிலுள்ள மூப்பர் ஆளுகை சபைகள் 1904-இல் ஒருமைப்பட்டன.

1906-இல் சபை ஆளுகை நிலையிலுள்ள லண்டன் மிஷன் சபைகளும், மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளும் ஒன்றாய் சேர்ந்தன.

1908-இல் தென் இந்திய ஐக்கிய சபை SIUC (South Indian United Church) ஏற்பட்டது.

1910-இல் இவ் ஐக்கியத்தில் தென் இந்தியாவிலுள்ள ஸ்காட்லாந்து சபையைச் சார்ந்த இரு சபைகளும் 1919-இல் மலபாரிலுள்ள பேசில் இவாஞ்சலிக்கல் மிஷன் சபைகளும் சேர்ந்தன.

1919-இல் S.P.G (Society for propagating Gospel) மற்றும் CMS(Church Mission Society) ஆகிய சபைகளுடனும், இந்திய, பர்மா, இலங்கை சபைகளுடனும் (Church of India Burma and Ceylon) தென் இந்திய ஐக்கிய திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஒப்பந்தங்களை செய்ய கலந்தாலோசித்தன. ஆஸ்திரேலிய சபையிலிருந்தும், தென் இந்திய ஐக்கிய சபையிலிருந்தும் 33 உறுப்பினர்கள் தரங்கம்பாடியில் கூடினர். அவர்களில் ஒரு அமெரிக்கரையும், ஒரு ஐரோப்பியரையும தவிர ஏனையோர் அனைவரும் இந்தியர்களாகவே இருந்தனர். அவர்களில் தோரணக்கல் பேராயர் V.S. அசரியா இடம் பெற்றிருந்தார். அவர்கள் தரங்கம்பாடியில் கூடி ஒருமைப்பாட்டிற்கான ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டனர்.

1920-ஆம் ஆண்டு முதல் தென் இந்திய ஐக்கிய சபையிலும் ஆங்கிலேயர்கள் சபையிலுள்ள பிரதிநிதிகள் ஆண்டுதோறும் கூடி

ஐக்கியத்திற்கான திட்டத்தை ஆய்வு செய்து வந்தனர். 1925-இல் தென் இந்தியாவிலுள்ள வெஸ்லியன் மெதடிஸ்ட் சபையும், ஐக்கியத்திற்கான பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டது. பேச்சு வார்த்தையின் பலனாக அனைவரும் ஒருமைப்பட்ட பின் எல்லா போதகர்களும் பேராயர் ஆளுகை முறையான போதகாபிஷேகம் பெற வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்குமுன் வேறு பாரம்பரியங்களின்படி போதகாபிஷேகம் பெற்றவர்கள் நியாயமான போதகர்கள் என ஒப்புக் கொள்ளப்படல் வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1930-இல் வெஸ்லியன் மெதடிஸ்ட் தலைமைச் சங்கம் ஐக்கியத் திட்டத்திற்கான சம்மதம் அளித்தது. எனவே 1943-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மெதடிஸ்ட் சபை முதன் முறையாக ஒருமைப்பாட்டுக்கு இசைந்தது.

1944-இல் தென் இந்தியாவிலுள்ள ஆங்கிலிக்கன் சபைகள் ஐக்கியத்தை ஆதரித்தன. 1945-இல் பொது ஆலோசனை மன்றம், தென் இந்தியாவிலுள்ள நான்கு பேராயங்கள், இந்தியா, பர்மா, இலங்கை சபைகளிலிருந்து பிரிந்து ஐக்கிய சபையில் சேர அனுமதித்தது. தென் இந்திய ஐக்கிய சபை 1946-இல் ஐக்கியத்தில் சேர உடன்பட்டது. ஆகவே 1947 செப்டம்பர் 7-இல் சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் பேராலயத்தில் தென் இந்தியத் திருச்சபை உருவானது.

இப்போது தென் இந்தியத் திருச்சபையில் கோயம்புத்தூர் டோர்ணக்கல். கிழக்கு கேரளா, கார்பிளா, கன்னியாகுமரி, கரிம்நகர், மத்திய கர்நாடகா தென் கர்நாடகா, வடகர்நாடகா, கிருஷ்ணா கோதாவரி, மத்திய கேரளா, சென்னை, மதுரை ராம்நாடு, மேதக், நந்தியால், வடக்கு கேரளா, ராயலசீமா, தென் கேரளா, திருச்சி தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாசரேத், வேலூர் ஆகிய இருபத்தி இரண்டு பேராயங்கள் உள்ளன.

தென் இந்தியத் திருச்சபையின் உதவியில் மார்த்தோமா சபையும் வட இந்தியத் திருச்சபையும் உள்ளன.

தென் இந்தியத் திருச்சபையின் திறவுகோல் சொற்கள்

| ஒருமைப்பாடு | நற்செய்திப் பணி | சாட்சி |
|---|---|---|
| Unity | Service | Witness |

அருள்திரு. **எஸ். ஐசாயா**

உலகம் மனிதரை பொருளால் அளப்பதேயன்றி, அருளால் அளப்பதல்ல.
இயேசு கிறிஸ்து பேதுருவிடம் இருந்து வரவழைத்த அன்பு "அணு "போன்ற அன்பு.
அணுவை யாரும் பார்க்க முடியாது.
ஆனால் பார்க்க சிறப்பான நுண்ணோக்கிகள் உண்டு.
ஆழமாக சென்று, உயிரோடு உறைந்து கிடப்பதே உண்மையான அன்பு.
அணு வெடித்தால் அழிவு ; அன்புவெடித்தால் மீட்பு ;
இயேசு கிறிஸ்து எப்பொழுதுமே "என்" "என் " என அழுத்தி பேசி,
தம் சாயலை பெற்ற மக்களை குறிப்பிடுகின்றார் .

– பேராயர் G.தேவகடாட்சம்



வெளியீடு
தொடர்புத்துறை
கன்னியாகுமரிப் பேராயம்

